தென்னிந்தியத் திருச்சபை

## கன்னியாகுமரிப் பேராயம்

# அருளுரைக் கையேடு 2019



"என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள்;
அப்பொழுது உங்கள் உள்ளத்திற்கு
இளைப்பாறுதல் கிடைக்கும்" மத். 11:29

தென்னிந்தியத் திருச்சபை

**கன்னியாகுமரிப் பேராயம்**

# அருளுரைக் கையேடு

**2019**

வெளியீடு
தொடர்புத்துறை, கன்னியாகுமரிப் பேராயம்

## ஆசியுரை

***இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் அன்பின் வாழ்த்துக்கள்!***

Gospel Herald என்னும் பத்திரிக்கையில் வெளிவந்த கிறிஸ்தவ பாதுகாப்பாளன் (Christian Guardian) என்னம் கட்டுரையில், முழுமையும் நிறைவுமுடைய மேய்ப்பன், தன்னுடைய ஜெபத்தினையும், பிரசங்கத்தினையும் அளவுமீறி நீட்டமாட்டார்...அவருடைய பிரசங்கங்கள் நன்முறையில் ஆயத்தம் பண்ணப்பட்டு, இடத்திற்கும், காலத்திற்கும் ஏற்புடையதாக நேர்த்தியாக வழங்குவர்...

திருச்சபை இறைப்பணியில் மேய்ப்பர் இறைவார்த்தைகளை கொடுப்பதும், இறைமக்களின் தேவைக்கேற்ப இறைவார்த்தைகளை போதிப்பது மேய்ப்பருடைய கடமையாகும். தொடக்கக் கால திருச்சபையில் திருவசனப் போதனைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்தனர். நம்முடையஇறைப்பணியாளர்களும் திருவசனத்தை கருத்தாய் போதிப்பது மகிழ்ச்சியே.

இந்த அருளுரைக் கையேடு இறைவார்த்தையை புரிந்துக் கொள்ள உதவி செய்யும் ஒரு கருவி. இறைமக்கள் இறைவனோடு உள்ள உறவை புதுப்பிக்க இது வழிகாட்டுகிறது. ஆண்டவருடைய வார்த்தைகள் ஆன்மிக மருந்து. அது மக்களின் மன வேதனைகள் அகற்றி உள்ளத்தில் அகமகிழ்வைத் தருகிறது. இத்தகைய தெய்வீக மன்னாவாம் பேராற்றலுடைய ஆண்டவருடைய வார்த்தையை மிகுந்த ஆயத்தத்துடன் மக்களுக்க கொடுக்க இது ஒரு கைநூல். இந்நூலுக்கு பரிசுத்த திருமறையே ஆதாரம். இந்நூல் திருமறையுடன் பயன்படுத்தல் வேண்டும்.

இந்நூல் தென்னிந்தியத் திருச்சபை அட்டவணையின்படி சிறப்பு அருளுரைகளோடு ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளது.

அருளுரைக் கையேடு தயாரிப்புப் பணியினை ஒருங்கிணைத்த தொடர்புத் துறை இயக்குநர் அருள்திரு. C. கில்டன் தயானந்த் அவர்களையும் இதனைத் தொகுக்கும் பணியில் தொகுப்பாசிரியராக ஈடுபட்ட அருள்திரு. இரா. சாம் பிரின்ஸ், அச்சுப்பணிகளை நேர்த்தியாக நிறைவேற்றிய C.S.I. மார்த்தாண்டம் அச்சகத்தார், கண்காணிப்பாளர் அருள்திரு. N. விபின் ஜாண் அவர்களையும் பாராட்டுகிறேன்.

திருவசனப் போதனையில் இந்நூல் சிறப்பான பங்களிப்பைத் தரும். என்ற நம்பிக்கையுடன் வாழ்த்தி ஜெபிக்கும்

The Rt. Rev. B.N. Fenn
(Bishop, C.S.I. Cochin Diocese)
Moderator's Commissary
Kanyakumari Diocese

# இயக்குநர் உரை

***கிறிஸ்து இயேசுவில் அன்பிற்குரியவர்களே!***

இறைப்பணியில் மிகவும் முக்கியமான இரண்டு பணிவிடைகளில் ஒன்று, Ministry of the Word இறைவார்த்தை திருப்பணி, மற்றொன்று Ministry of Dead நற்செயல் திருப்பணி. இறைப்பணியாளர்கள் இரண்டு பணிவிடைகளையும் நிறைவேற்ற முக்கியத்துவம் கொடுப்பார்கள். இறைவார்த்தைகளைப் பகிர்ந்து போதித்து கொடுக்கும் பணிவிடை எல்லா தொழுகைகளிலும் சிறப்பிடம் பெறும். இறைவார்த்தைகள் வாழ்வியல் சார்ந்த செய்திகளோடு பகிர்ந்து கொடுக்கப்படும் போது இறைமக்கள் இறையுறவில் வளரவும், இறையரசின் தூய பண்புகளில் பெருகவும் உதவுகின்றது. தூய பவுலார் திமொத்தேயுக்கு எழுதிய திருமுகத்தில் அழகாக குறிப்பிடுகிறார் மறைநூல் அனைத்தும் கடவுளின் தூண்டுதல் பெற்றுள்ளது. அது கற்ப்பிப்பதற்கும் கண்டிப்பதற்கும் சீராக்குவதற்கும் நேர்மையாக வாழப் பயிற்றுவிப்பதற்கும் பயனுள்ளது. (2 திமொ. 3:16)

இறைவார்த்தைகள் ... யாராவது விளக்கி காட்டாவிடில் எவ்வாறு என்னால் தெரிந்துக் கொள்ள முடியும் (திப. 8:30,31)என்று ஏக்கத்துடன் நிற்கும் இறைமக்களுக்கு தகுந்த தெளிவுடன், வாழ்வியல் சூழலோடு இறைவசனத்தை போதிக்க இந்நூல் பேருதவியாக அமையும் என நம்புகிறேன். ஆலய திருப்பீடத்தினின்று உரைக்கப்படும் இறைவார்த்தைகள், இறைமக்களின் இதயத்திற்கு நல்மருந்து. இறைவனுக்கு நேராக மக்கள் திரும்ப உதவும்.

அருளுரைக் கையேடு என்னும் இந்நூல் ஒரு துணை நூல், திருமறையே ஆதாரம் , அஸ்திபாரம், திருமறையின் ஆழங்களுக்கு அழைத்துச் செல்லும் வழிகாட்டியே இந்நூல்.

இந்தநூல் தென்னிந்தியத் திருச்சபையின் அட்டவணைப்படி சிறப்பு அருளுரைகளோடு தயாரிக்கப்பட்டுள்ளது. மகிவும் குறுகிய காலத்தில் இப்பணிகளை நேர்த்தியாக திட்டமிட்டு கடினமாக உழைத்த அருள்திரு. இரா. சாம் பிரின்ஸ் மற்றும் அவர்களோடு இணைந்து உழைத்த ஆயர்கள், இறைப்பணியாளர்களை பாராட்டுகிறேன். மேலும்

அருளுரைகளை எழுதியவர்கள், அச்சுப்பணிகளை அனைவரும் மெச்சும் வகையில் அச்சிட்ட C.S.I. பிரிண்டிங் பிறஸ், மார்த்தாண்டம் பணியாளர்கள் மற்றும் நல்ஆலோசனைகள் தந்த தொடர்புத்துறையின் முன்னாள் இயக்குநரும் பேராய அச்சகங்களின் கண்காணிப்பாளருமான அருள்திரு. N. விபின் ஜாண் அவர்களுக்கும் நன்றி.

அட்டைப்பட வடிவமைப்பில் உதவிய திருப்பணியாளர் திரு. M.R. மில்ட்டன் மார்க், பிழைத்திருத்தப்பணியில் உதவிய அனைவருக்கும் நன்றி. இறையருளோடு இறைவார்த்தையை பகிர்வோம்.

அருள்திரு. C. **கில்டன் தயானந்த்**
இயக்குநர், தொடர்புத்துறை

## தொகுப்பாசிரியரிடமிருந்து.....

***“இறை வார்த்தையை அறிவி, வாய்ப்புக் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் இதைச் செய்வதில் கருத்தாயிரு, கண்டித்துப் பேசு; கடிந்து கொள்; அறிவுரை கூறு, மிகுந்த பொறுமையோடு கற்றுக் கொடு.” (2 திமொ. 4:2).***

### இறையன்பு மிக்க உடன் பணிவிடைக்காரர்களே!

மறைநூல் வழியாக நிலைவாழ்வு கிடைக்கும் என உறுதி மொழிந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் உங்களுக்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெரு மகிழ்வு கொள்கிறேன்.

........ தொல் நிலைப்
பெருமலை விடர் அகத்து அருமிசை கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின் அகத்து அடக்கிச்
சாதல் நீங்க எமக்கு ஈந்தனையே!

என்னும் புறநானூற்றுப் பாடல், நெடிது வாழும் நிலையருளும் அரிய நெல்லிக்கனியை அதியமான் ஔவைக்கு (அவ்வைக்கு) தந்ததை எடுத்துரைக்கின்றது. நீண்ட நாள் வாழுகின்ற ஆற்றலையருளும் என வழங்கப்பெற்ற நெல்லிக் கனியை உண்ட ஔவையார் இன்றில்லை, அதை அன்புள்ளத்தோடு வழங்கிய அதியமானும் இன்றில்லை, அந் நெல்லிக்கனியும் இல்லை. இவ்வுலகில் காலங்கடந்தும், காலத்தை வென்றும் நிற்பது கடவுளின் வார்த்தையாகும். ஆகவே தான் “விண்ணும் மண்ணும் ஒழிந்துபோம், ஆனால் என் வார்த்தைகள் ஒழியவே மாட்டா” என்கிறார் இயேசுகிறிஸ்து.

“திருமறைக்குத் திரும்புங்கள், உங்களுடைய வாழ்வின் எல்லாத் துயரங்களையும், துன்பங்களையும் போக்கும் அரும் மருந்தாகிய மகிழ்ச்சியூட்டும் இறை உறுதி மொழிகள் அதில் அடங்கியுள்ளன” (Go to the Scripture. The joy full promises they contain will be a balsam to all your troubles) என்கிறார். அறிஞர் ஆன்ட்ரு ஜாக்சன் (Andrew Jackson). ஆண்டவர் தமது வார்த்தையை அனுப்பி தம் மக்களை நலமாக்குகின்றார், நெடியது வாழ செய்கின்றார், நிலை வாழ்வை அருளுகின்றார். அத்தகைய இறைவார்த்தையைக் கற்பிக்கும், விளக்கிக் கூறும் மானிட வாழ்வோடு பொருத்திப் போதிக்கும் கலை வடிவமே அருளுரையாற்றுதலாகும்.

"மனிதர்களை மாற்ற
நீ வேதத்தை அனுப்பினாய்
அவர்களோ
தாங்கள் மாறாமல்
உன் வேதத்தை மாற்றி விட்டார்களா!"

என்பது கவிக்கோவின் கவிதை வரிகளாகும். இறைமக்களை நல்வழிப்படுத்தும், நிலைவாழ்வை உடமையாக்கிக் கொள்ளும் நோக்கில் அருளுரையாற்றாமல் தங்களை வளப்படுத்திக் கொள்ளும் தீய எண்ணத்தில் இறைவாக்கைத் தங்கள் வசதிக்கேற்ப திரித்துக் கூறும் போலிப் போதகர்கள் மிகுந்து காணப்படும் காலத்தில் பணிவிடை புரிந்து வரும் நாம் இறைவேண்டலோடும், கவனத்தோடும் ஆயத்தம் செய்வதும், அருளுரையாற்றுவதும் அவசியம். 2019 -ம் ஆண்டில் நாம் ஆற்றும் அருளுரைகளின் வழியாக கடவுள் தம் ஒளியையும், உண்மையையும் அனுப்பி இறைமக்கள் நல் வழியில் நடக்கவும், நன்னலம் பெறவும் அருள்புரிவதாக!

பெரும் பணியை என்னிடம் ஒப்படைத்த தென்னிந்தியத் திருச்சபையின், முதன்மைப் பேராயரும், நம் முன்னைப் பொறுப்புப் பேராயருமான பேரருள்பெருந்திரு. தாமஸ் K. உம்மன் அவர்களுக்கும், ஊக்கப்படுத்திய முதன்மைப் பேராயரின் பதிலாள் (Moderator's Commissary) பேரருள்திரு. B.N. ஃபென் அவர்களுக்கும், இப்பணியில் நல் ஆலோசனைகளை வழங்கிய தொடர்புத்துறை இயக்குநர் அருள்திரு. C. கில்டன் தயானந்த் அவர்களுக்கும் நன்றி கூறுகின்றேன். அருளுரை ஆயத்தப் பணியிலும், தலைப்புகளை மொழிபெயர்த்து, பிழைதிருத்தப் பணியிலும் உடனின்று உழைத்த திருவாளர் B. சாம் ஜெபசிங் அவர்களுக்கும், அருளுரைகளை ஒழுங்குபடுத்தி பதிப்புப்பணியில் முழுமையான பங்களிப்பு தந்த திருவாளர் M.R. மில்ட்டன் மார்க் அவர்களுக்கும் பிழை திருத்தப் பணியில் உழைத்த அறிவர் P. ஏஞ்சல் ஹென்சிலின், அருள்திருவாளர்கள் R. ஹென்சிலின் நேசராஜ், T.P. சலீம் தங்ககுமார், R. டேவிட் ஜெபசிங், திருவாளர்கள் J. பிரபின் செல்வமணி, நிஸ்பர்ட் அச்சகத்துறை கண்காணிப்பாளர் அருள்திரு. N. விபின் ஜாண், மிக சிறப்பு மிகு நிலையில் நல்ல பங்களிப்பை மனமுவந்து தந்த மார்த்தாண்டம் C.S.I. அச்சகப் பணியாளர்கள், கணினி பணியாளர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மேலும்

அருளுரைகளைச் சிறப்பான முறையில் எழுதிக் கொடுத்த ஆயர்கள், இறைப்பணியாளர்கள் அனைவருக்கும் இந்த நல்ல பணியில் ஊக்கப்படுத்தி உடனின்று உழைத்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வருளுரைக் கைந்நூலில் காணும் குறைகளைக் களைந்து, கனிகின்ற வளமையைக் கூட்டி அருளுரை மேடைகளிலிருந்து இறைவார்த்தைகளை விதைப்போமாக.

அனைத்து மாண்பும், மாட்சியும்
கடவுளுக்கே உரித்தாகுக!

இறைப்பணியில்
அருள்திரு. **இரா. சாம் பிரின்ஸ்**
தொகுப்பாசிரியர்

# பொருளடக்கம்

1. 01-01-2019 ஒப்படைக்கப்பெற்ற கூட்டாண்மைக்கான இறையழைப்பு

**வார இறைவேண்டல்**

2. 02-01-2019 இயலாமையை அகற்றும் இறைவன்
3. 03-01-2019 இறைவனை தேடுவோர் இறையாசியில் மகிழுவர்
4. 04-01-2019 இறை நம்பிக்கையோடு பயணிப்போம்
5. 05-01-2019 இறையாற்றலோடு பயணிப்போம்
6. 06-01-2019 மீட்பிற்கான திருவெளிப்பாடு
7. 13-01-2019 தூயவராயிருங்கள்
8. 20-01-2019 ஒரே உடல் ஒரே திருமுழுக்கு
9. 26-01-2019 அனைவருக்கும் சமத்துவமும் நீதியும்
10. 27-01-2019 அன்பினால் ஒன்றிணைக்கப் பெற்றோம்
11. 03-02-2019 ஆண்டவரைப் போற்றுங்கள்
12. 10-02-2019 நோய்மையில் நலம் பெறுதல்
13. 17-02-2019 படைப்பில் கூட்டுச் சார்புடைமை
14. 24-02-2019 படைப்பின் ஒழுக்கக்கேடு (சீர்கேடு)
15. 03-03-2019 தவக்காலம் : ஒரு மீட்பின் காலம்
16. 06-03-2019 சிலுவை : பிறர்பொருட்டுத் துன்புற ஓர் அழைப்பு
17. 10-03-2019 மீட்பு பணியில் இளையோர்
18. 10-03-2019 ஒதுக்கப்பட்டவரோடும், ஓரங்கட்டப்பட்டவரோடும் இருத்தல்
19. 17-03-2019 பாவச் சுமையிலிருந்து விடுவித்தல்
20. 24-03-2019 எல்லைகளைக் கடந்து இறைநம்பிக்கையை ஒப்புக்கொள்ளல்
21. 31-03-2019 ஒடுக்குகிற கட்டமைப்புகளை மாற்றுருவாக்கம் செய்தல்
22. 07-04-2019 சிலுவையும் சீடத்துவத்திற்கு ஒரு புதிய முன்மாதிரியும்
23. 14-04-2019 ஓசன்னா : ஆண்டவரே எம்மை மீட்டருளும்
24. 18-04-2019 நன்றித் திருவிருந்து : துன்புறும் மானிடத்தின் கூட்டுறவு
25. 19-04-2019 சிலுவை : மீட்பின் நிறைவேறுதல்
26. 21-04-2019 உயிர்ப்பு : எல்லையற்ற மாற்றுருவாக்கத்தைக் கொண்டாடுதல்
27. 28-04-2019 உயிர்த்த ஆண்டவரால் ஆற்றல்படுத்தப் பெறுதல்
28. 05-05-2019 உயிர்த்த ஆண்டவரோடு திருமறையை மீள்படித்தல்
29. 12-05-2019 உயிர்த்த ஆண்டவரால் அதிகாரப்படுத்தப்பெறுதல்
30. 19-05-2019 கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளல் : உண்மை
31. 26-05-2019 கிறிஸ்துவின் சிந்தையோடு அருட்பணி
32. 02-06-2019 தூய ஆவியரால் நடத்தப் பெறுதல்
33. 02-06-2019 ஆண்டவருக்கு அஞ்சுவதே ஞானத்தின் தொடக்கம்
34. 09-06-2019 வாரும் தூய ஆவியரே, எம்மை விடுவித்தருளும்
35. 16-06-2019 மும்மை (திரித்துவம்) : அன்பின் சமூகம்
36. 23-06-2019 வழிபாட்டில் இறைவெளிப்பாடு
37. 30-06-2019 சீடர்களை உருவாக்குங்கள்
38. 07-07-2019 இழப்பை ஒரு பொருட்டாக கருதாமல் கொடுத்தல்

39. 14-07-2019 இறையியல் கல்வி : நம்பிக்கைக்குரியவர்களை உருவாக்குதல்
40. 21-07-2019 இறைமக்கள் : கிறிஸ்துவின் மந்தை
41. 28-07-2019 அருட்பொழிவுத் திருப்பணி ; கிறிஸ்துவின் நறுமணம்
42. 04-08-2019 அருட்பணி : எல்லா இடங்களிலிருந்தும் எல்லா இடங்களுக்கும்
43. 11-08-2019 திருமணம் அன்பின் நீடித்த வாழ்வு
44. 15-08-2019 முடிவெடுப்பதில் பங்கேற்பு
45. 18-08-2019 திருமுழுக்கு : விண்ணிலிருந்து பிறத்தல்
46. 25-08-2019 திருவிருந்து என்னும் திருவருட்சாதனம்
47. 01-09-2019 கல்வி : திருச்சபையின் திருப்பணி
48. 08-09-2019 பெண்களின் திருப்பணியை நினைவு கூர்தலும், கொண்டாடுதலும்
49. 15-09-2019 கடவுளும் பல்சமய பற்றுறுதியாளர்களும்
50. 22-09-2019 வன்முறைச்சூழலில் அமைதி
51. 27-09-2019 பணிவிடையில் ஒன்றிப்பு
52. 29-09-2019 முதியோரைப் பராமரித்தலும் ஏற்றுக்கொள்ளுதலும்
53. 06-10-2019 அனைத்து இறைமக்களின் குருத்துவம்
54. 13-10-2019 இயலாமை : பராமரித்தலும் மதித்தலும்
55. 20-10-2019 செயலில் கிறிஸ்துவுடன் இளையோர்
56. 27-10-2019 கடவுளின் இறையாண்மையின் கொண்டாட்டம், நீதியும் அமைதியும்
57. 03-11-2019 இந்தக் குழந்தை என்னவாகப் போகிறது?
58. 10-11-2019 திராட்சைச் செடியும் கொடிகளும்
59. 17-11-2019 பெண் குழந்தையின் பெருமதிப்பை உறுதி செய்தல்
60. 24-11-2019 நுகர்வோரியத்திற்கு கிறிஸ்தவ மறுமொழி
61. 01-12-2019 எலிசபெத்துடன் மரியாவின் சந்திப்பு, கடவுளின் வாக்குறுதியைக் கொண்டாடுதல்
62. 08-12-2019 இறைவாக்கு : இருமுனையுள்ள கூர்வாள்
63. 15-12-2019 இம்மானுவேலின் வாக்குறுதி
64. 22-12-2019 ஆயத்தம் : ஆண்டவர் வருகிறார்
65. 24-12-2019 கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக
66. 25-12-2019 கிறிஸ்துப் பிறப்பு : அருளின் மேல் அருள்
67. 29-12-2019 குடும்பம் : நம்பிக்கை உருவாகும் இடம்
68. 31-12-2019 வாருங்கள் ஆண்டவர் நல்லவர்

**தவக்கால அருளுரைகள் : புதன்**

69. 13-03-2019 சிலுவை : கிறிஸ்துவைப் பின்தொடரும் வாழ்வு
70. 20-03-2019 அமைதியருளும் சிலுவை
71. 27-03-2019 ஒருடலாக்கும் சிலுவை
72. 03-04-2019 உயர்த்தும் சிலுவை
73. 10-04-2019 வெற்றியருளும் சிலுவை

**தவக்கால அருளுரைகள் : வெள்ளி**

74. 08-03-2019 அன்னியராக்கப்பட்ட கிறிஸ்து
75. 15-03-2019 விருந்தினரான கிறிஸ்து
76. 22-03-2019 விருந்தளிக்கும் கிறிஸ்து

77. 29-03-2019 வெறுமையாக்கும் கிறிஸ்து
78. 05-04-2019 பணியாளரான கிறிஸ்து
79. 12-04-2019 கையளிக்கும் கிறிஸ்து

**பரிசுத்த வாரம் :**

80. 15-04-2019 மாயமற்ற பக்தி
81. 16-04-2019 அன்பால் வெளிப்படும் பக்தி
82. 17-04-2019 நற்செயலில் வெளிப்படும் பக்தி

**சிலுவைத் திருவார்த்தைகள்**

83. 1. திருமைந்தரின் பேரன்பு
84. 2. திருமைந்தரின் பேரருள்
85. 3. திருமைந்தரின் பொறுப்பு
86. 4. திருமைந்தரின் பெருமூச்சு
87. 5. திருமைந்தரின் பேரார்வம்
88. 6. திருமைந்தரின் பெருமிதம்
89. 7. திருமைந்தரின் பெருமைக்குரிய கையளிப்பு

**புதிய மாத தொடக்க தொழுகை அருளுரைகள்**

90. 01-02-2019 நம்பிக்கையூட்டும் ஆண்டவர்
91. 01-03-2019 துணை நிற்கும் ஆண்டவர்
92. 01-04-2019 புதுச்செயல் செய்யும் ஆண்டவர்
93. 01-05-2019 ஆற்றல் படுத்தும் ஆண்டவர்
94. 01-06-2019 உடன் இருக்கும் ஆண்டவர்
95. 01-07-2019 நல்வழிப்படுத்தும் ஆண்டவர்
96. 01-08-2019 பரம பாதுகாப்பு தரும் ஆண்டவர்
97. 01-09-2019 நினைவில் நிறுத்தும் ஆண்டவர்
98. 01-10-2019 நிறைவாழ்வருளும் ஆண்டவர்
99. 01-11-2019 உடன்படிக்கை செய்யும் ஆண்டவர்
100. 01-12-2019 ஒளியாக வைக்கும் ஆண்டவர்

**சிறப்பு நாட்களுக்கான அருளுரைகள்**

101. புதிய கல்வியாண்டு தொடக்க நாள்
102. தேர்வு நாள்
103. சங்க விழா
104. சபைநாள் விழா

**விழாக்கால அருளுரைகள்**

105. திருமறைப்பள்ளி ஆண்டுவிழா
106. கிறிஸ்தவ பக்திமுயற்சி சங்க ஆண்டுவிழா
107. ஆண்கள் ஐக்கிய சங்க ஆண்டுவிழா
108. பெண்கள் ஐக்கிய சங்க ஆண்டுவிழா
109. பாடகர்குழு ஆண்டுவிழா
110. இறைவேண்டல் குழு ஆண்டுவிழா
111. நூலக ஆண்டுவிழா

## LITURGICAL COLOUR - 2019

| | |
|---|---|
| **December 24 evening to January 6 (Christmas Season)** | **White** |
| **January 7 to March 5 (Epiphany Season)** | **Green** |
| **March 6 to April 20 (Lenten Season)** | **Purple** |
| **April 21 to June 8 (Easter Season)** | **White** |
| **June 9 (Pentecost Sunday)** | **Red** |
| **June 10 to June15 (Pentecost Season)** | **Green** |
| **June 16 (Trinity Sunday)** | **White** |
| **June 17 to November 30 (Pentecost Season)** | **Green** |
| **December 1 to December 24 Morning (Advent Season)** | **Purple** |

01-01-2019

புத்தாண்டு & உடன்படிக்கை நாள்

## ஒப்படைக்கப்பெற்ற கூட்டாண்மைக்கான இறையழைப்பு

**"GOD'S CALL FOR COMMITTED PARTNERSHIP"**

இச. 10:12-22 — 1 தெச. 4:1-8

திபா. 23 — மாற். 10:35-45

**"இருப்பினும் உங்கள் மூதாதையர் மீது பற்று வைத்து அன்பு கூர்ந்தார். அவர்களுக்குப் பின் அவர்களுடைய வழி மரபினராகிய உங்களை எல்லா மக்களினங்களின்றும், இந்நாளில் இருப்பது போல தெரிந்து கொண்டார் ."** (இ.ச. 10:15)

புதிய ஆரம்பம், வாழ்வின் தூய்மையான உறவுகளின் தொடக்கம். கடவுளின் பிரசன்னத்தில் ஓர் உடன்படிக்கையோடு துவங்குவது இயல்பானது. இப்படிப்பட்ட ஆரம்பம் அசீர்வாதமானது. திருமறையில் உடன்படிக்கை என்பது சிறப்புக்குரியதாக, புனிதமானதாக சுட்டிக்காட்டப் படுகிறது. திருமறையில் மூன்று நிலைகளில் கடவுளின் உடன்படிக்கை நிலை வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

1. A STATEMENT ABOUT GOD'S SAVING ACT
(பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்ற கடவுளின் உடன்படிக்கை)

2. A STATEMENT ABOUT WHAT GODS EXPECTS FROM HUMANITY IN RESPONSE
(உடன்படிக்கை சார்ந்த கடவுளின் எதிர்பார்ப்புக்கு மானுடத்தில் பதில் .... )

3. SIGN OR SYMBOL AS A REMINDER OF THE COVENANT
(உடன்படிக்கையை நினைவபுடுத்தும் அடையாளம்)

கடவுளின் உடன்படிக்கையும், மனிதனுக்கு அதை அவர் நிறைவேற்றுகின்ற நிலைகளும் ஆச்சரியமானது. செய்து கொண்ட உடன்படிக்கைக்கு தகுதியற்றவனாக மாறும்போதும் கடவுளின் இரக்கம் , அன்பு அவனை தொடர்ந்து நடத்தும். அவனை புதிய மனிதனாக்கி, புதிய பாதையில், புதிய பார்வையில் பயணிக்கச் செய்கின்றது.

ஓர் புதிய ஆண்டின் துவக்கம் கடவுள் சமூகத்தினின்று, அவர் பிரசன்னத்தோடு, ஓர் புதிய உடன்படிக்கையோடு துவங்க முற்படுவது சிறந்தது. இப்புதிய வருடத்தின் ஆரம்பத்தில் கடவுள் நம்மோடு உடன்படிக்கை செய்வதோடு, அவரால் தெரிந்துக்கொள்ளப்பட்ட ஒப்படைப்புள்ள அவருடைய மக்கள் எப்படி பயணிக்க வேண்டும் என்பதை பின் வரும் இறையழைப்புகள் வழி நமக்குத் தருகின்றார்.....

## 1. கடவுளின் அன்பின் பங்காளர்களாக இருக்க இறையழைப்பு :

(GOD'S CALL TO BE THE PARTNERS OF HIS LOVE)

எனவே இஸ்ரயேலரே உங்கள் கடவுளாகிய ஆண்டவருக்கு அஞ்சி அவரி தம் அனைத்து வழிகளிலும் நடந்து, அவர் மீது அன்பு கூர்ந்து, உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு உள்ளத்தோடும் அவருக்குப் பணி புரிந்து ....(இச. 10:12)

கடவுளின் எல்லையற்ற அன்பிற்கு சொந்தக்காரர்களான இஸ்ரேல் மக்கள், அடிமைத்தனத்தால் அடிபட்டுபோன கண்ணீரின் பாதையாகிய எகிப்திலிருந்து ஆசீர்வாதமான கானானின் பாதைக்கு நேராய் வழி நடத்தப்பட்டார்கள். "....நீ எழுந்து, மக்களுக்கு முன் புறப்பட்டுச் செல்" (இச. 10:11) என்கின்ற கடவுளின் வார்த்தை, ஆசீர்வாதமான பாதைக்கு நேராக தன் மக்களை வழி நடத்துகின்ற கடவுளின் விருப்பத்தையும், அதற்கு மோசே-யை துரிதப்படுத்துகின்ற நிலையையும் காட்டுகின்றது.

அடிமைத்தனத்தின் அனுபவத்திலிருந்து ஆனந்தத்தோடு (From Bondage to Bliss) வழி நடத்த விருப்பம் கொள்கின்ற கடவுள், தன் கட்டளைகளை கடைபிடிப்பதின் வழியாக அன்பு கொள்ளவேண்டும் என்று விரும்புகின்றார். ஏன் இந்த அழுத்தம் என்பதில் நம் கவனம் செலுத்தப்பட்டால், தன் மக்கள் பல முறை உடன்படிக்கையை உடைத்துப்போட்டு பயணிக்கிறதாய் இருந்தது என்பதை புரிய முடியும். திபா. 78:37-ல் ".....அவரது உடன்படிக்கையில் அவர்கள் நிலைத்து நிற்கவில்லை" என்று கூறப்பட்டிருக்கிறது. இ.ச 10: 2 "நீ உடைத்துப் போட்ட முன்னைய பலகைகளில்..... " என்பது கடவுளின் உடன்படிக்கை/ கடவுளின் கட்டளை உடைக்கப்பட்ட நிலையின் வெளிப்பாடு. (Breaking of God's rules) கடவுளின் கட்டளை உடைக்கப்பட்ட நிலையின் வெளிப்பாடு. (Breaking of God's rules) உடன்படிக்கையை உடைத்துபோட அல்ல அதை கடைபிடித்து நடப்பதே கடவுளின் எதிர்பார்ப்பு. (இச. 10:13)

புதிய ஆண்டின் துவக்கநாளில், நாம் உடைத்துப் போட்ட கடவுளின் கட்டளைகளை சீர்தூக்கிப்பார்க்கவும், மறுபடியும் கடவுளின் உடன்படிக்கையில் இந்நாளில் இணைந்து, அவ்வுடன்படிக்கைக்கு உண்மையான பங்காளர்களாய் வாழ முயற்சிப்போம், முடிவுசெய்வோம். இதுவே கடவுளின் பங்காளர்களுக்குத் தரப்படுகின்ற இறையழைப்பு.

## 2. ஒடுக்கமுள்ள சமூகத்தின் பங்காளர்களாக இருக்க இறையழைப்பு :

(GOD'S CALL TO BE THE PARTNERS OF HIS DISCIPLINED COMMUNITY)

"கடவுள் நம்மை ஒழுக்கக் கேட்டிற்க்கு அல்ல, தூய வாழ்வுக்கே அழைத்தார்." (1தெச 4:7)

பவுலடிகளாரின் முதல் திருமுகம் என்ற சிறப்பைப் பெறுகின்ற இந்த தெசலோனிக்கேயருக்கு எழுதப்படுகின்ற மடலில், (4: 1-12)-ம் அதிகாரத்தில் 'கடவுளுக்கு உகந்த வாழ்க்கை' குறித்து விளக்குகின்றார். இங்கே அவரின் அழுத்தமான அழைப்பு "கடவுள் நம்மை ஒழுக்கக் கேட்டிற்க்கு அல்ல, தூய வாழ்வுக்கே அழைத்தார்....." என்பதே .

மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த எப்பிகியூரஸ் (EPICURUS) என்பவர் உருவாக்கிய "EPICUREAN PHILSOPHY" குறித்து அறிவது அவசியமானது. இந்த கொள்கையாளர்களின் முக்கிய சிந்தனை இது .... "Eat! drink! and be merry! for tomorrow we die." இக்கொள்கையும் இக்கொள்கையை பின்பற்றுகிறவர்களின் சிந்தையிலும் 'எப்படியும் வாழலாம்' என்ற எண்ணத்தின் பிரதிபலிப்பையுமே காணமுடியும்..... திருமறையில் கடவுள் இப்படிப்பட்ட ஒழுக்கக் கேடுகேட்டின் சிந்தனைக்கு எதிராகவே இருக்கின்றார். "உண்டு, குடித்து, மகிழ்ச்சியில்திளைத்திடு" என்ற எண்ணம் கொள்ளுகிறவர்களுக்கு எதிரானவராக கடவுள் நிற்கின்றார்.

'எப்படியும் வாழலாம்' என்பது ஒழுக்கக்கேட்டை குறித்து கவலை கொள்ளாத ஒழுக்கக்கேட்டின் சிந்தனை. ஒழுக்கேடு நிறைந்த வாழ்வு கடவுளின் பிள்ளைகளுக்கு ஏற்புடையது அல்ல, அது தூக்கி எறியப்பட வேண்டியது .... 1கொரி. 6:12-ல் "எல்லாவற்றையும் செய்ய எனக்கு உரிமையுண்டு ஆனால் நன்மை தரக்கூடியவையல்ல...." என்று பவுல் கூறுகின்றார். கடவுளின் உடன்படிக்கையின் பங்காளர்களாகிய நாம் ஒழுக்கக்கேடுகள் நிறைந்த சமுதாயத்தின் நிலைகளோடு, வாழ்வியல் சூழல்களோடு ஒட்டிவிடாமல், கடவுளின் மக்களுக்கு தகுதியானது எது என்பதை அறிந்து அவ்வழியில் நம் பயணத்தினை இவ்வருடத்திலிருந்து துவங்குவோம்.

## 3. பாடுகளை ஏற்றுக் கொள்ளுகின்ற பங்காளர்களாயிருக்க அழைப்பு : (மாற்கு 10:38b)

(GOD'S CALL TO BE THE PARTNERS OF HIS SUFFERINGS)

"....நான் குடிக்கும் துன்பக்கிண்ணத்தில் உங்களால் குடிக்க இயலுமா? நான் பெறும் திருமுழுக்கை உங்களால் பெற இயலுமா?"

ஆசீர்வாதங்களை, அதிகாரங்களை மட்டும் பெற வேண்டும் என்ற எண்ணம் கடவுளின் மக்களிடையே பெருகிக்கொண்டிருக்கிறது. அதிசயங்கள், அற்புதங்கள் செய்த சிறந்த தலைவராகிய இயேசுவின் நிழலில் இருந்து ஆசீர்வதிக்கப்பட்டவர்களாய் இருந்து விடலாம் என்ற எண்ணம் செபெதேயுவின் குமாரராகிய யாக்கோபுக்குள்ளும், யோவானுக்குள்ளும், இருந்திருக்கலாம். ஆனால் இயேசு நாதர் கூறுகின்றார்."நான் குடிக்கும் துன்பக் கிண்ணத்தில் குடிக்க இயலுமா??" இயேசு நாதரின் நிழ்லில் வாழுகின்றவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்ற சிந்தனையை விட அவரின் பாடுகளின் பங்காளர்களாகவும் மாறலாம் என்கின்ற சிந்தனை அவசியமானது. இச்சிந்தனையை பக்தன் யோபு மிக அழுத்தமாக தன் வார்த்தைகளின் வழி வெளிப்படுத்துகின்றார். "நன்மையைக் கடவுளிடமிருந்து பெற்ற நாம் ஏன் தீமையைப் பெறக்கூடாது" (யோபு 2:10). மறுபடியும் ஆசீர்வாத்தை எதிர்நோக்கி பெத்லகேமிலிருந்து மோவாப் நோக்கி பயணித்த நகோமி குடும்பம் தாங்கள் நினைத்தது நிறைவேறாமல் போனபோது கடவுளை கசந்துகொண்டாள் நகோமி. (ரூத். 1:20)

ஆசீர்வாதங்களை மட்டும் எதிர்நோக்கி பயணிக்க ஆயத்தமாகும் நம்மில், துன்பங்கள் வந்தாலும் ஏற்றுக்கொண்டு விசுவாச தளர்வு வராமல் இறைவனின் பங்காளர்களாய் முன்னேறும் மனநிலை இவ்வருடத்தின் முதல் நாளிலேயே உருவாகட்டும்...... ஆசீர்வாதத்தின் நிழலில் ஒதுங்க நினைத்த செபெதேயுவின் குமாரராகிய யாக்கோபும், யோவானும் துன்பத்தின் கிண்ணத்திலும் பங்கேற்கும் நல்ல பங்காளிகளாக தங்களை அர்ப்பணித்தார்கள். (மாற்கு 10:39a)

ஆங்கில இலக்கியத்திலே ALFRED TENNYSON என்பவரால் எழுதப்பட்ட கவிதையின் தலைப்பு "ULYSSES"இக்கவிதையில் இத்தாக்கா (ITHACA) தேசத்தின் அரசர் யுலிசஸ் (Ulysses) , தன் பயணத்தை மேற் கொள்ளும் முன் தன் குமாரனாகிய டெலிமேக்கஸ் (Telemachus)இடம் பின் வரும் வார்த்தைகளை கூறினார் .... "Made weak by time and fate, but strong in will TO STRIVE, TO SEEK, TO FIND and NOT TO YIELD"காலத்தினால் தளர்ந்து போகும் அனுபவங்கள் வரலாம், இருந்தாலும் பின்வாங்கிவிடாமல் தொடர்ந்து முன்னேற ஆலோசனை கூறுகின்றார்.

இப்புதிய வருடத்தில் இறைவன் தந்திருக்கும் இறையழைப்புகளை நினைவில் நிறுத்தி தளராத மனதோடு கடவுளின் நல்ல பங்காளர்களாக பயணம் செய்திடுவோம், பரமனின் ஆசியோடு வாழ்வில் இன்புற்று மகிழ்வோம்.

பேரருள்திரு. B.N. ***பென்***

02-01-2019



## இயலாமையை அகற்றும் இறைவன்

விப. 4:10-17

**"நீ பேச வேண்டியதை நான் உனக்கு கற்பிப்பேன்."** (விப. 4:12)

குக்கிராமம் ஒன்றிலிருந்து பட்டப் படிப்பு முடித்து பெரிய தொழிற்சாலை பணிக்காக சென்றார் இளைஞன். ஒருவன் தொழிற்சாலையின் கனரக இயந்திரங்களையும், சத்தங்களையும் கேட்ட போது, இதில் பணி செய்வது கடினம், ஊருக்குச் சென்றுவிட வேண்டுமென்று தீர்மானித்தார். இளைஞருடைய சோகம் நிறைந்த முகத்தை மேற்பார்வையாளர் பார்த்த போது, "நீ இயந்திரங்களை இப்போது இயக்க வேண்டாம், உனக்கு கனரக இயந்திரங்களை இயக்குவதற்கு முறையான பயிற்சி தருவோம், அதற்கு பின்பு கனரக இயந்திரங்களில் பணி செய்யலாம். எனவே, கவலை கொள்ள வேண்டாம்" இயலாமையில் இறைவனின் சிறப்புதான் எத்தகையது என்பதை சிந்திப்போம்.

### *1. தயக்கத்தில் தாங்குகிறார் :*

இஸ்ரயேல் ஜனங்களை வழி நடத்த வேண்டுமென்ற பொறுப்பான பணி மோசேயிடம் கொடுக்கப்பட்ட போது மோசே தயங்கினார். 'மோசே கடவுளிடம் பார்வோனிடம் செல்வதற்கும் இஸ்ரயேல் மக்களை எகிப்திலிருந்து அழைத்து போவதற்கும் நான் யார்?' எனக் கேட்டார் (வி.ப. 3:11). இறைவன் பல அற்புதங்களை நிறைவேற்றிய பின்பும், இறைவாக்குகளை தந்த பின்பும் தயங்கி நிற்கிறார். 'நாவன்மை அற்றவன் நான், ஏனெனில் எனக்கு வாய் திக்கும், நாவு குழறும்....' என்கிறார். (வி.ப. 3:10). மோசேயின் குழம்பிய மனநிலை, தயக்கம் நிறைந்த சூழல், எப்படி அதிகாரம், ஆதிக்கம், பணபலம், படைபலம், ஆள்பலம் நிறைந்த எகிப்தியர்களை எதிர்ப்பது? மோசேயின் வாழ்வில் தூரத்தப்பட்ட இடத்திற்கு மறுபடியும் எப்படி செல்ல முடியும்? என்ற தயக்கம் இயலாத சூழலில் ஆண்டவர் மோசேயை ஆற்றல்படுத்துகின்றார். 'நான் உன்னோடே இருப்பேன்' என்று வாக்குரைத்து 'பேச வேண்டியதை உனக்கு போதிப்பேன்' என்றார் (வி.ப. 4:12,15). மேலும் மோசேக்கு பக்கத் துணையாக ஆரோன், மிரியாமையும் கொடுத்து தயங்கிய மனிதரை திடப்பபடுத்தினார்.

## *2. தகுதியின்மையில் தகுதிப்படுத்துகிறார் :*

ஏரேமியா தமது தகுதியின்மை, விருப்பமின்மை வெளிப்படுத்தினாலும் இறைவன் ஆற்றல்படுத்துகிறார். மேலும் இறைவன் 'என் தலைவராகிய ஆண்டவரே, எனக்கு பேசத் தெரியாதே, சிறு பிள்ளை தானே' (எரே 5:6) எரோமியா தமது தகுதியின்மை, விருப்பமின்மை என வெளிப்படுத்தினாலும் இறைவன் ஆற்றல்படுத்துகிறார். மேலும், இறைவன் 'அவர்கள் முன் அஞ்சாதே ஏனெனில் உன்னை விடுவிக்க நான் உன்னோடு இருக்கிறேன்' என்கிறார். ஆண்டவர் மேலும் "இறைவார்த்தைகளை சொல்..... செல்" என்ற கட்டளையும் கொடுக்கிறார் (எரே 1:8-10). யோசுவா இஸ்ரயேல் ஜனங்களை வழி நடத்த வேண்டுமென்ற கடினமான பொறுப்பை ஏற்றச் சூழலிலும் தயங்கி நிற்கின்றார், தமது இயலாமையை வெளிப்படுத்திய போது இறைவன் ஆற்றல்படுத்துகின்றார். 'மோசேயுடன் நான் இருந்தது போல் உன்னோடும் இருப்பேன், உன்னை கைநெகிழ மாட்டேன்; கைவிடவும் மாட்டேன் வீறுகொள், துணைந்து நில்,.....' (யோசு. 1:5,6) என்று ஆற்றல்படுத்தினார். கிதியோன் தயங்கி நிற்கும் போது ஆண்டவர் அவரை ஆற்றுப்படுத்தி 'வலிமை மிக்க வீரனே! ஆண்டவர் உன்னோடு இருக்கிறார்' என்றார் (நீதி. 6:12).

இறைவனின் தெரிந்துகொள்ளுதல் தயங்கிய மனிதரையும், தன்னால் இயலாது என்பவரையும் ஆற்றல்படுத்தி வல்ல செயல்களை செய்ய ஊக்கப்படுத்துகிறது. புத்தாண்டின் பயணத்தில் நமது இயலாமையை இறைவனிடம் தருவோம். இயலாமையை அகற்றும் இறைவன் நம்மை ஆற்றல்படுத்தி முன்னேறிச் செல்ல துணைபுரிவார்.

அருள்திரு. C. **கில்டன் தயானந்த்**

03-01-2019

வார இறைவேண்டல்-நாள் : 2

# இறைவனைத் தேடுவோர் இறையாசியில் மகிழுவர்

லூக். 19:1-10

**"இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று."** (லூக். 19:110)

தேடல் இல்லாத வாழ்வு வெறுமையே. மாணவர்கள் கல்வியில் தேடல், கற்று முடிந்ததும் வேலைக்கான தேடல், வேலையில் அமர்ந்த பின்பு எதிர்கால வாழ்விற்கான தேடல்..... இறைவனைத் தேடுவோர் வாழ்வில் இறையாசியை சொந்தமாக்கி மகிழுவர். இந்த கருத்தாழமிக்க சிந்தனையில் சிந்திப்போம்.

## *1. ஆர்வத்துடன் தேடுங்கள் :*

சக்கேயுவின் தேடல் இயேசு யார்? என்று அவர் பார்க்க விரும்பியது நம் (லூக். 19:2). அவரின் தேடல் இயேசுவை அறிய வேண்டும், புரியவேண்டும், தெரிய வேண்டும் என்ற தேடல். அத்தேடலுக்கு விடைகாண 'காட்டு அத்திமரத்தில் ஏறிக் கொண்டார்' (லூக். 19:4). தேடலின் அனுபவத்தை திருப்பாடல் ஆசிரியர் அழகாக கூறுகின்றார். 'கலைமான் நீரோடைக்காக ஏங்கி தவிப்பதுபோல் கடவுளே! என் நெஞ்சம் உமக்காக ஏங்கித் தவிக்கின்றது' (தி.பா. 42:1). கடவுளே! நீரே என் இறைவன்! உம்மையே நான் நாடுகின்றேன்; என் உயிர் உம் மீது தாகம் கொண்டுள்ளது; நீரின்றி வறண்ட தரிசு நிலம் போல என் உடல் உமக்காக ஏங்குகின்றது (தி.பா. 63:1). இறைவனை தேட வேண்டும் என்ற ஏக்கம்.... வறண்ட நிலம் நீருக்காக ஏங்கி நிற்பதைப் போன்ற நிலை..... சக்கேயுவின் தேடலில் இயேசுகிறிஸ்துவின் கடைக்கண் பார்வை அவர் மீது படுகின்றது. எலிசா தீர்க்கனின் தேடல் 'உமது ஆவி என் மீது இருமடங்காக இருப்பதாக' (2 அர. 2:9). அத்தேடலில் பல அலைச்சல்கள், கடினங்கள் இருப்பினும் தேடலை விடவில்லை. அத்தேடலில் அவருக்காக எலியாவின் போர்வை பரிசாக கிடைத்தது.

## *2. அமைதியுடன் அகமகிழுங்கள் :*

சக்கேயு தன் தேடலில் கிடைத்த வாய்ப்பை நன்றாக பயன்படுத்தினார். 'வாய்ப்புகள் எப்போதும் வாயிற் கதவை தட்டுவதில்லை. தட்டுகின்ற போது பயன்படுத்துகின்றவரே புத்திசாலி.' சக்கேயுவின் இல்லத்திற்கு இறைமகன் இயேசுக்கிறிஸ்து வருகிறேன் என்றதும் அவர் விரைவாய் இறங்கி வந்து மகிழ்ச்சியோடு அவரை வரவேற்றார் (லூக். 19:6).

அவருக்குக் கிடைத்த வாய்ப்பை தவறவிடவில்லை. மரியாள் இயேசுக்கிறிஸ்துவின் பாதத்தில் அமர்ந்திருக்கும் நல்ல வாய்ப்பை தெரிந்து கொண்டாள் (லூக். 10:42). நூற்றுவர் தலைவர் 'ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும்; என் பையன் நலமடைவான்' (மத். 8:7) எனக் கிடைத்த தருணத்தை சரியாக பயன்படுத்தினார். வாய்ப்புகளை சரியாக பயன்படுத்தாதோர் பத்து தோழியர் உவமையில் முன் யோசனையின்றி செயல்பட்ட ஐந்து தோழியர் நிலைக்குரியவர்கள் (மத். 25:10). எரேமியா தீர்க்கன் அழகாக கூறுகின்றார்: அறுவடைக்காலம் முடிந்துவிட்டது; வேனிற்காலம் கடந்து விட்டது; நமக்கோ இன்னும் விடுதலை கிடைக்கவில்லை (எரோ. 8:20). இறைவனைத் தேட வேண்டியக் காலத்தை பயன்படுத்தத் தவறினால் இறைவனும் நம்மை மறந்து விடுவார் (நீதி. 1:25-28). சக்கேயு கிடைத்த வாய்ப்பில் இறைமகனோடு பேசினார், இறையாசி சொந்தமாக்கினார். சக்கேயுவின் தேடலில் திருப்பம் தன்னிலை உணர்ந்து தன்னை இறைவனிடம் தருகின்றார். இளைய மைந்தனின் வாழ்வில் தன்னிலை உணரும் நிலையே திருப்பு முனையை ஏற்படுத்துகிறது. தாவீது அரசன் தன்னிலை உணரும் நிலையே இறைவனோடு ஒன்றிக்க உதவுகின்றது (தி.பா. 51, 2சாமு. 12). சக்கேயுவின் தேடல் 'முழு இல்லத்திற்கு மீட்பு, ஆபிரகாமின் மகன்' (லூக். 18:9) என்ற இறையாசியை சொந்தமாக்கினார். சக்கேயு விசுவாசத்தால் மகன் என்ற உரிமையைப் பெற்றார் (உரோ. 4:11,12,16).

இறைவனைத் தேடுவோர், முழு உள்ளத்தோடு தேடுவோர் இறையாசியில் நிச்சயம் மகிழுவர். 'ஆகையால், கடவுளுடைய வல்லமை மிக்க கரத்தின் கீழ் உங்களைத் தாழ்த்துங்கள்; அப்பொழுது அவர் ஏற்றக் காலத்தில் உங்களை உயர்த்துவார்' (1பேதுரு 5:6).

இப்புதிய ஆண்டின் பயணத்தில் இறைவனை ஒவ்வொரு நாளும், நிமிடமும் தேடுவோம். இறையாசியை சொந்தமாக்குவோம்.

அருள்திரு. C. **கில்டன் தயானந்த்**

04-01-2019

வார இறைவேண்டல் - நாள் : 3

## இறை நம்பிக்கையோடு பயணிப்போம்

பிலி. 3:5-14

**"...கிறிஸ்துவின் மீது கொண்டுள்ள நம்பிக்கையால் தான் அவருக்கு நான் ஏற்புடையவன் ஆகமுடியும்..."** (பிலி. 3:9)

வாழ்க்கை என்பது ஒரு பயணம். இப்பணத்தில் இன்பம், துன்பம், நன்மை, தீமை, தனிமை, இனிமை, ஏமாற்றம், தடுமாற்றம், கவலை, கண்ணீர், வெறுமை, பொறுமையென்று பன்முகங்கள் உண்டு. இப்பயணத்தின் நோக்கத்தில் தெளிவின்றி பயணித்தால் இலக்கை அடைய முடியாது. சாதாரணமாக, "எங்கே தூரமா போறீங்க? என்றால் சும்மா இதுவரை தான்" என்று கூறுவோம். நாம் சேர வேண்டிய இடம் எது என்று தெரியாமல் பயணித்தால் நிச்சயம் இலக்கை அடைய முடியாது. 'மோட்ச பிரயாணம்' நூலில் ஒருமனிதன் விண்ணக வாழ்வு நோக்கி பயணிக்கும் போது தடுமாற்றங்களை சந்திக்கின்றான், வெற்றிகளை எதிர் கொள்ளுகின்றான். ஆனால் நோக்கத்தில் தெளிவு உடையவனாய் இருந்ததால், போய் சேர வேண்டிய இடத்தில் சேருகின்றான். குறிக்கோள் அற்று பயணிப்போம் என்றால் ஆன்மிக வாழ்விலும் முன்னேறிச் செல்ல இயலாது. அருட்பணியாளர் பவுல் தன் வாழ்வின் பயணத்தை குறித்த தெளிவு இருந்தபடியால் 'கடந்ததை மறந்துவிட்டு, முன்னிருப்பதை கண்முன் கொண்டு, பரிசு பெறவேண்டிய இலக்கை நோக்கி தொடர்ந்து ஓடுகின்றேன்' (பிலி. 3:13,14). என்ற உறுதியுடன் வாழ்கிறார். நாமும் அவ்வாறே தொடரப்படும் சிந்தனை.

### *1. நலமானவைகளைப் பற்றிக் கொண்டு தொடருவோம் :*

இறை நம்பிக்கையோடு நம் பயணம் தொடர விட வேண்டியவற்றை விட வேண்டும். பவுலார் தம் ஆன்மிக பயணத்தில் தன் குலம், இனம் நாடு, குடும்பம், மரபு வழிப் பெருமை, திருச்சட்டம் ஆகியவற்றைவிட, இறையன்பே பெரியது என்று கருதுகின்றார். 'எனக்கு ஆதாயமான இவை அனைத்தும் கிறிஸ்துவின் பொருட்டு இழப்பு என கருதினேன்.' (பிலி. 3:7). சுயபெருமை, சமூக கௌரவம் விட்டு கிறிஸ்துவே போதும் என்கிற நிறைவான மனநிலையே வெளிப்படுத்துகின்றார். வாழ்க்கை பயணத்தில் இறைவனோடு பயணிக்க தீயப் பண்புகளைவிட்டு விட வேண்டும். 'தீயோரும் தம் தீமையினின்று விலகி நீதியையும், நேர்மையும்

கடைபிடித்தால் அதன் பொருட்டு அவர்கள் வாழ்வர்.' (எசே. 33:19). தூய பவுலார் ஓட்டப் பந்தய வீரர்களின் தன்னடக்கம், பயிற்சி வெற்றிக்கு காரணியாக குறிப்பிட்டு, நாமும் மீட்பின் ஓட்டத்தில் கட்டுப்பாடு, கிறிஸ்தவ தகவுகளில் நிலைத்து நின்று வாழுதல் அவசியம் என்று கூறுகின்றார் (1 கொரி. 9:24,25).

### *2. நற்பண்புகளோடு தொடருவோம் :*

இறை நம்பிக்கையோடு நம் பயணம் தொடர உயர்ந்த இறைப்பண்புகள் நம்மில் மலர நாட வேண்டும். தூய பவுலார் 'முன்னிருப்பதை கண்முன் கொண்டு' (பிலி. 3:13) உயர்ந்த நோக்கத்தோடு பயணிக்கிறார். கடவுளின் மக்களாகிய நாம் 'நீதி, இறைப்பற்று, நம்பிக்கை, மன உறுதி, பணிவு ஆகியவற்றை நாடித் தேடவேண்டும்' (1 தீமோ. 6:11). கிறிஸ்துவின் அடிச்சுவட்டில் நடைபயிலும் நாம் விண்ணரசின் உயர் பண்புகளை நாடித் தேடி ஓட வேண்டும். 'நாம் அழிவற்ற வெற்றி வாகை சூட' (1கொரி. 9:25). நாட வேண்டும். இறையரசின் நீதியையும் நாட வேண்டும்.

### *3. நல்காட்சியுடன் தொடருவோம் :*

இறை நம்பிக்கையோடு இலக்கை நோக்கித் தொடர பயணிக்க வேண்டும். நமது பயணம் ஒரு தொடரோட்டம் போன்றது. தூய பவுலார் பரிசு பெற வேண்டிய இலக்கை நோக்கித் தொடர்ந்து ஓடுகிறேன் (பிலி. 3:14) என்னும் போது இப்பயணத்தில் இலக்கை நோக்கித் தொடரும்போது பாடுகள், போராட்டம், சவால்கள் உண்டு இருப்பினும் கிறிஸ்து மீதுள்ள பற்றை எதுவும் பிரிக்க முடியாது (உரோ. 8:35,36) எனத் தெளிவுபடுத்துகிறார். இப்பயணத்தில் தொடர்ந்து முன்னேறி செல்ல, 'நம்பிக்கையைத் தொடங்கி வழி நடத்துபவரும் அதை நிறைவு செய்பவருமான இயேசுவின் மீது கண்களை பதிய வைப்போம்' (எபி. 12:2). நாம் தொடர்ந்து பயணிப்போம்.

இப்புதிய ஆண்டில் இறைநம்பிக்கைகளோடு பயணிப்போம். இலக்கை நோக்கி பயணம் தொடர நம்மை அவர் கரத்தில் தருவோம்.

அருள்திரு. C. **கில்டன் தயானந்த்**

05-01-2019

வார இறைவேண்டல் - நாள் : 4

## இறையாற்றலோடு பயணிப்போம்

செக். 4:6-14

**“உனது ஆற்றலாலும் அல்ல. வலிமையாலும் அல்ல; ஆனால் எனது ஆவியாலே ஆகும் என்கிறார். படைகளின் ஆண்டவன்”** (செக். 4:6)

நாம் வாழும் உலகம் money power, man power, muscle power உள்ளவர்களுக்குதான் முதலிடம் கொடுக்கும். இதை power, position and possension என்றும் கூறலாம். மேற்குரிய வளம் உள்ளவர்களை இவ்வுலகம் hero ஆக்கும். இல்லாதவர்களை zero-ஆக கருதும். இறைவனின் பார்வையில் ‘உனது ஆற்றலாலும் அல்ல, வலிமையாலும் அல்ல; ஆனால் எனது ஆவியாலே ஆகும்’ என்கிறார் படைகளின் ஆண்டவர் (செக். 4:6)

### *1. அசாதாரணமானவைகளை சாதாரணமாக மாற்றுகிறார் :*

திறமைகளை ஆளுமைகளை கொண்டுதான் இவ்வுலகம் தீர்மானிக்கின்றது. ஆனால் இறைபார்வை மாறுப்பட்டது. சவுல் அரசன் படைபலம், ஆள்பலம், அதிகாரபலம் நிறைந்தவன், ஆனால் மனித உணர்வின் அடிப்படையில் மலரும் சிந்தனை ‘சவுல் இஸ்ரயேலர் அனைவரும் பெலிஸ்தியரின் இவ்வார்த்தைகளை கேட்டு கலங்கி பெரிதும் அச்சமுற்றனர்’ (1சாமு. 17:11). ‘மிகவும் அச்சமுற்று அவன் முன்னின்று ஓடினார்’(1சாமு. 17:24). இச்சூழலில் இறை பார்வைகளோடு இறை நம்பிக்கையோடு தாவீது முன் செல்கின்றார். சாதாரண கூழாங்கற்கள், தேவன் வெற்றியை அசாதாரணமான சூழல் சாதாரணமாகின்றது. கூழாங்கற்களும், கவணும் வெற்றியை பெற்றுத்தருகிறது.‘வாளேதும் இன்றி கவணும், கல்லும் கொண்டு பெலிஸ்தியன் மீது வெற்றி கொண்டு அவனை வீழ்த்தி கொன்றான்.’ (1சாமு. 17:50)

கடலின் கால நிலை, மீன் வளம், திருமறையை நம்பி மீன் பிடிக்கச் சென்ற போது வெறுமை தான் பரிசாக கிடைக்கின்றது. ‘இரவு முழுவதும் நாங்கள் பாடுபட்டு உழைத்தும் ஒன்றும் கிடைக்கவில்லை’ (லூக். 5:5). இறைமகன் இயேசுவின் வார்த்தைக்கு கீழ்படிந்து செவி கொடுத்தனர், இறை பார்வையோடு பயணித்த போது வெற்றியை பெற்றனர்.

மோசே இஸ்ரயேல் ஜனங்களை வழி நடத்த ஆண்டவர் அழைத்த போது, அவர் கரத்தில் அதிகாரம், பதவி, செல்வம் இல்லை. பணபலம்,

ஆள்பலம், படைபலம் இல்லை. ஒன்றுமற்ற சூழலில் மிகப் பெரிய புரட்ச்சிக்கு இறையாற்றல் மாத்திரமே துணையானது. சாதாரண ஒரு கோல் அசாதாரண செயல்கள் செய்வதற்கு காரணமாயிற்று.

## *2. அற்பணமான நிலையில் அற்புதமாய் நடத்துகிறார் :*

கானாவூர் திருமண இல்லத்தில் குறைவில் தடுமாற்றம், ஏமாற்றம், கண்ணீர் ஆனால் கடவுள் சாதாரணமான கண்ணீரைக் கொண்டு அசாதாரண செயல்களை செய்வதற்கு பயன்படுத்தினார்.

கடவுளின் செயல்பாடுகள் மனித எண்ணங்களுக்கு அப்பாற்பட்டது. கடவுள் ஒன்றுமற்ற சூழலிலும், வெறுமையிலும் செயலாற்ற முடியும்."கடுகளவு விசுவாசம் மலைகளை பெயர்க்கும்" நமது விசுவாசம், பிறர் பார்வையில் அற்பம். ஆனாலும் அதுவே உலகத்தை ஜெயிக்கும் ஜெயம். (1யோ. 5:4). இறையாற்றலால் கொஞ்சம் மாவும், கொஞ்சம் எண்ணைய் நிறைவாக மாறினது. ஐந்து அப்பம், இரண்டு மீனும் இறையாற்றலால் அனேகருக்கு உணவானது (யோவா. 6:1-13)

ஒன்றுமற்ற சூழலிலும் இறையாற்றல் துணை இருக்குமானால் அசாதாரண சூழலும் சாதாரணமானது.

இப்புத்தாண்டின் பயணத்தில் இறையாற்றலை நம்பி பயணிப்போம்

அருள்திரு. C. **கில்டன் தயானந்த்**

06-01-2019

கிறிஸ்து பிறப்புக்கு பின்வரும்
இரண்டாம் ஞாயிறு

# மீட்புக்கான திரு வெளிப்பாடு

## "REVELATION FOR SALVATION"

வி.ப. 3:1-14 தி.ப. 16:6-10
திபா. 27 யோவா. 12:20-32

**"நான் மண்ணிலிருந்து உயர்த்தப்படும்போது அனைவரையும் என்பால் ஈர்த்துக் கொள்வேன்."** (யோவா. 12:32)

தொழில் அதிபரின் 3 வயது மகன் திடீரென கடத்தப்பட்டான். தொழிலதிபருக்கு கலக்கம், கண்ணீர். சிறிது நேரத்தில் அவருக்கு தொலைபேசியில் ஒரு செய்தி வந்தது. நீங்கள் ஒரு கோடி பணத்துடன் மலைப்பகுதியின் இருளடைந்த இடத்திற்கு வாருங்கள். காவலருடன் இந்த செய்தியால் அதிர்ச்சியுற்ற தொழிலதிபர் கேட்கப்பட்ட பணத்தைக் கொடுத்து மகனை மீட்டு வந்தார். இருளில் அடைக்கப்பட்டிருந்த மகன் வெளிச்சத்திற்கு கொண்டு வரப்பட்டான். இது ஒரு பத்திரிக்கைச் செய்தி. ஆனால் இது மீட்பின் அனுபவத்தைப் புரிந்து கொள்ளும் உண்மைச் செய்தி. கிறிஸ்தவ மீட்பின் அனுபவமும் இத்தகைய விடுதலைத் தன்மையினை தன்னகத்தேக் கொண்டது. Yesha என்ற எபிரேயச் சொல், விசுவாசத்திற்கு கொணர்தல், தடையின்றி வளர்த்தல் என்கிற பொருளைச் சுட்டி நிற்கிறது. வி.ப. 3:9,10 ஆகிய வசனங்களில் ஒடுக்குதலைச் சந்தித்த இறைமக்களை விசாலத்திற்கு கொண்டு வரும் கடவுளாகத் தம்மை வெளிப்படுத்துவதைக் காண்கிறோம். அதுபோல Soteria என்ற கிரேக்கச் சொல் விடுதலை செயல் (Action of deliverence) அதாவது வியாதி மற்றும் ஆபத்திலிருந்து தடுத்து நிறுத்துதலையும் குறித்து நிற்கிறது. இந்நிலையில் மீட்புக்கான திருவெளிப்பாடுக் குறித்து சிந்திப்போம்.

### *1. மீட்பும் முரண்பாடுகளும்* :

இன்று கிறிஸ்தவரிடயே மீட்பு குறித்த பல முரண்பாடு எண்ணங்கள் பரவி வருதலை திருச்சபைகளில் காண முடிகின்றது. சில ஒழுக்க நெறிகளைக் கடைபிடிப்பதால், நாங்கள் மீட்கப்பட்டவர்கள் என்ற எண்ணத்தினை சிலர் கொண்டுள்ளனர். அதாவது நான் மது அருந்துவதில்லை, புகை பிடிப்பதில்லை, கொலை செய்வதில்லை என்று பல ஒழுக்கநெறிகளை முதன்மைப்படுத்தி வாழ்வதால் மீட்பு பெற்றவர்கள் என எண்ணுவது, மீட்பு குறித்த விவிலியம் தழுவிய புரிந்து கொள்ளுதலுக்கு முரணானது ஆகும். மீட்பானது மனித ஆன்மாவோடு

மட்டும் தொடர்புபடுகின்றது. மனித முழு ஆளத்துவத்தோடும் தொடர்புபடுவதில்லை என்கிற மீட்பு குறித்த தவறான புரிந்து கொள்ளுதலும் உண்டு. லூக். 19:9,10-ல் “இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று; ஏனெனில் இவரும் ஆபிரகாமின் மகனே” என்பதிலிருந்து மேசியா இழந்த ஆத்துமாக்ககளைத் தேடுகிறவர் என்ற புரிந்து கொள்ள முடிகிறது. அதாவது தனிமனிதனின் உள் நோக்கிய அனுபவம் அடுத்த உலகினைத் தழுவிய நம்பிக்கைக்கு நேராக நடத்துகின்றது. இத்தகைய மீட்பு சார்ந்த முரண்பாடுகளைப் புரிந்து தெளிந்த காட்சியில் வளர்தல் வேண்டும். அதுபோன்று நமது ஆன்மாக்களுக்கான ஜெபம் (A prayer for the Salvation of our souls) என்ற சில வழிபாட்டு முறைகளின் ஜெபங்கள் கூட, ஆன்மா என்பது நமது முழு ஆள்த்துவத்தையும் (Our whole being) குறிக்கின்றது என்ற புரிந்துகொள்ளுதல் இன்றி நம்மை தவறான புரிந்து கொள்ளுதலிற்கு நேராகவே நடத்தும் என்பதை அறிந்திருத்தல் வேண்டும். யூதச் சமயம் கிரியைகள் மூலம் மனிதன் திருச்சட்டத்திற்கு கீழ்ப்படிந்து செயல்பட்டால் மீட்பு பெற முடியும் என்கிறது. ஆனால் திருமறை இக்கருத்தினை ஏற்றுக் கொள்வதுமில்லை (கலா. 2:15,16).

### *2. பாவத்திலிருந்து மீட்பு* :

மீட்பு, பாவம் ஆகியக் கருத்துக்கள் சமயம் தழுவிய பற்றுறுதியில் ஒன்றையொன்று மிக நெருக்கமானவை. தொ.நூ. 3:1-19-ல் நடுமரத்தின் கனியைக் குறித்த இந்த நிகழ்வில் நடுமரக்கனியானது நன்மை, தீமையை அறியும் கனிமரம். (the tree of the Knowledge of good and evil). இக்கனியை புசித்தால் நீங்கள் சாகவே சாவீர்கள் என்றும் கடவுள் குறிப்பிட்டார் (தொ.நூ. 2:9,17) சோதனைக்காரன் ஏவாளிடம் நடுமரக்கனியைப் புசித்தால் நீவீர் கடவுளைப் போலாவீர் என்றது. அனைத்து ஆற்றலுமுள்ள கடவுளின் படைப்பாக அவருக்கு பணிந்திருக்க வேண்டிய மனிதன் கடவுளாக மாறும் சோதனை நிலையை இங்கு காண்கிறோம். ஆனால் கடவுள் அவர்களிடம் கனியைப் புசிக்கும் நேரத்தில் மனித நிலைக்கு முடிவு கொண்டுவரும் என்றார். எது நன்று எது தீது எனத் தீர்மானிப்பது கடவுளின் உரிமை. அதே நேரத்தில் கடவுளின் மேலாண்மையினை புறக்கணிப்பது மனிதனின் பாவ நிலையினாலாகும். அடிப்படையில் பாவம் என்பது கடவுளோடுள்ள நமது உறவினை உடைப்பதாகும். இந்த உடைவுபட்ட உறவுகளில் நமது தனிப்பட்ட வாழ்வு, சமூக, பொருளாதார வாழ்வு போன்றவற்றிலும் பிரதிபலிக்கிறது. மீட்பு என்பது இத்தகைய விலகிச் செல்லும் நிலையிலிருந்து மீண்டு வருவதாகும். வி.ப. 3:1-14-ல் மோசேயின் வாழ்வு பின்னணியத்தின் ஒரு சமூக விடுதலைக்காக கடவுள் மோசே மூலம் செயல்படுதலை விரிவாகக் காண்கிறோம்.

### *3. மீட்பிற்கான திருமறை வழிகாட்டுதல்* :

மீட்பானது மனித முயற்சியினால் நிறைவு பெறுவதில்லை. திருமறை மீட்பு குறித்து வெளிப்படுத்தும் நற்செய்தியானது கிறிஸ்துவின் பாடு, மரண உயிர்த்தெழுதல் வாயிலாக மனுக்குலம் மீட்படைகின்றது என்பதாகும். அதாவது கடவுளின் அருளினால் நாம் மீட்படைகின்றோம். மனுக்குலத்தின் மீது கொண்ட அன்பினால் அவரது அருள் வெளிப்படுத்தப்படுகிறது. மேலும் திருத்தூதுவர் பற்றுறுதியின் அறிக்கையிலிருந்தே நமது மீட்பு இயேசு கிறிஸ்துவின் மரணத்துடன் தொடர்புபடுத்தப்பட்டு குறிப்பிடப்படுகின்றது. அதாவது we are saved by the blood of christ என்பதாகும். இந்நாளின் அருளுரை வார்த்தையும் சிலுவை சார்ந்தே மனித மீட்பு என்பதனை திருமறை தெளிவுபடுத்துகிறது (யோவா. 12:32). திருமறையில் இரத்தம் என்பது வாழ்வை சுட்டிக்காட்டுகிறது. எனவே கிறிஸ்துவின் இரத்தம் என்பது கிறிஸ்துவின் போதனை போன்ற முழு வாழ்வும் இணைந்து சிலுவையில் உயர்நிலை பெறுகிறது எனலாம். பால்திலிக் என்ற இறையியல் அறிஞர் கூறுகையில் "Accept the fact that you are accepted" அதாவது சிலுவையில் நாம் மீட்கப்பட்டோம் என்கிற உண்மையினை நாம் நம்புவதே மீட்பு. இவ்வாறு மீட்கப்பட்ட மனிதனும் பிறர் மீது கடவுள் அன்பு கொண்டது போன்று அன்பு கூறவும். கடவுள் மன்னித்ததுப் போன்று மன்னிப்பையும் வழங்க முடியும். கடவுள் மற்றவர்களை ஏற்றுக் கொண்டதைப் போன்று ஏற்றுக் கொள்ளவும் முடியும். இவ்வாறு மீட்பு என்பது ஒரு தனிநபர் சார்ந்த அனுபவமல்ல. (not just an individual experience). மாறாக கூட்டு அனுபவமாகும். சிறைச்சாலைக்காரன் எழுப்பியக் கேள்வி "பெரியோரே மீட்படையச் செய்ய நான் என்ன செய்ய வேண்டும்" (தி.ப. 16:30). அதன் வாயிலாகத் திருமறை கூறுவது ஆண்டவராகிய இயேசுவின் மேல் நம்பிக்கை கொள்ளும்; அப்பொழுது நீரும், உம் வீட்டாரும் மீட்படைவீர்கள் (யோவா. 16:31) என்பதாகும். இத்தகைய உண்மையினை பொருளுணர்ந்து ஏற்றுக் கொண்டு மீட்பின் வாழ்வில் நிலைபெறுவோமாக. "மீட்பானது சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவாலும், சிலுவையின் வழியாகவும் வருகின்றது." ("Salvation Comes through a Cross and Crucified Chirst") என்ற Andrew Murray என்பவரின் கூற்றும் இங்கு நினைவுகூறத்தக்கது.

ஆகவே புனிதப் பயணங்களோ! பாரம்பரிய சடங்குகளோ! நாம் படைக்கின்ற காணிக்கைகளோ நம்மை மீட்டுவிடாது. மாறாக, சிலுவை மற்றும் பாடுகள் வழியாய் மீட்பை வழங்கிய மீட்பரண்டை வந்து வாழ்வை அவரோடுள்ள உறவில் கட்டியெழுப்பி மீட்பின் வாழ்வினை காத்துக் கொள்வோமாக. மீட்பின் வாழ்வு வாழ இறையருள் நம்மோடிருப்பதாக.

அருள்திரு. W. **ஸ்டான்லி ஜோண்ஸ்**

13-01-2019

திருத்தோற்றத் திருநாளுக்கு பின்வரும் முதலாம் ஞாயிறு

# தூயவராயிருங்கள்

**BE HOLY**

| | |
|---|---|
| இச. 7:1-11 | எபே. 5:18-20 |
| திபா. 5 | யோவா. 17:13-17 |

**"உண்மையினால் அவர்களை உமக்கு அர்ப்பணமாக்கியருளும். உமது வார்த்தையே உண்மை."** (யோவா. 17:17)

தூய வாழ்வு என்பது வாழ்வின் ஓர் நிலை (State of Life) தூய வாழ்க்கை என்பது ஓர் கிறிஸ்தவனின் வாழ்க்கை முறை (Life Style). இந்த தூய வாழ்க்கை கடவுளின் வாழ்வு நெறி என்பதால் தம் படைப்பான மனிதரும் தம்மைப் போலிருக்க வேண்டும் என்று அன்புக் கட்டளை கொடுத்துள்ளார். உங்களை அழைத்தவர் தூய்மையுள்ளவராயிருப்பது போல நீங்களும் உங்கள் நடத்தையிலெல்லாம் தூய்மையுள்ளவராயிருங்கள் (1பேதுரு 1:15). நீங்கள் தூயவர்களாயிருங்கள். ஏனெனில் நான் தூயவர் (லேவி.11:45; 1பேதுரு 1:16). எனவே தூய்மையுடைய மனிதருக்கும் தூய்மையற்ற மனிதருக்கும் அவர் பலனளிக்கிறார் (வெளி. 22:11,12). உலகில் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் ஒரு கிறிஸ்துவாக மாறவேண்டும் என்ற சவால் முன்னாலுள்ளது. அதனால் அவன் நித்தமும் தூய்மையாக்கப்பட வேண்டிய நிலையிலுள்ளான். அதற்காக அவன் தன்னை அற்பணம் செய்ய வேண்டும். ஒருவன் தன்னை உத்தம கிறிஸ்தவனாக அற்பணம் செய்ய வேண்டும். ஒருவன் தன்னை உத்தம கிறிஸ்தவனாக, தூயவனாக முன்நிறுத்தும் மூன்று காரியங்களைச் சிந்திப்போம்.

## *1. உறவுகளில் தூய்மையாயிருங்கள்* : (இ.ச. 7:1-11)

கடவுள் தம் மக்களைக் குறித்து கரிசனை கொண்டிருப்பவர் என்பதற்கான இன்னொரு சான்றுதான் இன்றைய முதலாம் திருமறைப்பாடம். அந்த கரிசனை இஸ்ரவேலரைத் தம் சொந்த ஜனமாகத் தெரிந்து கொண்டதிலும் தம்மைப்போல் அவர்களும் தூயவராக வாழவேண்டும் என்ற எண்ணத்திலும் வெளிப்படுகிறது. இந்த எண்ணம் ஆண்டவர் தம் மக்களுக்கு அளித்த முதலாம் கற்பனையில் நினைப்பூட்டுகிறது (வி.ப. 20:3). ஏனெனில் பிற தெய்வங்கள் தூய்மையை வெளிப்படுத்த இயலாதவை (தி.பா. 115:1-13).

மனிதன் தன் வாழ்க்கைப் பாதையில் தவறிப் போவதற்கும், தூய்மையை இழப்பதற்கும் ஏராளமான வாய்ப்புகள் இந்த உலகில் உண்டு என ஆண்டவர் அறிந்துள்ளார். அது மனிதனின் செழிப்பு நிறைந்த வாழ்வினாலோ, நாகரிக வளர்ச்சியினாலோ, தீய மனநிலை கொண்ட உறவுகளினாலோ பிற கலாச்சாரங்களைப் பின்பற்றுவதினாலோ ஏற்படலாம் என்பதினால் தம் மக்களுக்கு வாக்குபண்ணப்பட்ட கானான் தேசத்தில் குடியிருக்கும் ஏழுவகையான மக்களிடம் (வ.1). அவர்கள் கொண்டிருக்க வேண்டிய நிலைப்பாடுகளை கண்டிப்புடன் குறிப்பிடுகிறார்.

1. அவர்களோடு திருமண ஒப்பந்தம் செய்யாதே (வ.3).

2. வேற்று தெய்வங்களை வணங்கவேண்டாம் (வ.4). என்பதாகும். ஆண்டவருக்காக தெரிந்தெடுக்கப்பட்ட மக்களினம் (வ.6), உலகில் அழகுக்கும், கவர்ச்சிக்கும், தவறானவழி செல்வதற்கும் தங்கள் உள்ளத்தில் இடமளிக்கும் போது பொருத்தமற்றவர்களோடே திருமண உறவு கொள்ள நேரிடும். இதன் வழி புற இனத்தாரின் தெய்வீக உடன்படிக்கைகளும், சமய சடங்குகளும், சமய நம்பிக்கைகளும் தங்களுக்குள் கடந்துவரும். இதனால் ஒருவர் தன் கணவர் மனைவிக்காக புதிய உறவுகளுக்காக ஆண்டவரைவிட்டு பின் வாங்க நேரிடும் என எச்சரிக்கிறார். Bad Company ruins Good morlas. தவறான உறவுகள் நல்ல வாழ்க்கையை தகர்க்கும். சாலமோன் ஞானிக்கு ஏற்பட்ட ஆபத்து அதாகும் (1அர. 11:48).

எனவே ஆண்டவருக்கென்று தெரிந்தெடுக்கப்பட்ட மக்களினம் கடவுளுக்கு எதிரானவைகளை விட்டு விட்டு தங்களை முழுமையாக அர்ப்பணிக்க வேண்டும் (வ.5-7). கடவுளை விட்டு அகன்று உலக நிலையில் ஒத்துப்போகும் அனைவரின் நிலைமையும் கர்ச்சிக்கும் சிங்கத்தின் வாயில் மாட்டிக் கொள்ளும் நிலைக்கு ஏற்புடையதாகும் (1பேதுரு 5:8). கடவுளுக்கென்று தெரிந்தெடுக்கப்பட்ட மக்களினங்கள் நாம் என்ற நிலையில் சிந்தித்து செயல்படும் அனைவரும் என்றென்றும் இரக்கத்தைப் பெறுகின்றார்கள் (வ.9).

***2. உள்ளத்தில் தூய்மையாயிருங்கள்*** : (எபே. 5:18-20)

எபேசு பட்டணத்தாரில் புற இனத்தார் என்பவர்கள் தங்கள் கடவுளாகிய டயனீஷியசை சேவிக்கும் அடையாளமாக பக்தர்கள் மதுவை படையலாகப் படைத்தனர். மது அருந்தி போதையில் நடமாடி தங்கள் கடவுளை மகிமைப்படுத்தினர். இந்த செயல் பக்தியின் உயர்நிலைச் செயலாகக் கருதப்பட்டது. இப்படிப்பட்ட சூழலிலிருந்து வந்தவர்கள் தான் எபேசு சபை கிறிஸ்தவர்கள். இயேசுவில் விசுவாசம் வைக்கும் கிறிஸ்தவர்கள் செய்யும் ஆராதனைகள் இப்படிப்பட்டவர்களைப் போன்று

காணப்படக்கூடாது என்று பவுலார் திருச்சபைக்கு ஆலோசனை கூறுகிறார். அதாவது துன்மார்க்கத்திற்கேதுவான மதுபான வெறி கொள்ளாமல் ஆவியானவரின் ஆற்றலால் நிறைக்கப்பட (வ.18) ஆலோசனை கூறுகிறார்.

மது அருந்துபவர் அறிவுத்திறன்களை இழந்துவிடுகின்றனர். தங்கள் செயலில் தூய்மையற்ற செயலையே வெளிப்படுத்துவார். மது அருந்துபவர் இயல்புக்கு முரணானதும், இயற்கைக்கு மாறாகவும் செயல்படுவார். இத்தகையோர் தங்களை கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக மதுவின் போதை அவர்களைக் கட்டுப்படுத்தும். ஆனால் அறிவற்ற செயலை விடுக்கும் ஒருவரால் நிறைக்கப்படும்பொழுது அவர் தன்னைத் தானே கட்டுப்படுத்துகிறவராகக் காணப்படாமல் தூயஆவியானவரால் கட்டுப்படுத்தப்படுவார் (கலா. 3:14). இந்த நிரப்பப்படுதலால் கிறிஸ்துவுக்கு நேராக திருப்பப்படுகிறார். அறிவுள்ளவர் அதாவது ஆவியால் நிறைந்தவர் இறைதிருவுளத்தின் படி தூய வாழ்வு வாழுகின்றவனாயிருப்பார். தூய ஆவியினால் நிறைக்கப்பட்டவர்கள் நான்கு நிலைகளில் பலன்களைக் கொடுப்பார்கள் என பவுலார் தெளிவுபடுத்தி (எபே.5:19,20) நம்மையும் தூய்மையுள்ள வாழ்வு வாழ ஒப்படைத்திட அழைப்பு தருகிறார். தூய ஆவியரில் நிரப்பப்பட அனுபவத்தோடு தூய்மையான வாழ்வைத் தொடருவோம்.

***3. உலகத்தில் தூய்மையாயிருங்கள்*** : (யோவா. 17:13-11)

வாக்காகிய இயேசு அருளும் உண்மையும் நிறைந்து விளங்கியவராயிருக்கிறார் (யோவா. 1:14). என்னிடத்தில் பாவம் உண்டென்று யார் என்னைக் குற்றப்படுத்தக் கூடும் என்று கேட்டவர் (யோவா. 8:46). தம் சீடருக்காக தந்தையிடம் வேண்டுதல் செய்த போது உம்முடைய வார்த்தையினால் மட்டுமே சாத்தியம் என்பதால் தம்சீடர் இன்னும் தூய்மையாக்கப்பட வேண்டியதின் தேவையை உணர்ந்து அவர்களை தூய்மையாக்கும் என்று தந்தையிடம் வேண்டிக்கொண்டார். இந்த தூய்மையாக்குதல் இறைவார்த்தையினால் தந்தையிடம் வேண்டிக் கொண்டார். ஆண்டவரின் உண்மையான விசுவாசிகள் திருவசனத்தால் தூய்மையாக்கப்பட்டால் தான் அவருடைய சேவையை செய்யும் தகுதியைப் பெறுகிறோம் (பிலி. 3:7,8). இதனால் நாம் உலகத்திலிருந்தாலும் உலகத்தாரல்ல என்று நிரூபித்துக் காண்கிறோம் (வ.14). காரணம் இறைவனின் வார்த்தையின் நிரூபணமான கிறிஸ்து இவ்வுலகத்தில் வாழ்ந்த போதும் இவ்வுலகத்தான் அல்ல என்று நிரூபித்தார் (மத். 3:17).

அனுதின வாழ்க்கையில் நாம் தூய்மையாக்கப்பட இயேசுவின் வார்த்தைகளை அனுதின உணவைப் போன்று இறை உணவாகிய

இறைவார்த்தைகளை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும். நாம் எதற்காக திருமறை கற்க வேண்டுமென்றால் நம் வாழ்க்கை தூய்மையாக்கப்பட மாத்திரமல்ல நல்ல குணமுள்ள, பண்புள்ள மனிதனாக மாறவும். அலகையின் ஏமாற்று வழிகளை எதிர்த்து நிற்கும் வலிமையைப் (எபே. 6:12, கலா. 5:22-27) பெறத்தக்கதாகவும் திருமறை கற்க வேண்டும். யூதாசை சீடர் கூட்டத்தினின்று பிசாசு இழுத்து செல்லுமளவிற்கு யூதாஸ் தூய்மையற்றவனாய் இருந்தான் (மத். 26:14,15).

உலக நாடுகள் அனைத்தையும் தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்துவிட வேண்டுமென்று கிரேக்க மன்னர் அலெக்சாண்டர் ஒவ்வொரு நாடாக வென்று வந்தார். காசா நகரைப் பிடித்துவிட்டு எருசலேமை பிடிக்கும் நோக்குடன் தன் படையோடு முன்னேறினான். அப்போது எருசலேமின் முதன்மை குருவாயிருந்த ஹெட்குவா, எருசலேம் நகரிலிருந்த அனைத்து குருக்களையும் அணியும் குருக்களின் உடையில் ஒன்று சேர்த்தார். இராணுவத்தினரைப் போல் அவர்கள் நடந்து வருவதை தூரத்திலிருந்து அலெக்சாண்டர் கவனித்தார். அந்த குருக்களின் மார்பிலிருந்து வெவ்வேறு நிற கற்கள் சூரிய ஒளியில் பளிச்சிடுவதையும் கண்டார். அவர்கள் இரு தரப்பினரும் மிக அருகில் நெருங்கி விட்டனர். அவர்களை அலெக்சாண்டர் உற்றுப் நோக்கினார். அவர்கள் யாவரும் தங்கள் நெற்றியில் பசும் பொன்னாலான ஒருபட்டத்தை அணிந்திருந்தனர். அதில் “ஆண்டவருக்கு பரிசுத்தம்” (Holiness to the Lord) என்று பொறிக்கப்பட்டிருந்தது. இந்த வார்த்தைகள் அலெக்சாண்டரின் உள்ளத்தைத் தொட்டது. நான் எருசலேமுக்குள் வரவில்லை. என் படையோடு திரும்புகிறேன். நீங்கள் சமாதானமாய் போங்கள் என்று அவர்களுக்கு மரியாதை செலுத்தி அனுப்பினார்.

பிரியமானவர்களே! இன்று நம்மிடத்திலுள்ள தூய்மையால் நம்முடைய எதிரியான சாத்தான் நம்மைவிட்டு திரும்பச் செல்ல இயலுமா? இன்று நாம் நம் வாழ்க்கையில் மனித உறவுகளில், உள்ளத்தில், உலகத்தில் தூயவர்களாயிருந்தால் நம் ஆண்டவர் நம்மில் மகிழ்வார். ஹென்றி வார்ட் டீச்சர் என்பவர் கூறுகிறார் தூய்மையாக்கப்பட்ட இருதயம் வைரக்கிரீடம் பதித்த சிரசை விட சிறந்தது எனக் கூறுகிறார். எனவே நம் இருதயத்தை தூய்மையால் அலங்கரித்து அழகுள்ளதாக்கதக்கதாய் நம் வாழ்வை ஆண்டவருக்கு அற்பணம் செய்வோம்.

அருள்திரு. P. **சேம் இம்மானுவேல் தோமஸ்**

20-01-2019 **திருத்தோற்றத் திருநாளுக்குப் பின் வரும் முதலாம் ஞாயிறு**

# ஒரே உடல் ஒரே திருமுழுக்கு

**ONE BODY ONE BAPTISM**

ஆமோ. 9:5-12 எபே. 4:1-6
தி.பா. 115 மத். 16:13-20

**"...ஒரே எதிர்நோக்கு இருப்பதுபோல, உடலும் ஒன்றே;...திருமுழுக்கு ஒன்றே."**
(எபே. 4:4,5)

உலகளாவிய திருச்சபையில் உறுப்பினர்களாயிருக்கும் பற்றுறுதியாளர்கள் பல்வேறுபட்ட பாரம்பரியங்களாலும், திருமறைக்குப் புறம்பான கொள்கைகளாலும் பிரிந்து, தனித்த போதனைகள் சார்ந்த கிறிஸ்தவ பிரிவுகளுக்குட்பட்டு சிதறடிக்கப்படும் சூழலில் உலகத்தைக் குறித்த கடவுளின் திருத்திட்டத்தில் ஒன்றாய் இணைந்து வாழ்வதன் முக்கியத்துவத்தை எபே. 4:1-6 வரையுள்ள பகுதி எடுத்துரைக்கிறது. பெற்றுகொண்ட நற்செய்தி சார்ந்து, அழைப்புக்கேற்ப வாழவும், அதில் பிற இனத்தவரும், யூதரும் பிரிந்திருக்க அல்ல; பிற இனத்தவர்களும் ஒரே உடலாகிய திருச்சபையில் யூதர்களுடன் இணைந்திருக்க பிற இனத்தராகிய கிறிஸ்தவர்களுக்கு தூய பவுல் அழைப்பு விடுக்கிறார். சண்டை உருவாக்குதல், பிரிவினை, அகந்தை போன்றவை அன்பினாலும், அமைதியினாலும் கட்டப்பட்ட ஒரு சமுதாயத்திற்கு ஏற்புடையதல்ல. திருச்சபை வாழ்வைக் குறித்த தூரக்காட்சியில் "ஒன்று" மற்றும் "எல்லாரும்" ஆகிய கருத்துக்களை மீண்டும் மீண்டும் கூறும்போது, ஒன்றித்தநிலை (oneness) மற்றும் முழுமைநிலை (Fullness) ஆகியவை உலகனைத்தின்மீதும் ஆட்சியுரிமை உள்ள ஒரே கடவுளிடமிருந்து வருகிறது எனத் தூய பவுல் வலியுறுத்துகிறார். அனைவருக்கும் ஒரே கடவுள், ஒரே ஆண்டவர், ஒரே தூய ஆவி, ஒரே நம்பிக்கை, ஒரே எதிர்நோக்கு இருப்பது போல ஒரே திருமுழுக்கின் வழியாய் ஒரே உடலாகிய திருச்சபையில் இணைக்கப்பட்டுள்ளோம். ஒரே திருமுழுக்கு, ஒரே உடல் என்பதிலிருந்து இணைந்த வாழ்வுக்கான சில உண்மைகளைச் சிந்திப்போம்.

### *1. அனைவரையும் ஒன்றிணைக்கும் ஒரே உடல்* :

மீட்புக்குரிய நற்செய்தியை அறிந்து அதன் வழி நம்பிக்கையினால் மீட்பு பெற்ற மக்கள் மீட்கப்பட்டட பின் தனித்துப் பிரிந்திருந்து எதைச் செய்தாலும் கடவுள் நம் பக்கம் இருப்பார் என அகந்தை கொள்ளக்கூடாது.

இஸ்ரயேல் மக்கள் கடவுளின் தனிசிறப்பு வாய்ந்த மக்கள் எனக் கருதப்பட்டது. உண்மைதான். ஆனால், கடவுளிடமிருந்து விடுதலை பெற்றபின் கடவுளைவிட்டு விலகி பாவம் செய்தார்கள். அவ்வேளையிலும் தீமை தங்களை அணுகாது, கடவுள் அவர்களைப் பாதுகாப்பார் என வீண் பெருமை கொண்டிருந்தனர். ஆனால், இங்கு கடவுள் பாகுபாடு காட்டமாட்டார்; எத்தியோப்பியரானாலும், பெலிஸ்தியரானாலும், சீரியரானாலும் அனைவருடைய விடுதலைக்குப் பின்னும் ஆண்டவர் இருக்கிறார்; இஸ்ரயேலானாலும், பிற இனத்தவரானாலும் கடவுளின் பார்வையில் ஒன்றுதான் என்பது இறைவாக்கினர் ஆமோசின் இறைவாக்கு (உரோ. 2:11; ஆமோ. 9:7,8). பிற இனத்தாரும் ஒரே உடலின் உறுப்புக்கள் போன்றவர்கள். அவர்களும் இஸ்ரயேலில் மீந்திருப்பவர்களுடன் ஒன்றிணைக்கப்படுவார்கள் (ஆமோ. 9:11-12).

ஒரே உடலாம் கிறிஸ்துவுக்குள் இணைக்கப்பட்டவர்களும் யூதர், கிரேக்கர், அடிமைகள், உரிமைக் குடிமக்கள், ஆண், பெண் என்ற வேறுபாடின்றி, மனத்தாழ்மையோடும், கனிவோடும், பொறுமையோடும், ஒருவரையொருவர் அன்புடன் தாங்கி, அமைதியுடன் இணைந்து ஒன்றாய் வாழவேண்டும் என்பதுதான் திருச்சபையாம் நமக்கு இறைவன் தந்துள்ள அழைப்பாகும் (உரோ. 10:12; கலா. 3:28; எபே. 4:1-3). கிறிஸ்துவை அறியாத பிற இனத்தாரைப்போல் நாம் வாழக்கூடாது. உடலின் ஒவ்வொரு உறுப்பும் உடலைக் கட்டியெழுப்பத் தனக்குரிய பணிவிடைகளைச் செய்வதுபோல கிறிஸ்துவின் உடலாம் திருச்சபையின் உறுப்பினர்களான நாம் அவ்வுடலைக் கட்டியெழுப்ப இணைந்து செயல்படவேண்டும் (Iகொரி. 10:17; எபே. 4:15-17). நிறம், மொழி, இனம், இடம், கலாச்சாரம், நம்பிக்கை என்ற நிலைகளில் வேறுபட்டவர்களாயிருந்தாலும் எந்த நிலைகளிலும் பிரிந்து செயல்படக்கூடாது; தூய ஆவியில் ஒரே உடலாய் வாழவேண்டும் என்பதுதான் இறைவனின் திருவுளம். இதன் வெளிப்பாடாகத்தான் ஆண்டவர் இயேசுவை 'மேசியா' என அறிக்கைபண்ணும் பாறைபோன்ற உறுதியான நம்பிக்கைமீது உருவாக்கப்பட்ட திருச்சபையின் (மத். 16:16-18) உறுப்பினர்களான பற்றுறுதியாளர்கள் "எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக" என ஆண்டவர் இயேசு வேண்டுதல் செய்கிறார் (யோவா. 17:21).

மாவீரர் அலெக்ஸ்சாண்டர் எல்லா நாடுகளின் மீதும் படையெடுத்துச் சென்று வெற்றி கொண்டவர். அவர் இந்தியாவைப் பற்றிக் கேள்விப்பட்டு அதன்மீது படையெடுத்து, வெற்றிகொள்ளப் புறப்பட்டார். அவர் இந்தியாவை அடைந்து, இங்கே உள்ளே மன்னர்களோடு போர்

தொடுக்கும்போது அவரால் வெற்றிகொள்ள முடியவில்லை. அதற்குரிய காரணம் ஒன்றும் அவருக்குப் புரியவில்லை. "எத்தனையோ நாடுகளின் மீது படையெடுத்துச் சென்று வெற்றிகொண்ட நமக்கு இந்நாட்டின் மீது வெற்றிகொள்ள முடியவில்லையே" என்று இரவு வேளையில், தன்னுடைய பாளையத்தில் அமர்ந்து யோசித்துக் கொண்டிருந்தார். அப்போது இந்தியப் படைவீரர்கள் தூரத்தில் இரண்டு குழுக்களாக, தனித்தனியாக உணவு சமைத்துக் கொண்டிருந்தனர். "எதற்காக இவர்கள் இரண்டு குழுவாக உணவு சமைக்கிறார்கள்?" என்று அங்கே வந்த அமைச்சரிடம் கேள்வி கேட்டார். அதற்கு அவர், "அரசே இந்தியாவில் நம்நாடு போன்று கிடையாது. இங்கே உயர்சாதி, தாழ்ந்த சாதி என்ற இரண்டு பிரிவு உண்டு" என்றார். இதைக் கேட்டு, துள்ளிக்குதித்து எழுந்த அலெக்ஸ்சாண்டர், இந்தியர்களை சாதிவாரியாகப் பிரித்து வெற்றி கொண்டதாக வரலாறும் உண்டு. நம்மை ஆண்ட ஆங்கிலேயர்கள்கூட நம்மைப் பிரித்து வைத்துத்தான் ஆண்டார்கள் என்பது வேதனையான அனுபவம்.

எனவே, நம்மிடம் இருக்கும் பிரிவினையை வேரறுத்துவிட்டு, எல்லாரும் தூய ஆவியில் ஒரே உடல் என்று இணைய வேண்டும். லாங்பெல்லோ (H.W. Longfellow) என்ற அறிஞர் ஒருமுறை, "உங்கள் அனைவரின் பலம், உங்கள் ஒற்றுமையிலே; உங்கள் அனைவருக்கும் உள்ள ஆபத்து உங்கள் பிரிவினையே" (All your strenght in is your union; All your danger is in discord) என்று குறிப்பிட்டார். இது முற்றிலும் உண்மை. எனவே, கிறிஸ்துவில் நாம் அனைவரும் ஒரே உடல் என்ற இறைவார்த்தையை உணர்ந்து, புதிய மனநிலையைப் பெற்று அதன்படி வாழ முயற்சி எடுப்போம்.

## *2. அனைவரையும் ஒன்றிணைக்கும் ஒரே திருமுழுக்கு :*

தெளித்தல், முழுகுதல் போன்ற திருமுழுக்கின் வெளிப்படையான முறைகளைவிட (mode of baptism) அதன் உட்பொருள் முக்கியமானது. கிறிஸ்தவத் திருமுழுக்கு கிறிஸ்தவ நம்பிக்கையின் அடிப்படைகளை விளக்கிக் காட்டுகிறது. பாவம் மன்னிக்கப்பட்டு, புது வாழ்வுக்கு உட்படுதல் என்ற புதிய வாழ்வுக்கு நேராய் நம்மை அழைக்கிறது; பணி செய்யத் தூண்டுகிறது. நிலையான நம்பிக்கையில் நம்மை உறுதிப்படுத்துகிறது.

### திருமுழுக்கு - ஓர் அடையாளச்செயல்

திருமுழுக்கு விளக்கும் கருத்துக்களின் அடிப்படையில் இது பல்வேறு உண்மைகளை உணர்த்தும் அடையாளச் செயலாகத் திருமறையில் கூறப்பட்டுள்ளது.

**(1) உடன்படிக்கையின் அடையாளச் செயல் :** வெள்ளப்பெருக்கின்போது கடவுள் நோவாவோடு செய்த உடன்படிக்கையில் தண்ணீர் நீதிமானை மீட்கும் திருமுழுக்குக்கு அடையாளமாகக் கூறப்பட்டுள்ளது (தொநூ. 9:9,10; Iபேது. 3:19-22). ஆபிரகாமோடு கடவுள் செய்த உடன்படிக்கையில் விருத்தசேதனம் அடையாளப்படுத்தப்பட்டது. அது பின்பு உடலளவில் அல்ல, திருமுழுக்கின்வழி உள்ளத்தில் உருவாகும் மாற்றமாக கருதப்பட்டது (உரோ. 2:29). மோசே வழி இஸ்ரயேலரோடு உடன்படிக்கை செய்த கடவுள் அவர்களை கடல் வழியாக, மேகத்தின் நிழலில் வழிநடத்தினார். இது மேகத்தாலும், கடலாலும் திருமுழுக்கு பெற்றதாகக் கருதப்பட்டு, இங்கு கடவுளின் நடத்துதலும், பாதுகாவலும் உறுதிசெய்யப்படுகிறது (Iகொரி. 10:2).

**(2) நீதியாக்கப்படுவதற்கு அடையாளம் :** இறைநம்பிக்கையால் நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம். திருமுழுக்கு இந்த பற்றுறுதி சார்ந்த நீதிக்கு முத்திரையாக இருக்கிறது (உரோ. 4:11). கடவுள் முன்கூட்டியே செய்த நம்மை நீதிமான்களாக்கும் செயலை ஏற்றுக்கொள்தலுக்கு திருமுழுக்கு அடையாளமாகிறது;

(3) **திருமுழுக்கு மறுபிறப்புக்கு அடையாளம் :** (தீத்து 3:5; யோவா. 3:3-7).

**(4) திருமுழுக்கு மனந்திரும்புதலுக்கும், பாவமன்னிப்புக்கும் அடையாளம்** (திப. 2:38; 22:11).

**(5) திருமுழுக்கு இறையரசில் நுழைவதற்கு அடையாளம்** (திப. 8:12; யோவா. 3:3).

**(6) கிறிஸ்துவுடன் இறந்து அவருடன் உயிரோடெழுவதற்கு அடையாளம்** (உரோ. 6:4; கொலொ. 2:12).

**(7) கிறிஸ்துவின் உடலோடு இணைவதற்கு அடையாளம்:** நாம் நம்மில் பல வேறுபாடுகளுடன் இருந்தாலும், கிறிஸ்துவின் உடலாம் திருச்சபையில் ஒரே உடலாய் இருக்க ஒரே தூய ஆவியால் திருமுழுக்குப் பெற்றோம் (Iகொரி. 12:12,13). இது நம்மை திருச்சபையில் உறுப்பினராய் இணைப்பது மட்டுமல்லாது, நம்மை அனைத்துலக கிறிஸ்தவ பற்றுறுதியாளர்களின் கூட்டுறவில் இணைக்கிறது.

## ஒரே திருமுழுக்கு

கிறிஸ்தவ நம்பிக்கையில் மறுமுழுக்கிற்கு (rebaptism) இடமேயில்லை. குழந்தைப்பருவத்திலோ, வளர்ந்த நிலையிலோ நாம் ஒருமுறை பெற்ற திருமுழுக்கு உண்மையான திருமுழுக்கு ஆகும். இரண்டாவது திருமுழுக்கை ஒருவர் அனுமதித்தால் கடவுளில் உள்ள ஒரே நம்பிக்கை என்ற நிலை அவரில் இல்லை என்பது பொருள். மேலும்,

குழந்தைப்பருவத்தில் பெற்ற திருமுழுக்கு உண்மையான நம்பிக்கை என்ற நிலை அவரில் இல்லை என்பது பொருள். மேலும், குழந்தைப்பருவத்தில் பெற்ற திருமுழுக்கு உண்மையான நம்பிக்கையில் பெறப்படவில்லை எனக் கூறுவதால், திருமுழுக்கின் முழு உண்மையும், முக்கியத்துவமும் அவமதிக்கப்படுகிறது.

திருமறையில் கிறிஸ்தவ மறுமுழுக்கைக் (Christian rebaptism) குறித்த எந்த சான்றுகளோ, கொள்கைகளோ கூறப்படவில்லை. எபேசுவில் தூய பவுல் வந்தபோது அங்கிருந்த யோவானின் சீடர்கள் தூய ஆவியைக்குறித்த தெளிவில்லாமல் இருந்தார்கள். திருமுழுக்கு பெற்றிருந்த அவர்கள் தந்தை, மைந்தர், தூய ஆவியார் என்ற திரித்துவக் கடவுளின் பெயரில் திருமுழுக்கு பெறவுமில்லை. எனவே, தூய பவுல் திரித்துவக் கடவுளின் திருப்பெயரில் அதிகாரபூர்வமான கிறிஸ்தவத் திருமுழுக்கை அவர்களுக்குக் கொடுத்தார். இது மறுமுழுக்கல்ல, முன் பெற்ற திருமுழுக்கு அதிகாரபூர்வமான திருமுழுக்காக ஏற்றுக்கொள்ளப்படாததால் கொடுக்கப்பட்ட திருமுழுக்காகும் (திப. 19:1-7). எனவே, திருமுழுக்கு ஒன்றே ஒன்றுதான்; ஒரே ஒருமுறைதான் திருமுழுக்கப் பெறவும் வேண்டும். திரித்துவக் கடவுளின் கூட்டுறவில் உள்ள நமது ஒற்றுமை என்பது தந்தை, மைந்தர், தூய ஆவியார் என்ற திருத்துவக் கடவுளின் திருப்பெயரால் உள்ள திருமுழுக்கின்வழி அடையாளப் படுத்தப்பட்டு, முத்திரையிடப்பட்டுள்ளது (எபே. 4 : 4-6). தூய ஆவியாரில் உள்ள ஒருமைப்பாட்டின் உண்மைநிலை என்பது நாம் ஒரே ஒருமுறை பெறும் தண்ணீர் திருமுழுக்கின்வழி வெளியரங்கமாக்கப்படுகிறது. இந்த ஒரே திருமுழுக்குதான் நம்மை ஒரே கடவுள், ஒரே ஆண்டவர், ஒரே தூய ஆவி, ஒரே நம்பிக்கை, ஒரே எதிர்நோக்கு என்ற ஒருமைப்பாட்டுடன் ஒரே உடலாம் கிறிஸ்துவுடனும், திருச்சபையுடனும் இணைக்கிறது.

திருமறைக்குப் புறம்பான போதனைகளால் அலைக்கழிக்கப்பட்டு, தாங்கள் சார்ந்திருக்கும் திருச்சபையை விட்டு மக்கள் சிதறடிக்கப்படும் தற்கால சூழலில், வாழும் கடவுளுக்கும், ஆண்டவரின் உயிர்த்தெழுதலுக்கும் சான்றாக இருக்கும் திருச்சபை என்பது பாகுபாடின்றி அனைத்து மக்களையும் ஒன்றாய் இணைக்கிறது; கிறிஸ்துவைப் பற்றும் நம்பிக்கையின் அடையாளமாக இருக்கும் ஒரே திருமுழுக்கு கிறிஸ்துவின் உடலாம் திருச்சபையோடும், அனைத்து பற்றுறுதியாளர்களோடும் நம்மை இணைக்கிறது என்ற உண்மையைப் புரிந்து கிறிஸ்துவுக்கு சான்றாக வாழ்வோம்.

அருள்திரு. T.P. **சலீம் தங்க குமார்**

26-01-2019

குடியரசு நாள்

## அனைவருக்கும் சமத்துவமும் நீதியும்

**EQUALITY AND JUSTICE TO ALL**

ஆமோ. 5:18-27 திப. 10:34-43
மத். 23:23-28 யோவா. 18:33-38

**“நீதி வெள்ளமெனப் பொங்கி வருக! நேர்மை ஆறாக பாய்ந்து வருக!.”** (ஆமோ.5:18)

நீதியுடன் இந்த அழகு உலகை ஆள கட்டளையினைப் பெற்ற மனிதன் தன் சுய நீதியையும் இழந்து உலக நீதியையும் இழந்து வாழ்கின்றான். நாம் வாழும் உலகம் அநீதிகள் நிறைந்த உலகம். மனிதனின் செயல்பாடு இந்த உலகை அசுத்தங்களால், நீதியற்ற சமத்துவம் அற்ற நிலைக்கு தள்ளினது. பணம், பதவி, பட்டம், புகழ், பொறாமை, கொலை, கொள்ளை, வேசித்தனம் என தவறான வாழ்வு முறைகளால் இறை அன்பை விட்டு வாழ்கிறோம்.

1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 நாள் தனி நாடாக சுதந்திரம் பெற்ற இந்திய நாடு தம் மக்கள் நீதியுடன் வாழ வேண்டும் என பல முயற்ச்சிகள் செய்தது. மக்களை கட்டுப்பாடுடன் நீதியோடு நடத்த முயற்சி வெளிப்பாடு தான் “Indian constitution” “இந்திய அரசியல் அமைப்பு சட்டம்” இதை பிரகடனப்படுத்திய 26-01-1950-ஆம் நாளை இன்று குடியரசு தினமாக கொண்டாடுகிறோம். இதில் உள்ள சட்டங்கள் மக்களை நீதியோடும் சமத்துவத்தோடும் வழி நடத்த வகுக்கப்பட்டவை. சட்டம் மக்களை எச்சரித்தாலும் மக்கள் அநீதியில் நடக்கிறார்கள். பேச்சளவில் மட்டுமே சட்டத்தை மதிக்கும் நீதி தவறிய கூட்டமாக நாம் இருக்கிறோம்.

நாம் சமத்துவத்தோடு நீதியை பிற மக்களிடம் வெளிப்படுத்தினால் மட்டுமே நாம் இறையரசில் நுழைய முடியும். நீதி நிலை நாட்டப்படுவதையே கடவுள் நம்மிடம் எதிர்பார்க்கிறார். நீதி அரசராக கடவுள் திரும்ப வரும்போது நீதிமான்களை கடவுள் தேடுகிறவராக இருக்கிறார். நீதி நிலை நாட்டப்பட இயேசு கிறிஸ்து உலகில் கடவுளின் நடுதீர்ப்புக்காக ஆயத்தப்படும் நாம் எப்படி நீதியை நிலைநாட்ட வேண்டும் என திருமறை வழியாக தியானிப்போம்.

## *1. சமத்துவம் நீதியின் வெளிப்பாடு* (ஆமோ. 5:24)

"நேர்மை வற்றாத ஆறாக பாய்ந்து வருக."

நம் வாழ்வில் நேர்மை வற்றாத ஆறாகப் பாய்ந்து ஓட வேண்டும். இன்று நீதி எல்லாம் குறுகிய வட்டத்தில் தான் இருக்கிறது. நீதி எல்லாருக்கும் சமமாக கிடைப்பது இல்லை. நீதி நதியைப் போல் பாய்ந்து ஓட வேண்டும் எங்கும் தேங்கி நிற்காமலும், எல்லா திருமறை கூறுகிறது மக்களுக்கும் சமமாக கிடைக்க வேண்டும் நீதியையும் சமத்துவத்தையும் குறித்து வார்த்தைகளால் மட்டுமே நாம் பேசுகிறோம். 2015-ஆம் ஆண்டு சென்னை உயர் நீதி மன்றத்தின் நீதியரசர்களான நீதியரசர். சத்திய நாராயணன், நீதி அரசர் கிருபாகரன், நீதியரசர் சுந்தரேஷ், நீதியரசர் வைத்திய நாதன் ஆகியோர் ஒரே காரில் மாலையில் வீட்டிற்குத் திரும்புகின்றனர். இது நீதியரசர்கள் நீதி தீர்ப்பு வழங்குவது மட்டுமல்ல நீதியை அவரவர் வாழ்வில் செயல்படுத்துகின்றனர் என்பதை உறுதிச் செய்துள்ளது. போக்குவரத்து நெரிசலாகக் கட்டுப்படுத்தவும், எரிபொருளைச் சேமிக்கவும் இதை செய்கிறோம் என்ற மாதிரி காண்பிக்கும் இவர்களது நிலைப்பாடு எல்லாரும் கற்றுக்கொள்ள வேண்டிய பாடமாகும். அரசியல் கட்சியினரும், ஆளுமைப் பொறுப்பைப் பெற்றவர்களும், பணம் படைத்தோரும், பதவிகளை வகிப்பவர்களும் கூட இதைப்போல் நீதியையும் சமத்துவத்தையும் நிலை நாட்ட வேண்டும். பதவியில் இருப்போருக்கு ஒரு நீதி, சாதாரண மக்களுக்கு வேறு என்ற நிலை மாறி சமத்துவம் எங்கும் பரவ வேண்டும். எப்படி நதி, தான் செல்லுகிற அனைத்து பாதையையும் விளையப்பண்ணுகிறதோ அதேப் போல் நம் நீதியும் எல்லா மக்களிலும் சமூகத்தினரிடமும் சமமாக இருக்கக் கடவது. கடவுள் இதை மக்களிடம் எதிர்பார்க்கிறார். நாம் எல்லா மனிதர்களுடன் சமத்துவத்துடன் சமாதானமாக கடவுள் விரும்புகிறார்.

## *2. அங்கீகரிப்பு சமத்துவத்தின் வெளிப்பாடு :* (திப. 10:35)

"எல்லா இனத்தவரிலும் அவருக்கு அஞ்சி நடந்து நேர்மையாகச் செயல்படுபவரே அவருக்கு ஏற்புடையவர்"

சமத்துவம் என்பது நாம் பிற மக்களையும் நம்மைபோல் ஏற்றுக்கொள்வதே ஆகும். எப்பொழுது பிற மனிதர்களை ஏற்றுக்கொள்கிறோமோ அப்பொழுது நாம் நீதியையும் சமத்துவத்தையும் நிலை நாட்டுகிறோம். இன்று கல்வி கற்று கொடுக்கும் பள்ளிகூடங்களில்

சில மாணவர்கள் புறக்கணிக்கப்படுறார்கள். கோவை மாவட்டத்தில் தினத்துக்கடவு என்ற பகுதியில் காளியண்ணன் புதூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியர்கள் பிள்ளைகளின் சாதி அடிப்படையில் தரம் பிரித்து அவர்களை இழிவாக நடத்தியது பெரும் கண்டனத்தை ஏற்ப்படுத்தியது. சக மனிதர்களை நாம் அங்கீகரிகாத நிலையில் நாம் வாழுகிறோம். கடவுள் எல்லா இன மக்களையும் சமமாக படைத்து அவர்களை நேசிக்கிறார். கொர்நேலியுவின் இல்லத்தில் பேதுருவின் உரை மிகத் தெளிவாக இதை நமக்கு கற்றுத் தருகிறது. கடவுள் ஆள் பார்த்துச் செயல்படுவதில்லை, அவருக்கு அஞ்சி நடக்கும் மக்களுக்கு அவர் துணையாக நிற்கிறார். நாம் பிற மக்களை அங்கீகரித்து கடவுளுக்கு அஞ்சி நடக்கும் போது கடவுளுக்கு ஏற்புடையவராக இருப்போம்.

இயேசு கிறிஸ்து நம்மை வெளிவேடக்காரர்களே என்று அழைக்கிறார். பல நேரம் நாம் இருதயத்தில் சுத்தம் இல்லாமல் இருக்கிறோம். (மத் 23:23-28)

“என்னுடைய நான்கு பிள்ளைகளும் ஒரு நாள், தங்கள் தோலின் நிறத்தாலல்ல, வாழ்வின் பண்பின் அடிப்படையில் தீர்ப்பிடப்படும் ஒரு நாட்டில் வாழ்வார்கள் என்ற ஒரு கனவு எனக்குண்டு” “I have a dream that my four little children will one day live in a nation where they will not be judged by the color of their skin, but by the content of their charaeter” என மார்ட்டின் லூத்தர் கிங் Jr. தன் கனவை கூறுகிறார். நாமும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து கூறியபடி பிறரை நேசித்து, சமத்துவத்தை வெளிப்படுத்தி நீதியுடையவர்களாக வாழுவோம் இறையரசின் பங்காளிகளாவோம்.

திரு. **நிஸ்பர்ட்** . G.M. **ஷாலோம்**

27-01-2019

**திருத்தோற்றத் திருநாளுக்குப் பின்வரும்**
**மூன்றாம் ஞாயிறு & ஒன்றிப்பு ஞாயிறு**

# அன்பினால் ஒன்றிணைக்கப்பெற்றோம்

**UNITED IN LOVE**

இச. 4:1-10 | 1கொரி. 1:10-18
திபா. 30 | யோவா. 15:11-17

**"நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்புகொண்டிருக்க வேண்டும் என்பதே என் கட்டளை"** (யோவா. 15:12)

அன்புக்கு அளவீடு அன்பே. ஆனால் "அன்பு" இன்று தன்மை இழந்து காணப்படுகிறது. எது உண்மையான அன்பாக இருக்க முடியாது? என்பதன் விளக்கம் உண்மையான களங்கமற்ற அன்பை விளங்கிக் கொள்ள நமக்கு உதவும் என்பதைக் குறிப்பிட்ட கேனன் வில்லியம் வான்ஸ்டோன் என்பவர் பொய்யான அன்பை மூன்று குறியீடுகள் மூலம் விளங்கிக் கொள்ள இயலும் என்கிறார்.

**1. வரையறை என்ற குறியீடு:-** எத்தடையும் இன்றி தனக்குள்ள அனைத்தையும் கொடுக்க தயங்கி இவ்வளவுதான் இயலும் என ஒரு வரம்பை விதித்து, அந்த எல்லைக்குள்ளே தனது அன்பு பாராட்டலை நிறுத்திக் கொள்வது.

**2. கட்டுப்பாடு என்ற குறியீடு:-** அடுத்தவரின் நல்வாழ்வை வேண்டி அன்பு செய்வதைப் போல நடித்து தன் கட்டுப்பாட்டின் வலையில் சிக்க வைத்து அவர் மூலம் தம் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வது.

**3. பற்றற்ற நிலை என்ற குறியீடு:-** தமக்கு மித மிஞ்சி இருப்பவற்றில் கொஞ்சம் கொடுத்து மற்றவர்களுக்கு அன்பு காட்டினாலும், நலிந்தோர் மற்றும் வாழ்வு இழந்து கொண்டிருப்போரின் கொடுந்துயரங்களினால் எவ்வளவேனும் பாதிக்கப்படாமல் தாம் நிம்மதியாக வாழ்வது. ஆனால் இயேசுவின் அன்பு தம்மகத்தே தமக்கென எதையும் தக்கவைத்துக் கொள்ளவில்லை.

ஒருமைப்பாடு என்பதற்குப் பயன்படுத்தப்படும் கிரேக்கச் சொல் "Oikumene" என்பதாகும். இதனுடைய வேர்ச்சொல்லான Oikos என்பதின் பொருள் குடும்பம் அல்லது வீடு என்பதாகும். புதிய ஏற்பாட்டில் இச்சொல் கடவுளுடைய குடும்பத்தார் என்னும் பொருளில் மானுடரோடு படைப்புகளையும் இணைத்து புரிந்து கொள்ளப்படுகிறது. தூய ஆவியாராக அறியப்படும் நம்முடைய கடவுள் ஒருமைப்பாட்டின் கடவுள் என்பது

பொருத்தமானது. இயேசுநாதர் அன்பினால் ஒன்றிணைவதற்கு நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பது போல் நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டிருக்க வேண்டும் என்பதே என் கட்டளை (யோவா. 15:12) என்கிறார். இந்த ஒருமைப்பாடு எந்த நிலைகளில் வெளிப்படவேண்டும் என்பதை இன்றைய திருமறைப் பகுதிகளைச் சார்ந்து தியானிப்போம்.

***1. வழிபாட்டில் ஒன்றிணைதல் :*** (இ.ச. 4:7)

நாம் குரல் எழுப்பும் போதெல்லாம் நம் கடவுளாகிய ஆண்டவர் நம்மோடு உள்ளார். அவரைப்போல மக்களுக்கு மிகவும் நெருங்கிய கடவுளைக் கொண்ட வேறுபேரினம் ஏதாகிலும் உண்டா?

மோசேயினால் வலியுறுத்தப்பட்ட கருத்துக்களுக்கு ஆக்கம் தேடும் வகையில் இஸ்ரவேல் மக்கள் அனைவரும் யாவே ஒருவரையே இறைவனாக உடன்படிக்கைப் பிணைப்பின் மூலம் அறிந்தனர். தாயகம் திரும்பியதும் அங்கு பற்பல கடவுளர்களை வணங்கிய பல்வேறு மக்களோடும் அவர் தம் மரபுகள், பண்பாடுகள் ஆகியவற்றோடும் ஈடுபாடு கொள்ள வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. சமய சமரசத்துக்கு இடம் தருதல் கூடாது என்பதும், உருவ வழிபாட்டை ஏற்றல் கூடாது என்பதும் ஒழுக்கநெறிகளைப் பேணல்வேண்டும் என்பதும் மிகமுக்கியமானதாகக் கூறப்பட்டுள்ளது (இச. 4:1-10). திருப்பாடகர் தி.பா. 133:1, இல்சகோதரர்கள் ஒன்றுபட்டு வாழ்வது எத்துணைநன்று! எத்துணை இனியது*!* என்கிறார். அதோடு வழிபாட்டில் ஒன்றிணைவதுதான் மிகமுக்கியமானது என்பதை இயேசுகிறிஸ்துவும் தெளிவாகக் குறிப்பிடுகிறார். ஆகையால் நீங்கள் உங்கள் காணிக்கையைப் பலிபீடத்தில் செலுத்த வரும்பொழுது உங்கள் சகோதரர் சகோதரிகள் எவருக்கும் உங்கள் மேல் ஏதோ மனத்தாங்கல் உண்டென அங்கே நினைவுற்றால் அங்கேயே பலிபீடத்தின் முன் உங்கள் காணிக்கையை வைத்துவிட்டுப் போய் முதலில் அவரிடம் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ளுங்கள். பின்பு வந்து உங்கள் காணிக்கையைச் செலுத்துங்கள் என்கிறார் (மத். 5:23,24).

உடைந்த வயலின் ஒன்றை ஆலயத்தின் பழைய பொருட்கள் வைக்கும் இடத்தில் சேர்த்திருந்தனர். ஒருநாள் அவ்வாலயத்தில் இசைக் கருவியை வடிவமைத்தவர் அங்கே வந்தார். வழிபாட்டிற்கு உதவாது என்ற வயலினுக்குள் அடங்கிக் கிடக்கும்இனிய இசையை உணர்ந்தார். அதை வாங்கிச் சென்று மறுபடியும் நல்லதொரு இசைதரும் இசைக்கருவியாக மாற்றி வழிபாட்டில் ஒன்றிணைத்தார். உதவாதது உருப்பெற்று இசையைத்

தந்தது. இதுபோலவே நொறுங்கிப்போய், பெலனற்றிருக்கும் மானிட வாழ்வில், வழிபாட்டில் இயேசுவோடு ஒன்றிணைகிறபோது பெலன் பெற்று அன்பினால் ஒன்றிணையப்பெறலாம்

***2. வேற்றுமையில் ஒன்றிணைதல்*** : (1கொரி. 1:10)

சகோதர சகோதரிகளே, நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பெயரால் நான் உங்களை கெஞ்சிக் கேட்டுக் கொள்வது இதுவே: நீங்கள் ஒத்த கருத்துடையவர்களாய் இருங்கள் உங்களிடையே பிரிவினைகள் வேண்டாம். ஒரே மனமும் ஒரே நோக்கமும் கொண்டிருங்கள்.

பவுலடியார் கூறும்போது முதல் நூற்றாண்டு கொரிந்துச் சபை சந்தித்த முக்கியப் பிரச்சனைகளில் ஒன்று வேற்றுமையும் பிரிவினையுமாகும். வேதாகமம் தொகுத்துக் கிடைக்காத அந்தக் காலத்தில் மக்கள் அதிகமாக ஆன்மிகத் தலைவர்களைச் சார்ந்து கற்றுக் கொள்ள வேண்டியதாக இருந்தது. அவர்களிடம் கற்றுக் கொண்டவர்கள் ஆன்மிகத் தலைவர்கள் பெயரால் வேற்றுமை எண்ணமும் பிரிவினையும் இருந்தது. இதை ஆவியா கண்டித்தார். கடவுள், நம்பிக்கைக்குரியவர். தம் மகனும் நம் ஆண்டவருமாகிய இயேசுக் கிறிஸ்துவின் நட்புறவில் பங்கு பெற உங்களை அவர் அழைத்துள்ளார் (1கொரி. 1:9). அவரோடு சேருவதற்கு அடையாளமாகத்தான் திருமுழுக்கு பெறுகின்றோம். ஏதாவது ஒரு சபைப் பிரிவையோ, ஆன்மிகத் தலைவரையோ சார்ந்து கொள்ள அல்ல. கிறிஸ்துவை விசுவாசிப்போர் அனைவரும் “கிறிஸ்துவுக்குள் ஒன்று” என்ற மனப்பாங்கே உத்தம கிறிஸ்தவர்களிடம் காணப்படவேண்டும்.

கிறிஸ்துவால் மீட்பு பெற்றவர்கள் இணைந்து உழைத்தால் இன்றைய சமூகத்தின் தீமைகளான தீவிரவாதம், சமயவன்முறை, ஏழ்மை, பதுக்கல், சுரண்டல்,கொடிய நோய்கள், போதைப் பொருட்கள், படைப்புகளை அழித்தல் போன்றவற்றை எதிர்த்துப் போராடி வெற்றி பெற முடியும். தூயயோவான் முதல் திருமுகத்தில் கூறும்போது கடவுளிடம் அன்புசெலுத்துவதாகச் சொல்லிக்கொண்டு தம் சகோதரர் சகோதரிகளை வெறுப்போர் பொய்யர். தம் கண்முன்னேயுள்ள சகோதரர் சகோதரிகளிடம் அன்பு செலுத்தாதோர் கண்ணுக்குப் புலப்படாத கடவுளிடம் அன்பு செலுத்த முடியாது. கடவுளிடம் அன்பு செலுத்துவோர் தம் சகோதரர் சகோதரிகளிடம் அன்பு செலுத்தவேண்டும்.

ஒருமுறை மனித உடல் உறுப்புகளிடையே போட்டி வந்தது. என்ன போட்டி என்றால், யார் பெரியவன்? என்பதே. கால் சொன்னது நான் தான் பெரியவன். இந்த மனிதனை நடக்கச்செய்கிறேன் என்றது. கை சொன்னது

நான் தான் பெரியவன். வேலை செய்யவும், உணவு ஊட்டவும் செய்கிறேன் என்றது. வாய் சொன்னது நான் தான் பெரியவன். இந்த மனிதனுக்கு என் வழியாக அனைத்து உணவும் செல்கிறது, அதற்கு உதவுகிறேன் என்றது. அவயவங்கள் போட்டியால் செயல்படவில்லை. அந்த மனிதனுக்கு பசி வந்தது. அவயவங்கள் தங்கள் கடமையைச் செய்ய ஒன்றுபடாததால் அம்மனிதன் மயக்கமுற்றான். அனைத்து அவயமும் சோர்ந்து போயின. முடிவில் கண்டுகொண்டதென்னவென்றால், அவயவங்கள் அனைத்தும் வேற்றுமையில்லாமல் ஒன்றுபட்டு இயங்கினால்தான் வாழ்வு என்பதைப் புரிந்து கொண்டன. நாம் அனைவரும் இருப்பிடத்தால், மொழியால் , செய்கையால் வேறுபட்டிருந்தாலும், நாம் அனைவரும் கிறிஸ்துவின் சரீரதத்தில் ஒன்றுபட்டிருக்கிறோம்.

### ***3. வாழ்வில் ஒன்றிணைதல்*** : (யோவா. 15:17)

நீங்கள் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொள்ள வேண்டும் என்பதே என் கட்டளை.

தமக்கும் அடியாருக்கும்மிடையேயுள்ள உறவை பல்வேறு உருவகங்களின் வாயிலாக வெளிப்படுத்திய ஆண்டவர் யோவான் 15-ஆம் அதிகாரத்தில் செடியும்கொடியும் பற்றிக் கூறியுள்ளார். கிறிஸ்து செடியாகவும் விசுவாசிகள் கொடிகளாகவும் கூறப்பட்டுள்ளது. செடி தனது கொடிகளைப்பற்றி அக்கறையின்றி இராது. தனது அவயவமாக உருவான அதனை தனது கனியின் இருப்பிடமாக்கிக் கொள்கிறது. கொடியோ தன்னை அர்ப்பணிக்கிறது. சிறந்த கொடிகளோ மிகுந்த பலனைக் கொடுக்கும். அது தோட்டக்காரரை மகிமைப்படுத்தும். அதுபோலவே வாழ்வில் ஒன்றிணைதலுக்கு அன்பு வெளிப்படையானது.

என் தந்தை என் மீது அன்பு கொண்டுள்ளது போல நானும் உங்கள் மீது அன்பு கொண்டுள்ளேன். என் அன்பில் நிலைத்திருங்கள் நான் என் தந்தையின் கட்டளைகளைக் கடைப்பிடித்து அவரது அன்பில் நிலைத்திருப்பது போல நீங்களும் என் கட்டளைகளைக் கடைப்பிடித்தால் என் அன்பில் நிலைத்திருப்பீர்கள். என் மகிழ்ச்சி உங்களுக்குள் இருக்கவும் உங்கள் மகிழ்ச்சி நிறைவு பெறவுமே இவற்றை உங்களிடம் சொன்னேன் (யோவா. 15:9-11). இதுவரை நீங்கள் என்பெயரால் எதையும் கேட்டதில்லை. கேளுங்கள் பெற்றுக்கொள்வீர்கள். அப்பொழுது உங்கள் மகிழ்ச்சியும் நிறைவடையும் (யோவா. 16:24). அன்புக் கட்டளையாக யோவான் எழுதிய முதல் திருமுகத்தில் 1யோவா. 3:11, நீங்கள் தொடக்கத்திலிருந்து கேட்டறிந்த செய்தி இதுவே நாம் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்த வேண்டும் என்று கூறி வாழ்வில் ஒன்றிணையச்செய்தார்.

ஆபிரகாம் லிங்கன் வழக்கறிஞராகப் பணியாற்றிக் கொண்டிருந்த போது ஒரு மனிதன் அவரிடம் தனக்கும் எதிராளிக்கும் இருக்கும் வழக்கைக் கூறினார். அவர் கேட்ட பின்பு அந்த மனிதனை ஓர் அறையில் உட்காரவைத்தார். சற்று நேரத்துக்குள் அங்கு இருந்த மனிதனின் எதிராளியும் வந்து தன் வழக்கை எடுத்துக் கூறினார். ஆபிரகாம் லிங்கன் அதையும் கேட்டபடி அந்த மனிதனையும் அதே அறையில் போய் உட்காரச் சொன்னார். பின்பு அறையைப் பூட்டி சாவியை எடுத்துச் சென்றுவிட்டார். எதிரிகள் இருவரும் நீண்ட நேரத்துக்குப் பின்பு பேச ஆரம்பித்தனர். தங்கள் தவறை உணர்ந்து சமரசம் ஆகிவிட்டார்கள். இவ்வாறு அவர்களை ஒன்றிணையச் செய்தார்.

நாமும் அன்பினால் ஒன்றிணைந்து விடுதலைப் பணியாற்றுவது இறைச்சித்தம். இயேசுகிறிஸ்துவின் அடிச்சுவட்டில் கால்பதித்து வழிபாட்டில் ஒன்றிணைந்து, வேற்றுமையில் ஒன்றிணைந்து, வாழ்வில் ஒன்றிணைந்து, அன்பை வெளிப்படுத்தி இறையரசை விரிவாக்குவோம்.

அருள்திரு. M.P. **விஜயகுமார்**

10-02-2019 குணமாக்கும் திருப்பணி ஞாயிறு

# நோயின்மையில் நலம் பெறுதல்

## HEALING IN SICKNESS

வி. ப. 4:10-17 1கொரி. 12:1-10
திபா. 103:1-10 யோவா. 9:1-7

**"அவர்.. உன் நோய்களையெல்லாம் குணமாக்குகின்றார்."** (திபா. 103:3)

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது ஆன்றோர் சொல். உடல் நலக் குறைவு என்றதும் உடனே, நாம் உடல் சார்ந்த நலக்குறைவை மட்டுமே நினைவில் கொள்கிறோம். ஆனால் குற்ற உணர்வும், மனநலக்குறைவும் ஒருவரது நோயே. அண்மையில் ஆற்றுப்படுத்துவதற்காக ஆற்றுப்படுத்துபவரிடம் வந்த வந்த ஒரு இளைஞன் தனக்கு பல உடல் நலக் குறைவுகள் இருப்பதாகவும், எனவே எந்த நேரத்திலும் மரணம் ஏற்படலாம். ஆகவே கடந்த ஓராண்டு காலமாக எந்த வேலைக்கும் செல்லாமல் மனைவியின் உழைப்பு ஊதியத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். இதனால் மனைவியின் வீட்டார் என்னை மதிப்பதில்லை என்று கூறி அவர்களை வன்முறைக் கலந்த சொற்களில் கடுமையாக திட்டினேன் எனக்கூறினார். அந்த இளைஞரிடம் ஆற்றுப்படுத்துனர் தொடர்ந்து உரையாடியப் போது இளைஞருடைய திறனாய்வு (Self-esteem) மிகவும் குறைந்து இருப்பது தெரிந்தது. அவருடைய குறையை கண்டுபிடித்த பின்பு அவற்றை சரிசெய்ய பயிற்சி கொடுக்கப்பட்டது. இளைஞரது மனம் நலப்படுத்தப்பட்டு, நல்லதொருப் பணியில் இணைந்து மனைவி குழந்தைகளோடு நலமாக வாழ்கிறார்.

செய்தித் தாளில் வந்த ஒரு செய்தி, அமெரிக்காவில் உள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் நம் பண்டைய உணவுகளை ஆய்வு செய்துள்ளனர். ஆய்வின் முடிவில் வியப்படைந்துள்ளனர். காரணம், ஆய்வில் தமிழர்களின் உணவான "பழைய சோறில்" பல நன்மைகள் இருப்பதைக் கண்டுபிடித்துள்ளனர். அவை (அ) உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. (ஆ) உடலில் வெள்ளை அணுக்களை அதிகரிக்கச் செய்கிறது. (இ) உடலின் சோர்வைப் போக்குகிறது. (ஈ) உடலில் அணுச்சிதைவை மாற்றுகிறது. (உ) உடலில் வெப்பத்தைக் குறைக்கிறது. (ஊ) வயிற்றிலுள்ள கழிவுகளை விரைந்து வெளியாக்குகிறது. (எ) உற்சாக மனநிலையைத் தருகிறது. ஆனால் நாம் இன்று நம் மரபு சார்ந்த உணவு

பழக்கத்தை விட்டுவிட்டோம். துரித உணவுகளையும், இரசாயன சுவையூட்டிகள் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட உணவுகளையும், Junk foods அதிகமாக உட்கொள்ளுகிறோம். மரபு சார்ந்த இயற்கை விவசாயத்தை விட்டுவிட்டு, இரசாயன உரங்களால் விளைச்சலானவைகளை உண்ணுகிறோம். இவையெல்லாம் நம் உடலைப் பாதித்து உடல்நலக் குறைவுக்கு காரணிகளாக அமைந்து விடுகின்றன.

திருமறையில் உடல் நலக்குறைவுக்கு பாவம் ஒரு காரணம் என குறிப்பிடப்பட்டுள்ளது. யூதா நாட்டை, தமது 16-வது வயதில் அரசராகி 52 ஆண்டுகள் சிறப்பாக ஆட்சி செய்தவர் அரசர் உசியா ஆவார். அவர் வலிமை மிக்கவர் ஆனபோது தாம் அழிவுறும் அளவுக்கு ஆணவம் கொண்டார். ஆண்டவருக்குக் கீழ்ப்படியாமல், தூபபீடத்தின் மேல் தானே தூபம் காட்ட ஆண்டவரின் இல்லத்தில் நுழைந்தார். ஆலயத்தின் குரு அசரியாவும், அவருடன் 80 குருக்களும் அரசரைத் தடுத்து நிறுத்தி தூபம் காட்டுவது உமது பணியன்று என்றனர். அரசர் சினமுற்றார், தூபகலசத்துடன் தூபபீடத்திற்கு அருகே சென்ற போது தொழுநோயால் பாதிக்கப்பட்டார் (2குறி. 26:16-19). இயேசு கிறிஸ்துவின் சீடர்கள் பிறவிலேயே பார்வையற்ற ஒருவரைக் கண்டு, ‘இரபி இவர் பார்வையற்றவராக பிறக்கக் காரணம் இவர் செய்த பாவமா? இவர் பெற்றோர் செய்த பாவமா?’ என்று கேட்டனர் (யோவா. 9:2).

அலகையும் (பிசாசு) உடல்நலக் குறைவை ஏற்படுத்தியுள்ளது. அலகை யோபுவின் உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரை எரியும் புண்களால் வாட்டி வதைத்தான் (யோபு 2:4-7). இறைமகன் இயேசுவும் அவர் சீடர்களும் கெரசேனர் பகுதிக்கு வந்தார்கள். அங்கு தீய ஆவி பிடித்திருந்த, கல்லறைகளை உறைவிடமாகக் கொண்டிருந்த மனிதர் ஒருவர் அவருக்கு எதிரே வந்தார். அம் மனிதன் இரவு பகலாய் மலைகளிலும், கல்லறைகளிலும் கூச்சலிட்டுக் கொண்டிருந்தார். கற்களால் தம்மையே காயப்படுத்திக் கொண்டிருந்தார். அம் மனிதனை இயேசு நலப்படுத்தினார் (மாற்கு 5:1-13). நம் உடல் கடவுள் தங்கும் ஆலயம். கடவுள் தங்கும் ஆலயமாக நம் உடல் இல்லாத நிலையே ஆரோக்கியமில்லாத நிலை ஆகும்.

உடல் நலக் குறைவில் நலமருள்பவர் கடவுள். தூயப் பவுலடியார் தமது வலுவின்மையில் கடவுளின் அருளையும், ஆற்றலையும் பெற்றார் (2கொரி. 12:7-9). ஆக இறையவர் தரும் உடல் நலம் எத்தகையது என தொடர்ந்து சிந்தனை செய்வோம்.

### *1. இறையவர் உபகரணங்கள் வழி நலம் அருள்கிறார்:*

நலம் அருள்பவர் கடவுள். அனைவரும் ஆரோக்கியமாக வாழவேண்டும் என கடவுள் விரும்புகிறார். நானே உன்னை குணமாக்கும் ஆண்டவர் (வி.பா. 15:26c). திருப்பாடகர் தாவீது கடவுளைப் புகழ்ந்து பாடும் போது, அவர் உன் குற்றங்களையெல்லாம் மன்னிக்கிறார். உன் நோய்களையெல்லாம் குணமாக்குகிறார் (தி.பா. 103:3). கடவுளின் நலமருளும் திருப்பணியில் உபகரணங்கள் வழி நலமருளினார். இறைத்திட்டத்தை நிறைவேற்ற இறைஅழைப்பினைப் பெற்ற மோசே தமது இயலாமையை இறையவரிடம் கூறுகிறார். நாவண்மை அற்றவன் நான்! ஏனெனில், எனக்கு வாய் திக்கும்; நாவும் குழறும் (வி.பா. 4:10). தமது இயலாமையைக் கூறிய மோசேயிடம், கடவுள் ஆரோனை உபகரணமாகக் கொடுத்தார். நீ பேச வேண்டியவைகளை அவன் வாயில் வைப்பாய். நான் உன் வாயிலும் அவன் வாயிலும் இருந்து கொண்டு நீங்கள் செய்ய வேண்டியவற்றை உங்களுக்கு அறிவுறுத்துவேன். அவன் உனக்கு வாயாக இருப்பான் (வி.பா. 4:15-16). இறையவரால் ஆற்றுப்படுத்தப்பட்டு, இஸ்ராயேல் மக்களின் விடுதலைப் பணியில் மோசே எக்குறைவுமின்றி சிறப்பாய் தம் கரத்தில் கொடுக்கப்பட்ட பொறுப்பினை நிறைவுசெய்தார். யூதா நாட்டின் அரசர் எசேக்கியா நோயுற்று சாகும் தருவாயில் இருந்தார். அவரிடம் ஆண்டவரின் இறைவார்த்தைகளை ஏசாயா இறைவாக்கினர் கூறினார். நீர் உமது வீட்டுக் காரியங்களை ஒழுங்குபடுத்தும்; ஏனெனில் நீர் சாவினின்று பிழைக்கமாட்டீர் (ஏசா. 20:1). இதனைக் கேட்ட அரசர் எசேக்கியா ஆண்டவரை நோக்கி மன்றாடினார். ஆண்டவரும் அம்மன்றாட்டிற்கு பதில் கொடுத்தார். ஏசாயா இறைவாக்கினர் இறைவார்த்தையின்படி ஓர் அத்திப்பழ அடையை அவர் உடலில் இருந்த கட்டியின் மேல் வைத்தார். அதன் வழி நலம் பெற்றார். அரசர் எசேக்கியா நலம் பெற அத்திப்பழ அடை உபகரணமாக பயன்படுத்தப்பட்டது.

இறைமகன் இயேசுவும் தம் திருப்பணியில் உபகரணங்களைப் பயன்படுத்தி நலமருளினார். உமிழ் நீரை உபகரணமாக பயன்படுத்தியுள்ளார். (அ) காதுகேளாதவரும், திக்கிப்பேசுபவருமான ஒருவரை நலப்படுத்தினார். விரல்களை அவர் காதுகளில் இட்டு, உமிழ்நீரால் அவன் நாவைத் தொட்டு வானத்தை அண்ணார்ந்துப் பார்த்து எப்பாத்தா என்றார். அவர் காதுகள் திறக்கப்பட்டன. அவர் தெளிவாய் பேசினார் (மாற்கு 7:32-36).

(ஆ) பெத்சாய்தாவில் பார்வையற்றவருடைய விழிகளில் உமிழ்ந்து கைகளை அவர் மேல் வைத்து நலமருளினார் (மாற்கு 8:23).

(இ) பிறவியில் பார்வையிழந்த மனிதரை நலப்படுத்த உமிழ்ந்நீரினால் சேறுண்டாக்கி, அச்சேற்றை அவர் கண்கள் மீது பூசி சீலோவாம் குளத்தில் போய் கழுவச் சொன்னார். அவரும் அப்படியே செய்து நலம் பெற்றார் (யோவா. 9:6). இன்றும் இறையவர் மானுடத்திற்கு கொடுத்த ஞானத்தால் கண்டுபிடிக்கப்பட்ட மருந்துக்கள் என்னும் உபகரணத்தால் அனைவருக்கும் நலமருளுகின்றார்.

## *2. இறையவர் இறைவார்த்தையின் வழி நலம் அருள்கிறார்:*

இறைவார்த்தை ஆற்றல் நிறைந்தது. அவ் வார்த்தையின் வழியாய் தம்மிடம் பற்றுறுதிக் கொண்டோரை நலப்படுத்தினார். தம் (கடவுள்) வார்த்தையை அனுப்பி அவர்களைக் குணப்படுத்தினார் (தி.பா. 107:20). இயேசு கிறிஸ்துவின் திருப்பணிக்காலத்தில் பற்றுறுதியோடு அவரிடம் வந்த அனைவருக்கும் தமது ஆற்றல் நிறைந்த இறைவார்த்தையினால் நலமருளினார். இயேசு எரிகோவை நெருங்கின போது, பார்வையற்ற ஒருவர் நாசரேத்து இயேசு போகிறார் என அறிந்து கொண்டதும், “இயேசுவே தாவீதின் மகனே, எனக்கு இரங்கும்” என்று கூக்குரலிட்டார். முன்னே சென்று கொண்டிருந்தவர்கள் அமைதியாக இருக்கக் கூறியும் இன்னும் உரக்க சத்தமாகக் கூறினார். இயேசு அவரது பற்றுறுதியைக் கண்டு பார்வை கொடுத்தார் (லூக். 18:35-43). யோவா. 9:6-ல் இயேசுவின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து சீலோவாம் குளத்தில் போய் கழுவியபடியால் அம்மனிதர் நலம் (பார்வை) பெற்றார்.

இயேசுகிறிஸ்துவின் திருப்பணியில் ஆற்றல் நிறைந்த இறைவார்த்தையின் வழியாக ஆற்றுப்படுத்தி நலமருளினார். தனிமையை விரும்பிய இயேசு பெருந்திரளான மக்களைக்கண்டு அவர்கள் ஆயரில்லா ஆடுகளைப் போல் இருந்ததால் அவர்கள் மீது பரிவுக் கொண்டு அவர்களுக்குப் போதித்தார். இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றிய மக்கள் யூத சமயத்தலைவர்களால் புறக்கணிக்கப்பட்ட கலிலேயாப் பகுதி மக்கள். பாவிகள் என அடையாளப்படுத்தப்பட்டு, ஒதுக்கப்பட்டு, எருசலேம் ஆலயத்தில் அனுமதிக்கப்படாத மக்கள். எனவே அவர்கள் மீது பரிவுக் கொள்கிறார். அவர்களுக்கு இறைவார்த்தைகளைப் போதித்து, இறைவார்த்தைகளால் ஆற்றுப்படுத்தி அனுப்பினார் (மாற். 6:31-34). இயேசு கிறிஸ்துவின் சீடர்கள் தங்களுடைய குருநாதரின் எதிர்பாரா மரணத்தைச் சந்தித்ததும் அச்சம் கொண்டார்கள். உயிர்த்த கிறிஸ்துவின் செய்தியை அறிந்திருந்தும், நம்பிக்கையின்மையால் திகிலோடும் அச்சத்தோடும்

எம்மாவூர் சென்ற சீடர்களை வழிப்பயணியாக சந்தித்து இறைவாக்குகளை எல்லாம் நினைவூட்டி, ஆற்றுப்படுத்தி, அவர்களைத் தெளிவுபடுத்தினார். ஆற்றுப்படுத்தப்பட்டவர்கள் தெளிவு பெற்று மகிழ்வோடு எருசலேம் சென்றனர் (லூக். 24:13-34).

இறையன்பர்களே, மருத்துவமனை ஒன்றினிலே ஓர் ஆங்கில மொழி வாசகம் என்னை பெருமளவு கவர்ந்தது.

"We Take Care God Will Cure"

"மருந்துகள் கொடுப்பது மருத்துவரின் கடமை, முழு நலம் தருபவர் கடவுள்" அறுவை மருத்துவத்தில் புகழ் பெற்ற மருத்துவரின் சிறிய தவறுகளால் (Careless) இறந்தோரும் உண்டு. இதனை மருத்துவத் துறையில் பணிச் செய்வோர் நிச்சயமாக மறுக்கமாட்டார்கள். இது நிதர்சனமான உண்மை. ஏனெனில் முழுமை நலம் அருள்பவர் கடவுள். படுக்கையில் அவர் நோயுற்றுக் கிடக்கையில் ஆண்டவர் அவருக்குத் துணைசெய்வார்; நோய் நீங்கிப் படுக்கையினின்று அவர் எழும்பும்படிச் செய்வார் (தி.பா. 41:3). உடல் நலக்குறைவுகளில் நலமருளும் இறையவரில் பற்றுறுதி கொண்டு முழுமை நலம் பெறுவோம்.

அருள்திரு. S. **அருள் ஜெபசிங்**

17-02-2019

உயிர்ப்புக்கு முன்வரும் ஒன்பதாம் ஞாயிறு

# படைப்பில் கூட்டுச்சார்புடைமை

## THE INTER - DEPENDENCE IN CREATION

தொநூ. 2:1-15 கொலோ. 2:16-23
திபா. 104:24-35 மத். 13:1-9

**“அப்பொழுது ஆண்டவராகிய கடவுள் நிலத்தின் மண்ணால் மனிதனை உருவாக்கி, அவன் நாசிகளில் உயிர்மூச்சை ஊத மனிதன் உயிர் உள்ளவன் ஆனான்.”** (தொநூ. 2:7)

கடவுளின் படைப்புகள் அனைத்தும் ஒன்றையொன்று கூட்டுச்சார்புடையவை. ஒன்றிலிருந்து மற்றொன்று பிரிந்து வாழ்தல் என்பது கடினமானது. கடவுளின் படைப்புகளில் மனிதர் மாற்றம் கொண்டு வரும்போது இயற்கைச் சீற்றங்களும், பேரழிவுகளும் நிகழ்கின்றன. காடுகளை அழித்ததனால் மழையளவு குறைந்தது. காட்டுவிலங்குகள் வாழ்விடங்களைத் தேடி அலையத் தொடங்கின. ஓடும் தொடர் வண்டியிலிருந்து ஒரு சக்கரம் தண்டவாளத்திலிருந்து விலகி தடம்புரண்டு விபத்து நடப்பதனைப் போன்று படைப்பில் ஏற்படும் சிறுபாதிப்புகளும் முழுப்படைப்பையும் பாதிப்படையச் செய்கிறது. படைப்பில் காணப்படும் கூட்டுச்சார்புடைமை மனிதருக்குக் கற்றுத்தரும் செய்திகளைப் பின்வரும் சிந்தனைகளின் வாயிலாக அறியலாம்.

### *1. உறவுடன் வாழ வேண்டும்* : (தொநூ. 2:15)

படைப்பில் வெளிப்படுத்தப்படும் கூட்டுச்சார்பு உறவுடன் வாழ வேண்டும் என்பதனைக் கற்றுத் தருகிறது. கடவுளின் படைப்பில் அனைத்து விலங்குகளும், பறவைகளும், மனிதரும் இணைந்து உறவுடன் வாழும் சூழலைப் பார்க்கிறோம். கடவுள் அனைத்தையும் மண்ணினால் உண்டாக்கினார். அனைத்தையும் உருவாக்க கடவுள் ‘மண்’ என்ற மூலப்பொருளைப் பயன்படுத்தினார் (தொநூ. 2:7,19). ஆனால் ஏவாளை உருவாக்க ஆதாமின் விலா எலும்பை மூலாதாரமாக எடுத்துக் கொண்டார் (தொநூ. 2:21). இவையனைத்தும் உறவுடன் வாழ்வதற்கான கடவுளின் ஏற்பாடாகும். மனிதர் பெருமைகொண்டுக் கடவுளுக்கு கீழ்ப்படியாமையால் பாவம் உலகில் வந்தது (தொநூ. 3:5). இப்பாவத்தினால் கடவுளுக்கும்-மனிதருக்கும்-படைப்புகளுக்கும் (தொநூ. 3:8,12,17) உள்ள உறவில் விரிசல் ஏற்பட்டது. கடவுள் ஒளிவு மறைவற்ற அதாவது தீமைசெய்யாத வாழ்வைக்

கற்றுக் கொடுத்தார். ஆனால் மனிதரோ தீயோனால் ஒளிந்து வாழக் கற்றுக்கொண்டனர். படைப்பின் மீது நல்லுறவை இழந்ததினால் இயற்கையை பண்படுத்தாமல் பாழ்படுத்துகின்றனர். அதன் விளைவாக பலவித இயற்கை பேரழிவுகள் ஏற்படுகின்றன. கடவுளின் படைப்பில் உள்ள உறவை மீண்டும் புதுப்பிப்பதே கடவுளின் விருப்பம் (எசா. 11:6-9; தி.வெ. 21:5) அவ்விருப்பத்தை உணர்ந்து உறவுடன் வாழ நம்மையும் அழைக்கிறார்.

***2. உதவி செய்து வாழ வேண்டும்*** : (கொலோ. 2:18)

படைப்பில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் கூட்டுச்சார்புடைமை நாம் உதவி செய்து வாழ வேண்டும் என்பதைக் கற்றுத்தருகிறது. கெலோசேயில் இருந்த ஞான உணர்வுக் கொள்கை மற்றும் போலிப் போதகர்களின் தவறான கொள்கைகளாகிய சடங்கு முறைகளுக்கு முதன்மையளித்தல் உடல் ஒறுத்தல்,வானத்தூதர் வழிபாடு போன்றவற்றை பவுலடியார் கண்டித்து, இவைகளெல்லாம் வெறும் நிழல்தான்; கிறிஸ்துவே உண்மையானவர், தலையானவர். அவரால் தான் உடல் முழுவதும் ஊட்டம் பெறுகிறது என்று குறிப்பிடுகிறார் (கொலோ. 2:18-19). உடல் பல உறுப்புகளைக் கொண்டிருந்தாலும், ஒவ்வோர் உறுப்பும் அதனதின் வேலையைச் செய்து முழு உடலுக்கும் உதவி செய்கிறது (எபே. 4:16) படைப்புகள் அனைத்துக்கும் கிறிஸ்துவே தலைமையானவர். (கொலோ. 1:15-17). அவருக்குள் அனைத்தும் நிலைத்திருக்கின்றன. படைப்பு மனிதருக்குச் சுத்தமான காற்றை, உணவை, நீரைக் கொடுத்து உதவி செய்கிறது. பறப்பனவற்றில் சிறியதாகிய தேனீ இனிமையான தேனைக் கொடுத்து உதவுகிறது. அப்படிப்பட்ட படைப்பை மனிதர் பாதுகாத்து ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழ ஆண்டவர் அழைக்கிறார்.

***3. உணர்வுடன் வாழ வேண்டும்*** : (மத். 13:9)

படைப்பிலிருக்கும் கூட்டுச்சார்புடைமை அனைத்தும் உணர்வுடன் வாழ வேண்டும் என்பதைக் கற்றுத்தருகிறது. மனிதரானாலும், விலங்குகளானாலும், பறவைகளானாலும் அனைத்துக்கும் கடவுள் உள்ளுணர்வைக் கொடுத்துள்ளார். காலை வந்தது என்பதை சேவல் பூமியில் உள்ள வெப்ப மாற்றத்தை தன் அலகால் உணர்ந்து கூவி தெரிவிக்கிறது. நாம் எப்படிப்பட்ட உணர்வுடன் வாழ வேண்டும் என்பதை இயேசு கூறிய உவமையின் (மத். 13:1-9) வாயிலாக புரிந்துகொள்ளலாம். பாலஸ்தீனாவில் உள்ள விவசாய நிலங்கள் மண், கற்கள், முட்கள் நிறைந்தவையாகும். அங்குள்ள விவசாயிகள் முதலாவது விதைகளை

விதைப்பர். பின் நிலத்தை உழுவர். அவ்வாறு விதைத்தபின் உழுவதால் விதைகள் வரப்புகளின் மேல் உள்ள வழியிலும் மண்ணால் மறைக்கப்பட்டிருக்கும் பாறையின் மேலும்,வரப்புக்களின் ஓரமாக நிற்கும் முட்செடியின் அடியிலும் விழுவதும், அங்கும் விதைகள் முளைத்தும், மாண்டு போவதும் இயல்பானதே. ஆனால் பெரும்பாலான விதைகள் இப்படிப்பட்ட தடைகளைத் தாண்டி பயன் கொடுப்பதாகவே உள்ளன. விதைகள் தரும் பயன்கள் வசனத்தைக் கேட்டு உணர்வுடன் வாழ்வோரைக் குறிப்பதாக இயேசுகிறிஸ்து குறிப்பிடுகிறார்(மத். 13:19). பிளேட்டோ என்ற அறிஞர் மனித உள்ளுணர்வை மூளை அறிவினால் தேடவேண்டும் என்கிறார். மனித உறவுகள் கூட்டு வாழ்வுக்கான உள்ளுணர்வை வளர்க்கின்றன. விதைகள் செடியைச் சார்ந்தும், செடி நிலத்தைச் சார்ந்தும் மனிதன் செடியின் பயனைச் சார்ந்தும் மீண்டும் விதை நிலத்தைச் சார்ந்தும் இருப்பதனைப் போல் ஒவ்வொருவரும் சார்ந்து வாழ்வதுடன் பிறருக்காய் நன்மைகளைக் கொடுத்து உணர்வுடன் வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம்.

நிறைவாக, படைப்பின் கூட்டுச் சார்புடைமையைப் பாதுகாக்க செய்ய வேண்டியது என்ன? கட்டுரைப் போட்டி ஒன்று நடைபெற்றது. கட்டுரையின் தலைப்பு ‘உலகின் கூட்டுச்சார்புடைமையில் இருக்கும் பிரச்சனைக்குக் காரணம் என்ன? என்பது தான் பல போட்டியாளர்கள் கலந்து கொண்டு பக்கம் பக்கமாய் எழுதினர். ஆனால் ஒருவர் மட்டும் சற்றுநேரம் சிந்தனை செய்தார். நிறைவாக ஒரேஒரு வரியை மட்டும் எழுதினார். உலகின் கூட்டுச்சார்புடைமையில் இருக்கும் பிரச்சனைக்கு காரணம். ‘நான்’ தான். ஆம்! நான் என்கிற சுயம் அழிக்கப்பட்டால் படைப்பின் கூட்டுச்சார்புடைமையைப் பாதுகாக்கலாம். நாமும் இத்தகையப் பார்வையுடன் இறைவனின் படைப்புப் பணியில் பங்காற்றி இறையரசை உருவாக்கிடுவோம்.

அருள்திரு. S. **கிரீஷ் குமார்**

24-02-2019

உயிர்ப்புக்கு முன்வரும் எட்டாம் ஞாயிறு

## படைப்பின் சீர்கேடு

**THE CORRUPTION OF CREATION**

எசா. 5:1-13 கலாத். 1:5-10
திபா. 8. லூக். 10:13-16

**"ஆதலால் அறியாமையால் என் மக்கள் நாடு கடத்தப்படுகிறார்கள்; அவர்களில் பெருமதிப்புக்குரியோர் பசியால் மடிகின்றார்கள்; பொதுமக்கள் தாகத்தால் நாவறண்டு போகின்றார்கள்."** (எசா. 5:13)

மிகவும் வண்ணமயமான உலகினை இறைவன் படைத்தார். பல நிறங்களில் பூத்துக் குலுங்கும் மலர்கள், நீர் நிலைகள், வானமண்டலங்கள், அடர்ந்த மரக்கூட்டங்கள், நீலவானம், நீல நிறக்கடல்கள் அவையெல்லாம் படைப்பின் மகுடங்கள். ஆனால், மானிடர் படைத்தவருக்கு அஞ்சாததால் இவை அனைத்தும் சீர் கெட்டுவிட்டன. பண்படுத்தவும், பாதுகாக்கவும் படைக்கப்பட்ட இந்த நந்தவனம் தனி மனித சுயநலத்தாலும், வளர்ந்த நாடுகளின் அதிகாரத்தாலும் படைப்புகள் மிகவும் சீர்கெட்டு விட்டன. இதனைத் திரும்ப நல்ல நிலையில்கொண்டு வருவது மானிடர்களின் பணியாகும்.

எசாயா 5-ஆம் அதிகாரம் 1 முதல் 13 வரை திராட்சைத் தோட்டம் பற்றிய கவிதையும் அத்தோடு மக்களினத்தின் தீய செயலும் அதனால் வரும் தண்டனைத் தீர்ப்பும் விவரிக்கப்பட்டுள்ளன. மேலும் மானிடர் வரம்பு மீறிச் செயல்படும் போது எல்லாம் வல்ல கடவுள் அவர்களை அழிப்பார் என்றும் அதே நேரத்தில் மனந்திருந்தும் போது அவர்களைப் பாதுகாப்பார் என்கிற நம்பிக்கையின் செய்தியும் தரப்பட்டுள்ளன.

குறிப்பாக எசாயா இந்தச் செய்தியைத் தரும் காலத்தின் பின்னணியத்தைப் பார்க்கும் போது, முற்காலத்தில் போர் செய்வதை ஒரு கலையாகக் கொண்டு வலிமையற்றோரை வலிமையுடையோர் வீழ்த்தி அவர்களின் உயிர்களையும் உடமைகளையும் பறித்துக் கொள்வது வேடிக்கையாகக் காணப்பட்டன.போர் செய்து வரும் போது யூதா நாட்டு மக்களின் வயல் நிலங்கள், தண்ணீர்த் துரவுகள், தோட்டங்கள், வேலிகள் அனைத்தும் அழிக்கப்பட்டன. சில நேரங்களில் தீக்கிரையாக்கப்பட்டன. இதனால் படைப்புகள் சீர்கெட்டன. அன்றாடத் தேவைகளுக்காகப் போராட வேண்டியது வாடிக்கையாகிவிட்டது.

இங்கு தென்னாடான யூதாவின் மக்கள் எப்போதும் அதன் அண்மையிலிருந்த வலிமைமிக்க அசீரிய மன்னன் மற்றும் இராணுவத்தால் அச்சுறுத்தலுக்கு ஆளாகினர். யூதாவுக்கு அழிவுவர இருந்தாலும் அசீரிய மக்களின் வலிமையை விடவும் உயிருள்ள ஆண்டவர் யூதா மக்கள் மத்தியில் இருந்தார். அப்படி கடவுள் யூதா மக்களிடம் உடன் இருந்த போதும் இறைவன் மீதுள்ள நம்பிக்கையை இழந்து ஆண்டவருக்கு அஞ்சாமல் பல பாவங்களைச் செய்தனர். இதனால் யூதா நாட்டு மக்கள் அடிமைகளாகப் பிடிக்கப்படும் நிலையினை உணர்ந்த எசாயா இறைவாக்கினர் எழுச்சியூட்டும் வார்த்தைகளாலும், செயல்களாலும் அம்மக்களை நீதியோடும், நேர்மையோடும் வாழ அறிவிப்பு விடுத்தார். ஆண்டவருக்குப் பணியாவிட்டால் படைப்புகள் சீர்கெட்டு அழிவு மட்டுமே மிஞ்சும் என எச்சரித்தார்.

### *1. தூய சிந்தையோடு படைப்பைப் பாதுகாப்போம்:*

ஆதலால் அறியாமையினால் என் மக்கள் நாடு கடத்தப் படுகிறார்கள் (எசா. 5:13a)

தூய சிந்தையோடு படைப்பை பாதுகாக்க வேண்டும். இறைவன் மானிடர்க்கு வரமாகவும், வளமாகவும் தந்த படைப்பை அழிப்பதுதான் வளர்ச்சி என்று நினைக்கிறார்கள். மனித நேயத்தின் மாண்பினைக் காக்க வேண்டும் என்கிற முதற் சித்தாந்தத்தை மறந்து தனக்கும் தன் வழிமரபினருக்கும் மட்டும்தான் இந்த உலகு என நினைத்து படைப்பை சுரண்டுகின்றனர். ஏசாயா கடவுளின் வாக்கை சொல்லும் போது, ஆதலால் அறியாமையால் என் மக்கள் நாடு கடத்தப் படுகிறார்கள். காரணம் 12-ம் வசனத்தில் படிக்கும்போது, அவர்கள் கேளிக்கை விருந்துகளில் மதுபானம் அருந்தி தீயச் செயல்களைச் செய்தார்கள். ஆண்டவரின் வல்ல செயல்களை அவர்கள் நினைவு கூரவில்லை. அவருடைய கைவினைகளை அதாவது அவருடைய படைப்பை நோக்கிப் பார்ப்பதில்லை. இதற்கு தீய எண்ணங்களால் படைப்புகள் பாதிக்கப்பட்டன. மனிதருக்குள் உள்ள உறவுகளில் விரிசல் உடைவுகள் ஏற்படத் தொடங்கின. அவ்வைப் பாட்டி சொல்லும்போது, ‘அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது’ இப்படி கிடைப்பதற்கு அரிதான மானிடப் பிறவியை கண்ணாடியை உடைப்பது போன்று சுக்கு நூறாக உடைப்பது ஏற்புடையதல்ல. மனிதநேயம் மனிதரில் மலரும் போது மட்டும்தான் படைப்புகளும் பாதுகாக்கப்படும். இந்த பூமிப்பந்தை பாதுகாக்க மானிட எண்ணங்கள் சீர்பட வேண்டும். அதுவே திருமைந்தரை ஏற்றுக் கொண்டு அவரது விருப்பத்தை நிறைவேற்றுவதின் அடையாளமாகும் (லூக். 10:13 -16).

## *2. மடியும் முன் மானிடரைப் பசியிலிருந்து மீட்போம்:*

"....அவர்களில் பெருமதிப்புக்குரியோர் பசியால் மடிகின்றார்கள்".
(எசா. 5:13b)

யூத மக்கள் இறைவனுக்கு எதிராக பாவம் செய்ததால் படைப்பும், உழைப்பும் பாதிக்கப்பட்டன. இதனால் பெரும் மதிப்பிற்குரிய மனித உயிர்கள் மண்ணில் மடிந்துபோனது. நாட்டில் உயர்வாகக் கருதப்பட்டவர்களும் இந்த பசிக் கொடுமைக்கு விதி விலக்காகவில்லை. நமக்கு தெரிந்த வகையில் சமீப காலங்களில் சென்னை, கேரளா, மும்பை போன்ற இடங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டபோது தங்கள் உயிர்களைக் காக்க உடைமைகளை விட்டுவிட்டு பாதுகாப்பு முகாம்களில் கொடுக்கப்படும் உணவிற்காக வரிசையில் காத்திருந்த நிகழ்வுகள் நமக்குத் தெரியும். காரணம் படைப்பைச் சுரண்டுவதால் இந்நிலைகள் ஏற்படுகிறது. இன்றைக்கு ஒருபுறம் மலைபோல் செல்வம் குவிக்கப்படுகின்றன. அதேவேளையில் ஒருநேர நூறு கிராம் உணவிற்காக பலமணிநேரம் காத்திருக்கும் மக்கள் கூட்டம் ஏராளம் காணப்படுகின்றன.

நவீன விவசாய எந்திரங்களாலும், உரங்களாலும் பொருளாதாரநிலை, உணவு உற்பத்தி நிலைபெருகினாலும், தொழில் நுட்பத்தில் முன்னேற்றம் ஏற்பட்டாலும் எலிக்கறி சாப்பிட்டு பசியைப் போக்குகின்ற விவசாயிகள் வாழும் நாட்டில்தான் நாம் வாழ்கின்றோம். நில சீர்திருத்தம், ஒருங்கிணைந்த சொத்து மற்றும் நீர்வளச் சீர்திருத்தம் கொண்டுவரும் போதும், இறைவனால் தரப்பட்ட படைப்பை பகிர்ந்து பாதுகாக்கும் போதுதான் மடியும்முன் மானிடரை பசியிலிருந்து மீட்கமுடியும். அல்லாவிட்டால் மானிடவாழ்வு என்றென்றும் சீர்கேடாகத்தான் காணப்படும். ஆகவே அதை உணர்ந்து மானிடத்தின் அடிப்படைத் தேவையை நிறைவேற்றுவதில் நற்செய்தியின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவோம்.

## *3. தண்ணீர்ப் பற்றாக்குறையின் சிக்கல்களைக் களைவோம்:*

"....பொது மக்கள் தாகத்தால் நாவறண்டு போகிறார்கள்."
(எசா. 5:13c)

நம்முடைய ஒவ்வொரு வளர்ச்சிக்கும் பின்னால் இயற்கையை அழிப்பதுதான் முதன்மையானதாகக் காணப்படுகிறது. படைப்பை அழிப்பதால் நல்ல தண்ணீருக்காக மக்கள் மற்றும் விலங்கினங்கள் படும் வேதனைகள் சொல்லிமாளாது. தண்ணீருக்கான சண்டை அன்றாடம் செய்தியாக மாறிவிட்டது. கவிஞர் வைரமுத்து சொல்லும் போது இனி

மூன்றாவது உலகப்போர் வந்தால் அது தண்ணீருக்காகத் தான் இருக்கும் என்றார். ஏனென்றால் மானிடர் படைப்பை மாசுபடுத்தியதால் இருக்கின்ற நல்லத் தண்ணீரும் மாசடைய துவங்கியது. தண்ணீரைத் சுத்தப்படுத்த பல ஆயிரம் ரூபாய் செலவழிந்தாலும் அதில் உண்மையான மன திருப்தி கிட்டுவதில்லை.

யூதா மக்கள் அசீரியர்களால் ஏற்பட்ட அழிவினால் தங்கள் நீர் நிலைகளை இழந்தனர். இதனால் தண்ணீருக்காக கையேந்தி நின்றனர். நமது நாட்டிலும் இறைவன் படைப்பின் மகுடமாகத் தந்துள்ள ஆறு, குளம், ஏரி பொதுக்கிணறு இவற்றை தகுந்த முறையில் பாதுகாக்காவிட்டால் நாவறண்டு நிற்கின்ற சூழல் ஏற்படும். ஆகவே, தண்ணீர் பற்றாக் குறையான சிக்கல்களைக் களைய இறைவனின் படைப்போடு ஒன்றித்து வாழவேண்டும். பல இடங்களில் குளங்களை தூர்வாரி தண்ணீர் வருகைக்காக காத்திருக்கின்றனர். குளங்கள், ஆறுகள் நிரம்ப மழைமட்டும் போதாது. மாறாக, தண்ணீர் பாய்ந்து வரக் கூடிய ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட வேண்டும். சுரண்டி வைத்திருக்கின்ற நீர் நிலைகள் ஆக்கிரமிப்பிலிருந்து திரும்ப பெற வேண்டும். யூதா இன மக்களின் நிலங்களை அசீரியர்கள் ஆக்கிரமித்ததால் அவர்கள் தண்ணீருக்காக நாவறண்டு காத்துக்கிடந்தனர்.

நிறைவாக, படைப்பை அழித்து அதன் மாண்பைக் கெடுத்து வாழ்ந்த கொராசின், பெத்சாய்தா மற்றும் கப்பர்நகூம் போன்ற நகர்களைத் (லூக். 10:13-16) திருத்த மறுத்த நகர மக்களுக்கு இயேசுக்கிறிஸ்து எச்சரிப்பின் செய்தியைக் கொடுத்தார். தீர்ப்புநாளில் கிடைக்கும் தண்டனை மிகவும் கடுமையாக இருக்கும். எனவே ஆண்டவரின் பக்கம் திரும்பவும் அவர் சொற்படிக் கேட்கவும் அவர் மானிடரை எந்த நோக்கத்திற்காகப் படைத்தாரோ அந்த நோக்கத்தை நிறைவேற்ற நம்மையெல்லாம் அர்பணிப்பதும், படைப்பில் மானிடத்தின் தேவையை அறிந்து மனிதாபிமானத்தோடு நடந்து கொள்வதுதான் கடவுள் நம்மிடம் எதிர்பார்க்கும் எதிர்பார்ப்பாகும். ஒருவரையொருவர் தாங்குவதும், ஆதரிப்பதும் தேவையில் உதவி செய்வதும் கடவுள் அரசின் தகவுகளாகும். இதை நிறைவேற்றுவதில் சுமைதாங்கியாக இயேசுநாதர்(மத். 11:28) அடியொற்றி முன்னெடுத்துச் செல்வோம். தளர்வுற்று வாழ முடியாமல் ஏங்கி நிற்கும் எண்ணற்ற மக்களின் வாழ்வில் நம்பிக்கையூன்றிட நற்பணியாற்றுவோம். அதுவே நமக்குள்ள பொறுப்பை வலுப்படுத்துவதாக அமையட்டும். எதிர்பார்ப்பின்றி, தியாக உள்ளத்தோடு ஒப்படைத்து இறையாசி பெறுவோம்.

அருள்திரு. K. **பிரின்ஸ்குமார்**

03-03-2019

உயிர்ப்புக்கு முன் வரும் ஏழாம் ஞாயிறு

# தவக்காலம் : ஒரு மீட்பின் காலம்

**LENT : A TIME OF REDEMPTION**

எசா. 58:1-14 உரோ. 2:1-13

தி.பா. 6. யோவா. 5:1-9

**"ஆண்டவர் தொடர்ந்து உன்னை வழி நடத்துவார். வறண்ட சூழலிலும் உனக்கு நிறைவளிப்பார். உன் எலும்புகளை வலிமையாக்குவார்; நீயும் நீர் பாய்ந்த தோட்டம் போலும், ஒரு போதும் வற்றாத நீரூற்று போலவும் இருப்பாய்."** (எசா.58:11)

இஸ்ரயேல் மக்கள் கடவுளுடைய மீட்பு செயலால் பாபிலோனில் இருந்து விடுதலையாக்கப்பட்டு மறுபடியும் யூதாவில் குடி அமர்த்தப்படுகின்றனர். ஆனால் சில நாட்களிலேயே அவர்களது வாழ்க்கை வழி தவறிச் செல்கின்றது. அவர்களது வாழ்விற்கும், வழிபாடுகளுக்கும் தொடர்பின்றி, கடவுளை வழிபடும் அனுபவம் பொருளற்றதாக மாறிவிடுகிறது. அவர்கள் பார்வையில் இறைவன் அவர்கள் கூப்பிடுதலுக்கு பதில் கொடுக்கவில்லை என நினைக்கின்றனர். இந்நிலையில் கடவுள் ஏசாயா தீர்க்கன் மூலம் அவர்களது வாழ்வின் குறைவுகளை சுட்டிக்காட்டி, தனது விடுதலையின் செய்தியை அந்த மக்களுக்கு மறுபடியும் கூறுகின்றார்.

இன்றைய உலகிலும் கிறிஸ்துவின் மீட்பைப் பெற்றோம் என்று கூறிக் கொள்ளும் கிறிஸ்தவர்களில் பலர் தங்கள் வாழ்வில் தடுமாறுகின்றனர். இறைவன் எதிர்பார்க்கின்ற பக்தியுள்ள வாழ்வு அனேகரிடத்தில் இல்லை. தங்களது அன்றாட வாழ்வில், ஒழுக்கநெறிகளில் மற்றவர்களுடன் உள்ள உறவில் ஏற்படும் தடுமாற்றங்கள் அவர்களது இறையுறவை பொருளற்றதாக மாற்றி விடுகின்றது. எனவே தங்கள் அனுதின வாழ்வில் கடவுளின் செயல்களை காண முடியாமல் தவிக்கின்றனர். கடவுள் நமக்குத் தந்திருக்கின்ற இந்த தவக்காலங்கள், நாம் நமது குறைவுகளை அறிந்து அவற்றிலிருந்து விடுபட்டு இறைவன் நமக்கு வாக்களித்திருக்கின்ற இந்த மீட்பின் செயலை அனுபவிக்கும் காலமாக அமையவேண்டும். இதற்கு திருமறைகாட்டும் வழிமுறைகளை நமது திருமறைப்பகுதிகளின் அடிப்படையில் சிந்திப்போம்.

## *1. வாழ்வே வழிபாடாக மாறும் போது மீட்கப்படுவோம் :*

(ஏசா. 58:6)

வாழ்க்கை வேறு வழிபாடு வேறு என்ற நிலை இன்று திருச்சபைகளில் பெருகி வருகின்றது. சமூகத்தில், தமது குடும்பத்தில், தனது பணியிடங்களில் மனம்போல் வாழ்ந்து துணிந்து தவறுகளை செய்துவிட்டு

ஆலயத்தில் வந்து மிகுந்த பக்தியுடன் இறைவனை தொழுதுகொள்ளும் மக்கள் பெருகி வருகின்றனர். கடவுளிடம் அன்பை பெற்ற நாம் பிறருடைய அன்பை பகிர்வதில்லை. ஒவ்வொரு வழிபாட்டிலும் கடவுளிடம் மன்னிப்பை பெற்றுக் கொள்ளும் நாம் பிறருடன் மன்னிப்பை பகிர்வதில்லை. இறைவனால் நமது குற்றங்களுக்கான தண்டனையினின்று விடுபட்ட நாம் மற்றவர்கள் செய்த தவறுக்காக அவர்களைத் தண்டிக்க துடிக்கின்றோம். சுயநலம், பொறுப்புணர்வு, பெருமை, பொறாமை, பிறரை மதிக்க தவறுதல் போன்ற தவறுகள் நம்மை முழுமையாய் ஆட்கொண்டு வழி நடத்துகின்றது. ஆனால் வெளிப்படையாக கடவுளிடம் அன்புகொண்டு அவரை வழிபடுகிறவர்கள் போல நடிக்கின்றோம். இதற்காக தொழுகை, உபவாசம், ஜெபம், தருமம் இவற்றைப் போலியாக, பொருளற்ற வகையில் நிறைவேற்றுகின்றோம். இத்தகைய சமய வாழ்வை கடவுள் ஏற்பதில்லை (ஏசா. 58:3-5). மாறாக வாழ்வையே வழிபாடாக மாற்றிக் கொள்வதையே கடவுள் நம்மிடம் எதிர்பார்கின்றார் (உரோ. 12:1). எதைச்செய்தாலும் இது கடவுளின் மகிமைக்கென்று செய்ய வேண்டும் என்று பவுலடியார் ஆலோசனை கூறுகிறார் (1கொரி. 10:31). ஏசாயா மூலம் கடவுள் இந்தத் திருமறைப்பகுதியில் கூறும்போது நீங்கள் உங்கள் வாழ்வில் மற்றவர்களிடம் அன்பு செலுத்தி, அவர்கள் வாழ்க்கைப் பிரச்சனைகளில் உங்கள் ஆதரவு கரங்களை நீட்டி, பிறரது வேதனைகளில் பங்கேற்கும் போது, கடவுளின் கரத்தினால் நமது மீட்பு உறுதி செய்யப்படுகிறது என்கிறார் (ஏசா. 58:6-11). இந்த தவக்காலத்தில் நமது வாழ்வையே இறைவன் விரும்பும் வழிபாடாக மாற்றுவோம், கடவுளின் மீட்பில் பங்கடைவோம்.

### *2. இறை வார்த்தைக்கு கீழ்படிவதால் மீட்கப்படுவோம்* :

(யோவா. 5:8,9)

பெதஸ்தா குளக்கரையில் நீண்ட காலம் காத்திருந்த மனிதர், முடியாது என்பது மட்டுமே அவரது வாழ்வின் விடையாக அமைந்துவிட்டது. முப்பத்தி எட்டு வருடம் காத்திருந்து அத்தனை முயற்சிகளும் தோல்வி அடைந்து விட்டது. நலம் பெற விரும்புகிறாயா? என்ற இயேசுவின் கேள்விக்கு அவர் கொடுத்த பதில் அவரது மனதின் ஏமாற்ற நிலையையும், தோல்வி மனப்பான்மையும், ஆதரவற்ற நிலையையும் தனது வாழ்வு இதே நிலையில் முடிந்து விடும் என்கிற உணர்வையும் வெளிப்படுத்தியது (யோவா. 5:7). இயேசு அவனிடம் எழுந்து உன் படுக்கையை எடுத்து கொண்டு நடந்து செல்லும், என்று கூறிய போது அவரது மனநிலை முற்றிலும் மாறிவிட்டது. குளம் கலங்கி நான் அதில் இறங்கினால் தான் எனக்கு விடுதலை என்ற நம்பிக்கையும் விட்டுவிட்டார்.

கடவுளின் வார்த்தை காட்டும் புதிய கட்டளையை ஏற்றுக் கொண்டார். தனது படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்து சென்றார். நமது வாழ்வில் நாம் நினைக்கின்ற வழியில் மட்டுமே கடவுளின் மீட்புச் செயல் செயல்படும் என எதிர்பார்த்து ஏமாந்து போன தருணங்கள் பல இருக்கலாம்.மாறாக கடவுள் காட்டும் புதிய வழியை புரிந்து கொள்ள, கடவுளின் வார்த்தைக்கு முற்றிலும் கீழ்ப்படிகின்ற அனுபவம் தேவை.இப்போது கடவுள் நமக்கென்று வைத்திருக்கும் மீட்பின் வழியை புரிந்து கொள்ளவும், அதினால் வரும் மீட்பை அனுபவிக்கமுடியும். எனவேதான் கடவுள் ஏசா. 55:8,9 வசனங்களில் தனது நினைவுகளும் தனது வழிகளும் மனிதனால் புரிந்து கொள்ள முடியாதவை என்கிறார். முழுமையான கீழ்படிதலே பலன் தரும்.

### *3. மன மாற்றத்தின் அடிப்படையில் மீட்கப்படுவோம்* :

(உரோ. 2:4)

இந்த உலகத்தில் நாம் செய்யும் செயல்களுக்கு ஏற்ப தண்டனை கிடைக்குமென்றால் நாம் இந்த உலகில் வாழ இயலாது. கடவுளின் பரிவு இந்த தண்டனையினின்று நம்மை விடுவிக்கின்றது. கடவுளின் பரிவை நாம் புரிந்து கொண்டு மனமாற்றம் அடைய வேண்டும் என்பதே கடவுளின் எதிர்நோக்கு. மனமாற்றம் அடைவதற்கு பதில், கடவுளின் பரிவையும், பொறுமையையும், சகிப்புத் தன்மையும் நமது தவறுகளுக்கு ஆதரவாக எடுத்துக்கொண்டு மனக் கடினத்தோடு தொடர்ந்து தவறுசெய்தால் அழிவு நிச்சயம் (உரோ. 2:8,9). அதே வேளையில் கடவுளின் பரிவை உணர்ந்து, மனமாற்றம் அடைந்து நன்மை செய்யும் அனைவருக்கும் கடவுள் மீட்பையும், பெருமையையும், மாண்பையும், அமைதி வாழ்வையும் வழங்குவார் (உரோ. 2:7,10). லூக். 19:1-10 வசனங்களில் கடவுளின் பரிவை புரிந்து கொண்ட சகேயு தனது வாழ்வில் மீட்பைப் பெற்றார். நாமும் மனமாற்றம் அடைந்து கடவுள் தரும் மீட்பை நமக்கு உரித்தாக்கிக் கொள்வோம்.

இந்த உலகில் மீட்பை எதிர்நோக்கும் இந்த தவக்காலத்தில் நமது வாழ்வின் தவறுகளை உணர்ந்து, வாழ்விற்கும், வழிபாட்டிற்கும் தொடர்பை ஏற்படுத்துவோம். கடவுளுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து அவரது மீட்பை சொந்தமாக்குவோம். கடவுளின் அன்பை புரிந்து கொண்டு மனமாற்றத்திற்கு நம்மில் இடம் கொடுத்து இறைவன் அருளும் மீட்பை சொந்தமாக்கிக் கொள்வோம்.

அருள்திரு. J. **விக்டர் ஞான ராஜ்**

06-03-2019

சாம்பல் புதன்

## சிலுவை : பிறர்பொருட்டு துன்புற அழைப்பு

**CROSS : A CALL TO VICARIOUS SUFFERING**

| | |
|---|---|
| 1 அர. 17:12-24 | பிலி. 2:1-11 |
| திபா. 102 | மாற். 8:31-38 |

**"கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும்!".**
(பிலி. 2:5).

வரலாற்றில் சிலுவை ஒரு அவமானத்தின் சின்னம். கொடுமையான மரணத் தண்டனையின் சின்னம். இது உலக வரலாற்றில் மரணத் தண்டனைகளின் உச்சகட்ட அவமானத் தண்டனை ஆகும். குற்றவாளிகளைச் சிலுவையில் அறைந்து கொல்கின்ற தண்டனை இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் பெர்சிய நாட்டினரால் அறிமுகம் செய்யப்பட்டது. கி.மு. முதல் நூற்றாண்டில் உரோமையர்கள் இத்தண்டனையினை பிற நாட்டின் குற்றவாளிகளைத் தண்டிக்க பயன்படுத்தினர். இத் தண்டனையை இயேசுகிறிஸ்து ஏற்றார்.

"சிலுவை மனதுருக்கத்தின் புதிர்" (Cross is the Paradox of Compassion). இது நம்மீது இரக்கம் காட்டுவதற்காக இயேசுகிறிஸ்துவால் பயன்படுத்தப்பட்டது. இந்தச் சிலுவை பிறர்பொருட்டுத் துன்புற ஒரு அழைப்பை நமக்குத் தருகிறது. அப்படி சிலுவை தரும் அழைப்பு என்ன? என்பதை இன்று நாம் தியானிப்போம்.

### *1. பிறரை வாழ்விக்க அழைப்பு :* (1 அர. 17:12-24)

சிலுவை பிறரை வாழ்விக்க நம்மை அர்ப்பணிக்கத் தூண்டுகிறது.

இறைவாக்கினர் எலியா சாறிபாத்துக்கு வந்து, நகரின் நுழைவாயிலை அடைந்த போது வாழ்வில் அகம் நொந்து, உளம் நொந்து, உணவுக்கு வழியின்றி தவித்தார். தனது இல்லத்தில் பானையில் இருந்த கையளவு மாவும், கலயத்தில் இருந்த சிறிதளவு எண்ணெயையும் கொண்டு அப்பம் செய்து சாப்பிட சுள்ளிகளைப் பொறுக்கிக் கொண்டிருந்த கைம்பெண்ணைக் கண்டார். இத்தகைய நிலையில் நொந்து போயிருந்த பெண்ணை வாழ்விக்க வழி செய்கிறார். அத்துடன் இறந்து போன அப்பெண்ணின் மகனை கடவுளிடம் மன்றாடி உயிர்பெறச் செய்தார். அதனால் உம் வாயிலிருந்து வரும் கடவுளின் வார்த்தைகள் உண்மையானவை என்று அறிந்து கொள்ளச் செய்தது (1 அர. 17:24).

இயேசுகிறிஸ்து பிறரை வாழ்விக்க சிலுவையை ஏற்றார். அவரது வார்த்தையில் கனிவு வெளிப்பட்டது, அன்பு வெளிப்பட்டது. வாழ்வு வழங்கியது. இதை நம் வாழ்கையின் வழியாக பிறருக்கு கொடுக்க சிலுவை அழைக்கிறது.

ஒருவர் பிறர் மீது இரக்கம் மட்டும் காட்டிவிட்டு, செயலாற்றவராயிருக்குமாயின் அது வெறும் இரக்கமாகவே நின்றுவிடும். பிறரோடு இணைந்து பாடுபடுவது அல்லது செயல்படுவது சரியான இரக்கமாயிருக்கும். எனவே, இந்த தவக்காலங்களில் சிலுவை தரும் அழைப்பை ஏற்று பிறரை வாழ்விக்க நம்மை ஒப்புக்கொடுத்து இறை ஆசி பெறுவோம்.

***2. பிறருக்காக தியாகம் பண்ண அழைப்பு :*** (பிலி. 2:6-8)

பிறருக்காக தியாகம் செய்திட சிலுவை நமக்கு அழைப்பு தருகின்றது.

இயேசு கடவுள் வடிவில் விளங்கினார். ஆனால் கடவுளுக்கு இணையாக இருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்காமல் தம்மை வெறுமையாக்கி, அடிமையின் வடிவை ஏற்று சிலுவைச் சாவை ஏற்று தன்னை தியாகம் செய்தார் (பிலி. 2:6-8).

பேதுரு தனது முதலாம் நிருபத்தில் குறிப்பிடும் போது சிலுவையின் மீது, தம் உடலில், நம் பாவங்களை அவரே சுமந்தார். நம் பாவங்களுக்கு இறந்து, நீதிக்காக வாழச் சிலுவையை ஏற்றார் என்று குறிப்பிடுகிறார் (1 பேதுரு 2:24).

இயேசுகிறிஸ்து நமக்காக சாபமாகி, நம்மை சாபத்தினின்று மீட்டுக் கொண்டார் (கலா. 3:13). அவர் செல்வராயிருந்தும் நமக்காக ஏழையானார் (2 கொரி. 8:9). நாம் பாவிகளாய் இருந்த போதே கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார் (உரோ. 5:8). இவையெல்லாம் இறைவன் தன்னை தியாகமாக்கினார் என்பதை விளக்குகின்றன. எனவே, அவரால் வாழ்வு பெற்ற நாம் பிறர் வாழ்வு பெற தியாகமாக வேண்டும் என்று ஆண்டவர் விரும்புகின்றார். இத்தகைய நிலையில் வாழ்ந்து இந்த தவக்காலங்களில் இறை ஆசியினைப் பெற்றுக்கொள்ள முற்படுவோம்.

***3. பிறருக்காக தன்னலம் துறக்க அழைப்பு :*** (மாற். 8:34)

தன்னலம் துறக்கவேண்டும் என்ற அழைப்பைச் சிலுவை நமக்குத் தருகிறது. இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுவோர் தன்னலம் துறந்தவர்களாக வாழ வேண்டமெனக் கூறுகின்றார். தன்னலம் நம் வாழ்வில் இறை ஆசிகளை இழக்கச் செய்கிறது.

லூக். 18:18-23 -ல் தலைவர் ஒருவர் இயேசுகிறிஸ்துவிடம் வந்து நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்ள நான் என்னசெய்ய வேண்டும்? என்றுக் கேட்டார். அவரிடம், "கட்டளைகளை கடைபிடியும்" என்றுச் சொன்னார் இயேசு. மறுமொழியாக அம்மனிதர், "நான் இளமையாயிருந்தே இதை கடைபிடித்து வருகிறேன்" என்றுச் சொல்ல, "இன்னும் உம்மிடம் ஒரு குறை உண்டு, உமக்குள்ள யாவற்றையும் விற்று ஏழைகளுக்கு கொடும்" என்றுச் சொன்னார் இயேசுக்கிறிஸ்து. அப்படியானால் தன்னலம் துறந்து பிறர் நலம் பேண வேண்டும் என்று தெளிவுபடுத்துகின்றார்.

இன்று நம் வாழ்வில் எவ்விதமாக வாழ்கின்றோம் என்பதை தியானிக்க அழைக்கப்படுகின்றோம். 'நான்', 'நீ', 'என்', 'என்னுடைய' என்ற தன்னலம் மாறி, 'நாம்' என்ற நிலை மாற வேண்டும். தொடக்க காலத் திருச்சபையில் இப்படிப்பட்ட தன்னலம் அற்ற நிலை காணப்பட்டது. மகிழ்ச்சி ஏற்பட்டது. எனவே நாம் பக்தனைப் போல,

"சுயம் என்னில் சாம்பலாய் மாற
சுத்தாவியே என்னில் தாரும்
ஜெயம் பெற்று மாமிசம் மாய
தேவா அருள் செய்குவீர்"

என்று வேண்டுதல் ஏறெடுத்து முன்னேறிச் செல்வோம்.

கிறிஸ்தேசுவின் மனநிலையோடு இத்தவக் காலத்தில் சிலுவை பிறர்பொருட்டு துன்புற நமக்கு அழைப்புத் தருகிறது. எனவே, நாம் பிறரை வாழ்விக்கும் அழைப்பைப் பெற்று, தியாகம் செய்ய முன் வந்து, தன்னலம் துறந்து முன்னேறிச் செல்வோம். அதன் வழியாக இந்த தவக்காலத்தின் ஆசிகளைப் பெற்று மகிழ்வோம்.

அருள்திரு. R. **டேவிட் ஜெப சிங்**

10-03-2019



# மீட்புப் பணியில் மகளிர்
## WOMEN IN SALVIFIC WORK

நீதி. 5:1-7 தி.ப. 18:24-28
திபா. 79 லூக். 23:26-31

**"இயேசு அப்பெண்கள் பக்கம் திரும்பி எருசலேம் மகளிரே, நீங்கள் எனக்காக அழ வேண்டாம் உங்களுக்காகவும் உங்கள் மக்களுக்காகவும் அழுங்கள்."** லூக். 23:28

### உலகப் பெண்கள்தினம் வரலாற்றுப் பின்னணியம்

ஒவ்வொரு ஆண்டும் நம் பேராயம் மார்ச் மாதம் 8-ம் தியதிக்குப் பின்வரும் ஓய்வுநாளை அகில உலக பெண்கள் தினமாக நினைவு கூருகின்றது.

1857 -ஆம் ஆண்டு அமெரிக்காவில் தொழிற்சாலைகளில் வேலை செய்த பெண்கள் போராட்டத்தில் குதித்தனர். ஆண்களைவிடப் பெண்கள் அதிகமான மணிநேரம் (16 மணிநேரம்) வேலை செய்தனர். அதைப் 10 மணி நேரமாகக் குறைக்க வேண்டும் என்றும், ஆண்களைப் போன்று ஓட்டுரிமை வேண்டும், ஆண்களைப் போன்று சம கூலி வேண்டும், தொழிற்சாலைகளில் பெண்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்படுவதை தடை செய்ய வேண்டுமென்றும் போராட்டம் நடத்தினர். மறுபடியும் 1908- ஆம் ஆண்டு நியூயார்க் நகரில் உள்ள நூற்பாலைகளில் நடைபெற்றது. ஊர்வலமும் நடத்தினர். அன்று ஏராளமானப் பெண்கள் துப்பாக்கிச் சூட்டினால் கொலை செய்யப்பட்டனர். அன்று உயிரிழந்த பெண்களின் தியாகத்தை நினைவுகூரும் வண்ணமாக மார்ச் மாதம் 8-ம் தினத்தை பெண்கள் தினமாக நினைவுகூர வேண்டுமென்று 1910-ஆம் "கிளாராசிட்சன்" என்ற பெண்மணி அழைப்பு விடுத்து முறைப்படுத்தினார்கள். ஆகவே 1911 -ம் ஆண்டு மார்ச் மாதம் 8-ம் தியதி முதல் உலக பெண்கள் தினம் நினைவுகூரப்படுகிறது.

இன்று பெண்ணின் நிலை உயர்ந்திருக்கிறது என்று வெளிப்படையாகத் தோன்றினாலும், பாலினப் பாகுபாடு காரணமாக பெண்ணின் நிலை மிக மோசமாக உள்ளது. ஆண்களைவிட பெண்ணின் விகிதசாரம் குறைவாகவே உள்ளது. கருவறை முதல் கல்லறைவரை பெண் துன்பப்படுத்தப்படுகிறாள். வரதட்சணைக்கொடுமை, பாலியல் பலாத்காரம், ஒரு தலைக்காதல், திராவகம் ஊற்றி கொலைசெய்தல், பெண்ணின் அழகை

அழித்தல், ஆண் பிள்ளைதான் வேண்டுமென்பதற்காக கருவிலே கொலை செய்தல், பெண்ணின் உழைப்பை அவர்களே பயன்படுத்த முடியாத, நிலை ஆக பெண் பலவித துன்பங்களுக்கு உட்படுத்தபடுகிறாள். பெண்கள் சாதனையாளர்களாக இருந்தாலும் சவால்களை அனுதினமும் சந்திக்கிறவளாக இருக்கிறாள். ஆகவே பெண்கள் மீட்பு பணி செய்கிறவர்களாக இருந்திருக்கிறார்கள், இருந்து கொண்டும் இருக்கிறார்கள்.

இயேசு கிறிஸ்துவின் காலத்தில் பெண்கள் அடிமைகளாக, ஒடுக்கப்பட்டவர்களாய், ஓரங்கட்டப்பட்டவளாகத்தான் இருந்தார்கள். ஒரு யூதன் ஜெபிக்கும் போது நான் ஒரு பெண்ணாக, நாயாக பிறக்காததால் நன்றி என்று ஜெபிப்பானாம். ஒரு பெண் திருச்சட்டத்தை (தோராவை) தொட்டால் அதைத் தீக்கிரையாக்குவார்கள். சொந்தக் கணவனோடு பெண் வெளியே செல்லக்கூடாது. பெண் தீட்டானவளாகக் கருதப்பட்டாள். இந்த சூழலில் லூக்கா நற்செய்தியாளர் பெண்களை மிகுந்த ஆற்றல் மிகு பெண்களாக சுட்டிக்காட்டுகின்றார். மரியாளின் விடுதலைப்பாடல் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைப்பாடல்.

## ***1. இயேசுவின் கால பெண்கள் சமூகக்கட்டுப்பாட்டை உடைத்தெறிந்த வீரப்பெண்கள்*** :

இயேசுவின் பணியோடு தங்களை ஒன்றிணைத்தனர் லூக். 8:1-3. சீடர்களின் வரிசையில், பெண்சீடர்களாக கருதப்படுகின்றனர். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினால் பொல்லாத ஆவிகளினின்றும், நோய்களினின்றும் குணமானப் பெண்கள், ஏழுபேய்கள் நீங்கப்பெற்ற மகதலா மரியாள், ஏரோதின் மாளிகை மேற்பார்வையாளர் கூசாவின் மனைவி யோகன்னாள், சூசன்னாள் இன்னும் பலப் பெண்களும் இறைப்பணியை ஆண்டவரோடு செய்து கொண்டிருந்தார்கள். இயேசுவை இழுத்துச் சென்று தலைமைக் குருவின் வீட்டுக்கு கொண்டு போனார்கள். வெளியே உள் முற்றத்தின் நடுவில் நெருப்பு மூட்டி அதைச்சுற்றி அவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களோடு பேதுருவும் இருந்தான். அப்போது நெருப்பின் அருகில் இருந்த பேதுருவை உற்றுப் பார்த்து இவனும் அவனோடு இருந்தவன் என்று கூறுகின்றான். ஆனால் பேதுருவோ அவரை எனக்கு தெரியாது என்று மறுதலித்தான். தொடர்ந்து இருமுறை இயேசுவை மறுதலித்தான். ஆனால் இயேசுவால் விடுதலைப் பெற்ற வீரப்பெண்கள், இயேசுவோடு பணிவிடையில் இணைத்து கொண்ட பெண்கள் சிலுவையின் கடைசி மட்டும் இயேசுவை பின்தொடர்ந்தனர்.

### *2. வீரத்தை வெளிப்படுத்திய பெண்கள்* : (லூக். 23:27)

இயேசுவை சிலுவையில் அறைய கெண்டு செல்லும்போது அரசிற்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் அஞ்சாமல் ஆண்டவருக்காக மாரடித்துப் புலம்பி ஒப்பாரிவைத்து பெண்கள் அழுது கொண்டு சென்றனர். இயேசுவோடு தங்களை ஒன்றித்துக் கொண்டனர். இயேசுவாலே தான் வீட்டிற்குள் அடைபட்டு முடங்கி இருந்த நாங்கள் விடுதலை பெற்றோம் என்று தங்கள் நன்றியை வெளிப்படுத்தினர். பெண்கள் எப்பொழுதும் வீரம் உடையவர்களாக, வீரச்செயல்கள் செய்யவேண்டும் என்ற துணிச்சல் உடையவர்களாக இருக்கவேண்டும். பெண்களுக்கு இளைக்கப்படும் கொடுமைகளுக்கு எதிராக குரல் கொடுக்கவேண்டும். இஸ்ரவேல் மக்கள் பாவம் செய்து ஆட்சோரை ஆண்ட யாபினிடம் துன்பப்பட்டுக் கொண்டிருந்தனர். அப்போது ஆண்டவர் இறைவாக்கினரும், இலப்பிதோத்தின் மனைவியுமான தெபேராவை எழுப்பினர். நீதித் தலைவியாகிய தெபோராள் எழும்புமளவும் இஸ்ரவேலின் சிற்றூர்கள் வாழ்விழந்து கிடந்தன. தெபோராள் பாராக்கை உற்சாகப்படுத்தி போருக்கு அனுப்பினாள். ஆண்டவர் சிசெராவையும், அவனுடைய தேர்கள் அனைத்தையும், படை முழுவதையும் வாள் முனையில் பாராக்கின் முன்னால் சிதறடித்தார் (நீதி. 4:15). யாவேவின் கூடாரத்திற்குள் சிசெரா ஓடினான். அங்கே சிசெராவை அழைத்துச் சென்று அவனை போர்வையால் மூடி- தாகமாயிருக்கிறேன் என்ற சிசெராவுக்கு பாலைக் கொடுத்தாள். அவன் தூங்கினான். எபேரின் மனைவி யாவேல் கத்தியால் அவன் நெற்றிப் பொட்டில் மூளை தரையில் இறங்கும் வரை அடிக்க அவன் மடிந்துபோனான். இவ்வாறு இஸ்ரவேலுக்கு வெற்றியை விடுதலை வாழ்வை பெண்கள் தேடித்தந்தனர்.

### *3. வீரமங்கையருக்கு அருள்நாதர் எதிர்கால நிகழ்வுகளைக் கற்றுக் கொடுத்தார்* : (லூக். 23:28-31)

எருசலேம் மகளிரே எனக்காக அழவேண்டாம். மாறாக உங்களுக்காகவும், உங்கள் மக்களுக்காகவும் அழுங்கள். எருசலேமின் அழிவை ஆண்டவர் கூறுகின்றார். சுமர் 40 ஆண்டுகளுக்கு பிறகு எருசலேம் அழிக்கப்படும். அன்று மலடிகள் பேறுபெற்றோர். பிள்ளைகள் பெறாதோரும், பால்கொடாதோரும், பேறுபெற்றோர் என்றும் சொல்வார்கள்.

அந்நாளில் அவர்கள் மலைகளைப் பார்த்து எங்கள் மேல் விழுங்கள், குன்றுகளைப் பார்த்து எங்களை மூடிக் கொள்ளுங்கள் என்பர் எனவும் சொல்லுவர். பச்சைமரமாகிய எனக்கு இப்படி செய்தால் பட்டமரத்திற்கு என்னத்தான் செய்யமாட்டார்கள் என்று எருசலேம்

அழிவை அவர்களுக்கு கூறினார். எருசலேமின் அழிவைக் குறித்து ஆண்டவர் பெண்களிடம் பகிர்ந்து கொண்டார். மட்டுமன்று பெண்கள் இயேசுவின் சிலுவைப்பாடுகள், அடக்கம், உயிர்த்தெழுதல் அனைத்திலும் பங்கு பெற்று உயிர்த்தெழுதலின் நற்செய்தியை நவில்கின்ற பாக்கியத்தையும் பெற்றனர்.

இன்றும் உலகிலேயே என்ன அடக்குமுறைகள் வந்தாலும் அடிபணியாப் பெண்கள் இருக்கின்றனர்.

பாகிஸ்தானின் வடமேற்கு எல்லையில் லிரினிஸ்தான் பகுதியில் வாழ்ந்த சிறுமி தான் மலாலா யூசுப்ஸாய். இவள் பெண் கல்விக்குக் குரல் கொடுத்தாள்.

பெண்கள் கல்வியை எதிர்த்து பள்ளிக்கூடங்களைத் தகர்த்த தாலிபான்களுக்கு எதிராக குரல் கொடுத்துச் செயல்பட்டதால் குண்டடிபட்டு, பின்னர் குணமாகி, பெண்கள் கல்விக்காக இன்றும் செயல்பட்டு வருகிறாள். ஆகவே உயர்ந்த பரிசான நோபல் பரிசினை மலாலா பெற்றார். நாமும் வீரப் பெண்களாக இயேசுவின் பாதச்சுவட்டை பின்பற்றி சமூகத்தில் புரையோடிப்போன தீமைகளுக்கு எதிராக குரல் கொடுப்போம். இறையாசி பெறுவோம்.

அருள்திருமதி. **சார்லட் சௌந்தரராஜன்**

10-03-2019

தவக்கால முதலாம் ஞாயிறு &
உயிர்ப்புக்கு முன் வரும் ஆறாம் ஞாயிறு

# ஒதுக்கப்பட்டோரோடும் ஓரம்கட்டப்பட்டோரோடும் இருத்தல்

## BEING WITH OUTCAST AND MARGINALIZED

எஸ்தர் 4:1-17 திப. 15. 12-21
திபா. 43 மாற். 1:40-45

**"நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும்"** (மாற்.1:40).

ஒதுக்கப்பட்டோர் அல்லது ஓரம்கட்டப்பட்டோர் எனும் போது பொதுவாக சக மக்களால் மனிதராக ஏற்றுக் கொள்ளும் தன்மையைக் குறிப்பிடும் சொல்லாக அமைகிறது. அடிமைகள், ஆதரவற்றோர், குழந்தைகள், பெண்கள், ஏழைகள், பெலவீனர்கள் சாதீய அடிப்படையில், மொழி அடிப்படையில், நிற வேறுபாடு சார்ந்து ஏற்றுக் கொள்ளபடாதோரையும் ஒதுக்கப்பட்டோராக கொள்ளப்பட்டனர். பொதுவாக கல்வியில் பின்தங்கிய சமுதாயமே அதிகமாக மனித சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கியது. கல்வியில் வளரும் போது ஏற்றத்தாழ்வுகள் களையப்படுகிறது என்பது ஓர் உண்மையாகும்.

கன்னியாகுமரி மாவட்டம் தென் திருவிதாங்கூர் அரசின் கட்டுப்பாட்டில் இருந்த காலகட்டத்தில் மறைப்பணியாளர்கள் மேலை நாடுகளிலிருந்து இந்தியா வந்தனர். அவர்கள் தென் திருவிதாங்கூரின் அடிமை அவல நிலையைக் கண்ணுற்றனர். சாதிய அடிமைத்தனம் தலைவிரித்தாடியது. நாயர்கள் அரச பதவிகளிலும், நம்பூதிரிகள் நில உடமையாளர்களாகவும், உடல் உழைப்பு செய்கின்ற ஈழவர்கள், நாடார்கள்அடிமைகளாகவும் சமுதாயத்தில் ஓரங்கட்டப்பட்டவர்களாகவும் வைக்கப்பட்டனர். பெண்கள் மார்பை மறைக்கத் தடை விதிக்கப்பட்டிருந்தது. 17 விதமான வரிவிதிப்பு செய்யப்பட்டு ஒதுக்கப்பட்டோராகக் காணப்பட்டனர். இந்நிலையில் ரிங்கல் தௌபே , மீட் ஐயர் போன்ற வெளிநாட்டு மறைப்பணியாளர்கள் ஒடுக்கப்பட்டு ஓரங்கட்டப்பட்ட மக்களோடு தங்களை இணைத்துக் கொண்டு போராடினார்கள். இதன் விளைவாகத் தான் 1859-ல் திருவிதாங்கூர் அரசால், அனைத்து மகளிரும் மேலாடை அணியலாம் என்ற ஆணை பிறப்பிக்கப்பட்டது. 1865-ஆம் திரு ஆயில்யம் அரசால் அனுமதியும் அறிவிக்கப்பட்டது, ஆக இறை இயேசுவின் திருப்பணியின் தொடர்ச்சி

மறைத்தொண்டர்களால் தொடர்ந்து பொருளாதார விடுதலை, ஆடை அணிவதில் விடுதலை, சமுதாய அடிமைத்தனத்தில் விடுதலை, சாதிய ஒழுங்குதலில் விடுதலை என விடுதலை வாழ்வைத் தந்தது.

திருமறை சார்ந்து ஒடுக்கப்பட்டோர் வாழ்வில் நமது பங்களிப்பு என்ன என்று ஆய்வோம்.

***1. ஒதுக்கப்பட்டோரை அடையாளம் காணுங்கள் :*** (மத். 15:12,19)

சமுதாயத்தால், சாதியால், சமயத்தால் ஒடுக்கப்பட்டோரை அடையாளம் கண்டு கொள்ளவேண்டும். சபையிலும் சமூகத்திலும் அவர்கள் அடையாளம் மறைக்கப்பட்டிருக்கும். அவர்களுக்கு தரப்பட வேண்டிய மரியாதை மறுக்கப்பட்டிருக்கும். அவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய முக்கியத்துவம் மறக்கப்பட்டிருக்கும். எனவே சபையிலும் சமூகத்திலும் இவர்களை அடையாளம் கண்டு கொள்ளவேண்டும்.

சபையில் மக்கள் ஒடுக்கப்படுவதைக் கண்ணுற்ற மார்ட்டின் லுத்தர் 16-ம் நூற்றாண்டு சபை சீர்திருத்தத்தைக் கொண்டுவந்தார். 95 நியாயங்கள் விட்டன் பர்க் ஆலயக் கதவில் ஆணி அடித்து வைக்கப்பட்டது. சீர்திருத்தத் திருச்சபை உருவானது. “என் திருப்பெயரைத் தாங்கியிருக்கும் வேற்று இனத்தார் அனைவரும் ஆண்டவரைத் தேடுவர்” (தி.ப. 15:17).

அனைத்து இன மக்களும் ஆண்டவர் ஒருவரே என்னும் செய்தியைக் கூறுவதோடு 19-ம் வசனத்தில் கூறுகிறார்.

“கடவுளிடம் திரும்பும் பிற இனத்தவருக்கு
நாம் தொல்லைக் கொடுக்கலாகது.”

என சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டோரை அடையாளம் காண வேண்டும். அவர்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் எனும் செய்தி வெளிப்படத்தப்படுகிறது.

***2. ஒதுக்கப்பட்டோரோடு அடையாளப் படுத்திக் கொள்ளுங்கள் :*** (எஸ். 4:15,16)

ஆகாஸ்வேரது ஆட்சியில் சூசான் அரண்மனையில் ஆமானின் சூழ்ச்சியால் யூதர்களை கொலைசெய்ய வேண்டுமென அரசு ஆணை பிறப்பிக்கபட்டது. இதை அறிந்த மொர்தேகாய் தனக்கு கிடைத்த அரண்மனைப் பதவியை பெரிதெனக் கொள்ளாமல் சாக்கு உடை அணிந்து சாம்பலில் புரண்டு அழுதான். இதை எஸ்தர் அரசிக்கும் அறிவித்து, “யார் அறிவார்? ஒருவேளை இது போன்ற நேரத்திற்காகவே நீ அரசியாகி உள்ளாய் போலும்!” என்றார்.

எஸ்தர் அரசி தன்னுடைய அரசி என்னும் மேன்மையைப் பொருட்படுத்தவில்லை. “எனக்காக மூன்று நாள் உண்ணாமலும் குடியாமலும் நோன்பிருங்கள் சட்டத்திற்கு புறம்பே எனினும் நான் மன்னரிடம் செல்வேன் அழிவதாயின் அழிகிறேன்” என தன் ஜனங்களோடு தன்னை அடையாளப்படுத்தி கொள்ளவும் அழிவே தான் முடிவு என்றாலும் அந்த அழிவையும் தன்னிலே ஏற்றுக் கொள்ள தயங்காதவராய் காணப்பட்டார்.

நமது சமுதாயத்தில் நம்மைப் போன்ற சக மனிதர்கள் துன்பப்படும் போது, ஒதுக்கப்படும் போது, ஓரம்கட்டப்படும் போது நாம் ஒதுங்கி வேடிக்கைப் பார்ப்பவராக உள்ளோமா இல்லை எஸ்தரின் புத்தகம் நமக்குக் காட்டிய நற்போதனையைபோல நாம் அழிவை, இழப்பை, துன்பத்தை சந்தித்தாலும் அவர்களோடும் நம்மை அடையாளப்படுத்திக் கொள்வோமா. சிந்திப்போம்.

### *3. ஒதுக்கப்பட்டோரை அரவணைத்து வாழுங்கள் :*

(மாற். 1:41,42)

இயேசுக் கிறிஸ்து தமது பணியில் ஒதுக்கப்பட்டோரோடு தன்னை இணைத்துக் கொண்டார். அவர்கள் அரவணைத்து வாழ்ந்தார். ஆசி வழங்கினார் என நாம் அறிவோம்.

சிறுவர்கள் ஒதுக்கப்படும் போது சீடர்கள் அதட்டும் போது இயேசுக் கிறிஸ்து “சிறார்களை என்னிடம் வரவிடுங்கள் அவர்களை தடுக்காதீர்கள். ஏனெனில் விண்ணரசு இத்தகையோருக்கே உரியது.” (மாற். 19:14) என்று கூறி அவர்களுக்கு ஆசிவழங்கினார் எனகண்டு கொள்ளமுடிகிறது.

மாற்கு நற்செய்தி நூலில் தொழுநோயால் பாதிக்கப்பட்டு இருந்தோரை குணமடையச் செய்யும் நிகழ்வு காணமுடிகிறது. தொழுநோயுற்றோர் சமூகத்தால் தீட்டு என்று ஓரம் கட்டப்பட்டோர், அவர்கள் மக்கள் வாழும் இடத்திற்கு புறம்பாக்கப்பட்டவர்கள் (லேவி. 13:11,12). லேவி. 13:45-ல் தொழுநோயாளி தன் தலையை மூடாமல் தீட்டு என்று சத்தமிட வேண்டும் என்றும் சொல்லப்படுகிறது. ஒடுக்கப்பட்டோராய் ஓரம்கட்டப்பட்டோராய் வாழ்ந்த தொழுநோயாளிகள் இயேசுக்க கிறிஸ்துவிடம் வந்து முழங்கால்படியிட்டு “நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும்” (மாற். 1:140) என விண்ணப்பிக்கின்றான்.

இயேசுக் கிறிஸ்துவோ வார்த்தையினால் சுகப்படுத்தியிருக்கலாம். ஆனால் அவன்மேல் பரிவு கொண்ட இயேசு தமது கையை நீட்டி தொழுநோயாளியைத் தொட்டு "நான் விரும்புகிறேன் உமது தொழுநோய் நீங்குக" என்றார். உடனே தொழுநோய் நீங்கி நலமடைந்தார். தொழுநோய் தொற்றுநோய் என்றிருந்த காலத்திலும் அவர்களை அரவணைத்து வாழ்ந்த இயேசுகிறிஸ்துவின் திருப்பணி நமக்கு முன்மாதிரி.

வெள்ளையர் வழிபடும் தொழுகைக்கூடத்தில் வழிபட விரும்பிய கருப்பர் வெளியே விரட்டப்பட்டார். அழுது கொண்டிருந்த அவர் அருகில் நின்ற ஒருவர் கருப்பரைத் தேற்றினார். நீர் யார்? என்று கேட்ட கருப்பருக்கு தன் கையைக் காண்பித்தபோது தான் இயேசுநாதரே வெளியே என்னோடு நின்று எனக்கு ஆறுதல் தருகின்றார் என்பதைப் புரிந்து கொண்டார். சமூக வாழ்வில் ஒதுக்கப்பட்டோரோடும் ஓரம்கட்டப்பட்டோரேடும் தம்மை இணைத்து இயேசு நிற்கிறார் என்னும் சிந்தையைப் புரிந்து செயல்படுவோம். இறைச்சித்தம் செய்து நிறைவேற்ற ஆண்டவர் துணைசெய்வாராக. ஆமென்.

அருள்திரு. N. **ஜெசின்**

17-03-2019

தவக்கால இரண்டாம் ஞாயிறு &
உயிர்ப்புக்கு முன் வரும் ஐந்தாம் ஞாயிறு

# பாவச் சுமையிலிருந்து விடுவித்தல்

## RELEASING FROM THE BURDEN OF SIN

| | |
|---|---|
| 2 சாமு. 12:1-13 | திப. 8:9-25 |
| தி.பா. 32 | மாற். 2:1-12 |

**இயேசு அவர்களின் நம்பிக்கையை கண்டு, முடக்குவாதமுற்றவரிடம், "மகனே, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன" என்றார்.** (மாற்.2:5).

பாவம் என்பது எபிரேய மொழியில் பொல்லாதவர்களையும் அவர்களின் பொல்லாத செயல்களையும் குறிக்கும். இது அரசியல் குற்றமாகவோ, சடங்காசாரத்தை மீறிய தவறாகவோ, ஒழுக்கத்திலிருந்து மாறுபட்ட பொல்லாங்காகவோ இருக்கலாம். ஆதாம் ஏவாள் கடவுள் கொடுத்த கட்டளையை மீறி தங்களுடைய விருப்பத்தின்படி வாழ்ந்தார்கள். எல்லோரும் பாவம் செய்து கடவுளின் மாட்சியை இழந்தனர். புதிய ஏற்பாட்டில் இயேசுவின் போதனையிலும் மக்கள் எல்லோரும் பாவிகள் என்னும் ஒரேத் தண்டனைத் தீர்ப்புக்குள்ளாயினர். அன்பானப் பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளை கொடுக்கிற போதிலும் அவர்கள் பொல்லாதவர்கள் என அழைக்கப்பட்டனர் (மத். 7:11). நீதியரையல்ல பாவிகளையே அழைக்க வந்தேன் என்று பரிசேயரைப் பார்த்துச் சொல்லி வசையுரையாக பேசினார் (மாற். 2:17). இன்றைய திருமறைப்பாடங்களின் அடிப்படையில் பாவச்சுமையாயிருந்து விடுதலை என்பதை குறித்த தியானிப்போம்.

### *1. நெறிகெட்ட பாவச்சுமையிலிருந்து விடுதலை* :

(2 சாமு. 12:1-15)

இன்றைய முதலாம் திருமறைப் பாடத்தில் அரசனாகிய தாவீது உரியாவைக் கொன்று, அவரது மனைவியை தனதாக்கிக் கொண்டார். இந்த தீய செயலை நாத்தான் இறைவாக்கினர் மூலம் தாவீதுக்கு கடவுள் உணர்த்துகின்றார். நாத்தான் நேரடியாக வந்து மறைமுகமாக ஓர் உவமையைச் சொல்லி தாவீதின் இழிச் செயலை உணர்த்துகின்றார். ஒரு நகரில் இரு மனிதர் இருந்தனர் என ஆட்டுக்குட்டி உவமையை நயம் பட எடுத்துரைத்து அதின் வாயிலாக உண்மையை உணரச் செய்கிறார். இந்த செய்தி தாவீதுக்குள்ளாக பாவ உணர்வை ஏற்படுத்திய நிலையில்

மன்னிப்புக்காக வேண்டுகிறார். பாவத்தின் கொடூரத்தையும் அதன் விளைவையும் நாத்தான் தெளிவுபடுத்துகிறார். இச்செய்தியால் உடைவுபட்ட உள்ளத்தோடு முறையிட்ட முறையிடல்கள் கேட்கப்பட்டு மன்னிப்பை இறையவரில் பெற்றுக் கொள்கிறார்.

புதிய ஏற்பாட்டுப் புத்தகத்தில் மக்களைப் பிழிந்து வரித்தண்டுவோருக்கு தலைவராயிருந்த சகேயு எவர் மீதாவது பொய் குற்றம் சுமத்தி எதையாவது கவர்ந்திருந்தால் நான் அதை நான்கு மடங்காக கொடுத்துவிடுகிறேன் என்று இயேசுவிடம் கூறினார். இயேசு அவனை நோக்கி இன்று இந்த வீட்டிற்கு மீட்பு (விடுதலை) உண்டாயிற்று என்றார் (லூக்.19:1-10). பாவ அறிக்கையே பரம மகிழ்வை கொண்டு வருகிறது என்பதே உணர்த்தப்படும் உண்மையாகும். ஒழுக்கக் கேடான செயல்களால் தங்களுக்கு தாங்களே கேடுண்டாக்கும் இன்றைய சமூகத்தில் வாழ்வின் நெறியை நாத்தான் இறைவாக்கினரைப் போல் தெளிவாக மக்களுக்கு விளக்கிச் சொல்லி நல்ல இறைவாக்கினராக இறைபணியாளர்களாக வாழுவோம்.

### *2. பேராசை எனும் பாவச்சுமையிலிருந்து விடுதலை* :

(திப. 8:4-25)

இரண்டாம் விவிலியப் பகுதியில் தொடக்கத் திருச்சபை மக்கள் தாங்கள் சிதறிச்சென்ற இடமெல்லாம் நற்செய்தியை அறிவித்துவந்தனர். பலரைப் பிடித்திருந்த தீய ஆவிகள் அவர்களிடமிருந்து உரத்தக் குரலுடன் கூச்சலிட்டுக் கொண்டே வெளியேறின. முடக்குவாதமுற்றோர், மாற்றுத்திறனாளிகள் பலரும் குணம் பெற்றனர். பலர் பிலிப்பு சொன்னவற்றைக் கேட்டும் அவர் செய்த அரும் அடையாளங்களை கண்டும் வந்த திரளான மக்கள் ஒருமனதோடு அவருக்கு செவிசாய்த்தனர். அதில் ஒருவர்தான் மாயவித்தைக்காரனாகிய (மந்திரவாதி, குறிசொல்லுபவர்) சீமோன் என்பவர் ஆவார். அவன் தன் மாயவித்தைகளால் சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவரையும் நெடுங்காலமாக மலைப்புக்குள்ளாக்கியதால் அவர்கள் அவனுக்கு செவிசாய்த்து வந்தார்கள். ஆயினும் இறையாட்சியையும் இயேசுக் கிறிஸ்துவின் திருப்பெயரையும் பற்றிய நற்செய்தியை பிலிப்பு அறிவித்தபோது பல ஆண்களும் பெண்களும் நம்பிக்கை கொண்டு திருமுழுக்கு பெற்ற போது மாயவித்தைக்காரனாகிய சீமோனும் திருமுழுக்கு பெற்று பிலிப்புடன் கூடவே இருந்தான். அவர் செய்த அரும் அடையாளங்களையும் வல்ல செயல்களையும் கண்டு மலைத்து நின்றான்.

திருத்தூதர்கள் பேதுரு, யோவான், பிலிப்பு போன்றோர் தங்கள் கைகளை அவர்கள் மீது வைக்கவே அவர்கள் தூய ஆவியை பெற்றார்கள். இதைக் கண்ட மாயவித்தைக்காரனாகிய ஆரம்ப கிறிஸ்தவராகிய சீமோனுக்கு பேராசை ஏற்பட்டது. தானும் யார் மீது கைகளை வைப்பேனோ அவரும் தூயாவியை பெற்றுக் கொள்ளும்படி எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுங்கள் என்று கூறி அதற்காக பணம் கொடுக்க முன் வந்தான். இது அவனது பேராசை. அதற்காக அவன் ஏராளம் பணம் செலவழிக்கவும் ஆயத்தமாயிருந்தான். அப்போது பேதுரு அவனிடம் கடவுளது கொடையை பணம் கொடுத்து வாங்க எண்ணியதால் நீயும் உன் பணத்தோடு நாசமாய் போ. உன் உள்ளம் கடவுளின் முன் நேர்மையற்றதாய் இருப்பதால் இப்போதே உனது தீய போக்கையும் பேராசையும் விட்டு நீ மனம் மாறி ஆண்டவரிடம் மன்றாடு. ஒருவேளை உன் உள்ளத்தில் எழுந்த எண்ணம் மன்னிக்கப்படலாம். மக்களை ஏமாற்றி தன் வயப்படுத்தி செழிப்புடன் வாழும் நவீன கால மாயவித்தைகாரர்களின் வளமான போதனைகளுக்கு சாய்ந்துள்ள மக்களை உண்மையான இறைபோதனையில் திருமறை வழி நின்று நடத்துவதே சிறப்பானது. பேராசையில் வாழ்வினை இழந்து விடாமல் இறைகிருபையில் பலப்பட பாவசுமைகளை முற்றிலும் அகற்றி பரமனிடம் ஒப்படைப்போம்.

## *3. அவ நம்பிக்கை எனும் பாவச்சுமையிலிருந்து விடுதலை* : (மாற். 2:1-12)

மூன்றாம் திருமறைப்பாடத்தில் முடக்குவாதமுற்றவரை தூக்கி வந்த நான்கு நண்பர்களின் நம்பிக்கையைக் கண்டு இயேசு அவரைக் குணமாக்கினார். அந்த நான்கு பேரும் புகழடைய விரும்பாமல் தங்களை மறைத்துக் கொண்டு முடக்குவாதமுற்றவரை மட்டும் கூரை வழியே இறக்கினர். இங்கே இயேசு உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டன என்றார். சில கூட்டங்களில் நோய் குணமாகவில்லையெனில் எனக்கு நம்பிக்கை இல்லையென்று சொல்லி விடுவார்கள். நம்முடைய வாழ்வில் அவநம்பிக்கை, மூடநம்பிக்கை, குருட்டுநம்பிக்கை இவைகளைத் தவிர்த்து இறைநம்பிக்கையோடு வாழ அழைக்கப்படுகிறோம். மனிதரில் நம்பிக்கை வைப்போரும் வலுவற்ற மனிதரில் தம் வலிமையை காண்போரும் சபிக்கப்படுவர் (எரே. 17:5).

தென் கொரியாவின் அதிபராக விளங்கியவர் Kim Dae-Jung. 2000-ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர். திருமுழுக்கின் போது அவருக்கு கொடுக்கப்பட்ட பெயர் தாமஸ் மூர் என்பதாகும். அதிபராகும்

முன்பு தன் நாட்டில் அமைதியை ஏற்படுத்தும் பொருட்டு கடுமையாக உழைத்தவர். பலமுறை சிறைச்சாலைக்கு சென்ற அனுபவங்களும் அவருக்கு உண்டு.

தன்னைப் பற்றியக் குறிப்பில் அவர் கூறுவது இது தான். "எனக்கு கொடுக்கப்பட்ட கிறிஸ்தவ நம்பிக்கையே நான் பெற்ற எல்லா வெற்றிக்கும் காரணம். இந்த நம்பிக்கையே சித்திரவதைகளை சந்தித்த நேரங்களிலும் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டிருந்த வேளைகளிலும் எனக்கு வலுவூட்டியது. எனக்கு கொலைமிரட்டல்கள் பல வந்தபோதும் என்னால் அமைதியாகவும் நிம்மதியாகவும் இருக்க முடிந்ததென்றால் அது கிறிஸ்துவின் மீது கொண்ட நம்பிக்கையின் காரணமாகவே."

நாமும் துன்பங்களும், துயரங்களும், இன்பங்களும், வெற்றிகளும், தோல்விகளும், இழப்புகளும் வருகிறபோது அவநம்பிக்கையோடு வாழாமல் இறைநம்பிக்கையோடு வாழுவோம். இறைநம்பிக்கையே நம்மை இந்த உலகில் விசுவாசத்தில் தெளிவடையச் செய்து ஆரோக்கியத்தையும், ஆற்றலையும், அகமகிழ்வையும் தரும்.

அருள்திரு. T. **ஸ்டாலின் விநு ஜோண்ஸ்**

24-03-2019

தவக்காலம் மூன்றாம் ஞாயிறு & உயிர்ப்புக்கு முன்வரும் நான்காம் ஞாயிறு

# எல்லைகளைக் கடந்து இறை நம்பிக்கையை ஒப்புக்கொள்ளல்

## ACKNOWLEDGING FAITH BEYOND BOUNDARIES

எசா. 45:1-8 | தி.ப. 10:24-33
திபா. 125 | மத். 15:21-28

**"நான் உனக்கு முன்னே சென்று குன்றுகளைச் சமப்படுத்துவேன்."** (எசா. 45:2)

கார்கில் போரில் இந்திய, பாகிஸ்தானிய இராணுவ வீரர்கள் ஆயிரக்கணக்கில் உயிரிழந்தனர். இரு நாடுகளுக்கிடையே வர்த்தகக உறவுகள், போக்குவரத்துக்கள் நிறுத்தப்பட்டன. இப்போரினால் அணுஆயுதங்கள் கொண்டு முக்கிய நகரங்கள் தாக்கப்பட்டு மிகுதியான உயிர் சேதமும் உண்டாகும் என்ற அச்சம் நிலவியது. அதுவரை உடன் பிறப்பாய் வாழ்ந்த இரு நாட்டினரும் ஒருவரை ஒருவர் துரோகிகள் என பழித்துரைத்தனர். இவ் வேளையில் போதிய மருத்துவ வசதியின்றி இருதய நோயால் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த ஒரு பாகிஸ்தானிய சிறுமியுடன் அவருடைய பெற்றோர் பல்வேறு தடைகளை கடந்து இந்தியாவின் மும்பை மருத்துவமனைக்கு சென்று இந்திய மருத்துவர்களின் உதவியுடன் அச்சிறுமிக்கு இருதய மாற்று அறுவை சிகிட்சை செய்தனர். மூளை செயலிழப்பு நோயினால் சற்று நேரத்தில் மரிக்க இருந்த இந்தியச் சிறுவன் ஒருவரின் இதயம் அச்சிறுமிக்குப் பொருத்தப்பட்டது. அவரும் அவருடைய பெற்றோரும் முகமலர்ச்சியோடும் நன்றி உணர்வோடும் பாகிஸ்தானுக்கு திரும்பிச் சென்றனர். போரின் செய்திகளை வெளியிட்டு கொண்டிருந்த செய்தித்தாள்கள் இந்தியச் சிறுவனின் இதயத்தை பெற்றுச் செல்கின்ற இந்த இஸ்லாமிய சிறுமி ஒட்டுமொத்த இந்தியர்களின் இதயப் பூர்வமான உணர்வுகளை பாகிஸ்தான் அரசுக்கும் மக்களுக்கும் கொண்டு செல்வதாக செய்திகளை வெளியிட்டன.

### *1. எல்லைகளை கடந்து விடுதலை வாழ்வு* : (எசா. 45:3,4)

பாபிலோனில் சிறைப்பட்டு போன யூத மக்களின் மீட்புக்காய் இறைவன் கோரேசு மன்னரைத் தெரிந்து கொண்டார். கோரேசு மன்னர் யூத சமய நம்பிக்கையை சார்ந்தவர் அல்ல. மாறாக, பிறசமய நம்பிக்கை பின்னணியத்தை கொண்டவர்.

ஆயினும் இஸ்ரவேலரின் இறைவனாகிய யாவேயை குறித்து அறிந்தபோது அவரது வாழ்வில் ஏற்பட்ட நம்பிக்கையின் மாற்றம் யூத வரலாற்றில் விடுதலை வாழ்வுக்கான பெரும் சகாப்தத்தை வருவித்தது.

எஸ்றாவின் தலைமைத்துவத்தின் கீழ் பாபிலோனில் சிறைபட்ட யூதர்களுக்கு விடுதலையுடன் இடித்து நெறுக்கப்பட்ட எருசலேம் ஆலயம் கட்டப்படுதல் போன்ற நன்மைகள் ஏற்பட்டன. மனிதர்களால் அடிமைத் தனத்தை விரும்பாத இறைவன் எப்பொழுதும் மக்கள் சுதந்திரமாய் வாழ, சுதந்திரமாய் மக்கள் தன்னை தொழுதிட பாதைகளை செவ்வைப்படுத்துகிறவர் என்பதையும் வலியுறுத்துகிறார். மனிதனைத் தம் சாயலில் படைத்த இறைவன் தம் மீது நம்பிக்கை கொள்வோர் யாராக இருந்தாலும் அவர்கள் வாயிலாக விடுதலை பணியை நிறைவேற்றுகிறார்.

***2. எல்லைகளை கடந்து செயல்படும் வாழ்வு*** : (தி.ப. 10:28)

பாறை என்று பெயரின் பொருளை கொண்ட பேதுரு துணிவுடன் எவருக்கும் அஞ்சாமல் கொர்நேலியுவின் இல்லத்தில் துவங்கிய உரையில்

கடவுள் ஆள்பார்த்து செயல்படுவபர் அல்ல என்பதை கடவுள் வெளிப்படுத்தினதை செயல்படுத்துகின்றார்(தி.ப. 10:28).

ஒரு யூதன் பிற குலத்தவரிடம் செல்வதும், அவர்களோட உறவாடுவதும் முறை கேடு என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் யாரையும் தீட்டுள்ளவர் என்றோ தூய்மையற்றவர் என்றோ சொல்லக் கூடாது. எனக் கடவுள் காட்டினவர்.

எல்லா இனத்தவரிடம் அஞ்சி நடந்து நேர்மையாக செயல்படுபவரே அவருக்கு ஏற்புடையவர். இயேசு கிறிஸ்து வாயிலாக அமைதி உண்டு என்னும் நற்செய்தியை அவர் இஸ்ரவேல் மக்களுக்கு அனுப்பினார். அவரே அனைவருக்கும் ஆண்டவர்.

இன்றைய நூற்றாண்டில் பேதுருவைப் போல துணிவுடன் எவருக்கும் அஞ்சாமல் எல்லைகளைக் கடந்து எல்லாரும் ஒரு நாட்டின் பிள்ளைகள் என்ற ஒற்றுமை உணர்வோடு செயல்பட வேண்டும்.

***3. எல்லைகளை கடந்து இறையாற்றலின் வாழ்வு*** :

(மத். 15:22)

அவள் ஒரு கிரேக்கப் பெண், சிரிய, பெனிசிய இனத்தை சேர்ந்தவள். (பிறப்பால் அவ்வினத்தாள்) மாற்கு 7 : 26.

கானானிய பெண் என்று மத்தேயுவிலும் பெயர் குறிப்பிடப்படாமல் எழுதப்பட்டுள்ளது.

கடற்கரைப் பகுதியான தீரு, சீதோனில் அன்றும் வழக்கம் போல் விடிந்தது.

அவளுக்குத் தான் இன்னும் விடியலே ஆரம்பிக்கவில்லை

மகளின் வேதனை ஒருபுறம், ஊராரின் ஏச்சுபேச்சுக்கள், ஏளனங்கள் மறுபுறமாக இருந்து கொண்டு அவள் வாழ்வை நரகமாக்கி கொண்டிருந்தன.

தனதருமை மகளைப் பிடித்திருந்த அசுத்த ஆவி நீங்க வேண்டும் என்பதற்காக மருத்துவர்கள், மந்திரவாதிகள் என்று பலரிடம் மகளை அழைத்து சென்றாள்.

கையிலிருந்த பணம், பொருள் கரைந்தது பொன்னான நேரங்கள் வீணானதுமே மிச்சம் சிறுமியின் நிலையில் எந்த முன்னேற்றமும் இல்லை.

இயேசுவை மட்டும் ஒருமுறைப் பார்த்தால் போதும் என் துன்பம் அன்றே மறைந்துவிடும் என்ற எண்ணம் வலுப்பட்டது. அதுமுதல் அவள் வேறு எவரையும் தேடி ஓடவில்லை.

பணிந்த உள்ளத்தோடும், பற்றுமையின் உறுதியோடும் பாதத்தில் தனது வலிமைகளையும், வருத்தத்தையும் ஊற்றிய நிலையிலே பரம அருளால் விடுதலையின் பேற்றினை தன் பிள்ளையில் காண்கிறார் (மத். 15:21-28). ஒதுக்கப்பட்ட பின்புலத்தில் பிறரால் நிராகரிக்கப்பட்டு, மறுக்கப்பட்ட நிலையில் இறை நம்பிக்கையால் மேன்மையைப் பெற்று சிறப்புப் பெறுகிறாள்.

வாழ்வின் அழுத்தங்களில் விடைகாணாது தடுமாறும் சூழலில் சுமை தாங்கியாகிய இறையவரிடம் நம்பிக்கையோடு நம்மை ஒப்படைப்பதில் வாழ்வு வளம்பெறும் எனும் உயர்ந்த சிந்தையில் உன்னதரின் திருவடிகளில் ஒப்படைத்து மேன்மைப் பெறுவோம்.

அருள்திரு. D.S. **விஜு**

31-03-2019

**தவக்கால நான்காம் ஞாயிறு &**
**உயிர்ப்புக்கு முன்வரும் மூன்றாம் ஞாயிறு**

# ஒடுக்கும் கட்டமைப்புகளை மாற்றுருவாக்கம் செய்தல்

**TRANSFORMING THE OPPERSSIVE STRUCTURE**

| | |
|---|---|
| நாகூம் 1:1-15 | திப. 4. 32-37 |
| திபா. 113 | லூக். 13:10-17 |

**"....அம்மா, உமது நோயிலிருந்து நீர் விடுவிக்கப்பட்டுள்ளீர்..."** (லூக்.13:12)

"இழந்து போனதை தேடி மீட்கவே மானிட மகன் வந்திருக்கிறார்" (லூக். 19:10). இத்திருவார்த்தை லூக்கா நற்செய்தி நூலின் மைய நோக்கம். இந்நோக்கத்தின் அடிப்படையில் இகழ்ந்து ஒதுக்கப்பட்ட பெண்கள், ஏழைகள் மற்றும் சமாரியர் போன்றோர் இந்த நற்செய்தி நூலில் சிறப்பிடம் பெறுகின்றனர். இவ்வகையில் ஒரு குணமாக்கும் நிகழ்வு லூக். 13:10-17 வரையுள்ள திருமறைப்பகுதியில் இடம் பெறுகிறது.

தொழுகைக் கூடம் ஒன்றில் இயேசு; பதினெட்டு ஆண்டுகளாய் கூன் விழுந்த நிலையில் வாழும் பெண்ணொருத்தி அங்கே; "அம்மா, உமது நோயிலிருந்து நீர் விடுவிக்கப்பட்டுள்ளீர்" எனச் சொல்லி குணப்படுத்திய இயேசு, குணப்படுத்திய நாள் ஓய்வுநாள் எனச் சொல்லி கோபமடைந்த தொழுகைக்கூடத் தலைவன். கண்டித்து விளக்கம் தந்து விமர்சித்த அனைவரையும் வெட்கப்பட செய்த இயேசு. மாற்றத்தால் மகிழ்ச்சியடைந்த மக்கள்.

இது அனைவரையும் ஆச்சரியப்படுத்துகின்ற ஒரு அற்புத நிகழ்வு மட்டுமல்ல. மாறாக நெடுங்காலமாய் வளைந்து போன மனித மாண்பை தனது தலையீட்டால் நிமிர்க்கும் இயேசுவின் முயற்சி. பயனற்ற சமய, சமுதாய பாரம்பரியங்களை உடைத்து பயன்மிக்க புதிய பாரம்பரியத்தை உருவாக்கும் இயேசுவின் செயல். இயல்பான மானுட வாழ்வுக்கு ஊறு விளைவிக்கும். கட்டமைப்புளை மறு கட்டுமானம் செய்கின்ற இயேசுவின் நடவடிக்கை. நமக்கு புது அறைகூவலே. இந்த அனுபவத்தில் தான் தொடக்க கால திருச்சபை எழுச்சியுடன் விசுவாச பதிப்பை பதித்தது (அப். 4:32). இத்தகைய நம்பிக்கையின் தடத்தில் பயணித்த மக்கள் ஒரே உள்ளமும், ஒரே உயிருமாய் இருந்தனர். இந்த உன்னதப் பிணைப்பே சமூகத்திற்கு சான்று தரும் நிலையில் அமைந்தது. இயேசுவின் காலத்தில் ஒடுக்குதலுக்குட்படுத்தப்பட்ட பெண்மணியின் அவலங்களை சிந்திப்போம்.

## *1. ஒடுக்குதலின் நெடும் வருடம்* :

“பதினெட்டு ஆண்டுகளாய் தீய ஆவி பிடித்து உடல் நலம் குன்றிய பெண் ஒருவர் அங்கு இருந்தார்....” லூக். 13:11a

“பாருங்கள். ஆபிரகாமின் மகளாகிய இவரை பதினெட்டு ஆண்டுகளாக சாத்தான் கட்டி வைத்திருந்தான்....” லூக். 13:6.

ஆண்டுகள் பதினெட்டு என்பது இப்பெண்மணி அனுபவித்த துன்பத்தின் நெடுங்காலம். இவள் உடல் சார்ந்த பிரச்சனையால் துன்பம் அடைகிறாள் எனப் பலரும் பார்த்தபோது இல்லை. பதினெட்டு ஆண்டகளாய் தீய ஆவி அவளை கட்டி வைத்திருக்கிறது என இயேசு கண்டார்.

சமூக கண்ணோட்டத்துடன் இதைக் கவனித்தால், நீண்ட நெடுங்காலமாய் தீய ஆற்றல்களால் அடிமைப்படுத்தப்பட்டிருக்கும் பெண்மணியின் குறியீடாக இவள் நிற்கிறாள். குணமாக்கும் அற்புதத்தால் கோபம் அடைந்த தொழுகைக்கூட தலைவனும் பல்லாண்டு காலமாய் மக்களை ஒடுக்கும் அடிப்படைவாதத்தின், பழைமைவாதத்தின் அடையாளமாக நிற்கிறான்.

தொன்றுதொட்டே பழங்கால இஸ்ரவேல் சமுதாயத்தில் ஆணுக்கு ஒரு சட்டம், பெண்ணுக்கு ஒரு சட்டம். பெண்கள் ஆண்களைவிட குறைவாக மதிப்பிடப்பட்டனர் (லேவி. 27:1-8). ஜேம்ஸ் பேக்கர் என்பவர் “ஆடவர்கள் பெண்களை கால்நடையாகக் கருதினர்” என்பர். எபிரேய வேதாகமத்தில் பெண் பல இடங்களில் விலங்குகளுடன் பட்டியலிடப்படுகிறார் (வி.ப. 20:17, இ.ச. 5:21). பெண்கள் இரண்டாம் நிலைக் குடிமக்கள் எனக் கருதப்பட்டனர். பெண்களுக்கு தோரா கற்றுக் கொடுப்பதைவிட அதை எரிப்பது நல்லது என சொல்பவர்கள் அதிகம். பெண்களின் பெயர் வம்சவரலாற்று அட்டவணைகளில் அரிதாகவே இருந்தது. பன்னெடுங்காலமாய் பெண் தீய ஆற்றல்களால் கூன் விழுந்திருந்தாள் என்பதற்கு இவைகள் சான்றுகள்.

குடும்பம், திருமணம், சொத்து, வேலை, வரி, பலி, காணிக்கை, ஓய்வுநாள் போன்றவற்றை உள்ளடக்கிய சட்டங்கள் இஸ்ரவேல் சமுதாயத்திற்கு அறுநூறுக்கு அதிகம் உண்டு. இவைகளில் ஓய்வுநாள் பற்றிய சட்டம் ஓய்வுநாளில் வேலை செய்யலாகாது என்கிறது (யாத். 30:14). இச்சட்டத்தை சரியாகப் பார்க்க தொழுகைக் கூடத் தலைவன் தவறினான். இது பாரம்பரியத்தினாலும், பழமைவாதத்தினாலும் அவன் கூன் விழுந்திருந்தான் என்பதைக் காட்டுகிறது. எனவே இயேசுவின் குணமாக்கும் செயல் அவன் குருட்டு பக்தியில் வேலையாகத் தெரிந்தது.

### *2. ஒடுக்குதலின் கடும் விளைவு* :

"....அவள் சிறிதும் நிமிர முடியாதவாறு கூன் விழுந்த நிலையில் இருந்தார்" லூக். 13:11b

விண்ணைப் பார்க்க இயலாது மண்ணை மட்டுமே பார்க்கும் பரிதாப நிலையில் இருந்தாள். பிறர் முகத்தைப் பார்க்க இயலாது தவித்து நின்றாள். குனிந்து நடந்ததினால் மன வலியினையும், உடலின் வலியினையும் சுமந்தே நடந்தாள். அன்றாடத் தன் அலுவல்களில் அவஸ்தைப்பட்டாள். பலரின் அலட்சியத்துக்குரியவளாகி வேதனைப்பட்டாள்.

இயேசுவின் காலத்து மகளிரும் ஒடுக்குதல்களின் விளைவுகளை அனுபவித்து வந்தனர். வீடுகளை விட்டு வெளியே வரும்போது யூதப் பெண்கள் முகத்திரை அணிந்திருந்தனர். முகத்திரை இல்லாது செல்லும் பெண் ஒழுக்கம் இழந்தவளாய் கருத்தப்பட்டாள். ஒழுக்கம் இழந்த குற்றச்சாட்டு எனில் கல்லெறிந்து கொலையும் செய்யப்படலாம் எனும் இக்கட்டு இருந்தது (யோவா. 8:5). பெண் ஒரு ஆண் குழந்தையை பெற்றெடுத்தால் ஏழு நாள் தீட்டு. அதுவே அவள் பெண் குழந்தையை பெற்றெடுத்தால் பதினான்குநாள் தீட்டு என்றனர். பன்னிரண்டும் அதற்கு கீழேயும் வயதுடைய பெண்களுக்குக்கூட மணமுடித்து வைக்கப்பட்டது. சந்தைகள், மாமன்றங்கள், நீதி மன்றங்கள் மற்றும் மக்கள் நிறைந்த இடங்கள் என எதிலும் பொது விவாதங்களில் பங்கெடுக்க அனுமதிக்கப்படவில்லை. கற்றல் பெண்களுக்கு உரியது அல்ல எனும் நிலையினை அனுபவித்தனர். இயேசு சொல்வதைக் கேட்டு கற்றுக் கொண்டிருந்த மரியாவின் செயலை மார்த்தாவாலேயே ஏற்றுக் கொள்ள இயலவில்லை (லூக். 10:38-42).

பத்தொன்பதாம் நூற்றாண்டு இந்தியப் பெண்களின் நிலைகுறித்து பண்டித ராமாபாய் சொல்கையில், "பெண்களை அடக்கி வைப்பது அவர்கள் பிறப்பின்போதே தொடங்கி விடுகிறது. பெண்ணாகப் பிறப்பது பாவத்தின் விளைவு எனக் கருதினர்.இந்தியப் பெண்களின் நிலைமை நரகத்திலிருக்கிற மிருகத்தின் நிலைமையைவிட மோசமானது" என்கிறார். இன்றும் நாம் காணும் காட்சிகள் பல சமுக, பொருளாதார மற்றும் அரசியல் நிலைகளில் மகளிர் ஒடுக்குதல்களின் விளைவுகளை சந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை தெளிவாக காட்டுகின்றன.

### *3. ஒடுக்குதலிருந்து பெரும் விடுதலை* :

"இயேசு அவரைக் கண்டு அருகே கூப்பிட்டு அம்மா உமது நோயிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளீர்" என்று கூறி தம் கைகளை அவர் மீது வைத்தார். உடனே அவர் நிமிர்ந்து கடவுளைப் போற்றிப் புகழ்ந்தார் (லூக். 13:13).

தன் பிரச்சனையுடன் கூனி நின்ற பெண் இயேசுவிடம் வரவில்லை. சமுதாயச் சூழலிலும், அதனால் ஏற்பட்ட அவ நம்பிக்கையும், அவளது காயப்பட்ட மனநிலையும் இயேசுவிடம் சொல்லவிடாமல் தடுத்திருக்கலாம்.ஆனால் இயேசுவின் கருணைக் கண்கள் அவளைக் கண்டது (லூக். 13:12).

அவளைக் கண்ட இயேசு தம் அருகே அவளை அழைத்தார். அழைத்த இயேசு தம் கைகளை அவர் மீது வைத்தார் (லூக். 13:13). கரம் தந்து பெண்மைக்கு இயேசு கொடுத்த ஆதரவு இது எனலாம்.

தொழுகைக்கூட தலைவன் மனிதாபிமானமற்ற முறையில் சட்டத்தை தவறாக நிலைநாட்ட வாதிடுக்கையில் இயேசு அவரைக் கண்டிக்கிறார். "வெளிவேடக்காரரே" என அழைத்து ஒரு விலங்குக்கு தரும் மரியாதையை ஒடுக்கப்பட்ட ஒரு பெண்ணுக்கு தர மறுப்பதைக் கண்டித்தார் (லூக். 13:15).

கூனி குறுகி நின்ற பெண்ணின் பெயரை லூக்கா பதிவு செய்யவில்லை. எனவே அவள் அவ்வளவு அறிமுகமில்லாதவள், அச்சமூகத்தில் முக்கியத்துவம் இல்லாதவள், அடையாளம் இழந்தவள் எனலாம். ஆனால் இயேசு அவளுக்கு மதிப்புமிக்க அடையாளத்தைத் தருகிறார். "ஆபிரகாமின் மகள்" இவள் என்கிறார் (லூக். 13:16).

இயேசுவின் செயல் அடிமைப்பட்டுக் கிடந்த பெண்ணுக்கு புத்துணர்வைத் தந்தது. "உடனே அவள் நிமிர்ந்து கடவுளைப் போற்றிப் புகழ்ந்தாள்" இயேசுவின் விளக்கம் ஒடுக்கப்பட்டோருக்கு வெட்கத்தைத் தந்தது. "அவர் இவற்றைச் சொன்னபோது அவரை எதிர்த்த அனைவரும் வெட்கப்பட்டனர்" (லூக். 13:17a). ஆண்டவர் நல்லவர், துன்ப நாளில் அவர் காவலரண் ஆவார்; அவரிடம் அடைக்கலம் புகுந்தோரை அவர் அறிவார் (நாகூம் 1:7). என்ற வாக்கு இஸ்ராயேலரின் அடிமைத்துவத்துக்கும் ஒடுக்குதலுக்கும் கிடைத்த விடுதலையின் வெற்றியினையே வெளிப்படுத்துகிறது.

எந்த நிலையிலும் உடனிருந்து நம்மை விடுவிக்கும் ஆண்டவரின் கரங்களில் தஞ்சம் அடைவோம். அந்த உன்னத அனுபவத்தில் நாம் பெறும் சிறப்பு பிறரையும் விடுவிக்கும் ஆற்றலை நமக்கு வழங்கும் என்ற உயர்ந்த பார்வையுடன் முன்னெடுத்துச் செல்வோம். நெடுங்காலமாக சடங்குகள். மரபு என்னும் நிலையில் ஒடுக்கும் கட்டமைப்புகளை துணிவுடன் எதிர்ப்போம். பலர் மதிக்கும் நல் உருமாற்றங்களை உலகில் படைப்போம், இயேசு காண்பிக்கும் இறையரசை நிலைநிறுத்துவோம்.

அருள்திரு. T. **சுதீர்**

07-04-2019

தவக்கால ஐந்தாம் ஞாயிறு,
உயிர்ப்புக்கு முன்வரும் இரண்டாம் ஞாயிறு &
பாடுகளின் ஞாயிறு

# சிலுவையும் சீடத்துவத்திற்கு ஒரு புதிய முன்மாதிரியும்

## CROSS AND A NEW PARADIGM TO DISCIPLESHIP

| | |
|---|---|
| தொநூ. 26:12-33 | 2கொரி. 11:21-31 |
| திபா. 92 | மாற். 10:46-52 |

**இயேசு அவரிடம் "நீர் போகலாம், உமது நம்பிக்கை உம்மை நலமாக்கிற்று" என்றார். உடனே அவர் மீண்டும் பார்வை பெற்று, அவரைப் பின்பற்றி அவருடன் வழி நடந்தார்.**
(மாற். 10:52)

சிலுவை ஆண்டவரின் மீட்பின் செயல். இதன்வழி தொடர்பணி செய்ய பெரிய கட்டளைகளை மத். 28:19 -இல் தந்துள்ளார். சீடத்துவத்தின் சிறப்பு ஆண்டவர் யார் என்று வெளிப்படுத்துவதே ஆகும். தியானத்திற்காக தரப்பட்டுள்ள திருமறைப் பகுதியின் வழி தியாகத்தின் வழி ஆண்டவரைப் பின்பற்றுபவரே சீடர் என்று புரிந்துகொள்ள முடிகிறது. குரு சீடர் முறையில் குருவின் போதனைகளையும், வாழ்வினையும் பின்பற்றுபவரே சீடராவார்.

### *1. சீடராக இருப்பவர் தியாகத்தோடு மன்னிப்பவர்* :

ஆண்டவரில் வெளிப்பட்ட உயர்வான சிந்தை மன்னிக்கும் சிந்தை. மன்னிக்கும் பண்பினை அவரது பணியிலும், பாடுகளிலும் காண முடிகிறது. ஆண்டவர் தமது சீடர்களுக்கு கற்றுக்கொடுத்த வேண்டுதலிலும் அதனை வலியுறுத்துகின்றார். தொ.நூ. 26:13-15 வரை உள்ள பகுதியில் ஆபிரகாம் வெட்டிய துரவுகள் அனைத்தும் மூடப்படுகிற நிலையிலும் (தொ.நூ. 26:15) ஈசாக்கு தன் தகப்பன் வெட்டிய துரவுகளில் மறுபடியும் செப்பனிட்டு சரிசெய்கிறார். இந்த சூழலில் எதிலாகிலும் தங்களுக்கு சொந்தமானது என்று உரிமை கொண்டாடிய போது அதனை விட்டுக் கொடுத்தார். ஈசாக்கின் மனநிலையினை அறிந்த எதிராழிகள் தொ.நூ. 26:28-இல் ஆண்டவர் உம்மோடு இருக்கிறார் என்று தெளிவாகக் கண்டோம். ஆதலால் நமக்குள், எங்களுக்கும் உமக்குமிடையே ஓர் ஒப்பந்தம் செய்து கொள்வோம். நாங்கள் உம்மோடு உடன்படிக்கை செய்துகொள்வோம். என்று தங்கள் நிலையினை புரிந்துகொள்ள ஈசாக்கு ஓர் முன்மாதிரியாய் நிறுவப்பட்டார்.

### *2. சீடராக இருப்பவர் தியாகத்தோடு பாடுகளைச் சகிப்பவர்* :

போதனையின் வெளிப்பாடு தான் பாடுகள் எனலாம். நமக்காக வேதனைப்பட்டு பாடுகள் அடைந்த ஆண்டவரைப் பின்பற்றுவோர் அனைவரும் நற்செய்தி சார்ந்து வரும் பாடுகளை தியாகத்தோடு

ஏற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறார்கள். ஆண்டவர் தமது சீடர்களாக எழுபத்தி இரண்டு பேரை தெரிவு செய்து லூக். 10:29 அதிகாரத்தில் அவர்களை அனுப்பும் நிகழ்வு உள்ளது. வசனம் மூன்றில் புறப்பட்டுப் போங்கள்; ஓநாய்களிடையே ஆட்டுக்குட்டிகளை அனுப்புவது போல் உங்களை நான் அனுப்புகிறேன்; இவ் நிகழ்வின் வழி சீடராக அவரை பின்பற்றுவோர் ஓநாயின் பண்புகள் குறைவதற்கு தியாகத்தோடு பணி செய்யுங்கள். எப்போது பாடுகள் வந்தாலும் ஆட்டுக்குட்டியின் வலுவிழந்த நிலையினை ஏற்றுக்கொண்டு பாடுகளை சகியுங்கள் என்றார். இதனை பவுலார் 2கொரி. 11:27-இல் "பாடுபட்டு உழைத்தேன்; பன்முறை கண்விழித்தேன், பசிதாக முற்றேன்; பட்டினி கிடந்தேன்; குளிரில் வாடினேன், ஆடையின்றி இருந்தேன்." என்று சீடத்துவத்தின் பண்பாகப் பாடுகளை சகிக்கும் நிலையினை விளக்குகின்றார்.

### *3. சீடராக இருப்பவர் தியாகத்தோடு ஆண்டவரைப் பின்பற்றுகிறவர்* :

நற்செய்திப் பகுதியாக உள்ள மாற்கு. 10:46-52 வது உள்பகுதி பார்வையற்ற பர்திமேயு பார்வை பெறும் நிகழ்வு உள்ளது. 52-வது வசனத்தில் "நீர் போகலாம்; உமது நம்பிக்கை உம்மை நலமாக்கிற்று என்றார். உடனே அவர் மீண்டும் பார்வைபெற்று அவரை பின்பற்றி அவருடன் வழிநடந்தார். சீடர் என்பவர் ஆண்டவரில் வாழ்வையும், வார்த்தையினையும் முழுமையாக ஏற்றுக்கொண்டு அவரை பின்பற்றுபவரே ஆகும்."

ஆண்டவரைப் பின்பற்றுதல் என்பது அவர் வாழ்ந்த வழி வாழ விரும்புவது எனலாம். ஆண்டவரை பின்பற்றுவதற்கு இடையூறாக இருக்கும் தடைகளை தாண்டிச் செல்வதற்கு முற்றிலும் வழங்குவது ஆண்டவரைப் பின்பற்றுவதற்கு அடையாளம். அதிக அறிமுகமான ஓர் பாடல் வரியினை நினைப்பூட்ட விரும்புகிறேன்.

"இயேசுவின் பின்னே போகத்துணிந்தேன், பின் நோக்கேன் நான் உலகம் என் பின்னே சிலுவை என் முன்னே போகத் துணிந்தேன்," இப்பாடல்கள் வரிகள் சிலுவையும், உலகமும் நம் முன்னே உள்ளது. எதனைத் தெரிவு செய்து முன்னுரிமை கொடுப்பது என்பது பற்றிய உண்மையினை தெளிவாக சுட்டிக்காட்டுகிறது.

எனவே சிலுவை காட்டும் மாதிரியான மன்னிப்பின் சிந்தையும், பாடுகளை சகிக்கும் சிந்தையும் மற்றும் உலக சிந்தனைகளை தவிர்த்து உள்ளதால் காட்டிய உயர்வான சிலுவை வழி பின்பற்றி சீடர்களாக வாழ்வோம். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவில் புதிய முன்மாதிரியுடன் வாழ்ந்து இறையரசைக்கட்டி எழுப்புவோம்.

அருள்திரு. A.R. **செல்லையா**

14-04-2019



## ஓசன்னா : ஆண்டவரே எம்மை மீட்டருளும்

**HOSANNA : LORD SAVE US**

| | |
|---|---|
| செக். 9:1-12 | 1திமொ. 4:6-16 |
| திபா. 118: 19-29 | லூக். 19:29-40 |

**"ஆண்டவர் பெயரால் அரசராய் வருகிறவர் போற்றப்பெறுக! விண்ணகத்தில் மாட்சியும் உண்டாகுக!"** (லூக். 19:38)

தீமை நிறைந்த உலகில் நன்மையை எதிர்பார்க்கும் விருப்பம். உலகில் சமாதானத்தை இழந்தவர்கள் மகிழ்வை எதிர்பார்க்கும் ஏக்கம். நெறிதவறிய வாழ்வு முறைகளின் மன மாற்றத்தையும், விடுதலை வேட்கையும் விரும்புகிறவர்களாய் எதிர்பார்த்த பவனியே குருத்தோலை பேரணி. இன்று அரசியல் கட்சிகளின் பேரணி, ஆன்மீகவாதிகளின் பேரணி, பாதிக்கப்பட்டவர்கள் ஒருங்கிணைந்து உரிமைக்கான பேரணி அன்றாடம் நாம் காணும் பேரணிகள் ஏராளம். இப்பேரணி அரசியல்வாதிகள் தங்கள் ஆள்பலத்தையும், ஆன்மீகவாதிகள் தங்கள் சமயநம்பிக்கையும், உரிமைவாதிகள் தங்கள் பாதிப்பின் அவலங்களையும் வெளிப்படுத்துகின்றனர். ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் பேரணி ரோம அரசியல்வாதிகளையும், சமயவாதிகளையும் கண்டித்து இறைவனின் திட்டத்தை வெளிப்படுத்தும் சமாதானப் பேரணியாய், நீதிக்கான பேரணியாய், விடுதலைக்கான பேரணியாய் மாற்றம் பெற்றது. பேரணியின் துவக்கம் பெத்பகே, பெத்தானியா- என்னும் கிராமங்கள். பெத்பகே "அத்திப்பழத்தின் வீடு" பெத்தானியா "வறுமையின் வீடு, பேரீட்ச மரங்களின் வீடு" எனப் பொருள்படும். கிராமத்திலிருந்து விடுதலை பேரணி எருசலேம் பட்டணம் நோக்கி பயணித்தது. இப்பயணத்தில் சமாதானத்தின் அடையாளமாகவும், குருத்தோலை தூய்மையின் அடையாளமாகவும், உரிமையின் குரலாக "இப்பொழுதே விடுவித்தருளும்" என்ற பொருள்படும் "ஓசன்னா" ஆர்ப்பரிப்பின் குரலாகவும் அமைந்திருந்தது. இப்பேரணி இயேசுவின் பெருமையை நிரூபிக்கும் பேரணி அல்ல. மாறாக மக்களின் மாற்றத்தையும், மீட்பையும் எதிர்நோக்கி அழைப்புவிடும் பேரணி. குருத்தோலை ஞாயிறாக ஆண்டவரே! எம்மை மீட்டருளும் என்ற சிந்தனையை இயேசுவின் குருத்தோலை பேரணி வாயிலாக தியானிப்போம்.

**_1. மகிழ்வை எதிர்நோக்கும் பேரணி_** : (செக்.9:9)

சகரியா இறைவாக்கினர் இயேசு பிறப்பிற்கு முன்பே, இயேசு அரசனாக வருவார். இவர் நீதியுள்ளவரும், தாழ்மையுள்ளவரும், கழுதைக்குட்டியாகிய மறியின் மேலும் ஏறிவருகிறவராயிருக்கிறார். ஆகவே! மகளே! சீயோன்! மகிழ்ந்து களிகூரு; மகளே எருசலேம்! ஆர்ப்பரி (செக்.9:9) என்று இறைவாக்காக உரைக்கிறார். இதன் நிறைவேறுதலாக பேரணியாக இயேசு நாதர் எருசலேமிற்கு சென்றார். இது மகிழ்வை எதிர்நோக்கும் பேரணி. வரலாற்றில் இஸ்ரவேல் மக்கள் தங்கள் வாழ்வுக்காய் எகிப்துக்கு கடவுளால் வழிநடத்தப்பட்டனர். அவர்கள் பலுகிப்பெருகுவதை விரும்பாத பார்வோனின் ஒடுக்குதல், மக்களின் அடிமைத்தனத்தின் துயரங்களை நான் அறிவேன் (வி.ப.3:7). கடவுள் கேட்டார். மோசேயை அழைத்து அவர்களை பாலும் தேனும் ஓடும் கானானுக்கு அழைத்துச் சென்றார். கடவுளின் வல்ல செயல்கள் இஸ்ரவேலரின் மீட்புப் பயணத்தில் நெருப்புத்தூணிலும் மேகத்தூணிலும் மாராவின் மதுரமாய், செங்கடல் வெட்டாந்தரையாய் மாற்றப்பட்டதையும், எதிரிகளை மேற்கொண்டு நடத்தியதையும் உணர்ந்து மக்கள் வேதனையுற்றனர். காரணம் வரலாற்றில் எகிப்திலிருந்து மீட்பைப் பெற்ற இஸ்ரவேலர் மீண்டும் பாபிலோனியர், பெர்சியர், கிரேக்கர் ஆகியோர் அடிமைத்தனத்திற்குள் வாழ்ந்தனர். இச்சூழலில் கடவுள் மகிழ்வை எதிர்நோக்கும் விடுதலை நல்குபவர், விடுவிப்பவர் என்ற நம்பிக்கை இறைவாக்கினர் மூலம் தரப்பட்டது. இல் நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் நிறைவேறும் பேரணியாக இயேசு நாதரின் பேரணி அமைகிறது.

உலகின் அனைத்து மக்களின் மகிழ்வைக் கொடுக்கும் ஆண்டவராக, கடவுளின் குமாரனாக, விடுதலை நாயகனாக மக்கள் கழுதையின் மேல் இயேசு நாதரை அமர்த்தி குருத்தோலைகளைப் பிடித்து ஓசன்னா என்று ஆர்ப்பரித்து பாடி மகிழ்ந்தனர். இன்று மகிழ்வை எதிர்பார்த்தே நாம் வாழ்கிறோம். ஆனால், நாம் அடிமைப்பட்டிருக்கும் பல்வேறு அடிமைத்தனத்திலிருந்து நம்மை மீட்டு மகிழ்வைத் தருபவரும் அவரே. ஆண்டவரோடு இணைந்து என்றும் மகிழுங்கள்; மீண்டும் கூறுங்கள், மகிழுங்கள் (பிலி.4:4) என்ற இறைவாக்கு உண்மையே. இதனைப் மனதிற்கொண்டு போராட்டம் நிறைந்த, பயம் நிறைந்த, தோல்வி நிறைந்த விசுவாச வாழ்வில் மகிழ்வை எதிர்நோக்கி பேரணியில் நாமும் இணைவோம்.

***2. மாற்றத்தை ஏற்கும் பேரணி*** : (லூக்.19:38)

இயேசுவின் எருசலேம் பேரணி ஒரு குடும்பத்தையோ, ஒரு குலத்தையோ, மீட்பதோ, பாதுகாப்பதோ அதன் நோக்கமல்ல. முழு மனுக் குலத்தையும் மாற்றுகின்ற நோக்கம், அங்கீகாரம், நம்பிக்கை இழந்தவர்களுக்கு நம்பிக்கை. இறையாட்சியை வெளிக் கொணர வேண்டிய எருசலேம் மன்னராட்சியில் கட்டுப்படுத்தப்படுகிறது. சமய வெறியர்களின் கட்டுப்பாட்டில் கட்டப்படுகிறது. விளைவு எளியோர், ஒடுக்கப்பட்டோர், புற இனத்தனர், ஊனமுற்றோர் ஆலயத்தில் செல்லவும் பலியிடவும் மறுக்கப்பட்டுள்ளனர். ரோம கொடுங்கோல் ஆட்சியில் சமதானமிழந்த கலிலேய மக்கள், சமாதானமிழந்த ஏழைகள், ஒடுக்கப்பட்ட பெண்கள், புறக்கணிக்ககப்பட்ட குழந்தைகள் மாற்றத்தை ஏற்கும் பேரணியில் இணைகின்றனர். “ஆண்டவர் பெயரால் அரசராய் வருகிறவர் போற்றப் பெறுக! விண்ணகத்தில் அமைதியும் மாட்சியும் உண்டாகுக!” (லூக். 19:37) என ஆர்ப்பரித்து மகிழ்ந்தனர். பேரணியில் இணைந்த மக்கள் ரோம ஆட்சியை வெறுத்தது மட்டுமல்ல தங்களில் ஒருவர் அரசராக வருவதால் தங்களது உலகத் தேவை உடனடியாக நிறைவேறும் என எதிர்பார்த்தனர். ஆனால், உலக மக்களின் மாற்றத்தையே பேரணி வலியுறுத்துகிறது. மாறாத உலகில் மாற்றத்தை எதிர்பார்க்கும் நாம் அம்மாற்றத்தை நம் இல்லம், இறை இல்லம், அண்டைவீடு, கிராமம், தேசம் என மாற்றத்தை ஏற்கும் பேரணியில் இணைந்து கொள்ளவேண்டும். இன்று சமதானம், நீதி, விடுதலை இவற்றை முன்னெடுக்கும் பலரிடம் சுயநலம் சார்ந்த சித்தாந்தங்களே காணப்படுகிறது. மாற்றத்தை விரும்பும் ஆண்டவர் தம் மலைபிரசங்கத்தின் (மத். 5:7) வாயிலாக வலியுறுத்துகிறார். இந்தியாவின் தேசப்பிதா என்று அழைக்கப்படும். காந்திஜி அவர்கள் இயேசுவின் மலைபிரசங்கத்தை ஏற்றுக் கொண்டார். “அகிம்சை” என்ற சித்தாந்தங்களுடன் பேரணி மேற்கொண்டு பாரத நாடு விடுதலை பெற போராடி வெற்றிபெற்றார். இயேசு நாதர் எதிர்பார்க்கும் மாற்றத்தை முன்னெடுக்கும் ஊடகமாய் உலகில் நம் பற்றுதலில் வெளிப்படுத்தி பேரணியில் இணைவோம். மாற்றத்தை ஏற்போம்.

***3. மாதிரியான வாழ்வை விரும்பும் பேரணி*** : (1திமொ.4:12)

இயேசுகிறிஸ்துவின் குருத்தோலைப் பேரணி எருசலேம் ஆலயத்தை தூய்மைப்படுத்துதலுடன் நிறைவடைகிறது. பக்தி நெறியின் சீர்கேடுகள் களையப்பட்டு தூய்மையான வாழ்வு வாழ நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். வாலிபனான தீமோத்தேயுவுக்கு பவுல் கடிதம் எழுதும் போது “உன்னை தாழ்வாக கருதாதிருக்கட்டும் பேச்சு, நடத்தை, அன்பு, நம்பிக்கை, தூய்மை ஆகியவற்றில் நீ விசுவாசிகளுக்கு முன்

மாதிரியாய் விளங்கு" (1திமொ. 4:12) என அறிவுறுத்துகிறார். தனிமனிதனின் வாழ்வு பக்தியோடு இணைக்கப்படுகிறது. ஒருவர் கடவுளின் கோயிலை அழித்தால் கடவுள் அவரை அழித்துவிடுவார் ஏனெனில் கடவுள் தூயது; நீங்களே அக்கோயில் (1கொரி. 3:17). கோயில் மட்டும் தூய்மையல்ல. நாமே தூயவர்களாக இருக்கவேண்டும் (மத். 15:17-19). உள்ளம் தூய்மைப்படும் போது நீதியும், உண்மையும், விடுதலையும் அனைவரையும் சென்றடைகிறது. வாழ்க்கையில் பேசுவதைவிட செயல்படுவதுதான் சிறப்பானது. இயேசுநாதர் தம் திருப்பணியின் வாயிலாக சொல்லியதை பேரணியில் நிறைவேற்றினார். இறையரசை எதிர்நோக்கி பயணிக்கும் நாம் இரண்டாம் வருகைக்கு எதிர்பார்ப்புடன் ஆயத்தமாவோம். பேரணியின் குரல் நம் வாழ்விலும் பிரதிபலிக்கட்டும். குருத்தோலை பேரணி மகிழ்வை எதிர்நோக்கி, மாற்றத்தை ஏற்று, மாதிரி வாழ்வை விரும்பும் அடியவர்களாக செயல்படுவோம்.

அருள்திரு. **இரா. சாம் கிறிஸ்டோபர்**

# நன்றித் திருவிருந்து : துன்புறும் மானிடத்தின் கூட்டுறவு

**EUCHARIST : COMMUNION OF SUFFERING HUMANITY**

விப. 12:1-7 1கொரி. 11:23-34
திபா. 116 மாற். 14:17-25

**“.....நீங்களும் இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்திலிருந்து பருகும் போதெல்லாம் ஆண்டவருடைய சாவை அவர் வரும் வரை அறிவிக்கிறீர்கள்.”** 1கொரி.11:26

இறைவன் தம்மை மனுக்குல மீட்பிற்காகத் தந்தார் என்பதற்கு அடையாளம் திருவிருந்து. இது இறைவனது அருட்கொடைகளில் மேலானது. புனித அகஸ்டின் திருவிருந்து என்பது ‘கடவுள் தம்மை உலகிற்காய்க் கொடுத்தார் என்பதற்கு அடையாளம்.’ போன் காஃபர் என்ற இறையியலாளர் ‘துன்புறும் மானிடம் ஒன்றுபடவும், மானிடமும் இறைவனும் ஒன்றுபடவும் ஏற்படுத்தப்பட்ட ஓர் அன்புச் செயல் திருவிருந்து’ அதற்காய் இயேசுநாதர் தாமே உணவாய் மாறி உலகமனைத்திற்கும் விருந்தானார்

இவ்விதம் இயேசு நாதர் ஏற்படுத்தின திருவிருந்து துன்புறும் மானிடத்தின் விடுதலை வாழ்வினை நினைவுபடுத்தி கூட்டுறவினை பகிர்ந்தளிக்கிறது.

## *1. உடைக்கப்பெற்ற வாழ்வின் ஒன்றிப்பு விருந்து* : (1கொரி.11:24)

“.......இது உங்களுக்கான என் உடல், இதை என் நினைவாகச் செய்யுங்கள்”

பாஸ்காவிருந்தின் பின்னணியத்தில் தோன்றிய ஒன்றுதான் திருவிருந்து. உடைவுபட்ட இஸ்ரயேலர் ஒன்றிணைக்கப்பட்டு மகிழ்வுடன் ஆசரித்த விருந்து தான் பாஸ்கா. பாஸ்கா விருந்து வீடுகளில் கொண்டாட வேண்டும். ஏனெனில் “அழிப்பவன்” இஸ்ராயேல் வீட்டாரிடமிருந்து கடந்து சென்றான் என்பதற்கு அடையாளம் மட்டுமல்ல வீட்டாரை எல்லாம் ஒன்றிக்கும் விருந்து.

இயேசுநாதர் பஸ்கா விருந்தில் திருவிருந்தினூடாக புது அர்த்தத்தைக் கொடுத்தார். நாம் இறையரசிற்குரியோராய் மாறுவது என்பது சாவிலிருந்து வாழ்வுக்கும், பாவத்திலிருந்து ஜீவனுக்கும் கடந்து செல்வது

(Passover). ஆகவே நாம் கிறிஸ்துவின் உடலின் உறுப்புக்களாயிருக்கிறோம் (1கொரி. 12:20). கிறிஸ்துவின் உடலின் உறுப்புக்களாகும் போது உயிர் பெற்றுக் கொள்கிறோம். எனவே (1கொரி.11:24) -ல் இது உங்களுக்கான என் உடல் என்றார்.

பரிசுத்த திருவிருந்தில் கிறிஸ்துவின் உடலை நினைவு கூரும் போது எவ்வித வேறுபாடின்றி அனைவரையும் ஒன்றிணைக்கிறது. பல கோதுமை மணிகள் உடைக்கப்பட்டு பின் பிசையப்பட்டு ஒரே அப்பமாக சுடப்படுகிறதைப்போல பல நிலைகளில் பிரிந்திருக்கும் இறைமக்கள் கிறிஸ்துவின் உடலில் ஒன்றாக்கப்படுகிறோம் (1கொரி.10:17) -ல் அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாயிருக்கிறோம்.

நன்றித் திருவிருந்தில் பங்கேற்கும் போது வேற்றுமை மனதுடன் பங்கேற்கலாகாது ஒப்புரவாகுதல் வேண்டும். இயேசுநாதர் ராப்போஜனப் பந்தியில் யூதாசையும் அமரவைத்து "நண்பனே" என்று அழைத்து பந்தியில் பங்கு பெற்றது ஒப்புரவாகுதலின் அனுபவம். தனித்தனி குடும்பமாகக் கொண்டாடின பாஸ்கா இயேசுநாதர் திருவிருந்து என்னும் ஒரே விருந்தாக மாற்றினார். இதனை Dunn என்ற இறையியலாளர் கூறும் போது "இயேசுவின் மேஜை ஐக்கியம்" அமைதி, நம்பிக்கை, சகோதரத்துவம் இவற்றை உள்ளடக்கிய இறையரசின் அனுபவத்தை தருகிறது என்கிறார். திருவிருந்து உடைவுபட்ட வாழ்வின் ஒன்றிப்பு விருந்து.

### ***2. உறவைப் பலப்படுத்தும் விருந்து*** : (1கொரி. 11:33)

".......என் சகோதர சகோதரிகளே, உண்பதற்காக நீங்கள் ஒன்று கூடி வரும் போது ஒருவர் மற்றொருவருக்காகக் காத்திருங்கள்."

இறைவன் அருளும் மாபெரும் அருட்கொடை "உறவு வாழ்வு." தொடக்ககால பெற்றோர் கீழ்ப்படியாமையால் இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவு முறிந்தது. இயேசுநாதர் தன் உடலை உணவாகக் கொடுத்து இரத்தத்தை சிலுவையில் சிந்தி உறவை மீண்டும் புதுப்பித்துள்ளார்.இந்த உறவில் வரும் போது திருத்தூதர் பவுல் சொல்வதைப் போல இனி வாழ்பவன் நான் அல்ல. கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார் (கலா.2:20).

இந்த மேன்மையான உறவில் எல்லா இறைமக்களும் ஒன்றிணைக்கப்பட வேண்டும் என்று திருவிருந்து ஏற்படுத்தப்பட்டுள்ளது. விருந்திற்காய் ஒன்று கூடும்போது ஒருவர் மற்றவர் வரும் வரை காத்திருக்க

வேண்டும். அதாவது உறவு பலப்பட நிழல்உலகிலிருந்து நிஜஉலகிற்கு வரவேண்டும். உறவு பலப்பட அப்பம் உடைக்கப்படும் போதெல்லாம் இயேசுக் கிறிஸ்துவின் கரத்தின் காயங்களை பார்க்க வேண்டும் லூக்கா. 24:35-ல் "அவர் அப்பத்தைப் பிட்டுக் கொடுக்கும் போது அவரைக் கண்டுணர்ந்துக் கொண்டார்கள்"......

இறையரசு எந்த பாகுபாடும் இல்லாமல் எல்லாரும் ஒன்றாயிருக்கும் ஓர் மேன்மையான அனுபவம். அதன் முன் சுவைதான் திருவிருந்து உலகிற்கு அறிவிப்பது. இவ்விருந்தில் காட்டிக் கொடுப்பவர், மறுதலிப்பவர், விட்டுவிட்டு ஓடி விடுபவர்கள் இவர்களெல்லாரும் ஒன்றிணைந்த விருந்துதான் திருவிருந்து. பிளவுபட்ட உறவுகளை ஒன்றுபடுத்தும் விருந்துதான் திருவிருந்து. கிறிஸ்தவ விசுவாசத்தின் ஆழமிகு சான்றாக இயேசுவில் ஏற்படுத்தப்பட்ட இத்தூய விருந்தில் பகைமையினையும், துரோகத்தினையும் மறந்து ஒன்றிணைவோம். இறையரசு எனும் புதிய கூட்டொன்றிப்புக்கு நம்மை நாம் ஒப்படைப்போம். அதுவே கிறிஸ்தேசுவோடு நம்மை இணைக்கும் இணைப்பாக அமையட்டும்.

அருள்திரு. **G. சதிலால் விஜின்**

19-04-2019

**புனித வெள்ளி**

# சிலுவை : மீட்பின் நிறைவேற்றம்

## CROSS : ACCOMPLISHMENT OF SALVATION

வி. ப. 14:15-22 எபி. 13:8-17
தி.பா. 22 யோவா. 19:23-30

**“அந்த இரசத்தைக் குடித்ததும் இயேசு, எல்லாம் நிறைவேறிற்று என்று கூறித் தலைசாய்ந்து ஆவியை ஒப்படைத்தார்”** (யோவா. 19:30)

ஜப்பான் பூகம்பத்தின் போது ஒரு தாய் செய்த தியாகத்தைக் கூறும் உண்மைக் கதை. பூகம்பத்தின் ஆக்ரோசம் குறைந்ததும், ஓர் இளம் பெண்ணின் வீட்டை அடைந்த மீட்புப் பணியாளர்கள் சிதைவுகளினுள்ளே அகப்பட்டுக் கிடந்த ஓர் உடலைக் கண்டனர். ஆனால் அந்த உடல் இருந்த முறை வித்தியாசமாக இருந்தது. சிரமத்துடன் அக்குழுவின் தலைவன் உடலைப் பரிசோதித்து உயிர் உள்ளதா எனப் பார்த்தார். ஆனால் அப்பெண் ஏற்கனவே உயிர் விட்டிருந்தார். மீட்புப் பணியாளர் அந்த வீட்டை விட்டுவிட்டு ஏனைய வீடுகளிலும் மீட்புப் பணியைத் தொடங்க ஆயத்தமமகிக் கொண்டிருந்தார்கள். ஏதோ ஒரு உள் உணர்வினால் அக்குழுவின் தலைவர் அந்த வீட்டுக்கு மீண்டும் வந்தார். உயிரற்ற உடலின் கீழே தெரிந்த இடைவெளியை பரிசோதித்த தலைவர் “குழந்தை, இங்கே ஒரு குழந்தை” என சத்தமிட்டார். மீட்புப் பணியாளர்கள் வந்து பார்த்த போது, அந்த உயிரற்ற உடல், தடித்த துணியினால் சுற்றப்பட்ட மூன்று மாதக் குழந்தையை பாதுகாத்தவாறு இருந்தது. வீடு உடையத் தொடங்கியதும், தன் உடலைக் கவசமாகப் பயன்படுத்தி குழந்தையைக் காப்பாற்றியிருக்கிறாள் தாய். இந்த தாயின் தியாகத்தைப் போல நம்மை உலுக்கும் தன்னலமற்ற ஓர் தியாகத்தையும் நாம் அறிவோம். அப்படி தியாகத்திற்கு இயேசுகிறிஸ்துவைத் தவிர மேலான முன் மாதிரியை நாம் நாம் எங்கும் காண முடியாது. நம்மீது கொண்ட தனது தியாக அன்பை வெளிப்படுத்த அவர் தெரிந்து கொண்டது மீட்பின் அடையாளமாக சிலுவை. இயேசுகிறிஸ்து தமது இரத்தத்தால் குலம், மொழி, நாடு, மக்களினம் ஆகிய அனைத்தினின்றும் மக்களை கடவுளுக்கென்று விலை கொடுத்து மீட்டுக் கொண்டார் (தி.வெ. 5:9b). இயேசு ஓர் இறைமகன், இறைவாக்கினர், மெசியா, போதகர் எனப் பலவாறு அழைக்கப்பட்டாலும், அவர் அவமானமிக்க சிலுவைச் சாவை ஏற்றார். யூதர்களின் பண்பாட்டில் ஒரு

தனிமனிதருக்கு கொடுக்கக்கூடிய உச்சபட்ச தண்டனை சிலுவைச் சாவு. அந்த அகோரமான சாவை ஏன் இயேசுகிறிஸ்து ஏற்றுக் கொண்டார்? அந்த சிலுவைச் சாவு நமக்கு உணர்த்துவது என்ன? அந்த திருச்சிலுவை எப்படி ஒரு மீட்பின் அடையாளமாக மாற்றப்பட்டது?

## *1. சிலுவைச் சாவு : லட்சியவாதியை தோற்கடிப்பதில்லை.*

உயர்ந்த லட்சியவாதியை மரணம் கூட தோற்கடிப்பதில்லை. என்பதை இயேசு தன்னுடைய சிலுவைச் சாவின் மூலம் நிரூபித்து காட்டிவிட்டார். அவரை சிலுவையில் அறைந்து கொன்று விடலாம். ஆனால் நீதிக்கான, நேர்மைக்கான, மன்னிப்புக்கான, இரக்கத்துக்கான அவரின் வேட்கையை, லட்சியத்தை எந்த சிலுவை மரணத்தாலும் தோற்கடிக்கமுடியவில்லை. இயேசுவின் சிலுவைச் சாவை வரலாற்றில் கொள்கைக்காகவும், உயர்ந்த லட்சியத்துக்காகவும் வாழ்ந்து மரணத்தை தழுவிய பெரிய பெரிய தலைவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம். ஒரு லட்சியவாதியை மரணம் தோற்கடிப்பதில்லை. உயர்ந்த லட்சியத்தைக் கொண்டு வாழும் தலைவர்களுக்கு மரணம் ஒரு புதியப் பிறப்புதான். "பாவிகளை மீட்க கிறிஸ்து இயேசு இவ்வுலகிற்கு வந்தார்" (1 தீமொ. 1:15). பாவிகளை மீட்க வேண்டும், சமத்துவ சமுதாயம் படைக்க வேண்டும் நீதியை நிலைநாட்ட வேண்டும் என்ற உயர்ந்த லட்சியத்தோடு இயேசுகிறிஸ்து வாழ்ந்தார். அந்த லட்சியத்தை யாரும் தோற்கடிக்க முடியாது என்பதை சிலுவைச் சாவின் மூலம் உலகுக்குக் காட்டினார். நிலை வாழ்வு தம்முடைய லட்சியமாக இருந்தால், இவ்வுலகப் பாடுகளால் நம்மை தோற்கடிக்க முடியாது.

## *2. சிலுவைச் சாவு - ஏன்?*

இயேசு ஓர் இறைமகன். கடவுளுக்கு இணையானவர் கடவுளாகவே இருந்தார். ஆனால் மனித உருவில் பிறந்து, பாவம் தவிர மற்ற அனைத்திலும் மனிதர்களைப் போல வாழ்ந்தார். ஏழைகள், அனாதைகள், பாவிகள், தொழுநோயாளிகள், பெண்கள், ஒடுக்கப்பட்ட மக்களோடு சங்கமித்தார். மக்களை ஒடுக்கும், ஏமாற்றும் சட்டங்கள், அதிகாரங்கள் அனைத்தையும் கேள்விக்குள்ளாக்கினார். யூதர்கள் கடைபிடித்த ஓய்வு நாளுக்குப் புதிய விளக்கம் கொடுத்தார். எருசலேம் ஆலயத்தில் நடந்த ஊழலையும், விதிமீறலையும் கடுமையாக சாடினார். ஏழைகள் சுரண்டப்படுவதைக் கண்டித்தார். பணக்காரர்களின் பகட்டுத் தன்மையை வெறுத்தார். "நான் தான் இறைமகன்" என்றும் "மெசியா" என்றும் பறைசாற்றினார். எனவே தான் அவர் மீது பொய்க் குற்றம் சுமத்தி,

அவருக்கு சிலுவைச் சாவை தண்டனையாகக் கொடுத்தார்கள். மக்களின் வாழ்வுக்காகவும், மீட்புக்காகவும் அவர் எடுத்த நிலைப்பாடு தான் அவருக்கு சிலுவைச் சாவை கொண்டு வந்தது. அவரது சிலுவைச் சாவு, யூத சமுகத்தில் நடந்த மிகப் பெரிய அரசியல் படுகொலையை இயேசு தயக்கமின்றி, ரத்தம் சிந்தி ஏற்றுக் கொண்டார்.

### *3. சிலுவைச் சாவு - ஒரு மீட்பின் அடையாளம்!*

சிலுவைச் சாவு என்பது உலகத்தின் பார்வையில் ஓர் அவமானச் சின்னம், இழிவின் அடையாளம், ஒரு மிகப் பெரிய தோல்வி. ஆனால் இறைவனின் பார்வையில் அது ஒரு மாபெரும் வெற்றி. இயேசு தனது வலுவின்மையில் வல்லமையை வெளிப்படுத்தினார். அவருடைய உயிரைக் கொல்லுவது எளிது. ஆனால் உயர்ந்த லட்சியத்தையும், ஆன்மாவையும் கொல்லுவது கடினம். அவருடைய சிலுவைச் சாவின் மூலமாக இந்த உலகுக்கு ஒரு பெரிய மீட்பும், விடுதலையும் கிடைத்தது. இயேசு தன்னுடைய சிலுவைச் சாவின் வழியாக உலகிலுள்ள எல்லா மனிதர்களையும் அன்பு செய்கிறார். விடுதலை வாழ்வுக்கு இட்டுச் செல்கிறார்.

யோவான் எழுதிய நற்செய்தியில் “தன் நண்பருக்காக உயிரைக் கொடுப்பதைவிட, மேலான அன்பு வேறொன்றுமில்லை” (யோவா. 15:13) என்று கூறியிருக்கிறார். கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தாலொழிய அது பலன் தராது என்பதைத் தன்னுடைய சாவின் மூலம் நிரூபித்துக் காட்டியுள்ளார். இயேசு மற்றவருக்காக இறந்து காட்டியது போல், நாம் மற்றவருக்காக சிறுசிறு தியாகங்கள் செய்ய தயாராக இருக்கிறோமா?

பிறரின் வாழ்வு மலர்வதற்காக, ஒருவர் சாக வேண்டும் என்ற உயர்ந்த அன்பை இயேசுவின் சிலுவைச் சாவில் காண்கிறோம். உண்மை, அன்பு, நீதி, மன்னிப்பு, உறுதியான நிலைப்பாடு ஆகியவற்றை இந்நிகழ்வு வெளிப்படுத்துகிறது. சிலுவைத் திருக்காட்சியைக் காண்கின்ற, சிந்திக்கின்ற நாம் பகிர்வையும், மன்னிப்பையும், இரக்கத்தையும் வாழ்வில் கடைபிடிக்க வேண்டும். நாம் சாவைப் பற்றி கவலைப்படாமல், ஆவிக்குரிய இயல்போடு புதிய வாழ்க்கை வாழ வேண்டும் என்ற நம்பிக்கையைப் பெறுவோம். இதுவே சிலுவைச் சாவின் வெற்றி.

அருள்திரு. S. **ஞான டாஸ்லின்**

## உயிர்ப்பு : எல்லையற்ற மாற்றுருவாக்கத்தைக் கொண்டாடுதல்

**RESURRECTION : CELEBRATING BOUNDLESS TRANSFORMATION**

| | |
|---|---|
| 2 சாமு. 22:1-20 | 1கொரி. 15:20-28 |
| திபா. 16 | மாற். 16:1-11 |

**"....அவர்கள் நிமிர்ந்து உற்று நோக்கிய பொழுது கல் புரட்டப்பட்டிருப்பதைக் கண்டார்கள், அது பெரியதொரு கல்."**

கொண்டாட்டம் என்ற வார்த்தையைக் கேட்கும்போதே மனதில் ஓர் இனம் தெரியாத மகிழ்ச்சி மற்றும் மன நிறைவு உணர்வு நம் மனதில் குடிகொள்கிறது. அத்துடன் சிதறிக்கிடக்கும் சொந்த பந்தங்கள், நண்பர்கள் ஒன்று சேர்ந்து வந்து தங்களின் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளக் கூடிய காட்சியும் நம் மனதில் பசுமரத்தாணியைப்போல பதிந்திருக்கிறது. உயிர்ப்பு பெருவிழாவின் கொண்டாட்டத்திற்குக் காரணம் இனி வாழ்வுக்குச் சாவில்லை சாவுக்கு வாழ்வில்லை; ஏனெனில் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து உயிர்த்துவிட்டார்! வாழ்வுக்கு எதிரான பாவம், பாவத்திற்கு காரணமான சாத்தான், பாவத்தின் விளைவான சாவு இவை அனைத்தையும் எதிர்த்து போரிட்டார். இப்போராட்டத்தில் சாவு அவரை நிரந்தரமாக சாகடிக்க முயற்சித்தது. ஆனால் இயேசு தனது உயிர்ப்பால் சாவுக்கே சாவு மணி அடித்து சாவுக்கு இனி வாழ்வில்லை என்றார். இறைமகனாம் இயேசுவின் முடிவில்லா இவ்வெற்றியைத் தான் ஈஸ்டர் தினத்தன்று நினைவு கூர்ந்து கொண்டாடுகிறோம்.

நற்செய்திப் பாடமாகிய மாற்.16:1-11 வரையுள்ள திருமறைப்பகுதியின் அடிப்படையில் உயிர்ப்பின் அனுபவம் அவரது அடியவரின் வாழ்வில் எத்தகைய மாற்றுருவாக்கத்தை ஏற்படுத்தியது என்பது குறித்து இவண் சிந்திப்போம்.

### *1. ஆதிக்கச் சமூகத்தின் அதிகாரத்தை அதிரச் செய்த உயிர்த்தெழுதல்* : (மாற்.16:4)

"....அவர்கள் நிமிர்ந்து உற்று நோக்கிய பொழுது கல் புரட்டப்பட்டிருப்பதைக் கண்டார்கள், அது பெரியதொரு கல்." மரணத்தை நிறுத்த மருந்தில்லை. இது அனைவருக்கும் பொதுவானது. அதற்கு

சாதிமதமோ, நிறபேதமோ எதுவும் இல்லை. எல்லோருக்கும் உரியது. அப்பேற்பட்ட மரணம் இயேசு ஒருவரைத்தான் ஆராதித்தது. அவரை ஆண்டவர் ஆக்கியது. 'ஆண்டவர் என்றால் வென்றவர்', என்று பொருள்.இவர் மரணத்தை வெற்றி கொண்டு ஆண்டவராக உயிர்த்தெழுந்தார். வாரத்தின் முதல்நாள் காலையிலே மகதலா மரியா, யாக்கோபின் தாய் மரியா, சலோமி ஆகியோர் இயேசுவின் இறந்த உடலை நறுமணமூட்டி பாதுகாத்து வைப்பதற்காக அவரது உடல் அடக்கம் செய்யபட்டிருந்த கல்லறைக்கு வந்தார்கள். வரும் வழியில் கல்லறையை மூடியிருக்கின்ற வலுவான கல்லை நமக்காக யார் புரட்டித் தள்ளுவார் என்று அவர்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டார்கள். ஏனெனில் கல்லறையை மூடி வைத்திருந்த பெரும் கல்லை அவர்கள் ஏற்கெனவே பார்த்திருந்தார்கள் (மாற். 15:46,47). ஆனால் கல்லறையினருகில் அவர்கள் வந்து பார்த்தபோது கல்லறையை மூடியிருந்த பெருங்கல் அகற்றப்பட்டிருந்தது. பெண்களுக்கு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது. அதிர்ச்சிக்கான காரணம் இயேசுவுக்கு மிக நெருக்கமானவர்கள் கூட இயேசுவின் உயிர்த்தெழுதலை எதிர்பார்த்திருக்கவில்லை. யூத சமூகத்தில் வழக்கமான கிணறுகளையோ, கல்லறைகளையோ மூடி வைத்திருக்கும் பெரிய கற்களை அப்புறப்படுத்த பலரின் உதவி தேவைப்படும். யாக்கோபு காலத்து கிணறு மீது வைக்கப்பட்டிருந்த கல்பற்றிய குறிப்பில் (தொ.நூ.29: 2,3) அதை அகற்ற பல இடையர்கள் ஒன்றிணைத்து முயற்சித்ததாக நாம் படிக்கிறோம். கல் என்பது அதிகாரத்தைக் குறிப்பிடும் ஒன்றாக திருமறையில் விளக்கப்பட்டுள்ளது. விபச்சாரத்தில் பிடிக்கப்பட்டவர்களைக் கல்லால் எறிந்து கொல்ல வேண்டும் என்பது மோசே நமக்குக் கொடுத்த திருச்சட்டத்திலுள்ள அதிகாரம் என யோவா. 8:5 ல் குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசு நாதரின் உடல் அடக்கம் செய்யப்பட்டிருந்த கல்லறையை மூடி வைத்திருந்த பெரிய கல்லில் அரசு முத்திரையும், கருத்தாய் காவல் செய்ய ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. (மத். 27:66). இந்த வலுவான கல் புரட்டப்பட்டிருப்பது, அரசு அதிகாரம் மற்றும் சமயவாதிகளின் திட்டமிடப்பட்டு அரங்கேறிய அனைத்து சதிகளும் இயேசுவின் உயிர்ப்பால் தகர்க்கப்பட்டு விட்டதையும், கடவுளின் உயிர்ப்பு ஆற்றலுக்கு முன் உலக அதிகாரங்கள் நிற்க இயலாது. என்பதையும் விவரிக்கின்றன. மேலும் உண்மையையும் நீதியையும் எவராலும் அடக்கி அழித்துவிட இயலாது என்ற செய்தியும் இதன்மூலம் நிரூபணமாகிறது. அவர்கள் கல்லறைக்குள் சென்று பார்த்தபோது இயேசுவின் உடல் வைக்கப்பட்டிருந்த இடத்தில் வெள்ளை நிற ஆடை அணிந்த இளைஞர்

ஒருவர் அமர்ந்திருப்பதைக் கண்டு திகிலுற்றனர். (மாற். 15:5) அவர் அவர்களிடம் 'திகிலுற வேண்டாம்; சிலுவையிலறையப்பட்ட நாசரேத்து இயேசுவை தேடுகிறீர்கள்; அவர் உயிருடன் எழுப்பப்பட்டார். அவர் இங்கே இல்லை; இதோ அவரை வைத்த இடம்', (மாற். 16:6) வெற்றுக் கல்லறை இயேசு உயிர்த்தெழுந்தார் என்பதற்குரிய சான்றாக மட்டும் அமையாமல் உயிர்ப்புப் பெருவிழாவைக் கொண்டாடும் போதெல்லாம் நாம் உயிர்த்த சமூகமாக ஒளிர்ந்திட வேண்டும் என்னும் பேருண்மையையும் நமக்கு உணர்த்திக் கொண்டிருக்கிறது. .

## *2. கடைநிலையினரை மைய நிலைக்கு உயர்த்திய உயிர்த்தெழுதல்* : (மாற். 16:7)

இயேசுவின் பாடுகளில் பங்கேற்ற பெண்கள் அவருடைய சிலுவைச் சாவிலும் அதாவது வாழ்வின் இறுதி வரையிலும் அவரோடு வாழ்ந்தார்கள். கலிலேயாவில் இயேசு இருந்தபோது இவர்கள் அவரை பின்பற்றி அவருக்கு பணிவிடை செய்தவர்கள். இவர்களுக்குத் தான் முதன்முதலில் உயிர்த்த இயேசு திருக்காட்சி அருளியதோடு, உயிர்ப்புச் செய்தி தூதுவர்களாகவும் ஏற்படுத்தினார். 'நீங்கள் புறப்பட்டுச் செல்லுங்கள் பேதுருவிடமும் மற்ற சீடரிடமும், உங்களுக்கு முன்பாக அவர் கலிலேயாவுக்குப் போய்க் கொண்டிருக்கிறார்; அவர் உங்களுக்குச் சொன்னது போலவே அவரை அங்கே காண்பீர்கள்' என்றார் (மாற். 16 : 7).

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் வாழ்ந்த மக்கள் பெண்கள் கூறும் சான்றுகளை நம்பமாட்டார்கள். மேலும் பெண்கள் கூறும் சாட்சிகளை நீதி மன்றத்தில் சான்றுகளாக அங்கீகரிக்கவும் மாட்டார்கள். இப்பேர்பட்ட சூழலில், சமூகத்தின் அடிமட்டத்தில் வாழ்ந்த பெண்களே இயேசுவின் உயிர்ப்பு நிகழ்வை முதலில் பார்க்கும் பெரும்பேறும், இயேசுவின் உயிர்ப்புச் செய்தியை இயேசுவின் முதன்மைச் சீடராகிய பேதுருவிடமும், ஏனைய சீடர்களிடமும் அறிவிக்க பணிக்கப்பட்டது புரட்சிகரமான அனுபவமாகும். சமூகத்தனரால் பாரம்பரியமாக பேணப்பட்டு வந்த பொது மரபுகள் இயேசுவின் உயிர்த்தெழுதலால் மாற்றம் பெற்றன. 'நான் உயிருடன் எழுப்பப்பட்டபின் உங்களுக்கு முன்பே கலிலேயாவுக்குப் போவேன் என்றார்' (மாற். 14:28) உயிர்த்தெழுந்த ஆண்டவரை சந்திக்க வேண்டுமெனில் கலிலேயாவுக்குச் செல்லுங்கள். கலிலேயா யூதேயாவில் மிகவும் வெறுக்கப்பட்ட இடமாக இருந்தது. வேத அறிஞர்களின் கருத்துப்படி கலிலேயன் ஒருவனை நாகரீகமற்றவன், கிராமப்புறத்தான், வம்புக்கு இழுக்கிறவன் எனறு மக்கள் தாழ்வாக நினைத்திருந்தார்கள். மேலும் யூதர்களின் அதிகாரத்தின் மையமாக இருந்த எருசலேமில் இயேசு

தன்னை முதலில் வெளிப்படுத்த விரும்பாமல், வெறுக்கப்பட்ட பகுதியான கலிலேயாவில் வெளிப்படுத்த விரும்பினார். உயிர்த்தெழுந்த இயேசு முதலில் கலிலேயாவுக்கு சென்றது, அவருடைய ஊழியமும், நற்பணியும் யாருக்காக அமைய வேண்டும் என்பதை நமக்கு உணர்த்துகிறது. இயேசுவின் அருட்பணி சமூகத்தால் ஓரங்கட்டப்பட்ட மக்கள் நடுவில் செய்யப்பட வேண்டும் என்பது இதன் வழி உறுதிப்படுத்தப்படுகிறது. ஆனால் இன்றைய திருச்சபை நகர்புறத் திருச்சபைகளுக்கு மட்டுமிஞ்சிய முக்கியத்துவம் கொடுத்து கிராமப்புற ஏழைத் திருச்சபைகளை கைவிட்டபட்ட நிலைக்கு தள்ளுவது உயிர்த்த கிறிஸ்துவின் கட்டளைக்கு முரண்பாடாக இருக்கின்றது.

'இந்துத்வா பரிவார்', என்னும் இயக்கத்தின் தலைவர்களில் ஒருவராகிய M.S.கோல்வால்கர் கிறிஸ்துவைப்பற்றியும், கிறிஸ்தவத்தைப் பற்றியும் பின்வருமாறு கூறியுள்ளார். கிறிஸ்து ஒரு பெரிய மகான் என்பதில் சந்தேகம் எதுவுமில்லை. ஆனால் பிற்காலத்தில் கிறிஸ்துவின் பெயரால் நடந்தவைகளுக்கும், கிறிஸ்துவுக்கும் எந்த தொடர்பும் இல்லை. அவரைத் தொடர்ந்து எழுந்தது கிறிஸ்தவமல்ல, சபை அமைப்பு 'ஒரே ஒரு உண்மையான கிறிஸ்தவர் இருந்தார் அவரும் சிலுவையில் மரித்துவிட்டார்' என்ற கூற்றை உண்மையல்ல என்று நிரூபிக்க ஒவ்வொரு கிறிஸ்தவரும் சான்று குன்றாமல் வாழவேண்டும்.

'நமது ஆண்டவர் உயிரோடு இருக்கிறார் என்பது சொற்களால் அறிக்கை செய்ய வேண்டிய ஒன்றல்ல. தீமையையும், பாவத்தையும் வெல்லும் வாழ்க்கையால் அறிக்கை செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்'. பேராயர் அறிவர் சாமுவேல் அமிர்தம்.

அருள்திரு. S. **ஜாண் சகாயம்**

28-04-2019

உயிர்ப்புக்கு பின்வரும் முதலாம் ஞாயிறு

# உயிர்த்த ஆண்டவரால் ஆற்றல்படுத்தப் பெறுதல்

**EMPOWERED BY THE RISEN LORD**

தொநூ. 28:10-22 | திப. 20:7-12
திபா. 29 | யோவா. 20:11-18

**"....நான் ஆண்டவரைக் கண்டேன்....."** (யோவா. 20:16)

திருத்தூதுவ ஆன்மிகத்திற்கு உயிர்த்தெழுந்த காட்சியே அடிப்படை ஆற்றலாய் இருந்தது. ஆதித் திருச்சபைக்கு அடித்தளமான ஆன்மிகம் உயிர்த்தெழுதல் ஆகும். உயிர்ப்பு புதியஏற்பாட்டின் உயிர் நாடி, மையச் சிந்தனை எனலாம். உயிர்த்தார் என்ற நற்செய்தியே இயேசுவின் அடியார் புத்துயிர் பெற்று செயலாற்ற திருச்சபை தள்ளிவிட்டு வளர காரணமாயிருந்தது.

இயேசுவின் சீடர்கள் வாரத்தின் முதல் நாள் காலையிலே கல்லறை நோக்கி விரைந்தார்கள். கல்லறை திறந்து உடலைக்காணாது எல்லோருமே தங்களிடத்திற்கு திரும்பினார்கள். ஆனால் மரியாள் உடலைக் காணாது திரும்பவில்லை. மாறாக, தேடினார். கண்டுபிடிக்க விரும்பினார். சிலுவைக்காட்சியில் சீடர்கள் பலர்ஓடிய இடத்தில் மரியாள் சிலுவையினருகே நின்றிருந்தார் 19:25. இப்போதும் கல்லறையில் இல்லாத உடலைத் தேடினாள். விசாரித்தார், அழுதார், ஏமாற்றம் அடைந்ததாய் புரிந்தார், உடலை எடுத்து சென்றதாய் நினைத்தார். இந்த சூழலில் இயேசு மரியாளே என்று அழைத்தார். இந்த அழைப்பு, மரியாளை ஆற்றல்படுத்தியது.

## *1. உறுதியான ஆன்மிக வாழ்விற்கு ஆற்றல்* : (யோவா.20:14)

இயேசுவின் சிலுவைப் பாடுகளும், மரணமும் இயேசுவின் அடியாரது ஆன்மீக வாழ்வில் உறுதியற்ற ஆன்மீகத்தைத் தந்தது. துன்பத்தின் பயம், காயங்களின் பயம், மரண பயம், தனிமையில் பயம், உடலில்லாக் கல்லறை இவையெல்லாம் உறுதியில்லா விசுவாச வாழ்வைத் தந்தது. உடலில்லாக் கல்லறையைக் கண்டு மரித்த உடலைத் தேடும் மரியாளின் ஆன்மீகம் யோவா.20:13- ஆம் வசனத்தில் காண முடிகிறது. 20:9-ல் மரித்தோரிலிருந்து எழுந்திருக்க வேண்டும் என்ற இறைவாக்கினரை அறியவில்லை.

20:10-ல் உடலைக் காணாது திரும்பிச் சென்றனர்
20:11-ல் மரியாள் உடலைக் காணாத கல்லறையைக் கண்டு பயந்தார்.

20:13-ல் மரியாள் அழுதார்.
20:14-ல் இயேசுவைக் கண்டும் அறியாத நிலை
20:15-ல் இயேசுவை தோட்டக்காரராக எண்ணினார் மரித்த உடலை எடுத்துக் கொள்ள ஆயத்தம்.

புரிதலில் ஆன்மிக பலவீனம்
பார்வையில் ஆன்மிக பலவீனம்
பக்தியில் ஆன்மிக பலவீனம்

இந்த பலவீனங்கள் அறைவீட்டிற்குள் அடங்கியிருக்கச் செய்தது. ஆனால் உயிர்த்தெழுந்த ஆண்டவர் ஆன்மிக அசைவுகளை அகற்றி உறுதியான ஆன்மிக வாழ்விற்கு ஆற்றல் கொடுத்தார். தி.ப. 4:8-10 அதிகாரிகள் முன், ஆலயத்தில், ஜனங்கள் முன் பேதுரு தைரியமாய் நிற்க ஆற்றல் படுத்தியது உயிர்த்தெழுதலே.

***2. உரையாடல் உறவைப் புதுப்பிக்கும் ஆற்றல்*** : (யோவா.20:16)

உயிர்த்தெழுந்த ஆண்டவருடன் உரையாடல் புதிய ஐக்கியத்திற்கு ஆற்றல் படுத்தியது. உயிர்த்தெழுந்த நிகழ்வுகளில் ஆழமான உரையாடலை அதிகம் காண முடிகிறது. சிறப்பாக மூன்று உரையாடல் இங்கு இடம் பெறுகின்றது.

a. தூதருடன் உரையாடல், 13
b. இயேசுவுடன் உரையாடல், 15-17
c. சீடர்களுடன் உரையாடல், 18

கல்லறையில் இருந்த இரண்டு தூதர்கள் மரியாளிடம் ஏன் அழுகிறாய் என்று கேட்டனர். கரிசனையுடன் கூடிய உரையாடல் தாமாகவே தூதன் முன் வந்து உரையாடலை தொடங்குகின்றார். உரையாடல் அடுத்தவரிடமிருந்து வர வேண்டும் என்று எதிர் பார்ப்பதைவிட தாமாகவே தொடங்குவது சிறப்பு உயிர்த்தெழுந்த ஆண்டவர் மரியாளை ஸ்திரியே, ஏன் அழுகிறாய், யாரைத் தேடுகிறாய் மரியாளே என்ற வார்தைகளால் உரையாடிய போது மரியாளின் மறு உரையாடல் ரபூனி போதகரே என்று அமைந்தது.

இயேசு தம்மைத் தேடுவோரை அறிந்தும் யாரைத் தேடுகிறாய் என்று அக்கரையுடன் கேட்டு உரையாடுகிறார். விசாரத்துடன் விசாரித்தார். அழுக்கிறவர்கள் மீது கிறிஸ்தவம் அக்கரை காட்டவேண்டும்.

திரும்பிப்போன சீடர்களை சந்தித்து மரியாள் உரையாடினார். இயேசுவும் சீடர்களுடன் உரையாடினர் (21). உயிர்த்தெழுந்தவருடன் உரையாடியதால் பிரிந்திருந்த பயந்திருந்த தம் அடியவரிடம் புதிய ஐக்கியம் உருவானது. தொடக்க நூலில் நாம் அறிந்து கொள்ளும் உண்மையாதெனில் இறை உரையாடலே இறைவனின் உடனிருத்தலை உறுதிப்படுத்தும்

என்பதாகும் (தொ.நூ. 28:10-22). யாக்கோபு பெத்தேலில் பெறும் திருக்காட்சி அவரது வாழ்வை இறை உறவுக்கு நேராக ஒன்றிக்க செய்தது. அதன் வாயிலாக ஊழியரின் வாக்குறுதியைப் பெற்றுக் கொள்கிறார். விசுவாச வாழ்வின் நிலை நிற்றல் இறை உறவாடுதலோடு தொடரவேண்டும் என்பதாகும். அதுவே நமக்குள் ஆழமிகு அனுபவத்தை ஏற்படுத்தும்.

### *3. உடலுடன் உயிர்த்தவரை அறிவிக்க ஆற்றல்* :

(யோவா. 20:17)

உடல் இல்லாத கல்லறை உடலை களவு செய்தனர் என்று சொல்லமுடியாதபடி உடல் வைத்த இடத்தில் தலைப்பகுதியிலும், கால்பகுதியிலும் இரண்டு தூதுவர்கள் இருந்தார்கள். மரியாள் தோட்டகாரருக்கு உடலை எடுத்து எங்கு வைத்துள்ளார்கள் என தெரியும் என்று நம்பியதால் தோட்டக்காரராக இயேசுவை நினைத்து கேள்வி எழுப்பினார். ஆனால் இயேசு உயிர்த்த உடலுடன் காட்சி தந்தார். ஆனால் மரியாளால் உயிர்த்த இயேசுவின் தோற்றத்தை அடையாளம் காணமுடியவில்லை. நாம் தேடும் போது அவர் தேடி வருகின்றார். ஆனால் மரியாள் குறுகிய காலத்திலேயே இயேசுவின் தோற்றத்தை அடையாளம் காணவில்லை.

மரியாளுக்கு தம்மை வெளிப்படுத்திய ஆண்டவர் உயிர்த்த செய்தியை அறிவிக்கச் சொன்னார். மரியாள் அக்கட்டளைக்கு கீழ்ப்படிந்து சீடர்களுக்கு அறிவித்தார். சீடர்கள் இயேசுவைக் கண்டனர். சீடர்களும் அறிவிக்க கட்டளைப் பெற்றனர். உயிர்த்தெழுந்த அனுபவமே அன்றும் இன்றும் அறிவிக்க ஆற்றல் தருகின்றது. தி.பா. 3:15-ல் பேதுருவும், யோவானும் கடவுள் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்று சான்று பகர்ந்தனர். திருச்சபை உடலுடன் உயிர்த்தவரையே இன்றும் அறிவிக்கின்றது. உயிர்த்த ஆண்டவரின் ஆற்றலாலே பவுல் வாலிபனுக்கு உயிர் கொடுத்தார் (தி.பா. 20:12). உயிர்த்த ஆண்டவராலே ஆற்றல் படுத்தப்படும் போது வாழ்வு முழுமையும் உயிரோட்டம் பெற்றதாக அமையும்.

இன்றைய நாட்களில் நற்செய்தியின் தகவுகள் தகர்க்கப்பட்டு சுயநலம் அரியணையேற்கும் நிலையில் இறைமக்கள் அனைவரும் விசுவாச தெளிவுடன் உயிர்த்தெழுந்த ஆண்டவரால் வழங்கப்பட்ட ஆற்றலுடன் முன்னெடுத்து செல்வதே சிறப்பானதாகும். இத்தகைய ஆற்றலோடு ஓங்கி நிற்கும் மக்களுக்கு விடியலின் வாழ்வை காண்பிப்போம். அதுவே விண்ணரசின் பணியாக நமது இதயங்களில் நிறைந்திருக்கட்டும்.

அருள்திரு. I. **ரெஞ்சித் வேதகுமார்**

05-05-2019

உயிர்ப்புக்குப் பின் வரும் இரண்டாம் ஞாயிறு

# உயிர்த்த ஆண்டவரோடு திருமறையை மீள்படித்தல்

**RE READING THE SCRIPTURE WITH THE RISEN LORD**

2 குறி: 34: 29-33 தி.ப: 8 :26 -40
தி.பா. 19: 7- 14 லூக் 24: 13-27

**"வழியிலே அவர் நம்மோடு பேசி; மறைநூலை விளக்கும்போது; நம் உள்ளம் பற்றி எரியவில்லையா?"** (லூக். 24:32)

திருமறையை படித்தேன்......தினமும் படித்தேன்......திரும்பவும் படித்தேன்.....நூறு முறை படித்தேன்......முடித்தேன்....என்றிட்ட ஒருவரைப் பார்த்து.....ஒருமுறையேனும்.....உயிர்த்த ஆண்டவரோடு பயணித்தீர்களா என்றிட்டால்......அது.....இது.......எது......என்றெல்லாம் கேள்விகள் கேட்டு...... கேலிகள்.....கூறி நிற்பதை கண்டிடலாம்! காரணம்....இப்பேர்பட்டவர்கள்... உயிர்த்த ஆண்டவரோடு அநுபவரீதியாக...... ஒருமுறைகூட...... மறைப்படி.... முறைப்படி...... பயணித்ததில்லை எனக் கண்டிடலாம். இத்தகையோர் உயிர்த்த ஆண்டவரோடு திருமறையை மீள் படித்தல் வேண்டும்! இல்லையேல் "நாய் பெற்ற தெங்கம் பழம் போல்" எனும் முதுமொழிக்கு உரியவர்கள்.....பெரியவர்கள்!

நற்செய்தியாளர் லூக்கா ஓர் மருத்துவர்! இவர் சிரியா நாட்டு அந்தியோக்கியாவைச் சார்ந்தவர்! புற இனத்துக் கிறிஸ்தவர். திருதூதுவர் பவுலாருடன் சேர்ந்து தொடக்ககாலத்திருச்சபையில் உயிர்த்த ஆண்டவரைப் பற்றிய உள்ளுணர்வையும், உத்வேகத்தையும் பழைய ஏற்ப்பாட்டு செய்தியுடன் உள்ளடக்கி கி. பி. 70 க்குபின் உண்மைகளாக.... உலகிக்கு அறிவிக்கிறார்... நாம் அறிந்துக் கொள்ளும் உண்மை என்ன?

## *1. உணர்வூட்டி திருமறையை படிப்பிக்கும் உயிர்த்த ஆண்டவர்!* : (லூக்கா 24:16)

"அவர் யார் என்று அறிந்து உணரமுடியாதவாறு; அவர்கள் கண்கள் மறைக்கப்பட்டிருந்தன."

கல்லறையில் இயேசுவைக் காணவில்லை! கல் மூடி புரட்டப்பட்டிருப்பதைக்கண்டனர் காரிகைகள்? குழப்பமுற்றிருந்த அவர்கள்முன்.... ஒளி வீசும் ஆடைகள் அணிந்த இருவர் தோன்றினர்! இவர்கள் விண்தூதர்கள்! இது வரை இயேசு சொன்ன இறைவாக்குகளை

மீண்டும் படித்திட...கடைபிடித்திட....வலியுறுத்துகின்றனர்!. இயேசுநாதர்... முன்னுரைத்தவைகளைக் கூறி புத்துணர்வடையச் செய்ய முயல்கின்றனர் "இயேசு கலிலேயாவில் இருக்கும்போது அவர் உங்களுக்கு சொன்னதை நினைவு கூறுங்கள், மானிடமகன் சிலுவையில் அறையப்பட வேண்டும் மூன்றாம் நாளில் உயிர்த்தெழ வேண்டும்! என்று சொன்னாரே" என்றனர் (லூக். 24:6,7).

இப்போதுதான்... இயேசு முன்னுரைத்த வாக்குகளை உணர்ந்து கொள்கின்றனர். கல்லறையை விட்டுத்திரும்பிப் போய்... நிகழ்ந்தவைகளைச் சீடர்களுக்குத் தெரிவிக்கின்றனர். உயிர்ப்பின் செய்தியைக் கேட்ட சீடர்கள் பதினொருவரும், இன்னும் இயேசுவின் உயிர்த்தெழுதல் குறித்த உண்மையை உணர்ந்து கொள்ளவில்லை! "அவர்கள் கூற்று வெறும் பிதற்றலாகவே தோன்றியது" லூக். 24:1.

அதேநாளில் சீடர்கள் இருவர், எருசலேமிலிருந்து சுமார் பதினொரு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள எம்மாவூருக்குச் சென்று கொண்டிருந்தனர்! இயேசுவின் உயிர்த்தெழுதல் குறித்து.... உரையாடிக்கொண்டும், வினவிகொண்டும் பயணித்தனர். சுய உணர்வற்றவர்களாய் பயணிக்கும் அவர்களோடு உயிர்த்த இயேசுவும் நெருக்கமாக பாதசாரியாய் நடந்து வருகிறார்!. "இயேசு நெருங்கி வந்து அவர்களோடு நடந்து சென்றார்; அனால் அவர் யார் என்று, அறிந்து உணராதவாறு... அவர்கள் கண்கள் மறைக்கப்பட்டிருந்தன! லூக். 24:16"

உயிர்த்தெழுந்து, உடன் நடந்து முன்னறிவித்த உயிர்த்தெழல் செய்தியை..... மீண்டும் உரைக்கிறார் இயேசு. அவரைக்கண்டும், செய்தியைக் கேட்டும், முகவாட்டத்தோடு நிற்கின்றனர்.

"அறிவிலிகளே... இறைவாக்கினர்கள் உரைத்த எல்லாவற்றையும் நம்ப இயலாத மந்த உள்ளத்தினரே; மேசியா தம் மாட்சி அடைவதற்குமுன் இத்துன்பங்கள் பட வேண்டுமல்லவா?" என்றுரைத்து முன் படிப்பித்த பாடங்களை..... மீண்டும் உணர்த்திப் படிப்பிக்கிறார்! லூக். 24:25, 26. "மேலும் மோசே முதல், இறைவாக்கினர் வரை. அனைவரின் நூல்களிலும், தம்மைக்குறித்து எழுதப்பட்ட அனைத்தையும்; அவர்களுக்கு விளக்கினார்" லூக். 24:27.

பாடகர் தலைவர்க்கு தாவீது எழுதிய புகழ்பாவில் பார்த்திடலாம்.
"தம் தவறுகளை உணர்ந்துகொள்பவர் யார் தாம்?
என் அறியாப்பிழைக்காக என்னை மன்னியும்" திருப்பாடல்: 19:12.
"ஆண்டவரின் திருச்சட்டம் நிறைவானது என்று... அது புத்துயிர் அளிக்கின்றது. " தி. பா. 19:7.

இன்றைய இறைமக்களைப்பார்த்தும், உயிர்த்த ஆண்டவர் முன்னறிந்த திருமறையை... மீண்டும் அறிந்து கொள்ள வேண்டும் என்றே மீண்டும் படிக்க.... கடைபிடிக்க முனைகிறார்!.

## *2. உணர்வூட்டி திருமறையை படிப்பிக்கும் உயிர்த்த ஆண்டவர்!* : (லூக்கா 24:30)

"அவர்களோடு அவர் பந்தியில் அமர்ந்திருந்தபோது... அப்பத்தை எடுத்து; கடவுளைப் போற்றி; பிட்டு அவர்களுக்குக் கொடுத்தார்"

உணர்வில்லாதவர்களிடம் உரையாடிக்கொண்டே தான் செல்ல வேண்டியே எம்மாஊரை சமீபித்தார் இயேசு! சொல்ல வேண்டியவைகளைச் சொல்லிக் கொண்டே, நடந்து வந்தவர்... சற்று அப்புறம் கடந்து செல்பவர் போல் காட்டிக்கொண்டார்!.. அவர்களோ... அவரை தங்களோடு தங்கியிருக்கப் பணிந்தனர்! கதிரன் கடந்து போயிற்று... காரிருள் வந்தாயிற்று, கலக்கம் தொடர்ந்தாயிற்று!. அவலம் வந்தால் இயேசுவை., அவர்கள் கட்டாயப்படுத்தி அழைத்தனர்!.

அழைத்தவர்கள் குரல்கேட்டு; அவர்களோடு அமர்ந்திருந்த ஆண்டவர்., அப்பத்தை எடுத்து, கடவுளைப்போற்றி., பிட்டு, அவர்களுக்குக் கொடுத்தார். "அப்போது அவர்கள் கண்கள் திறந்தன." அவர்களும் அவரை அடையாளம் கண்டு கொண்டனர். முன்னொருமுறை நற்செய்தியாற்றிய இயேசு மாலை வேளையில் மலை மேட்டினில்., பசியுடன், பசும்புல்மேல்அமர்ந்திருந்தவர்களுக்காய்ப் பரிதபிக்கிறேன் எனக்கூறி 5 அப்பமும், 2 மீன்களும், 5 ஆயிரங்களுக்குமேல் உணவூட்டி., 12 கூடைகள் மீதியெடுத்தார். (லூக். 9:17.) இச்சொல்லைக் கூட மறந்தன்ர் சீடர்கள்! இப்போது மரித்து மூன்றாம் நாளில் மீண்டும் உயிர்த்த அதே நிகழ்வைப் புரிகிறார். அப்பத்தை எடுத்துப் பிட்டு தம் சீடர்களுக்குக் கொடுத்தார். மேல் வீட்டறை நிகழ்வினை மறந்து விட்ட சீடர்களுக்கு மீண்டும் நினைவுப்படுத்துகிறார். புத்துயிராக்கம் பெற்றிட பழைய நிகழ்வை நடைமுறைப்படுத்துகிறார்!

பாலைவனப் பயணத்தில் இஸ்ரயேலருக்கு பாறை நீரும், வான மன்னாவும் கொடுத்தக் கடவுள் .....எம்மாவூர் பயணத்திலும் உயிர்த்தெழல் நிகழ்வை உறுதி செய்து காட்டிடவும், ஒருமைப்பாட்டைப்புதுப்பிக்கவும், பசிப்பிணியைப்போக்கவும் வீட்டினுள் புகுந்து அனைவருக்கும் நிகழ்ச்சியைக் கொடுக்கிறார்!

ஜெப ஆலயத்தலைவர் புதல்வி பன்னிருவயதுடையவள் மாண்டாள், ஆலயத்தலைவனின் வேண்டுதலைக்கேட்ட இயேசு அவளை மீண்டும் உயிருடன் எழுப்பினார். அவளுக்கு உணவு வழங்கிட கட்டளையிட்டார்! (லூக். 8:55)

இன்றைய உலகில் ஒரு நாள், ஒருவேளை, பலநாள், பலவேளை, உணவின்றி உயிர்வாழும் மக்களை சந்தித்து உணவூட்டி, உறவூட்டி, உயிரூட்டி வாழவைக்கும் சிறுவர் காப்பகங்கள், அனாதையர் இல்லம், முதியோர் இல்லங்கள் எல்லாம். உலகமெங்கும் தொடங்கப்பட்டு, தொடர்ந்து நடப்பதற்கு முன்னோடியான உயிற்த்தெழுந்த ஆண்டவரின் உணவூட்டிய நிகழ்வின் அடிப்படைச் செயல்கள் தான்.

எம்மாவூர் பாதையில் பயணித்த சீடர்கள் ..... வீட்டில் இயேசுவை அழைத்தனர்! உணவை பகிர்ந்தளித்தார்!.

ஆனால் இன்றைய நடைமுறைகள் தொடரும் இடங்களில் உயிர்த்தெழுந்த இயேசுவும் உடன் வந்துள்ளார், அவர் தம் கரங்களால் உணவை வாங்கி உண்ணுகின்றோம் என்ற எண்ணம் இருந்திட வேண்டும்! இல்லையேல் சுயநலங்களும், சுக போகங்களும் தலை விரித்துத் தாண்டவமாடிடக்கூடும்!

இன்பர் இயேசு முன்னுரைத்த உவமையில் உறைந்து கிடக்கும் உண்மையை உலகறியச்செய்திடல் வேண்டும்! (லுக். 15:23,24)

"மரித்தான், உயிர்த்தான், உணவுண்போம் வாருங்கள்" என இயேசு முன்னுரைத்த வாக்குகளை மீண்டும் சீடர்களுக்கு உயிர்த்தபின் நடைமுறைப்படுத்தி படிப்பிக்கிறார்! கிறிஸ்தவம் என்பது உயிர்த்தெழுந்த ஆண்டவருடன் வசிப்பது புசிப்பது புரிந்து கொள்வது கடவுள் விரும்புவது.

"பசியாயிருந்தேன் நீங்கள் உணவு கொடுத்தீர்கள்,"மத். 25:35. அங்கிருந்தோர். "ஆண்டவர் உண்மையாகவே உயிருடன் எழுப்பபட்டார்! அவர் சீமோனுக்குத்தோற்றம் அளித்தார்" என்று சொன்னார்கள் அவர்கள் வழியில் நிகழ்ந்தவற்றையும், அவர் அப்பத்தைப் பிட்டுக் கொடுக்கும்போது அவரை கண்டுணர்ந்து கொண்டதையும், அங்கிருந்தவர்களுக்கு எடுத்துரைத்தார்கள்! லூக். 24:34,35.

### *3. உவகையூட்டித் திருமறையை படிப்பிக்கும் உயிர்த்த ஆண்டவர்!* : (லூக்கா 24:32)

"அப்போது அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி வழியிலே அவர் நம்மோடு பேசி, மறை நூலை விளக்கும் போது, நம் உள்ளம் பற்றி எரியவில்லையா என்று பேசிக் கொண்டார்கள்." (லூக். 24:32)

உணர்வூட்டியவர், உணவூட்டியவர் மீண்டும் தன்னை உவகையூட்டுபவராக வெளிப்படுத்தி நிற்கிறார்! இதுவரை இயேசுவை அடையாளம் கண்டு கொள்ளாதவர்கள், உயிர்த்த ஆண்டவரின் வார்த்தைகளைக் கேட்டும், செயல்களைக்கண்டும் களிகூர்ந்தனர். உயிருடனிருந்து கூறிய மறை நூலை மறந்து மறுதலித்து, இயேசுவைவிட்டு ஓடி மறைந்து சென்ற சீடர்களை தேடி சென்று மறைநூலை விளக்கிக்கூறுகிறார்!. இப்போது தான் இதுவரையில்லாத நிகழ்ச்சி, நெகிழ்ச்சி, மகிழ்ச்சியடைந்து உதட்டளவில் அல்ல உள்ளார்ந்த உவகைப்பெருக்கின் உச்சநிலை கொள்கிறார்!

உயிர்த்தெழுந்தது உலகில் உலாவிய இயேசுவின் வழி வரும் உவகை .... எத்தியோப்பிய மந்திரிக்கும் கிடைத்தது! எருசலேம் ஆலயத்தில் தொழுகை முடிந்து , தேரில் அமர்ந்து வருகிறான் மந்திரி!. வரும் வழியில் தேரில் அமர்ந்தவாறு திருமறையைப்படித்துக் கொண்டு, பாலைநிலம் வழியாக பயணித்தார். எத்தியோப்பிய அரசி கந்தகேயின் அரசில் பொருளாதார மந்திரி! உடல் சார்ந்த உவகை இல்லை! அவர் ஓர் அலி ஆவார்! (அன்னகர்). இதன் பொருள் உமக்கு தெரிகிறதா என கேட்ட போது எவராவது விளக்கிக் காட்டாவிடில் எவ்வாறு தெரிந்து கொள்ள முடியும் (திப. 8:31,32) என்கிறார்.

இன்றைய உலகில் நாமும் கூட எத்தனைத்தான் திருமறையைப் படித்தாலும், தினமும் படித்தாலும் திரும்பவும் படித்தாலும், பொருள் தெரிந்து புரிந்து படித்திட்டால் தான் உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசுவிடமிருந்து வரும் உவகையைப் பெற்றுக் கொண்டாடிட முடியும்! “மந்திரி மகிழ்ச்சியோடு தம் வழியே சென்றார்! உயிர்த்த ஆண்டவரின் நற்செய்தியை பழைய ஏற்பாட்டு நூலுடன் ஒப்பிட்டு கற்றுக் கொள்வதால் மீண்டும் திருமறையைப்படித்துப் பயன் பெற இயலும்!”

யோசியா அரசரின் காலத்தில் எருசலேம் ஆலயத்தில் கண்டெடுத்த திருச்சட்ட நுலை மீண்டும் படித்திடவும், கடை பிடித்திடவும் கட்டளையிட்டார். ஆலயத்தில் ஆண்டவர் திருப் பெயர் வணக்கத்திற்குட்ப்பட்டது! (2குறி. 34:29-33) ஆன்மீகம் தழைத்தது! இஸ்ரயேலில் இருந்தோரனைவரும், ஆண்டவரையே வழிபடும் நிலை மீண்டும் தொடர்ந்தது. அவர்கள் மூதாதையரின் ஆண்டவரைப் பின்பற்றி நடந்தனர். இறைமக்கள் உயிர் மீட்சியடைந்தனர். உயிருள்ள ஆண்டவரின் உயர் நாமம் போற்றப்படத் தொடங்கினர். இயேசு கிறிஸ்துவின் உயிர்த் தெழல் காட்சியின் முன்னோட்டம் என்றிடலாம்.

ஒரு முறை மார்ட்டின் லூதர் மனமடிவாகி முகவாட்டமுடன் காணப்பட்டார்! இதனைக் கண்ட அவர் தாய் தனயனைத் தேற்றிட முயன்றார்! ஒரு நாள் கருப்பு நிற ஆடையணிந்து மார்ட்டின் முன் சென்றாராம்! தாயின் துக்க உடையைக் கண்டதும் மார்ட்டின் பதறிப்போய்! ஏம்மா இப்படி கறுப்பு உடை எனக்கேட்டதும் தாயார் சொன்னார்களாம் "மகனே என் இயேசு இறந்து விட்டார்". "என்னம்மா சொன்னீங்க; என் இயேசு இறக்கவில்லை அவர் உயிருடன் வாழ்கிறார்" - என்றாராம் கரகரத்துக் குரலில்! தாயார் தன் செய்தியைத் தொடர்ந்தார்களாம் ! "மகனே நம் இயேசு உயிருடன் வாழ்கிறார் என்றால் பின்னை நீ ஏன் துக்கமுடன் நடக்க வேண்டும்; எனக்கூறி உயிர்த்தெழுந்த இயேசுவைக் குறித்து மீள் படிக்க தூண்டினார்கள்!"

கீர் : 291-ல்

"என் மீட்பர் உயிரோடிருக்கையிலே எனக்கென்ன குறைவுண்டு? நீ சொல், மனமே!" என்ற அருள் திரு ஞா. சாமுவேல் ஆயர் அவர்களின் அனுபவமே இப்பாடலாகும். உலக வாழ்வின் அனைத்துப்படி நிலைகளிலும் நாமும் உயிர்த்த ஆண்டவரேடு திருமறையை மீண்டும் உத்வேகத்துடன் படித்திடுவோம் உயிர் மீட்சியடைந்திடுவோம்!.

அருள்திரு. D.S. **செல்வராஜ்**

12-05-2019 உயிர்ப்புக்குப் பின் வரும் மூன்றாம் ஞாயிறு

## உயிர்த்த ஆண்டவரால் அதிகாரப்படுத்தப் பெறுதல்
### COMMISSIONING BY THE RISEN LORD

எரே. 9: 1-10 1தீமோ. 4 :6-14
தி.பா. 47 யோவா.20: 19-23

**“ உங்களுக்கு அமைதி உரித்தாகுக”** ( யோவா. 20:19b)

பணிப்பொறுப்பளித்தல் என்பதற்கு ‘Commissioning’ என்ற ஆங்கில வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. திருமறையில் இவ்வார்த்தை அதிகாரமளித்தல், கட்டளைகொடுத்தல், பொறுப்பளித்தல் போன்ற பொருட்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. (தொ.நூ.26:4; விப.6:13; 1அர.14:6; ஆகாய் 1:12; திப.7:53; உரோ.16:24; 1சாமு.15:1; 2சாமு.15:25; தானி.2:24; ஆப. 1:12, திபா 15:22). இயேசு கிறிஸ்து திருப்பிணிக்கென தம் சீடர்களை உயிர்ப்புக்கு முன், உயிர்ப்புக்கு பின் என பல கட்டங்களாக நியமித்தார். அவரின் விண்ணேற்பிற்கு பின்னும் இது தொடர்ந்ததை திருமறைக் கூறுகிறது (திபா 13:1-3). உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்து நற்செய்தி பணிக்கென முழு பொறுப்பு வழங்கி தம் சீடர்களை உலகில் அனுப்புவதை இன்றைய நற்செய்திப் பகுதி கூறுகிறது. உயிர்த்த ஆண்டவர் தரும் அதிகாரம் பெற்று எவ்வாறு அவருக்கு சான்றாளர்களாய் மாறுவது என்பதைச் சிந்திப்போம்.

### *1. தந்தையாம் கடவுளால் வரும் அதிகாரம்* :

“...தந்தை என்னை என்னை அனுப்பியது போல நானும் உங்களை அனுப்புகிறேன்” (யோவா. 20:21)

இயேசு கிறிஸ்து தந்தையாம் கடவுளால் இவ்வுலகிற்கு அனுப்பப்பட்டார் (யோவா. 7:29). கடவுள் தமது முழுமையான ஆற்றலையும் மைந்தருக்குக் கொடுத்து அனுப்பினார். அவர்தம் மைந்தருடன் இருந்து தனது வல்ல செயல்களை நிறைவேற்றுகிறார் (யோவா. 8:29). தன்னை அனுப்பிய தந்தையாம் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுவதும், அவர் கொடுத்த வேலையைச் செய்து முடிப்பதும் தன் பணியென (யோவா. 4:34, 6:38). கடவுளின் மைந்தராம் இயேசு கிறிஸ்துவை மதிப்பது அவரை அனுப்பிய தந்தையாம் கடவுளை மதிப்பதற்கு சமம் (யோவா.5:24). எதையும் அதிகாரமாய் போதித்த ஆண்டவர் தன்னை அனுப்பிய கடவுளின் போதனையை உலகிற்கு தந்தார் (யோவா. 7:16)

“நான் அனுப்புகிறவரை ஏற்றுக்கொள்கிறவர் என்னையே ஏற்றுக் கொள்கிறார். என்னை ஏற்றுக் கொள்பவர் என்னை அனுப்பியவரை ஏற்றுக் கொள்கிறார்” என்பது ஆண்டவரின் வாக்கு (யோவா. 13:20). இயேசு கிறிஸ்து சீடர்களுக்காக கடவுளிடம் வேண்டுதல் ஏறெடுக்கும்போது, கடவுள் தம்மை உலகிற்கு அனுப்பியது போல தமக்குரியவர்களை உலகிற்கு அனுப்புவதாகவும், அவர்களை தீமையினின்று காத்துக் கொள்ள வேண்டுமெனவும் தந்தையாம் கடவுளிடம் மன்றாடுகிறார் (யோவா. 17:18).

இயேசு கிறிஸ்துவின் அதிகாரம் கடவுளிடமிருந்து வருகிறது. அவருக்கு அலகையின் மீதும், நோயின் மீதும், சாவின் மீதும், இயற்கையின் மீதும் அதிகாரம் உண்டு என்பதை திருமறைக் கூறுகிறது (மாற்.1:2-27,29-31, 40-45, 8:22-25,9:10-17). அவர் உலகை மீட்க கடவுள் தம்மை அனுப்பியதை (யோவா.3:16) இங்கு அடையாளப்படுத்தி அதே நோக்கோடு தம் சீடர்களை மீட்பு பணிக்காக உயர்த்த இயேசு கிறிஸ்து அனுப்புகிறார். தந்தையாம் கடவுளின் முழு அதிகாரத்தை பயன்படுத்தி அவர்களை அனுப்புகிறார்.

### *2. தூய ஆவியரால் வரும் அதிகாரம்* :

“...அவர் அவர்கள்மேல் ஊதி, தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்...” (யோவா. 20:22)

படைப்பில் மனிதனை உருவாக்கிய கடவுள், மனிதனின் நாசியில் தம் சுவாசத்தை ஊதினப் போது மனிதன் உயிர்பெற்று முழு மனிதன் ஆனான். முழுமையும், ஆற்றலையும் பெற கடவுளின் ஆவியாகிய தூய ஆவியார் தூண்டுதலாய் அமைகிறார். தந்தையாம் கடவுளின் அதிகாரத்துடன் சீடர்களை அனுப்பும் ஆண்டவர் இயேசு கிறிஸ்து தூய ஆவியாரின் அதிகாரத்தையும் அடையாளப்படுத்துகிறார். ஆண்டவருடைய ஆவியானவர் தன் மேல் இருப்பதையும், உலகில் மீட்புப்பணியைச் செய்ய தாம் அவரால் அருள்பொழிவு செய்யப்பட்டுள்ளதையும், தமது நாசரேத்தூர் அறிக்கையில் மக்களுக்கு முன் வெளிப்படுத்தினார் (லூக்.4:18,19). இங்கு அதே அதிகாரத்தோடு சீடர்களை அப்பணிக்கென உயிர்த்த ஆண்டவர் அனுப்புகிறார்.

நெருப்பைப் போன்றும், பெருங்காற்றை போன்றும் ஆற்றல் மிக்க அதிகாரமுடையவர் தூய ஆவியராம் கடவுள் நமது ஆற்றலற்ற நிலையில் நம்மை ஆற்றல் படுத்துபவர் தூய ஆவியாரே (உரோ.8:26). தூய ஆவியரின் ஆற்றுலும், அதிகாரமும் நம்மை உலகம் முழுவதிலும் சென்று வாழும் கடவுளின் சான்றாளர்களாக மாற்றுகிறது (திபா. 1:8) தூய ஆவியாரைப் பெற்றுக்கொண்ட திருத்தூதுவர்கள் அச்சமின்றி கிறிஸ்துவின் நற்செய்தியை மக்களுக்கு அறிவித்து, இறைப்பணி செய்தனர்.

### *3. மன்னிக்கும் அதிகாரம்* :

"எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ, அவை மன்னிக்கப்படும்..." (யோவா. 20:23)

பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் கடவுளுடையது. கடவுளிடம் வரும் அனைவரும் மன்னிக்கப்படுவர். கடவுளின் மீட்பின் திட்டத்தின் அடிப்படைச் செயலே பாவ மன்னிப்பு ஆகும்.

மக்களை கடவுளுக்கு உரிய வழியில் நடத்திச் செல்வதே இறைவாக்கினர்களின் நோக்கமாக இருந்தது. விபசாரம் உள்ளிட்ட ஒழுக்கக் கேடுகளையும், உண்மை கடவுளுக்கு எதிரான சிலை வழிபாட்டையும் அவர்கள் எதிர்த்தனர். எளியோரை நசுக்கியவர்களும், வறியோரை ஒடுக்கியவர்களும் மனம் திரும்ப வேண்டுமென அவர்கள் அழைப்பு விடுத்தனர். அடக்கு முறையில் ஈடுபடும் ஆட்சியாளர்களும், பணக்காரர்களும் கடவுளின் கோபத்தில் இருந்து தப்ப முடியாது என்று அவர்கள் எச்சரிக்கை விடுத்தனர். இறைவாக்கினர்களின் குரலுக்கு செவி கொடுத்த இஸ்ரயேல் மக்கள், மனந்திரும்பி, சாக்கு உடை உடுத்தி நோன்பு இருந்தனர். தங்களை வருத்திக் கொண்டு கடவுளிடம் தங்கள் குற்றங்களை ஒப்புக்கொண்டதால், அவர்கள் மன்னிப்பு பெற்றனர். இங்கு நாம் கவனிக்க வேண்டியது, மன்னிப்பு என்பது இறைவாக்கினரிடம் இருந்ததல்ல. கடவுளிடமிருந்தே வருகிறது.

பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் மானிட மகனாம் இயேசு கிறிஸ்துவுக்கு உண்டு (மத். 9:6, மாற். 2:10). இயேசு கிறிஸ்து தமது இறைத்தன்மையை உலகிற்கு உணர்த்தும் விதமாக பாவங்களை மன்னித்தார். பிறரது பாவங்களை தாம் மன்னித்தது மட்டுமன்றி தமது அதிகாரத்தை பிறருக்கு அளித்ததன் வழியாக இயேசு இறைத்தன்மையை ஆணித்தரமாக நிரூபிக்கிறார். இயேசு பாவங்களை மன்னிக்கும் அதிகாரத்தை சுயமாக கொண்டிருக்கவில்லை. அது கடவுளால் கொடுக்கப்பட்டது. கடவுள் தமக்கு எவ்வாறு அந்த அதிகாரத்தைக் கொடுத்தாரோ, அதுபோல அவ்வதிகாரத்தைத் தம் சீடர்களுக்கும் கொடுத்தார். மக்களை மீட்கும் பணியில் பாவமன்னிப்பு என்பது முந்திச் செயல்பட வேண்டும். அதை நிறைவேற்றும் அதிகாரம் கடவுளின் பணியாளர்களுக்கு கொடுக்கப்படுகிறது.

இந்த அதிகாரம் கடவுளிடமிருந்தும், தூய ஆவியாரிடமிருந்தும், இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் வருகிறது. உயிர்த்த ஆண்டவர் நமக்கு தரும் இவ்வதிகாரத்தைப் பெற்று, உலகெங்கும் பொறுப்புடன் அவர் பணிச் செய்து அவருக்கு சான்றாவோம்.

அருள்திரு. முனைவர். **முத்துசுவாமி கிறிஸ்துதாஸ்**

19-05-2019

உயிர்ப்புக்குப் பின்வரும் நான்காம் ஞாயிறு

# கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளல் : உண்மை

**BELIEVING IN CHRIST : THE TRUTH**

| | |
|---|---|
| விப. 34:1-9 | எபே. 4:7-16 |
| திபா. 119 :89-96 | யோவா. 17:6-19 |

**"நீர் என்னிடம் சொன்னவற்றையே நான் அவர்களிடமும் சொன்னேன். அவர்களும் அதை ஏற்றுக்கொண்டு, நான் உம்மிடம் இருந்து வந்தேன் என்பதை உண்மையில் அறிந்து கொண்டார்கள். நீரே என்னை அனுப்பினீர் என்பதையும் நம்பினார்கள்."**

(யோவா. 17:8)

நம்பிக்கை என்பது மனித வாழ்வில் முக்கியமான அடையாளமாகும்.

"யானையின் பலம் தும்பிக்கையில்

மனிதனின் பலம் நம்பிக்கையில்"

என்ற முதுமொழி அர்த்தமுள்ளதாகும். நம்பிக்கை என்பது நாம் எதிர்நோக்கி இருப்பவை கிடைக்கும் என்னும் உறுதியாகும். நம்பிக்கையே மனிதனது ஆன்மீக வாழ்வின் ஆதாரம். "நம்பிக்கை" என்னும் வார்த்தை சமயத்துடன், கடவுளுடன் நெருங்கிய தொடர்புடைய வார்த்தை. கிறிஸ்துவின் மீதுள்ள நம்பிக்கையே கிறிஸ்தவத்தின் அடிப்படையாகும். கிறிஸ்து கடவுளின் மைந்தர், உலக மக்களின் இரட்சகர் என்னும் நம்பிக்கையின் அடிப்படையிலேயே கிறிஸ்தவம் அமைந்துள்ளது. யோவான் 17-ஆம் அதிகாரம் தம்மை நம்புகின்ற மக்களுக்காக இயேசு கிறிஸ்து தந்தையாம் கடவுளிடம் வேண்டிக் கொண்ட மன்றாட்டு. இது "முதன்மை குருவின் மன்றாட்டு" என்று அறியப்படுகிறது. கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்வதன்படி நிலைகளை இயேசு கிறிஸ்து இங்கு குறிப்பிடுகிறார்.

## 1. *கற்றல்/கற்றுக்கொள்ளல்* :

"நீர் என்னிடம் சொன்னவற்றையே நான் அவர்களிடம் சொன்னேன்." யோவா. 17:8a

ஒருவர் மற்றொருவரிடமிருந்து கேட்டறிந்து கொள்வது கற்றல் அல்லது கற்றுக்கொள்ளுதல் என்றுக் கூறலாம். இயேசுகிறிஸ்துவை நம்புவதின் முதல்நிலை கற்றல். ".....அவரைக் குறித்து கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்...." (உரோ. 10:14). எனும் பவுலடியாரின் கேள்வி

கிறிஸ்துவை நம்புவதில் கற்றலின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. கற்றுக் கொள்ளுதல் மனித வாழ்வில் மிக முக்கிய அம்சமாகும். மனிதன் அறியாமை என்னும் இருளில் மூழ்கிக் கிடக்கும் போது, அறிவை ஊட்டுவது கல்வியே, அதாவது கற்றலே. அறியாமை அழிவையே ஏற்படுத்தும். கற்றுக்கொள்ளுதலின் கற்றல், ஒருவர் இன்னொருவரிடமிருந்து அறிவைப் பெற்றுக்கொள்ளச் செய்கிறது. இயேசுக் கிறிஸ்து தந்தையாம் கடவுளிடமிருந்து தான் கற்றுக் கொண்டவைகளை தம் அடியவர்களுக்குக் கற்றுக்கொடுக்கிறார். இயேசுக் கிறிஸ்து ஆசிரியராகவும் அவரது அடியவர்களை சீடர்கள் அதாவது மாணவர்களாகவும் திருமறை சித்தரிப்பதை நாம் காண முடிகிறது. இறைவனது நீதிச்சட்டங்கள், இறை வாக்குரைகள் முதலியவைகளையும் இவைகளில் இயேசு, இயேசுகிறிஸ்துவைப் பற்றி கூறப்பட்டிருப்பவைகளையும் கற்றுக் கொள்வதின் மூலம் இயேசுக்கிறிஸ்துவே உண்மை : அவரே வழி, வாய்மை, வாழ்வு (யோவா. 14:6) என்பதை உறுதியாக நம்ப முடியும். இறைவன் பற்றிய உண்மைகளை கற்றுத்தரும் இயேசுநாதர், "என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்" (மத். 11:29) என அழைப்புத் தருகிறார். தொடக்ககால ஆதிக்க சமூகத்தில் மக்களுக்கு கற்கும் உரிமை மறுக்கப்பட்டிருந்தது. கல்லாத மக்களை மூடப்பழக்க வழக்கங்களாலும்அடிமைப்படுத்தி, தங்கள் கட்டுப்பாட்டிலேயே வைத்திருந்தனர் ஆதிக்க சமூகத்தினர். இந்த அவலநிலையை கண்ட அருட்பணியாளர்கள், மக்கள் கட்டுப்பாட்டிலிருந்து விடுபடவும் இயேசுக் கிறிஸ்துவே உண்மை, மீட்பர் என்பதை உணர்த்த இம்மக்களை கற்கச் செய்வதே சிறந்த வழி என உறுதியாக நம்பினார்கள். அதன் விளைவாக கல்விச் சாலைகள் எங்கும் திறக்கப்பட்டன. இந்தியாவின் முதல் சீர்திருத்த திருச்சபையின் அருட்பணியாளர் சீகன் பால்கு, தற்கால அருட்பணி இயக்கத்தின் தந்தை என்றறியப்படும் வில்லியம் கேரி, நம் குமரி மண்ணில் முதலாவது நற்செய்தியை சுமந்து வந்த றிங்கல்தௌபே என அருட்பணியாளர்கள் அனைவரும் கல்விக்கு முன்னுரிமை வழங்கினார்கள். அதற்காக கல்விக் கூடங்களையும் தொடங்கினார்கள். இதனூடாக எண்ணையும், எழுத்தையும் கற்றுக் கொடுத்து, மடமை எண்ணங்களை மாற்றி தொலைநோக்குப் பார்வையில் சிந்திக்கும் தடயங்களை ஏற்படுத்தினார்கள்.

***2. ஏற்றல் / ஏற்றுக்கொள்ளல்*** :

"....அவர்களும் அதை ஏற்றுக் கொண்டு....." யோவா. 17:8b

நம்பிக்கை கொள்ளுவதின் முக்கியபடிநிலை கற்றவற்றை ஏற்றுக்கொள்வதாகும். அதாவது தான் கற்றுக் கொண்டவைகளை

ஆய்ந்தறிந்து, நிதானித்து அதனை உண்மை என உறுதிப்படுத்த வேண்டும். கிறிஸ்துவில் நம்பிக்கைகொள்ள அழைக்கப்பட்டிருக்கும் நாம் கிறிஸ்து குறித்து கற்றவைகளை ஏற்றுக் கொள்ளுதல் அவசியம். நாம் கேட்கின்ற, கற்கின்ற காரியங்கள் எல்லாம் உண்மையானவைகளா என்பதனை இறைவாக்கின் அடிப்படையில் ஆராய்ந்து எது உண்மை என தெளிவடையும் போது அதற்கு உடன்பட வேண்டும், அங்கீகரிக்க வேண்டும், ஏற்றுக் கொள்ளவேண்டும். வி.ப. 34:1-9-ல் மோசே ஆண்டவரின் ஆலோசனைகளை, நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டார். யோவா. 1:12-ல் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேரும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார் என கூறப்பட்டுள்ளது. தி.ப. 2:41-ல் இறைவாக்கை ஏற்றுக்கொண்டவர்கள் சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். நமக்கு அருளுரை, திருமறை படித்தல், தியானம் என கற்பதற்கு வாய்ப்புகள் பல உள்ளன. ஆனால் கற்பவைகள் நிழலுக்கு இறைத்த நீர்போல வீணாகி விடுகிறது. அவைகளை அங்கீகரிக்க, ஏற்க மனதில்லாமல் விட்டுவிடுகிறோம். மத். 19:16-22 வரையுள்ள வசனங்களில் நாம் சந்திக்கும் அந்த வாலிபன் அறிந்தவைகளையும், கற்றிருந்தவைகளையும் வாழ்வில் முறைப்படுத்த இயலாநிலையில் பின்வாங்கி விடுகிறான். நிலைவாழ்வின் உண்மையை புரிந்துகொள்வதில் தடுமாற்றமடைந்தான். ஆகவே எதிர்நோக்கில்லா நிலையில் திரும்பிப்போனான். எல்லாம் தெரியும் என்ற அகங்காரமே அறியாமைக்கு நேராக தள்ளிவிடுகிறது என்பதை அறிந்து செயல்பட வேண்டும். எப்போதும் கற்றவைகள் வாழ்வுக்குரியதாக ஏற்றுக் கொள்ளுதலே உண்மை வாழ்வுக்கு உகந்த வழிகாட்டுதலாக அமைகிறது. உண்மையாகிய கிறிஸ்துவைப் புறக்கணிக்கும் எவரும் தண்டனைத் தீர்ப்புக்குள்ளாவர் (யோவா. 12:48). ஆகவே அறிந்து கொள்ளும் நாம் அனைவரும் அதற்கு சான்றாக வாழ்ந்து என்றென்றும் விசுவாச மணம் பரப்பிடுவோம்.

### *3. பற்றுதல்/பற்றுக்கொள்ளல்* :

"....நீரே என்னை அனுப்பினீர் என்பதையும் நம்பினார்கள்" யோவா. 17:8c

ஒன்றைக் கற்றறிந்து ஏற்றுக்கொண்டால் அதன் மீது பற்று அல்லது நம்பிக்கை ஏற்படும். கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளுதல் என்பது அவர் கடவுளின் மைந்தர் என்பதையும், அவரே இரட்சகர் என்பதையும், அவர் கடவுளால் அனுப்பப்பட்டவர் என்பதையும் விசுவாசிப்பதாகும். இதனை விசுவாசம், நம்பிக்கை, பற்றுறுதி என பல வார்த்தைகளில் அழைக்கிறோம். கிறிஸ்தவ வாழ்வில் விசுவாசம் மிகமிக முக்கியமானது. கிறிஸ்துவின் மீது

விசுவாசம் கொள்ளாத ஒருவர் கிறிஸ்தவராக வாழ முடியாது. இயேசுகிறிஸ்துவில் நாம் கொள்ளும் பற்றுதலே நம்மை அழிவுக்குட் படுத்தாமல் நிலை வாழ்வுக்கு ஆயத்தப்படுத்துகிறது (யோவா. 3:16,18). மட்டுமன்று கடவுளின் பிள்ளைகள் எனும் உரிமைப்பேற்றின் உறவினையும் பெறுகின்றார் (யோவா. 1:12). இத்தகைய சிறப்புகளில் நிலைபெற கிறிஸ்துவில் நமது நம்பிக்கை ஆழமாக வேர்விட வேண்டும். அதுவே நம்மை கடவுளின் மகிமையை அனுபவிக்க ஆயத்தப்படுத்தும் (யோவா. 14:10).

இன்றைய காலச்சூழலில் இறை நம்பிக்கையை விடுத்து மனித நம்பிக்கையில் மானிடம் தடுமாறி விழுந்து கொண்டிருக்கிறது. இதனால் வாழ்வின் வலிகளையும், வருத்தங்களையும் எதிர்கொள்ளும் வலுவினை இழந்து போராட்ட நிலையிலே தடமாறிக் கொண்டிருப்பதை நாம் காணலாம். கிறிஸ்து இயேசுவில் கொள்ளும் பற்றுமை எந்நிலையிலும் நம்மை அசைவுறாமல் தாங்கிப் பிடிக்கிறது (மத். 7: 24,25). இறை மக்களாகிய நாம் அனைவரும் நம்பிக்கையைத் தொடங்கி வழிநடத்துபவரும் அதை நிறைவு செய்பவருமான இயேசுவின் மீது கண்களைப் பதியவைப்போம், அதுவே நம்மை மேன்மைக்குரிய நிலையில் நிலைப்படுத்தும்.

கிறிஸ்துவின் தடயத்தினில் முன்னோக்கப் பார்வைக் கொண்டிருக்கும் நாம் அனைவரும் கற்றுக் கொள்ளுகிறவர்களாகவும், அவைகளை வாழ்வுக்கென ஏற்றுக் கொள்ளுகிறவர்களாகவும் மட்டுமன்று கிறிஸ்துவில் பற்றுறுதிக் கொண்ட நிலையில் வாழ்ந்து காட்டுவதற்குரியதாகவும் நடைமுறைப்படுத்திக் கொள்வோம். எல்லாச் சூழல்களிலும் நமது நம்பிக்கை கிறிஸ்துவில் கட்டியெழுப்பி மேன்மையானவைகளைப் பெற்றுக்கொள்ள இறைவேண்டுதலோடு ஒப்படைப்போம். ஆண்டவர் மீது நம்பிக்கை வைத்துள்ளோர் சீயோன் மலைபோல் என்றும் அசையாது இருப்பர் என்ற இறைவாக்கில் திடனடைந்து வாழ்ந்து பெருகுவோம். இறை மகிமையால் நிறைக்கப்படுவோம்.

அருள்திரு. M. **இம்மானுவேல் கின்சன் பெல்**

26-05-2019

**உயிர்ப்புக்குப் பின்வரும் ஐந்தாம் ஞாயிறு & D.M.P.B. ஞாயிறு**

# கிறிஸ்துவின் சிந்தையோடு அருட்பணி

## MISSION WITH CHRIST'S SPIRIT

2 அர. 2:9-16 திப. 7:54-60
திபா. 105:1-11 மத். 28:16-20

**"நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைபிடிக்கும்படி கற்பியுங்கள்."** (மத். 28:20a)

கடவுளைத் தொழுவோருக்கு வாழ்வில் மிகவும் இன்றியமையாத கடமைகள் உள்ளன. கிறிஸ்தவர்களைப் பொறுத்த வகையில் நற்செய்திப்பணியே தலையாயக் கடனாகும். திருச்சபையின் உயிரோட்டமும் இதுவே கிறிஸ்தவன் ஒருவன் நற்செய்திப்பணி செய்யாது போனால் அவன் வாழ்வில் எங்கோ பழுதுபட்ட நிலை உள்ளது என்பதாகும். திருச்சபையின் அடித்தளம் நற்செய்திப்பணியே. மிஷன் என்னும் சொல் கிறிஸ்தவப் பணித்தலங்கள் பணிகள் அனைத்தும் தொடர்பு படுத்தப்பட்டு வருகிறது. மிசியோ என்னும் இலத்தீன் வினைச் சொல்லிலிருந்து எழுகிறது. இச்சொல்லுக்கு அனுப்புகிறேன் என்பது பொருள். கிறிஸ்தவப் பணியின் அடிப்படை கடவுளின் அனுப்புதல் வேலையில் அமைந்திருப்பது தெளிவுபட திருமறை வழி புரிந்து கொள்ளலாம். ஒவ்வொரு திருச்சபையும் கிறிஸ்தவரும் அழைத்து அனுப்பப்பட்டவர் என நினைவில் கொள்ள வேண்டும். எல்லாப் பணிவிடைகளும் அழைக்கப்பட்டு அனுப்பப்பட்ட பணிவிடைகளில் அடங்கும். அதில் அருட்பணி ஓர் பகுதி என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. எனவே நற்செய்திப் பணிமட்டும் மிஷன் ஆகாது என நாம் புரிந்து கொள்ளுதல் அவசியமானது. அருட்பணியின் அர்த்தம் என்ன என்பதை இயேசு நாதர் தனது நாசரேத்தூர் அறிக்கையில் வெளிப்படையாக திருவுளம் பற்றுகிறார். லூக். 4:18,19 ஏழைகளுக்கு நற்செய்தி, சிறைப்பட்டோருக்கு விடுதலை, பார்வை இழந்தோருக்கு பார்வை, ஒடுக்கப்பட்டோருக்கு விடுதலை, ஆண்டவர் அருள் தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் என்பது நோக்கமாகும். இத்தகைய சிந்தனையுடன் உயிருடன் எழுப்பப்பட இயேசு சீடர்களை உலகமெங்கும் செல்லவும், நற்செய்தி சொல்லவும், கட்டளைகள் யாவும் கடைபிடிக்கவும், உபதேசம் செய்யவும் கட்டளையுடன் அனுப்பினார். எனவே அச்சிந்தனையுடன் எப்படி அருட்பணி செய்ய இயலும் என சிந்திப்போம்.

## 1. ஆதாயப்பணியா -அப்போஸ்தல (திருத்துதுவ பணியா) பணியா? : (2அர. 2:9-11)

சென்று வா உனக்கு நான் செய்ய வேண்டியதைச் செய்துவிட்டேன் 1அர. 19:20.

கடவுள் சலனமற்று அமர்ந்திருக்கும் மெய் பொருளன்று, செயல்படுபவர். அவரது செயல்பாடுகளில் தலையாயது அனுப்புதல் ஆகும். முதல் அருட்பணி இயக்கம் கடவுளிடமிருந்து கடவுளால் துவங்குகிறது. சாதாரணமான நிலையில் கடவுளே இறங்கி வந்து மிஷனறியாக செயல்படுவது திருமறை வழி காணலாம். அருட்பணிக்கு பயன்படுத்தப்படுவோரும் சாதாரணமான மனிதர்களே. அவர்கள் கடவுளால் அழைத்து, அதிகாரப்படுத்தப்பட்டு அனுப்பப்படுகிறார்கள் என்பதை 2அர. 2:9-11 வாயிலாக நாம் புரிந்து கொள்ளலாம். எலியா, எலிசாவை இருக்குமிடம் சென்று தனக்கு பின் அருள் வார்த்தைகள் உரைப்பதற்குத் தனது சால்வையினை 12 ஏர் மாடுகளுக்கு பின் சென்ற எலிசா மீது போட அவன் எலியா பின் ஓடி தனது பெற்றோரை முத்தம் செய்து வர அனுமதி பெற்று எலியாவுக்குப் பின், பணிவிடை செய்யச் சென்றான். எலிசா தான் அழைக்கப்பட்டவன் என்பதால் எலியாவுக்கு தன்னைக் கீழ்ப்படுத்தி அருட்பணிக்கு ஆயத்தம் செய்து கொண்டான். அருட்பணியில் தனக்கு ஆதாயம் தேடாது அருட்பணிக்கு இரட்டிப்பான ஆவியின் வரங்கள் பெற எலியா சொன்னபடி விழிப்புடன் காத்திருந்து பெற்றுக் கொண்டு அருட்பணி செய்தான்.

ஆதாயப்பணியாக பார்க்கும் சீடர்கள் மாற். 10: 28. நாங்கள் எல்லாவற்றையும் விட்டு உம்மை பின்பற்றினோமே என வினவ இயேசு பிரதியுத்திரமாக நற்செய்தியின் பொருட்டு இழப்பு ஏற்பட்டால் நூறத்தனையாக துன்பங்களின் மத்தியில் இம்மையிலும் நித்திய ஜீவன் மறுமையிலும் நல்கப்படும். எனவே நற்செய்திப்பணி ஆதாயப்பணி அன்று. எதிர்பார்ப்பின்றி செய்யப்படும் அருட்பணியாகும். தி.ப. 8:18,19 -ல் மாயவித்தைக்காரன் சீமோன், பேதுருவிடம் பணம் கொடுத்து பரிசுத்த ஆவியைப் பெற்று மற்றவர்களுக்கு கொடுத்தம் பணமீட்டும் நோக்குடன் வந்தான். எனவே பேதுரு பரிசுத்தாவியின் வரத்தை பணத்தினாலே சம்பாதித்து கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால் உன் பணம் உன்னோடே கூட நாசமாய் போகக்கடவது. அருட்பணி ஆதாயப்பணியன்று, திருத்தூதுப்பணியாகும்.

தூய பவுல் 1திமொ. 3:3-ல் கண்காணியானவன் இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனாயிருக்கலாகாது என்கிறார். நாம் வாழும் உலகில் பணியும், பணி உயர்வும் பெற பணமும், இடமாற்றம் பெற கையூட்டும் பெறும் நிலையிருக்க பேதுருவின் எச்சரிப்பை நினைவில் கொண்டு அப்போஸ்தல பணிக்கு அர்ப்பணிப்பது நல்லது.

சவுல் தமஸ்கு சாலையில் இயேசுவால் சந்திப்பு பெற்று பார்வையிழந்த நிலையில் நேர் தெருவில் யூதாவின் வீட்டில் தங்கியிருக்க, அனனியா போய் அவன் மேல் கையை வைத்து அவன் பார்வை பெற பரிசுத்தாவியின் நிறைவுடன் திருமுழுக்கு பெற்று காத்திருந்து கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று ஆலயங்களில் பிரசங்கிக்க தொடங்கினான் திப. 9: 17. கிறிஸ்துவுக்காக எல்லா செல்வத்தையும், கல்வியையும் அற்பமும், குப்பையுமாய் எண்ணியே அருட்பணி செய்தார். நாம் நம்மை பரிசோதனை செய்வது அவசியம். ஆதாயமா? அல்லது அப்போஸ்தலப் பணியா? என உறுதி செய்து அருட்பணி செய்வோம்.

### ***2. அழகுப்பணியா - அதிகாரப் பணியா?*** : (மத். 28:18,19)

வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் கொண்ட இயேசு, அச்சத்தால் அடங்கிப்போய் அடைபட்ட அறையினுள் முடங்கிக் கிடக்கும் சீடர்களுக்கு சகல அதிகாரமும் கொடுத்து அனுப்பினார் என்பது தான் உண்மை. இதன்படி அவர்கள் புறப்பட்டு போய் மனந்திரும்பும்படி செய்தி சொல்லவும், பிசாசுக்களைத் துரத்தவும், நோய்களை சொஸ்தமாக்கினார்கள் மாற். 6:12,13. அழகுப் பணி கவர்ச்சிப்பணியாகும். திப. 8:9-ல் மாயவித்தைக்காரன் தனது மாயவித்தையால் தன்னைப் பெரியவன் என்றுச் சொல்லி சமாரிய நாடெங்கும் ஜனங்களைப் பிரமிக்கப் பண்ணிக் கொண்டிருந்தான். அவனோ தேவனுடைய பெரிதான சக்தி என எண்ணி சிறியோர், பெரியோர் அனைவருமே அவனுக்கு செவிகொடுத்து வந்தனர். அழகுப் பணி அழிவுப்பணியே. பணத்தைக் கொடுத்து அதிகாரத்தையும், பதவி உயர்வுடன் கவர்ச்சிகரமாக வாழ விரும்புவோருக்கு சீமோன், வாழ்வு ஓர் எச்சரிக்கையின் சாபம்.

அருட்பணியில் அமர்த்தப்பட்டோருக்கு அண்டசராசரங்களையும் உருவாக்கி ஆள்பவரால் அதிகாரம் வழங்கப்பட்டதாகும். இதனை எவரும் தடுக்க இயலாது. பேதுரு, யோவானிடம் ஆசாரியர்களும் தேவாலயத்துச் சேனைத் தலைவனும், சதுசேயரும் சினங்கொண்டு இயேசுவைக் குறித்து எவ்வளவு பேசவும், போதிக்கவும் கூடாதென்று கட்டளையிட்டனர் திப. 4:18. ஆனால் பேதுருவும், யோவானும் அவர்களுக்கு மறுமொழியாக திப.4:20,21 உங்களுக்கு செவி கொடுப்பது தேவ பார்வையில்

நியாயமாயிருக்குமோ? இராதே என நாங்கள் கண்டவைகளையும், கேட்டவைகளையும் பேசாமலிருக்கக் கூடாதே அதிகாரத்துடன் கூறினார்கள்.

2சாமு. 12:7-ல் நாத்தான் இறைவாக்கினர் கடவுளால் வழங்கப்பட்ட அதிகாரத்துடன் தாவீது மன்னனிடம், மன்னன் செய்த தவறினைக் கூறி மனம் வருந்தச் செய்தான். மாற். 6:18,27 வசனங்களின் படி முழுக்கு முனிவர் யோவான் ஏரோதின் தவறான வாழ்வைக் குறித்து எச்சரித்தான். யோவானால் அநேக பரிசேயர்கள், சதுசேயர்கள் திருமுழுக்கு பெற மனமாறி வந்தனர். காரணம், எச்சரிப்பின் சத்தம் கேட்டு மனம் மாறினர். ஆனால் ஏரோதோ மனம் கடினப்பட்டு கொலை செய்தான். அருட்பணியாளர்களால் எச்சரிப்பு விடுக்க எரிச்சலுற்றோர்கள் துன்புறுத்தி கொலை செய்தனர் திப. 7:51-53. அழகுப்பணி அன்றி அதிகாரப்பணி என உணர்ந்து அதிகாரத்துடன் அருட்பணி செய்வோம்

### *3. ஆணவப்பணியா - அடிமைப் பணியா?* : (திபா. 7:54-60)

தூய ஆவியும், ஞானமும் நிறைந்த நற்சாட்சி பெற்ற நபர்களில் ஒருவராக தெரிந்து கொள்ளப்பட்டவர் ஸ்தேவான். கடவுளுடைய வார்த்தைகளால் எச்சரித்த போது மூர்க்கம் கொண்ட மக்களால் துன்பங்கள் ஏற்க தன்னை அடிமையாக்கிக் கொண்டு அர்ப்பணித்தார். கல்லால் அடித்துக் கொன்றனர். ஸ்தேவான் தான் தெரிந்து கொள்ளப்பட்ட ஏழு பேரில் ஒருவர் என ஒருபோதும் பெருமிதம் கொள்ளவே, ஆணவம் கொள்ளவே இல்லை, தன்னை அடிமைப்பணிக்கு அர்ப்பணித்தார் என திருமறை தரும் விளக்கம்.

அருட்பணி ஒருபோதும் ஆணவப் பணியன்று அடிமைப்பணியே மாற். 10:45. மானிடமகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல மாறாக கொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாக தம் உயிரைக் கொடுப்பதற்கும் தம் ஜீவனைக் கொடுக்கவும் வந்தார். இந்நிலையில் முதன்மையை விடுத்து தாழ்மையினைத் தரித்து, சிலுவையுடன் பணி தொடர்வதே கிறிஸ்துவின் தடயமாகும் (மத். 10:38; லூக். 14:27; பிலி. 2:7) இந்தப் பணிவிடையே திருமக்களாகிய நமது கரங்களில் தரப்பட்டிருக்கும் நிலையில் நமது நிலையை ஆய்ந்தறிவது முக்கியமானதாகும். ஆண்டவர் இயேசுவின் அடிமை நிலைப் பணியில் (யோவா. 13:14) பணி தொடர்பதே இறையாட்சியின் எதிர்பார்ப்பாகும் பவுலாரின் அழைப்போடு கூடிய ஒப்படைப்பிலும் இதை உறுதிப்படுத்துகிறார் (கலா. 2:20). ஆங்காரமும், ஆவணமும் நமது அலங்காரத்தை அழித்துவிடும் அமைதியோடு கூடிய

மனத்தாழ்மையே நம்மை அழகுப்படுத்தி மணம் பரப்பிடச்செய்யும் ஆகவே ஆண்டவரின் பணியை பதவியாக எண்ணாமல் பணிவிடைக்குரிய பொறுப்பாக பெற்று கடமையுணர்வுடன் செயல்படுதலே சிறப்பாகும்.

அதிகாரமும், சுயநலமும் இருக்கைகளைப் பற்றிக்கொள்ள தவறுதலான வரிமுறைகளை சூழ்ச்சுமம் செய்து சொந்தமாக்க முனையும் இக்காலக்கட்டத்தில் திருச்சிலுவையின் வழியினில் நம்பிக்கையோடும் உயிர்தெழுதலின் உறுதியோடும் உன்னதரின் அடிமைப்பணி செய்வோம். உறுதியற்ற மானிட உள்ளத்தில் கிறிஸ்தேசுவின் அன்பைப் பொழிந்து கிறிஸ்துவுக்காக சொந்தமாக்கிக் கொள்வோம்.

அருள்திரு. V. **டேவிட் றாபி ஜேக்கப்**

02-06-2019

உயிர்ப்புக்கு பின் வரும் ஆறாம் ஞாயிறு

## தூய ஆவியாரால் நடத்தப்பெறுதல்

**LEAD BY THE HOLY SPIRIT**

வி. ப. 36:1-7 உரோ. 8:12-17
தி.பா. 107:1-22 யோவா. 14:25-31

**"கடவுளின் ஆவியால் இயக்கப்படுகிறவர்களே கடவுளின் மக்கள்."** (உரோ. 8:14)

கிரேக்க சமய உலகில் 'ஆவி' என்பது பக்தி பரவச நிலைக்கும் அற்புதங்கள் நிகழ்த்தும் தன்மைக்கும் பொருள்பட கூறப்பட்டுள்ளது. யூத மறைபொருள் இலக்கியங்கள் 'ஆவி' என்பது இறுதி நாட்களில் அளிக்கப்படும் ஈவு எனக் குறிப்பிடுகிறது. ஆதிக் கிறிஸ்தவம் ஆவியை உயிர்த்தெழுந்த கிறிஸ்துவினால் திருச்சபையில் செய்யப்படும் பணி எனக் குறிப்பிடுகிறது. இப்பணி புதிய யுகத்தின் தொடக்கமும் அறிகுறிகளுமாகும்.

ரோமர் திருச்சபைக்குக் பவுலடியார் எழுதிய மடலில் ஆவிக்குள்ளான கிறிஸ்தவ வாழ்வையும் (உரோ. 8:1-11) கடவுளோடு நமக்குள்ள புத்திர சுவிகாரத் தன்மையும் (8:12-17) விளக்குகிறார். கடவுளின் மக்கள் யார்? என்பதற்கான விளக்கத்தை உரோ. 8:14-ல் தெளிவாக்குகிறார். கடவுளின் ஆவியால் இயக்கப்படுகிறவர்களே கடவுளின் மக்கள் என்கிறார். கடவுளின் மக்கள் என்னும் உரிமையுடன் வாழ விரும்பும் ஒவ்வொரு இறை பற்றாளர்களும் எத்தகைய வாழ்வின் தன்மைகளை வெளிப்படுத்தல் வேண்டும். தூய ஆவியாரால் இயக்கப்படுவதற்கு என்ன செய்திடல் வேண்டும் என்பதைத் தொடர்ந்து சிந்திப்போம்.

### *1. கிறிஸ்துவில் இணைந்த வாழ்வு* : (உரோ. 8:1,2)

"கிறிஸ்து இயேசுவோடு இணைந்திருப்போருக்கு வாழ்வு தரும் தூய ஆவியின் சட்டம் பாவம், சாவு என்பவற்றுக்கு உள்ளாக்கும் சட்டத்தினின்று என்னை விடுவித்துவிட்டது"

கடவுளின் பிள்ளைகள் என்று உரிமையுடன் வாழ்வதற்கு அவரோடுள்ள அன்பின் உறவு மிக முக்கியமானது. அவரோடுள்ள ஐக்கியம் மட்டுமே அவர் திட்டப்படி நாம் இயக்கப்படுவதற்கு உதவி செய்யும். வாழ்வில் குழப்பம் நிறைந்த சூழ்நிலைகளை சந்திக்கின்ற போது நிச்சயமற்ற நிலை நமக்கு ஏற்படுகிறது. நெருக்கடியான நேரங்களில் தனிமை உறவுகள் நம்மை வருத்துகிறது. ஆனால் அப்படிப்பட்ட தருணங்களில் நம்முடைய

நண்பர் அல்லது உண்மையாய் உதவிசெய்கிற நபர் ஒருவர் உடனிருத்தல் எவ்வளவு மகிழ்ச்சி. அவர் எதையும் நமக்கு செய்யாமலிருந்தாலும் அவர் உடனிருப்பது உற்சாகத்தையும் நம்பிக்கையும் நமக்கு கொடுக்கும். நம்மைப் படைத்த ஆண்டவருடன் இணைந்து வாழ்வு வாழ்வதும் புது நம்பிக்கையும் இறையாற்றலையும் பெற்றுத்தருகிறது.

யோசேப்பு தன் தனிமைப்படுத்தப்பட்ட நெருக்கடியான வாழ்வில் தன் சுயமாய் இயங்க முயற்சிக்கவில்லை. யாருடைய உதவிகளையும் நாடிச் செல்லவில்லை. மாறாக கடவுள் தன்னுடன் இருப்பதை உணர்ந்து, விசுவாசித்து வாழ்ந்தான். அவன் எப்போதும் ஆண்டவரோடு இணைந்திருந்தான். ஆண்டவரும் அவனோடிருந்தார். எனவே நம்பிக்கையில் வலுப்பெற்றது மட்டுமல்லாமல் உலகத்தின் பாடுகளையும் துணிச்சலுடன் எதிர்கொள்ளும் ஆற்றல் பெற்றிருந்தான். குறித்த காலம் வந்தபோது கடவுள் அவனை உயர்த்தினார்.

## *2. தீயச் செயல்கள் அகன்ற வாழ்வு* : (உரோ. 8:13)

“.....தூய ஆவியின் துணையால், உடலின் தீச் செயல்களைச் சாகடித்தால், நீங்கள் வாழ்வீர்கள்”

தீயச் செயல்களை அகற்றி தூய வாழ்வுக்கு தங்களை அர்ப்பணிப்போர் தூய ஆவியரால் இயக்கப்படுவர். தீமை செய்வோர் காற்று அடித்துச் செல்லும் பதரைப்போல் (திபா. 1:4) இருக்கிறார்கள். காற்றில் பறக்கும் பதர்போல் அவர்கள் சிதறிவிடுவர் (திபா. 35:5). நீதியை புறக்கணிப்பவர்களும் இன்று பெருகி வருவது இயல்பானது. சுய நலப் பாதையில் நீதியும் அநீதியும் வறட்டு சித்தாந்தங்களாய் மாறிவிட்டன. தங்களுக்கு லாபம் என்று தெரிந்தால் எந்த வியாபாரத்தையும் செய்யத் தயங்காத இறைமக்களும் பெருகிவிட்டார்கள். யாரை அழித்தாயினும் தான் வளர வேண்டும் என்ற சிந்தனை பெருகி விட்ட காலம். இவர்கள் ஆவியாரின் அருளை இழந்து போகிறவர்கள்.

இயேசு யூத ரபிமார்களுள் ஒருவராகிய நிக்கதேமுவிடம் உரையாடுகின்ற போது மனமாற்றம் பெற்றோரே தூய ஆவியாரால் இயக்கப்படுவர் என்பதை (யோவா. 3:8) தெளிவுபடுத்துகிறார். மேலும் காற்று விரும்பிய திசையில் வீசுகிறது. அதன் ஓசை கேட்கிறது. ஆனால் அது எங்கிருந்து வருகிறது என்றும், எங்கு செல்கிறது என்றும் எவருக்கும் தெரிவதில்லை.தூய ஆவியரில் பிறந்த அனைவருக்கும் இது பொருந்தும் (யோவா. 3:8). தூய ஆவியாரால் ஆட்கொள்ளப்படுவோர் அவ்வண்ணமே இயக்கப்படுவர். நன்மைக்கும் தீமைக்கும் எதிராய் நம் உடலும் உள்ளமும் போராடும் போது கடவுளின் ஆற்றலால் தீமையை மேற்கொள்ள,

அகற்றிவிட முயற்சிப்பதே நம்பிக்கை வாழ்வின் சிறந்த பண்பு. இறைவன் தரும் நிறைவாழ்வை அடைந்திட தீமைகள் அகற்றி அன்புடன் வாழ்வோராய் மாறுவது சிறப்பு.

பண ஆசையும் பொருளாசையும் இன்று மனிதனை முழுமையாய் அடிமைபடுத்திவிட்டிருக்கிறது. எத்தீயச் செயல் செய்தாயினும் பொருளீட்ட வேண்டும், பதவிகளைப் பிடித்துவிட வேண்டும் என்று மனிதன் ஓடிக்கொண்டிருக்கிறார். பண ஆசை எல்லாத் தீங்குக்கும் வேராயிருக்கிறது (1தீமோ. 6:10) என்று பவுலடியார் குறிப்பிடுகிறார். ஆனால் ஆவியாரால் நடத்தப்படுகிறவர்களிடமிருந்து மட்டுமே நற்பண்புகளும் நற்செயல்களும் வெளிப்படும். கர்த்தருக்கு பயப்படுதல் தீமைக்கு நம்மை விலகி நிற்கச் செய்யும் (நீ.மொ. 8:13).

### *3. கடவுளின் திட்டத்திற்கு அர்பணிப்போரோடு வாழ்தல்:*

கடவுளின் திட்டத்திற்கு அர்ப்பணிப்போரை ஆவியார் நேர்த்தியான பாதைகளில் நடத்துகிறார். கிறிஸ்துவில் பற்றுறுதி கொண்டு வாழ்வோரையும், அவரைத் தொழுதுகொள்வோரையும் துன்புறுத்தி கொலை செய்வதற்கு துணிந்து வாழ்ந்த பவுலடியார் ஆண்டவரால் சந்திக்கப்பட்ட போது தன்னை முழுமையாய் ஆண்டவரிடம் அர்ப்பணிக்கிறார் (திப. 9:6).

ஆண்டவரின் திட்டத்திற்கு அர்ப்பணித்த பின் பவுலடியார் எங்கும் சுயமாய் வாழவில்லை மாறாக தூய ஆவியாரால் முழுமையாய் நடத்தப்பட்டார். வாழ்வும் பணியும் ஆவியாரின் திட்டத்தாலேயே அமைந்தது.

அந்தியோக்கியா பட்டணத்திலுள்ள சபையில் திருப்பணியாற்றிக் கொண்டிருக்கும் போது பர்ணபாவையும், பவுலையும் நான் அழைத்த ஊழியத்திற்காக அவர்களைப் பிரித்து விடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார் (தி.ப. 13:1,2). அப்படியே அவர்கள் ஆவியரின் வழிநடத்துதலில் கப்பல் ஏறி சீப்புரு தீவுக்குப் போனார்கள் (13:4). ஆக எப்பொழுது ஆண்டவரின் திட்டத்திற்கு ஒரு மனிதன் தன்னை அர்ப்பணிக்கிறானோ அப்பொழுது ஆவியார் வாழ்வைப் பொறுப்பேற்று பயன்படுத்துகிறார்.

ஆண்டவரின் பிள்ளைகள் என்னும் உரிமையோடு வாழ அழைக்கப்பட்டிருக்கும் நாம் கிறிஸ்துவோடு ஐக்கியமாகி, தீமைகளை நம்மை விட்டு அகற்றி அவரது திட்டத்திற்கு அர்ப்பணிப்போம். தூய ஆவியார் நம்மை அவர் பாதையில் அற்புதமாய் நடத்திடுவார்.

அருள்திரு. J. **வின்சென்ட் ராபர்ட்**

# ஆண்டவருக்கு அஞ்சுவதே ஞானத்தின் தொடக்கம்

## FEAR OF THE LORD AS THE BEGINNING OF WISDOM

1 அர. 3:3-14 | 1 யோவா. 5:13-21
திபா. 14 | லூக். 10:21-24

**"... ஞானம் நிறைந்த உள்ளத்தை அடியேனுக்குத் தந்தருளும்."** (1அர. 3:9)

மழலையர் படிப்பு முதல் ஆராய்ச்சி படிப்பு வரையுள்ள மாணவர் அனைவருக்கும் வாழ்த்துக்கள். "கல்வி" என்ற ஊடகத்தை மையமாக்காமல் "மாணவர்" மக்கள் பிரிவினரை மையப்படுத்திய அனைவருக்கும் நன்றி. கொடுக்கப்பட்ட திருமறைப்பகுதிகளை மையமாக வைத்து, "ஆண்டவருக்கு அஞ்சுவதே ஞானத்தின் தொடக்கம்" என்ற தலைப்பில் சிந்திப்போம்.

ஞானம் என்றால் என்ன? ஞானம் எதற்கு தேவைப்படுகிறது? ஞானத்தின் ஊற்று எது? ஞானத்திற்கும் அறிவிற்கும் உள்ள வேறுபாடு என்ன? இந்த கேள்வி அனைத்தும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. மட்டுமல்ல ஞானத்தைக் குறித்த புரிந்து கொள்ளுதலுக்கு உதவுகிறது. Websters Dictionary ஞானத்தை குறித்து, "Wisdom is an intellectual faculty through which we obtain Knowledge" என்று விளக்கப்பட்டுள்ளது. ஆக ஞானம் என்பது சிறந்த மற்றும் தகுந்த முடிவுகளை எடுப்பதற்கு அறிவை பயன்படுத்தும் விதம் என்றும் கூறலாம். ஞானத்திற்கும் அறிவிற்கும் உள்ள வேறுபாடு என்ன என்றால், உதாரணமாக, தன் கையில் ஒருவர் விளக்கை பிடித்துக் கொண்டு மற்றவர்களுக்கு எது சரியான வழி என்று சுட்டிக் காட்டுதல் அறிவு ஆகும். ஆனால் தாமே விளக்காக மாறி, சரியான பாதையில் நடந்து மற்றவர்களுக்கும் வழிகாட்டுவது ஞானம் ஆகும். ஆக அறிவு acquired Knowledge என்றும், ஞானம் divine gift என்றும் பொருள்படுகிறது. வாழ்வில் ஏற்படும் குழப்பங்களுக்கும் அறிவை மட்டும் பயன்படுத்தி முழுமையான தீர்வு காண முயற்சிக்கிறது தற்கால உலகம். முழுமையான வாழ்வு வாழ ஞானம் தேவை. ஆக ஞானத்தின் துணையோடு மட்டுமே வாழ்வை சீராக்கி, நிறைவாக வாழ முடியும். ஆகவே தான் திருமறை "ஞானத்தையும் புத்தியையும் சம்பாதி" (நீதி . 4:5,6) என்றும், "ஞானியின் இதயம் காலத்தையும் நியாயத்தையும்அறியும்" (ச.உ . 8:5) என்றும், "ஞானம் கேடகம்.....ஞானம் தன்னை உடையவர்களுக்கு

ஜீவனைத்தரும்" (ச.உ. 7:12) என்றும் கூறப்பட்டுள்ளது. உண்மையான மகிழ்ச்சி, நிறைவு எதனுள் இருக்கிறது. மற்றும் இல்லை என்கிற பகுத்து அறியும் உணர்வையும் சரியான மனப்பக்குவத்தையும் மனித அறிவினால் அல்ல, இறைஞானத்தால் மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும். ஆக இத்தகைய ஞானத்தின் தேவையை அறிந்து, அதை கேட்டு, பெற்றுக் கொண்ட சாலமோன் அரசர் வழியாக சற்று சிந்திப்பது நலம்.

சாலமோனின் தந்தை தாவீது அரசர். இஸ்ரவேலை 40 வருடம் ஆட்சி செய்தார். சாலமோனின் தாய் பத்சேபாள், உரியாவின் மனைவியாவார். தாவீது அரசரின் இளையகுமாரன் சாலமோன். அவர் இளவயதிலேயே இஸ்ரவேலின் மூன்றாவது அரசராக தெரிந்தெடுக்கப்பட்டார். சாலமோன் தனது பொறுப்பின் ஆழத்தையும், சிரமங்களையும் அறிந்திருந்தபடியால் ஞானம் தேவை என நினைத்தார். ஆகவே கடவுளிடமிருந்து அதைப் பெற்றுக் கொள்ள தீர்மானித்தார். அந்த வகையில் தன்னைத் தகுதிப்படுத்தும் படியாக முதலாவதாக,

### *1. கடவுளை அன்போடும், உண்மையோடும் தொழுது கொண்டார்* : (Worshipped God with Love and faithfulness)

(1 அர. 3:2-5).

சாலமோன் காலத்தில் ஜனங்கள் உயர்ந்த இடங்களில் பலிகளை செலுத்தி வந்தனர். சிறப்பாக கிபியோன், கில்கால், சீலோவா, எப்ரோன், கீரியாத்யாரீம் போன்ற இடங்கள் வழிபாட்டு மேடுகளாக விளங்கின. சமாரியர்கள் உயர்ந்த பலியிடும் இடங்களை தெரிவு செய்து பயன்படுத்தினர். (1குறி. 13:32; 2அர. 17:29). கானானியர்களும் மற்ற ஜனங்களும் பாகாலுக்கு பலியிடும் மேடைகளை பயன்படுத்தினார் (1அர. 14:23). யோசியா அரசரின் காலம் வரைக்கும் அத்தகைய வழக்கம் இருந்ததாகவும்அதை யோசியா அகற்றினார் என திருமறை கூறுகிறது (2 அர. 23:19). முந்தைய மக்களிடம் கடவுள் உயர்ந்த இடங்களில் வசிக்கிறார் என்ற நம்பிக்கை காணப்பட்டது. கடவுளை நிரந்தரமாக தொழுது கொள்ள தகுந்த இடம் இல்லாமல் இருந்ததுக்கு ஒரு காரணம். அடுத்தபடியாக, கர்த்தருடைய பெட்டி யோசுவாவால் சீலோவாவுக்கு கொண்டுவரப்பட்டது (யோசு.18). ஏலின் காலத்தில் (1 சாமு. 4). பெலிஸ்தியர் இஸ்ரயேலரை தோற்கடித்து பெட்டியை சிறைப்படுத்தினார். சவுல் அரசர் காலத்தில் அதை திரும்பக் கொண்டு வந்தார் (1 சாமு. 6:17, 2 நாளா. 1:4). ஆக சாலமோன் அந்த நாட்கள் பலியிடும் பண்டிகை நாட்களாகவும், தான்

அரசராக பதவியேற்றதை கொண்டாடும் விதமாக சகல ஜனங்களுடன் கிபியோனுக்கு (மோசேயால் ஏற்படுத்தப்பட்டது) பலியிடும்படி சென்றார் (2குறி. 1:3-6). அங்கு பெசலயேல், வெண்கலத்தால் செய்து மோசேயால் அமர்த்தப்பட்ட பலிபீடம் இருந்தது 1 அர.3:3 - சாலமோன் கடவுளை நேசித்து தனது தந்தை வழியில் நடந்து கடவுளை வழிபட்டதுமல்லாமல் 1000 தகனபலிகளை செலுத்தினார். சாலமோன் உண்மையாய் கடவுளை நேசித்து செலுத்திய பலிகளை கடவுள் விரும்பினார் என திருமறை கூறுகிறது. கடவுளிடமிருந்து வருகிற ஆசீர்வாதங்கள் வியாபாரமாக்கப்பட்ட நிலையில், திருமறை மீண்டும் ஒருமுறை உண்மையாய், அன்புடன் செலுத்தும் தொழுகையை கடவுள் விரும்புகிறார் என நினைவுறுத்தப்படுகிறோம். இரண்டாவதாக

## *2. தனது எளிமையை நினைவு கூர்ந்தார்* :

(Remembered his Humbleness) (2 அர. 3:6-8).

கடவுள் தனது தந்தையுடன் (தாவீது அரசர்) இருந்ததையும் ஆனால் இப்பொழுது தான் அந்த அரியணையில் அமர்ந்திருப்பதையும் நினைவு கூர்ந்தார். தான் ஒரு குழந்தை எனவும், தனது பதவியின் கீழ் அநேக ஜனங்கள் இருக்கிறார்கள் எனவும் நினைப்பூட்டினார். இது அவரது குழப்ப நிலையை எடுத்துரைக்கிறது. நியாயமான காரணம் என்னவென்றால் அவருக்கு இருந்த நெருக்குதல்கள் முதலாவதாக அவரது சகோதரர் அதோனியா. அதோனியாவுக்கு அரசராக ஆசையிருந்தது. இருந்தது மட்டுமல்ல எருசலேமின் பிரதான ஆசாரியர்-அபியாத்தார், தாவீதின் படைத்தலைவன் - யோவாப் ஆகியோரது ஒப்புதல் இருந்தது. மேலும் சாலமோனுக்கு பெலிஸ்தியர், மோவாபியர், அம்மோனியர், ஏதோமியர், அசீரியா போனற அண்டை நாட்டினரிடமிருந்து நெருக்குதல் இருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக, திரளான இஸ்ரவேலின் ஜனங்களை நிர்வகிக்கும் பொறுப்பு இருந்தது. ஆக குடும்பம், அண்டைநாட்டார், சொந்த ஜனங்கள் சூழ நிற்க தான் உரு இளைஞன், கடவுள் அருள், ஆசி இருந்தால் மட்டுமே பொறுப்பை, சவால்களை கையாள முடியும் என்ற சிந்தனை மேலோங்கி இருந்தது. தனது வயதிலோ இளமை, கடமைகளிலோ பெரும் எதிர்பார்ப்பு ஆகவே சாலமோன் தனது தாழ்மையை நினைவுகூர்ந்தார். சிறந்த தலைவர்களுக்குரிய இந்த நல்ல பண்பு சாலமோனிடமும் இருந்தது. மூன்றாவதாக,

### 3. புரிந்துகொள்ளும் மனதிற்காக வேண்டினார் :

(Prayed for Understanding mind) (1அர. 3:9-14).

சாலமோன் கடவுளுக்கு பலி செலுத்திய பின்பு கடவுள் சாலமோன் மேல் அன்புகூர்ந்து ஆசி வழங்க விரும்பினர். பதிலாக சாலமோன் நன்மை எது தீமை எது என வகையறுக்கும் ஞானமுள்ள இதயம் மற்றும், மக்களை நியாயம் விசாரிக்க ஞானம் இவைகளை கேட்டார் (1 அர. 3:9). மார்ட்டின் லூத்தர் இதை "Obedient heart" (கீழ்ப்படியும் இதயம்) மற்றும் "hearing heart" (கேட்கும் இதயம்) வேண்டுமெனக் கேட்டார். இரண்டாவது தலைமைத்துவ நற்பண்பாகிய "to govern your people, to discern between good and evil" என்கின்ற வேண்டுதலை முன் வைத்தார்.சாலமோனின் இறைவேண்டலை கடவுள் விரும்பினார். பொருள் மேன்மை, நீண்ட ஆயுள், எதிரிகளின் மேல் வெற்றி போன்றவற்றை கேட்காமல் ஆளுமைத்திறன் மற்றும் புரிந்து கொள்ளும் இதயம் கேட்டபடியால் (1அர. 3:11). ஞானம் மற்றும் பிற மேன்மைகளையும் கொடுத்தார் (1அர. 3:12,13). யாக். 1:5-ஞானத்தில் குறைவுள்ளவர்கள் அதை இறைவனிடம் கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள் எனக் கூறப்பட்டுள்ளது. மேலும் அவருக்கு முன்பும் பின்பும் வந்த அரசர்களில் ஞானத்தில் அவருக்கு இணையானவர்கள் ஒருவரும் இருந்ததில்லை எனப் பார்க்கிறோம் (1அர. 3:4-15). நியாயம் விசாரிக்க தகுந்த ஞானம் பெற்றிருந்தார் (1அர. 3:16-18). அரசியல் ஞானம்-தகுந்த அதிகாரிகளை நியமித்து ஆளுகை செய்தார் (1அர. 4:1-28). பல நாடுகளுக்கிடையே புகழுடன் விளங்கினார் (1அர. 4:29-34). சாலமோன் தத்துவ ஞானத்தை அல்ல தலைமைத்துவத்தை வெளிப்படுத்த செயல் ஞானத்தைக் கேட்டார். தி.பா. 119:129-131-சாதாரண ஜனங்களை ஞானமுள்ளவராக்கும் அவரது வார்த்தைகள் என்றும், ஞானத்தைக் கடவுள் கொடுக்கிறார் என்பதற்கும் (யாக். 1:5) சாலமோன் சான்று பகர்கிறார்.

**நிறைவுரை :**

கடவுள் ஞானத்தை தருகிறார். அதைப் பெற்றுக் கொள்ள தாழ்மையுடன் வேண்டுதல் செய்ய வேண்டும். அறிவை கையாளுவதற்கும் அதைப் பயனுள்ளதாக்குவதற்கும் கடவுள் ஞானம் தேவை. அதை தேடுவோம். அவர் பாதம் பணிந்து பெற்றுக் கொள்ளுவோம்

அருள்திரு. அறிவர் M. **ஜஸ்டின் மோசஸ்**

09-06-2019 **பெந்தக்கோஸ்து ஞாயிறு**

# வாரும் தூய ஆவியாரே, எம்மை விடுவித்தருளும்

**COME HOLY SPIRIT SET US FREE**

| | |
|---|---|
| எசா. 61:1-11 | திப. 2:1-13 |
| திபா. 107:31-43 | லூக். 4:16-21 |

**"யூதரும் யூதம் தழுவியோரும் கிரேக்கரும் அரேபியரும் ஆகிய நாம் நம் மொழிகளிலே கடவுளின் மாபெரும் செயல்களை இவர்கள் பேசக் கேட்கிறோமே என்றனர்."** (திப. 2:11)

வரம் பெற்ற பிரசங்கியார் என்று தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்ட நற்செய்தியாளர் ஒருவரின் நற்செய்திக் கூட்டம் பள்ளிக்கூட மைதானம் ஒன்றில் ஒழுங்கு செய்யப்பட்டது. மக்கள் திரளாகக் கூடினர். அநேகர் மைதானத்தின் மேடைக்கு முன் வந்து அமர்ந்தனர். பலர் மைதானத்தின் இடதுபுறமிருந்த பள்ளிக்கூட கட்டிட வராந்தாவில் வந்தமர்ந்தனர். போதகர் அவர்களை மைதானத்தில் வந்தமர அழைத்தார். ஒருவரும் வரவில்லை. பிரசங்கியார் சுமார் 7.30 மணியளவில் வந்தார். அவருக்கு வரவேற்பு சொன்ன போதும் போதகர் வராந்தாவில் இருந்த மக்களை முன் வந்து அமர அழைத்தார்; பயனேதும் இல்லை.

நற்செய்தியாளரின் நேரம் வந்தது. அவர் தன் அருளுரையை துவங்கும் முன் ஆவேசப்பட்டு சில வார்த்தைகளை பேசினார். அக்கினி, அக்கினி, அக்கினி இறங்கி வருகிறது, தூய ஆவியரின் அக்கினி இதோ இந்த வராந்தா பக்கமாக இறங்கி வரக் காண்கிறேன். ஒருவரும் அங்கு இருக்க வேண்டாம், எல்லாரும் இங்கே வந்துவிடுங்கள் என்று சத்தமிட்டார். வராந்தாவில் இருந்த ஒருவர் கூட அங்கு இல்லை. ஆக தூய ஆவியரின் அனல் எங்கிருந்தோ நம்மிடம் வருகிறது என்பது அனேகருடைய நம்பிக்கையாயிருக்கிறது. திருமறையின் அடிப்படை உண்மைகளில் ஒன்று கடவுள் இம்மானுவேல். அவர் நம்முடன் இருப்பவர். உடனிருந்து செயலாற்றுபவர் ஆவார்.

இன்று தூய ஆவியாரின் வருகைக்காக காத்திருப்பதும் வாரும், வாரும் என்று கூப்பிடுகிறதும் வாடிக்கையாகிவிட்டது. வாரும் தூய ஆவியாரே எம்மை விடுவித்தருளும் என்பதில் தூய ஆவியாரின் செயல்படும் தன்மையே சுட்டிக்காட்டப்படுகிறது.

திருத்தூதுவர்பணிகள் 2-ஆவது அதிகாரத்தில் தூய ஆவியார் திருச்சபைக்கு இயேசுநாதரால் வாக்குக் கொடுக்கப்பட்ட நிலையில்

ஆவியாரின் அருட்பொழிவினை திருச்சபை நிலையாக, நிறைவாக பெற்றுக் கொள்ளுகிறது. அதனால் ஒளிந்திருந்த சீடர்குழு வெளிப்படையாய் செயல்பட, விடுதலையை ருசிக்க தூய ஆவியார் துணைபுரிகிறார். அந்தக் கூட்டத்தில் ஏறக்குறைய 18 மொழி பேசும் மக்கள் இருக்கின்றனர். ஆனால் தூயாவியர் அருட்கொடையின் செயலாக்கத்தால் மாற்று மொழியினர்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கெள்ளுகின்றனர். இப்படிப்பட்ட தூயாவியரின் செயல்களையே கடவுளின் மாபெரும் செயல்களை இவர்கள் பேசக் கேட்கிறோம் என்கிறார்கள் மக்கள். ஆக கடவுளின் ஆவியரின் செயல்பாடுகள் விடுதலையை தருகிறவைகளாக இருக்கின்றன. இதனை முன்னுரையாக வைத்து இரண்டு சிந்தனைகள்.

### *1. செயலில் வெளிப்படும் தூய ஆவியார்* :

தூய ஆவியாரின் வெளிப்பாட்டினை செயல்களை வைத்தே புரிந்து கொள்ள வேண்டுமே தவிர வெறும் வார்த்தைகளை வைத்தோ, ஆகோஷங்களை வைத்தோ புரிந்து கொள்ளக் கூடாது. இயேசுவை ஆண்டவர் என்று அறிக்கை பண்ணாத எதும் தூய ஆவியானவரால் உண்டானதல்ல.

என்பதிலே நாவின் வார்த்தைகளால் அறிக்கை செய்தல் என நினைக்கிறோம். உள்ளத்தின் நிறைவினால் நா பேசும். ஆக நம் வார்த்தைகளைவிட நம்மிடமிருந்து வெளிப்படும் செயல்களே தூய ஆவியாரை வெளிப்படுத்தும் ஊடகங்களாகின்றன. உதடுகள் தோத்திரங்கள் சொல்லியும், இயேசுநாதரை வாயால் அறிக்கை செய்யும் அதேவேளையில் உள்ளத்தின் நினைவுகளும் செயல்களும் சுயநல ஆதாயம் தேடுகிறதாக, பிறரை எப்படி தன் வயப்படுத்தி தனக்குரியவர்களாக மாற்றிக் கொள்ளலாம் என்று நினைக்கும் போது அங்கே தூய ஆவியார் வெளிப்படுகிறாரா? என்பது கேள்வி! சபைகளில் தங்களின் செல்வாக்கை நிலைநாட்டவும், பதவிகளைப் பற்றிக் கொள்ளவும், ஆட்சியைப் பிடித்துக் கொள்ளவும் உள்நோக்கத்தோடு தோத்திரம், அல்லேலூயா வார்த்தைகளை சொல்லி ஆகோசமாக ஜெபிக்கிறதைக் காண்கிறோம். செயல்பாட்டில் எந்த நன்மையும் எவருக்கும் செய்யத் தடைகளாய் இருக்கிற அனேகர் அங்கே தூய ஆவியாரின் வெளிப்பாட்டைக் காண முடியுமா? சிந்திக்க வேண்டும்.

இயேசுநாதர் சொன்னார் நல்லமரம் நல்ல கனிகளைக் கொடுக்கும், கெட்டமரம் கெட்ட கனிகளைக் கொடுக்கும். அவருடைய செயல்களைக் கொண்டே அவர்களை அறிவீர்கள். நிச்சயமாக தூய ஆவியாரின் செயல்கள் கூட்டுறவை, அன்பை, மன்னிப்பை, தியாகத்தை, நன்மைகளை வெளிப்பட செய்கின்றன. உண்மையான சகோதரக் கூட்டு வாழ்வில் மலரும்

நன்மைகளிலும், உறவுகளிலும் தூய ஆவியாரின் செயல்பாடுகள் வெளிப்படுவதை அனுபவிப்போம்.

## 2. *விடுதலை அருளும் தூய ஆவியார்* :

கர்த்தருடைய ஆவியர் எங்கேயோ அங்கே விடுதலை உண்டு. திருமறையின் ஆரம்பம் முதலே கடவுளின் முதன்மையான செயல்பாடாக விடுதலையைக் காண்கிறோம். தந்தை, மைந்தன், தூய ஆவியர் மூவரில் ஒருவர் என்று திருக்சபை உறுதிபட உணர்ந்துகொள்ள செய்வதும் விடுதலையே.

தந்தையாம் கடவுளின் செயல்பாடாக விடுதலையை பழைய ஏற்பாட்டில் காணலாம். எகிப்திலிருந்து இஸ்ரவேலின் விடுதலை யாத். 3:7, கர்த்தருடைய ஆவியால் கடவுளின் பிரதிநிதிகளாகிய நீதித் தலைவர்கள், ஆசாரியர்கள், அரசர்கள் மீது இறங்க அவர்கள் ஆற்றல் நிறைந்த, அறிவு செறிந்த செயல்களைச் செய்தனர். அச்செயல்கள் அடிமைத்தனங்களை முறியடித்து மக்களுக்கு விடுதலையைத் தந்தன.

திருமைந்தனாம் இயேசுநாதரின் பிறப்பை முத்தரித்தவரே ஆவியானவர். ‘இயேசு’ என்பதற்கு ‘விடுதலை’ என்பதே பொருள். இயேசு நாதரின் நாசரேத்தூர் அறிக்கையும் (லூக். 16:21) அதைத் தொடர்ந்த அவரது பணிவாழ்வும், புறக்கணிக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட அடிமைநிலையில் இருந்த பாவிகள் வரிசையினர், வரித்தண்டுவோர், குழந்தைகள், பெண்கள், நோயுற்றோர் போன்றோரை விடுவிக்கும் வண்ணமாக இருந்தன.

அந்த இயேசுநாதரின் அருள்வாக்கின் வழி திருச்சபைக்கு நிலையாக, நிறைவாக கொடுக்கப்பட்ட ஆவியார் எப்பொழுதும் உடனிருப்பவர், உடனிருந்து தேற்றுகிறவர். பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் உணர்வுத் தந்து திருச்சபையை விடுதலை வாழ்வுக்கு நேராக நெறிபடுத்துகிறவர். அந்த தூயஆவியார் எங்கேயோ அங்கே விடுதலை உண்டு.

மிஷனெறிகள் வாயிலாக நம் மாவட்டத்தில் செயலாற்றிய தூயஆவியார் நம்மை ஆன்மீக அடிமைத்தனத்திலிருந்தும், சாதீய அடிமைத்தனத்திலிருந்தும், மூடநம்பிக்கையிலிருந்தும் விடுவித்தார். இன்றும் இருக்கும் வேறுபாட்டுணர்வுகளின் பிடியிலிருந்தும்; ஆதிக்க எண்ணங்களிலிருந்தும், சாதீய சமய அடிமைத்தனங்களிலிருந்தும், தான் தோன்றித்தன சுயநலப் போக்குகளிலிருந்தும், பதவி வெறி, அதிகாரவெறி போன்ற தீமைகளிலிருந்தும் எம்மை விடுவிக்க வாரும் தூய ஆவியாரே என்று வேண்டுவோமா? இறையாசி நம்மோடிருப்பதாக! ஆமென்!

அருள்திரு. A. ***ஜெப சுஜி***

09-06-2019

சுற்றுச்சூழல் ஞாயிறு
Ecological Sunday

# கடவுளின் படைப்பைப் பேணி வளர்த்தல்

## NUTURING GOD'S CREATION

தொ.நூ. 1:28-31 | தி.வெ. 22:1-5
தி.பா. 104:1-23 | லூக். 12:22-30

**"கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கி..... அனைத்தையும் ஆளுங்கள் என்றார்."**
(தொ.நூ. 1:28)

படைப்புகள் அனைத்துமே சிறப்பான நோக்கத்துடனேயே படைக்கப்பட்டுள்ளன. அவைகள் எல்லாவற்றிலும் மேன்மையானதாக மனுக்குலத்தைப் படைத்து அவைகளின் சிறப்பை ஆண்டுகொள்ளவும், பாதுகாத்து பராமரிக்கவும் மனிதனின் பொறுப்பில் ஒப்படைத்தார் (தொ.நூ. 2:15). ஆனால் சிலகாலமாக மனிதன் இறைவனின் படைப்பை சிதைத்து பூமிக்கும், மனுக்குல வாழ்விற்கும் தீமைகள் இழைத்து வருகிறான். காரணம் பேராசை என்கிற தீஞ்செயல் உள்ளங்களில் குடிபுகுந்து இயற்கையின் கனிம வளங்களை பாழ்படுத்தி தன் வாழ்விற்கும் வருங்காலத் தலைமுறைகளுக்கும் தவறு செய்கின்றான். இதன் விளைவாக இயற்கை பல பாதிப்புகளை ஏற்படுத்துகின்றது.

'Nurture' என்ற ஆங்கில வார்த்தைக்கு 'பேணிவளர்' என்பது பொருள். இயற்கையின் துணையோடு மனுக்குலம் மகிழ்வாய் வாழவும், இறைவனின் திட்டத்தை புரிந்து கொள்ளவும், இறையுறவை புதுப்பிக்கின்ற இடமாகவும், அதனைப் பராமரித்து பாதுகாப்பாகவும், கரிசனையோடு வளர்க்கப்படவும் இறைவன் நம்மில் விருப்பம் கொள்கிறார். அவைகளின் உண்மைகளை கொடுக்கப்பட்டுள்ள திருமறைப்பகுதிகள் வாயிலாக தியானம் செய்வோம். (Human Responsibility for Ecolosical harmony).

### *1. மேன்மையான படைப்பை கரிசனையோடு வளர்க்க வேண்டும்* : (தொ.நூ. 1:28-31)

மானுடம் மகிழ்ச்சியாய் வாழ்வதற்கு தேவையான அனைத்தையும் (பறவைகள், பிராணிகள், ஜீவஜந்துக்கள், விதைகள், கனிமரங்கள், சகலவித விருட்சங்கள்) படைத்து இலவசமாய் (Gift) வழங்கினார். மேலும் வாழ்வின் முக்கிய ஆதாரமாகிய உணவு, தண்ணீர் போன்றவைகளை ஈவாய் வழங்கினார். கடவுள் தாம் படைத்த அனைத்தையும் பார்த்து மிகவும் நன்றாயிருந்தது (தொ.நூ. 1:31). என்று கண்டு நிறைவடைந்தார். ஆகவே

அவைகளை ஆண்டுகொள்ள தம் சாயலாக படைத்த மனிதனிடத்தில் அன்போடு வழங்கி மகிழ்ச்சியடைந்தார்.

ஆனால் 'ஆண்டுகொள்ளுங்கள்'என்ற கட்டளையை மறந்து அபகரிக்கின்ற தன்மை மனுக்குலத்தில் ஏற்பட்டு இயற்கை செல்வங்களையும், உயிரினங்களையும் அழித்து பூமிக்கு காயம் ஏற்படுத்தி பல பேரழிவுகளை சந்தித்தார்கள். மனுக்குலத்திற்கு கொடுக்கப்பட்ட அதிகாரம் படைப்பின் மேன்மையை மறந்து, படைப்பாளரின் அன்பை மறக்கச் செய்து பூமி பாலைவனமாக மாறிக் கொண்டு வருகிறது.

ஆகவே மனிதன் இயற்கையோடு இணைந்து வாழ அழைக்கப்படுகின்றான். கடவுளின் திட்டதிதை நிறைவேற்றி இயற்கையை பாதுகாத்து, பராமரித்து, அதன் மேன்மையை உணர்ந்து இறைவனின் அன்பை உணர வேண்டும்.

### *2. மேன்மையான படைப்பை பண்படுத்தி பாதுகாக்க வேண்டும்* : (லூக். 12:22-30)

இயேசுநாதர் சீஷர்களிடத்தில் மிகப் பெரிய வாழ்வியல் உண்மையைத் தன் படைப்பின் சிறப்புகள் வாயிலாக வெளிப்படுத்துகின்றார். உணவு மற்றும் உடை இன்றியமையாதது தான், ஆனால் அவைகளுக்கு மேலானவை ஜீவனும், சரீரமுமாய் இருக்கிறது என்றார். காரணம் சீஷர்களின் உலகபிரகாரமான பேராசைகள் மனுக்குலம் நிறைவு என்கிற எண்ணம் இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

இவ்வுலகில் செல்வமே என்கிற சிந்தனை மேலோங்கி காணப்பட்டது. சொகுசு மற்றும் பொருளாதாரப் பெருக்கம் நிறைந்த வாழ்வே சிறந்தது என கருதி அவைகளுக்காய் கவலைகொள்கிறான் (லூக். 12:25). நிறைவு என்கிற எண்ணம் இல்லாமல் இயற்கையை அழித்து படைப்பின் சிறப்பை அழித்து வாழ்நாள் முழுமையும் தான் மட்டும் சந்தோஷம் கொள்ள வேண்டும் என எண்ணம் கொள்கிறான். இயற்கையோடு இணைந்து வாழ வேண்டிய மனுக்குலம் செயற்கையோடு மகிழ்ச்சி காண்கிறான். இதன் விளைவாக படைப்புகள் பாதிப்புக்குள்ளாக்கப்படுகிறது.

ஆகவே, இயேசு சீஷர்களிடத்தில் தான் படைத்த அனைத்தும் போதுமானதாய் பூமியில் இருக்கின்றதே என்று செடி மற்றும் கொடிகள் சுட்டிக்காட்டி பேராசைக்கு எதிர்த்து நிற்கிறார் (லூக். 12:27). ஆகையால் இறைவன் வழங்கிய இயற்கையை பண்படுத்தி பாதுகாத்து வாழ்வோம்.

## *3. மேன்மையான படைப்பை வாழ்வோடு ஒன்றாக்குவோம்* : (தி.வெ. 22:1-5)

யோவான் கண்ட தரிசனத்தில் இறைவனின் படைப்பை புத்தாக்கம் செய்ய அழைப்பை விடுக்கிறார். புதிய உலகம் என்கிற சிந்தனை இறைசித்தம் உணர்ந்து செயல்பட நம்மை அழைக்கின்றது. புதிய வாழ்வு என்பது இறைவன் இயற்கையாய் வழங்கிய தண்ணீர், கனி மரங்கள், மர இலைகள் போன்றவையை குறிக்கும். எல்லாம் இயற்கையாய் நமக்கு அருளப்பட்டிருக்க, அதன் முழுமையை மறந்து அவைகளை பயன்படுத்தவும், பாதுகாக்கவும் அவற்றோடு வாழவும் தவறுகிறோம்.

ஆகவே மனிதன் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு முழுமையாய் தன்னை அடிமைப்படுத்திக் கொள்ளாமல், அழிந்து வரும் நமது இயற்கைச் செல்வங்களை பாதுகாக்க அழைக்கப்படுகின்றோம்.

நாம் வாழ்கின்ற உலகில் இயற்கை மாசுபட்டு நோய்களின் உறைவிடமாக மனிதன் வாழ்ந்து வருகிறான். ஆகையால் மனுக்குலம் கடவுள் நமக்கு வழங்கிய படைப்போடு ஒன்றிணைத்து வாழவேண்டும் மட்டுமல்ல அவைகளைப் பாதுகாக்க புதிய உள்ளம் கொள்ளவேண்டும். (Steward's of Creation).

அண்மைக் காலத்தில் நடந்த ஓர் ஆய்வறிக்கையில் சுத்தமான தண்ணீருக்காக மூன்றாம் உலகப் போர் ஏற்படலாம் என்கிற செய்தி பரவியுள்ளது. ஆகவே, கடவுளின் படைப்பை மதித்து அவைகளின் மேன்மையை உணர்ந்து கரிசனையோடு பண்படுத்தி, பாதுகாத்து, இணைந்து வாழ்வோமாக.

அருள்திரு. **ராஜ பக்தசிங்**

16-06-2019

**பெந்தக்கோஸ்துக்குப் பின் வரும் முதலாம் ஞாயிறு & திரித்துவ ஞாயிறு**

# மும்மை (திரித்துவம்) : அன்பின் சமூகம்

**TRINITY : COMMUNITY OF LOVE**

| | |
|---|---|
| தொ.நூ. 18:1-15 | 2 கொரி. 13:5-14 |
| தி.பா. 97 | மாற். 1:1-11 |

**"ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் அருளும் கடவுளின் அன்பும் தூய ஆவியாரின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக."** (2கொரி. 13:13)

கடவுள் நம்பிக்கையற்ற ஒருவர் கிறிஸ்தவ நம்பிக்கை கொண்ட ஒருவரிடம் உங்கள் திருமறையில் குறிப்பிட்டுள்ளபடி மூன்று ஆட்கள் எப்படி ஒரே கடவுளாக இருக்கமுடியும்? என்று கேட்டபோது கிறிஸ்தவ நம்பிக்கை கொண்டவர் பதிலாக ஒருபெண் இந்த உலகில் பிறக்கின்றபோது அவள் ஒரு பெண் என்று அழைக்கப்படுகிறாள். அவன் வளர்ந்து குழந்தையினைப் பெற்றெடுக்கும் போது தாயாக அழைக்கப்படுகிறாள். அதோடு அவள் தனது பிள்ளையின் பிள்ளையினை காணும் போது பாட்டி என அழைக்கப்படுகிறாள். ஒரே பெண் மூன்று ஆட்தன்மையோடு செயல்படுவதுபோல கடவுளும் ஒருவராக மூன்று ஆட்தன்மையோடு செயல்படுகிறார் என்றார். இதுவே கடவுளின் மூவொரு தன்மை (மும்மை) ஆகும்.

கடவுளின் உண்மை இயல்பினை வெளிப்படுத்துவதினால் தான் மூவொரு கடவுள் மறையுண்மையினைப் புரிந்து கொள்வது கடினமானதாக உள்ளது. கடவுள் தனது உண்மை இயல்பில் தனது முதல் ஆட்தன்மையில் அமைதியில் உறைபவராகவும், மனித சிந்தனைக்கு அப்பாற்பட்டவராகவும் தனது இரண்டாம் ஆட்சித் தன்மையில் மனுக்குலத்தோடு கலந்து, அதனை மீட்பவராக, நம் அருகில் இருப்பவராகவும், தனது மூன்றாம் ஆட்தன்மையில் மனித இதயத்திற்குள்ளும் மனசாட்சிக்குள்ளும் வாழ்ந்து, நமக்குள் வாழ்பவராக இருக்கின்றார். ஆகவே மூவொரு கடவுள் நமக்கு தொலைவிலும், நமக்கு அருகிலும், நமக்குள்ளும் இருந்து அன்பின் சமூகமாக செயல்படுகிறார். இத்தகைய கூட்டுறவு தன்மையினைத் தான் பவுல் கொரிந்து திருச்சபைக்கு கடிதம் எழுதுகையில் கடவுளின் அன்பும், கிறிஸ்துவின் அருளும், ஆவியாரின் நட்புறவும் அனைவரிலும் நிலைதிருக்க வேண்டும் என்கிறார். அன்பின் சமூகமான மூவொரு கடவுளின் செயல்பாட்டினை இன்றைய திருமறைப் பகுதிகள் சார்ந்து சிந்திப்போம்.

***1. அங்கீகாரம் அருளும் அன்பின் சமூகம்*** : (தொ.நூ. 18:1-13)

கடவுள் மானிடரைப் படைத்தபோது படைப்பில் அவரது செயல்பாடு பன்மைத் தன்மையாக வெளிப்பட்டது (தொ.நூ. 1:26). பன்மைத் தன்மையுடைய கடவுள் தம்மால் படைக்கப்பட்ட மனுக்குலம் தனது ஆசியோடு அன்பின் சமூகமாக செயல்பட வேண்டுமென்பது அவரது எதிர்நோக்காயிருக்கிறது. மம்ரேயின் சம பூமியில் ஆபிரகாமுக்கு கடவுள் மூவொரு கடவுளாக மூன்று மனிதர் வடிவில் தரிசனமானார். தனது மும்மை செயல்பாட்டினால் ஆபிரகாமின் வாழ்வில் அன்பின் சமூகமாக செயல்பட்டார். தனக்கு தரிசனமான கடவுளை தம்மைவிட்டுக் கடந்து போக வேண்டாம் (தொ.நூ. 18:3) எனக் கேட்டுக் கொண்ட ஆபிரகாம், அந்த மூன்று புருஷர்களையும் நன்றாய் உபசரித்து, சிறந்த உணவினைக் கொடுத்து தனது அன்பினை வெளிப்படுத்தினார். ஆபிரகாமை ஆண்டவர் அழைத்த போது உன்னை நான் பெரிய இனமாக்குவேன்; உனக்கு ஆசி வழங்குவேன். உன் பெயரை நான் சிறப்புறச் செய்வேன்; நீயே ஆசியாக விளங்கிடுவாய் (தொ.நூ. 12:2) என்ற வாக்குறுதியின் அங்கீகாரத்தினை மூவொரு கடவுளை சந்தித்த ஆபிரகாம் தன்னிலே சொந்தமாக்குகிறார். ஆபிரகாமின் அன்பின் விருந்தோம்பலை ஏற்றுக் கொண்ட மூன்று மனிதரும் சாராவைக் குறித்து விசாரித்து, மீண்டும் இளவேனிற் காலத்தில் உறுதியாக உன்னிடம் வருவேன். அப்பொழுது உன் மனைவியாகிய சாராவுக்கு ஒரு மகன் பிறந்திருப்பான் என உறுதியளித்தனர் (தொ.நூ. 18:9,10).

இறை அங்கீகாரமாகிய குழந்தைக்காக நீண்ட காலம் ஆவலுடன் எதிர்பார்த்தவர்கள் மும்மை ஆண்டவரின் ஆசியின் நிறைவேறுதலைக் குறித்து சந்தேகித்தனர். ஆனால் தனது முதல் ஆட்தன்மையில் அன்பில் உறைந்து, மனித சிந்தனைக்கு அப்பாற்பட்டு செயல்படும் மூவொரு கடவுள் ஆபிரகாம், சாராவின் சிந்தனைக்கு அப்பால் செயல்பட்டு இறை அங்கீகாரத்தினைக் கொடுத்தார். அவர்களது நகைப்பு களிப்பாக மாறியது. காரணம் ஆண்டவரால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை (தொ.நூ. 18:14). இன்றைக்கும் மூவொரு கடவுள் தமது அன்பினால் நம்மிடையே செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். அன்பினால் நிறைந்திருக்கின்ற அவரது உள்ளத்தில் அவர் தம் மக்களுக்கு கொடுப்பதற்கு ஏதாவது இருந்து கொண்டே தான் இருக்கிறது. ஆகவே இறை அங்கீகாரமின்றி வாழ்கிற அவரது அடியவர்கள் அங்கீகாரத்தினை சொந்தமாக்கிட மூவொரு கடவுள் செயல்படுகிறார் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

## 2. அரவணைத்து மகிழும் அன்பின் சமூகம் : (மாற். 1:1-11)

அன்பின் சமூகமாக மனுக்குலத்தின் வாழ்வினில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் மூவொரு கடவுள், இயேசுகிறிஸ்துவாக மனுக்குலத்தோடு தன்னை ஒன்றிணைத்து மீட்பின் பணிவிடையினைத் தொடர்கிறார். இயேசுகிறிஸ்துவில் கடவுளின் அன்பின் முழுமையினை உணரமுடிகிறது. தமது அன்பினாலும் அன்பின் பணிவிடையினாலும் தன்னை உலகிற்கு வெளிப்படுத்தினார். தனது திருப்பணியின் ஆயத்த நிலையில் யோர்தான் ஆற்றில் முழுக்கு முனிவர் யோவானிடம் இயேசு திருமுழுக்கு பெற்றபோது மூவொரு கடவுளின் செயல்பாடு தன்னிலே முழுமையடைந்ததை உணர்ந்தார். அவர் ஆற்றிலிருந்து கரையேறின உடனே வானம் பிளவுபடுவதையும் தூய ஆவி புறாவைப் போல் தம்மீது இறங்கி வருவதையும் கண்டார் (மாற். 1:10). இக்காட்சியின் நடுவிலே மூவொரு கடவுள் அரவணைத்து மகிழும் அன்பின் சமூகமாக இயேசுக்கிறிஸ்துவை அரவணைக்கிறார். "என் அன்பார்ந்த மகன் நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்" எனக்கூறி அன்பின் சமூகத் திருப்பணிக்காக இயேசுகிறிஸ்துவே அதிகாரப்படுத்துகிறார் (மாற். 1:11).

மூவொரு கடவுளை அவரது செயல்பாட்டின் அடிப்படையில் புரிந்து கொள்கையில் தான் படைத்த, தம்மால் பாதுகாக்கப்படும் இவ்வுலகம், அதில் வாழும் மக்களினங்கள், உயிரினங்கள், படைப்புகள் அனைத்தும் கடவுளின் அன்பின் அரவணைப்பில் மகிழ்ந்திருக்க விரும்புகிறார். கடவுளின் அன்பின் சமூகமாக செயல்பட வேண்டிய உலகம் அதிலிருந்து விலகி செயல்பட்டபோது அதனை மீட்க வேண்டிய நிலையில் தம்மால் அரவணைக்கப்பட்டிருந்த தமது திருமைந்தரை உலகினை அரவணைப்பதற்காக கையளித்தார் (யோவா. 3:16). கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு இறைவனின் மீட்பின் திட்டத்தின் நிறைவேறலானது. இன்றைக்கு மூவொரு கடவுளின் இரண்டாம் ஆட்தன்மையான கிறிஸ்து நம்முடன் கலந்து நம்மை மீட்பவராக நம் அருகில் இருந்து நம்மை வழிநடத்துகிறவராக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். இத்தகைய கடவுளின் உண்மை இயல்பினை நமக்கு வெளிப்படுத்தும் இயேசுகிறிஸ்துவின் அடிச்சுவடுகளை பின்பற்றி அவரது மீட்பின் திட்டத்தில் நம்மை இணைத்திடுவோம்.

## 3. அன்புறவில் (நட்புறவில்) நிலைக்கச் செய்யும் அன்பின் சமூகம் : (2கொரி. 13:11-14)

அன்பின் சமூகமாக செயல்பட்டுக் கொண்டிருக்கும் மூவொரு கடவுள் மனுக்குலம் உறுதியான அன்பில் நிலைத்திருக்க வழிநடத்துகிறார்.

பவுல் கொரிந்து திருச்சபை அன்பின் சமூகமாக செயல்படுவதற்கு மகிழ்ந்து வாழவும், வாழ்வின் நடத்தையினை சீர்படுத்தவும், அறிவுரைக்கு செவிகொடுக்கவும், மனவொற்றுமையுடனும், அமைதியுடனும் வாழவும், இவ்வாறு வாழும்போது அன்பும் அமைதியும் அருளும் ஆண்டவர் உடனிருப்பவார் (2கொரி. 13:11) என அறிவுரை கூறுகிறார். இவ்வறிவுரை நட்புறவில் நிலைத்திருக்க உதவி செய்கிறது. தனது மூன்றாம் ஆட்தன்மையில் மனித இதயத்திற்குள்ளும், மனசாட்சிக்குள்ளும், மானிடர் தமக்குள்ளும் வாழும் கடவுளே இந்த நட்புறவின் அடித்தளமாக இருக்கிறார். அவரது அன்புறவில் நிலைத்திருந்து அன்பின் சமூகமாக செயல்பட வேண்டியது இறைமக்களின் கடமையாயிருக்கிறது.

அன்பே உருவான கடவுள் தமது அன்பினால் மனுக்குலத்தை மீட்டெடுத்து தமது ஆவியாரின் வழிநடத்துதலினால் அன்பின் சமுகம் அமைந்திட காரணமாகி உலகில் அமைதி நிலவிட வழிநடத்துகிறார். மானிடர் தம் உள்ளத்தில் உறைந்து உந்துதல் தந்து வழிநடத்திடும் மூவொரு கடவுள் மனிதர் உடன் வாழும் மனிதரோடும், இயற்கையோடும், கடவுளோடும் அன்பில் ஒன்றாக கலந்து நட்புறவில் நீடித்து நிலைத்து வாழும் உன்னத வாழ்வினை அருள்கிறார். இந்த அன்புறவு ஏற்றத்தாழ்வில்லாத, அடிமைத்தனமில்லாத, தீமை வெற்றியடையாத, நீதியும் நேர்மையும் நிறைந்த, நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தம் செய்யும் அன்பின் சமூகத்தின் வெளிப்பாடாக அமையும். இத்தகைய சமூகம் நாம் வாழும் உலகினில் அனுபவமாகிட நட்புறவில் உறுதியடைந்து இறையன்பின் வடிகாலாய் வாழ்வோம். இறையாசி நம்மனைவரோடும் என்றும் நிலைத்திருப்பதாக.

அருள்திரு. A. **மகேர் ஷால் அஸ்பாஸ்**

23-06-2019

# வழிபாட்டில் இறைவெளிப்பாடு

**REVELATION OF GOD IN WORSHIP**

1 அர. 8:22-30 | திவெ. 14:1-7
திபா. 148 | மாற். 3:1-6

**"மேலே விண்ணிலும், கீழே மண்ணிலும் உம்மைப்போன்று வேறு கடவுள் யாரும் இல்லை."** (1அர. 8:23)

கடவுள் ஒருவரே அதிலுள்ள அனைத்தையும் விண்ணையும், மண்ணையும் படைத்தது மட்டுமின்றி அதனை ஆள்பவரும் அவரே (God is one, He is the creator of the Universe and its ruler) கடவுள் அனைத்து ஆற்றலுமுடையவர் (Omnipotent) அனைத்து இடங்களிலும் எல்லாக் காலத்திலும் பரவியிருப்பவர் (Omnipresent) அனைத்தும் அறிந்திருக்கிறவர் (Omniscient). கடவுள் மாறாதவர், அவரது காலமும் முடிவற்றது (தி.ப. 102:27,எபி1:12, 13:8). இத்தகைய தன்னைகள் அத்தனையும் உள்ளடக்கிய கடவுள் விண்ணைத் தன் அரியணையாகவும், மண்ணைத் தன் கால்மணையாகவும் கொண்டுள்ளார் (எசா.66:1). இறைவனை வழிபடுவோர் அவரது உண்மை இயல்புக்கு ஏற்ப உள்ளத்தில் தான் வழிபட வேண்டும் என்கிறார் இறைமகன் இயேசு (யோவா.4:24). வழிபடும் இறைவனின் வெளிப்பாடுகளை புரிந்து கொள்ள ஆவியரின் உதவியால் முயற்சிப்போம்.

## *1. ஆலயத்தில் காண்போம்* :

"..... என் கண்களும், என் இருதயமும் எந்நாளும் ஆலயத்தில் இருக்கும்" (1அர. 9:3).

"ஆலயம்" =ஆன்மா லயிக்கும் இடமாகும்,

'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கக் கூடாது' என்பது ஆன்றோரின் வாக்கு. (கோயில் = இறைவனின் இல்லம் எனப்பொருள்) நம் இறைவன் தம்மை ஆராதிப்பவர்களை காண்கிறவரும், கவனிக்கிறவருமாய் இருக்கிறார். தொழுகையை தம்முடைய வசனத்தினாலும், பிரசன்னத்தினாலும் அங்கீகரிக்கிறார்.

அன்று தம் விருப்பப்படியும், வடிவமைப்பின்படியும் கட்டப்பட்ட எருசலேம் ஆலயத்தில் துதிகளும், ஸ்தோத்திரங்களும் ஏறெடுக்கப்பட்டபோது

இறைமாட்சி ஆண்டவரில் இல்லைத்தை நிரப்பிற்று (8:10). இன்றும் உயிருள்ள கற்களான இறைமக்கள் திருவசனத்தின்படி, விசுவாச அடிப்படையில் ஒன்றாக கூடி ஆராதிக்கிறவர்களிடையேயும் இறைவன் தம் இருப்பு நிலையை உறுதிப்படுத்துகிறார் (மத். 18:20). வாழும் கடவுளின் கோயில் நாமே. என் உறைவிடத்தை அவர்கள் நடுவில் நிறுவுவேன். அவர்கள் நடுவில் நான் உலாவுவேன். நானே அவர்கள் கடவுள், அவர்கள் என் மக்கள் (2கொரி. 6:16). கடவுள் ஆசி வழங்கி புனிதப்படுத்திய இந்த ஓய்வுநாளில் நாம் அவரது பூரண வெளிப்பாடுகளை விசுவாசக் கண்களால் கண்டு மகிழ்வோம்.

## 2. ஆலயத் தொழுகையில் காண்போம்

"இயேசு தொழுகைக்கூடத்திற்குள் சென்றார்" (மாற். 3:1).

இயேசு ஓய்வுநாளில் தொழுகைக் கூடத்திற்கு சென்று இறைவனை வழிபடுவதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தார். 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பர் ஆன்றோர். தொழுகைக்கூடத்தில் கைசூம்பியவர் ஒருவர் இருந்தார். இயேசு அவரைக் கூர்ந்து கவனித்து, மிகுதியான அன்பு கொண்டு அவரைக் குணமாக்கினார். குற்றம் சுமத்தியோருக்கு ஓய்வுநாள் குறித்த தெளிவான அறிவையும் காட்டினார்.

வழிபாடுகளில் இறைவன் தமது வெளிப்பாடுகளை உறுதி செய்கிறார். இதனைக் காணவும், அனுபவிக்கவும் உண்மையான விசுவாசமும், முழுமையான கீழ்ப்படிதலும் தேவை. யோவான் 4:23,24-ல், காலம் வருகிறது. ஏன் வந்தே விட்டது, அப்போது உண்மையாய் வழிபடுவோர் தந்தையை அவரது உண்மை இயல்புக்கு ஏற்ப உள்ளத்தில் வழிபடுவார் என்றார் இறைமகன் இயேசு. உரோமர்.12:1 -ல் கடவுளுக்கு உகந்த, தூய, உயிருள்ள பலியாக உங்களைப் படையுங்கள். இதுவே நீங்கள் செய்யும் உள்ளார்ந்த வழிபாடு என்கிறார் பவுலடியார். ஆக உயிருள்ள இறைவனை, உண்மையுடன் ஆராதிப்போருக்கு வாழ்வில் விடுதலையையும், மகிழ்ச்யையும், வளர்ச்சியையும் வாழும் கடவுள் வழங்குகிறார். நாமும் அத்தகைய நலனையும், நன்மையையும் அனைத்து ஆராதனைகளிலும் அனுபவித்து சாட்சி பகர்வோம்.

## 3. அன்றாட வாழ்வில் காண்போம்

"அவர்களது வாயினின்று பொய்யே வந்ததில்லை; ஏனெனில் அவர்கள் மாசற்றவர்கள்" (தி.வெ. 14:5).

யோவானுக்கு அருளப்பட்ட திருவெளிப்பாட்டில் சீயோன் மலையில் ஓர் லட்சத்து நாற்பத்து நான்காயிரம் பேர் ஆட்டுக்

குட்டியானவருடன் இருக்கிற காட்சி குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்கள் இஸ்ரயேல் மக்களின் குலங்களிலிருந்து முத்திரையிடப்பட்டவர்கள் (7:4). இவர்கள் யார்? எங்கிருந்து வந்தவர்கள்? எத்தகையவர்கள்? என்பது குறித்த விளக்கங்களும் கொடுக்கப்பட்டுள்ளன (7:13,14). இவர்கள் கொடிய வேதனையிலிருந்து மீண்டவர்கள், தங்களின் தொங்கலாடைகளை ஆட்டுக்குட்டியின் இரத்தத்தில் துவைத்து வெண்மையாக்கிக் கொண்டவர்கள். இதனால் தான் கடவுளின் அரியணை முன் நின்று கொண்டு அவரில் அவரது கோவிலில் அல்லும் பகலும் அவரை வழிபட்டு வருகிறவர்கள் என்ற செய்தியும் சொல்லப்பட்டன.

அன்றாட வாழ்வில், அக்கிரமங்களினாலும், பாவங்களினாலும் தங்களது வாழ்வை கறைபடுத்திக் கொள்ளாமல் கற்பை காத்துக் கொண்டவர்களாய், ஆட்டுக்குட்டியைப் பின் தொடர்ந்து அர்த்தமுள்ள வாழ்வு செய்துவந்தவர்கள். ஆனபடியினால் அவர்களது வாயினின்று பொய்யே வரவில்லை. வாழ்க்கையில் போலி என்பதற்கு இடமே இல்லாது போயிற்று. மாசற்ற சுத்த மனசாட்சியுடையவர்கள் என்கிறது வசனம். அத்தகைய மாசற்ற இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு, மீட்கப்பட்ட அவருடைய ஜனமாகிய நாமும் உலகத்தால் கறைபடாதபடி தந்தையாம் கடவுளின் பார்வையில் தூய்மையானதும், மாசற்றதுமான பக்தி வாழ்வு (யாக். 1:27) வாழ்வது இன்றியமையாததாகும். நமது வாழ்வே வழிபாடாக வேண்டும். ஆக ஆலயத்தில், ஆராதனையில், அனுதின வாழ்வுச் சூழலில் எங்கும் நிறைந்து, எல்லாம் அறிந்த, எல்லாம் வல்ல இறைவனின் வெளிப்பாடுகளை அடையாளம் கண்டு, விடுதலையுடன் மகிழ்ந்து வாழ ஆசிப்போம்.

அருள்திரு. D. **ஜாண் ஜெப தாஸ்**

30-06-2019

## சீடர்களை உருவாக்குங்கள்

**MAKE DISCIPLES**

1அர. 19:11-21 உரோ. 16:3-16
திபா. 34:11-22 யோவா. 1:35-42

**"பின்பு அந்திரேயா சீமோனை இயேசுவிடம் அழைத்து வந்தார்."** (யோவா. 1:42)

'சீடன்' என்பதை குறிக்கும் கிரேக்கச் சொல் 'மதற்றேஸ்'. இதன் பொருள் 'கற்றுக்கொள்' என்பதாகும். எவனொருவன் ஓர் ஆசிரியரின் பள்ளியின் சுதந்திரமாக சேர்ந்து அவரின் கருத்துகளில் பங்கு கொள்கிறானோ அவனே சீடன் எனப்படுவான்; சீடன் என்பவன் குருவிடம் கற்றுக்கொள்கிறவனாகவும், கற்றுக்கொள்ளுகிற போதனைகளை பாதுகாத்து, அவ்வுண்மைகளை நிறைவேற்றுவதற்கு உழைக்க கூடியவராகவும் இருக்க வேண்டும்.

இயேசு கிறிஸ்து தம்மை நம்பிய யூதரிடம் கூறும்போது "என் வார்த்தைகளை நீங்கள் தொடர்ந்து கடைபிடித்து வந்தால் உண்மையில் என் சீடர்களாய் இருப்பீர்கள்" என்றார். (யோவா. 8:31). இத்தகைய சீடர்களை உருவாக்க தன்னை பின்பற்றியவர்களிடம் இயேசு கிறிஸ்து கூறினார். மத். 28:19-ல் "நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்" என்றார். இயேசு கிறிஸ்துவின் முக்கியமான பணிகளில் ஒன்று சீடர்களை உருவாக்கியது. தன் பணிகாலத்தில் உருவாக்கப்பட்ட சீடர்களால் உலகம் முழுவதும் நற்செய்தி பரவியது. இன்றைய திருமறைப்பகுதிகளின் அடிப்படையில் சீடர்களை உருவாக்கும் திருப்பணியைக் குறித்து தியானிப்போம்.

### *1. ஆயத்தப்படுத்த வேண்டும்* : (யோவா. 1 : 41)

"மெசியாவைக் கண்டோம்"

சீடர்களை உருவாக்க முதல்படி ஆயத்தப்படுத்த வேண்டும். இயேசு கிறிஸ்துதன் 3½ ஆண்டு காலம் திருப்பணியில் சீடர்களை நற்செய்தி அறிவிக்கும் பணிக்காய் ஆயத்தப்படுத்தினார். இயேசு கிறிஸ்துவின் பாதையை ஆயத்தப்படுத்த வந்த திருமுழுக்கினர் யோவான் இயேசு கிறிஸ்துவைக் கண்டபோது 'இதோ கடவுளின் ஆட்டுகுட்டி' (யோவா. 1:36) என்று கூறி அவருக்காய் சீடர்களை ஆயத்தப்படுத்தினார். உடனே யோவானின் இரண்டு சீடர்கள் இயேசுவை பின்தொடர்ந்து

இயேசுவிடம் 'எங்கு தங்குகிறீர்' என்று கேட்க, 'வந்து பாருங்கள்' என்றார். (யோ. 1:39). இங்கு இயேசுவை 'மேசியாவாக' கண்ட அந்திரேயா முதலில் தன் சகோதரன் சீமோனிடம் சென்று 'மெசியாவை கண்டோம்' என கூறி சீமோனையும் ஆயத்தபடுத்துகிறார். ஆக சீடர்களை ஆயத்தபடுத்துதல் ஒரு தொடர் நிகழ்வாகிறது. அந்திரேயா சீமோனிடம் கிறிஸ்துவை அறிமுகப்படுத்தி, ஆயத்தபடுத்தி அழைத்து வந்த போது, இயேசு சீமோனை பார்த்து "நீ யோவானின் மகன் சீமோன் இனி 'கேபா' எனப்படுவாய்" என்று கூறி சீடத்துவ பணிக்கு ஆயத்தப்படுத்தினார் (யோ. 1:42).

Iஅர. 19:11-21-ல் இறைப்பணிக்கு எலிசாவைஆயத்தப்படுத்த கடவுள் எலியாவை ஆயத்தப்படுத்தினார். எலியா பெயர்செபாவுக்கு ஓடி சூரை செடியின் கீழ் அமர்ந்து 'ஆண்டவரே நான் வாழ்ந்தது போதும்; என் உயிரை எடுத்துக்கொள்ளும்' என்று கூறிய போது கடவுள் எலியாவிடம் 'எழுந்து சாப்பிடு ஏனெனில் நீ நீண்ட பயணம் செய்ய வேண்டும் என்றார்' (Iஅர. 19:4). ஓரேப் கெபியில் "இங்கு உனக்கு என்ன வேலை" (19:9). "சாபாற்றின் மகன் எலிசாவை உனக்கு பதிலாய் இறைவாக்கினராக அருட்பொழிவு செய்" என்றார். (Iஅர. 19:16). தனக்கு சீடரை உருவாக்க ஆயத்தபணி செய்ய உணர்த்தினார். எலியா இறைப்பணிக்காய் எலிசாவை ஆயத்தப்படுத்த ஏர் பூட்டி உழுதுக்கொண்டிருந்த எலிசாவிடம் சென்று தன் மேலாடையை அவர் மீது தூக்கி போட்டார் (Iஅர. 19:19) இறைப்பணிக்கு ஆயத்தப்படுத்தினார். எலிசா எலியாவை பின்பற்றி அவருக்கு பணிவிடை செய்தார். சீடர்களை உருவாக்க ஆயத்தபடுத்துதல் இன்றியமையாதது.

***2. அறிய விரும்ப வேண்டும்*** : (யோவா. 1:38)

ரபி, நீ எங்கே தங்கியிருக்கிறீர்

திருமுழுக்கினர் யோவானால் ஆயத்தப்படுத்தப்பட்ட சீடர்களுக்கு கிறிஸ்துவை குறித்து அறிவிக்கப்பட்டபோது, அவரை அறிய விரும்பினார்கள். நீர் எங்கே தங்கியிருக்கிறீர் என்று கேட்டனர். இயேசு கிறிஸ்து 'வந்து பாருங்கள்' என கூறினார். அவரை அறிய விரும்பிய போது மெசியாவாய் அறிந்து கொண்டனர். சீடத்துவ வாழ்விலும், சீடர்களை உருவாக்குவதிலும் 'கிறிஸ்துவை யார்?' என அறிவது முக்கியமானது. இயேசு கிறிஸ்துவை அறிமுகம் செய்த யோவான் அவரை யார் என அறிந்திருந்தார். 'கடவுளின் ஆட்டுகுட்டி' (1:36) 'எனக்கு பின் ஒருவர் வருகிறார் அவர் என்னைவிட வலிமைமிக்கவர். அவருடைய மிதியடிகளை தூக்கி செல்ல கூட எனக்கு தகுதியில்லை' (மத். 3:11) என அறிந்திருந்தார்.

தமஸ்கு சாலையில் சவுல் தரிசனம் மூலம் ஆயத்தப்படுத்தப்பட்ட போது கடவுளை யார் என அறிய விரும்பினான். ‘நீர் யார்?’ என கேட்டான் இயேசு என அறிந்து கொண்டார். இங்கு அந்திரேயாவும் அறிய விரும்பிய போது, அவர் தங்கியிருந்த இடம் சென்று பார்த்த போது, ‘மெசியா’ என்பதை அறிந்து கொண்டார். தானும் கிறிஸ்துவின் சீடராகி, தன் சகோதரனையும் கிறிஸ்துவின் சீடனாய் உருவாக்கினார்.

கடவுளை அறிய விரும்பும் சீடர், சீடத்துவ தன்மையையும் அறிய வேண்டும். லூக். 14:13-ல் “உங்களுள் தம் உடமையையெல்லாம் விட்டுவிடாத எவரும் என் சீடனாய் இருக்க முடியாது”. லூக். 14:24 தன் சிலுவையை சுமக்காமல் என் பின்வருபவன் எனக்கு சீடராய் இருக்கமுடியாது.

### *3. அழைத்து வரவேண்டும்* : (யோவா. 1:42)

“பின்பு அவர் சீமோனை இயேசுவிடம் அழைத்து வந்தார்”

சீடரை உருவாக்கும் பணியில் அழைத்து வருதல் முக்கியத்துவம் வாய்ந்தது. மெசியாவை கண்டோம் என கூறி அந்திரேயாவால் அழைத்து வரப்பட்ட சீமோன் பேதுரு பின்னர் இயேசு கிறிஸ்துவின் முதன்மை சீடராக மாறினார். சீடரை உருவாக்க அந்திரேயாவைப்போல பிறரை இயேசுவிடம் அழைத்து வரவேண்டும். திருச்சபை அந்திரேயா பணியைச் செய்ய அழைக்கப்படுகிறது. அந்திரேயா தொடர்பணியில் அனேக மக்களை இயேசுவிடம் அழைத்து வந்தார். 5 அப்பம் 2 மீன் 5000 பேருக்கு உணவளித்தல் நிகழ்வில் ‘இங்கே ஒரு சிறு பையன் இருக்கிறான்...’ என்று சிறுவனை கிறிஸ்துவிடம் அழைத்து வந்தது அந்திரேயாவே.

பஸ்கா பண்டிகைக்கு வந்த கிரேக்கர் இயேசு கிறிஸ்துவை காண விரும்பிய போதும் அவர்களை இயேசுவிடம் அந்திரேயா அழைத்து சென்றார். (யோவா. 12:21,22). சமாரிய பெண் தன் வாழ்வில் கிறிஸ்து மெசியாவாக அறிந்து கொண்ட போது தன் ஊருக்குள் சென்று மக்களிடம் “...வந்து பாருங்கள் அவர் மெசியாவாக இருப்பாரோ...” எனக் கூறி அழைத்து வந்தார் (யோவா. 4:29). அழைத்து வரப்பட்டவர்கள் ஆண்டவரின் அன்பை அறிந்து, தங்களை அர்ப்பணித்து ஆண்டவர் சீடராயினர்.

இயேசுகிறிஸ்துவிடம் அடியவர்களை அழைத்து வரும் போது அவர் அவர்களுக்கு தன்னுடையஅழைப்பை கொடுங்ககிறார். என் பின்னே வாருங்கள் நான் உங்களை மனிதரைப் பிடிக்கிறவர் ஆக்குவேன்.

(மத். 4:19) நாமும் சீடர்களை உருவாக்கும் பணியில் ஆயத்தபடுத்துவோம், அறிய விரும்புவோம், அழைத்து வருவோம்...ஆண்டவர் சாட்சிகள் ஆவோம்.

அந்திரேயா தன் இறுதி காலத்தில் கிரீஸ் நாட்டில் இரத்த சாட்சியாய் மரித்தார். அவரை துன்புறுத்தி சிலுவையில் கயிறுகளால் கட்டி, 7 போர் வீரர்கள் சாட்டையால் அடிக்க, அந்திரேயா கூறினார் ‘என் ஆண்டவர் மரித்த சிலுவை வடிவில் நான் மரிக்க தகுதியற்றவன். என்னைப் பெருக்கல் வடிவச் சிலுவையில் அறையுங்கள் என்றார். அந்தப்படியே அவரை அறைந்தனர். இரண்டு நாட்கள் வேதனையில் சிலுவையில் தொங்க, சுற்றி நின்றவர்களுக்கு இயேசுவை குறித்து தைரியமாய் போதித்து இரத்த சாட்சியானார். இவர் போதனை கேட்ட அனேகர் இயேசுகிறிஸ்துவை கடவுளாக ஏற்றனர். ஆம்! வாழ்வில் அனேகரை கிறிஸ்துவிடம் அழைத்து வந்தவர் சாவிலும் அனேகரை கிறிஸ்துவின் சீடர்களாய் உருவாக்கினார். இத்தகைய உன்னதப்பணியில் நாமும் நம்மை ஆய்ந்தறிந்து கல்வாரி திருச்சிலுவையின் தடயத்தினில் சீடர்களை உருவாக்கிடுவோம்.

அருள்திரு. T. **டேவிட் கிளேட்சன்**

07-07-2019



# இழப்பை ஒரு பொருட்டாக கருதாமல் கொடுத்தல்

## GIVING WITHOUT COUNTING THE COST

தொ.நூ. 13:8-18 | 2கொரி. 8:1-15

தி.பா. 15 | மாற். 14:3-11

**"நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருள் செயலை அறிந்திருக்கிறீர்களே! அவர் செல்வராயிருந்தும் உங்களுக்காக ஏழையானார். அவருடைய ஏழ்மையினால் நீங்கள் செல்வராகுமாறு இவ்வாறு செய்தார்."** (2கொரி. 8:9)

தூய பவுலார், கிறிஸ்து இயேசுவின் கொடையை மேற்கோள்காட்டி கொரிந்து இறைமக்கள் வள்ளண்மையில் வளர உற்சாகப்படுத்துகின்றார். யூதேயாவில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு உதவுவதற்கு அவர்களது கொடை மிகவும் தேவைப்படுகிறது என வலியுறுத்துகின்றார். மாசிதோனியாவின் இறைமக்கள், தங்கள் கடுமையான சோதனையின் நடுவிலும் தேவையிலிருந்தவர்களுக்கு செய்த உதவிகளை எடுத்துக்காட்டுகின்றார்.

இஸ்ரயேலர் கடவுளுக்கு செலுத்திய பலிகளும், காணிக்கைகளும் கொடைகளாக கருதப்பட்டன (வி.ப. 28:38, எண். 18:11). குருத்துவப் பணிவிடையாற்றிய லேவியர்களும் கடவுளுக்குரிய கொடையாகவே கருதப்பட்டனர் (எண். 18:6). உணவு, செல்வம், உடல் நலமுள்ள வாழ்வு, மகிழ்ச்சி ஆகியன கடவுள் மானுடர்க்கு வழங்கும் கொடைகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டன (ச.உ. 3:13, 5:19). கொடை தூய உள்ளத்தோடும் நிறைந்த மனதோடும் வழங்குவதாய் அமையவேண்டும். கொடையில் எதிர்பார்ப்பும், கணக்கு பார்த்தலும் கூடாது. கடவுள் பார்வையில் ஏற்புடையது அதுவே (2கொரி. 9:7,8). செல்வராயிருந்தும் தம்மை வறியவராக்கிய இயேசுநாதரின் கொடை, கொடுப்பவர்களுக்கு மிகச் சிறந்த முன்னுதாரணம். இழப்பை பொருட்படுத்தாமல் கொடுப்பதனால் விளையும் இறைநன்மைகளை இன்றைய திருமறைப்பாடங்கள் சார்ந்து தியானிப்போம்.

### *1. இழப்பை ஒரு பொருட்டாக கருதாத கொடை : இனிய உறவை வளர்க்கும்.*

கடவுளது அழைப்பைப் பெற்ற ஆபிராம் தம் எழுபத்தைந்தாவது வயதில் ஆரானைவிட்டு கானானுக்கு சென்றபோது லோத்தையும் அழைத்துச் சென்றார் (தொ.நூ. 12:4,5). அங்கு ஏற்பட்ட பஞ்சத்தால் எகிப்துக்கு சென்றார் (தொ.நூ. 12:10). பின்னர் பெத்தேலுக்கும், ஆயிக்கும்

இடையில் அமைந்த பகுதியில் வாழ்ந்தார். இட நெருக்கடியால் ஆபிராம், லோத்து ஆகியோரது மேய்ப்பருக்கிடையே பிரச்சனை எழுந்தது. இச்சூழலில் ஆபிராம் மிகுந்த பெருந்தன்மையுடன் நடந்து கொண்டதை காண்கிறோம்.

....பூசல் ஏற்படவேண்டாம், ஏனெனில் நாம் உறவினர்(தொ.நூ. 13:8b). ஆபிராம், லோத்து ஆகியோரது பணியாளர்களுக்கிடையே எழுந்த விவாதம் தங்கள் உறவை வேரறுத்து விடக்கூடாது என்பதில் ஆபிராம் மிகவும் கவனமாக செயல்பட்டார். உறவு உடைந்திடாமல் உறுதிப்படுத்தும் வழியை அவர் முன்மொழிகிறார். 'உனக்கு நலமான இடத்தை நீ தேர்ந்தெடு' என லோத்துவுக்கு வழிவிடுகிறார்(வ.9). அதனால் தனக்கு இழப்பு வந்தாலும் அதனை ஏற்க ஆயத்தமாயிருந்தார் ஆபிராம்.

வாக்குவாதத்தத்தைத் தொடங்குவது மதகை திறந்து விடுவதைப் போலாகும்; வாக்குவாதம் மேலும் வளருமுன் அதை நிறுத்திவிடு (நீதி. 17:14). மதகைத் திறந்து விட்டால் தண்ணீர் வேகமாக ஓடி எந்த சேதத்தையும் விளைவிக்கலாம். அதை மீண்டும் தடுப்பது சிரமமானது. எனவே, வாக்குவாதத்தை முளையிலேயே கிள்ளிவிடுவது உறவுகளில் விரிசல் ஏற்படாமல் தடுக்கும். குழந்தைகளுக்குள் எழும் சிறு பிணக்குகளை பெரியவர்கள் கையிலெடுத்துக் கொண்டதால் பிளவுபட்ட உறவுகள் உண்டு. ஆனால், அவை எவற்றையும் அறியாத அப்பாவிகளாய் அதே குழந்தைகள் அடுத்த சில நிமிடங்களிலேயே இணைந்து விளையாடிக் கொண்டிருப்பர். எனவே தான் இயேசுநாதர் இவர்களை பெரியவர்களுக்கு மேற்கோள்காட்டினார்.

இறைமக்களுக்குச் செய்யும் அறப்பணியில் பங்குபெறும் பேறு தங்களுக்கும் அளிக்கப்பட வேண்டும் என மிகவும் வருந்திக்கேட்டுக் கொண்டார்கள் (2கொரி. 8:4). இழப்பை பொருட்படுத்தாத கொடை செயலாக்கப்பட நல்லுள்ளம் அவசியம். என்பதை தூய பவுலார் சுட்டிக் காட்டுகின்றார். மாசிதோனியாவின் இறைமக்கள் கடும் சோதனையிலும் தளராமல் மகிழ்ச்சியாய் இருந்தனர். வறுமையிலும் வள்ளன்மையுடன் வழங்கினர் (2கொரி. 8:2,3). யூதேயாவிலுள்ள இறைமக்களின் குறைவில் மாசிதோனிய மக்களின் கொடை சிறந்ததோர் உறவுப்பாலத்தை உருவாக்குவதை இங்கு உணரமுடிகிறதல்லவா!

வறியோர்க்கு வழங்கும் கொடைகளானாலும், கடவுளுக்குப் படைக்கும் காணிக்கைகளானாலும் மனநிறைவுடன், இழப்பைப் பொருட்படுத்தாமல் கொடுக்கும் போது அது இனிய உறவை வளர்ப்பதாக அமையும். மனவருத்தத்துடன் கொடுப்பவை இனிதாவதில்லை; இனிய உறவுக்கு வழிகோலுவதுமில்லை. முகமலர்ச்சியுடன் இழப்பை பொருட்படுத்தாத கொடையே நல்லுறவுக்கு உரமிடும்.

## 2. இழப்பை ஒரு பொருட்டாக கருதாத கொடை : இறைமாட்சியை காக்கும்.

கானானியரும், பெரிசியரும், ஆபிராமும் லோத்தும் வாழ்ந்த நாட்டில் வாழ்ந்து வந்தனர். பிற தெய்வ வணக்கத்தையுடைய அம்மக்கள் நடுவில் ஆபிராம் தம் தாராள மனத்தால் லோத்துவுக்கு தேவையானதை தெரிந்து கொள்ளும் வாய்ப்பை வழங்கி நற்சாட்சியை காத்துக்கொண்டார். அது கடவுளின் திருப்பெயருக்கு மாட்சியாகவும், நற்சாட்சியாகவும் அமைந்தது.

மீட்பு பெறுவோரிடையேயும் அழிவுறுவோரிடையேயும் நாங்கள் கடவுள்பால் எழும் கிறிஸ்துவின் நறுமணமாயிருக்கிறோம் (2கொரி. 2:15). எவ்விடத்திலும் கிறிஸ்துவின் மாட்சியை நறுமணமாய் பரவவிடும் தன்மையுடையோராய் நாம் வாழவேண்டும். அதற்கு இழப்பைக் கருத்தில் கொள்ளாத ஈகை அவசியமானதாகும். இன்றைய நமது நிலை இழப்பதற்கல்ல; இருப்பவைகளை மேலும் அதிகப்படுத்த கையூட்டு, கலப்படம், உழைப்போரின் கூலியை அபகரித்தல், அநியாய வட்டி வாங்குதல் என தொடர்கிறதன்றோ. இச்செயல்களால் இறைமாட்சியை களங்கப்படுத்துகிறோம் என்பதே வெளிப்படையான உண்மை.

நமது வாழ்வை கடவுளின் கரத்தில் கொடையாக வழங்கினால் மட்டுமே இறைமாட்சியை நறுமணமாக பரவவிடுதல் சாத்தியமாகும். பெத்தானியாவில் சீமோன் இல்லத்தில் பந்தியமர்ந்திருந்த இயேசுவுக்கு நறுமணதைலம் பூசிய பெண்மணி அங்கிருந்த சிலரால் இகழப்பட்டாள்; அவர்களது கோபத்திற்கும் ஆளானாள். இதை விற்று ஏழைகளுக்குக் கொடுத்திருக்கலாமே என்பது அவர்களது விவாதம். எளியோர் பேரில் உள்ள கரிசனைதான் இவர்களை இப்படி பேசத்தூண்டிற்றா? இல்லை, இவருக்காக ஏன் இப்படி வீணடிக்கவேண்டும் என்ற காழ்ப்புணர்வின் வெளிப்பாடா? என்பது சிந்திக்கத்தக்கது. அந்த பெண்மணி இயேசுவை மேசியாவாக கண்டாள்; மாட்சிக்குரியவராக கருதினாள். இத்தகு அருட்பொழிவுக்கு அவர் தகுதியானவர் என்பதை புரிந்து செயல்படுத்தினாள். அதன் வாயிலாக இயேசுநாதரின் மாட்சியை அங்கு நிலைப்படுத்தினாள். நமது இழப்பால் இறைமாட்சி ஏற்படும் நிலையில் கொடுப்போம்.

## 3. இழப்பை ஒரு பொருட்டாக கருதாத கொடை : இறைஆசியை வழங்கும்.

வீண் வாக்குவாதம் எழுவதை சிறிதும் விரும்பாத ஆபிராம், தான் விரும்பும் இடத்தை முதலாவதாக தெரிவு செய்யும் வாய்ப்பை லோத்துக்கு கொடுக்கிறார். நீர்வளம் பொருந்திய பகுதியை லோத்து தெரிந்தெடுத்தார்.

லோத்து மகிழ்வுடன் அங்கு குடிபெயர்ந்த பின், ஆபிராம் மீதமிருந்த இடத்தில் வாழ்விடத்தை அமைக்கிறார். கடவுள் ஆபிராமை அழைத்து, உன் வழிமரபினரை பூவுலகின் மண்ணைப் போலப் பெருகச்செய்வேன் என வாக்கருளி கண்களை ஏறெடுத்துப்பார் எனக் கூறி பரந்து விரிந்த பெரும் பகுதியை கொடையளித்தார்.

இவ்வறப்பணியை பொறுத்தவரையில் என் கருத்து இதுவே. இது உங்களுக்கு பயனளிக்கும் (2கொரி. 8:10a), பவுலார் குறிப்பிடும் இந்த பலன் இறைவனிடமிருந்து தாராளமாய் தாமாகவே வரும் ஆசியாகும். இது பறித்துக் கொள்வதல்ல; பெற்றுக் கொள்வது. ஏழைகளுக்கு இரங்கி உதவி செய்கிறவர், ஆண்டவருக்குக் கடன் கொடுக்கிறார்; அவர் கொடுத்ததை ஆண்டவர் திரும்பத் தந்துவிடுவார் (நீதி. 19:17). சுயநலமில்லா கொடைகளுக்கு ஆண்டவரிடம் கணக்கு உண்டு. அவர் அதனை நிறைவாக திரும்ப வழங்குவார்.

விலையுயர்ந்த நறுமண தைலத்தால் இயேசுநாதரை அருட்பொழிவு செய்த பெண்மணி பயன்படுத்திய தைலத்தின் விலைமதிப்பு முந்நூறு தெனாரியத்துக்கும் அதிகமானது என அங்கிருந்தவர்கள் கணக்கிட்டுக் கூறினர். அதாவது, அத்தொகை ஒரு வேலைக்காரரின் ஒரு வருடகூலிக்கு சமமானதாகும். அப்பெண்ணிடம் சினங்கொண்டு பேசியவர்கள், பயன்படுத்தப்பட்ட தைலத்தின் மதிப்பை கணக்கிட்டுப் பேசினர். அதனை இழப்பு என எண்ணாமல் செலவிட்ட பெண்மணி இரட்சகரின் விலைமதிப்பில்லாத விடுதலை செயலைக் கணக்கிட்டாள். இது என்னுடைய வீணான அலங்காரத்திற்கு பயன்படுவதைவிட இயேசுநாதருக்காக பயன்படுத்தப்படுவது சிறப்பு எனத் தீர்மானித்தாள். எளியோரைக் குறித்து மிக கரிசனைப்படும் இயேசுவிடம் “ஏழைகளுக்கு உதவியிருக்கலாமே” என்ற ஆலோசனையை முன் வைத்தால் மகிழ்ந்து ஆசிவழங்குவார் என எண்ணியோர்க்கு ஏமாற்றம் மிஞ்சியது. “அவள் என்னிடம் நற்செயல் செய்திருக்கிறாள்” என்று இயேசு அவளை மனதாரப் பாராட்டி ஆசி வழங்கினார். எனவேதான், உலகம் முழுவதும் நற்செய்தி அறிவிக்கப்படும் இடமெல்லாம் இவர் செய்தது எடுத்துக் கூறப்படும்; இவரும் நினைவுகூரப்படுவார் என இறையாசி வழங்கினார். வெளிவேடமும், வார்த்தை ஜாலமும் கிறிஸ்துவின் அன்பையும், ஆசியையும் நம் பக்கமாக திருப்பமுடியாது. உண்மையான அர்ப்பணத்துடன் அமைந்த இழப்பை பொருட்படுத்தாத செயலே அத்தகைய நன்மைகளை இறைவனிடமிருந்து நமக்கு கொண்டுவரும்.

கெவின் கார்ட்டர், உலகப்புகழ்பெற்ற ஒரு புகைப்படக் கலைஞர். தனிச் சிறப்பு மிக்க புகைப்படங்களை எடுத்துவிட மிகுந்த ஆர்வம் கொண்டார். இந்த ஆர்வம் அவரை 1993-ஆம் ஆண்டு சூடான் நாட்டுக்கு கொண்டு சென்றது. சூடான் வரலாறு காணாத பஞ்சத்தில் சிக்கி தவித்துக் கொண்டிருந்த காலம் அது. பசியால் வாடிய மக்களின் பரிதாப நிலையை தனது கேமராவில் பதித்துவிடத் துடித்தார் கெவின். அவர் அதற்காக நெடுந்தொலைவு அலைந்தார். ஒருநாள், பஞ்சத்தால் அடிபட்டு எலும்புக்கூடாகிப் போன ஒரு சிறுமி நடக்க ஆற்றலின்றி தவழ்ந்து சென்று கொண்டிருந்தாள். அவள் ஐக்கியநாடுகள் சபையின் சார்பாக அமைக்கப்பட்டிருந்த உணவு முகாம் நோக்கி ஊர்ந்து கொண்டிருந்தாள். கேமராவை இறக்கி கோணம் பார்த்த கெவினுக்கு மேலும் ஒரு ஆச்சரியம் காத்திருந்தது. ஆம், எலும்பும் தோலுமான அந்த சிறுமிக்கு மிக அருகில் பிணந்தின்னிக் கழுகு ஒன்று அவள் வீழ்ந்து விடுவதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. கெவின் சிறுமியையும், கழுகையும் ஒரே சட்டத்திற்குள் அடக்கிப் படமெடுத்தார். அரிதான இந்த படத்திற்கு நல்ல விலை கிடைக்கும் என வேகமாக அங்கிருந்து சென்றுவிட்டார். ‘Newyork Times’ பத்திரிகைக்கு பெரும் தொகைக்கு படத்தை விற்றுவிட்டார். இந்த படம் 1993 மார்ச் மாதம் 26-ஆம் நாள் அந்த காலை நாளிதழின் முதற்பக்கத்தில் வெளியிடப்பட்டது. படத்தைப் பார்த்த ஆயிரக்கணக்கான வாசகர்கள் பத்திரிகை அலுவலகத்தை தொடர்புகொண்டு அந்த சிறுமி என்ன ஆனாள்? என கேள்வி எழுப்பினார்கள். விடை, படம் எடுத்தவரிடமும் இல்லை. இந்தபடத்திற்காக 1994 மே மாதம் 23-ஆம் நாள் மிக உயர்ந்த புலிட்சர் விருதினை பெற்றார் கெவின். புகழின் உச்சியில் ஏறியிருந்த கெவினால் அமைதியாக இருக்க இயலவில்லை; பெரும் மன உளைச்சலுக்கு ஆளானார். ஐயோ! அந்த பிணந்தின்னிக் கழுகுக்கும், எனக்கும் என்ன வித்தியாசம்? என்னிடமிருந்த தண்ணீரிலும் உணவிலும் அந்த சிறுமிக்கு சிறிது கொடுத்திருக்கலாம், அல்லது உணவு முகாம் செல்ல உதவியிருக்கலாம், அந்தக் கழுகையாவது துரத்திவிட்டிருக்கலாம். கொடுப்பதற்கு நிறைய வாய்ப்புகள் இருந்த நிலையில், இழக்க மனமின்றி புகழையும் பணத்தையும் சேர்க்க நினைத்ததால் உள்ளம் தடுமாறி தற்கொலை செய்து கொண்டார் கெவின்

நம் ஆண்டவரின் அருட்செயல் என்பது நாம் செல்வராகும்படியும், சிறப்புள்ளவர்களாகும்படியும் அவர் வறியவரான நிலையாகும். இதனை அனுபவிக்கும் நாம் இன்னும் மேலும் வேண்டும் என சுயநலத்துடன் சேர்ப்பதல்ல, இழப்பை பொருட்படுத்தாத கொடையே பொருள் நிறைந்தது என உணர்ந்து கொடுப்போம்.

அருள்திரு. R. **ஹென்ஸ்லின் நேசராஜ்**

# இறையியல் கல்வி : நம்பிக்கைக்குரியவர்களை உருவாக்குதல்

**THEOLOGICAL EDUCATION : MAKING OF THE FAITHFUL**

யோசு. 4:1-9 1தீமொ. 6:11-15
தி.பா. 1 மத். 13:1-9

**“நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்து தோன்றும் வரையில் குறைச் சொல்லுக்கு இடந்தராமல் இந்த கட்ளையை அப்பழுக்கின்றி கடைபிடித்து வா.”** (1 தீமோ. 6:14)

இறை, இயல் என்ற இரு சொற்களால் ஆனது இறையியல் என்ற சொல் ஆகும். இறையியல் என்பதற்கு இறைவனைப்பற்றிய ஆய்வு என்று பொருள். ஆகவே இறையியல், அறிவியல்களுக்கெல்லாம் ஓர் அரசியாக கருதப்படுகின்றது. A.H.ஸ்ட்ராங் என்ற இருபதாம் நூற்றாண்டு இறையியலாளர் குறிப்பிடும் போது, “இறையியல் என்பது கடவுள் சார்ந்த அறிவியல், அத்துடன் கடவுளுக்கும், அவர்படைத்த உலகுக்கும் இடையேயான உறவு குறித்து ஆய்வு செய்வதாகும்” என்கிறார். மேலும், இறையியல் என்பது கடவுளையும், அவர் வரலாற்றில் செயல்பட்ட நிகழ்வுகளையும், கால சூழலுக்கு ஏற்ப அறிந்து கொள்ள முயற்சி செய்வதாகவும் அமைகிறது. இத்தகைய இறையியலை கற்றுக் கொள்ளும் கல்வி வழியாய் பெறும் இறையறிவு பற்றுறுதிக்கு பாதிப்பு ஏற்படுத்தாது. மாறாக வாழ்வை நெறிப்படுத்தும், நடைமுறை வாழ்வுக்கும் பற்றுறுதி பாதைக்கும் சூழல் சார்ந்து ஆலோசனை தருகிறது. இந்த இறையியல் கல்வி வழியாக நமது பற்றுறுதி சார்ந்த செயல்பாடுகளையும் மறு பரிசீலனை செய்து வளர உதவியாயிருக்கிறது. இறையியல் கல்விக்கு கடவுளுடைய வார்த்தையாகிய விவிலியமே அடித்தளமாக அமைந்துள்ளது. விவிலியத்தை ஆழ்ந்து படித்து தியானித்தே நமது இறையியல் அறிவை வளர்க்க முடியும். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இஸ்ராயேல் மக்கள் வரும் தலைமுறையினருக்கு இறையறிவை புகட்டவும் அவர்களை நம்பிக்கையாளர்களாய் உருவாக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் கடவுளுடைய வார்த்தையை சிறுவயது முதல் அனைவருக்கும் கற்றுக் கொடுப்பதில் தீவிரம் காட்டினார்கள். இது அவர்களுக்கு கட்டாயக் கல்வியாக இருந்தது. இதன் வழியாக அவர்களது இறையறிவு வளர்ந்தது. வரலாற்றில் புகழ்பெற்ற இறையியலாளர்கள்

அனைவரும் விவிலியத்தை அடிப்படையாக கொண்டு இறையறிவை வளர்த்துக் கொண்டனர்.

கடவுளால் தெரிவு செய்யப்பட்ட இறைமக்கள் அனைவரும் கடவுளின் திட்டத்தை நிறைவேற்றுகிறவர்கள். ஆனால் அவர்கள் "கடவுளை அறியும் அறிவை பற்றிக் கொண்டிருக்க மனதில்லாதிருக்கிறார்கள்" (ரோம. 1:28) என மிகவும் வேதனைப்பட்ட தூயபவுல் தம் உடன் சகோதரர் - தீமோத்தேயுவுக்கு நல்லாலோசனைகள் பல வழங்கினார். சிறப்பாக, பல மாற்று போதனைகளின் மத்தியில் கிறிஸ்துவை நம்பிக் கொண்டிருக்கிறவர்களாகிய நீங்கள் இயேசுகிறிஸ்து தோன்றும் வரை இறைவர்த்தைகள் வழி இறையறிவில் உறுதியாய் இருக்க தூய பவுல் (1தீமோ. 6:14) அறிவுரை வழங்கினார். கடவுளை குறித்து அறிவதைவிட கடவுளை அறிவது மிகவும் நன்மையானது. (It is better to know God rather Knowing about God) என்ற பேருண்மையின் அடிப்படையில் தூய பவுல் தனது பயணங்களில் கடவுளுடைய வார்த்தையை தெளிவாய் கற்றுக் கொடுத்து கடவுளை அனேகர் அதிகமாய் அறிந்து கொள்ளவும் உதவினார். இந்நாளிலும் இறையியல் கல்வி வழியாக கிடைக்கப் பெறும் இறையறிவு எப்படி நம்பிக்கையாளர்களை உருவாக்கும் என தியானிப்போம்.

### *1. இறையியல் கல்வி - அவபக்தியை அகற்றி நம்பிக்கையாளர்களை உருவாக்கும் :*

நாம் இறைவன்பால் கொள்ளும் பக்தியினால் தான் நமது பற்றுறுதி வலிமையும் திண்மையும் பெறுகின்றது. ஆனால் பக்தியானது இறையியல் அறிவோடு இணையாவிட்டால் அது வெறும் அவபக்தியாய் அமைந்துவிடக் கூடும். இந்த அவபக்தியானது நமது பக்தி வாழ்க்கையில் தேவையற்ற அச்சத்தையும் குழப்பத்தையும், ஏன் சோர்வையும் கூட தந்துவிடுகின்றது. இறைமக்களின் இறையியல் கல்வி வழியாக கடவுளுடைய வார்த்தையில் குறிப்பிடப்பட்டிருக்கும் இறை ஆற்றலையும் சிந்தனை செய்வதும் கூட பக்தியையும் பற்றுறுதியையும் அறிவையும் செயல்பாட்டையும் ஒருங்கே இணைத்துக்கொள்ள உதவும். இஸ்ரயேல் மக்கள் அனைவரும் யோர்தானை கடந்து வந்த பின்பு, கடவுள் யோசுவாவிடம் கோடிட்டுக் காட்டிய ஆலோசனைகளை அவர் மக்களோடு பகிர்ந்து கொண்டார். "யோர்தான் நீர் ஆண்டவரது உடன்படிக்கையின் பேழையின் முன் பிரிந்து நின்றது, அப்பேழை யோர்தானைக் கடக்கும்பொழுது யோர்தானின் தண்ணீர் பிரிந்து நின்றது. இக்கற்கள் இஸ்ரயேல் மக்களுக்கு என்றும் இந்நிகழ்ச்சியை நினைவூட்டுவதற்காக உள்ளன என்று சொல்லுங்கள்" (யோசு. 4:7) என்று

கடவுள் யோசுவாவிடம் உரைத்த உண்மையின் அடிப்படையில், அவபக்தி அடுத்த தலைமுறையினரை ஆட்கொள்ளாதபடிக்கும் கடவுளுடைய அருஞ்செயலை நினைவு படுத்தும்படிக்கு பற்றுறுதியில் வளரும்படிக்கும் யோசுவா ஜனங்களிடம் எடுத்துரைத்தார். அப்படியே பன்னிரு நினைவுக் கற்களை ஒவ்வொரு குலங்களிலிருந்தும் ஒரு நபர் கடவுளின் கட்டளைப்படியே செய்தனர். இச்சின்னம் தலைமுறை தலைமுறையாய் நம்பிக்கையாளர்களை உருவாக்கியது, இறை ஆற்றலை புரிந்து கொள்ள உதவியது.

அவ பக்தி திருச்சபையை எளிதில் ஆட்கொள்ளாமலிருக்க இரண்டு அறிவுரைகளை தூய பவுல் தீமோத்தேயுவுக்கு வழங்கினார். முதலாவது, "நான் வரும் வரை விசுவாசிகளுக்கு மறைநூலை படித்துக் காட்டுவதிலும் அறிவுரை வழங்குவதிலும் கற்பிப்பதிலும் கவனம் செலுத்து" (1தீமோ. 4:13) என்றும், இரண்டாவதாக, நீ தேவபக்திக்கேதுவான நீதி, இறைப்பற்று, நம்பிக்கை, மன உறுதி, பணிவு ஆகியவற்றைத் தேடி (1தீமோ. 6:11), "நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து தோன்றும் வரையில் குறை சொல்லுக்கு இடந்தராமல் இந்த கட்டளையை அப்பழுக்கின்றி கடைபிடித்து வா" (1தீமோ. 6:14) என்றும் குறிப்பிட்டார். இந்த அறிவுரைகள் இறைப்பற்றுக்குரிய போதனைக்கு ஒத்துப்போகாத மாற்றுக் கொள்கைகளை கற்பித்த ஆலோசனையின்படி அவபக்திக்கு அடிமையாகாமல் வாழ உதவியாயிருந்தது. வாழும் கடவுளை குறித்த அறிவு மனிதனின் மடமையைப் போக்கும், அத்துடன் இடறிப்போகாமல், சிதறிப்போகாமல் வாழவும், எந்த நிலையிலும் உறுதியாயிருக்கவும் துணைசெய்யும். உண்மையாகவே, அவபக்தியையும் அடிப்படை வாதங்களையும் அகற்றும் ஆற்றல் இறையியலுக்கு உண்டு என்பதை இறைமக்களாகிய நாம் தெளிவாக புரிந்து கொள்ளவேண்டும்.

### *2. இறையியல் கல்வி - அதைரியத்தை அகற்றி நம்பிக்கையாளர்களை உருவாக்கும் :*

இறையியல் வழியாக நாம் பெறும் இறையறிவு இறைமக்களின் அதைரியத்தை அகற்றி வாழ்வில் வெற்றி நிலைகளை அடைய உதவுகிறது. திபா. 1:2,3 -ல் படிக்கும் போது ..... ஆண்டவரின் சட்டத்தைப்பற்றி இரவும் பகலும் சிந்திப்பவர்.... தாம் செய்வதனைத்திலும் வெற்றி பெறுவார், வ.4 அவர்கள் இறையறிவில்லாத பொல்லாரைப் போல காற்று அடித்துக்கொள்ளும் பதரைப்போல் இருக்கமாட்டார்கள்ள என்று அறிய முடிகிறது. அப்படியே யோபுவின் இறையறிவு அவரது அதைரியத்தை அகற்றியபடியினால் "ஆயினும் நான் போகும் வழியை அவர் அறிவார், என்னை அவர் புடமிட்டால் நான் பொன் போல் துலங்கிடுவேன்"

(யோபு. 23:10) என்று தன் துன்ப வேளையிலும் துணிவுடன் காணப்பட்டார். மேலும், பேரரசனாகிய தாவீதின் வாழ்விலும் அவரது ஆளுயரம் அல்ல. மாறாக கடவுளை குறித்த அறிவே அவருக்கு தைரியத்தைத் தந்தது. ஆகவே தாவீது பெலிஸ்தியனாகிய கோலியாத்தைப் பார்த்து, "நீ வாளோடும் ஈட்டியோடும் எறிவேலோடும் என்னிடம் வருகிறாய். நானோ நீ இகழ்ந்த இஸ்ரயேலின் படைத்திரளின் ஆண்டவர் தம் பெயராலே வருகிறேன்" (1சாமு. 17:45) என துணிவுடன் சவால் விடுத்தார். இங்ஙனம் இறையறிவு சமூகத் தீமைகளுக்கு எதிர்த்து சவால்விடுமளவிற்கு தைரியத்தைத் தருகிறது. மாபெரும் சமூக மாற்றங்களை ஏற்படுத்தும் துணிவையும் தருகிறது.

1963-ம் ஆண்டு மார்ட்டின் லூத்தர் Jr. கிங் என்பவர் வாஷிங்டனை நோக்கி விடுதலைப் பயணம் மேற்கொண்டார். இவர் இறையியல் கல்வி வழியாக பெற்ற இறையறிவு இவரை தைரியப் படுத்தியபடியினால் கறுப்பின மக்களின் அடிமைத்தனத்தை அழிக்கத் துணிந்தார். எனவே அவர் "எனக்கு ஒரு கனவு உண்டு (I have a dreem)" என்ற தலைப்பில் உரையாற்றினார். இந்த உரைதான் 20-ம் நூற்றாண்டில் உலகிலேயே மிகச் சிறந்த உரையாக அறிவிக்கப்பட்டது. இந்த எழுச்சிமிகு உரை அடிமைத்தனத்தை எதிர்க்கின்ற உரையயாக அமைந்தது. இந்தஉரைக்குப் பின்பு அமெரிக்கா நாட்டில் சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டு கறுப்பர் இன மக்களுக்கு எதிரான தடைகள் சட்டரீதியாக அகற்றப்பட்டன. இறையறிவுடனும், இறைப்பற்றுடனும் நாம் நின்று விடாமல் உன்னத செயல்பாட்டிற்கு நம்மை தைரியப்படுத்துகிற கல்வியாக இறையியயல் கல்வி இருக்கிறது.

### *3. இறையியல் கல்வி - அகத்தெளிவு தந்து நம்பிக்கையாளர்களை உருவாக்கும் :*

இறையறிவு வழி ஆகத்தெளிவடையும் இறைமக்கள் நம்பிக்கையில் வளருவதோடு நலமானவைகளையும் பெற்றுக்கொள்வர். இதன் அடிப்படையில் திருப்பாடலாசிரியர் (1:1,2) ஆண்டவரது சட்டத்தை இரவும் பகலும் சிந்திப்பவர்-நற்பேறுபெற்றவர் என்கிறார். ஏனெனில் இவர்கள் இறைவார்த்தை வழியாய் வாழ்வைக் குறித்து அகத்தெளிவடைந்து உறுதியான நம்பிக்கையாளராய், நீரோடையோரம் நடப்பட்ட மரம்போலவும், பருவக் காலத்தில் கனிதந்து என்றும் பசுமையாகவும் இருப்பர் (திபா. 1:3). பற்றுறுதியாளராகிய யோபுவும் தனது கசப்பான கடினமான அனுபவங்கள் மத்தியிலும் கடவுளைக் குறித்த அறிவில் நாளுக்கு நாள் வளர்ந்தபடியால் அகத்தெளிவடைந்து "என்

மீட்பர் வாழ்கின்றார்'' (யோபு 19:25), ''நான் சதையோடு இருக்கும் போதே கடவுளைக் காண்பேன்'' (19:26). ''என் கண்கள் காணும் வேறுகண்கள் அல்ல'' (19:27) என்று அழுத்தமாய் அனேகர் அறியும்படியாய் குறிப்பிட்டு மிகவும் உறுதியுடனும் தெளிவுடனும் வாழ்க்கையில் முன்னேறினார். தூய பவுலும் இறையிலில் தெளிவடைந்த பின் ''இனி நானல்ல கிறிஸ்துவே என்னில் வாழ்கிறார்'' என முழங்குகிறார்.

கடவுளின் வார்த்தையாகிய விதைகளால் இறையறிவைக் குறித்து அகத்தெளிவு அடைந்து, நம்பிக்கையாளர்களாக மாறுவது மட்டுமல்ல அந்த வார்த்தையாகிய விதை தளிர்த்து, கதிர்விட்டு, தானியமாகிய விளைச்சலை நல்லபலனாக இந்த சமூகத்திற்கு தருகிறது. ஆகவே, பெருந்திரள் கூட்டம் மக்கள் ஆண்டவரிடம் ஒன்று கூடி வந்த போது, ''கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும்'' (மத்.13:9). என்றார். அகத்தெளிவடைந்த அருட்தெண்டர்கள், இறைமக்கள் கடினமான சூழலிலும் நற்செயல் செய்து நற்சான்றாளராய் நிலைநிற்பர். இறையியல் கல்வி மூலம் இறைவார்த்தையைக் குறித்து அதிக தெளிவு பெற்ற எல்சல்வடோர் நகரத்தின் பிரதம பேராயர் ஆஸ்கர் ரொமரோ அவர்கள் தினமும் காலை 6 மணிக்கு வானொலியில் இறைச்செய்தி வழங்குவது வழக்கமாயிருந்தது. இதன் வழியாக மத்திய அமெரிக்க நாடுகளில் மிகவும் சிறியதான எல்சல்வடோர் நாட்டின் மக்கள் அனைவரும் இறையறிவில் அகத்தெளிவு பெற்றனர்; அடிமைத்தனத்தை உணர ஆரம்பித்தனர். ஆண்டவரின் திருப்பெயரில் விடுதலை நோக்கி பயணப்பட ஆரம்பித்தனர். 24.03.1980 அன்று பிரதம பேராயர் ஆஸ்கர் ரொமேரோ சுட்டுக் கொல்லப்பட்டார். ஆனால் அவர் வழியாக அனுதினமும் இறையறிவில் அகத்தெளிவடைந்தவர்கள் ஆற்றலடைந்தவர்களாய் தீரமுடன் முன் சென்றனர். இப்படி, இறையறிவு சமூகத் தீமைகள் குறித்தும் அகத்தெளிவை தருகிறது. ஆற்றலுடன் எதிர்த்து நிற்க துணிவையும் தருகிறது.

திருச்சபைகளின் தற்கால சூழல் சார்ந்த செயல்பாடுகளுக்கு இடையூறாக இருப்பது அடிப்படைவாத சிந்தனைதான். ஆனால் இறைவார்த்தையின் வழியாக பெறும் இறையறிவு புதிய பார்வைகளை, கண்ணோட்டங்களை தந்து தெளிவடையச் செய்கிறது. இறைமக்கள் இறையறிவில் வளர ஆர்வத்துடன் முயற்சித்தால், அது நமது நம்பிக்கையில் முதிர்ச்சியுடன் இயேசுகிறிஸ்து தோன்றும் வரையில் அப்பழுக்கின்றி வாழ உதவியாயிருக்கும்.

அருள்திரு. G.S. **ஆஸ்வின் ஜெய்சிங்**

21-07-2019

## இறைமக்கள் : கிறிஸ்துவின் மந்தை

**PEOPLE OF GOD : FLOCK OF CHIRST**

தொ.நூ. 35:1-15 திப. 16:11-16
தி.பா. 95 யோவா. 10:1-6

**"அவரே நம் கடவுள்; நாமோ அவரது மேய்ச்சலின் மக்கள்; நாம் அவர் பேணிகாக்கும் ஆடுகள்."** (திபா. 95:7)

அறிவியல் வளர்ச்சியால் தகவல் பரிமாற்றத்தில் எண்ணற்ற மாற்றங்கள் வந்துள்ளன. இமெயில், ஃபேஸ்புக், ட்லிட்டர், வாட்ஸ் அப், ஃபேக்ஸ் என ஏராளம் வந்து விட்டன. இத்தகைய தகவல் தொடர்புகள் வராத காலத்தில் தபால்காரர்கள் மக்களிடம் மிகப் பெரிய ஊடகமாக, தகவல் தொடர்பாளராகச் செயல்பட்டனர். ஆரம்பத்தில் இவர்கள் ஓட்டநடையில் பயணித்து தபால்களைக் கொடுத்தனர். எனவே இவர்கள் ரன்னர்கள் என அழைக்கப்பட்டனர்.

கேரளாவில் மேற்கு கொச்சியில் தோப்பம்பாடி பகுதியில் "சாக்கோ" என்ற தபால்காரரின் பெயரில் ஒரு சாலைக்கு பெயர் வைக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த தபால்காரர்களின் சேவையை கௌரவப்படுத்தும் வகையில் சாக்கோ சாலை என பெயரிடப்பட்டுள்ளது. சாக்கோ அவர்கள் 13 வயதில் தோப்பம்பாடியில் ரன்னராக (நடந்து பட்டுவாடா செய்பவர்) பணியில் சேர்ந்தார். தினமும் 40 கி.மி, காடு, மேடு, கரடு, முரடு பாதையிலும் பயணித்து கடிதகங்களை பட்டுவாடா செய்துள்ளார். படிப்பில்லாத மக்களுக்கு வரும் கடிதங்களைப் படித்துக்காட்டுவார். அப்பகுதியிலுள்ள ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவராக, நின்று செயல்படுவார். தொழிற்சங்கத்திலும் சேர்ந்து உடன் ஊழியர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்துள்ளார். போராட்ட களங்களில் பங்கெடுத்துள்ளார். 71 வயதில் 1987 -ம் ஆண்டு மறைந்துள்ளார். கேரளாவில் இவரது தியாகப்பணியை நினைவுகூரும் வகையில் ஒரு சாலைக்கு சாக்கோ சாலை என பெயரிடப்பட்டுள்ளது.

ஆண்டவரால் அழைக்கப்பட்டுள்ள, ஒவ்வொரு இறைமக்களும் கிறிஸ்துவின் மந்தையில் முக்கியப் பொறுப்புகளை ஆற்ற நியமிக்கப்பட்டுள்ளனர். பல இறைமக்களுக்கு தாங்கள் யார்? எதற்காக கிறிஸ்தவர்களாக இருக்கிறோம்? நமது கடமை என்ன? நம்மிடம் இறைவன்

எதிர்பார்ப்பது என்ன என்பதே தெரியவில்லை. ஆயர்களை நியமிக்கும், நிர்பந்திக்கும் கட்டளையிடும் மந்தைகளாக மாறியுள்ளார்கள். கிறிஸ்துவின் மந்தைகளாக நாங்கள் எங்கு செல்வோம், எதையும் செய்வோம், யாரும் எங்களை கட்டுப்படுத்தக் கூடாது என்ற எண்ணம் பரவலாக வளர்ந்து கொண்டு வருகிறது. கிறிஸ்துவின் மந்தையில் இறைமக்களாக அழைக்கப்பட்ட, நியமிக்கப்பட்ட, அபிஷேகம் பெற்ற நமது கடமை என்ன? என்பதை இணைந்து சிந்திப்போம்.

### *1. அனுபவம்* :

தொ.நூ. 35:7-12 வரை யாக்கோபு பெற்ற சில அனுபவங்கள் கூறப்பட்டுள்ளன. யாக்கோபுக்கும் பெத்தேலுக்கும் நேரான பயணத்திலே சில கட்டளைகளைக் கடவுள் கொடுத்தார். இருவருக்குமான நெருங்கிய ஐக்கியத்திலே, கடவுள் கொடுத்த கட்டளைகளை யாக்கோபு அப்படியே ஏற்றுக் கொண்டார். பெத்தேலுக்கு வந்த போது யாக்கோபு நிறைவேற்றிய பணிகள் புதிய அனுபவத்தை யாக்கோபுக்குத் தந்தன.

**a**). பலிபீடம் கட்டுதல், 7.

**b**). தரிசனமும், ஆசீர்வாதமும் பெறுதல், 9.

**c**). புதிய பெயர் ஏற்றல் (இஸ்ரவேல்) 10.

**d**). வாக்குத்தத்தம் பெறுதல்,

**(பலுகிப் பெருகுதல், இனங்கள் உருவாக்கம், அரசர்கள் பிறப்பு, கானான்தேசம் பெறுதல்)**

கிறிஸ்துவின் மந்தையிலே இணைக்கப்பட்ட இறைமக்கள் ஆண்டவருக்கு ஆலயம் கட்டுகிற பணியில் நம்மை இணைத்துக் கொள்ளவேண்டியது நம் கடமை. தினமும் தரிசனம் காணுதலும் இறைவனோடு நெருங்கிய தொடர்பால் ஆசிநிறைந்த வாழ்வு வாழ வேண்டியதும் நம் கடமை. நாம் பெற்றிருக்கிற கிறிஸ்தவர்கள் என்ற பெயருக்கு சான்றாகவும், தனி நபராக நாம் பெற்றுள்ள பெயருக்கு பொறுப்பானவர்களாகவும் வாழ முற்பட வேண்டியது நமது கடமை. வாக்குத்தத்தங்களை நோக்கி வாழ்க்கைப் பயணத்தை அமைத்துக் கொள்வதும் நம் கடமை. பெத்தேலின் அனுபவம் நம்மை ஆட்கொள்ளட்டும்.

### *2. அருட்பணி* :

திப. 16:13-15 வரையுள்ள பகுதிகளில் பவுலின் அருட்பணி முறைமைகள் பட்டியலிடப்பட்டுள்ளன. பிலிப்பி பட்டணம் மக்கதோனியா தேசத்தின் ஒரு பகுதி, ரோமர் அதிகமாகக் குடியேறியப் பகுதி. பிலிப்பி பட்டணத்தில் திருப்பணிக்கான வாசலை ஆண்டவர் திறந்து வைத்தார். அருட்பணியின் பல பகுதிகள் சிறப்பாக விளக்கப்பட்டுள்ள பகுதி இது.

**a**). ஒழுங்காக மன்றடுதல் , திப. 16: 13 வழக்கமாய் ஜெபம் பண்ணுகிற இடத்தில் கூடி ஜெபித்தான்.

**b**). உபதேசித்தல் (13) சிறு கூட்டம் பெண்களுக்கு உபதேசித்தான்.

**c**). திருமுழுக்கிற்கு வழி நடத்துதல்(15) லீதியாளின் வீட்டாருக்கு ஞானஸ்நானம்.

**d**). விசுவாசிகளின் ஐக்கியம் (15) லீதியாள் வீட்டில் குடும்ப ஐக்கியம்.

அருட்பணி நம்மேல் கொடுக்கப்பட்ட கடமை. அனுதினமும் மன்றாடுதல், உபதேசிக்க வாய்ப்பு கிடைத்தால் உபதேசித்தல், திருமுழுக்கிற்கு வழிநடத்துதல், சந்திக்கப்பட்ட விசுவாச குடும்பத்தோடு தொடர் ஐக்கியம் கொள்ளுதல் இவைகள் பிலிப்பி பட்டணத்தில் பவுலுக்கு கிடைத்த அருட்பணி அனுபவங்கள்.

இயேசு சீடர்களை தெரிந்து கொண்ட போதும் இதே விதமான திட்டங்களை கொடுத்தார் மாற்கு 3: 14,15. தம்மோடு இருக்க, பிரசங்கம் பண்ண, வியாதிகளை குணமாக்க, பிசாசுகளை துரத்த ஏற்படுத்தினார். சீடர்களுக்கு கொடுத்த இறுதி கட்டளையும் இந்த விதமான பணித் திட்டங்களே. மத். 28: 19,20. பிலிப்பி பட்டணத்தின் அருட்பணி அனுபவம் ஒவ்வொரு கிறிஸ்தவனின் கடமை. கிறிஸ்துவின் மந்தையாகிய திருச்சபை தினமும் நிறைவேற்ற வேண்டிய கடமை அருட்பணியாற்றுதலேயாகும்.

***3. ஆண்டவரைப் பின் தொடர்தல்*** : (யோவா. 10: 3-5)

ஆண்டவர் ஆயனாகவும் இறைமக்கள் மந்தையாகவும் விளக்கப்பட்டுள்ள சிறப்பான பகுதி இது. ஆயனுக்கும் மந்தைக்குமுள்ள உறவை இப்பகுதி சுட்டிக்காட்டுகிறது. ஆயர்பணியின் அழுத்தத்தை இப்பகுதி உணர்த்தினாலும் இறைமக்ககளாகிய மந்தையின் கடமையே இங்கு மேலோங்கி நிற்கிறது.

1. ஆயனை (or) மேய்ப்பனை அறிதல், 2 (வாசல்வழி வரும் ஆயனை அறிதல்)

2. ஆயனின் சத்தத்திற்கு செவி கொடுத்தல், 3.

3. வெளியே (உலகிற்குள்) அடையாளங்களை விடாதிருத்தல் அல்லது சுதந்திரத்தை மதித்து நடத்தல், 4 (வெளியே நடத்தி கொண்டு போதல்- வெளியே விட்ட பின்பு)

4. அந்நியருக்கு பின் செல்லாமல் இருத்தல், 5.

5. ஆயனை பின்தொடர்தல், கீழ்ப்படிதல், 4. (ஆயனுக்குப் பின் செல்கிறது).

கிறிஸ்துவின் மந்தையில் இணைக்கப்பட்டுள்ள நாம் சுயாதீனம், சுதந்திரம் பெற்ற இறைமக்களாக வாழலாம். அதே நேரம் நமது கடமை, பொறுப்பு, கீழ்படிதலை மறந்துவிடக்கூடாது 1கொரி. 6: 12. பவுல் கூறுவதை நினைவில் கொள்ள வேண்டும். எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு. எல்லாம் தகுதியாயிராது. நான் ஒன்றிற்கும் அடிமைப்படமாட்டேன்.

மாறுபட்ட உலகில், தடம்புரண்டு போன கிறிஸ்துவின் மந்தையாகிய இறைமக்கள் ஏராளம் ஏராளம். பெத்தேலின் திட்டத்தை நிறைவேற்றும் இறைமக்களாகவும், எந்நிலையிலும் எக்காலத்திலும் கிறிஸ்துவையும், கிறிஸ்துவின் வார்த்தைகளையும் பின் தொடரும் இறைமக்களாகவும் செயல்படுவோம். இறையருள், இறையாசி என்றும் நம்மோடு நின்று நிலவுவதாக.

அருள்திரு. S. **கிறிஸ்டோபர் ஏசு மணி**

நாமெல்லாரும் ஆண்டவருக்கு பிரியமாக வாழ்வதற்கு விரும்புவதை விட மனிதருக்கு பிரியமாக வாழ்வதற்கு அதிகம் விரும்புகிறோம். பவுல் அப்போஸ்தலன் எபே. 5:1,2 ஆகியவற்றில் ஆண்டவருக்கு பிரியமாக வாழ்வது எப்படி என்பதை மிகத் தெளிவாக கூறுகிறார்.

ஆண்டவர் விரும்புகிற மனிதரை எப்படி கனப்படுத்துகிறார் என்பதை தாவீது 23-ம் திருப்பாடலில் "..... என் தலையில் நறுமணத் தைலம் பூசுகின்றீர்" (திபா. 23:5) என்கிறார்.

துபாய் நாட்டிலே 1996 -ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16-ஆம் தேதியிலிருந்து ஆண்டுதோறும் Dubai Shopping Festival - துபாய் வாங்கும் திருவிழா என்றொன்று நடக்கிறது. இங்கே 75 சதவீதம் தள்ளுபடிக்கு பொருட்களை வாங்கலாம். இங்கே நறுமணப் பொருட்களும் விற்கப்படுகிறது. Perfume Village - நறுமண கிராமம் என்னுமிடத்தில் நளதம் போன்ற உயர்ந்த தரமுள்ள நறுமண திரவியங்களை அறிமுகம் செய்யும் நிகழ்ச்சி நடக்கும். வரிசையாக நிறுத்தப்பட்டிருக்கும் இருநூறுக்கும் மேற்பட்ட ஆட்கள் தங்கள் கைகளில் வைத்திருக்கும் வாசனைத் திரவிய குடுவைகளில் இருந்து ஒரே நேரத்திலே பார்வையார்களாக கடந்து போவோர் மீது வாசனை திரவியங்களை மழையாக விழச் செய்வார்கள். பலவிதமான வாசனை பதிந்த உடை மிகவும் நறுமணமாக மணம் வீசிக் கொண்டிருக்கும். நறுமணத்திற்காக உடைகளில் ஊற்றப்படுவதை யாரும் கறையாக நினைக்கமாட்டார்கள். அந்த வாசனைத் திரவியங்கள் உடைகளில் பவ மாதக்கணக்கில் மணமாக வீசிக் கொண்டிருக்கும். இங்கேயுள்ள Perfume Museum - வாசனை திரவிய அருங்காட்சியகத்தில் பல உயர்தர வாசனைத் திரவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

இவற்றைப் பார்க்கும் போது வாசனையாக வாழ்வதன் சிறப்பை புரிந்து கொள்ளமுடியும்.

சர்வ வல்லமையுள்ள ஆண்டவரே விரும்பி ஏற்படுத்திய முதல் திருப்பணி-ஆசாரிய திருப்பணி. அது அவருக்குப் பிரியமான திருப்பணியாக ஏற்படுத்தப்பட்டபடியால் அதில் ஈடுபட தெரிந்து எடுக்கப்பட்டவர்களை நறுமணத் தைலத்தை தலையில் ஊற்றி கனப்படுத்தினார் (வி.ப. 29:7). அவர் கனப்படுத்திய போது ஊற்றின தைலத்தினால் ஏற்பட்ட நறுமணத்தை ஆசாரியர்கள் அவர்களது அன்பான வாழ்க்கையினாலும், உரிமையுள்ள ஊழியத்தினாலும் ஏற்படுத்த வேண்டுமென விரும்பினார்.

ஆகவே தான் திருத்தூதுவர்கள் ஆண்டவருக்குப் பிரியமான வாழ்க்கைக்கு மாதிரியாக, ஆசாரியர்கள் செலுத்துகிற பலியை மேற்கோள் காட்டினார்கள் (1பேதுரு 2:5, உரோ. 12:1)-ஆண்டவருக்கு பிரியமானவர்களாக வாழ குருக்கள் செலுத்தும் பலியாக எப்படி நம்மை அர்ப்பணித்து வாழ்வது?

இதற்கு ஆண்டவர் இயேசுகிறிஸ்துவே வழிகாட்டுவதாக எபே. 5:2-ல் பவுலார், ஆண்டவர் தம்மையேத் நமக்காக தந்தையிடம் - நறுமணமான காணிக்கையாகவும் - பலியாகவும் ஒப்புக் கொடுத்து அன்பை நிரூபித்தது போல, மனிதர்களாகிய நாமும் அன்பிலே நடந்து கொள்ளவேண்டும்.

பல நேரங்களில் நாம் அன்பிலே நடந்துக் கொள்ளுவதில்லை.

- கடமைக்காக நடந்து கொள்ளுகிறோம்.
- சம்பிரதாயத்துக்காக நடந்து கொள்ளுகிறோம்.

மனமுவந்து அன்போடு அவர் நடந்து கொண்டது போல அன்பிலே நடந்து கொள்ள வேண்டும். நமது பலியிலே, வேலையிலே அன்பு தான் வெளிப்பட வேண்டும். மாற். 12:33-இல் பலிகளைப் பார்க்கிலும் முக்கியமானது அன்பு என சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

ஆண்டவரைப் போல எப்படி அன்பிலே நடந்து கொள்ளுவது என்பதை தியானிப்போம்.

### *1. நறுமணமான காணிக்கை* : எபே. 5:2

ஆண்டவருக்கு மட்டும் கொடுக்கப்படுவதே காணிக்கை. நாம் சுயமாகக் கஷ்டப்பட்டு, உழைத்து சுத்தமான கைகளோடு ஆண்டவருக்கு கொடுப்பதே சுகந்த வாசனையான காணிக்கை. காயீன், ஆபேல் காணிக்கையிலே ஆண்டவர் ஆபேலுடைய காணிக்கையை பிரியமான காணிக்கையாக அங்கீகரிக்க காரணம், காயீன் தன் தந்தை ஆதாமைப்

பார்த்து ஆதாமின் தொழிலைக் கற்றுக் கொண்டு, தந்தையாகிய ஆதாம் ஏற்படுத்திய வேலையை பின் தொடர்ந்து செய்தான். ஆனால் ஆபேல் அப்படியல்ல. ஆடுகளை மேய்கின்ற வேலையை தானே கஷ்டப்பட்டு , சுயமாகக் கற்றுக் கொண்டு வேலை செய்து அதின் மூலம் கொண்டு வந்த காணிக்கையை ஆண்டவர் சுகந்த வாசனையான காணிக்கையாக ஏற்றுக் கொண்டார். நமது செயல்களே நல்ல வாசனையையும், துர்வாடையையும் ஏற்படுத்துகின்றன.

மனிதர்கள் நிலவில் இறங்கிய போது, அதன் வாசனை என்னவென்று அவர்களுக்குத் தெரியவில்லை. ஆனால் விண்கலத்திற்கு திரும்பிய பின் அவர்களது விண்வெளி உடையில் ஒட்டியிருந்த தூசுகளிலிருந்து ஒரு வித வாடை பரவியதை உணர்ந்தார்கள். தற்போது பிரபஞ்சத்தின் ஏழாம் கோளான Uranus - இன் வாசனை எப்படியிருக்கும் என கண்டறிய வேண்டுமென்பதற்காக Hawaii தீவிலுள்ள Mauna Kea ஆய்வகத்திலிருந்து ஆய்வு மேற்கொண்டரர்கள். பனிக்கோளான Uranus -இல் காணப்படும் Hydrogen Sulphide வாயுவின் விளைவால் Uranus கிரகத்தில் அழுகிய முட்டை போன்ற நாற்றம் வீசுகிறதாம்.

ஆதாம், ஏவாள், காயீன் ஆகியோரின் பாவத்திற்கு பின் பாவச்செயல்கள் பூமியில் பெருகிக் கொண்டேயிருந்தபடியினாலே பூமியில் ஆண்டவருக்கு பிரியமான வாசனை வீசாமல் துர்நாற்றம் வீசத் தொடங்கியது ஏசா. 9:3 கூறுகிறது ஆண்டவருக்குப் பயப்படும் பயமே ஆண்டவருக்கு உகந்த வாசனை, பிரியமான வாசனை. ஆனால் பாவத்தினாலே கர்த்தருக்குப் பயப்படும் பயம் இல்லாமல் போய் விட்டபடியினாலே துர்நாற்றம் வீசத் தொடங்கியது.

துர்நாற்றம் வீசுவது நாற்றம் மிகுந்த இடத்தில் இருப்போருக்கு எப்படி தெரியாமல் பழகிப் போகுமோ, அப்படியே பாவத்தில் வாழ்ந்த பூமியின் மக்களுக்கு அது தெரியாமல் பழகிப் போய் விட்டது.

மனிதரின் பாவச் செயல்கள் வாடையை பெருக்கிக் கொண்டேயிருந்தன.

ஆண்டவர் மீது அன்பு கொண்டு அவருக்குப் பணிவிடை செய்வது போல நமது செயல்கள் இராமல், காயீன் நடந்து கொண்டதுபோல ஒருவரை ஒருவர் முந்த வேண்டும் எனச் செய்யும் செயல்கள் வாசனையை ஏற்படுத்தாமல் வாடையை ஏற்படுத்தும்.

உற்சாகமாய் அன்போடு ஆண்டவருக்கென்று ஊழியம் செய்யாமல் கட்டாயப்படுத்தப்பட்டு செய்யப்படும் செயல்கள் வாசனையை ஏற்படுத்தாது, வாடையை ஏற்படுத்தும்.

நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து தனது அன்பான செயல்களால் சுகந்த வாசனையான காணிக்கையை பிதாவுக்கு கொடுத்தது போல, நமது செயல்களும் ஆண்டவர் மீது ஆழமான அன்போடு செய்யப்படுமானால், அவை சுகந்த வாசனையை ஏற்படுத்தும்.

அன்பிலே நடந்துக் கொள்ளுவோம்.

## ***1. நறுமணமான பலி*** : எபே. 5: 2

'பலி' என்பது அசுத்தமில்லாத, சுத்தமான வாழ்க்கையைக் குறிக்கிறது. பலி என்றவுடனே நமக்கெல்லாம் இறைச்சி வெட்டும் இடம் தான் நினைவுக்கு வரும். அரசாங்க சுகாதாரத்துறை இறைச்சி வெட்டும் இடம் ஈ மொய்க்காத சுத்தமான இடமாக இருக்கவேண்டும்; அங்கே துர்நாற்றம் ஒன்றும் இருக்கக் கூடாது எனக் கூறுகிறார்கள். ஆனால் நாம் காண்கின்ற இறைச்சி வெட்டுமிடங்கள் துர்நாற்றம் வீசுகிற இடமாகவும் ஈ மொய்திற இடமாகவுமே இருக்கின்றன.

ஆனால் இஸ்ரவேலருடைய பலி செலுத்தும் இடம் மிகமிக தூய்மையான இடம். பலியாக ஒரு இளம் ஆட்டுக்குட்டியோ அல்லது வேறு உயிரினமோ ஆயத்தமாக்கப்படும் போது மிக் கவனமாக ஆயத்தமாக்கப்படும். பலி செலுத்தப்படும் முன்பே அந்த ஆட்டுக்குட்டி பழுது எதுவும் இல்லாதது தானா என நான்கு நாட்கள் பரிசோதிப்பார்கள் (யாத். 12:2-6). பத்தாம் தேதி தெரிந்தெடுக்கப்படும் ஆட்டுக்குட்டி பதினாலாம் தேதி வரை வைக்ககப்பட்டு பரிசோதிக்கப்படுகிறது. பலி கொடுக்கப்பட வெட்டப்படும் போது அசுத்தமாக இருப்பவற்றையெல்லாம் கவனமாக அகற்றி, சுத்தமாக்கப்பட்டு பின்னரே பலியாக சுட்டெரிக்கப்படுகிறது.

ஆண்டவர் இயேசு கிறிஸ்து பழுது எதுவும் இல்லாதவராக, மிகவும் சுத்தமானவராக தன்னை சுகந்த வாசனையான பலியாக ஒப்புக் கொடுத்தார்.

அவர் நம்மிடம் எதிர்பார்ப்பதென்ன? நாமும் நம்மை மிகவும் சுத்தமான பலியாக அவரிடம் ஒப்புக் கொடுத்து, அன்பிலே நடந்து கொள்ள வேண்டும்.

எபே. 5:3,4 ஆகிய வசனங்களில் பல அசுத்தங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

வேசித்தனம், பிற பல அசுத்தங்கள், பொருளாசை, வம்பு, புத்தீனமான பேச்சு, பரியாசம் இவையெல்லாம் அசுத்தங்கள். பலியாக ஒப்புக் கொடுக்கப்படுகிற நம்மிடத்திலே இப்படிப்பட்ட எந்த அசுத்தமும் இருக்கக்கூடாது.

பலியிலே ஒன்று மீதி வைக்கப்பட்டால் ஆட்டுக்குட்டியின் தலை முதல் எல்லாம் சுட்டெரிக்கப்பட்டு உண்ணப்படும் (விப. 12: 9).

நம் தலை பணிவோடிருந்தால் எல்லாராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பலியாக நாம் இருப்போம். ஒரு சமயம் ஒரு மன்னர் தனது மந்திரியிடம் ஒரு ஆட்டுத் தலை, ஒரு புலித் தலை, ஒரு மனிதத் தலை, வாங்கி வரச் சொன்னார். ஆட்டுத் தலை அதிக சிரமின்றி இறைச்சி கடையில் கிடைத்தது. புலித் தலையும் ஒரு வேட்டைக்காரனிடமிருந்து கிடைத்துவிட்டது. மனிதத் தலை கஷ்டப்பட்டுக் கிடைத்தது. அரசரிடம் மூன்று தலைகளையும் அமைச்சர் கொண்டு வந்தார். இப்போது அரசர் இந்த தலைகள் மூன்றையும் சந்தையில் போய் விற்று வரச் சொன்னார். ஆட்டுத் தலை சிரமமின்றி விலைபோனது. புலியின் தலையும் ஒரு வேட்டைக்காரன் வாங்கிக் கொண்டான். மனிதத் தலையை யாரும் விலை கொடுத்து வாங்கவில்லை. அருவருப்புடன் பார்த்தனர். மன்னரிடம் அமைச்சர் விவரத்தைச் சொன்னார். உடனே அரசர் அப்படியானால் இதை இலவசமாகக் கொடுங்கள் என்றார். அப்போதும் யாரும் அதை வாங்க முன் வரவில்லை.

மனித தலை உயிர் இருக்கும் வரை தான் மதிப்பு. உயிர் போய் விட்டால் இலவசமாக யாரும் கூட யாரும் வாங்கமாட்டார்கள்.

உடம்பில் உயிர் இருக்கும் போதே பணிவோடு நடந்து கொண்டால் அதுவே சுகந்த வாசனையான பலி.

அருள்திரு. J. **பிரகாஷ் நாயகம்**

04-08-2019

அருள்பணி ஞாயிறு

## அருள்பணி : எல்லா இடங்களிலிருந்தும் எல்லா இடங்களுக்கும்

**MISSION : FROM EVERY WHERE TO EVERY WHERE**

1அர.17:1-6 கலா. 2:1-10
தி.பா. 107:1-15 மத். 13:47-52

**"யூதர்களுக்கு அவர்களும், யூதரல்லாதோர்க்கு நாங்களும் நற்செய்தி அறிவிக்க வேண்டும் என்று ஒத்துக் கொண்டோம்"** (கலா. 2:10)

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இந்தியாவுக்கு வந்த, இங்கிலாந்தைச் சேர்ந்த ஜான் பென்னிகுக் முல்லைப் பெரியார் அணையைக் கட்டி கேரளா மக்களும் தமிழர்களும் தண்ணீர் வசதிப் பெற்றுக் கொள்ள உதவி செய்தார். பணப் பிரச்சனை வந்த போது, திட்டத்தை கைவிடாது குடும்பச் சொத்துக்கள் அனைத்தையும் விற்று அந்த பணத்தில் அணையைக் கட்டினார். பென்னிகுக் தன் பணம் அனைத்தையும் செலவழித்து நீர்வளம் பெருகச் செய்தார். அணையின் முக்கியத்துவம், குக் அவர்கள் செய்த தியாகம் நீர்வளம் இவைகளை உணராத இரு மாநில மக்கள் நீர் பிரச்சனையில் மோதிக் கொண்டிருப்பது வேதனை அல்லவா? நற்செய்தி பற்றியும் அதன் அறிவிப்பு சார்ந்த பிரச்சனை யூதருக்கும் யூதரல்லாதோருக்கு ஏற்பட்ட போது யூதர்களுக்கும் பேதுரு சார்ந்தவர்களுக்கும் யூதரல்லாதோருக்கு பவுலும் நற்செய்தி அறிவிக்க ஒப்புக்கொண்ட ஒற்றுமையுணர்வு கலா. 2:10 வழி விளங்குகிறது.

நற்செய்தி ஒன்றே, ஆண்டவரைத் தவிர்த்த எதுவும் அருட்பணியாகாது. வேறு ஒரு நற்செய்தி இருக்கிறது என்று மனதை குழப்பி கிறிஸ்துவின் நற்செய்தியை கூறுபவர்கள் நடுவில் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். அருட்பணி மனிதனுக்கு உகந்ததாய் இருக்கப் பார்த்தால் கிறிஸ்துவுக்கு நல்ல அருட்பணியாளராய் இருக்க முடியாது. அருட்பணி கிறிஸ்தவர்களுக்கிடையே ஒற்றுமையை பலப்படுத்தி கிறிஸ்தவ பிரிவினைகளைத் தவிர்த்து இணைத்து செயல்பட வேண்டும். அருட்பணி செய்ய பேதுரு, பவுல் விட்டுக் கொடுத்து செயல்பட்டது முன் மாதிரியே, அணையில் நீர் தேங்குகிறது. பாசனத்திற்குபயன் படுத்தாவிடில் பயனில்லாமற் போய்விடும். பயன்படுத்தும்போது பாசன வசதி கிடைக்கும். விளைச்சல் அதிகரிக்கும். நற்செய்திப் பணி என்பது உள்ளூர் அடுத்த ஊர், உலகம் என விரிவடைய வேண்டும். பேராயர் அசரியா குறிப்பிடும் போது

மேலை நாட்டுப் பணியாளர்களால் மட்டுமே நற்செய்திப் பணியினைக் கையாள முடியும் என்ற எண்ணம் அகன்று தன்னாட்டு மயமாவதின் மூலம், இந்தியாவில் சுயமாய் அருட்பணி செய்யும் வாய்ப்பை ஏற்படுத்தினர். இயேசுக் கிறிஸ்து நகர், சிற்றூர் எல்லாம் சுற்றிவந்தார். விண்ணரசு பற்றிய நற்செய்தியை பறைசாற்றினார். அருட்பணி சார்ந்த சில உண்மைகளை சிந்திப்போம்.

### *1. அறிவிக்க அனுப்புகிறார்* :

அருட்பணி எல்லா இடங்களிலிருந்தும் எல்லா இடங்களுக்கும் அறிவிக்கப்பட அனுப்புதல் தேவை. ஆதீன நற்செய்திப்பணி செய்ய சபைகளிலிருந்து அருட்பணியாளர்களை அனுப்புகிறோம். 1அர. 17:2,3-ல் எலியாவை கடவுள் கேரீத் ஆற்றண்டைக்கு அனுப்புகிறார். எலியா படைகளின் ஆண்டவனின் ஊழியன். விக்கிரக அரசனின் வாளுக்கு பயப்படவில்லை. இவரது சொள் வாளை வெல்ல ஆகாபின் இரும்பு வாள் திகைத்து நின்றது. இயேசுக் கிறிஸ்து தமது சீடர்களைப் பார்த்து லூக். 24:47-ல் பாவ மன்னிப்பு பெற மனம் மாறுங்கள் என எருசலேம் தொடங்கி அனைத்து நாடுகளிலும் அவரது பெயரால் பறை சாற்றப்பட வேண்டும் என்பதிலிருந்து நற்செய்திப்பணி ஓர் இடத்தில் தேங்கி விடக்கூடாது. அது எங்கும் அறிவிக்கப்பட வேண்டியதின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறார். எலியா கடவுளின் கட்டளைக்கு கீழ்ப்படிந்தார். அருட்பணிக்கு ஆண்டவர் அனுப்பும் இடங்களுக்குச் செல்ல ஆயத்தமாயிருப்பது அருட்பணியாளரின் சிறப்பு ஆகும்.யோனா நினிவேக்கு செல்லாமல் தர்ஷீசுக்கு சென்ற போது விளைவு பயங்கரமாயிருந்தது. வசதி வாய்ப்புகள் இல்லை என்று அனுப்பும் இடத்திற்கு செல்லாமல் நமது விருப்பப்படி தேர்வு செய்வோமெனில் அது நன்மை பயக்காது. கேரீத் ஆறு வற்றினாலும் போஷிக்க வேறு இடத்தை கர்த்தர் ஆயத்தப்படுத்துவார்.

### *1. ஆதாயப்படுத்த அனுப்புகிறார்* :

அருட்பணியாளர்கள் தங்கள் அருட்பணியினால் மக்களை ஆண்டவருக்கு ஆதாயப்படுத்த வேண்டும். இணைந்து பணிபுரியும் போது மட்டுமே ஆதாயப்படுத்த முடியும். இல்லையேல் மக்கள் சிதறிப் போய்விடுவர். எருசலேமில் நடந்த திருத்தூதுவர் கூட்டத்தை கலாத்தியர் 2- ம் அதிகாரத்தில் படிக்கிறோம். பேதுரு யூதர்களின் திருத்தூதுவராக செயல்பட்டார். ஆனால் இவர்கள் விருத்தசேதனம் பற்றிய பிரச்சனை எழுந்த வேளையில் இப்பிரச்சனையில் மூழ்கி விட்டால் ஆதாயப்படுத்தும்

பணி தொய்வடைந்து விடும். இந்த பிரச்சனை பக்க வழியாய் வந்த போலி சகோதரரால் எழுந்ததே. இன்னும் திருமுழுக்கு முறைபற்றி பேசி ஜனங்களை சிதறடிக்கும் கூட்டம், தூயவாழ்வு, இறைபயம், நேர்மை போன்ற பண்புகளை வலியுறுத்தாமல் சொந்த ஆதாயத்தை தேடும் கூட்டங்கள் பெருகி விட்டனர் கலா.2:10. யூதர்களுக்கு அவர்களும் யூதரல்லாதோருக்கு நாங்களும் நற்செய்தி அறிவிக்க வேண்டும் என்று ஒத்துக்கொண்டோம். மனந்திரும்புகிற ஒரே பாவியின் நிமித்தம் பரலோக ராஜ்ஜியத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும். பேராயர் அசரியா இந்தியர்கள் இந்திய நாட்டின் தன்மைக்கேற்ப தலைமைப்பயிற்சி, நிர்வாகத்திறன், நற்வெய்தி அறிவித்தல், ஆதாயப்படுத்துதல் போன்ற தலைமைகளில் வளர மேலை நாட்டு அருட்தொண்டர்கள் பயிற்சி தர வேண்டும் என்று கூறுவதிலிருந்து இணைந்து பணிபுரிய வேண்டியதை வலியுறுத்தினார்.

### *3. அறுவடைக்கு ஆயத்தப்பட அருள்பணி* :

மத்.13:51 உலக முடிவில் நடக்கும் நிகழ்வுகளை இயேசுக் கிறிஸ்து உவமைகளாக போதித்தார். இதனை மத்.13:47-52 வரையுள்ள பகுதிகளில் வாசிக்கிறோம். கடலில் வீசப்படும் வலையில் அகப்படும் மீன்களில் நல்லவைகள் ஒரு கூடையிலும், கெட்டவை வெளியே எறியவும் செய்வார். உலக முடிவில் வானதூதர் சென்று நேர்மையாளரிடமிருந்து தீயோரைப் பிரிப்பர். பின்னர் அவர்களை தீச்சூளையில் தள்ளுவர். அங்கே அழுகையும் அங்கலாய்ப்பும் இருக்கும் என உலக முடிவில் நடக்கும் இச்செயலை புனித மத்தேயு எழுதுகிறார். இவ்வித நிகழ்வுகள் நடக்குமா? எங்களுக்கு தெரியாதே என்றுக் கூறி தப்பலாம் என நினைக்க வாய்ப்பில்லை. ஏனெனில் அருட்பணியாளர்கள் இச்செய்தியினை ஏற்கனவே எல்லா இடங்களுக்கும் அறிவித்து விட்டனர். இது இறைத்திட்டம். மத்.13:51 இயேசு கேட்கிறார் இவைகளையெல்லாம் புரிந்து கொண்டீர்களா?

நமது பதில் என்ன?

அருள்பணி எல்லா இடங்களிலிருந்தும் எல்லா இடங்களுக்கும் என்று பார்க்கும் போது நற்செய்தி அறிவிக்கவும் ஆதாயப்படுத்தவும் அறுவடைக்கு தகுந்தோராக ஆயத்தப்படுத்தவுமே. தலைமை அருட்பணியாளராகிய இயேசுகிறிஸ்த தாமே தகுந்த அருட்பணிக்கு உதவுவாராக!

அருள்திரு. J. **ஞானதாஸ்**

11-08-2019

# திருமணம் : அன்பின் நீடித்த வாழ்வு

**MARRIAGE : LASTING LIFE OF LOVE**

தொநூ. 29:1-20 எபி. 13:1-6
திபா. 128 மத். 19:3-9

**“திருமணத்தை அனைவரும் உயர்வாக மதியுங்கள்.”** (எபி. 13:4)

வாழ்க்கை ஓட்டத்தில் திருமணம் மிகமிக முக்கியமான நிகழ்வு ஆகும். திருமணம் என்பது கடவுளால் ஏற்படுத்தப்பட்ட ஒரு புனிதமான சமூக அமைப்பு ஆகும். இது மனுகுலத்திற்கு மட்டுமே சொந்தமான வார்த்தை. ரோமன் கத்தோலிக்க திருச்சபையினர் திருமணத்தை சாக்கிரமெந்தாகக் கொள்கிறார்கள்.

திருமணம் என்பது வெறும் விளையாட்டன்று. ஒவ்வோரு பாதியாய் வளர்ந்து வரும் இரண்டு உயிர்கள் ஒன்றி முழுத்தன்மையுடைய அவைகளை அன்புக் கயிற்றால் பிணைப்பது திருமணம். இது இருமையைக் கொடுத்து முழுமை வழங்குகிறது. திருமணம் என்பது ஒரு பொழுது தோன்றி, மற்றொரு பொழுது அழிவதன்று. அஃது இம்மை மறுமை வரைத் தொடர்ந்து நிற்பது ஆகும். இதைத் தான் “ஆயிரங்காலத்துப் பயிர்” என்று முன்னோர்கள் கூறினார்கள்.

விலங்குகள் மற்றும் பறவைகள் கூட்டம் கூட்டமாக வாழும். ஆனால் மனிதர்கள் மட்டுமே குடும்பமாக வாழ்கின்றனர். இந்த குடும்ப உறவுக்கு அடித்தளம் அமைத்துத் தருவது திருமணம். தத்துவ ஞானி சாக்ரட்டீஸ் அவர்கள் திருமணம் செய்யுங்கள். மனைவியிடம் அன்பாயிருந்தால் கவிஞன் இல்லாவிட்டல் தத்துவ ஞானி என்றார். திருமணம் அன்பின் நீடித்த வாழ்வு. இன்று இன்பத்தின் கருவூலமான இல்லறங்கள் நீதி மன்றங்களில் வாதிட்டு கொண்டிருக்கின்றன. இதற்கு அன்பின் செயல்பாடுகள் முறையாக அமையாததே காரணம் ஆகும்.

திருமணம் அன்பின் நீடித்த வாழ்வாக அமையவேண்டுமென்றால் நாம் புரிந்து கொள்ளவேண்டிய திருமண பந்தத்தின் (உறவில்) தன்மைகளைக் குறித்து தியானிப்போம்.

### *1. இறைவனால் ஏற்படுத்தப்பெற்ற பந்தம்* : (மத். 19 :4)

“படைப்பின் தொடக்கத்திலேயே கடவுள் ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்”(மத்.19:4)

திருமணம் என்பது இறைவனால் ஏற்படுத்தப்பட்ட பந்தம். எனவே தான் இயேசுக்கிறிஸ்து சொல்லும் போது படைப்பின் தொடக்கத்திலேயே கடவுள் ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார் என்றார்.

“மனிதன் தனியாயிருப்பது நல்லதன்று; அவனுக்கு தகுந்த துணையை உருவாக்குவேன்” (தொ.நூ. 2:18) என்று கடவுள் குறிப்பிடுகிறார். அதாவது கடவுள் மனிதனுக்கு ஏதாவது ஒரு துணையை உருவாக்கினார். “தகுந்த துணை” எனும் போது ஒருவருக்கொருவர் தகுந்த துணையாக செயல்படும் நிலையை அது குறிப்பிடுகிறது.

ஆபிரகாமின் வேலைக்காரர் ஈசாக்கிற்கு துணை தேடிச் சென்றபோது ரெபேக்காளின் சகோதரர்கள் லாபான் பற்றும் பெத்துவேல் இருவரும் இணைந்து “இச்செயல் ஆண்டவரால் நிகழ்ந்துள்ளது”(தொ.நூ. 24: 50) என்று கூறினார்கள். ஆம், திருமணம் கடவுளால் நிகழ வேண்டும். ஆனால் இன்று திருமணங்கள் கட்டாயத்தின் பேரில் தரகரால் நடைபெறுகிறது. திருமணத்தில் கடவுளின் செயல்பாடு மிகமிக முக்கியம் மனிதனுக்கு (ஆதாமுக்கு) ஆழ்ந்த உறக்கம் வரச் செய்து விலா எலும்பு ஒன்றை எடுத்து அதை ஒரு பெண்ணாக உருவாக்கி மனிதனுக்கு கொடுத்தார் (தொ.நூ. 2:21,22). எனவே திருமணத்தில் அவசரம் கூடாது, அங்கலாய்ப்பு கூடாது. அமைதி வேண்டும். இளமையின் அவசரம் கடவுளை செயல்பட அனுமதிப்பதில்லை. திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது என்பார்கள். ஆனால் இன்று திருமணங்கள் ரொக்கத்தில் நிச்சயிக்கப்படுகிறன. ரொக்கமில்லாமல் தடைபட்ட திருமணங்கள் தான் எத்தனை? எத்தனை? கடவுளுக்கு சித்தமில்லையென்று நா கூசாமல் கூறிவிடுகின்றோம். இதனால் திருமணம் அன்பின் நீடித்த வாழ்வாக அமைந்திட வாய்ப்பு ஏற்படுத்த மறுக்கிறோம். திருமணம் என்பது இறைவனால் ஏற்படுத்தப்படும் பந்தம் என்ற உணர்வுடன் செயல்படும் போது திருமணம் அன்பின் நீடித்த வாழ்வாக அமையும்.

### *2. இருமனம் இணைவதால் ஏற்படும் பந்தம் :*

“அவர்கள் இருவர் அல்ல; ஒரே உடல்.” (மத். 19:6)

இறைச் சாயலில் படைக்கப்பட்ட மனிதன் தனிமையாக இருப்பது நல்லதல்ல என்று கடவுள் கண்டார். எனவே, தகுந்த துணையை உருவாக்குவதற்கு விரும்பினார் தொ.நூ. 2:18). ஆகவே கடவுள் மனிதனுக்கு ஆழ்ந்த உறக்கம் வரச் செய்து, அவன் உறங்கும் பொழுது அவன் விலா எலும்பு ஒன்றை எடுத்தார். விலா எலும்பு எடுக்கப்பட்டபோது மனிதனிடம் இறைச் சாயலின் முழுமை இல்லை. ஆனால் எலும்பிலிருந்து ஒரு பெண்

உருவாக்கப்பட்ட போது முழுமை ஏற்பட்டது. இதனால் ஆதாம் "என் எலும்பின் எலும்பும் சதையின் சதையும் ஆனவள்." (தொ.நூ.2:23) என்றார். எலும்பு மனிதருக்கு வடிவம் தருவது. சதை (மாமிசம்) அழகு தருவது. எனவே, எலும்பும் சதையும் இணைந்தால் தான் முழுமையடைகிறது. "ஜாடிக்கேற்ற மூடி" என்றார்கள்.

ஆண், பெண் இருவரும் சமமானவர்கள். எனவே தான் பெண் விலாவின் எலும்பினால் படைக்கப்பட்டார். இணைந்து ஒரே மனமாக வாழ வேண்டியவர்கள். எனவே தான் இயேசுக் கிறிஸ்து அவர்கள் இருவர் அல்ல. ஒரே உடல் என்றார் (மத். 19:6; மாற்.10:8).

இன்றைய திருமணங்கள் எப்படி?

இரு குடும்பங்கள் இணைக்கப்படுகின்றன. ஆனால் இரு மனங்கள் இணைகின்றனவா? பணத்தோடு பணம் இணைக்கப்படுகின்றன. ஆஸ்தியோடு ஆஸ்தி இணைக்கப்படுகின்றன. ஆனால் இருமனங்கள் இணைகின்றனவா? மனமொத்து போகாத கட்டாயத் திருமணத்தால் சிதைந்து போன குடும்பங்கள் எத்தனை? எத்தனை?

இருமனங்கள் இணைய அன்பு இன்றியமையாத தேவை. அன்பு இல்லாத இடத்தில் இருமனங்கள் இணைவது எப்படி? அன்பு சந்தேகத்தை ஓட்டுகிறது. அன்பு தற்புகழ்ச்சியைஅகற்றுகிறது. அன்பு ஆறுதல் கொடுக்கிறது. ஈசாக்கு தன் மனைவி ரெபேக்காள் மீது அன்பு வைத்தார். இது அவருக்கு ஆறுதல் கொடுத்தது (தொ.நூ. 24:67)

எனவே நாம் குடும்ப வாழ்வில் அன்பினால் பிணைந்து, இருமனம் இணைந்த பந்தத்துடன் வாழ்ந்து இறை ஆசி பெறுவோம்.

### *3. இறுதிவரை பிரியாதிருக்க வேண்டிய பந்தம்* :

"கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்." (மத். 19: 6)

திருமணம் அன்பின் நீடித்த வாழ்வாக இருக்க வேண்டுமானால் கடவுள் நம்மை இணைத்திருக்கிறார். எனவே வாழ்வின் நிறைவு வரையிலும் பிரியாதிருக்க வேண்டும் என்ற சிந்தை இருத்தல் அவசியம். எனவே தான் இயேசு கிறிஸ்து கடவுள் இணைத்ததை மனிதர் பிரியாதிருக்கட்டும் (மத். 19: 6; மாற். 10:9) என்றார். நன்மை -தீமை, சுகம் -சுகவீனம், வாழ்வு -தாழ்வு போன்ற எச்சூழல்களிலும் ஒன்றாயிருப்பதே கிறிஸ்தவ திருமணத்தின் உறுதிப்பாடு. ஆனால் இன்று பெருகி வரும் மண முறிவுகள் திருமணத்தை, திருமணம் என்னும் நியமத்தை கேலிக் கூத்தாக மாற்றி விடுகிறது. மணமுறிவை நான் வெறுக்கிறேன் (மலா. 2:16) என்று ஆண்டவர் சொல்வதாக இறைவாக்கினர் மலாக்கி கூறுகின்றார்.

ஒரு முறை பரிசேயர்கள் இயேசுக்கிறிஸ்துவை சோதிக்கும் நோக்குடன் ஒருவர் தன் மனைவியை எக்காரணத்தையாவது காட்டி விலகிவிடுவது முறையா? மணவிலக்கு சான்றிதழைக் கொடுத்து மனைவியை தள்ளி விடலாம் என்று மோசே அனுமதியளித்துள்ளாரே ஏன்? என்று கேட்டனர். உடனே இயேசுக் கிறிஸ்து உங்கள் கடின உள்ளத்தின் பொருட்டே உங்கள் மனைவியரை விலக்கி விடலாம் என்று மோசே உங்களுக்கு அனுமதியளித்தார் என்று கூறி இறுதி வரை பிரியாதிருப்பதை விளக்கி முற்றுப்புள்ளி வைத்தார் இயேசுக் கிறிஸ்து (மத். 19:3-9)

தூய பவுல் திருமணமானவர்களுக்கு கட்டளையாகச் சொல்லும் போது மனைவி கணவரிடமிருந்து பிரிந்து வாழக்கூடாது. கணவரும் மனைவியை விலக்கி விடக்கூடாது என்றார் (1கொரி. 7:10,11). இன்று ஏன் மண முறிவு? தம்பதியரிடையே சரியான புரிந்து கொள்ளுதல், விட்டுக் கொடுக்கும் தன்மை போன்றவை இல்லாததே காரணம் ஆகும். விட்டுக் கொடுக்கும் தன்மை இருந்தால் குடும்பத்தில் பிரிவு இல்லை. ஆதாம் தனக்கு ஏற்ற துணையைப் பெற்றுக் கொள்ளும் முன் தனது விலா எலும்பை இழந்தார். ஒன்றை இழந்து துணையைப் பெற்றுக் கொண்டார்.

இன்று நாம் எதையும் இழக்க ஆயத்தமாயில்லை; இன்னும் வேண்டும் என்ற பேராசையே பெருகி நிற்கிறது. இதனால் அன்பின் நீடித்த வாழ்வை இழந்து போகிறோம். எனவே தேவையற்ற பிடிவாதம், கௌரவம், பேராசை இவைகளை விட்டுவிட்டு திருமணத்தை உயர்வாக மதித்து இல்லறத்தை நல்லறமாக நடத்திச் செல்வோம்.

அன்பானவர்களே! திருமணத்தை அனைவரும் உயர்வாக மதியுங்கள். மணவறைப் படுக்கை மாசுறாமல் இருக்கட்டும் (எபி. 13:4) என்று திருமறை சொல்லுகிறது. எனவே திருமணத்தை உயர்வாக மதித்து திருமண பந்தம் இறைவனால் ஏற்படுத்தப்பட்டது. இருமனங்கள் இணைவதால் ஏற்படுகிறது. இது இறுதிவரை பிரியாதிருக்க வேண்டிய பந்தம் என்பதை உணர்ந்து வாழ்வோம். திருமணம் அன்பின் நீடித்த வாழ்வாக இருக்கட்டும்.

அருள்திரு. R.**டேவிட் ஜெபசிங்**

## முடிவெடுப்பதில் பங்கேற்பு

## PARTICIPATORY DECISION MAKING

விப. 18:13-27 தி.பா. 15:22-29

திபா. 2 லூக். 20:20-36

**“சிறிய காரியங்களில் அவர்களே நீதி வழங்கினர்”.** (விப. 18:26)

நம் இந்திய நாடு ஆங்கிலேயரின் ஆதிக்கத்தில் இருந்தபோது அடிமை வாழ்வை விரும்பாத நம் முன்னோர் அடிமைத்தனத்திற்கு எதிராய் பல போராட்டங்களை நடத்தினார்கள். அதன் விளைவால் நாமும் நம் நாடும் ஆங்கிலேயரின் ஆதிக்கத்திலிருந்து 1947 ஆகஸ்டு 15 நாள் விடுதலைப் பெற்று இன்று சுதந்திர தினத்தைக் மகிழ்வோடு கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். சுதந்திரம் என்பது திருமறையிலும், வரலாற்றிலும் முக்கியமாகக் கொண்டாடப்படும் பேச்சு சொல். இஸ்ரயேல் மக்களும் எகிப்தில் அடிமைகளாக இருந்த காலக்கட்டத்தில், தங்கள் வாழ்வில் ஒரு சுதந்திரமான வாழ்வை அனுபவிக்கப் பிரயாசப்பட்டனர். அந்த சுதந்திரத்தை மக்கள் வாழ்வில் அனுபவிக்க வேண்டும் நோக்கில் மோசேயின் வழியாக கடவுள் மக்களை வழிநடத்தினார். பல முறை பார்வோனிடம் வழிபாடு செய்வதற்காக என் மக்களைப் போகவிடு என்ற வேண்டுகோளை விடுத்தது, ஒரு சுதந்திரமான வாழ்வை இஸ்ரயேல் மக்கள் அனுபவிக்க வேண்டும் என்பதற்காக தான்.

கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் சிரஸ் என்ற பேரரசர் மூன்று கண்டங்களின் அரசனாக இருந்தான். தான் கைப்பற்றிய நாடுகளில் அடிமைகள் இருப்பதை விரும்பவில்லை. இதனால் தான் எருசலேம் நகரம் திரும்பக்கட்டப்படவும், நெகேமியாவுக்கு எருசலேம் அலங்கத்தை கட்ட அதிகாரமும், ஆணையும் கொடுத்தார்.

மேலும் பிரெஞ்சு புரட்சியின் (1789-1799) போது, இப்புரட்சியின் கருத்துக்கள் சுதந்திரம் (Liberty), சமத்துவம் (Equality), சகோதரத்துவம் (Fraternity) என்ற சொற்களில் படைக்கப்பட்டது. நாட்டில் ஒவ்வொருவரும் சுதந்திரமான, சமமான தனிநபர்களாகவும், அதே வேளையில் ஒன்றாகக் கட்டப்பட்ட சகோதரர்களாகவும் இருக்க வேண்டும் என்பதுதான் இத்தாரக மந்திரத்தின் குறிக்கோள். மனித உரிமைக்காக போரடிய மார்ட்டின் லூதர் Jr “Let Freedom Ring” (சுதந்திரம் ஒலிக்கட்டும்) என்றே முழக்கமிடுவார்.

இந்திய சுதந்திரத்தை நாம் நினைக்கும் போது, நாம் பெற்ற சுதந்திரத்திற்கு பின் அநேக தியாகிகளின் அர்ப்பணிப்பு, வீர தியாகம் இவற்றை நினைவுக்கூருகிறோம். சுதந்திரத்தின் மூலம் குடியாட்சியைப் பெற்றோம், குடியாட்சி நமக்கு ஒவ்வொரு தீர்மானத்தை உருவாக்கிய போதும் மக்களின் தனித்திறமை மற்றும் மக்களின் பங்களிப்பை உணர முடிகிறது. பொதுவாக தீர்மானங்கள் அல்லது கொள்கைகளை உயர்பதவியிலிருப்பவர்கள் தான் செய்வார்கள். உயர் பொறுப்பிலுள்ளோர் கட்டளையிடுவதை கீழ்மக்கள் கடைப்பிடிக்க வேண்டும், அவர்களை ஒரு பொருளாக தான் பார்ப்பார்கள். எனவே இக்கால சூழலில் எந்த வேறுபாடின்றி கொள்கைகளை உருவாக்குவதில் அனைவரின் பங்களிப்பு தேவை என்பது எல்லோராலும் எதிர்பார்க்கப்படுகிறது. இதனைத் திருமறையின் வழியாய் சிந்திப்போம்.

***1. வழிநடத்தப்படுவதற்கு முடிவெடுத்தல் :*** (யாத். 18:13-27)

இஸ்ரயேல் மக்களை வழிநடத்தி வந்த மோசேயிடம், அவரது மாமனார் எத்திரோ முடிவெடுக்கும் திறனை கற்பித்துக் கொடுத்தார். மோசே நீதி வழங்கிக் கொண்டிருந்ததை உற்று கவனித்த எத்திரோ, பல நுணுக்கங்களைக் கற்ப்பித்துக் கொடுத்து சிறந்த தலைமைத்துவத்திற்கு நேராக நடத்துகிறார். அதாவது மோசேயின் மாமனாரின் அறிவுரைப்படி, கடவுளுக்கு பயப்படும் மற்றும் தனித்திறமைகள் உள்ளவர்களை 1000க்கும் , 100க்கும், 50க்கும், 10 க்கும் தலைவர்களாக நியமித்தான். இந்த பகுதியில் குழுவாக வேலைச் செய்தல் மற்றும் குழு இயக்கத்தைக் காணமுடிகிறது. மோசே தீர்வு காண்பதில் நெருக்கடியான காரியங்களில் ஆலோசனை வழங்கி வந்தான். இதனால் மோசே மக்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்தான். அதே நேரத்தில் மக்கள் தனியொருத் தலைமைத்துவத்தை பின்தொடர்வதினால் ஏற்படும் கடினங்கள் இல்லாமல் இருந்தது.

***2. வாழ்வைக்காப்பதற்கு முடிவெடுத்தல் :*** (திபா.15:22-29)

எருசலேம் சங்கத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை இந்தப் பகுதியில் காணமுடிகிறது. அதாவது மக்களிடையே காணப்பட்ட விரும்பத்தகாத நிகழ்வுகளைக் குறித்து பவுலார் குறிப்பிடுகின்றார். மேசேயின் சட்டத்தை அறிவிப்போரும், அதை வாசித்து வந்த சூழலிலும் மக்களின் வாழ்வின் நிலைப்பாடுகள் எத்தகையதாக இருந்தது என காணமுடிகிறது.

மக்களின் வாழ்வு சூழல்கள் மாறி வரும் இக்கால நிலையில் வாழ்வைக் குறித்த முடிவெடுக்க வேண்டிய நிலை ஒவ்வொரு மனிதனிடமும் எதிர்பார்க்கப்படுகிறது. காரணம், படைப்பாளரை மறந்து

விட்டு படைப்பை தொழும் சமூகத்தில் நாம் வாழந்து வருகிறோம். எனவே நம் வாழ்வைக் காப்பதில் உறுதியாகயிருந்து சிறப்புறு முடிவுகளை நம் வாழ்வில் எடுப்போம்.

**3. வஞ்சனையில்லா முடிவெடுத்தல் :** (லூக். 20:20-26)

இயேசு கிறிஸ்துவைக் குற்றப்படுத்துவதற்கு வஞ்சனையோடு பல கேள்விகள் எழுப்பட்டது. வஞ்சனை நிறைந்த கேள்விகளுக்கு இயேசு சூசகமாகப் பதிலாளித்தார். வஞ்சனையோடு இயேசுவைக் கொலைச் செய்ய வகைத்தேடியவர்களுக்கோ வாயடைத்து நிற்குமளவிற்கு வியப்பு நிறைந்தாய் அமைந்தது. காரணம் வஞ்சனை நிறைந்த முடிவுக்காக காத்துக் கொண்டு நின்றனர். வஞ்சனையோடு கூடிய முடிவுகள் பல வேளைகளில் ஆபத்தாகவே முடிகிறது. இந்த உலகம் வஞ்சனையுடைதாயும், மக்களும் வஞ்சக எண்ணத்தோடு வாழும் சூழலில் எடுக்கும் முடிவுகளின் தன்மையை மறு ஆய்வு செய்வது அவசியம். இல்லையேல் நேர்மையற்ற வாழ்வையே தொடர முடியும். இயேசு யாரையும் வஞ்சிக்காதவர், யாரும் வஞ்சிக்கப்படக்கூடாது என்ற உயரிய நோக்கோடு நம்மில் கரிசனை வைக்கிறார்.

ஆனால் நம் வாழ்வின் நிலை...? செருக்கு, ஆணவம், மறுதலிப்பு போன்றவற்றை வாழ்வில் கொண்டிருக்கிறோமா? அல்லது சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவமிக்க வாழ்வை வெளிப்படுத்துகிறோமா? என்பதை ஆய்ந்துப் பார்க்க வேண்டும். வழிநடத்தப்பட, வாழ்வைக் காக்க, வஞ்சனையில்லா வாழ்வை வாழ சிறந்த முடிவுகளை எடுத்து சுதந்திர பறவைகளாய் இப்பாரில் சிறகடித்து பறந்து இறைநாமத்தை உயர்த்துவோம்.

திரு. **J. பிரபின் செல்வமணி**

18-08-2019

# திருமுழுக்கு : விண்ணிலிருந்து பிறத்தல்

**BAPTISM : BORN FROM ABOVE**

தொநூ. 8:1-14 கொலோ. 3:1-11
திபா. 25 யோவா. 3:1-8

**“நீங்கள் கிறிஸ்துவோடு உயிர் பெற்று எழுந்தவர்களானால் மேலுலகு சார்ந்தவற்றை நாடுங்கள்.”** (கொலோ. 3:1)

சீர்திருத்த திருச்சபையின் இரு திருவருட்சாதனங்களில் ஒன்றான திருமுழுக்கு இன்றைய கிறிஸ்தவ உலகில் விவாதப் பொருளாக மாறியுள்ளது. சில கிறிஸ்தவத் திருச்சபை உட்பிரிவுகள் திருமுழுக்கிற்கு முக்கியத்துவம் கொடுத்து திருமுழுக்கு வெறும் வெளிச்சடங்காக கருதப்பட்டு இதன் ஆன்மீகப் பொருளை உணராமல் இருப்பது இதற்கு காரணம். பாவம் மன்னிக்கப்படுதலும் அதனால் புதுவாழ்வுக்கு உட்படுதலும் திருமுழுக்கின் அடிப்படையாகும். திருமுழுக்கினால் கிறிஸ்துவின் சாவிலும் உயிர்ப்பிலும் பங்குபெறுகிறோம் என்ற அடிப்படை நம்பிக்கை நமக்கு தேவை. மேலும் திருமுழுக்கு பெற்ற நாம் இவ்வுலகின் விருப்பத்திற்கு இணங்க வாழ வேண்டியவர்களல்ல, விண்ணுலகு சார்ந்தவர்களாக வாழவேண்டியவர்கள் என்பதுதான் திருமுழுக்கினால் எதிர்பார்க்கின்ற வாழ்வாகும். திருமுழுக்கு உணர்த்தும் உண்மைகளை திருமறைவழி தியானிப்போம்.

## *1. திருமுழுக்கு : கிறிஸ்துவோடு இணைதல்* : (கொலோ. 3:11)

கிறிஸ்துவின் மீது கொள்ளும் விசுவாசத்தால் கிறிஸ்தவன் கிறிஸ்துவோடு இணைக்கப்படுகிறான். கிறிஸ்துவுக்குள் ஒன்றாகிறான். அவர் வழியாக அவர் கடவுளின் மகனாக மாறுகிறான். கிறிஸ்துவுக்குள் திருமுழுக்கு என்பது நீரால் கழுவும் வெறும் சடங்கல்ல. அதன் விளைவாக ஓர் ஆன்மாவில் ஏற்படும் மாற்றத்தைக் குறிக்கும். இதனால் இனி தங்களுக்கு அல்ல கிறிஸ்துவுக்கு சொந்தமானவர்கள் (1கொரி. 6:9). திருமுழுக்கு கிறிஸ்துவுக்கும் கிறிஸ்தவனுக்கும் உண்மையான புது உறவை ஏற்படுத்துகிறது (உரோ. 6:3-13). பழைய வேறுபாடுகளுக்கு இனி இடமில்லை. “ஏனெனில் நாம் யூதராயினும் கிரேக்கராயினும், அடிமைகளாயினும் உரிமைக் குடிமக்களாயினும் அனைவரும் ஒரே ஆவியால் திருமுழுக்குப்

பெற்றுள்ளோம்" (1கொரி. 12:13, கொலொ. 3:9,10). திருமுழுக்கு பெற்ற நாம் கிறிஸ்துவோடு இணைந்த அனுபவத்தோடு இவ்வுலகில் வாழவேண்டியவர்கள்.

### *2. திருமுழுக்கு : இறைவிருப்பத்தை நிறைவேற்றுதல்* :

(மத். 3:15)

இயேசு யோவானிடத்தில் திருமுழுக்கு பெற்றார் என்று ஒத்தமமை நற்செய்தியாளர்கள் கூறுகிறார்கள். மக்களின் பாவங்களை தன்மீது சுமந்தவராக இயேசு திருமுழுக்கு பெறுகிறார். துன்புறும் ஊழியன் இவரே என் அன்பார்ந்த மகன் இவரில் நான் பூரிப்படைகிறேன் என்ற குரல் விண்ணிலிருந்து ஒலித்தது. இதன் வழியாக தந்தையாகிய இறைவனார் உலகிற்கு அடையாளப்படுத்தப்பட்டு தூய ஆவியாரால் அருட்பொழிவு பெற்று தனது பணியைத் தொடங்கினார். இறைவிருப்பத்தை நிறைவேற்றுவதே தன் வாழ்வின் லட்சியம் என்பதை உணர்ந்த இயேசு அதுவே தன் உணவு (யோவா. 4:34) என்றும், தன் வாழ்வின் இலட்சியம் (யோவா. 6:38,39) என்றும் கூறுகிறார். மேலும் இறைவிருப்பத்தின் காரணமாக தான் துன்பப்பட வேண்டியிருந்தாலும், அதையும் மனமுவந்து ஏற்க முன் வருகிறார் (லூக். 22:34). இயேசுகிறிஸ்து திருமுழுக்கு பெற்றபோது தன்னையும் பாவிகளோடு அடையாளப்படுத்தி அவர்களோடு தானும் திருமுழுக்கை பெற்றுக் கொண்டார். 'கடவுளுக்கு ஏற்புடையவை அனைத்தையும் நாம் நிறைவேற்றுவது தான் முறை' என யோவானிடம் இயேசு கூறினார் (மத். 3:15). இறைவிருப்பத்தை தன் விருப்பமாக இயேசு ஏற்று செயல்படுத்தியதின் காரணமாகத்தான் கடவுளின் மகனாக அவரால் இருக்க முடிந்தது. எனவே திருமுழுக்கு பெற்ற அனைவரும் இறைவிருப்பத்தை நிறைவேற்ற வேண்டும்.

### *3. திருமுழுக்கு : புதுவாழ்விற்கான அடையாளம்* :

நோவா வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த மக்களின் தீய செயல்களால் உலகை அழிக்க கடவுள் திட்டம் கொண்டார். ஆனால் நேர்மையாளராக இருந்த நோவாவும், குடும்பமும் பாதுகாக்கப்பட்டது. ஆனால் பேதுரு தம் மடலில் தண்ணீர் வழியாக நோவாவும் குடும்பமும் காப்பாற்றப்பட்டது எனவும் குறிப்பிடுகிறார் (1பேதுரு 3:20,21). திருமுழுக்கின் வழியாக பாவ வாழ்வு கழுவப்பட்டு புதிய வாழ்விற்குள் மாற்றம் பெறுகின்றோம். திருமுழுக்கு பெற்றவர்கள் புதிய வாழ்வை தொடங்குகின்றனர். நீங்கள் திருமுழுக்குப் பெற்றபோது அவரோடு அடக்கம் செய்யப்பட்டீர்கள். சாவிலிருந்து அவரை உயிர்த்தெழச் செய்த கடவுளின் மீது கொண்டுள்ள நம்பிக்கையால் அவரோடு நீங்களும் உயிர் பெற்று எழுந்துள்ளீர்கள் என

பவுலடியார் கொலேசே திருச்சபைக்கு எழுதுகிறார் (கொலே. 2:12). திருமுழுக்கு கிறிஸ்துவோடு பாவத்துக்கு இறந்து கிறிஸ்துவோடு புது வாழ்விற்கு உயிர்த்தெழுவதாகும்.

திருமுழுக்கு பெற்றதின் வழியாக நாம் கிறிஸ்துவுக்கு உரியவர்களாகிறோம். "கிறிஸ்துவுக்கு உரியவர்கள் தங்கள் ஊனியல்பை அதன் இழி உணர்வுகளோடும் இச்சைகளோடும் சேர்த்து சிலுவையில் அறைந்துவிட்டனர்" (5:29) என பவுல் கலாத்திய திருச்சபைக்கு எழுதுகிறார். எனவே ஊனியல்புகளின் தன்மைகளை விட்டுவிட்டு கிறிஸ்துவுக்கு உரியவர்களாக புதுவாழ்வு வாழவேண்டும்.

கிறிஸ்தவர்களாக இவ்வுலகில் வாழும் போது நாம் பெற்ற திருமுழுக்கிற்கு சான்றுடையவர்களாக வாழவேண்டும். கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களாக பிறக்கின்றவர்களல்ல மாறாக உருவாக்கப்படுகின்றவர்கள் என தூய ஜெரோம் கூறுகிறார். (Chirstians are made, not born. St. Jerome) எனவே திருமுழுக்கு பெற்ற நாம் இவ்வுலகு சார்ந்தவர்களாக அல்ல விண்ணுலகு சார்ந்தவர்கள் என்ற சிந்தையோடு இறைமக்களாக இவ்வுலகில் வாழுவோம்.

அருள்திரு. **ரமேஷ் D. தாஸ்**

25-08-2019

## திருவிருந்து என்னும் திருவருள்சாதனம்

**SACRAMENT OF HOLY COMMUNION**

| | |
|---|---|
| விப. 12:1-14 | 1கொரி. 10:14-22 |
| திபா. 42 | லூக். 22:7-20 |

**“நாம் பாஸ்கா விருந்துண்ண நீங்கள் போய் ஏற்பாடு செய்யுங்கள்.”** லூக். 22:8(b)

St. Augustine நற்கருணையின் பெருமையை கீழ்கண்டவாறு குறிப்பிடுகிறார். “கடவுள் நிறைவான ஞானம் உடையவராக இருந்தும், தன்னுடைய அன்பை வெளிப்படுத்த நற்கருணையை ஏற்படுத்துவதைத் தவிர வேறு மேலான வழியை தன்னுடைய ஞானத்தால் கண்டறியவில்லை. கடவுள் எல்லா கொடைகளின் ஊற்றாக இருந்தும், நற்கருணையை விட மேலான விலைமதிப்புள்ள கொடையை அவரால் கண்டுபிடிக்க இயலவில்லை” கடவுள் எல்லாம் வல்லவராக இருந்தும், மனிதனுக்கு கொடுப்பதற்கு நற்கருணையை விட வேறு மேலான ஒன்றை தன் வல்லமையை பயன்படுத்தி அவரால் கண்டுபிடிக்க இயலவில்லை.

நற்கருணைதான் திருச்சபையைக் கட்டி எழுப்புகிறது. திருச்சபைதான் நற்கருணையைக் கொண்டாடுகிறது. தொடக்ககால திருச்சபையில் அப்பம் பிட்குதல் ஓர் இன்றியமையாத கூறாக திகழ்ந்தது. தி.பா.42. புனித அகுஸ்தினார் நற்கருணை குறித்து சொல்லும் போது கடவுள் நிறைவான ஞானம் உடையவராய் இருந்தும் தம்முடைய அன்பை வெளிப்படுத்த நற்கருணையைக் கொடையாக திருச்சபைக்கு கொடுத்தார். முதல் 3-ஆம் நூற்றாண்டுகளில் அருளடையாளமாகிய திருவிருந்தைக் குறிக்க மறைபொருள் என்னும் கிரேக்கச் சொல் பயன்படுத்தப்பட்டது. இது இறைவனை மட்டுமல்லாது இறை ஞானம், இறைசித்தம், இறை திட்டம் ஆகியவற்றைக் குறித்தது (1கொரி. 2:7-12, கொலோ. 1:2, எபே. 1:9,10). மறைபொருளுக்கு இணையாக சாக்கிரமெந்து என்னும் இலத்தீன் சொல் புனித அகுஸ்தினரால் அறிமுகப்படுத்தப்பட்டது.

திருச்சபையின் இருதயம் எங்கே இருக்கிறது? 4-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில்வட ஆப்பிரிக்காவில் அபித்தீனியா என்ற நகரில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் ஞாயிறு தோறும் ஒன்று கூடி நற்கருணைக் கொண்டாட்டத்தை நடத்தக்கூடாது என்று தடை செய்யப்பட்டபோது அவர்கள் கூறியது “நற்கருணை இல்லாமல் எங்களால் வாழமுடியாது”

எனவே "நற்கருணையே திருச்சபையின் இருதயம்" என்றனர். நற்கருணையைத் தவிர வேறு செல்வத்தை இறைவன் நமக்கு தரவில்லை. இந்த திருவிருந்து தரும் 3 கொடைகளைப்பற்றி ஆழாமாக சிந்திப்போம்.

***1. வாழ்வுக்கான ஒன்று (உணவு) :*** (லூக். 22:15)

Holy communion - The Substance of life giving

"உங்களோடு இந்த உணவை உண்ண மிகமிக ஆவலாய் இருக்கிறேன்" (லூக். 22:15).

ஒருமுறை ஒரு கிராம பள்ளியின் வெளிப்புறம் இருந்த கரும்பலகையில் வாழ்வு என்பது என்ன? விளையாட்டாக எழுதி சென்றார் ஒருவர். துன்பத்தின் வழிபயணித்த பெரியவர், "வாழ்க்கை போராடும் போர்க்களம்" என எழுதி வைத்தார். நடுத்தர வயதுக்காரர், "ஒரு சராசரி மனிதன் மீது இறைவன் ரசிக்கும் விளையாட்டு" எனவும், ஒரு குடும்பத்தலைவி, "அழுகையும் சிரிப்புபம் மாறிமாறி வரும் ஒரு மெகா தொடர்", வேலை தேடின இளைஞன், "நின்று நிதானித்து செயல்பட நேரமில்லாமல் பரபரப்பாக இயங்கும் மின்சார ரயில்", இறுதியாக, பள்ளிச் சிறுவன், "வாழ்வு என்பது அறிவை சோதித்து இறைவன் நாள்தோறும் வைக்கும் தேர்வு" என எழுதினான்.

இவ்வாறு நிறைவின்றி, நிம்மதியின்றி, மகிழ்ச்சியின்றி வாழும் மனித குலத்திற்கு மருந்தாக மாபெரும் விருந்தை இறைவன் தருகிறார். இங்கு விருந்து என்பது உடல் சார்ந்த அல்லது நாவு சார்ந்த மகிழ்ச்சியன்று. மாறாக, இறைவன் வழங்கும் முழுமையான வாழ்வைச் சுட்டிக்காட்டுகிறது. புதிய ஏற்பாட்டில் மாபெரும் விருந்தாகிய நற்கருணை சுட்டிக்காட்டும் உண்மையும் இது தான். இறைமகன் இயேசு தன்னையே நற்கருணையில் வழங்கியதின் நோக்கம் நாம் அனைவரும் அவ்வாழ்வை நிறைவாகப் பெற வேண்டும். இயேசு எனது சதையை உண்டு இரத்தத்தை குடித்தாலொழிய நீங்கள் வாழ்வடைய மாட்டீர்கள் என்றார்.

இயேசு தம் பணி வாழ்வின் போது 3 பஸ்கா விழாக்கள் கொண்டாடினதாக நற்செய்திகள் கூறுகின்றன. முதல் பாஸ்காவின் போது எருசலேம் கோயிலை தூய்மைப்படுத்துகிறார் (லூக். 2:41). இரண்டாவது பஸ்கா பற்றி 4 நற்செய்தி நூல்களும் கூறுகின்றன. மாற். 6:22-44, 8:1-9, மத். 14:3-21, லூக். 9:10-17, யோவா. 6:4. இந்த விழாக் காலத்தில் இயேசு பெரும் திரளான மக்களுக்குப் போதித்தார். 5 அப்பம், 2 மீன்கள் பகிர்ந்து 5000 -க்கு மேற்பட்டவரை போஷித்தார். வாழ்வுதரும் பஸ்கா உணவு நானே என நற்கருணைப் பற்றி நீண்ட உரையைத் தருகிறார்.

இயேசு இறப்பதற்கு முன் சீடருடன் உண்ட விருந்து இறுதிப் பாஸ்காவாகும். பிரியாவிடை விருந்தாக (Farewel Feast) இவ்உலகில் உண்ணும் இறுதி விருந்தாக இதை உணர்கிறார். உங்களோடு இந்த உணவை உண்ண ஆவலாய் இருக்கிறேன் (லூக். 22:15).

காற்றுக்கு அடுத்தபடியாக உயிர் வாழ உணவும் நீரும் தேவை. உயிரற்ற உணவை உட்கொண்டாலும் உடலில் சென்று அது உயிரளிக்க வல்லதாக, வாழவைக்கக் கூடியதாக மாறுகிறது. உணவு உட்கொள்ளாவிட்டால் உடலின் செல்கள் இறக்க ஆரம்பிக்கும். உடலை தூய்மைபடுத்தி புத்துணர்ச்சி தர நீர் அவசியம். உணவும், நீரும் உயிர்வாழ தேவையானது போல நமது ஆன்மா வாழ்வு பெற இயேசுவின் உடலாகிய நற்கருணை நம் ஆன்மீக வாழ்விற்கு சக்தியும், வளர்ச்சியும் கொடுக்கவல்லது.

சாதாரண உணவு வாழ்நாளின் எண்ணிக்கைகளைக் கூட்டுகிறது. நற்கருணை ஒருபடி மேலே சென்று நமக்கு நிலைவாழ்வைப் பெற்றுத்தருகிறது யோவா. 6:54. எகிப்தில் எந்தெந்த வீடுகளிலெல்லாம் இரத்தம் பூசப்பட்டதோ அங்கு அழிப்பவன் உள்ளே செல்ல முடியவில்லை யாத். 12:23. இயேசுவின் இரத்தத்தால் கழுவும்போது எந்த சக்தியும் நம்மை தீண்டுவதில்லை. அவரது உடலை உண்ணும் போது திடம் அடைகிறோம். இரத்தத்தைப் பருகும் போது பாவங்களிலிருந்து கழுவப்படுவோம்.

எல்லா விருந்திலும் விருந்து கொடுப்பவர் ஒருவர், அந்த விருந்து இன்னொருவருக்காக அமையும். இங்கு விருந்து கொடுப்பவர் அவரே விருந்தாகவும் மாறுகிறார் யோவா. 6:53.

***2. உறவைத் தரும் ஒன்று (உணவு) :*** லூக். 22:20(b)

Holy communion - The Substance of brother hood

“இந்தக் கிண்ணம் உங்களுக்காக சிந்தப்படுகிற எனது ரத்தத்தால் நிலைபடுத்தப்படும் புதிய உடன்படிக்கை” (லூக். 22:20(b).

இயேசு தனது உடலை உணவாக கொடுத்ததின் மூலமாக உடைக்கப்பட்ட உறவு மீண்டும் சரிசெய்யப்படுகிறது. இயேசு என்ற பாவ நிவாரணபலி நியாயப்பிரமாணத்தில் சொல்லப்பட்ட பலி. இந்த பலியின் வரலாறு சீனாய் மலையில் தொடங்கியது. பலியானது ஆட்டுக்குட்டி. ஆட்டுக்குட்டியின் இரத்தம் தெளிக்கப்பட்டது. ஆட்டுக்குட்டியின் இரத்தம் இஸ்ரவேலின் மீட்புக்கு முக்கியமானது. உடன்படிக்கையின் உறவு பதிவு செய்யப்பட்டது. யாத். 24. சீனாய் மலை உடன்படிக்கை இஸ்ரவேல்

மக்களோடு மட்டும் செய்யப்பட்டது. கல்வாரிமலை உடன்படிக்கை உறவு உலக மக்கள் அனைவரோடும் செய்யப்படும் யோவா. 3:16. விசுவாசிக்கிறவர்கள் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். கடவுள் மனிதரோடு கொள்ளும் உறவு உடன்படிக்கை அடிப்படையில் அமைகிறது. திருமறை முழுவதிலும் உடன்படிக்கையை இறைமக்கள் மீறுவதையும், கடவுள் அனாதி அன்பால் அவர்களை சேர்த்துக் கொள்வதையும் காணலாம். நாம் கர்த்தருடைய திருவிருந்தில் பங்கேற்கும் போது உள்ளத்தில் விசுவாசித்து பங்கேற்க வேண்டும். திருவிருந்தின் வழி கடவுளோடு உடன்படிக்கை செய்கிறோம். அவருடைய இரத்தத்தால் உடன்படிக்கை முத்திரையிடுகிறார். அந்த இரத்தத்தையே பானம் பண்ண அனுமதிக்கிறார். இந்த ஆழமான இரத்த உறவு கடவுளிடம் மனப்பூர்வமாக அன்பு கூர ஏவுகிறது.

சீனாய்மலை தோல்வியுற்ற போது கல்வாரிமலை நம்மை அன்புகூரும் மக்களாக மாற்றியது. என் இரத்தத்தைக் குடிப்போர் என்னோடே இணைந்திருப்பார். நானும் அவர்களோடு இணைந்திருப்பேன். கடவுள்- மனிதன், நன்மை- தீமை, உயர்வு- தாழ்வு, நல்லவர்- தீயவர், உயர்ந்தவர்- தாழ்ந்தவர், ஆண்- பெண், அடிமை-எஜமான் என்ற ஏற்றத் தாழ்வுகளை திருவிருந்து ஐக்கியத்திற்குள் இணைகிறது. இயேசுவின் சீடர்கள் பல குணநலன்களுடையவர்கள் சந்தேககுணம், சாந்தகுணம், கோபகுணம், தன்னலம், பின் வாங்குபவர், இயேசுவைக் காட்டிக் கொடுப்பவர். இப்படிப்பட்டவர்கள் திருவிருந்தில் இருப்பதாக குறிப்பிடுகிறார். 3½ ஆண்டு யூதாசுடன் சீடர்கள் இருந்தும், உண்மை உறவை அல்லத்தட்டினர். திருவிருந்து ஐக்கியத்தில் வரும் உள்ளங்களை இயேசு அறிந்தார். 1 கொரி.10: 17-நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். கொரிந்து சபையில் பிரிவுகள், கட்சிகள், வாக்குவாதம், முந்துதல், இழிவுபடுத்துதல் ஐக்கியத்தின் கூடாது என்கிறார் பவுல். 1 கொரி.11:18-22 கிறிஸ்துவுடல் ஐக்கியமுடையவனுக்கு தீமையுடன் ஐக்கியம் கூடாது. இன்றைய மனிதர்கள் இறை உறவை விட்டுவிட்டு பொருள், செல்வம், வீண்புகழ்ச்சி தேடுகின்றனர். திருவிருந்தில் பங்கேற்போர் இரண்டு விதமான உறவுகளில் பிணைக்கப்படுகின்றனர். முதலாவது இறைவனோடும் பின் சமூக மனிதர்களோடும் இணைக்கப்படுகின்றனர்.

***3. நினைவுகூர்தலுக்கான ஒன்று :*** லூக். 22:19

Holy communion - The Substance of Memory

“எனது நினைவாகச் செய்யுங்கள்” (லூக். 22:19).

நாம் வாழும் சமூகத்தில் அன்பு காட்டி மறைந்தவர் சொல்லிய இறுதி வார்த்தைகளை நினைவு கூருகிறோம். நாம்

பயன்படுத்தும் பொருட்களிலும், சந்திக்கும் சூழலிலும் அவர்கள் நினைவுகள் நம் நெஞ்சை மறப்பதில்லை. மற்றும் பல இன்பமானவைகள், துன்பமானவைகள், பழிவாங்குதல் கடந்தகாலம், உதவி செய்தவர்கள், வழிகாட்டினவர்கள் இவையெல்லாம் மனித நினைவுகளின் உள்வட்டம்.

திருவிருந்து கல்வாரி பலியை நினைவுகூருகிறது. கிறிஸ்து தமது பலியால் முற்கால பலிகளை நிறைவு செய்தார். அவரே பஸ்கா செம்மறி 1கொரி. 5:7.

எகிப்திலிருந்து இஸ்ரவேலர் விடுதலை அடைந்தபோது விரைவாக புறப்பட்டனர். அப்பம் சுடுவதற்கான மாவு புளிப்பேற நேரம் போதவில்லை. இதன் நினைவாக விருந்தின் போது புளிக்காத அப்பங்களை உண்பார்கள். எகிப்தியரை தூதன் சங்கரித்தபோது செம்மறியின் இரத்தம் தெளிக்கப்பட்ட இஸ்ரவேலரின் இல்லங்களை சங்கரிக்காமல் தூதன் கடந்து சென்றார். இதன் நினைவாக செம்மறியின் மாமிசம் உண்பார்.

விருந்தில் பங்கேற்போர் தூய்மைப்படுத்தும் நோக்கில் மேசைமேல் வைக்கப்பட்டிருக்கும் தண்ணீரில் அனைவரும் கை கழுவுவர் (இது பாவ மன்னிப்புக்கான அடையாளம்). பச்சைக் காய்கறிகளை உப்பு நீரில் தோய்த்து உண்பர். ஏனெனில், எகிப்தில் தம் மூதாதையார் சிந்திய கண்ணீரை அனுபவித்த இன்னல்களை விருந்தின் துவக்கத்தில் நினைவுகூர இவ்வாறு செய்வர்.

கசப்புக் கீரையை இனிப்பாக்கும் களியில் தோய்த்து உண்பர். எகிப்தில் இஸ்ரயேலுக்கு பிறப்புரிமை இல்லை. அதிக பணிசுமை, கடவுளை தொழமுடியாது. கர்த்தர் துன்பத்தைப் பார்த்து கூக்குரலைக் கேட்டார் யாத். 18:8. எகிப்திய அடிமைத்தனத்திற்கு பின் மகிழ்ச்சியின் காலம் தோன்றியதை நினைவுபடுத்துவது 1கொரி. 11:24,25 அப்பமும் இரசமும் இயேசுவின் உடலாகவும் இரத்தமாகவும் நினைவுகூருகிறோம்.

இன்று இயந்திரங்களோடு பழகி மனிதனும் இயந்திரமாகி விட்டான். கணிணியோடு பழகிப்பழகி கணக்கு போட ஆரம்பித்துவிட்டான். பெற்றவர்களுடைய அன்பு உட்பட அனைத்துக்கும் விலைபேசுகிறான். பிறரது கடினங்களும், துன்பங்களும் தங்களைப் பாதிக்காத அளவிற்கு உணர்வற்ற ஜடமாக மாறிவிட்டான். வந்த வரலாற்றை நினைக்க மறந்து மனம் போல் வாழ்கிறான்.

இஸ்ரவேல் மக்களின் பழமையான பஸ்கா எகிப்தில் ஆரம்பித்தது. புதிய பஸ்கா எருசலேமில் இடம் பெற்றது. அடிமைத்தனத்திலிருந்து விடுதலைக்கு அடையாளமாக பழைய பஸ்கா நினைக்கப்பட்டது. பாவத்திலிருந்து விடுதலை தருவது புதிய பஸ்கா. பஸ்கா நின்று புசித்தனர் மாற். 14:18. திருவிருந்த அமர்ந்து புசித்தனர்.

பஸ்காவில் தீமையான எகிப்தியருக்கு இடமில்லை. தீமையின் சக்தியான யூதாசையும் புதிய பஸ்கா இணைத்தது. பஸ்காவில் ஒரு பழுதற்ற ஆட்டுக்குட்டி 10 பேருக்கு அடிக்கப்பட்டது. இயேசு முழு உலகத்திற்கு ஒரே ஆடாக தன்னைக் கொடுத்தார். பஸ்காவில் அடிமைத்தனம் நினைக்கப்படுகிறது. புதிய பஸ்காவில் கிறிஸ்து நினைக்கப்படுகிறார் 1 கொரி. 11:24.

வேலைக்காரரின் கால்களைக் கழுவுவது யூத சமூகம். எஜமானனே சீடர்களின் கால்களைக் கழுகும் வகையில் தாழ்த்தியது. மறுக்கும் பேதுரு மட்டுமல்ல; யூதாஸ் போன்றோரின் கால்களைக் கழுவி ஐக்கியமாவது மாற்றமுடைய ஒன்று.

அருள்திரு. அறிவர் T. **ராஜன்**

01-09-2019

## கல்வி : திருச்சபையின் திருப்பணி

### EDUCATION : AS A MINISTRY OF THE CHURCH

| | |
|---|---|
| நெகே. 8:1-12 | தி.ப. 18:24-28 |
| தி.பா. 119:41-48 | மத். 5:1-12 |

**"மக்களுக்கு புரியும்படி தெளிவாகவும், பொருளோடும் கடவுளின் திருச்சட்டத்தை உரக்க வாசித்தார்கள். ஆதலால் மக்களும் வாசிக்கப்பட்டதின் பொருளைப் புரிந்து கொண்டனர்."** (நெகே. 8:8)

வகுப்பறையில் மாணவர்கள் ஆரவாரத்துடன் காணப்பட்டனர். ஆசிரியர் வகுப்பறையில் நுழைந்து தன்னுடைய பாடத்தை கற்பிக்க தொடங்கினார். நிறைவில் மாணவர்களிடம் ஆசிரியர் ஓர் வெள்ளைக் காகிதத்தை எடுத்து தங்களுக்கு பிடித்தமான வரைபடத்தை வரையுங்கள் என்றார். மாணவர்கள் தங்களுக்கு பிடித்தமான வரைபடத்தை வரைந்தனர். ஆனால் ஒரு மாணவன் மட்டும் ஐந்து விரல் கொண்ட கையை வரைந்து வைத்திருந்தான். ஆசிரியர் ஏன் என்று வினவினார். மாணவன் சொன்னான் என்னுடைய ஆசிரியராகிய உங்களுடைய கையைத் தான் வரைந்தேன் என்றான். மீண்டும் ஆசிரியர் ஏன் என்னுடைய கையை வரைந்தாய் என்று கேட்டார். அந்த அங்கவீனமான மாணவர் சொன்னார், என்னுடைய வகுப்பறைக்கு வரவேண்டுமானால் நான் 32 படிகளை ஏறி வர வேண்டும். என்னால் தன்னம் தனியாக படியில் ஏறி வரமுடியாது. ஆதலால் காலையும் மாலையும் நீங்கள் தான் தங்களுடைய கரங்களால் என்னை விழுந்து விடாமல் பிடித்து உதவிட செய்கிறீர்கள். இல்லையெனில் என்னால் இப்பள்ளி கூடத்தில் கற்க முடியாது என்று கூறினான். ஆசிரியர் நெகிழ்ந்து போனார். மாணவர் தனக்கு உதவி செய்த கரத்தை மறக்கவில்லை. இறைவார்த்தை நம்மை அனுதினமும் நிறைவான வாழ்வுக்கு நேராய் வளர்த்துகிறது வாழ செய்கிறது.

நெகேமியா பாரசீகத் தலைநகரான சூசாவில் மன்னர் அர்த்த சாஸ்தாவுக்குப் பானப் பணிவிடைக்காரராக இருந்தார். சொந்த நாடு திரும்பிய இஸ்ரயேல் மக்களின் இழிநிலையைக் கண்டு வருத்தமுற்றார். சமய, சமூக சீர்திருத்தங்களை இஸ்ரயேல் மக்களிடையே செய்தார்.இவரது காலத்தில் சட்ட வல்லுநரான எஸ்ரா திருச்சட்டத்தை மக்கள் முன் வாசிக்க, மக்கள் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு உடன்படிக்கையின்படி வாழ

உறுதி பூண்டனர். நெகேமியா 8:1-12 வரையிலான இறைவசனத்தில் இறைக்கல்வி எப்படி முக்கியமானது என்பதனைப் பார்ப்போம்.

### *1. ஒன்றிக்க இழுத்துச் செல்லும் கல்வி* : (8:1)

நெகேமியா அலங்கத்தை 52 நாட்களில் நிறைவாய் நிவிர்த்தி செய்து மகிழ்வோடு இருக்கும் போது மக்களின் இழிநிலையான வாழ்வை எண்ணிப் பார்க்கிறார். நேர்த்தியாய், நிறைவாய், ஒன்றித்து, எதிர்த்து நிறைவாய் செய்த திருப்பணியில் ஒரு வெற்றிடம் இருந்தது அது என்னவெனில் ஆன்மீகம் அற்ற வாழ்வு. ஏனெனில் மக்கள் சிறைப்பட்டு விடுதலையான காலத்தில் மக்கள் இறைச் சட்டத்தை மறந்து வாழ்ந்த காலம். எனவே இறைப் போதகம் தேவைப்பட்டது.

வசனம் 2-ல் 7-ம் மாதம்முதல் நாள் என்றால் எக்காளத்தின் விருந்து நாள். அது கடந்து 10 நாட்களில் பிராயசித்தமான நாள். அது கடந்து 15 நாட்கள் தாண்டினால் கூடாரப் பண்டிகை. எனவே இந்த நாள் இறைவனோடு உள்ள உறவை புதுப்பித்துக் கொள்ள உன்னதமான நாள். எனவே எஸ்ரா 7-ம் மாதம் முதல் நாள் மக்களை கூடி வரச் செய்தார். ஒரு தனி மனிதனாக அனைத்து மக்களையும் கூடி வரச் செய்ய காரணம் எஸ்ரா 7:10-ல் எஸ்ரா திருச்சட்டத்தை கற்றுஅதன்படி நடப்பதிலும், சட்டத்தின் முறைமையை இஸ்ரயேல் மக்களுக்கு கற்றுக் கொடுப்பதிலும், தன்னை முழுமையாக பயன்படுத்திக் கொண்டார். இறைவனோடு நின்றார். இத்தகைய உறவுள்ள எஸ்ரா தான் பெற்ற இன்பத்தைப் பிறரும் கண்டடைய வேண்டும் என்று இறைமக்களை அழைத்தார். எஸ்ரா இப்பகுதியில் 8:1-12 வசனங்கள் 13 முறை இறைமக்களை கூடி வர அழைக்கிறார். அவர்களும் செவியை மடுத்து இறைசட்டத்தைக் கேட்க ஒன்று கூடினர். எஸ்ரா திருச்சட்டத்தை அறிந்து இறைமக்களும் அறிய வேண்டும் என்று அழைப்புவிடுக்கிறார். Walter Liefeld சொல்லும் போது "நல்ல தெளிவான பொருள் விளக்குகிற அருளுரை, இறைமக்களை கவராவிட்டாலும், இறைவனில் ஒன்றிக்க ஊக்கம் அளிக்கிறது." இறை கல்வி மக்களை இறைவனுக்கு நேராய் இழுக்க துணை புரிய வேண்டும்.

### *2. ஓங்கி வளர துணை செய்யும் கல்வி* : (8:2-3,5,8)

ஆடவர், பெண்டிர், புரிந்து கொள்ளும் ஆற்றல் உடைய சிறுவர் அடங்கிய சபை முன்னிலையில் திருநூலை கொண்டு வந்து வாசித்தார். இப்பகுதியில் குடும்பமாக இறைவார்த்தை கேட்க வந்தனர். எஸ்ராவும் திருநூலை உரக்க வாசித்தார். அதை எல்லா மக்களும் பார்த்தனர், செவிமடுத்தனர். எழுந்து நின்று மதிப்பு கொடுத்தனர். வ.8-ல் எஸ்ரா

திருநூலை துல்லியமாக, தெளிவாக, உணர்ச்சியாக மரியாதையுடன் வாசித்தார். இறைக் கல்வியை கற்றுக் கொடுப்பவருக்கு இது தேவை. வ .3-ல் காலை முதல் நண்பகல் வரை இறைவார்த்தை கேட்டார்கள். சுமார் 5-6 மணி நேரம் இறைபாதத்தில் அமர்ந்திருந்தனர். எஸ்ராவின் வாசித்தலில் நூல் அறிமுகம், விளக்கம், புத்திமதி அடங்கியிருந்தது. வ. 5-ல் எஸ்ரா மக்களைவிட உயரமான இடத்தில் நின்றதால் எல்லா மக்களும் பார்த்தனர். திருநூலை விளக்கமளிக்கின்றவர். எல்லாரையும் பார்க்கக்கூடியவர். எல்லாராலும் பார்க்கக் கூடியவர். தன்னை உயர்த்துவதற்காக அல்லமேடை, பிறரின் வாழ்வு துன்பங்களை பகிரும் மேடையாக இருத்தல் வேண்டும். வ. 8-ல் திருநூலை விளக்கம் அளிக்கும் போது காரணம், அனுபவம், பாரம்பரியம், வெளிப்பாடு இவ் நான்கும் சிறப்பாக விளக்கம் அளித்தல் வேண்டும். இயேசுநாதரும் லூக்கா 24:27-ல் மோசே முதல் இறைவாக்கினர் வரை தம்மைக் குறித்து சொல்லப்பட்டதை விளக்கிக் கூறினார். இறைச்சட்டத்தை கேட்க குடும்பமாய், சமாதானமாய், மதிப்புக் கொடுத்துக் கேட்டனர். எஸ்ராவுக்கு திருநூலை சரிவர எடுத்துக் கூறினார். இதனால் இறைவாழ்வில் ஓங்கி வளர துணை புரிந்தது திருச்சட்டம்.

### ***3. ஒன்றித்து இயங்க துணைச்செய்யும் கல்வி*** : (6:2)

எஸ்ரா ஆண்டவரை வாழ்த்தினார். மக்களும் எல்லாரும் கைகளை உயர்த்தி “ஆமென், ஆமென்” என்றனர். ஏன் ஆமென் சொல்கிறோம். 2கொரி 1:20-படி கடவுள் அருளும் எல்லா வாக்குறுதிகளும் நிறைவேறுகின்றன என்பது தான் பொருள். எல்லாரும் இணைந்து ஆமென் என்றனர். இறைக் கல்வியை கொடுப்பவருக்கும், கேட்பவருக்கும் நல்ல புரிதல் இருத்தல் வேண்டும். திருச்சட்டத்தை கேட்டவுடன் பணிந்தனர். முகம்குப்புற விழுந்து ஆண்டவரை தொழுதனர். இறைச்சட்டத்தை கேட்க பணிவு, தாழ்மை தேவை. வ. 7-ல் மக்களும் இறைச்சட்டத்தை கேட்டு அங்கேயே நின்று கொண்டிருந்தனர். பிரிந்து செல்லவில்லை. திருச்சட்டத்தை கேட்க சமாதானம் தேவை. பாவத்தை உணர்ந்து, அறிக்கை செய்து, இறைவன் முன்பாக பணிந்து, தன்னைத் தாழ்மையாக ஒப்புக் கொடுக்கும் போது தான் இறைவன் நம்மில் வாசம் செய்து நாம் இறைவனில் ஒன்றித்து இயங்க துணை செய்யும்.

இறைக்கல்வி போதிப்பவரால் சில வேளைகளில் தவறான நம்பிக்கை, உண்மை நம்பிக்கை என இரு துருவங்களை ஏற்படுத்துகிறது. வ. 9-ல் எஸ்ரா திருநூலை வாசித்துக் கொண்டிருந்த போது மக்கள் கேட்டு

அழுதார்கள். தாங்கள் தவறு இழைத்தோம் என்பதனை உணர்ந்து அழுதார்கள். உண்மையான இறைக்கல்வி கடந்து வந்த பாதையை திரும்பி பார்க்க செய்து, தவறை உணர்த்தி, மனந்திரும்புதலுக்கு நேராக அழைத்துச் செல்கிறது. வ.10-ல் இறைக்கல்வி மகிழுறவை ஏற்படுத்துகின்றது. எப்படியெனில் உண்டு, குடித்து, இல்லாதோருக்கு பகிர்ந்து, ஓய்வுநாளை அனுசரிப்பது ஆகும். ஆண்டவரை மகிழ்வு பெற செய்தால் இதுவே நம்முடைய வலிமையாகும். வ. 12-ல் “இறைவார்த்தையை புரிந்து கொண்டதால்” புரிந்து கொள்ளுதல் மிகவும் முக்கியம் இறைகல்விக்கு இன்று தனக்கு இலாபத்தை ஏற்படுத்த இறைவார்த்தையை தெரிவு செய்கின்றனர். தாங்கள் உயர்த்துகின்றனரே தவிர இறைமக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவில்லை. தாங்கள் புசித்து, குடித்து, தங்களுக்காக சேர்த்து வைக்கின்றனர். பகிர்வு இல்லை. 2 கொரி 2:5-11-ல் மன்னிப்பும் , ஆற்றுப்படுதலும், பகிர்வும் இன்று திருச்சபை திருப்பணிக்கு தேவை. எனவே இறைக்கல்வி ஒற்றுமையை ஊக்குவிக்கும் இறைக்கல்வியாக இருத்தல் வேண்டும்.

இறைக்கல்வி திருச்சபைகளின் திருப்பணிகளுக்கு முக்கியமானது. எனவே இறைக்கல்வி ஒன்றிப்பதற்கு இழுத்துச் செல்வதாய், ஒன்றித்து இயங்க துணைச் செய்வதாய், ஒற்றுமையை ஊக்குவிப்பதாய் இருத்தல் வேண்டும்.

திரு. **செ. ஜாண் வினோ ராஜ்**

08-09-2019



# பெண்களின் திருப்பணியை நினைவு கூர்தலும் கொண்டாடுதலும்

**REMEMBERING AND CELEBRATING WOMEN'S MINISTRY**

நீ.த. 4:4-16 பிலி. 4:1-7
திபா. 132 லூக். 8:1-3

**"......தங்கள் உடமைகளைக் கொண்டு அவருக்கு பணிவிடை செய்து வந்தார்கள்."**
(ஏசா. 43:19)

நல் அன்பும், நட்புறவும், நம்பிக்கையும் தன்னகத்தே கொண்டு நலமான வாழ்க்கையை தொடருவதற்காகவே கடவுள் மானிட சமூகத்தைப் படைத்து அழகு பார்த்தார். ஆண், பெண் என்ற பால் வேறுபாடுகளைத் தாண்டி ஒருவரையொருவர் மதிப்புடன் நடத்தவும், ஒருவருக்கொருவர் பாதங்களை தாங்கி பிடிக்கவும், ஒருவரோடொருவர் புரிந்துக் கொண்ட தன்மையில் வாழவும் வேண்டுமென்ற நல் எதிர்நோக்கில் தம் உருவில் படைத்து மகிமையால் நிறைத்தார். இவ்வாறு நல் எதிர்பார்ப்புடன் படைக்கப்பட்ட மானிடம் சமூக அமைப்பு நிலையில் வாழத் தொடங்கிய கால கட்டத்திலே சமநிலை கருத்தியலை தகர்த்து, ஆதிக்க நிலையில் செயல்பட தொடங்கியது. அதன் தொடர்ச்சியாகவே யூதர்கள் பெண்களுக்குரிய முக்கியத்துவம் தரவில்லை, அவர்கள் தொழுகை கூடங்களிலும், ஜெப ஆலயங்களிலும் ஓரம் தள்ளப்பட்டனர். ஆண்கள் இருக்கும் இடத்தில் பெண்கள் செல்வது அருவருக்கும் செயலாகவும், ஏற்க கூடாததாவும் நடைமுறையில் கொண்டிருந்தனர். இந்தச் சூழலில் இயேசு கிறிஸ்து மீட்பராக மெசியாவாக மானிடத்தின் விடியலாக உலகினில் தனது இறையாட்சி திருப்பணியை தொடர்ந்தார். அந்நாளிலிருந்தே பெண்களின் வாழ்வு சம நிலைக்கு நேராக மிளிர தொடங்கியது. மட்டுமன்று தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றும் அனைவரும் சகோதரரும், சகோதரியும், தாயும் ஆவார் (மத். 12:46-50). என வாக்குரைத்து இறையரசின் சம நிலைப் பார்வையை உறுதிப்படுத்தினார். இவ்வாறு பெருமைப்படுத்தப்படும் பெண்கள் நினைவு கூரப்பட வேண்டியவர்களே என்ற சிந்தையில் சிந்திப்போம்.

### *1. ஆளுமை திறன் கொண்டவர்கள்* : (நீ.த. 4:4-16)

பெண்கள் பலவீனர்கள், எளிதில் நிதானத்தை இழந்து விடுபவர்கள், ஆய்ந்து முடிவெடுக்கத் தெரியாதவர்கள் என்ற பார்வையோடு பார்த்துக் கொண்டிருந்த சமூகத்தில் வலிமையுடன் எழுந்து செயல்பட்ட பெண்மணியாக தெபோராள் முன்னிலைப் பெறுகின்றார்கள். தெபோரா என்றால் “தேனீ ” என்பது பொருள். திட்டமிடுதல், சுறுசுறுப்பு, சேமித்தல், பிறருக்கு கனி கொடுத்தல் எனும் சிறப்புக்களைக் கொண்ட தேனீ போன்றே தெபேராளும் காணப்பட்டார்கள். இஸ்ரயேலின் நான்காவது நீதித் தலைவராகவும், இறை ஆவியால் ஆட்கொள்ளப்பட்டுச் செயல்பட்டதால் இவர் ஒரு இறைவாக்குரைப்பவராகவும், இஸ்ரயேலின் தாயாகவும் அழைக்கப்பட்டார். இராமாவுக்கும், பெத்தேலுக்கும் இடையிலுள்ள எப்பிராயீமின் பகுதியில் “தெபோராவின் பேரீட்சை மரத்தின்” அடியில் அமர்ந்து தீர்ப்பு வழங்கி வந்த பெண்மணியாவார் (4:5). கடவுளுக்குப் பயந்து, உண்மையுடனும் தூய நெறியுள்ள பார்வையுடனும் சிதறிக்கிடந்த இஸ்ரயேல் மக்களை தூண்டியெழுப்ப ஆற்றல் படைத்தவராக சிறப்பு பெறுகிறார். இஸ்ரயேலர் யாபீன் என்பவரால் கொடுமைப்படுத்தப்பட்ட நிலையில் யாபீனின் படைத்தலைவரான சீராவை வெற்றி கொண்டு இஸ்ராயேலருக்கு நம்பிக்கையூட்டினார். அனைத்து நிகழ்வுகளையும் கூறிய பார்வையுடன் கவனித்து செயல்படும் திறனும், ஆளுமைத் திறனும் தன்னகத்தே கொண்ட தெபோரா கவிபாடும் திறனுடனும் பெருமைப்படுத்தப்பட்டார். ‘தொட்டில் ஆட்டும் கரங்களே தேசத்தை ஆளும்’ என்ற பழமொழிக்கேற்ப ஆண்டவரின் ஆவியில் ஆளுமையின் மேன்மை பெற்றிருக்கும் பெண்களின் திருப்பணியை நினைத்து இறையவரைப் போற்ற வேண்டும். இந்தியத் திருச்சபை வரலாற்றில் பண்டித ராமாபாய் அவர்களின் தன்னலமற்ற பணியும், அன்னைதெரசாவின் தியாகத்துடன் கூடிய அரும் பெரும்சேவையும் நினைவில் கொள்ளப்பட வேண்டியவைகளே.

### *2. அழைப்பில் உறுதியுடன் நிற்பவர்கள்* : (பிலி. 4:1-7)

தொடக்க கால திருப்பணி நிலையில் பல் நிலைகளில் துன்பத்தின் அழுத்தங்களால் நெருக்கப்படுத்தும் சூழல் ஏற்படினும் பின் வாங்காமல் திருப்பணியில் நம்பிக்கையாயிருந்து அழைப்பிற்கேற்ப காட்டியவர்களே எயோதியா, சிந்திக்கா ஆகியோராவர். பவுலடியார் இவர்களைக் குறித்து

குறிப்பிடும் போது ஆண்டவரோடு இணைந்து ஒருமனத்தவராய் நற்செய்தியில் ஒத்துழைத்த இவர்களின் பெயர்கள் வாழ்வோரின் நூலில் எழுதப்பட்டுள்ளது என்கிறார் (பிலி. 4:2,3). திருப்பணியில் நல்லப் பார்வைக் கொண்டவர்களாக நற்செய்திக்காகப் போராடியவர்கள், வெளிவேடமற்ற நம்பிக்கையுடன் நற்பணிக்குத் துணை நின்றவர்கள், அழைப்பிற்கேற்ப வாழ்ந்து அங்கீகாரம் பெற்றுக் கொண்டார்கள். இதை உணர்ந்த நிலையிலே பவுலார் கிறிஸ்து இயேசுவுக்குள் ஆண் என்றும், பெண் என்றும் வேறுபாடு இல்லை. கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாய் இருக்கிறீர்கள் (கலா. 3:27,28) என உணர்ந்து முன்னிலைப்படுத்துகிறார். அறிவியலின் வளர்ச்சியும், நாகரிகத்தின் எழுச்சியும், மானிடத்தை அசைத்துக் கொள்ளும் நிலையிலும், ஆன்மீகம் பொருளற்றதாக நினைக்கத் தூண்டும் நிலையிலும் வாழும் இக்கால கட்டத்தில் ஆண்டவரின் ஆலயத்துக்குரியவைகளை எந்தவொரு எதிர்பார்ப்புமின்றி அடக்கத்தோடும், அமைதியோடும், அப்பழுக்கற்ற நிலையில் நிறைவேற்றும் பெண்மணிகள் பெருமைக்குரியவர்களே. ஆண்டவரின் அழைப்பிற்கேற்ப விசுவாசத்தைக் கட்டியெழுப்பி தொடக்க கால திருச்சபையின் வளர்ச்சியில் ஆண்களுக்கு சமமாக பணியாற்ற பெண்களும் (1தீமோ. 3:11,12) அமர்த்தப்பட்டார்கள் என்பதைக் கற்றுக் கொள்ளும் அனைவரும் பெண்களின் பணியை ஊக்கப்படுத்தி அங்கீகரிப்பது ஏற்புடையதாகும்.

### *3. அர்ப்பணிப்புடன் பணியாற்றுபவர்கள்* : (லூக். 8:1-3)

எந்தவொரு பணியிலும் அர்ப்பணிப்பின் உள்ளத்தோடு பணியாற்றும் திறன்கொணடவர்களே பெண்களாவர் என்பது இயேசு கிறிஸ்துவின் திருப்பணிக் காலத்தில் வெளிப்பட்டது. யூத குருமாரின் கொள்கைகளால் தாக்கமடைந்திருந்த சமூகத்தில் இயேசு கிறிஸ்துவின் திருப்பணிக் கால சூழல்கள் புதிய பார்வையை வெளிப்படுத்தியது (லூக். 8:1-3). மகதல மரியாவிடமிருந்த பேயின் ஆற்றல்களை இயேசு அகற்றி அவளுக்கு சுகம் தந்தார். மட்டுமன்று பெண்களும் தன்னலமற்றவர்களாகவும், தங்கள் உடமைகளை இழந்து பணிவிடை செய்கிறவர்களாகவும் இயேசுவுடன் செயல்பட்டார்கள். கலிலேயாவிலிருந்து அவரோடு யூதேயா சென்ற பெண்களே கடைசி வரை அவர் அருகில் இருந்தனர் (லூக். 23:27). மட்டுமன்று உயிர்த்தெழுந்த ஆண்டவரை அறிவிக்கும் உன்னதத்தைப் பெற்றுக் கொண்டவர்களும் பெண்களேயாவர் (லூக். 24:9,10). இவ்வாறு அர்ப்பணிப்புடன் செயல்பட்ட பெண்கள் இரத்த

சான்றுகளாகவும் தங்களைக் கொடுத்தனர் என்பதுதான் தொடக்கக் கால திருச்சபை வரலாறாகும். உரோமை ஆட்சியராக இருந்த ஹாட்ரியன் (117-138) அந்தோனியஸ் (138-161) இவர்களின் காலங்களில் பல பெண்கள் கொடுமையாக துன்புறுத்தப்பட்டு அடித்துக் கொல்லப்பட்டனர்.

விசுவாச வாழ்வின் பாதையில் விலகி விடாது, நின்று சாதித்தவர்களின் அடியொற்றி செயல்படும் பெண்மணிகளால் திருச்சபை திருப்பணியில் ஏற்படும் வளர்ச்சியும், எழுச்சியும் என்றென்றைக்கும் நினைக்கப்படுதலும், பாராட்டப்படுதலுமாகவே அமைந்துள்ளது.

இறையரசின் விரிந்த பார்வையில் பெண்களின் திருப்பணி ஆன்மீக மறுமலர்ச்சியில் ஏற்படுத்தட்டும். ஆளுமை திறனும், அழைப்பின் உறுதியும், அர்ப்பணிப்பின் பங்கேற்பும் கொண்ட நிலையில் தொடரும் பணிகள் வருங்கால சமூகத்திற்கு நல்ல வழிகாட்டுதலாக அமையட்டும். ஆண்டவரின் ஆசி பெற்றவராக என்றென்றும் பணி தொடர தூயவரின் திருவடிகளில் ஒப்படைப்போம்.

அருள்திருமதி. ***ராஜலின் ஜெயம்***

15-09-2019

## கடவுளும் பல்சமய பற்றுறுதியாளர்களும்
**GOD AND PEOPLE OF ALL FAITHS**

ஆமோ. 9:1-12 உரோ. 2:17-29
தி.பா. 66 யோவா. 10:14-18

**"இக் கொட்டிலைச் சேரா வேறு ஆடுகளும் எனக்கு உள்ளன. நான் அவற்றை நடத்திச் செல்ல வேண்டும். அவையும் எனது குரலுக்குச் செவி சாய்க்கும், அப்போது ஒரே மந்தையும் ஒரே ஆயரும் என்னும் நிலை ஏற்படும்." என்றார்.** (யோவா. 10:16).

கிறிஸ்தவத்தின் அடிப்படை விசுவாசம் ஒரே கடவுள் அல்லது கடவுள் ஒருவரே என்பதாகும். இந்த ஒரே கடவுள் விசுவாசம் திரித்துவக் கடவுளில் இறை இரகசியமாக (Great mystery of God) காண்கிறோம், நம்புகிறோம். பல் சமய சூழலில் கடவுள் அல்லது எல்லாவற்றிற்கும் தொடக்க காரணர் ஒருவரே என்பதுதான் சரியான நம்பிக்கையாக இருக்க முடியும்.

இயேசு ஓர் சமயத்தைத் தோற்றுவிக்க இவ்வுலகில் வரவில்லை. மாறாக, ஏக கடவுளை தன் வாழ்வின் மூலமாகவும், தியாக பாடுமரணம் உயிர்ப்பின் வழியாகவும் வெளிப்படுத்த வந்தார். இயேசு தான் சார்ந்த சமயமாகிய யூத சமயத்தில் காணப்பட்ட கடவுள் தங்களுக்கே உரியவர் என்ற சிந்தனையும், பாரம்பரியங்களையும் மாற்ற விரும்பினார். சமயம் என்பது மனித எண்ணங்களிலும், கலாச்சார பின்னணியிலும் பின்னிப்பிணைந்து உருவான நம்பிக்கையின் வெளிப்பாடாகும். ஆனால் வல்லக் கடவுள் இதற்கெல்லாம் அப்பாற்பட்டவர். ஆக, சமயம் சார்ந்து ஒருவர் கடவுளை நம்பலாம் ஆனால் ஒரு சமயந்தான் கடவுளை வெளிப்படத்த தகுதி உள்ளது என்பது அடிப்படை வாதம் மற்றும் கடவுளையே சிறுமைப்படுத்துவதாகிவிடும் (தி.பா. 147:5, ஏசா. 55:8,9. மத். 23:15, உரோ. 11:33-36, 1 கொரி. 13:12, எபி. 1:1,2) கடவுளின் பல்வேறு பரிமாணங்களை வெளிப்படுத்தும் இவ்வார்த்தைகள், நம்மை கடவுள் குறித்த அறிவை விரிவுபடுத்த தூண்டுகின்றன.

### *1. கடவுள் எல்லோருக்குமானவர் :* (ஆமோ. 9:7)

கடவுள் இஸ்ராயேலரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தார் என்பது அவர்கள் நம்பிக்கை. அது அவர்களைக் கடவுள் தங்களுக்கு மட்டுமே உரியவர் என்ற குறுகிய சிந்தனைக்கு நேராக

திருப்பியது. ஆனால் இங்கு கடவுள், நான் பெலிஸ்தியரை கப்தோரிலிருந்தும், சீரியரைக் கீரிலிருந்தும் கொண்டு வரவில்லையோ என கேட்கிறார்.

இது, கிறிஸ்தவர்களை மட்டும் கடவுள் விடுதலையாக்குவார் என்ற சிந்தனையிலிருந்து விடுபட தூண்டுகின்றது. கடவுள் நல்லோர் மேலும் தீயோர் மேலும் மழையை பொழியப்பண்ணுகிறார் (மத். 5:45). பல் சமயச் சூழலில் கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்கள் என்பதற்கு பொருள் நிறைந்த விளக்கம் காண முற்பட வேண்டும்.

தி.ப. 27-ல் பவுல் ஓர் ஆபத்து நிறைந்த கப்பல் பயணம் மேற்கொண்டார். அக்கப்பலில் 276 பேர் பயணம் செய்தனர். அவர்கள் பல் சமய நம்பிக்கைக் கொண்டோர். ஆபத்து சூழ்ந்த வேளையில் பவுல் அவர்கள் நடுவில் நின்று அவர்களுக்கு கடவுள் பாதுகாப்பான பயணம் தருவார் என நம்பிக்கையூட்டி உணவளிக்கிறார். பல்சமய சூழலில் கடவுளின் உயர்ந்த தன்மைகளை நம் வாழ்வில் உறவுகள் மூலம் வெளிப்படுத்த கடவுள் விரும்புகிறார்.

## *2. கடவுள் மாய்மல சமய வாழ்வை வெறுக்கிறவர் :*

கடவுள் இஸ்ரவேலை தம் மக்களாக தெரிந்தெடுத்து திருச்சட்டங்களை அவர்களுக்கு கொடுத்தார். ஆனால் தாங்கள் போதிக்கின்றதை அவர்களே கடைபிடிக்காமல் கடவுளை அவமரியாதை செய்தனர் (உரோ. 2:17-23). வெறும் விருத்தசேதனம் ஒரு மனிதனை நீதிமானாக்குவதில்லை. புறம்பான சமயச் சடங்குகளை கடைபிடித்து வாழ்வது ஒருவனை யூதனாக மாற்றுவதில்லை. அகத்தில் அல்லது உள்ளத்தில் செய்யப்படும் விருத்தசேதனமே உண்மையான விருத்தசேதனம் (உரோ. 2:28,29).

உதடுகளால் மக்கள் கடவுளை போற்றி ஆனால் அவர்கள் இருதயம் கடவுளை விட்டு விலகி இருக்கிற மாய்மலம் நிறைந்த வாழ்வை ஏசாயா இறைவாக்கினரும், இயேசுவும் கண்டிக்கின்றனர் (மத். 15:8). வெளிப்புற சமய வாழ்வின் மீது அதிக நாட்டம் கொண்டு அதுவே தங்களை கடவுளின் மக்களாக தகுதிப்படுத்தும் என்ற வாழ்வை, நம்பிக்கையை கடவுள் வெறுக்கிறார். இயேசு தான் சார்ந்திருந்த யூத சமயத்திலிருக்கும் வேண்டாத பாரம்பரியங்களை வெகுவாகக் கண்டிக்கிறார் (மத். 6:7). பல்சமயக் சூழலில் வெறும் பாரம்பரியங்களை சார்ந்த சமய வாழ்விலிருந்து உள்ளத்தில் அக ஒளி பெறும் அனுபவத்தில் கடவுளை காண அழைக்கப்படுகிறோம்.

***3. கடவுள் நற்செய்தி எல்லோருக்குமானது :*** (யோவா. 10:16)

வேறு ஆடுகளும் எனக்கு உண்டு அவைகளும் என் சத்தம் கேட்கும் என்பது குறிப்பாக புற இனத்தாரை சுட்டிக்காட்டுவதாகும். இது இஸ்ரவேலருக்கு ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. ஏனென்றால் இஸ்ரவேலரைத் தான் கடவுள் பெயர் சொல்லி அழைத்தார். புற இனத்தவரும் நற்செய்தியின் வாயிலாக கிறிஸ்துவின் உடன் பங்காளிகளாயிருக்கிறார்கள் என்ற இரகசியத்தை பவுல் எபேசு சபைக்கு கூறுகிறார் (எபே. 3:3-6).

புற இனத்தவராகிய நூற்றுவர் தலைவரின் விசுவாசத்தை பாராட்டிய இயேசு உறுதியாக உங்களுக்குச் சொல்லகிறேன். இஸ்ரயேலர் யாரிடமும் இத்தகைய நம்பிக்கையை நான் கண்டதில்லை. கிழக்கிலும், மேற்கிலுமிருந்து பலர் வந்து ஆபிரகாம். ஈசாக்கு, யாக்கோபு ஆகியோருடன் விண்ணரசின் பந்தியில் அமர்வர் (மத். 8:10-11). இங்கு இயேசு சமயத்திற்குட்பட்டுத்தான் விசுவாசம் வரையறுக்கப்பட வேண்டும் என்ற அடிப்படைவாதத்தையும், பிரிவினைவாதத்தையும் (Fundamentalism and Exclusivism) புறக்கணிக்கிறார்.

பல் சமய சூழலில் கடவுள் நம்மை பிறருக்கு ஆசீர்வாதமாகவும், விடுதலை வாழ்வு அறிவிக்கும் ஒளியாகவும் விளங்க விரும்புகிறார் (எசா. 42:6,7, லூக். 4:18,19). இந்த உணர்வினூடாக சமயம் கடந்து மனிதத்தை அன்பு செய்வோம். இயேசுவில் வெளிப்பட்ட விண்ணரசை இம் மண்ணில் வெளிப்படுத்துவோம். கொட்டிலை சேராமல் அலைந்து ஓடும் ஆடுகளைப் போன்ற மக்களையும் இறை ஒளிக்குள் நற்செயல் சார்ந்து அழைத்து வருவோம். நம்மில் மிளிரும் கிறிஸ்துவாகிய ஒளி இடறும் மக்களுக்கு வழிகாட்டட்டும். வாழ்வை மெருகேற்றட்டும், வருங்காலத்தை திட்டமிட்டுத் தொடர ஆற்றல்படுத்தட்டும். பல் சமயப் பார்வையில் நமது பற்றுமையை சேதப்படுத்தாதபடி மீட்பராகிய இயேசுகிறிஸ்துவின் அடியொற்றி பயணிப்போம். பரம வாழ்வின் மேன்மையை உரிமையாக்கிக் கொள்வோம்.

அருள்திரு. O. **டென்சிங்**

22-09-2019

## வன்முறைச் சூழலில் அமைதி

**PEACE IN THE CONTEXT OF VIOLENCE**

| | |
|---|---|
| 1 சாமு. 24:1-12 | உரோ. 12:14-21 |
| திபா. 52 | மத். 5:38-48 |

**“தீமைக்கு பதில் தீமை செய்யாதீர்கள்; எல்லா மனிதரும் நலமெனக் கருதுபவை பற்றியே எண்ணுங்கள்.”** (உரோ. 12:17).

நாம் வாழும் இவ்வுலகம் ஒவ்வொரு நாளும் பல்வேறு மாற்றங்களை எதிர்கொள்ளுகிறது. மாற்றங்கள் (Changes) என்பவை தவிர்க்க முடியாததாயினும், இவை மனித குலங்கள் அமைதிக்காக, சமாதான முறையில் வாழ்வதற்கு எதிரிடையான பலத் தடைகளை உருவாக்கிறது. அரசியல், சமுதாய, சமய வட்டத்திற்குள் இம்மாற்றங்கள் பல வேறுபட்ட கருத்தியல்களை உருவாக்கி அவைகளினால் மோதல்களும், வன்முறைகளும், அழிவுகளும், உயிர் கொலைகளும் சர்வ சாதாரணமானவையாகின்றன. இத்தகைய சூழ்நிலையில் சமாதானம், அமைதி என்பதே நாம் விரும்புகின்ற, எதிர்பார்க்கின்ற, தேவையான நற்செய்தியாக அமைகின்றது. அமைதியை உணர்த்தும் எபிரேய வார்த்தை “ஷாலோம்” என்பதாகும். இது எல்லா நலன்களும் உள்ளடக்கிய முழுமையான, நிறைவான ஒன்றாகும். இன்றைய வன்முறைச்சூழலில் அமைதி என்பது எங்கும் கிடைக்காத ஒன்று. வன்முறைக்கு மேல் வன்முறை பெருகி, அழிவுக்கு மேல் அழிவு என்று மாறிக் கொண்டிருக்கும் இவ்வுலகின் தகவுகளுக்கு முற்றுப்புள்ளியே இல்லையா? என்ற ஆதங்கங்களும் எழத்தான் செய்கிறது. திருமறைக் காட்டும் வித்தியாசமான வழியில் அவ்வன்முறைக்கு முற்றுப்புள்ளியிட்டு காட்டுகிறது. இன்றைய திருமறைப்பகுதிகள் வன்முறைச்சூழலில் அமைதியை நிலைநாட்டலாம் என்பதற்கு தரும் உந்துதல்கள் எவை என சிந்திப்போம்.

### *1. வன்முறையாளரின் மனந்திரும்புதலுக்கு வாய்ப்பு கொடுத்தல் :* (1 சாமு. 24:1-12)

இஸ்ரவேல் மக்களின் முதல் அரசன் சவுல். தனது அரச பதவியை வேறொருவன் - தாவீது பெற்றுவிடுவானோ என பயந்து தனது பதவியை தக்கவைத்துக் கொள்வதற்கான ஒரே வழி தாவீதை கொலை செய்வதுதான் என உணர்ந்து கொண்டு, தாவீதையும் அவன் ஆட்களையும் பின் தொடர்கிறான். இதோ என்கேதிப் பாலை நிலத்தில் தாவீது இருக்கிறான்

என சவுலுக்கு தெரிவிக்கப்பட்டபோது, சவுல் மூவாயிரம் ஆட்களுடன் தாவீதையும் அவர் தம் ஆட்களையும் தேடிக் கொண்டிருக்கிறார். ஆனால் சவுல் எதிர்பாராதவிதமாக தாவீதிடம் மாட்டிக் கொள்கிறார். தாவீதின் ஆட்கள் அவனிடம் இதோ! உன் எதிரியை உன்னிடம் ஒப்புவிப்பேன்..... என்று ஆண்டவர் சொல்லும் நாள் இதுவே! என்கின்றனர். தாவீது சவுலின் மேலங்கியின் தொங்கலை அவருக்கு தெரியாமல் அறுத்துக் கொள்கிறார். ஆனால் தனது ஆட்கள் கூறியது போலல்லாமல், அவர் ஆண்டவரால் திருப்பொழிவு செய்யப்பட்டவராகையால் அவர் மேல் கை வைக்கக்கூடாது என்று கூறி தடுத்துவிட்டார். எதிரியே தன் கையில் அகப்பட்டபோதும் அவரைக் கொல்லாது அவர் மனமாற்றமடைய, வன்முறை புரியாது தன்னை காத்துக் கொள்கிறார். அதன் மூலம் தாவீது சவுல் அரசனுக்கு வாய்ப்புக் கொடுக்கின்றார் என்பதை உணரமுடிகிறது. இந்த வாய்ப்பு முற்றிலுமாக தாவீதின் மன்னிப்பு சிந்தையை சார்ந்தது. அதுமாத்திரமல்ல சவுல் பெற்றிருந்த அரசராகும் அருட்பொழிவுக்கு மதிப்பு கொடுப்பதாயும் அமைந்திருந்தது. மற்றும் இவருக்கிடையில் இருந்த வன்முறைச் செயலுக்கு தூண்டுகோலாயிருந்த தவறான புரிந்து கொள்ளுதல், வெளிப்படையான உளம் சார்ந்த பேச்சுவார்த்தையினால் சரிசெய்யப்படுகிறது. இயேசு நாதர் வன்முறைக்குறித்த விளக்கங்களை கொடுத்துக் கொண்டிருந்த போது, மத். 5:39-ல் தீமை செய்பவரை எதிர்க்க வேண்டாம்; மாறாக, உங்களை வலக்கன்னத்தில் அறைபவருக்கு மறுகன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள் என்பதாகக் கூறி வன்முறையாளருக்கு மனந்திரும்புவதற்கான வாய்ப்பினைக் கொடுக்க கற்றுக் கொடுக்கிறார். பாதிக்கப்பட்டவரின் மனமுவந்த மன்னிப்பு மனந்திருந்துவதற்கு வன்முறையாளருக்கு கொடுக்கப்படும் வாய்ப்பும் வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைக்கும்.

***2. வன்முறைக்குப் பதில் நன்மை செய்தல் :*** (உரோ. 12:14-21)

இத்திருமறைப் பகுதியில் “தீமைக்கு பதில் தீமை செய்யாதீர்கள்; எல்லா மனிதரும் நலமெனக் கருதுபவை பற்றியே எண்ணுங்கள்; பழிவாங்குதல் எனக்குரியது; அதை கடவுளின் சினத்திற்கு விட்டு விடுங்கள்; தீமைஉங்களை வெல்ல விடாதீர்கள்; நன்மையால் தீமையை வெல்லுங்கள்” என்பதாக மிகச் சிறந்த அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. தன் சகோதரருக்கு நன்மை செய்யச் சென்ற யோசேப்புக்கு அவரது சகோதரர்களாலேயே தீமை ஏற்பட்டது. வன்முறை இழைக்கப்பட்டது. எனினும், இறைவன் கைவிடவில்லை, எகிப்தின் அதிபதி அளவுக்கு

உயர்ந்தான். தான் இருக்கும் உயர் நிலையில் தன்னை சந்திக்க வந்த தன் சகோதரர்களுக்கும் தீமை செய்ய வேண்டியதற்கு பதிலாக நன்மை செய்தார்; வாழ்வு கொடுத்தார் எனத் திருமறையில் வாசிக்கின்றோம். காலக்காலமாக தொடரக்கூடிய வன்முறையானது தீமைக்கு பதில் நன்மை செய்ததினால் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. உன் எதிரி பசியாய் இருந்தால், அவனுக்கு உணவு கொடு; அவன் தாகத்தோடு இருந்தால், அவனுக்கு குடிக்கக்கொடு (உரோ. 12:20) போன்ற திருமறை வாசகங்கள் வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு தூண்டுகோலாய் அமைகின்றது.

### *3. வன்முறையாளர்களை மனிதராக்கும் வலிய ஆயுதமே இறைவேண்டல் :* (மத். 5:38-48)

இப் பகுதியில் பழிவாங்குவதற்கான இயேசு கூறும் மாற்றுவழி பற்றிக் கூறப்பட்டுள்ளது. மத்தேயு 5:43-ஆம் வாசகத்தில் "உங்கள் பகைவரிடம் அன்புகூருங்கள்; உங்களை துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்" என்ற இயேசுநாதரின் வார்த்தை வன்முறையாளர்களை மனிதனாக்கும் புதிய முறையை வலியுறுத்துகிறார். பவுல் திருத்தூதுவர், தெசலோனிக்கே திருச்சபைக்கு எழுதிய கடிதத்திலும் இதைச் சார்ந்த அறிவுரைகளைக் கொடுத்துள்ளார். "எப்பொழுதும் மகிழ்ச்சியாயிருங்கள். இடைவிடாது இறைவனிடம் வேண்டுங்கள், எல்லாச் சூழ்நிலையிலும் நன்றி கூறுங்கள். உங்களுக்காக கிறிஸ்து இயேசு வழியாய்க் கடவுள் வெளிப்படுத்திய திருவுளம் இதுவே" (1தெச. 5:16-18). நமக்கு புதிய உத்வேகத்தையும், உந்துதலையும் தருகிறது. ஒடுக்கப்பட்டவர்கள் சார்பில் நிற்கும் நம் நாதர் இயேசுகிறிஸ்து வன்முறை இழைக்கும் வன்முறையாளர்களை மனந்திரும்பச் செய்வார். இதற்கு எஸ்தரின் வரலாறும் சான்றாக அமைகிறது. தற்கால இந்தியச் சூழல், கிறிஸ்தவரின் நிலை இவற்றைப் பற்றி நாம் நன்கறிவோம். வன்முறை இழைக்கும் மக்களுக்கு பதில் வன்முறை செய்வோமெனில் கிறிஸ்தவப் போதனைகள் சிதைவுற்று நாமும் மற்றவர்களைப் போலாவோம். அவ்வாறல்லாது திருமறை கற்பிக்கும் வழிகளை நாமும் கடைபிடிப்போம். கிறிஸ்தவ சமுதாயத்திற்கு கற்பிப்போம். உண்மையான அமைதியை சுதந்தரிப்போம்.

அருள்திரு. G. **சாம் ரிச்சர்ட் நெல்சன்**

27-09-2019



# பணிவிடையில் ஒன்றிப்பு

## UNITED IN SERVICE

விப. 4;27-31 1 கொரி. 3:1-15
திபா. 28 யோவா. 17:9-23

**"எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக"** (யோவா. 17:21)

தென்னிந்தியத் திருச்சபை 1947 செப்டம்பர் 27ஆம் நாள் உருவானது. இத தனியொருத் திருச்சபையாய் உருவானது அல்ல. மாறாக எதிரும் புதிருமான தன்மைகள் கொண்ட ஆங்கிலக்கன்(Anglican), காங்கிரிகேஷனல் (Congregational), பிறஸ்பிட்டேரியன் (Presbyterian), மெதடிஸ்ட் (Methodist) போன்ற பல திருச்சபைகள் ஒன்றிணைந்து உருவானது ஆகும். இந்த உருவாக்கம் திருச்சபை இணைப்பு இயக்கத்தில் நடந்த ஓர் அற்புதம். சபை வரலாற்று ஆய்வாளர்கள் இந்த நிகழ்வை இரண்டாம் பெந்தகோஸ்து என குறிப்பிடுகின்றனர்.

தென்னிந்தியத் திருச்சபை உருவான நாளைக் கொண்டாடுதல்நாம் பெற்றுள்ள விடுதலை, ஆசீர்வாதம், உயர்வு, போன்றவைகளை நினைத்து கடவுளைத் துதிக்கின்ற நிலையாகும். தென்னிந்தியத் திருச்சபை அமைப்பு சார்ந்த திருச்சபை. ஒருமைப்பாடு, ஆன்மிகம், உயிரோட்டமுள்ள தொழுகை, சிறந்த நிர்வாகம் இவைகள் அனைத்தையும் ஒன்றடக்கியத் திருச்சபை. அதோடு ஆழமான பற்றுறுதியோடு, அவர்கள் எல்லோரும் ஒன்றாக இருப்பார்களாக (That They All May be One) என்ற கருப்பொருளோடு தன் பணிவிடைகளைச் சிறப்பாக நிறைவேற்றி வருகிறது. இவ்வாறு பணிவிடைகளை நிறைவேற்றுவதில் இறைமக்களாகிய நம் பங்களிப்பைக் குறித்து திருமறையினூடாய் சிந்திப்போம்.

### *1. இறைப்பணிக்காய் ஒன்றிணைதல்* (விப. 4:27-31)

மோசேயும் அவர் சகோதரர் ஆரோனும் இணைந்து செய்த பணிவிடை இத்திருமறைப்பகுதியில் கூறப்பட்டுள்ளது. மோசே பணிவிடைக்கென அழைக்கப்பட்ட போது, பின்வாங்கும் சூழலிலும், கடவுள் மோசேயை உன் சகோதரன் ஆரோன் உனக்காக பேசுபவனாக உன்னோடு வருவான் எனக்கூறி தைரியப்படுத்தினார். இது மோசேயில் வாழ்வில் சாத்தியமானது. மோசேயும் ஆரோனும் எகிப்து மற்றும் மீதியான் தேசங்களுக்கு இடைப்பட்ட பரிசுத்த பர்வத்தில் சந்தித்தனர். ஆரோன்

வாக்குப்பண்ணப்பட்டப்படி, மோசேக்கு பதிலாளாய் பேசுபவனாகவும், இஸ்ரயேல் மக்களுக்கு முன்பாக அடையாளங்களைச் செய்கிறவனாகவும் காணப்பட்டான். இருவரும் இணைந்து மக்களை அடிமைத்தனத்திலிருந்து விடுக்கும் இறைத்திட்டத்திட்டத்தில் ஒன்றிணைந்து செயல்பட்டனர்.

இது இறைப்பணிக்கு ஒரு மாதிரி. மக்கள் வேறுபாடுகளைக் களைந்து, முழு மனதாய் மக்களோடு மக்களாய் ஒன்றிணைத்து பணிவிடைகளை நிறைவேற்றும் போது இறையரசைக் கட்டியெழுப்பலாம்.

## ***2. ஒன்றிணைதலின் தடைகள் :*** (1 கொரி. 3:1-13)

பவுல் கொரிந்து திருச்சபைக்கு தரும் ஆலோசனை ஒன்றிணைந்து பணிவிடைகளை நிறைவேற்ற தூண்டுகிறது. மக்களை குழந்தைகள் என அழைக்கிறார். மேலும் அவர்கள் திட உணவு உண்ணுமளவு வளர்ச்சி பெறவில்லை என்றும்,உலகைச் சார்ந்து வாழுகின்றனர் எனவும் கூறுகிறார். பிற திருப்பணித்தூதுவருடன் தனக்கு உள்ள ஒருமைப்பாட்டை மாதிரியாய் தெரிவித்தார். தானும், அப்பல்லோ போன்றோர்களும் ஒருவரையொருவர் சார்ந்து வாழும் பணியாளர்கள் அல்ல, மாறாக கடவுளைச் சார்ந்தே வாழ்கிறோம் என்கிறார். வீட்டு வேலையிலிருந்து வயலில் இணைந்து செய்யும் வேலையாட்களை மாதிரியாய் காட்டுகிறார். மக்களிடையே காணப்பட்ட ஒற்றுமையில்லா வாழ்வை எச்சரித்தார். இணைந்து நம் உழைப்பை, முயற்சியை, பணிகளை நிறைவேற்றும் போது கடவுளின் ஆசியை நிறைவாக அனுபவிக்க முடியும் என்ற உண்மை வெளிப்படுத்தப்படுகிறது.

நாம் இறைவார்த்தைகளை அறிவிப்பதும், திட்டங்களை வகுப்பதும் எளிது. ஆனால் வாழ்வில் நடைமுறைப்படுத்துவதே முக்கியமானது. நாம் ஒன்றிணைந்து, பொதுவான வழிபாட்டுக்கும், தடையாய் நிற்கின்றவைகளை உடைத்தெறிவோம்.

## ***2. ஒன்றிணைதலின் மாதிரி*** : (யோவா. 17:9-23)

திருச்சபை என்னும் சமூகம், கடவுளால் ஏற்படுத்தப்பட்ட சமூகம். அதன் நோக்கம் கடவுளின் வெளிப்பாடுகளை உலகுக்குச் சொல்வதும், சிலுவையில் கிறிஸ்து வெளிப்படுத்திய சுயவொறுப்பின் அன்பை பிரதிபலிப்பதுமே ஆகும். மேலும் கிறிஸ்து, மானிட மக்கள் உலக பாடுகளிலிருந்து விடுபட வேண்டும், உலக வெறுப்புகளிலிருந்து காக்கப்பட வேண்டும் என ஜெபிக்கவில்லை. ஆனால் நாம் அனைவரம் ஒன்றாயிருக்கவும், தரப்பட்ட கடமைகளில் அர்ப்பணித்து செயல்படவும், இறைவனுக்காய் பாடனுபவிக்கவும் தந்தையிடம் மன்றாடினார். இந்த மன்றாட்டு ஒன்றிணைதலுக்கு மாதிரியாய் அமைகிறது.

இணைந்த, இணைக்கும் திருச்சபையாய் 70 ஆண்டுகளை கடந்து திருப்பணியில் பயணிக்கிறோம். நம் வாழ்வில் இடையூறுகளும், போட்டி, பொறாமைகளுமே மேலோங்கி நிற்கிறது. இறைவிருப்பமாகிய எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக (யோவா. 17:21) என்ற தென்னிந்தியத் திருச்சபையின் கருப்பொருளை ஒருமைப்பாட்டிற்குரிய மாதிரியாக வாழ்வில் கடைப்பிடித்து இறைப்பணிகளை நிறைவேற்றி, ஆசிகளை வாழ்வில் சொந்தமாக்கி இறையரசின் முன்மாதிரிகளாய் இறையரசைக் கட்டியெழுப்புவோம்.

திரு. M.R. **மில்ட்டன் மார்க்**

29-09-2019

மூத்த குடிமக்கள் ஞாயிறு

# முதியோரைப் பராமரித்தலும் ஏற்றுக்கொள்ளுதலும்
## CARING AND ACCEPTING THE ELDERLY

தொ.நூ. 46:28-34,47:1-10 1திமொ. 5:1-10
தி.பா. 21 லூக். 2:25-35

**"முதியோரிடம் கடுமையாய் இராதே; அவர்களைத் தந்தையராக மதித்து ஊக்குவி."**
(1திமொ. 5:1a)

எனக்கு என்னுடைய தாய் தன்னுடைய பாலைத் தியாகத்தோடு தந்தார்கள். அதற்கு ஈடாக, அவர்கள் வாழ்வின் இறுதிவரை அவர்களை பராமரித்தாலும் அந்த பாலின் விலைக்கு ஈடாகாது.

அக்டோபர் 1-ம் தேதி முதியோர் தினமாகக் கொண்டாடப்படுகிறது. முதியோருக்கு முக்கியத்துவம் தருகின்ற நிலையிலே நாமும் இந்நாளை முதியோர் ஞாயிறாக கொண்டாடுகிறோம். முதியோர் இன்றைய நாட்களில் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஆகவே அவர்களின் உணர்வுகளை மதித்து அவர்களுக்கு மரியாதையும்; மாண்பையும் உறுதிச் செய்யும் நிலையிலே இத்தகைய சிறப்பு நாட்களை முன்னிலைப் படுத்தியுள்ளோம். Erikson என்ற உளவியலாளர் "Child hood and Society" என்ற தம்முடைய புத்தகத்தில் முதிர்வயது 60 வயதிலிருந்து தொடங்குகிறது என்று கூறுகிறார். முதிர்வயது பருவம் என்பது மனித வாழ்வின் இரண்டாம் குழந்தைப் பருவம் என்று கூறுவர். குழந்தைகளை கண்ணும் கருத்துமாய் வளர்க்க வேண்டும் என்பது போல் வயது முதிர்ந்தவர்களை அவர்கள் கண்கலங்காமல் அவர்களைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்று நமக்கு நினைப்பூட்டுகிறது. முதியோர் இல்லத்தில் இருப்பது ஆசீர்வாதம். இறைவன் கூறும் ஆசிகளில் ஒன்று "முதியோர்களைப் பராமரித்தால் நெடுநாள் வாழும் ஆசீர்வாதமும், நலமான வாழ்க்கை பெறலாம்." ஆகவே இறைத்திட்டத்தை நிறைவேற்றி முதியோரை பராமரித்து அவர்களை ஏற்றுக் கொள்வோம். மூன்று சிந்தனைகள்:

### *1. அன்புடன் கவனிக்கப்பட வேண்டிய முதியோர்* :
(தொ.நூ. 47:1-10)

பெற்றோர் தங்கள் வயதானக் காலத்தில் பிள்ளைகளுடைய உண்மையான மற்றும் முழுமையான அன்பை எதிர்பார்த்து

காத்திருக்கின்றார்கள். தாங்கள் பேணிக்காத்த பிள்ளைகள் தங்களுடைய முதுமையில் தங்களை அரவணைத்து பாதுகாப்பார்கள் என்ற நம்பிக்கையோடு இருப்பார்கள். ஆகையால் நம்மையே முழுவதுமாகச் சார்ந்து வாழ வேண்டிய கட்டாயத்திலிருக்கும் அவர்களைக் கரிசனையோடு கவனிப்பது நமது தலையாய கடமையாகும். இன்றைய பழையஏற்பாட்டுப் பகுதியில் யோசேப்பு தன் வயதான தகப்பனார் மீது எவ்வளவு கரிசனையோடு நடந்து கொள்கிறார் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. யோசேப்பு எகிப்து நாட்டில் அனைத்து அதிகாரமுடையவராகவும் அரசருக்கு அடுத்த நிலையில் இருப்பவராகவும் மிகுந்த செல்வச் செழிப்போடு வாழ்பவராகவும் தன்னைக் காண்பிக்காமல், தோற்றத்தில் எளிமையும், முதுமையும் கொண்ட தன் தகப்பனாரோடு அரவணைத்து வாழ்வதையே பெரிதாக எண்ணினார். யோசேப்பு தனக்கிருந்த அதிகாரம், ஆடம்பரமிக்க வாழ்வை, முதுமையில் வாடிக் கொண்டிருக்கும் தன் தகப்பனாரோடு சேர்ந்து வாழ்வதற்கான தடைகளாக எண்ணாமல், இவற்றையெல்லாம் தன் தகப்பனாரின் ஆசீர்வாதமாகவே எண்ணினார். யோசேப்பு தன் இளவயதில் தன்னை நேசித்த, அன்பு செலுத்திய தன்னுடைய தகப்பனாரை அவருடைய முதிர்வயதில் அவரின் சொல்லுக்கு மதிப்பு கொடுத்து அவரை கவனிப்பதன் மூலமாகவே நிறைவு செய்யமுடியும் என்பதை அறிந்து கொண்டார். எனவே பெற்றோர்களின் மனம் குளிரும் படியாக நடந்து கொள்ளும் எந்தப் பிள்ளைகளும் இறைவனால் கைவிடப்படமாட்டார்கள் என்பதற்கு யோசேப்பின் வாழ்க்கை நமக்கு ஒரு முன் மாதிரியாக உள்ளது.

இன்றைய இயந்திர உலகில் பெற்றோர்களை ஒரு தேவையற்ற சுமையாகவே இளம் தலைமுறையினர் கருதுகின்றனர். எனவே பெற்றோர்களை ஏற்றுக் கொண்டு கவனிப்பதிலும், மரியாதை செலுத்துவதிலும், அன்பு செலுத்துவதிலும் தோல்வி காணுகின்றனர். அன்பு என்னும் பண்பு இல்லாமல் பணத்தின் மூலம் தங்கள் கடமையை நிறைவேற்றிவிடலாம் என்று எண்ணுகின்றனர். யூதர்கள் பெற்றோர்கள் மீது கரிசனை இல்லாமல் "கொர்பான்" என்னும் காணிக்கையை கொடுத்துவிட்டால் தங்கள் கடமை முடிந்து விட்டது என்னும் மனபோங்கினை இயேசு கண்டிக்கிறார். நாம் எவ்வாறு நடந்து கொள்கிறோம் என்பதை ஆய்ந்தறிந்து கண்ணியமுடன் நடந்துக் கொள்ளுவோம்.

***2. ஆதரிக்கப்பட வேண்டிய முதியோர்*** : (1தீமொ. 5 : 2-8)

கைம்பெண்களுக்கு மதிப்பு கொடு. ஆதரவற்ற கைம்பெண்களையே இங்குக் குறிப்பிடுகிறேன் 1தீமோ. 5:3-ல்

சொல்லப்பட்டுள்ளது. ‘மதிப்பு கொடு’ என்ற சொல்லின் கிரேக்க வார்த்தை Timao என்பதாகும். இந்த வார்த்தையின் விளக்கம் - முதியவர்களை நாம் மதித்து விட்டால் மட்டும் போதாது, முதியவர்களுக்கு தேவையானதை நாம் கொடுத்து அவர்களை ஆதரிக்க வேண்டும். 1தீமோ. 5 : 5 ‘ஆதரவின்றி’ என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு கிரேக்க மூல வார்த்தை Desolate ஆகும். இது தனிப்பட்ட நிலையில் உள்ள முதியவர்கள் ஆதரவற்ற நிலையில் இருக்கின்றனர். இவர்கள் மேல் கொண்ட எதிர்நோக்கு என்பது இதன் விளக்கம் ஆகும். முதியோர் தங்களின் பலம், பணம், வசதிகள் குறைந்த நிலையில் கடவுளையே பார்க்கின்றனர். இந்த நிலையில் அவர்களின் துயர் நீக்க நாம் இறைவனின் கரமாகச் செயல்பட அழைக்கப்படுகிறோம். நரைமுடி மதிப்பிற்குரிய மணிமுடி அது நேர்மையான நடத்தையினால் வரும் பயன் (நீதி. 16:31) தம் சொந்த குடும்பத்தினர் முதியோரை ஆதரிக்க வேண்டும் என்னும் கருத்து இப்பகுதியில் வலியுறுத்தப்படுகிறது. 1 தீமோ. 5:8-ல் ‘தம் உறவினரை; சிறப்பாக தம் வீட்டாரை ஆதரியாதோர் விசுவாசத்தை மறுதலிப்பவராவர் அவர்கள் விசுவாச மற்றோரைவிட தாழ்ந்தோராவர்.’

ஒரு சாதாரண குடும்பம், தாயும் மூன்று பிள்ளைகளும். ஒருமகனும், இரண்டு மகள்கள். மூவருக்கும் திருமணம் ஆனது. தாய் மகனின் பராமரிப்பில் வாழ்ந்து வந்தார். இல்லத்தின் மருமகளின் தவறான ஆலேசனையால் தாயை மகன் ஒரு கோவிலில் கொண்டு விட்டுவிட்டு சென்று விட்டான். இந்த தாய் மழையில் நனைந்தார்கள், இரவும் பகலும் குளிரில் கஷ்டப்பட்டார்கள், சரியான உணவு இல்லை. இந்நிலையில் கொண்டு விட்ட மூன்று நாட்களிலேயே இறந்து போனார்கள். அனாதை என்று சொல்லி கோவில் நிர்வாகம் அடக்கம் செய்தார்கள். இல்லத்தில் இன்னும் பல நாட்கள் வாழ வேண்டிய அம்மா, பிள்ளைகள் இருந்தும் அனாதையாய் மடிந்தார்கள். இந்த சோக நிகழ்வு நம் நெஞ்சைப் பாதிக்கும் ஒரு நிகழ்வு.

முதியோருக்கு உணவு, உடை, இருப்பிடம் வழங்குதல்; மருத்துவ உதவி பெறச் செய்வது மேலும் அவர்களோடு நேரத்தை செலவிடுவது எனும் நிலையில் அவர்களை ஆதரித்து தாங்குவோம்.

### *2. ஆசீரின் அடையாளமான - முதியோர்* : (லூக். 2 : 25-35)

பிறக்கும் பிள்ளைகள் தூய்மைச் சடங்கு நிறைவேற்றப்பட வேண்டுமென்பது முறைமையாகும். மட்டுமன்று ஆண்தலைப்பேறு அனைத்தும் ஆண்டவருக்கு அர்ப்பணிக்கவும் வேண்டும். அவ்வாறே இயேசுவும் பெற்றோரால் ஆலயத்தில் அர்ப்பணிக்கப்படவும், திருசட்ட

முறைமையை நிறைவேற்றவும் கொண்டுவரப்பட்டார். இந்நிலையில் தான் இஸ்ராயேலருக்கு வாக்களிக்கப்பட்ட ஆறுதலை எதிர்பார்த்து ஆலயத்திலிருந்த சிமியோன் இயேசுவாகிய பிள்ளையை கையில் ஏந்தி கடவுளைப் போற்றி மகிமைப்படுத்துகிறார். நேர்மையாளராகவும், இறைப்பற்றுடையவராகவும் தூயஆவியால் நிறைக்கப்பட்டிருந்த சிமியோன் மெசியாவாகிய இயேசுவை கையில் ஏந்தி கடவுளைப் போற்றும் உன்னத அனுபவமே சிறப்பாகும். அதுவே முதுமையின் மேன்மையும், முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகிறது. முதியோரின் அன்பு, அரவணைப்பு, அனுபவம் வளர்ச்சிக்குரிய நல்ல தடயத்தை ஏற்படுத்தும் என்பது மட்டுமன்று.

***3. அவர்களே மதிப்பிற்குரிய மணிமுடிகளாவர்:*** (நீதி. 16:31) முதியோரின் முதிர்ச்சியான முடிவுகள் சமூகத்தின் கூட்டமைப்பில் நல்ல தலைவர்களையும் ஏற்படுத்தியது என்பதே திருவாக்காகும் (எண். 11:16,17). ஆசீருக்கு அடையாளமாக ஆண்டவரில் முதன்மைபடுத்தபட்டுள்ள முதியோரை கண்கலங்காமல் பாதுகாப்பதும் அவர்களது ஆசீருக்கேற்ப வாழ்வதும் முக்கியமானதாகும். யோசேப்பின் கண்ணியமான வாழ்வு நமக்கு முன்மாதிரியே. ஆகவே தான் யாக்கோபு முதுமையின் உன்னத நிலையில் தன் மக்களையெல்லாம் கூடி வரச் செய்து, அவர்களை ஆசீர்வதிக்கிறார் (தொ.நூ. 49). முதியோரின் ஆசி நமக்கெல்லாம் வாழ்வின் கருவூலமே. அதை அடைவதற்கு

எட்டு வயது மகளின் விண்ணப்பம் "எனது தாத்தா பாட்டியினால் எங்கும் நகர இயலாதுஅவர்களது கால்கள் நடக்கும் போது காயப்படுகின்றன. அவர்களை சந்திக்க பிறர் வருவதை அதிகமாக விரும்புகின்றனர். இயேசுவே, என்னை அவர்களைக் குறித்து நினைவு கொள்ள, அவர்களைக் கவனிக்க, அவர்களுக்கு விண்ணப்பம் பண்ண மறவாதிருக்கவும் உதவும், அவர்களின் வாழ்வை எளிதாக்க அவர்கள் பெலவீனத்திலும், என் மேல் அவர்கள் செலுத்தும் அன்பை நான் இன்பமுற அனுபவிக்க எனக்கு உதவும்" ஆமென்.

2007 - ம் ஆண்டின் சமூகநல வாரியம் இந்திய அரசு இதழில் 31-12-2007 தேதியிட்டு பெற்றோர் மற்றும் பெரியோரை காத்து பராமரிப்பது குறித்து சட்டமாக்கியுள்ளது. பெற்றோருக்கு மாதந்தோறும் உதவவும் அவர்களைக் காப்பாற்றவும் தலையாய கடமை பிள்ளைகளுக்கும், தலைமுறைகளுக்கும் உண்டு. இச்சட்டத்தின் வாயிலாக தவறிழைத்த பலர் தண்டிக்கப்பட்டும் உள்ளனர். ஆகவே முதியோரை முறையாக பராமரித்து, அவர்களுக்கு கொடுக்க வேண்டிய மரியாதையையும், கனத்தையும் கொடுத்து ஏற்றுக் கொள்வோம். முதியோரை ஆதரிப்போம்.

அருள்திரு. S.G. ***பீபின்***

06-10-2019



# அனைத்து இறைமக்களின் குருத்துவம்

**PRIESTHOOD OF ALL BELIVERS**

ஏசா. 61:1-11 — 1 பேதுரு 2:1-10

திபா. 135:12-21 — யோவா. 17:1-8

**"ஆனால் நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழி மரபினர், அரசகுருக்களின் கூட்டத்தினர், தூய மக்களினத்தினர், அவரது உரிமை சொத்தான மக்கள்...."**

(1பேதுரு. 2:9)

பழைய ஏற்பாட்டிலிருந்து "குருத்துவம்" எனும் வார்த்தையினை புரிந்து கொள்ளும் போது, குருத்துவ திருப்பணியில் திருநிலைப் படுத்தப்பட்ட ஆசாரியர்கள் என்று அறியப்பட்டவர்கள் ஆலயத்தின் சமயம் சார்ந்த திருப்பணிவிடைகளை நிறைவேற்றுகிறவர்கள் என புரிந்து கொள்ளமுடிகிறது. மூததையின் காலத்தில் (Ca.2000 -1700 B.C) குருத்துவப் பணிவிடைக்கென்று தனிப்பட்டவர்கள் பிரித்தெடுக்கப்படவில்லை. குடும்பத்தின் தலைவரே இப்பணியினை நிறைவேற்றி தூய இடங்களில் பலி செலுத்தி வந்தனர் (ஆதி. 31:54). இஸ்ரவேலர் குடியுரிமை பெற்று சமூகமாக வாழ்ந்த பின்னர், இப்பணிக்காக சிறப்பு வகுப்பினர் ஏற்படுத்தப்பட்டனர். ஐந்தாகம சட்டத்தின் அடிப்படையில் குருத்துவப் பணியானது யாக்கோபின் குமாரரான லேவிக் குடும்பத்தாருக்கு கொடுக்கப்பட்டது. காரணம் என்னவென்றால் மற்ற கோத்திரத்தாருக்கு கொடுக்கப்பட்ட வாக்களிக்கப்பட்ட தேசத்தில் பங்கு (Inherted Land) லேவி கோத்திரத்துக்கும் கொடுக்கப்படவில்லை (உபா. 10:8,9). ஆண்டவரே அவர்களது உரிமை சொத்து. ஆகவே தங்களது உரிமை சொத்தாகிய ஆண்டவரின் திருப்ணியினை லேவி குலத்தவர் குருத்துவ பணிவிடையாக நிறைவேற்றினர். ஆரோனும் அவரது குடும்பமும் இத்திருப்பணிக்காக பிரிந்தெடுக்கப்பட்டிருந்தனர் (யாத். 28:1). ஆரோனும் அவரது பிள்ளைகளும் குருத்துவ பணிக்காக திருநிலைப்படுத்தும் எண்ணெய் மற்றும் ஆடைகளை பெற்றிருந்து மக்களுக்கு தீர்ப்பு கூறினர் (யாத். 28:29).

ஆரோன் குடும்பத்தார் இத்திருப்பணியினை சிறப்பான நிறைவேற்றி மக்கள் கடவுளோடு உறவு கொண்டு வாழ தொடர்பாளர்களாகவும், அரசர்களை அப்பணிவிடைக்காக திருநிலைப்படுத்துகிறவர்களாகவும், சமயம் சார்ந்த கடமைகளை நிறைவேற்றுகிறவர்களாகவும் செயல்பட்டனர். ஆனால் இஸ்ரவேலருக்கு ஆண்டவர் "எனக்கு நீங்கள் குருத்துவ அரசர்களாகவும், தூய மக்களினமாகவும் இருங்கள்" (யாத். 19:8) வாக்கு கொடுத்திருந்தார். இதை

அவர்கள் வெட்கத்துக்கிகுரியவர்கள் என்று கூறுகிறார் (ஏசா. 61:7). வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதேலே இயேசுகிறிஸ்து. எபிரேய நூலில் இயேசுகிறிஸ்துவை பிரதான ஆசாரியராக ஆசிரியர் சித்தரிக்கிறார். இயேசுகிறிஸ்து ஆசாரியராகவும், அரசராகவும் செயல்பட்டார். பேதுரு எழுதிய முதல் திருமுகத்தில், பேதுரு அனைத்து இறைமக்களும் அரச குருக்களின் கூட்டத்தினர், ஆண்டவரின் உரிமை சொத்தான மக்களினம், ஆண்டவராலே இப்பணிவிடைக்காக தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் என்ற உண்மையினை கூறி, குருத்துவ பணிவிடை அதற்காக பிரித்தெடுக்கப்பட்ட மக்களுக்கு மட்டுமன்று. அனைவரும் இதனை நிறைவேற்றலாம். அனைத்து இறைமக்களும் இப்பணிவிடைக்காக தங்களை ஆயத்தமாக்க வேண்டும் எனக் கூறுகிறார்.

## ***1. அங்கீகாரம் அருளும் குருத்துவம்*** : (ஏசா. 61:6)

“நீங்களோ ஆண்டவரின் குருக்கள் என்று அழைக்கப்படுவீர்கள்”

பாபிலோனிய சிறையிருப்புக்கு பின்னர் எருசலேமில் வாழ்ந்த இஸ்ரவேலர் சிறுமைப்பட்டவர்களாகவும், உடைந்த இருதயமுள்ளவர்களாகவும், துயரமடைந்தவர்களாகவும் இருந்தனர். எருசலேம் பட்டணம், எருசலேம் ஆலயம் பாழாய் இருந்தது. குருத்துவப் பணிவிடை செய்வதற்கு குருக்கள் இல்லாத நிலையும் இருந்தது. தன்னை அபிஷேகம் பண்ணப்பட்ட மெசியாவாக அடையாளப்படுத்தியவர் (ஏசா. 61:7). இஸ்ரவேலின் இழிநிலையினைக் கூறுகிறார். இப்பகுதியில் இஸ்ரவேலரை ஒரு தேசமாக காட்டாமல். சீயோனில் அழுது கொண்டிருப்பவர்களாக காட்டுகிறார். பாதிக்கப்பட்டவர்கள் என்று மட்டும் சொல்லாமல் சியோனிலே துயரமடைந்து வாழ்கின்ற இவர்களுக்கு கடவுள் விடுதலை கொடுத்து, அங்கீகாரமன்றி வாழ்கின்றவர்களுக்கு அங்கீகாரம் கொடுக்கிறார் என்பதே இப்பகுதியின் செய்தி.

கடவுள் அருளும் அங்கீகாரம் என்னவெனில் வெட்கத்தோடும், அவமரியாதையோடும் வாழ்கிற மக்கள் கடவுளின் நிறைவான ஆசியினைப் பெற்றவர்களாகவும் அங்கீகரிக்கப்பட்டவர்கள் (ஏசா 61:6). கடவுள் தமது உடன்படிக்கையான என்றும் நிலைத்திருக்கும் உடன்படிக்கையினை (everlasting covenest) இவர்களோடு ஏற்படுத்திய கடவுளின் பிள்ளைகள் எனும் உரிமையினைக் கொடுக்கின்றார். குருத்துவ அங்கீகாரம் பெற்ற இம்மக்கள் மீட்பின் ஆடையினையும், துதியின் ஆடையினையும் அணிந்து கடவுளின் தூய மக்களினமாக அனைவருக்கும் முன்பாக காட்சி தருவார்கள் (ஏசா 61:10,11). குருத்துவ அங்கீகாரம் பெற்ற இவர்கள் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினர், இவர்கள் கடவுளுக்கு சொந்தமாக இருக்கும்படி அப்படி அவர் தெரிந்து

கொண்டுள்ளார் (உபா. 7:6). இறைத் தெரிதல் மிகவும் சிறப்பானது. இருப்பதில் மிகவும் least யானதையும் (உபா. 7:7), மற்றவர்களால் புறக்கணிக்கப்பட்டவர்களையும் கடவுள் தெரிந்து கொள்கிறார். இறைமக்கள் அனைவரும் அவரால் தூய மக்களினனமாக, ஆண்டவரின் குருக்களாக வாழ அழைக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.

***2. அரச குருக்களாக்கும் குருத்துவம்*** : (1 பேதுரு 2:5)

"இயேசுகிறிஸ்துவின் வழியாய் கடவுளுக்கு உகந்த ஆவிக்குரிய பலிகளைப் படைக்கும் தூய குருக்களின் கூட்டமாகவும் இருப்பீர்களாக."

இஸ்ரவேலரது வரலாற்றில் குருக்களும், அரசர்களும் சிறப்பிடம் பிடித்தவர்கள். ஆசாரியர்களும், அரசர்களும் மக்களை ஆளுகை செய்திட கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்டு அபிஷேகம் செய்யப்பட்டவர்கள். இவர்களிடையே மோதல்களும் இருந்தது. அரசர்கள் தவறு செய்யும் போது கடவுள் ஆசாரியர்கள் மூலமாக எச்சரித்ததும் உண்டு. இஸ்ரவேல் மக்களைக் குறித்து கடவுள் குறிப்பிடும் போது, "எனக்கு நீங்கள் குருத்துவ அரசராகவும், தூய மக்களினமாகவும் இருப்பீர்கள்" (யாத். 19:6) என குறிப்பிடுகிறார். பேதுரு நிருபத்திலும் இதே உண்மையினைப் புரிந்து கொள்ள முடிகின்றது. இறைமக்கள் அனைவரும் இயேசுகிறிஸ்துவின் வாயிலாக அரச குருக்களாக்கப்படுகின்றனர். இயேசு கிறிஸ்துவில் ஆசாரிய தன்மையினையும், அரச தன்மையினையும் அடங்கியிருப்பதை அவரது பிறப்பு, பணிவிடை, அவரது இறப்பு ஆகிய நிலைகளில் புரிந்து கொள்ளமுடிகிறது. ஆகவே இயேசுகிறிஸ்துவில் வெளிப்பட்ட அரச குருத்துவம் திருமுழுக்கு மூலமாக அவரோடு இணைக்கப்பட்டட அனைவரிடமும் வெளிப்பட வேண்டும்.

இயேசுகிறிஸ்து வாயிலாக அரசகுருக்களாக்கப்பட்ட இறை மக்கள் கடவுளுக்கு உகந்த ஆவிக்குரிய பலிகளை படைக்கின்றவர்களாக இருக்கவேண்டும் (1 பேதுரு 2:5). கடவுளுக்கு உகந்த அல்லது ஏற்புடைய ஆவிக்குரிய பலியாக இரக்கம் காட்டுதலை (மத் 12:7) புரிந்து கொள்ளமுடிகிறது. பவுல் குறிப்பிடும் போது கடவுளுக்கு உகந்த, தூய, உயிருள்ள பலியாக உங்களை படையுங்கள் என்கிறார் (ரோமர் 12:1). ஆண்டவர் விரும்புவது உயிருள்ள பலி, பழைய ஏற்பாட்டின்படி கடவுளை திருப்திப்படுத்தும் பலியல்ல, வாழ்வே பலியாக மாறுவதைத் தான் கடவுள் விரும்புகிறார். ஆண்டவர் விரும்பும் பலியினை நிறைவேற்றிட அழைக்கப்பட்டுள்ள அரச குருக்களாகிய மக்கள் உலககத்தின் போக்கில் போகாமல், உள்ளம் புதுப்பிக்கப் பெற்று மாற்றம் பெற்றவர்களாகவும், கடவுளின் திருவுளம் (சித்தம்) அவரது வாழ்வில் என்னவென்பதை

அறிகிறவர்களாகவும், எது நல்லது, எது உகந்தது, எது நிறைவானது என்பதை அறிந்து நற்சான்றுடன் வாழ முடியும். ஆகவே இயேசுகிறிஸ்துவில் வெளிப்பட்ட அரச குருத்துவத்தின் சிந்தனையினை வெளிப்படுத்தி வாழ்வோம்.

***3. ஆண்டவருக்கு உரியவராக்கும் குருத்துவம்*** : (யோ 17:6)

"…. உமக்கு உரியவர்களாயிருந்த அவர்களை நீர் என்னிடம் ஒப்படைத்தீர். அவர்களும் உம் வார்த்தைகளை கடைபிடித்தார்கள்"

அனைத்து இறைமக்களும் ஆண்டவரின் குருத்துவ பணிவிடையில் பங்கு பெறுகிறவர்கள் என சிந்திக்கும் போது அனைவரும் ஆண்டவருக்கு உரியவர்கள். அவரின் பிள்ளைகள், அவரது உரிமைச் சொத்தான மக்களினம் அல்லது சொந்த மக்கள் என்று புரிந்து கொள்ளவேண்டும். இஸ்ரவேல் மக்களைக் குறித்து குறிப்பிடும் போது "நீங்கள் என் வார்த்தைக்கு செவிசாய்த்து, என் உடன்படிக்கையை கடைபிடித்ததினால் …….நீங்களே எல்லா மக்களினங்களிலும் என் தனிச் சொத்தாவீர்கள்." (யாத். 19:5) என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆண்டவருக்கு செவிகொடுத்தாலும் அவரது உடன்படிக்கையினை கைகொண்டு வாழ்வதும் அவருக்கு உரியவராக்கும் செயலாகும். இதனையே கடவுள் அனைவரிடமும் எதிர்பார்க்கிறார்.

ஆண்டவருக்கு உரியவர்களாக குருத்துவ நிலையில் அனைவரும் தூய்மையுள்ளளவர்களாக வாழவேண்டும். ஏனென்றால் இத்திருப்பணிக்கு அனைவரையும் அழைத்தவர் தூய்மையுள்ளவர். அவர் தூய்மையுள்ளளவராய் இருப்பதுபோல் அனைவரும் வாழ்வின் நடத்தையிலெல்லாம் தூய்மையுள்ளளவராய் இருக்க வேண்டும் (1 பேதுரு 1:15). ஏனென்றால் ஆண்டவர் தூயவராயிருந்து அவரது மக்கள் அவருக்குரியவராயிருக்கும்படி அவர்களை மக்ககளினங்களின்று தெரிந்தெடுத்தார் (லேவி.19:26). ஆகவே இறைமக்கள் தங்களைப் புனிதப்படுத்தி தூயவர் ஆக வேண்டும் (லேவி.19:7). குருத்துவத் திருப்பணி தூய்மையானது தூயவரின் துணையோடு, தூய்மைப்படுத்தப்பட்டவர்கள் நிறைவேற்றுவது. ஆகவே அனைத்து இறைமக்களின் குருத்துவ திருப்பணியில் பங்கு பெறுகிறவர்கள் ஆண்டவருக்குரியவர்களாக தூய்மையோடு வாழவேண்டும்.

இறையாசி நம்மோடிருப்பதாக

அருள்திரு. A. **மகேர் ஷால் அஸ்பாஸ்**

13-10-2019 **மாற்றுத்திறனுடையோர் ஞாயிறு**

# இயலாமை : பராமரித்தலும் மதித்தலும்

**DISABILITY : CARE AND HONOUR**

2சாமு. 9:1-13 திப. 9:32-35
தி.பா. 136 மாற். 3:1-6

**"அவரிடம் ஐனேயா இயேசுகிறிஸ்து உம் பணியை போக்குகிறார் எழுந்து உம் படுக்கையை நீரே சரிப்படுத்தும்"** (தி.ப. 9:34)

"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது". கூன் குருடு செவிடு பேடு இன்றி பிறத்தல் அதனினும் அரிது என்ற பாடல் வரிகள் ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் முழுமையின் முக்கியத்துவத்தினைப் பேசுகின்றது. "மாற்றுத்திறனாளி" என்பவர் உடலிலோ அல்லது மனதிலோ ஏற்பட்ட மாற்றத்தின் காரணமாக சில செயல்களை செய்ய முடியாமல் இருப்பவர் மட்டுமே. மரபணுவினால் பிறப்பில் ஏற்படும் மாற்றங்கள், தாயின் கருவில் இருக்கும் பொழுது ஏற்படும் நோய்கள் அல்லது விபத்தினால் ஏற்படும் மாற்றங்கள் என பலநிலைகளில் ஒருவர் மாற்றுத் திறனாளியாக்கப்படுகிறார். இயல்பாக இருக்கின்ற மனிதனோடு இயலாத மனிதனை ஒப்புமைப்படுத்திப் பார்ப்பதே இப்பிரச்சனைக்கு முக்கிய காரணமாகும். ஒருவருடைய குறைவை சுட்டிக்காட்டுவது மனித இயல்பு. அதே சமயம் ஒருவருடைய உடலின் குறைவை, இயலாமையை எள்ளிநகையாடுவது, தரம் தாழ்த்தி பேசுவது மனித நேயமற்ற செயலாகும். இயலாமையில் இருப்போரை எப்படி கரிசனையோடு பராமரிக்க வேண்டும் என்பதை தாவீது மேவிபோசேத்துக்கு காட்டிய கரிசனையை அடிப்படையாகக் கொண்டு சிந்திப்போம்.

### *1. மீதியாய் இருந்தவனுக்கு நீதி செய்தான்* : (2 சாமு. 9:1,3)

மீதியாயிருத்தல், மீந்திருத்தல், மீந்தவை என்பவை கடைநிலையில் இருப்பதைக் குறிக்கின்றன. உண்ட மீதி உணவை எச்சில் என்கிறோம். எண்ணிய பணத்தில் மீதியை சில்லறை என்கிறோம். விளையாட்டுப் போட்டியில் விளையாடாமல் மீந்திருப்பவரை மாற்றுவீரர் (Substitute) என்கிறோம். மீதியை அற்பமாக எண்ணுகிறோம். இஸ்ரவேலின் ராஜாவாகிய சவுல் மரணமடைந்த போது தாவீது முடிசூட்டப்பட்டார். சிம்மாசனத்திற்கு ஆபத்தினையும் அச்சுறுத்தலையும் கொடுக்கக்கூடிய எந்தவொரு முந்தைய வம்சத்தினைச் சேர்ந்தவரையும் கொல்வது மரபு. இதனால்

கருவினிலிருக்கும் அரசவம்சத்தின் வாரிசையும் வேரறுக்கத் தயங்காதபோது அரியணை ஏறிய புதிய மன்னன் தாவீது ஒரு வித்தியாசமான அணுகுமுறையை பின்பற்றுகிறார். யோனத்தானின் பொருட்டு சவுலின் வீட்டாருக்கு நான் கருணை காட்டுவதற்கு இன்னும் யாராவது மீதியிருக்கின்றனரா? (2 சாமு. 9:1) என மீதியிருப்பவனைக் குறித்து கரிசனையோடு விசாரிக்கிறார். 2 சாமு. 9:3-ல் கடவுளின் கருணையை நான் சவுலின் வீட்டாருக்கு காட்டுவதற்கு இன்னும் யாராவது மீதியிருக்கின்றனரா? எனக் கேட்பதோடு எங்கே அவன் என்று விசாரிக்கிறான் (வ.4). அவனுடைய வார்த்தைகளில் ஒரு கரிசனை, தேடல் இருப்பதைப் பார்க்கிறோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் மீந்தவைகள் சேதமாகாதபடி அவைகளை எடுத்து வையுங்கள். என மீந்தவைகள் மீது கரிசனையுடையவராக இருந்தார் (யோவா. 6:11). காணாமற்போன ஆட்டினை, நாணயத்தை, மைந்தனை குறித்த இயேசுவின் கரிசனையை லூக்கா. 15-ம் அதிகாரத்தில் உவமைகளாக காணலாம். அன்னை தெரசா "இன்று மேலை நாடுகளில் உள்ள மிகப்பெரிய வியாதி காசநோயோ (TB) அல்லது தொழுநோயோ அல்ல. ஆனால் தனிமை, விரக்தி மற்றும் நம்பிக்கையற்ற தன்மை ஆகியவை மட்டுமே." என்று கூறியதிலிருந்து மீதியாயிருத்தல் அல்லது தனிமைப்படுத்தப்படலின் வேதனையை புரிந்து கொள்ளமுடியும். தாவீது மீதியாயிருந்த மேவிபோசேத்துக்கு நீதி செய்தான்.

### *2. பாதியாயிருந்தவனின் பீதியை போக்கினான்* :

(2 சாமு. 9:7)

மேவிபோசேத்து தன் வம்சத்திலே மீதியாயிருந்தவன் மட்டுமல்ல அவன் பாதி மனிதனாய் இருந்தான். முடவன் என்ற வார்த்தை (2 சாமு. 9:3,13) இரண்டு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. முடவன் என்றாலே கால்கள் குறைபாடுள்ளவன் என புரிந்து கொள்கிறோம். ஆனால் நடமாட முடியாமல் தடுமாறி நின்றவனாய் இரண்டு கால்களும் முடமானவன் என சொல்லும் போது அவனுடைய இயலாமைத் தன்மையின் உச்சகட்டம் வலியுறுத்தப்படுகிறது. பிறக்கும் போது நிரந்தர ஊனத்துடன் பிறப்பது வேறு ஆனால் ஆபத்து மற்றும் விபத்தினால் இடையில் வருகின்ற ஊனம் வேறு. மேவிபோசேத்துக்கு ஆதியிலே வந்த இயலாமை அல்ல; பாதியிலே தாதியினால் வந்த இயலாமை. நம்மை கவனமாக பார்த்துக் கொள்ள வேண்டியவர்களே நம்மை தவற விடுகின்ற போது துடித்து துடித்துப் போகின்றோம். சவுலும் யோனத்தானும் மடிந்த செய்தி கேட்டு ஓடிப் போன அவசரத்தில் தாதியினால் முடமான (2சாமு. 4:4) மேவிபோசேத்து வாழ்வில் நடைபிணமாக வாழ்ந்து கொண்டிருந்தான். அவனுக்கு விரும்பத்தக்க ரூபமில்லை. திருமறையில்

மனிதரைப்பற்றிச் சொல்லும் போது கோலியாத்தின் உயரம் ஆறு முழமும் ஒரு ஜாணுமாம் (1சாமு. 17:6). தாவீது பராக்கிரமசாலி, யுத்தவீரன், காரியசமர்த்தன், சவுந்தர்யமுள்ளவன் (1சாமு. 16:18). சவுல் சவுந்தர்யமுள்ளவன் எல்லா ஜனங்களும் அவன் தோளுக்குக் கீழ் இருக்கத்தக்க உயரமுள்ளவனாயிருந்தான். (1சாமு. 9:2). அப்சலோமுக்கு உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை மட்டும் ஒரு பழுதும் இல்லாதிருந்தது (2சாமு. 14:25) என்று அவர்களின் உருவத்தின் முழுமையை வலியுறுத்துகிறது. இவர்களின் உயரத்தையும் உருவ அழகையும் பார்க்கும் போது மேவிபோசேத்து இரண்டு கால்களும் முடமான பாதி மனிதனாக இருக்கிறான். அடியேன் (வ. 6), செத்த நாயைப் போல் இருக்கிறேன்.(வ. 8),உமது அடியேன் (வ. 8), என தன்னைப் பற்றி தாழ்வான எண்ணம் கொண்டிருந்தான். தன்னைத் தாவீது கொலை செய்து விடுவான் என்கிற பீதியில் இருந்தவனிடம் நீ பயப்படாதே (வ. 7) என்று கரிசனையோடு பேசி அவன் பயத்தை, பீதியை போக்குவதைக் காணலாம்.

தமிழ்நாட்டிலுள்ள சேலம் மாவட்டத்தில் பெரியவடகம்பட்டி கிராமத்தில் ஒரு ஏழைக் குடும்பத்தில் ஆறு குழந்தைகளில் ஒருவராக மாரியப்பன் பிறந்தார். அவருடைய தந்தை குடும்பத்தை கைவிட்டுவிட அவரது தாயார் சரோஜா காய்கறி வியாபாரம் செய்து, செங்கலைச் சுமந்து கடினமாக உழைத்து தன் பிள்ளைகளை வளர்த்தார். ஐந்து வயதில் மாரியப்பன் பள்ளிக்குச் செல்லும் போது குடிபோதையில் பேருந்து ஓட்டுநர் ஒருவர் அவன் மீது பேருந்தை ஏற்றியதால் வலது கால் முறிந்து நிரந்தர இயலாமை ஏற்பட்டது. இந்த பின்னடைவு இருந்த போதிலும், 2016-ம் ஆண்டு ரியோ-டி-ஜெனிரோவில் நடைபெற்ற பாரா ஒலிம்பிக் போட்டியில் நீளம் தாண்டுதல் போட்டியில் போட்டியின் தடைகளைத் தாண்டி சிகரம் தொட்ட மாரியப்பன் தங்கம் வென்று இந்தியாவிற்கு பெருமை சேர்த்தார். 2017-ம் ஆண்டு பத்மஸ்ரீ மற்றும் அர்ஜுனா விருதுகளைப் பெற்ற அவர் தன்னுடைய தாய் மற்றும் பயிற்சியாளருடைய ஊக்குவிப்பே இந்த வெற்றிக்கு காரணம் எனக் கூறினார். உலகத்தில் இயல்பான மனிதர்கள் படைக்கும் சாதனையைவிட மாற்றுத்திறனாளிகள் படைக்கும் சாதனைகள் பல. சாதனைகள் படைக்க ஊனம் ஒரு தடையல்ல என்பதற்கு சான்றாகத் திகழும் மாரியப்பனின் பயம் தான் சார்ந்திருந்தவர்களால் நீக்கப்பட்டது என்பது உலகறிந்த உண்மை.

### *3. வீதியிலே விழுந்து கிடந்தவனுக்கு விருந்தோம்பல் செய்தான்* : (2 சாமு. 9:7)

மீதியாய், பாதியாய், ஊனமானாலும் உயிரோடு காக்கப்பட்ட மேவிபோசேத்தை தாவீது அடையாளம் காண்கிறான். அங்கவீனனுக்கு பரிதாபத்தையல்ல அனுதாபம் காட்டுகிறான். அன்னவஸ்திரம் அல்ல,

அங்கீகாரம் என்னும் அங்கவஸ்திரம் கொடுக்கிறான். நித்தம் என் பந்தியில் அப்பம் புசிப்பாய் (2 சாமு. 9:7,10,11,13) என்று தாவீது கொடுத்த உறுதி மொழியால் வீதியிலே விழுந்து கிடந்த முடவன் இப்போது உயரமான விருந்து மேஜையில் ஒய்யாரமாக கொம்பு தேன் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார். கால்களை இழந்திருந்தவனுக்கு தாவீது தன்மானத்தை, தன்னம்பிக்கையை உணவோடு ஊட்டுகிறார். இரண்டு கால்களும் இல்லாதவன் ராஜகுமாரரில் ஒருவனாக எண்ணப்பட்டு இப்போது ராஜ நடை போடுகிறான் (வ.11). முன்பு மேஜையின் கீழ் விழும் துணிக்கைகூட இல்லாதவன் இப்போது ராஜபோஜனம் சாப்பிடுகிறான். எங்கோ லோ-தேபார் என்ற முகவரி இல்லாத மாகீரின் வீட்டிலிருந்தவன் இப்போது அமைதியின் நகரம் எருசலேமில் மன்னவன் வீட்டில் விருந்து சாப்பிடுகிறான். அவனுடைய பிச்சைப் பாத்திரம் அட்சய பாத்திரமாக மாறியிருக்கிறதென்றால் அதற்கு காரணம் தாவீதின் கருணையே. Eat breakfast like king, lunch like prince, supper like pauper என்ற கூற்று நிறைவேறும்படியாய் மூன்று வேளையும் மூக்கு முட்ட உண்டு மகிழ்கிறான். அவமானத்தோடு வாழ்ந்தவன் இப்போது அபிமானத்தோடு வாழ்வதற்கு நிலத்தினை திரும்பக் கொடுத்து கனப்படுத்துகிறான் (வ.11). மீனைக் கொடுப்பதோடு மீன் பிடிப்பதற்கான ஆதாரத்தினையும் கொடுக்கிறான். இஸ்ரவேலின் நிலம் உணவை மட்டுமல்ல உரிமையையும் கொடுத்தது. எனவே தாவீது உணவோடு நில உரிமையையும் கொடுத்தான்.

காணார், கேளார், கால்முடம்பட்டோர்
பேணா மக்கள், பேசார், பிணியோர்
படிவ நோன்பியர் பசிநோய் உற்றோர்
மடிநல் கூர்ந்த மக்கள் யாவரும்

என எல்லோருக்கும் உணவளித்து ஈகைத்திறத்தில் சிறந்து விளங்கினர் பழந்தமிழர் என மணிமேகலை கூறுகிறது. தாவீதைப் போல் மீதியாயிருக்கிறவர்களுக்கு நீதி செய்து, பயத்திலே பாதியாயிருக்கிறவர்களின் பீதியைப் போக்கி, வீதியிலே விழுந்து கிடக்கிறவர்களுக்கு விருந்தோம்பல் செய்து கரிசனை காட்டி, கனப்படுத்துவோம். மாற்றுத்திறனுடையோரை புனிதர்களாக பார்க்காவிட்டாலும் சகமனிதர்களாக பார்க்க முயற்சி செய்து, மாற்ற முடியாததை ஏற்றுக் கொண்டு (What cannot be cured has to be endured) இறை விருப்பத்தினை நிறைவு செய்வோம்.

அறிவர். **சோபனா கின்சன்**

# செயலில் கிறிஸ்துவுடன் இளையோர்

**YOUTH WITH CHRIST IN ACTION**

தானி. 1:1-17 திப. 6:1-7
திபா. 98 யோவா. 1:35-42

**"...தம்மைத் தீட்டுப்படுத்திக் கொள்ளலாகாது என்று தானியேல் தம் உள்ளத்தில் உறுதிசெய்து கொண்டார்."** (தானி. 1:8)

ஹெலிகாப்டர் ஒன்றில் ஒரு அரசியல்வாதி, ஒரு வயது முதிர்ந்த தகப்பனார், ஒரு பள்ளக்கூடத்தில் பயிலும் மாணவன் என மூன்றுபேர் பயணித்தார்கள். தீடீரென ஹெலிகாப்டரில் பழுது நேரிட்டதால் விமான ஓட்டி பயணிகளை பார்த்து இங்கு மூன்று உயிர்காப்பு உறைகள் (பாரசூட்) இருக்கின்றன. எனக்கு ஒரு உயிர்காப்பு உறை தேவைப்படுகிறது, என்று சொல்லி ஒரு உயிர்காப்பு உறையை எடுத்துக் கொண்டு கீழே குதித்தார். வாலிபனாக இருந்த அரசியல்வாதி எனக்கு ஓர் உயிர்காப்பு உறை தேவை என்று தீர்மானித்துக் கொண்டு கீழே குதித்தார். வயது முதிர்ந்த தாத்தா சிறுவனை அழைத்து எனக்கு வயதாகிவிட்டது. நீ சிறுவன் வாழ வேண்டியவன். ஆகவே மீதம் இருக்கும் ஒரே ஒரு உயிர்காப்பு உறையை எடுத்துக் கொண்டு தப்பித்துக்கொள் என்றார். அப்போது சிறுவன் தாத்தாவைப் பார்த்து அரசியல்வாதி தெரிந்தெடுப்பதில் தவறவிட்டார். அவர் உயிர்காப்பு உறையை தெரிவு செய்வதற்கு பதில் என்னுடைய புத்தகப் பையைத் தெரிவு செய்தார். எனவே இன்னும் இரண்டு உயிர்காப்பு உறை இருக்கிறது. நாம் இருவரும் தப்பித்துக் கொள்ளலாம் என்று சொல்லி தப்பித்துக் கொண்டனர்.

வாலிபம் என்பது வாழ்வின் வசந்த காலம் என்பார்கள். இளையோர் பலவான் கையில் உள்ள அம்புகளுக்கு சமம் என்று திருமறை பயிற்றுவிக்கிறது. அறிஞர் அண்ணா கூறும் போது, இளையோர் கூர்மைப்படுத்தப்பட்ட ஈட்டிக்கு சமமானவர்கள் என்பர்.

இளையோர் என்ற தமிழ் பதத்திற்கு NEOTES என்ற கிரேக்கச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனுடைய பொருள் "இராணுவத்திற்கு செல்லும் வயதுடையோர்" என்பதாகும். இளமைப் பருவத்தில் தெரிந்தெடுப்புகளும், தீர்மானங்களும் மலிந்திருக்கின்றன. இளையோர்

மேற்கொள்ளும் தீர்மானங்களும், தெரிந்தெடுப்புகளும் இளையோரை உருவாக்கவும் அல்லது உடைக்கவும் செய்யக்கூடியவை. இளையோருடைய தெரிந்தெடுப்பு என்பது நல்லதுக்கும் கெட்டதுக்கும் இடையில் அமைவது இல்லை. மாறாக நல்லதுக்கும் நேர்த்தியானதுக்கும் இடையில் அமைவதாக இருக்கவேண்டும். நம் அனைவரின் வாழ்வுக்கு முன்பாக இரண்டு விதமான வாய்ப்புகள் முன் வைக்கப்பட்டுள்ளன. ஒன்று உலகியல் சார்ந்தது. மற்றொன்று ஆன்மீகம் சார்ந்தது. சரியானவற்றை தெரிவு செய்பவர்கள் குற்றம் அற்றவர்கள் என்று அழைக்கப்படுவார்கள் (உரோ. 8:23).

கி.மு. 609 முதல் 598 வரை யோயாக்கீம் என்னும் அரசர் யூதாவை ஆட்சி செய்து வந்தார். இக்காலத்தில் நேபுகாத்நேச்சர் என்னும் பாபிலோனிய அரசர் யூதாவின் மீது படையெடுத்து, யூதவைக் கொள்ளையிட்டுச் சென்றார். அவர் யூதாவினுடைய சமய காரியங்களில் அதிகமாக தலையிட்டார். யாவே வழிபாட்டை அழித்து பாபிலோனிய தெய்வ வழிபாட்டை முதன்மைப்படுத்தினார். யூதாவிலிருந்து பாபிலோனுக்கு சிறைபிடித்து செல்லப்பட்ட நான்கு வாலிபர்களுடைய பெயர்களை மாற்றுவதில் இருந்தே இவரை நாம் தெளிவாக அறிந்த கொள்ளலாம். தானியேல் என்றால் நியாயத்தீர்ப்பு என்பது பொருள். ஆனால் தானியேலுக்கு பெல்தெஷாத்சார் என்று மாற்றுபெயர் கொடுக்கப்பட்டது. “பேலே” என்றால் “ஜீவனை பாதுகாத்து தாரும்” என்று பொருள்படுகிறது. இப்பெயரானது பாபிலோனிய தெய்வமாகிய “பேல்” என்பதோடு தொடர்புடையதாக இருந்தது. இத்தகைய சூழல்களில் நான்கு இளையோருக்கு முன்பாக இரண்டு விதமான வாய்ப்புகள் தெரிந்தெடுப்பதற்காகத் தரப்பட்டுள்ளது. ஆனால் இறைவனோடு இணைந்து செயல்படும் விதமாக உலகத்தொடர்பு இல்லாத ஒரு தீர்மானத்தைத் துணிச்சலுடன் தெரிவு செய்கின்றனர். இவர்கள் தெரிவு செய்த தீர்மானங்கள் எவைகள் என்பதைக் காணலாம்.

### *1. உடல் சார்ந்த வாழ்வில் தூய்மையுடன் வாழ உறுதி கொள்ளுதல்* : (தானி. 1:8)

உணவு என்பது மனித வாழ்வில் மிகவும் தேவையானது. உணவு நிறைவுடன் பெற்றால் மனித சரீரம் பெலனடைகிறது. உணவுகளில் கலப்படம் மிகுதியாகி உண்ணப்படும் மனித சரீரமும் பெலவீனமடைகிறது. இன்று சிறுகுழந்தைகளுக்கு அளிக்கும் பால் உணவில் கூட கலப்படம் மிகுதியாய் இருப்பதைக் காணலாம். தானியேலின் வாழ்வில் அரசவை

உணவினை அருளப்படும்படி அரசர் கட்டளையிடுகிறார். ஆனால் அரசவை உணவில் விலக்கப்பட்ட விலங்கினங்களின் மாம்சம் மற்றும் மதுவகைகள் இருக்கும் என்பதை உணர்ந்து கொண்ட தானியேல் இவ்விலக்கப்பட்ட மாமிச உணவும், மதுவகைகளும் தன்னுடைய சரீரத்தையும் ஆத்துமாவையும் கறைபடுத்திவிடும் என்று கருதி உணவை உட்கொள்ளாமல் இருப்பதற்கு உறுதி மேற்கொள்ளுகிறார். சாதாரணமான மனிதர்களின் உணவாகிய காய்கறி உணவு போதுமானது என்ற நிறைவுக்கு கடந்து வருகின்றனர். உடலின் வலிமை என்பது அரசவை உணவில் அல்ல. ஆண்டவரின் வல்லமை தான் இருக்கிறது என்பதனை தெளிவாய் புரிந்து கொள்கிறார். மத். 5:4-இல் மனிதன் அப்பத்தினால் மட்டுமல்ல, மாறாக கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வான் என்ற இயேசுக் கிறிஸ்துவின் வார்த்தை நினைவு கூரப்படுகிறது. உணவுக்காக உன்னதமான ஆசீர்வாதத்தை விற்றுப் போட்ட நிகழ்வு (தொ.நூ. 25:33), உணவுக்காக எகிப்துக்கு பயணித்த நிகழ்வு (தொ.நூ. 41:57), உணவுக்காக வசதி படைத்தவரின் வாசலில் காத்திருந்த நிகழ்வுகள் (லூக். 16:21). திருமறையில் இடம் பெற்றிருக்க உன்னதமான அரசவை உணவினால் கறைபட்டு விடக்கூடாது என்பதற்காய் உறுதி கொண்ட இளையோர் சிறப்புக்குரியவர்.

இன்று இளையோரின் உணவு முறைகள் முற்றிலும் மாசுபடிந்த உணவுக்கு அழைத்து செல்லுகிறது. World Health Organization -ன் அறிக்கையின்படி 2/3 பங்கு இளையோர், மதுபானம், போதைப் பொருட்கள் போன்ற உணவுகளுக்கு அடிமைகளாய் இருக்கிறார்கள். அதனால் எதிர்கால சிந்தனை இழப்பு, சோம்பேறித்தனம், களவு, கொள்ளை போன்ற சமூக விரோத நிகழ்வுகள், உயிரிழப்புகள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. இத்தகைய பின்னணியத்தில் தானியேலின் தீர்மானம் மேன்மைக்குரியது.

### *2. உறவு சார்ந்த வாழ்வில் உறுதியுடன் வாழ உறுதி கொள்ளும் இளையோர்* : (திப. 6:5)

உறவு என்பது மனித வாழ்வில் மிகவும் முதன்மையானது. ஊடகங்களின் மலிவினால் உடன் வாழ்வாரோடும் உன்னதரோடும் உறவை உருவாக்கும் இளையோரின் எண்ணிக்கை குறைந்து கொண்டே போகிறது, ஆதித் திருச்சபையில் கடவுளின் பணியை நிறைவேற்றுவதற்காய் இளையோர் பலர் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களில் முதன்மைக்குரியவர் ஸ்தேவான் என்னும் இளையோர். இவர் இறைவனிடம் கொண்டிருந்த உறவில் வலுப்பட்டவராகவும் இருந்தார். ரெய்மண்ட்

பணிக்கர் என்பவர் 'நம்பிக்கை இன்றி உண்மையான முழுமையான மானிட வாழ்வை யாரும் வாழ இயலாது என்கிறார்.' VANCE HAVNER என்பவர் 'நம்பிக்கை என்பது நமக்கு தேவையானது எல்லாம் பெற்றுத் தருவது அல்ல, மாறாக கடவுள் நாம் எதைப் பெற வேண்டுமென்று விரும்புகிறாரோ அதை நாம் அடைய உதவுவது என்கிறார்.' இறைவன் மீது நம்பிக்கை கொள்ளும் உறவு சார்ந்த வாழ்வானது மகிழ்ச்சியைக் கொண்டு வரும் (நீதி. 10:28). ஸ்தேவான் விசுவாசத்தினாலும், வல்லமையினாலும் நிறைந்தவர் (தி.தூ.ப. 6:8), பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெற்றவர். பந்தி விசாரணை ஊழியத்தோடு நின்றுவிடாமல் ஞானத்தோடும், ஆவியின் நிறைவோடும் நற்செய்தி அறிவித்தவர் (தி.தூ.ப. 6:10), பெரிய அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்தவர் (தி.தூ.ப. 6:8), கிரேக்க மொழி பேசும் யூதருடைய ஆலயங்களில். ஸ்தேவான் கிறிஸ்துவைப் பற்றியும், தான் கிறிஸ்துவோடு கொண்டிருந்த உறவைப்பற்றியும் சாட்சியாகக் கூறினார். ஸ்தேவான் பேசின ஞானத்தையும், ஆவியையும் எதிர்த்து நிற்க அவர்களால் இயலாமல் போயிற்று (தி.தூ.ப. 6:10). எனவே எரிச்சல் கொண்ட யூதர்கள் பொய்சாட்சிகளை ஏற்படுத்தி ஸ்தேவானைப் பிடித்து இழுத்து, ஆலோசனை சங்கத்திற்கு முன்பாக நிறுத்தி தேவ தூஷணம் சொன்னதாக குற்றம் சுமத்தினார்கள். அப்போது ஸ்தேவானின் முகம் தேவதூதனின் முகத்தைப்போல் பிரகாசித்தது (தி.தூ.ப. 6:15). ஆலோசனை சங்கத்தாரின் நோக்கத்தை நன்கு உணர்ந்து கொண்ட பின்பு ஸ்தேவான் அச்சப்படாமல் வானம் திறந்திருப்பதையும் மனுஷகுமாரன் தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும் காண்கிறேன் என்று உறுதியுடன் உரைத்தார். இதை கேட்டவர்களின் கோபம் மூர்க்கமாக மாறியது. உடனே ஸ்தேவானை நகரத்திற்கு வெளியே கொண்டுபோய் கல்லெறிய தொடங்கினார்கள். உறவு சார்ந்த வாழ்வில் அசைவு நேரிடாமல் உறுதியாய் நின்ற ஸ்தேவானின் வாழ்வில் மரணம் நேரிட்டாலும் அச்சம் அவனை ஆளுகை செய்யவில்லை. இறை உறவில் உறுதியாய் இருப்போர் இன்னல்களைக் கண்டு அஞ்சிடமாட்டார்.

கி.பி. 257- ம் ஆண்டில் சக்கிரவர்த்தி வலேரியன் கிறிஸ்தவ சபைகளை கடுமையாக துன்புறுத்தினான். ரோமாபுரியில் உள்ள கிறிஸ்தவ சபைக்கு அதிகமான சொத்துக்கள் காணப்பட்டன. இவைகளை புனித லாரன்ஸ் என்பவர் கவனித்து வந்தார். ஒருநாள் ரோம ஆட்சிக்குட்பட்ட பிரிப்கெட் என்ற அரசன் லாரன்ஸை அழைத்து மூன்று நாட்களுக்குள் அத்தனை சொத்துக்களையும் அரசிடம் ஒப்படைக்க கட்டளையிட்டான். ஆனால் லாரன்ஸ் சொத்துக்கள் அத்தனையும் விற்று, முடவர்,

பார்வையற்றவர்கள், விதவைகள், ஆதரவற்றோர் மற்றும் ஏழைகளுக்கு பங்கிட்டு கொடுத்துவிட்டு, அவர்களை அரசனிடம் அழைத்துச் சென்று இவர்களே திருச்சபையின் சொத்துக்கள் என்றார். இதனைக் கேட்ட அரசன் கடும் கோபத்துடன் லாரன்ஸை கை, கால்களைக் கட்டி இரும்புக் கட்டிலில் படுக்கவைத்து கீழே தீ மூட்ட சொன்னார். நீண்ட நேரம் சென்ற பின்பு புனித லாரன்ஸ் உடலின் ஒருபுறம் முழுமையாக வெந்து விட்டது. மறுபுறம் திருப்பிப் போடுங்கள், என்று தைரியத்தோடு அறைகூவல் விடுத்தார். பாடுகளின் மத்தியில் பரமனோடு உள்ள உறவில் உறுதியாய் இருந்தார்.

### *3. உன்னதப் பணித்திட்டத்தில் உறுதியுடன் நிற்கும் இளையோர்* : (யோவா. 1:41)

இறைவன் தம் பணிதிட்டத்தில் அதிகமாக மனிதர்களை பயன்படுத்தினார். இதற்காக தான் தனக்கு சீடர்களை தெரிவு செய்தார்கள். இப்பணி நிறைவேறும் போது இறைவனால் சந்தித்து, அழைப்பு கொடுக்கப்பட்ட மனிதன் தான் அந்திரேயா. அந்திரேயா என்றால் “தைரியசாலி” என்று பொருள். இவர் யோவான்ஸ்நானனின் சீடர் ஆவார் (யோவா. 1:40). இறைப் பணிவிடைத் திட்டத்தில் தன்னை இணைத்துக் கொள்ளும் முன்பு இறைவனைக் குறித்து தெளிவாக புரிந்து கொண்டவர். இயேசுக் கிறிஸ்து மேசியா என்பதனை அறிந்து, அவர் பின் செல்ல தீர்மானம் செய்து கொண்டார் (யோவா. 10:42). இறைப்பணித் திட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்ட பின்பு பணிவிடையின் மகத்துவங்களை தெளிவாக வெளிப்படுத்துகின்றார். இயேசு கிறிஸ்துவைக் குறித்து முதன்முதலில் தன்னுடைய சகோதரனுக்கு அறிவிக்கிறார் (யோவா. 1:41). அறிவிக்கும் பணியானது முதன்முதலில் தன்னுடைய குடும்பத்திற்குள் ஆரம்பமாகிறது. குடும்பம் கிறிஸ்துவைக் கண்டால், சமுதாயமும், உலகமும் கிறிஸ்துவை அறிந்து கொள்ளும் என்பது இவரது ஆணித்தரமான நம்பிக்கை. அறிவாற்றலோடு தனது பணிவிடை நிறைவு பெற்றது என்று நினைத்து கொள்ளாமல் யாருக்கு நற்செய்தியை அறிவித்தாரோ அவர்களை அவரிடம் அழைத்து வருகிறார் (யோவா. 1:42). இவரால் அழைத்து வரப்பட்ட பேதுரு திருச்சபையின் அடித்தளம் ஆகிறார். அந்திரேயாவின் அழைத்து வரும் அனுபவத்தினால் அற்புதம் நடைபெறுகிறது (யோவா. 6:8,9). அந்திரேயாவின் இப்பணிவிடையின் மூலம் ஆண்டவரை அறியாதபடி கிரேக்கர்கள் இயேசுவை அறிந்து கொண்டார்கள் (யோவா. 12:21). ஆண்டவரின் அருட்பணியினை ஆற்றலோடு செய்தாலும் விளம்பரத்தை விரும்பிடாத நல்ல பணியாளராய்

பணி செய்தார். பட்ரோஸ் என்னும் இடத்தில் பணி செய்து கொண்டிருக்கும் போது இப்பகுதியின் அதிபர் ஏஜியேடிஸ் என்பவரின் மனைவி மேக்சிமில்லா இவரது பேச்சைக் கேட்டு மனம் மாறினார். இதனால் ஆத்திரம் அடைந்த அதிபர் இவரது ஊழியத்தை கைவிடாவிட்டால் அவரை சித்திரவதை செய்யப் போவதாக கூறி பயமுறுத்தினார். ஆனால் அந்திரேயா அவரையும் மனம் மாற்ற முயற்சி செய்தார். இதனைக் கண்ட அதிபர் அந்திரேயாவை X வடிவ சிலுவையில் அறைந்து கொலை செய்யும்படி கட்டளையிட்டார். 2 நாட்கள் சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் போதும் அங்கு வருகை தருபவர்களுக்கு இயேசுவைக் குறித்து அறிவித்தார். எனவே தான் இறைவனின் பணிவிடைக்களத்தில் இறுதி வரை நின்று இறைப்பணி செய்தவர் அந்திரேயா என்று அழைக்கப்படுகிறார்.

நாமும் செயலில் கிறிஸ்துவுடன் உடல் சார்ந்த வாழ்வில் உறுதியுடன் தூய்மையாய் நின்று, உறவு சார்ந்த வாழ்வில் உறுதியுடன் நின்று, உன்னதருடைய பணிவிடைத்திட்டத்தை நிறைவு செய்வோம். இறை ஆசிப் பெறுவோம்.

அருள்திரு. P.G. **ஜெயின் குமார்**

27-10-2019

***சீர்திருத்த ஞாயிறு***
Reformation Sunday

# கடவுளின் இறையாண்மையின் கொண்டாட்டம், நீதியும் அமைதியும்

**CELEBRATION OF GOD'S SOVEREIGNTY JUSTICE AND PEACE**

விப. 7:1-7
உரோ. 13:1-7
திபா. 89:1-18
யோவா. 18:33-38

**"இயேசு மறுமொழியாக, எனது ஆட்சி இவ்வுலக ஆட்சி போன்றது அல்ல."**
(யோவா. 18:36)

இயேசு கிறிஸ்து தனது குறுகிய கால இறைப்பணி நாட்களில் தனது வாழ்வு, போதனை இவைகளில் சீர்திருத்தத்தை ஏற்படுத்தினார். அநீதிக்கு எதிராக, அமைதி குலைவிற்கு எதிராக சீர்திருத்த செம்மலாக நீதி, அமைதியை ஏற்படுத்துவதே கிறிஸ்துவின் தலையாய கடமையாயிருந்தது. சீர்திருத்தப் பணிகளை அவருடைய பின்னடியார்கள் தொடர்ந்து நிறைவேற்றி வருவதால் திருச்சபைகளில், இறைப்பணிகளில், இல்லங்களில் இச்சீர்திருத்தம் கொழுந்து விட்டு எரிந்து பயன் தருவது சிறப்பானது. திருச்சபை வரலாற்றில் சீர்திருத்தம் ஒரு முக்கிய இடமாக உள்ளது. மார்டின் லூத்தர் அவர்கள் திருச்சபை அமைப்பில் நிலவிய பாவமன்னிப்பு, சுத்திகரிப்பு, இறையரசுக்கு ஆயத்தம் ஆகியவற்றை மையமாகக் கொண்டு நடைபெற்ற விற்பனை முறைகளைத் தைரியமாக கண்டித்தார். மேலும் இறை போதனைகளுக்கு மீறி புரட்டு உபதேசங்கள், ஊழல், இறை விருப்புக்கு மாறான அநீதி காரியங்களை உணர்ந்து தன் சீர்திருத்தக் கருத்துக்களை 95 கடிதங்களாக எழுதி 1517- ஆம் ஆண்டு அக்டோபர் 31-ம் நாள் விட்டன்பெர்க் தேவாலயத்தின் வாசலில் வைத்தார். இது ஐந்து சாராம்சங்களை உள்ளடக்கியது.

1. Sola Gratia - கிருபை மட்டும்
2. Sola Scripture - திருமறை மட்டும்
3. Sola Fide - இறை பற்றுறுதி மட்டும்
4. Solus Chirstus - இயேசு கிறிஸ்து மட்டும்
5. Sole Deo Gloria - இறைவனுக்கு மட்டும் மாட்சிமை

இந்தச் சீர்திருத்த கருத்துக்கள் திருச்சபை, இறைமக்களை சிந்திக்கத் தூண்டியது. இதன் விளைவாக சீர்திருத்த திருச்சபை

உருவானது. சீர்திருத்தம் தொடர்ந்து நடைபெறுகிற ஒன்று. (Reformation is a ongoing process) என்பதை சிந்திப்பது நம்மை சீர்படுத்தும்; சீராக்கும். இறைநீதி, இறை அமைதி கிறிஸ்துவில் வெளிப்பட்ட தன்மைகளைக் கொண்டு தியானிப்பது சிறப்பானதாகும்.

### *1. தனி வாழ்வில் சீர்திருத்தம்* : (Reformation in Personal life)

உரோ. 13:14 “தீய இச்சைகளைத் தூண்டும் ஊனியல்பின் நாட்டங்களுக்கு இடம் கொடுக்க வேண்டாம்” இயேசு கிறிஸ்துவை அணிந்து கொள்ளுங்கள். தனி வாழ்வில் சீர்திருத்தம் ஏற்பட இறைவன் விரும்புகிறார். உலகின் தீமைகள், உலகபற்று இவற்றைப்புரிந்து, உணர்ந்து ரோம திருச்சபை பின்னணியத்தின் வழி பவுலடியார் இதை உணர்த்துகிறார். உரோ. 13:13-இல்“பகலில் நடப்பது போல மதிப்போடு நடந்து கொள்வோமாக.” களியாட்டம், குடிவெறி, கூடா ஒழுக்கம், காம வெறி, சண்டைச்சச்சரவு ஆகியவற்றை தவிர்போமாக.

ஹங்கோரி நாட்டை சார்ந்த கரோலி டாக்கர்ஸ் (Karoly Takars) இலக்கை குறி பார்த்து, அற்புதமாக துப்பாக்கிச் சுட்டு வீழ்த்துவதில் கில்லி. அவர் ஹங்கோரி ராணுவத்தில் சேர்ந்த போது, இவருடைய துப்பாக்கி சுடும் அசாத்தியத் திறமையை அந்த படைப் பிரிவே வியந்து பார்த்தது. 1936-ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் தனக்கு இடம் கிடைக்கும் என நம்பிக்கை கொண்டார். ஆனால் உடல் தகுதியைக் காண்பித்து தேர்வுக் குழுவால் தகுதி நீக்கம் செய்யப்பட்டார். இதற்காக டாக்கர்ஸ் கலங்கவில்லை. இறைவன் மீதும் நம்பிக்கை வைத்து, உலக ஊனியல்புகளுக்கு இடம் கொடுக்காமல், தன் இலட்சியத்தை நோக்கி பயணிக்க உடற்பயிற்சி செய்து உடலை வலுப்படுத்தினார். நாள்தோறும் துப்பாக்கி சூடும் பயிற்சியையும் மேற்கொண்டார். விளைவு, 1948- ஆம் ஆண்டு இலண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொண்டு துப்பாக்கிச் சுடும் போட்டியில் 25 மீட்டர் பிரிவில் உலக சாதனையுடன் தங்க பரிசு பெற்றார். 1952 -ஆம் ஆண்டு பின்லாந்தில் ஹெல்சிங்கியில் (Helsinki) நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் தன்னுடைய உலக சாதனையையும், தங்க பரிசையும் தக்க வைத்துக் கொண்டார். இரண்டு முறை ஒலிம்பிக்கில் பரிசு பெறுவதற்கு தன் தனிப்பட்ட வாழ்கையில் உலக ஊனியல்புகளுக்கும், உலக சிற்றின்பங்களுக்கும் இடங்கொடாது உடலை, ஆன்மாவை நாள்தோறும் இறைவனுக்குள் சீர்படுத்தி இலட்சியம் அடைந்தார்.

1) கொலோ. 3:2,5 இவ்வுலகு சார்ந்தவை பற்றி அல்ல, மேலுலகு சார்ந்தவை பற்றியே எண்ணுங்கள். ஆகவே உலக போக்கிலான உங்கள்

இயல்புக்குரிய பரத்தமை, ஒழுக்கக்கோடு, கட்டுக்கடங்காத பாலுணர்வு, தீய நாட்டம், சிலை வழிபாடான பேராசை ஆகியவற்றை ஒழித்துவிடுங்கள்.

2) கலா. 5:24,25 கிறிஸ்து இயேசுவுக்கு உரியவர்கள் தங்கள் ஊனியல்பை அதன் இழிவுணர்ச்சிகளோடும் இச்சைகளோடும் சேர்த்துச் சிலுவையில் அறைந்து விட்டார்கள். தூய ஆவியின் துணையால் நாம் வாழ்கிறோம். எனவே அந்த தூய ஆவி காட்டும் நெறியிலே நடக்க முயல்வோம். தனி வாழ்வில் சீர்திருத்தம் என்பது தனி மனிதனுடன் நின்று விடாது, அவன், அவள் சார்ந்த குடும்பம், திருச்சபை, சமூகம், நாடு, வாழும் இடங்கள் அனைத்தையும் சீராக்க உதவிடும்.

***2. திருப்பணிகளில் சீர்திருத்தம்*** : (Reformation in God’s Work)

வி.ப. 7:6 “தங்களுக்கு ஆண்டவர் என்ன கட்டளையிட்டாரோ அதையே மோசேயும் ஆரோனும் செய்தனர்.”

அமெரிக்காவில், வாஷிங்டன் பகுதியில் உள்ள ஒரு பிரபல பள்ளிக்கூடத்தில் இயங்கி வந்த சாரணர் இயக்க மாணவர்கள் (Scouts Students) பயிற்சிக்காக ஒரு கிராமத்தில் முகாமிட்டார்கள். அந்த கிராமத்தில் இரயில் பாதை ஒன்று இருந்தது. ஆனால் அதில் இரயில் போக்குவரத்து நிறுத்தப்பட்டு பல ஆண்டுகள் ஆகியிருந்தன. அதைக் கவனித்த பள்ளியின் சாரணர் இயக்க பொறுப்பாளர் மாணவர்களிடம் அன்பு மாணவச் செல்வங்களே இன்று உங்களுடைய பயிற்சியை இந்த இரயில் பாதையின் தண்டவாளத்தில் செய்ய இருக்கின்றீர்கள். யார் இந்த இரயில் பாதையின் தண்டவாளத்தில் நீண்டதூரம் நடந்து செல்கிறீர்கள் என்று பார்ப்போம் என்றார். அவரின் கட்டளைக்கு இணங்க மாணவர்கள் ஒவ்வொருவராக இரயில் பாதையில் நடக்கத் தொடங்கினார்கள். ஆனால் யாராலும் அதில் நீண்ட தூரம் நடக்கமுடியவில்லை. எல்லாரும் இடறி விழுந்து கொண்டிருந்தார்கள். ஆனால் இருவர் மட்டும் இடறி விழாமல் நடந்த கொண்டிருந்தார்கள். எல்லாக் கண்களும் அவர்களையே நோக்கிக் கொண்டிருந்தன. அது எப்படி இவர்கள் மட்டும் இடறி விழாமல் நடக்க முடிந்ததென்றால் அந்த இரண்டு மாணவர்களும் தங்களுடைய கரங்களைக் கோர்த்துக் கொண்டு நடந்தார்கள். ஆகவே தான் அவர்களால் நடக்க முடிந்தது. சாரணர் இயக்க பொறுப்பாளர்கள் அந்த இரண்டு மாணவர்களையும் பாராட்டி மற்ற மாணவர்களிடம் இணைந்து செயல்படும் போது எப்படிப்பட்ட இலக்கையும் நாம் எளிதாக அடையலாம். இது வாழ்க்கைக்கு மட்டுமின்றி, இறைவனின் திருப்பணிவிடைகளுக்கும் பொருந்தும். திருப்பணிகளில் சீர்திருத்தம் என்பது இணைந்து செய்யப்பட வேண்டிய இறையாட்சிப் பணியாகும். அதற்கு மோசே, ஆரோன் போன்ற இறைப்பணி மாதிரிகளை சான்றாகக் கொள்ளலாம்.

1) வி.ப. 4:15 -இல் “நீ ஆரோனிடம் பேசி, இவ்வார்த்தைகளை அவன் வாயில் வைப்பாயா, நான் உன் வாயிலும் அவன் வாயிலும் இருந்து கொண்டு நீங்கள் செய்ய வேண்டியவற்றை உங்களுக்கு அறிவுறுத்துவேன்.” வி.ப. 18:15-27 நிகழ்வும் திருப்பணிகளின் சீரமைவுக்கு நல்ல உதாரணமாகும். மேலும் வி.ப. 17:8- 13- இல் இஸ்ரவேலரை எதிர்த்து போரிட அமலேக்கியர் வந்தனர். இந்த சூழலில் மோசே யோசுவாவிடம் “நீங்கள் அமலேக்கியரோடு போரிடுங்கள். நான் கடவுளின் கோலைக் கையில் பிடித்தவாறு குன்றின் உச்சியில் நின்று கொள்வேன்.” என்றார். அவ்வாறே மோசே தம் கையை உயர்த்தியிருக்கும் போதெல்லாம் இஸ்ரவேலர் வெற்றி அடைந்தனர். அவர் தம் கையை தளரவிட்ட போதெல்லாம் அமலேக்கியர் வெற்றியடைந்தனர். எனவே ஆரோனும், ஊரும் மோசேயின் கைகளை தாங்கிக் கொண்டனர். வெற்றி பெற்றனர். இங்கே இணைந்த கூட்டுமுயற்சி வெற்றியினைத் தந்தது. திருப்பணிகளில் இணைந்த செயல்கள் திருச்சபைப் பிரிவுகள் ஒன்றிப்புக்கும், (Ecumenical Oneness) பரந்துபட்ட உலகளாவிய ஒரே திருச்சபை உருவாக்கத்திற்கும் வித்திடுகிறது.

### *3. இறையரசின் தகவுகளால் சீர்திருத்தம்* :
(Reformation by God’s Kingdom Values)

யோ. 18:37 “அதற்கு இயேசு உண்மையை எடுத்துரைப்பதே என் பணி இதற்காகவே நான் பிறந்தேன், இதற்காகவே உலகிற்கு வந்தேன். உண்மையைச் சார்ந்தவர் அனைவரும் என் குரலுக்கு செவிசாய்கின்றனர் என்றார்.”

இயேசு கிறிஸ்துவின் மத். 4:17-இல் மனம் மாறுங்கள் ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது என்றார். இறையரசு இவரது போதனைகளில் மையக்கருத்து. இவ்வுலக அரசும், ஆட்சியும் போலியானது. நிலையான அரசு இறைவனால் விண்ணுலகில் உருவாக்கப்பட்டது. இன்றைய ஆன்மீகத் தேடலில், இறையரசின் தகவுகளில், புரட்டு உபதேசம், தங்களுக்கு சாதகமாக, சுயம் சார்ந்த போதனைகள் தாராளமாக புரையோடி உண்மையை பொய்யாக்கும் செயல்கள் மலிந்துள்ளன. ஆனால் இயேசு கிறிஸ்து விரும்பும் உண்மையான இறையரசின் தகவுகள் அவருக்காக உயிரைக் கொடுப்பதாகும். இது எளிதல்ல கடினமானது. இறையரசைப் பற்றிய புரிதலை உலகிற்கு சொல்ல நற்செய்தியாளர்கள், கிறிஸ்துவின் இறைப்பணி நாட்கள் முதல் இன்று வரை உண்மையாக உழைத்து வருகிறார்கள். மத். 28:19,20-இல் “நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்; தந்தை, மகன், தூய ஆவியர் பெயரால் திருமுழுக்கு

கொடுங்கள். நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைபிடிக்கும்படி கற்பியுங்கள். இதோ உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்.'' என்று கூறினார்.

ஜவ்வாதுமலை, கல்வராயன்மலை மற்றும் கொல்லிமலைகளில் தம் அன்புத் துணைவர் D.M.P.B. இயக்க மிஷனரி Rev. D. எலியாஸ் அவர்களுடன் வாழ்ந்து இறைப்பணிகளை உண்மையாக நிறைவேற்றி கோதுமை மணியாக மரித்த திருமதி. அன்னபாய் எலியாஸ் அவர்கள் நல்ல உதாரணமாவார்கள். ஊரில் தனக்கு கிடைத்த நல்ல சம்பளத்துடன் கூடிய ஆசிரியப்பணியை உதறிவிட்டு மலைவாழ் மக்களின் கல்வி மேம்பாட்டிற்காக மருத்துவம், சுகாதாரம் போன்றவற்றிற்காக அவர்கள் இல்லங்களைச் சந்தித்து 42 ஆண்டுகள் தன்னை அற்பணித்தார்கள்.

மத். 25-இன் முழு பகுதியிலும் இறையரசின் பல்வேறு கட்டமைப்புகளை கிறிஸ்து நமக்கு முன் வைக்கிறார். பசியுற்றோர், நோயுற்றோர், சிறையுற்றோரை புறம்தள்ளுவது இறைவனைப் புறம் தள்ளுவதற்கு சமம். இதையே கிறிஸ்து மத். 25:45- இல் ''மிக சிறியோராகிய இவர்களுள் ஒருவருக்கு நீங்கள் எதையெல்லாம் செய்யவில்லையோ அதை எனக்கும் செய்யவில்லை என உறுதியாக உங்களுக்கும் சொல்லுகிறேன்.'' என்கிறார். திருமதி. அன்னபாய் எலியாஸ் அவர்களைப் போன்று நம்மால் இயன்ற மட்டும் இறையரசை நிலைநாட்டும் பணிகளை நிறைவேற்றுவதே உண்மையான இறையரசின் தேடலாகும்.

சாரா நவரோஜி அவர்கள் பண் அமைத்து பாடிய பாடல் நம்மை உணர செய்யும். நாமும் நீதி, அமைதி உலகில் நிலைநாட்டப்படுவதற்கு தனிவாழ்வில் சீரடைவதற்கும், திருப்பணிவிடைகளால் சீர்படுவதற்கும், இறையரசின் தகவுகளில் சீர்படுவதற்கும் நம்மை அர்பணிக்கின்ற போது கடவுளின் இறையாண்மை உலகில் வெளிப்படும். இறையரசில் நிலை வாழ்வின் பங்காளர்களாய் மாறும் வாய்ப்பை பெறுவோம்.

அருள்திரு. S. **டேவிட் ஜோசப் ராஜ்**

# இந்தக் குழந்தை என்னவாகப் போகிறது?

**WHAT THIS CHILD IS GOING TO BE?**

நீதி. 13:1-14 எபே. 6:1-4
திபா. 119:9-16 லூக். 1:57-66

**"... இந்தப் பிள்ளை எப்படிப்பட்டாயிருக்குமோ என்றார்கள்.** (லூக். 1:66)

ஆஸ்திரேலியா மெல்போர்ன் நகரில் 1982 டிசம்பர் 4-ம் நாளில் பிறந்தவரே நிக்கோலஸ் ஜேம்ஸ் உஜிசிக் பிறப்பிலே கால்களும் இல்லை. கரங்களும் இல்லை. பெற்றோருக்குள் இந்தப் பிள்ளையை அழித்துவிடலாமா என்ற பதற்றம். இந்நிலையில் இப்பிள்ளையில் கடவுளுடைய நோக்கமிருக்கும். ஆனால் மற்றவர்களோ இந்தக் குழந்தை என்ன ஆகும் என்ற கேள்வி எழுப்ப பெற்றோரோ இக்குழந்தைக்கு ஊக்கம் அளிக்கின்றனர். அந்த பிள்ளையும் கல்வியில் சாதித்து குடும்ப உறவில் இணைந்து இரண்டு பிள்ளைகளோடு தற்போது இறைப்பணியில் தொடர்கிறது.

பிறப்பினில் அதிர்ச்சியும், ஆச்சரியமும் வெளிப்பட்டது. திருமறையிலும் இப்படிப்பட்ட குரல் ஒலித்திருக்கிறது. தெ.நூ. 25: 22-ல் ரெபேக்காவின் கருவிலிருந்த பிள்ளைகள் முட்டி மோதிக் கொண்டதை அசைவுகளால் உணர்ந்த போது "எனக்கு இப்படி நடப்பது ஏன்?" என ஆண்டவரிடம் கேட்க சென்றார். மேலும் லூக். 1:66-ல் சகரியா எலிசபெத் தம்பதியினருக்கு பிள்ளை இல்லை. எலிசபெத்தோ கருவுற இயலா நிலையில் இருந்தாள். இந்நிலையில் இறைவாக்கு உரைக்கப்பட்டது. சகரியாவுக்கோ அதிர்ச்சியின் குரல் வாக்காக ஒலித்தது. சகரியாவும் இது எப்படி சாத்தியமாகும் என்று கேட்க பேச்சும் நின்று போகிறது. இப்போது பிள்ளை பிறக்கிறது. பெயர் சூட்டும் நேரத்தில் வாய்கட்டப்பட்ட சகரியா எழுது பலகையில் பெயர் எழுதுகிறார். அப்போது ஆச்சரியத்திலும் அற்புதத்திலும் எழுந்த வாக்கு தான் இந்த குழந்தை எப்படிப்பட்டதாயிருக்குமோ? என்பதாகும். பொதுவாக குழந்தைகள் வெறுமையாய் பிறப்பிக்கப்படவில்லை. மாறாக, கடவுளின் தீர்மானம் எழுதப்பட்ட நிலையிலே பிறக்கிறது. குழந்தைகள் குடும்பத்துக்கும், சமூகத்துக்கும் முக்கியமானவர்கள். அவர்களை வளர்த்தெடுக்கும் பெற்றோர் எவ்வாறு இருக்கவேண்டுமென்பதை தியானிப்போம்.

**1. தூய்மைமிகு வாழ்வு வாழுங்கள் :** (நீ.த. 13:4,5)

மனோவா தம்பதியினருக்கு பிள்ளையில்லாத நிலையில் இறைவாக்கினூடே பிள்ளைச் செல்வம் வாக்களிக்கப்படுகிறது. கருவேற்கும் நீ கவனமாயிருக்க வேண்டும் ஏனெனில் இப்பிள்ளை இஸ்ராயேலருக்கும் விடுதலை கொண்டு வரும் பிள்ளை. ஆகவே கருவிலே தூய்மை காக்க வேண்டும். ஏனெனில் குழந்தை கற்றுக் கொள்ள தொடங்குவது தாயின் கருவறையில் தான். தாயின் ஒவ்வொரு செயல்களும் குழந்தையைப் பாதிக்கும் லூக். 1:5 செக்கரியா எலிசபெத் குலம் குறிப்பிடப்படுகிறது. செக்கரியா அபியா வகுப்பை சார்ந்தவர் இவர் குருத்துவப் பணிவிடையாளர். எலிசபெத் குருத்துவப் பணிவிடையாளரான ஆரோன் வழிவந்தவர்.ஆக இவர்கள் இருவரும் கடவுளின் பார்வையில் நேர்மையானவர்களாகவும் கட்டளைகளுக்கும் ஒழுங்குகளுக்கும் ஏற்ப குற்றமற்றவர்களாய் நடந்து வந்தார்கள். பெற்றோரின் வாழ்வு தூய்மையாய் இருக்கும் போது அவர்களின் பிள்ளைகளும் முன்மாதிரியில் வாழ்கின்ற தடயத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

**2. தூய்மைமிகு நிலையில் வளர்த்திடுங்கள் :** (லூக். 1:66)

ஆண்டவருடைய கைவன்மையைப் பெற்றுக் கொள்ளும் குழந்தையே பெருமைமிகு குழந்தை. அந்தக் குழந்தையால் கடவுளின் திருவுளம் நிறைவேற்றப்படும் என்பதில் மாற்றொரு சிந்தனைக்கு இடமில்லை. பிள்ளையின் வளர்ச்சி என்பது உடல், உளம் சார்ந்தது மட்டுமன்று. அது அறிவோடும், மனித உறவோடும், இறை தயவோடும் அமைந்திருத்தல் வேண்டும். அதுவே சீரான, சிறப்பான வளர்ச்சியாகும். இந்த வளர்ச்சி கண்ணியத்தையும் கட்டுப்பாட்டையும் தன்னகத்தே கொண்டதாகும். பட்டுக்கோட்டை கலியாண சுந்தரம் பாடல் வரியில் அறிவும் வளரணும் ஆளும் வளரணும் அது தாண்டா வளர்ச்சி எனக் குறிப்பிட்டுள்ளார். குழந்தைகள் வலிமை நிறைந்தவர்கள் (மத். 21:16, தி.பா. 8:2). பிள்ளைகள் பக்தியுள்ள கருவூலங்களாக வளர்க்கப்படும் போது எந்த இடத்திலும் சான்று நெறியைக் காத்துக் கொள்வார்கள்.

**3. தூயவரின் திருவுளம் நிறைவேற்றுங்கள் :** (எபே. 6: 1-4)

ஆண்டவரின் தீர்மானத்தை நிறைவேற்றுவது தான் பெற்றோரின் கடமையும் உன்னத பொறுப்புமாகும். இறைவனின் திருவடிகளில் அமர்ந்து இறைவிருப்பத்தை அறிந்து இறைநெறியில் வளரும் வாய்ப்பை உருவாக்கும் போது (நீ.மொ. 22:6) இறைத்திட்டம் செயல்வடிவம் பெறுகிறது. செக்கரியா எலிசபெத் பிள்ளையாகிய யோவானை அத்தகைய நிலையில் கையளிக்கிறார் (லூக். 1:77).

மீட்பருக்காக வழியைச் செம்மைப்படுத்தும் இவர் இறைமணத்தோடு இல்லத்தில் வளர்ந்தவர். இறை இல்லத்தோடு ஒன்றித்தவர். இறைமகிமையில் நிறைந்தவர். இறைவனின் கருவியாய் பயன்படுத்தப்பட்டார். எபே. 6: 1-4-ல் பிள்ளைகள் பெற்றோருக்குக் கீழ்படிய வேண்டும் என்றும், பெற்றோர் பிள்ளைகளை இறைப்பண்போடு வளர்த்தெடுக்க வேண்டும் என்பதும் பவுலார் குறிப்பிட்டுள்ள நல் போதனையே.

குடும்பங்களில் தரப்பட்டுள்ள குழந்தைகள் எந்நிலையில் உருவாக்கப்படுகிறார்கள், எத்தகைய நிலையில் ஆளாக்கப்படுகிறார்கள் என்பதைத் தற்காலக் சூழலில் ஆய்ந்தறிவது மிக முக்கியமானதாகும். பாவமுள்ள சமூகத்தில் வாழ்கின்ற குழந்தைகள் பக்தி மணமும், பற்றுமையின் உறுதியும் பண்புள்ள செயலாக்கமும் நிறைந்தவர்களாய் வாழ்ந்திட இறைவேண்டலோடு உன்னதரின் திருவடியில் ஒப்படைப்போம். இந்தக் குழந்தைகள் ஆச்சரியமும் அற்புதமும் நிறைந்தவர்களாய் அவனியில் வாழ்ந்து இறைவயின் மணிமுடிகளாய் திகழ்வார்கள்.

அருள்திரு. A. **பிறைட் சாலமோன்**

10-11-2019 ஒன்றிப்பு ஞாயிறு

## திராட்சைச் செடியும் கொடிகளும்

**VINE AND BRANCHES**

எசே. 37:15-23 — 1 கொரி. 12:12-27
திபா. 133 — யோவா. 15:1-8

**"நானே திராட்சைச் செடி! நீங்கள் அதன் கொடிகள்."** (யோவா. 15:5a)

அன்னை இந்திரா காந்தியின் பிறந்த நாளான நவம்பர் 19-ம் தேதியை இந்திய அரசு தேசிய ஒருமைப்பாட்டு தினமாக அனுசரிக்கிறது. நம் பாரத நாடு பல்வேறு இனம், மொழி, கலாச்சாரம், மதம், பண்பாடுகள் கொண்டவையாக இருந்தாலும் நாம் அனைவரும் இந்தியர்கள் என்ற எண்ணமே மேலோங்கி நிற்கிறதல்லவா!.. மதம் மனிதனை கடவுளோடு இணைப்பது போல், மதம் மனிதனை மனிதனோடு இணைக்கிறது என்றார் மகாத்மா. பாரதியார், ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு - நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வே என்றார். "கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்று முன்னோர்கள் கூறி வைத்துள்ளனர். ஆனால் இன்று நாம் வாழும் சமூகத்தில் அயலாருடன் ஐக்கியமாய் வாழும் எண்ணம் குறைந்து வருகிறது.

சகோதரர் ஒன்றுபட்டு வாழ்வது எத்துணை நன்று எத்துணை இனியது (திபா. 133:1) என்ற திருமறை வார்த்தை இறைமக்களின் ஒன்றித்த வாழ்வினை வெளிப்படுத்துகிறது. ஒன்றுபட்டு வாழ்வதினால் ஒருவரை ஒருவர் நேசிக்கவும், கரிசனை கொள்ளவும், புரிந்து கொள்ளவும், ஒருவரோடொருவர் பகிரவும் வாய்ப்பு ஏற்படுகிறது.

யோவான் நற்செய்தி நூலில் உறவுகளைப் பற்றிய சிந்தனை அதிகம். யோவான் 15:1-7-இல் கிறிஸ்தவ விசுவாசிக்கும், கிறிஸ்துவுக்கும் உள்ள உறவை வெளிப்படுத்த யோவான் திராட்சைச் செடி, திராட்சைக் கொடி என்ற இரு உருவகங்களை கொடுத்துள்ளார். கிறிஸ்துவே எல்லா உயிர்களுக்கும் ஆதாரம், அவரது வாழ்வு கிறிஸ்தவனின் நற்கிரியைகளின் காரணியாகும். திராட்சைச் செடி, திராட்சைக் கொடி என்ற உருவகத்தில் இயேசுவில் ஒன்றித்து கனி கொடுக்கும் கிறிஸ்தவ வாழ்வை அறிமுகம் செய்கின்றார்.

***1. இறையுறவில் வளர்தல் :*** (யோவா. 15:1)

"உண்மையான திராட்சைச் செடி நானே, என் தந்தையே அதை நட்டு வளர்ப்பவர்" (யோவான் 15:1)

உறவு என்பது மனித வாழ்வில் முக்கியமானது. மனிதனுக்கும் மனிதனுக்கும், மனிதனுக்கும் படைப்புக்கும், மனிதனுக்கும் கடவுளுக்கும் இடையில் உறவு வேண்டும். யூதா, இஸ்ரயேல் என்று பிளவுபட்டிருந்த போது மக்கள் எதிர் கொண்ட வலிகளும், இழப்புகளும் விவரிக்க முடியாதவையாக இருந்தது. இந்நிலையில் தான் இணைப்புக்குரிய சூழல் உருவாக்கப்படுகிறது. பிரிவினையகன்று கற்று பிரிக்கமுடியா உறவின் பந்தம் ஏற்பட்ட நிலையிலே இனிமேல் ஒரு போதும் இருநாடுகளாகவோ, இரு அரசுகளாகவோ பிரிந்திரார் (எசே. 37:22) என உறுதியை வழங்குகிறார். மட்டுமன்று இந்த உறவின் வளர்ச்சியில் இனி அவர்கள் என் மக்கள் என்ற உரிமையும் வழங்கப்படுகிறது (எசே. 37:23). பிரிவினை இதயபாரத்தை ஏற்படுத்தும், பிணைப்பு இதய மகிழ்வினை ஏற்படுத்தும். உறவை வளர்ப்பது அன்பு. அன்பு அனைத்தையும் தாங்கும், அன்பு விட்டுக் கொடுக்கும், அன்பு பொறுமையைத் தரும், இப்படிப்பட்ட அன்பு உறவினை வளர்கிறது.

மத். 5:44-ல் பகைவரிடம் அன்பு காட்டும் போது அவரிடமிருந்து வெறுப்பையல்ல ஏற்றுக் கொள்ளுதலை பெறமுடியும். பகைவர்களிடம் அன்பைக் காட்டி நல்லுறவில் நாம் வளர்ந்தால், இறைவனோடுள்ள நமது உறவு வளரும்.

பழைய ஏற்பாட்டில் திராட்சைச் செடி இஸ்ரவேலர் மத்தியில் பெரிதும் மதிக்கப்பட்ட செடி. மனிதனின் உடலில் களைப்பைப் போக்க அது உணவாகவும், தாகத்தைத் தணிக்கும் பானமாகவும் பயன்படுகிறது. இறை உறவில் வளர்ந்தால் தாகம் (யோவா. 4:14), பசி (லூக். 6:21) ஆகியவை உண்டாகமல் இருக்கும். கொடியாகிய நாம் செடியாகிய இயேசுவில் இணைந்து வளருவோம்.

***2. இறையுறவில் நிலைத்திருத்தல் :*** (யோவா 15:4a)

“நான் உங்களோடு இணைந்திருப்பது போல நீங்களும் என்னோடு இணைந்திருங்கள்”

கிறிஸ்துவை முழுமனதுடன் ஏற்றுக் கொள்வதே அவரில் நிலைத்திருத்தல் ஆகும். 1 கொரி. 12:12-27. அப்போஸ்தலனாகிய பவுல் மனிதனின் உடல் உறுப்புக்களை மையமாக வைத்து அந்தந்த உறுப்புக்கள் ஒரு மனிதனை சிறப்பாக இயக்க உதவுகிறது என்பதையும் “அதே நேரத்தில் ஒரு சிறிய உறுப்பு பாதிக்கப்படுமேயானால் முழுமையான மனிதனின் அன்றாட இயல்புகள் பாதிக்கப்படும்” என்னை விட்டுப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய இயலாது (யோவா. 15:5) உடலாலும் உள்ளத்தாலும் இறைவனோடு நிலைத்திருப்பதை மிக அழகாக இயேசு சித்தரித்துள்ளார்.

இறை உறவில் நிலைத்திருப்பதற்கு ஆண்டவர் இயேசுக் கிறிஸ்து தரும் இன்னொரு உருவகம் திராட்சைச் செடியுடன் இணைந்திருக்கும் கொடி, திராட்சைச் செடியாகிய இயேசுவில் நாம் கொடியாக நிலைத்திருக்க.

* அவரில் நிலைத்திருக்க வேண்டும். யோவா. 15:4.
* வார்த்தையில் நிலைத்திருக்க வேண்டும். யோவா. 15:7.
* அன்பில் நிலைத்திருக்க வேண்டும். யோவா. 15:9.
* மகிழ்ச்சியில் நிலைத்திருக்க வேண்டும். யோவா. 15:11.

கொடியாகிய நாம் செடியாகிய இயேசுவில் இணைந்து நிலைத்திருப்போம்.

***3. இறையுறவில் கனி கொடுத்தல் :*** (யோவா. 15:5)

"....... ஒருவர் என்னுடனும் நான் அவருடனும் இணைந்திருந்தால் அவர் மிகுந்த கனிதருவார். "

மனித வாழ்வு கடவுளின் அருட்கொடைகளில் ஒன்று. அத்தகைய மனித வாழ்வைக் கனிவுடன் ஏற்று கனி கொடுக்க நாம் அழைக்கப்படுகிறோம். மரத்தை நடுபவன் பலனை எதிர்பார்ப்பது போல நம்மைப் படைத்த கடவுளும் நம்மிடம் கனியை எதிர்பார்க்கிறார்.

அவர் நீரோடையோரம் நடப்பட்ட மரம் போல் இருப்பர். பருவ காலத்தில் கனி தந்து என்றும் பசுமையாய் இருக்கும் அம்மரத்திற்கு ஒப்பாவார். திருப்பாடல்1:3 இறை உறவில் வாழ்வு வெற்றிகரமானது. செழிப்பும், கனி நிறைந்த தன்மை, பசுமை ஆகியவை இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களின் சிறப்பியல்புகளாகும்.

மனித வாழ்க்கையில் ஒவ்வொரு நாளையும் கிருபையின் நாளாகத் தந்து நம்மை கனி கொடுக்கப் பூமியில் நாட்டப்பட்டிருக்கிற மனிதர்களாகிய நாம் நம்மை படைத்து காத்து மீட்டு வாழ்வளிக்கும் கடவுளின் எதிர்பார்ப்புக்கு நாம் நல்ல கனி கொடுக்க வேண்டும். பகட்டாய் நின்று பூமிக்கு பாரமாய் இருந்து பலனைத் தராத அத்திமரத்தைப் போல் நாம் வாழ்ந்தால் சபிக்கப்படுவோம். எருவுக்காக ஆகட்டுமே என்று எரிக்கப்படுவோம்.

கனி கொடுத்தால் களிகூருவோம், கனி கொடாவிட்டால் கவலைப்படுவோம். கனி கொடுக்க வாய்ப்பில்லையேல் களிகூருதலுக்கும் வாய்ப்பில்லை. எனவே இறை உறவில் கனி கொடுப்போம்.

ஒன்றிப்பு ஞாயிறாகிய இந்த நன்னாளில் இறை உறவில் வளர்ந்து நிலைத்திருந்து கனி கொடுப்போம். இறைவன் நம்மை அவ்வாறாக வழி நடத்துவாராக ஆமென்.

அருள்திரு. **ஜெ. ஜெபசிங்**

17-11-2019

# பெண்குழந்தையின் பெருமதிப்பை உறுதிசெய்தல்

**AFFIRMING THE WORTH OF THE GIRL CHILD**

எண். 27:1-11 திப. 21:7-14
திபா. 71:1-12 மாற். 5:35-43

**"தலித்தா கூம்" என்றார். அதற்கு, "சிறுமி" உனக்கு சொல்லுகிறேன். "எழுந்திடு" என்பது பொருள்.** (மாற். 5:41)

பொதுவாக, குடும்பங்களில், குழந்தை பிறந்தவுடன் ஆண் குழந்தை என்றால் அகமகிழ்வும், ஆர்ப்பரிப்பும் வெளிப்படும். இனிப்புகளும், வாழ்த்துக்களும் பரிமாறப்படும். பெண் குழந்தை என்றாலோ சோகமும், மகிழ்ச்சியின்மையும் தென்படும்.

பெண் குழந்தை என்றால் பிறந்தவுடன் கள்ளிப்பால் கொடுத்து கொலை செய்வதும் மற்றும் நெல் விதையை தொண்டையில் வைத்து மூச்சுத் திணற வைப்பதும் இன்றைய சமூகத்திலும் நடைபெறும் கொடூரமான நிகழ்வுகள் ஆகும். பெண் குழந்தைகள் என்று கருத்தரிக்கும் நேரத்தில் அறிந்தால், கருவை அழித்து விடுகின்ற நிலையும் இன்று உள்ளது. பெண் குழந்தை என்றால் பெற்றோர் பாரமாய் எண்ணுகின்றனர்.

இப்படிப்பட்ட பெண் குழந்தைகளிடம் அன்பு காட்ட, பசியாற்ற யாரும் இல்லை. பெண் குழந்தைகள் தீப்பெட்டித் தொழிற்சாலை, கல்லுடைக்கும் தொழில், வீட்டு வேலை போன்ற பணிகளைச் செய்கின்றனர்.

இவ்விதமாய் உலகம் செயல்படுகின்ற போது இறைவன் பெண் குழந்தைகளை, ஆண் குழந்தைகளுக்கு சமமாக உருவாக்கி உள்ளார். இதனை படைப்பின் வரலாற்றிலே படிக்கின்றோம் (தொ.நூ. 1:2). இப்படிப்பட்ட பின்னணியம் நிறைந்த உலகத்தில் இறைவன் பெண் குழந்தைகள் மீது கரிசனை கொள்கிறார் என்பதை விவிலியப் பகுதிகள் நமக்கு கற்றுத் தருகின்றன.

பெண் குழந்தைகள் வாழ்வு பெற வேண்டும் என்பதுதான் இறைவனின் விருப்பம். ஆகவேதான் மரித்த பெண் குழந்தையை உயிரோடெழுப்புகிறார்.பெண் குழந்தைகள் தேங்கி இருக்கக் கூடாது. சுறுசுறுப்பாய் செயல்பட வேண்டும் என்ற நிலையில், நீ படுத்திருந்தது

போதும் 'தலித்தா கூம்' 'எழுந்திடு' என்கிறார். பெண் குழந்தைகள் மீது கரிசனை இல்லாவிட்டால் மரித்து போனது மரித்து போகட்டும் என விட்டிருப்பார்.

இவ்விதம் பெண் குழந்தைகள் வாழ்வு பெற பெற்றோரின் கடமை என்ன என்பதையும், குழந்தையின் கடமை என்ன என்பதையும் பின் வரும் பகுதியில் காண்போம்.

### *1. ஆண்டவர் மீது ஆழமான நம்பிக்கை கொண்ட பெற்றோர் :*

(மாற். 5:36)

யாயிர் என்ற ஜெபஆலயத் தலைவர், தான் ஈன்றெடுத்த மகள் தரணியிலே வாழவேண்டும் என்ற மன வாஞ்சையுடன், இயேசு நாதரைத் தேடி வருகிறார். என் மகள் சாகும்தருவாயில் இருக்கிறாள். அவள் பிழைக்க வேண்டும் என வருந்திக் கேட்கிறான்.

இயேசுவும் யாயிருடன் செல்கிறார். பெருந்திரள் கூட்டம் அவரை நெருக்கியபடியால் இயேசுவால் ஒன்றும் செய்ய இயலவில்லை. இவன் நின்று கொண்டிருக்க பன்னிரு ஆண்டுகளாய் இரத்தப் போக்கினால் வருந்திய பெண் சுகம் பெற்றுச் செல்கிறாள். பல நேரங்களுக்கு பின்பு இயேசு யாயிரிடம் பேச தொடங்கியபோது யாயிரின் வீட்டிலிருந்து, உம்முடைய மகள் இறந்து விட்டாள் என்ற செய்தி வருகிறது. அப்போது இயேசு "அஞ்சாதீர் நம்பிக்கை மட்டும் விடாதீர்" என்கிறார். யாயிரும் தன் நம்பிக்கையை விட்டு விடவில்லை. இயேசு யாயிரின் இல்லத்திற்கு சென்று இல்லத்தின் உள்ளே இருந்தவர்களை வெளியேற்றி, சிறு பெண்ணைப் பார்த்து "தலித்தா கூம்" என்கிறார். உடனே சிறுமி உயிரோடெழும்புகிறார். சிறுமியின் தகப்பனுடைய ஆழமான நம்பிக்கை சிறுமியை உயிரோடெழுப்பிற்று.

சிறுமியின் தகப்பனுடைய ஆழமான நம்பிக்கை மெச்சிக் கொள்ளப் பட தக்கது. தன் மகள் சாகும் தருவாயில் இருக்கும் போது, எந்த மருத்துவமனையையும் தேடிச் சென்றதாய் விவிலியம் குறிப்பிடவில்லை. இயேசுநாதரை மட்டும் தேடிச் செல்கிறார். இயேசுநாதரை தன் இல்லத்திற்கு அழைத்துச் செல்ல பல தடைகள் உருவானது. இருப்பினும் நீடிய பொறுமையுடன் காத்திருந்து இயேசு நாதரை தன் இல்லத்திற்கு அழைத்து வருகிறார்.

யாயிரின் இல்லத்திற்கு வந்த இயேசு வீட்டிலிருந்த அனைவரையும் வெளியே செல்லும்படி கூறுகிறார். யாயிரின் இல்லத்தில் யாயிரின் மனைவி, உறவினர் இருந்திருப்பர், அவர்கள் ஏதாவது தவறாகக்

கருதலாம் எனவும் கருதவில்லை. இயேசுவின் வார்த்தையில் ஆழமான நம்பிக்கை இருந்தது. எல்லாரையும் காட்டிலும் இயேசுவே மேலானவர் எனக் கருதினார். இந்த ஆழமான நம்பிக்கை யாயிரின் மகள் வாழ்வு பெற காரணமாயிருந்தது.

பெற்றோராகிய நம்முடைய நம்பிக்கை எங்கேயிருக்கிறது. நமக்கு பெண் குழந்தைகள் இருந்தால் இவர்கள் எதிர்காலத்தைக் குறித்து கலங்குகிறோமோ? ஆனால் இந்த யாயிர் மகள் வாழ்வு பெற இயேசு நாதரிடம் ஆழமான நம்பிக்கை வைத்திருந்தார்.

நம்முடைய கரத்தில் தரப்பட்ட பிள்ளைகளை ஆழமான இறை நம்பிக்கை உடையவர்களாய் வளர்க்கிறோமா?. ஓசேயா 4:6-ன் படி குழந்தைகளை ஆழமான இறை நம்பிக்கைக்குள் வளர்க்கத் தவறும் போது, இறைவனும் நம் குழந்தைகளை மறக்கவேண்டிய நிலை உருவாகிறது. If you carry the Bible, the Bible will carry you. குழந்தைக்கு பால் கொடுக்கும் போது கூட யூதர்கள் தன் குழந்தைக்கு நியாயப்பிரமாணத்தைக் கற்றுக் கொடுத்தார்களாம். இணைச்சட்டம் 6:6,7-ன் படி இறை நம்பிக்கையை கற்றுக் கொடுக்கத் தவறும் போது தற்கொலை, பெற்றோரைப் பேணாமை, இறைபயமின்மை போன்றவைகள் குழந்தைகள் மத்தியில் உருவாகின்றன. 2 அரசர்கள் 5-ம் அதிகாரத்தில் அடிமைப்பெண்ணின் வாழ்வு சரித்திரத்தில், இப்பெண் பெற்றோரின் வளர்ப்பு விதத்தை தெளிவாய் கண்டுகொள்ளலாம். சரியாய் வளர்க்கப்பட்டாதால் தான் துன்புறும் சூழலிலும், துன்புறுத்துவோருக்கு உதவி செய்யும் மனப்பாங்கை பெற்றுக் கொள்கிறான்.

பெற்றோர் ஆழமான இறைநம்பிக்கையிலிருந்து குழந்தைகளை ஆழமான நம்பிக்கைக்குள் வழிநடத்தும் போது குடும்பம் வளர்கிறது, திருச்சபை வளர்கிறது. சமுதாயம் வளர்கிறது.

### *2. ஆசீர்வாதத்தைச் சுதந்தரிக்க அசதியாய் இராத பெண் மக்கள் :* (எண். 27:4)

இஸ்ரவேல் சமுதாயம் ஆணாதிக்க சமுதாயம். பெண்களுக்கு ஆண்களைப்போல சமயுரிமை கொடுக்கப்படவில்லை. ஆண் குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதிலே பெண்களும் நாட்டம் செலுத்தினர்.இப்படிப்பட்ட சூழ்நிலையில் யோசேப்பின் வம்சத்தில் மனாசே என்னும் கோத்திரத்தில் பிறந்தவன் செலோப்பியாத். அவனுக்கு மில்காள். திர்சாள் என்னும் 5 குமாரத்திகள் இருந்தார்கள். செலோப்பியாத் வனாந்தரத்தில் மரித்துவிட்டான். இது இந்த சகோதரிகளுக்கு ஒரு பிரச்சனையாக முடிந்தது. இவர்களுக்கு சகோதரர்களும், தாயும் இல்லை.

உறவினர்கள் இருந்தாலும் பயனில்லை. இந்த சகோதரிகள் ஆதரவற்ற நிலையில் காணப்பட்டனர். இந்த சகோதரிகள் தேவன் தமது ஜனத்திற்கு ஆசீர்வாதமாய் தந்த தேசத்திலே, தகப்பனாரின் பெயர் நிலைநிறுத்தப்பட உரிமையுண்டு என நினைத்தார்கள். ஆகவே இந்த 5 பெண்களும் இறைவன் மட்டுமே தங்களுக்கு ஆதரவு என்று எண்ணி, யாரும் நெருங்க முடியாத ஆசரிப்புக் கூடார வாசலிலே ஆதரவு தேடி நின்றனர்.

இஸ்ரவேலர் வனாந்திர யாத்திரைக்குப் பின்பு இஸ்ரவேல் போரிலே வெற்றி கொண்ட இடங்களை பங்கு வைக்கின்றனர். அப்படி சுதந்திரமாக கிடைக்கப்பெற்ற அந்த நிலத்தினை பெற்றுக் கொள்ளும்படியாக இவர்கள் மோசேயிடம் முறையிடுகின்றனர். மோசே இதனை இறைவனிடம் தெரிவிக்கிறார்.இறைவன் செலோப்பியாத்தின் குமாரத்திகள் சொல்வது சரிதான். அவர்களுக்கு நிலம், நியாயம் கிடைக்கும்படி உத்தரவிடுகிறார்.

எண்ணிக்கை நூல் 36-ஐ படிக்கும் போது 5 பெண்களுக்கு வாழ்வில் ஆதரவு கொடுக்காத உறவினர்கள் வாழ்வாதாரமும் கொடுக்கக்கூடாது என்பதில் பல்வேறு கட்டுப்பாடுகளை விதிக்கின்றனர். வாழ்வில் ஒளியேற்ற வேண்டிய உறவினர்கள் வாழ்வாதாரத்தைப் பெற்றுக் கொள்ளாதபடி தடை விதிக்கின்றனர். சுயநலவாதிகளாய் செயல்படுகின்றனர். கோத்திரத் தலைவர்களால் கட்டுப்பாடு வைக்கப்படுகிறது. தங்களுடைய கோத்திரத்தில் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று 5 பெண்களும், கோத்திரத் தலைவர்களின் கட்டுப்பாடுகளுக்கு கீழ்ப்படிகின்றனர். ஆனாலும் அவர்களுக்கு வாழ்வாதாரங்கள் பகிர்ந்து கொடுக்கப்படவில்லை.

மோசே இறந்த பின்பு 5 பெண்களும் எலெயாசேரிடம் முறையிடுகின்றனர். ஏறக்குறைய 7 வருடங்களுக்கு பின்பு யோசுவாவும், எலெயாசரும் தேசத்தை பங்கிடும் போது 5 பெண்களும் திரும்ப வருகின்றனர். வெகு தாமதமாக உரிமை என்னும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்கின்றனர். இப்படி புத்திரன் இல்லாமல் மரிக்கும் நபரின் குமாரத்திகளுக்கு அவர்கள் சுதந்திரம் கொடுக்க வேண்டும் என்ற புதிய சட்டமும் இஸ்ரவேலருக்கு கொடுக்கப்பட்டது. தங்கள் உரிமையை பெற்றுக் கொண்ட பின்புதான் நிறைவுடைய வாழ்வு வாழ்கிறோம் என உணர்ந்தனர்.

நாமும் கூட ஏதோ ஒரு நிலையில் நம்முடைய உரிமையை இழந்திருக்கிறோமா?.

இஸ்ரவேல் ஏழைகள், வறியோர், அனாதைகள், விதவைகள், அந்நியர் மீது கரிசனை கொள்ளும் நாடு. இங்கே கூட 5 பெண்களும் ஆதரவற்றவர்களாய் இருக்கின்றனர். Equality என்று சொல்லுகிறார்கள். ஆனால் நடப்பதெல்லாம் Inequality. பெற்றோர் கூட தன் பிள்ளைகள்

அனைவரையும் ஒன்று போல் நேசிப்பதில்லை. இதனை ஏசா, யாக்கோபு நிகழ்வுகள் ஊடாய் கண்டு கொள்ளலாம். சொத்துக்காக, பணத்துக்காக சகோதரப் பாசத்தை விட்டு விடுகின்றனர்.

2017 நவம்பர் 7-ம் தேதி தினகரன் நாளிதழில் வெளிவந்த நிகழ்வு என்னவென்றால் மேற்கு வங்க மாநிலம், பதர்டீபாரா என்ற பகுதியிலே ஒரு குப்பைத் தொட்டியை சுற்றிலும் நாய்கள் கூடி இருந்து குலைத்துக் கொண்டிருந்தது. காகங்கள் குப்பைத் தொட்டியின் மேல் வட்டமிட்டுக் கொண்டிருந்தது. தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த அல்கா சவுத்திரி, என்ன வேடிக்கை என்று அருகில் வந்து பார்க்கும் போது, சிகப்பு துணியால் சுற்றப்பட்ட பெண் குழந்தை படுக்க வைக்கப்பட்டிருந்தது. இவரிடம் இருந்து எழும்பிய சிந்தனை என்னவென்றால் நாய்களுக்கு இருக்கும் பாசம் கூட மனிதனுக்கு இல்லையே எனக் கருதி காவல் நிலையத்தில் ஒப்படைத்தார். இறைமக்களாகிய நாம்,

1. பெண் குழந்தை வாழ்வு பெறுவதற்கு மேற்கொண்டிருக்கும் முயற்சிகள் என்ன?

2. பாலினப் பாகுபாடு உலகத்திலிருந்து தூரமாக்கப்பட நாம் எடுத்துள்ள முயற்சிகள் என்ன?

இறைவன், மனிதர்களாகிய நமக்கு பகுத்தறிவைத் தந்திருக்கிறார். எனவே சிந்தித்து தவறை உணர்ந்து நாம் திருச்சபையாக பெண்களின் நல் வாழ்வுக்கு என்று நல் வழிகளை உருவாக்கி பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்வடையச் செய்வோம்.

திருமதி. ***பெபின் ஜெயின்***

24-11-2019

# நுகர்வோரியத்திற்கு கிறிஸ்தவ மறுமொழி

**CHIRSTIAN RESPONSE TO CONSUMERISM**

தொநூ. 3:1-7 பிலி. 3:17-21
திபா. 37 மத். 6:25-34

**"அப்பொழுது அவர்கள் இருவரின் கண்களும் திறக்கப்பட்டன;.....".** (தொ.நூ. 3:7)

நுகர்வோரியம் என்று பொருள் கொள்ளும் Consumerism என்ற வார்த்தை "Consumere" என்ற லத்தீன் வார்த்தையிலிருந்து வந்தது ஆகும். Consumere என்ற வார்த்தையின் பொருள் விழுங்குதல் என்பதாகும். விழுங்குதல் என்பது பேராசையின் அடையாளமாகும். மனிதனுடைய வாழ்க்கை முறையும், வாழ்க்கைத் தரமும் இன்று நுகர்வோரியத்தால் மாற்றமடைந்துள்ளது. ஒரு மனிதனோ, ஒரு நிறுவனமோ தங்களுக்கு தேவையானவற்றை விலை கொடுத்துப் பெற்று அனுபவிப்பதே நுகர்வு ஆகும். இன்று மனிதனுடைய தேவையை நிர்ணயிப்பது சந்தை என்ற நிலை உருவாகிவிட்டது. விளம்பரங்களுக்குப் பின்னால் மனிதன் ஓட ஆரம்பித்துவிட்டான். இச் சூழலில் நுகர்வோரியத்திற்கு கிறிஸ்தவ மறுமொழிகளை கற்றுக் கொள்வோம்.

## *1. பொய்மையைத் தவிர்ப்போம் :* (தொநூ. 3:4,5)

"பாம்பு பெண்ணிடம், நீங்கள் சாகவே மாட்டீர்கள், ஏனெனில் நீங்கள் அதிலிருந்து உண்ணும் நாளில் உங்கள் கண்கள் திறக்கப்படும்".

இப்பகுதியில் சாத்தான் ஏவாளிடம், கடவுள் சொன்ன வார்த்தைக்கு பதில் பொய்யைக் கூறி வஞ்சிக்க பார்க்கிறான். கடவுளின் உண்மை தோட்டத்தின் நடுவில் இருக்கும் மரத்தின் கனியை புசித்தால் சாவீர்கள் என்பதாகும். ஆனால் சாத்தான் கடவுளின் உண்மையை மறைத்து நீங்கள் கடவுளைப் போல மாறுவீர்கள் என்ற பொய்யை ஏவாளின் உள்ளத்தில் ஊற்றுகிறான், அவளை நம்ப வைக்கிறான். எனவே,

1. தூண்டப்படுகிறார் ஏவாள் வச 1-4
2. இழுக்கப்படுகின்றார் வச 5
3. வீழ்ச்சிக்குத் தள்ளப்படுகிறார் வச 6,7

பொய்யை நம்பினவர்கள் ஏமாற்றமடைந்தனர்.

இன்றைய உலகில் விளம்பரங்களின் பின்னால் மக்கள் ஏமாற்றமடைகின்றனர். தேவையற்ற பொருட்களை விளம்பரத்தின் கவர்ச்சியால் இழுக்கப்பட்டு வாங்கிச் சேர்த்து கடன்பட்டவர்களாகின்றனர். ஆவிக்குரிய உலகிலும் கவர்ச்சியான செய்தியாளர்களின் விளம்பரங்களால் இழுக்கப்பட்டு ஏமாற்றமடைந்து போகின்றனர். இயேசுநாதர் வழியும், வாழ்வும் உண்மையும் நானே (யோவா.14 :6) என்றார். பவுலார் பிலிப்பியருக்கு எழுதிய கடிதத்தில் பொய்மையை நம்பி அனேகர் வாழ்கின்றனர். அவர்கள் வயிறு அவர்கள் தெய்வம், அதிலே அவர்கள் முடிவு, அவர்கள் சிலுவைக்கு பகைஞராயிருக்கிறார்கள் (பிலி. 3:18,19). உண்மையை அறிந்தவர்களாயிருந்தால் உண்மை என்றும் விடுதலையளிக்கும் (யோவ. 8:32). எ.கா ஆகான் (யோசுவா 7:1-26).

***2. பேராசையைத் தவிர்ப்போம் :*** (தொநூ. 3:6)

"அந்த மரம் உண்பதற்கு சுவையும்......தன் கணவனுக்கும் கொடுத்தாள்"

"பேராசை பெரும் நஷ்டம்" என்பார்கள் முன்னோர்கள். சாத்தானின் பொய்வார்த்தையாகிய "இந்தக் கனியை உண்டால் கடவுளைப்போல் மாறுவாய்" என்பதை கேட்டவுடன் கடவுளின் வார்த்தையை மறந்து பேராசையால் கனியைப் பறித்தாள். அதை தானும் உண்டு தன் கணவனுக்கும் கொடுத்தாள் ஏவாள்.

புத்தர் சொன்னார், துன்பத்திற்க காரணம் ஆசையே. பேராசையின் விளைவு மனித வாழ்வில் நஷ்டத்தையும், பாடுகளையும் கொண்டுவரும். பேராசை மனித மனங்களில் மாயத் தோற்றத்தை உருவாக்கும். அன்று சாத்தான் கனியைக் காட்டினான். இன்று விளம்பரங்களின் வழியாக பொட்டலத்தைக் காட்டுகிறான். அதன் உள்ளே என்ன இருக்கிறது என்பதைப் பார்க்காது வெளியே காணப்படும் மாயத் தோற்றத்தை பார்த்து பேராசை வருகிறது. கடைசியில் தனக்கிருக்கும் உடைமை, உறவுகளை இழக்கிறான். அன்று பேராசையால் மனிதன் நிர்வாணியானான், விலங்காக மாறினான், அவனுக்கு நியமித்த ஏதேன் தோட்டத்தை இழந்தான்.கடவுளிடம் இருந்து உயர்ந்த உறவை இழந்தான். பவுலடியார் சொல்கிறபோது, "மனிதர்கள் பூமிக்கடுத்தவைகளை சிந்திக்கிறார்கள்" (பிலி. 3:19c). இன்று பேராசையால் இருப்பவற்றை இழந்து, உறவுகளை இழந்து தனிமைப்படுத்தப்படுகிறோம். இன்று நான் யார் என்பதைவிட எனக்கு என்ன, எவை இருக்கின்றன. என்ற நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறோம்.

(எ.கா)

1. கேயாசி (2 அர. 4 : 15-27)
2. பிலேயாம் (எண். 22 : 1-31)

***3. பெருவாழ்வைத் தேடுவோம் :*** (மத். 6:33)

"ஆகவே அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சியும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள்"

சாத்தான் காட்டும் பேராசையையும், பொய்மையினை அல்லது மாயத்தோற்றத்தினை உதறிவிட்டு கடவுள் அருளும் பெருவாழ்வை வாஞ்சிக்க வேண்டும். பெருவாழ்வு என்பது மறுவாழ்வு இயேசுவால் தரப்படுகின்ற வாய்ப்பு ஆகும். உலகப் பொருட்களால் வாழ்வைக் கட்டுவதை தவிர்த்து உன்னதங்களிலிருந்து வரும் நன்மைகளால் வாழ்வைக் கட்டவேண்டும்.

1. உலகம் சார்ந்த கவலைகளைக் களைந்து (மத். 6:27,28)
2. இறை நம்பிக்கை கொண்டு (மத். 6:26)
3. இறையரசை அனுபவமாக்க வேண்டும் (மத். 6:33)

உலக இச்சைகளை நோக்கி சாத்தானால் இழுக்கப்பட்ட இயேசு வசனத்தால் அவனை ஜெயித்தார் (மத். 4:1-11). நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள வாஞ்சித்து வந்தருடன் இருப்பதை விற்று தரித்திரருக்கு கொடுக்கச் சொன்னார் இயேசு (மாற். 10:21). இங்கு பொருட்களின் ஆசைகொள்ளாது பகிர்ந்து பெருவாழ்வை பெற கற்றுத்தந்தார். அநீதியான பொருளினால் உலகத்தில் நண்பர்களை சம்பாதிக்க சொன்னார் (லூக். 16:9). உடல் ஆசை, இச்சை நிறைந்த பார்வை, செல்வ செருக்கு போன்றவைகளை விட வேண்டும் (1யோவா. 2:16). தொடக்ககால திருச்சபை போன்று பகிர்ந்து மகிழவேண்டும். சகேயுவின் மன மாற்றத்தினாலான உலக நிலைகளில் இழுக்கப்பட்டு மாண்பினை இழந்த இளையவனின் வாழ்வு அனைவருக்கும் எச்சரிப்பு, மட்டுமென்று திருந்தி வாழ ஒரு வாய்ப்பு என்பதை (லூக். 15:17-24) உணர்ந்து செயல்படுவதிலே சிறப்பு.

நவீன காலத்தில் தேவையற்றவற்றை வாங்கி சேர்க்க இழுக்கும், ஏமாற்றும், கவர்ச்சியான உலகில் வாழ்கிறோம். இத்தகைய நிலைகளில் இறையரசின் தகவுகளை இழந்து விடாது பேராசையைத் தவிர்த்து, பொய்மையை தவிர்த்து மகிழ்வும், மனநிறைவும் தருகின்ற பெருவாழ்வை தேடுவோம். அதுவே நம்மில் இறைசாயலை வெளிப்படுத்தும். ஆண்டவருக்கு முக்கியத்துவம் கொடுத்து அவரது அறிவுரைக்கு இசைந்து அக்களிப்புடனும் அமைதியுடனும் வாழ்ந்திடுவோம்.

அருள்திரு. Y. **லாறன்ஸ்**

01-12-2019



# எலிசபெத்துடன் மரியாவின் சந்திப்பு
# இறைவாக்குறுதியைக் கொண்டாடுதல்

## MEETING OF MARY WITH ELIZABETH
## CELEBRATING THE PROMISE OF GOD

1 சாமு. 2:1-10 எபி. 11:29-40
திபா. 66 லூக். 1:39-45

**"ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்"**

(லூக். 1:45)

தலைசிறந்த பின்-அமைப்பியல் (Post Sturcturalism) சிந்தனையாளரும் கட்டவிழ்ப்பு அல்லது கட்டுடைத்தல் (Deconstruction) கொள்கையை வகுத்தவருமான ழாக் தெரிதா (Jacques Derrida) இருவகையான விருந்தோம்பலைக் குறித்து விவரிக்கின்றார். ஒன்று அழைப்பின்பேரில் நிகழும் விருந்தோம்பல் (Hospitality of Invitation) மற்றொன்று, முறையான அழைப்பின்றி அன்பின் மிகுதியால் ஒருவரைத் தேடி வந்து சந்திக்கும்போது நிகழும் விருந்தோம்பல் (Hospitality of Visitation).

கடவுள் தம் மக்களைத் தேடிவந்து விடுவித்தருளினார் என்ற மாபெரும் மீட்புச் செயலை நினைவுகூர்ந்து கொண்டாடுவதும், அம்மீட்பு முழுமைபெறும் அவரது இரண்டாம் வருகைக்காக ஆயத்தப்படுவதுமே திருவருகைக் காலத்தின் நோக்கமாகும்.

வரலாற்றில் இந்தக் கொண்டாட்டம் மரியா மற்றும் எலிசபெத்து என்ற இரு ஆளுமைகளின் சந்திப்பிலிருந்து தொடங்குகிறது. எலிசபெத்துடன் மரியாவுடன் சந்திப்பு என்பது சாதாரணமானதன்று; சரித்திரச் சந்திப்பாகும். இருவரும் தங்கள் வாழ்வில் நிகழ்ந்து கொண்டிருக்கும் இறையருட்செயலை எண்ணி, கடவுளின் வாக்குறுதியின் நிறைவேறுதலைக் கொண்டாடும் சந்திப்பாகவும் அமைந்திருந்தது. இது இறைஉறுதிமொழியின்படி(Promise of God) கருவுற்ற இருமகளிரின் சந்திப்பு மட்டுமன்று; கடவுளின் மீட்புத் திட்டத்தில் முறையே முக்கியமாகவும், முதன்மையாகவும் பங்கேற்பதற்காகப் பிறக்கவிருக்கும் இரு குழந்தைகளின் சந்திப்பு என்றால் மிகையாகாது. கொண்டாட்டம் மிகுந்த இந்தச் சந்திப்புக்கும், சான்றுபகர்தலுக்கும் அடித்தளமான கடவுளின் வாக்குறுதியின் முக்கியத்துவத்தையும், முதன்மையையும் திருமறைப்பகுதிகள் சார்ந்து தியானிப்போமாக!

### *1. நலிவுற்றோரின் நன்னம்பிக்கைக்கான இறைவாக்குறுதியைக் கொண்டாடுதல் :* (லூக். 1:45)

மரியா மற்றும் எலிசபெத்து, குடும்பத்தில் சாதாரண, எளிமையான பின்னணியம் உடையவர்கள். இறை வார்த்தையிலும் வாக்குறுதியிலும் பற்றுகொண்டவர்கள். மரியா, இளையவர், வருங்காலத்தைக் குறித்த நல்லெதிர்நோக்கும், எதிர்பார்ப்பும் உடையவர். எலிசபெத்து, மூத்தவர், முதிர்ந்த ஞானமும், கடந்தகால அனுபவமும் மிக்கவர். இருவரும் கருவுற்றிருப்பது இயல்புநிலைக்கும் மனிதமுறைக்கும் அப்பாற்பட்டதாகக் கருதப்பட்டது.

பொதுவாக, யூதச் சமூகத்தில், பெண்கள் ஆண்களைப் போலல்லாமல் இரண்டாம் பட்சமாகக் கருதப்பட்டனர். சமய, சமூக, குடும்ப வாழ்வில் போதிய உரிமையோ, இடமோ அவர்கட்கு வழங்கப்படவில்லை. ஒரு பொருளைப் போல நடத்தப்பட்டனர். இச்சூழலில் வயதுமுதிர்ந்தவரும், கருவுற இயலாதவருமாயிருந்த எலிசபெத்துக்கும், திருமண ஒப்பந்தம் செய்யப்பெற்றிருந்த மரியாவுக்கும் கடவுளின் வாக்குறுதி வானதூதர் வழியாக வழங்கப்படுகிறது. நலிவுற்ற நிலையிலிருந்தோர்க்கு நன்னம்பிக்கையூட்டும் நல்வாக்காக இறைவாக்குறுதி அருளப்படுகிறது. (லூக். 1:13-17; 30-35)

வயதுமுதிர்ந்தவர், கருவுற இயலாதவர் என்று கருதப்பெற்ற எலிசபெத்து கருவுற்றது, மண ஒப்பந்தம் மட்டுமே செய்யப் பெற்றிருந்த மரியா கருவுற்றது, இவ்விரண்டு நிகழ்வுகளும் அவர்களின் குடும்பத்திலும், சமூகத்திலும் இகழ்ச்சிக்கும் தாழ்ச்சிக்கும் அடிகோலியிருக்கும். ஆனால் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் இறைவாக்குறுதி நிறைவேற தங்களை ஒப்படைத்தனர். கொந்தளிப்பான தருணங்களிலும் குழம்பிப் போகாமல் இறைவிருப்பம் செயல்பட தங்களை அர்ப்பணித்தனர்.

குழந்தையின்றி எலிசபெத்து இகழ்ச்சிக்குள்ளானதைப் போன்றுதான் பழைய ஏற்பாட்டில் அன்னாவும் இகழ்ச்சியையும், இன்னலையும் அனுபவித்தார். நலிவுற்ற அன்னாவின் நிந்தையைக் கடவுள் நீக்குவார் என்று குரு ஏலி இறைவாக்குறுதியை அன்னாவிடம் பகிர்ந்துகொள்கின்றார். இறைவாக்குறுதி சாமுவேலின் பிறப்பின் வழியாக அன்னாவில் நிறைவேறியது. அதைத் தான் அன்னாவின் மன்றாட்டு நமக்கு அறுதியிட்டுக் கூறுகின்றது( 1 சாமு. 2:1-10).

வாழ்வில் நலிவுற்ற நேரங்களிலும், கொந்தளிப்பான அனுபவங்களிலும். கடவுளும், அவரது வாக்குறுதியுமே நமக்கு நன்னம்பிக்கை என்பதற்கு எலிசபெத்து, மரியா, அன்னா போன்றோர் சான்றாக விளங்குகின்றனர். கடவுளின் மாபெரும் மீட்புத் திட்டத்தில்,

நலிவுற்ற, ஒடுக்கப்பட்ட, உரிமை மறுக்கப்பட்ட பெண்களே முதன்மையான இடத்தைப் பெற்றனர், மீட்பின் கருவிகளாக பயன்படுத்தப்பெற்றனர்.

கடல்வழி தேடலாய்வாளரான பர்த்தலமேயு டயஸ் என்பவர் இந்தியாவைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று புறப்பட்டார். ஆப்பிரிக்காவின் தென்கோடி முனையைச் சுற்றி வந்து இந்தியாவை நெருங்கும் நேரத்தில் கடும்புயலின் காரணமாக அவரால் பயணத்தைத் தொடர முடியவில்லை. அவ்விடத்தை “புயல்முனை” எனக் கண்டறிந்தார். ஏறக்குறைய பத்து ஆண்டுகள் கழித்து வாஸ்கோடகாமா, புயல்முனையைத் தாண்டி பயணம் செய்ய முடிவெடுத்தார். அப்படிப் பயணிக்கும்போது கப்பல், புயலில் சிக்கியதோடு மட்டுமல்லாமல் சேதமும் ஏற்பட்டது. சிலர் மட்டும் கப்பலைப் பழுதுபாருங்கள், மற்ற எல்லோரும் வாருங்கள் நாம் கடவுளிடம் மன்றாடுவோம் என அழைத்து அனைவரையும் மன்றாட்டில் நடத்தினார் வாஸ்கோடகாமா. அவர்களின் மன்றாட்டைக் கேட்ட கடவுள் மாபெரும் ஆபத்தினின்று அவர்களைக் காத்தார். தாங்கள் புயலில் சிக்கிய இடம் “நன்னம்பிக்கைமுனை” எனக் கண்டறிந்தார். புயல்முனை நன்னம்பிக்கைமுனையாக மாற்றம் பெற்றது.

திருவருகைக் காலத்தில் நுழைந்திருக்கின்ற நாம் நமது வாழ்வுக்கும், கொண்டாட்டங்களுக்கும் கடவுளின் வாக்குறுதியை அடிப்படையாகக் கொள்வோம். புயல்முனையில் அகப்பட்டுக் கொண்டவர்களைப் போல நலிவுற்று, வாழ்வில் நம்பிக்கையிழந்து காணப்படும் மக்கள் வாழ்வு பெற, அமைதி பெற நன்னம்பிக்கை முனையாக விளங்கும் கிறிஸ்துவை நமது கொண்டாட்டங்களிலும் ஆசரிப்புகளிலும் பிரதிபலிப்போம்.

### *2. நம்புவோரின் நல்வாழ்வுக்கான இறைவாக்குறுதியைக் கொண்டாடுதல் :* (லூக். 1:45)

எலிசபெத்துடன் மரியாவின் சந்திப்பு, பழமையையும் புதுமையையும் இணைக்கும் பாலமாகவும், இறைவாக்குறுதியின் முழுமையான நிறைவேறுதலின் தொடக்கமாகவும் அமைந்திருந்தது. முதியவரான எலிசபெத்து, பழைய உடன்படிக்கையின் பிரதிநிதியாகவும், அவர் வழியாகப் பிறக்கவிருக்கும் மகவு, பழைய இஸ்ரயேலின் கடைசி ஆளுமையாகவும் முன்னிறுத்தப்படுகின்றார். மரியா, புதிய உடன்படிக்கையின் பிரதிநிதியாகவும், அவர் வழியாக பிறக்கவிருக்கும் மகவு, அனைத்து மக்களையும் மீட்பின் புதிய காலத்திற்கு அழைத்துச் செல்பவராகவும் முன்னிறுத்தப்படுகின்றார். இந்த இறையருட்செயல் நிறைவேறுவதற்கும், முழுமையடைவதற்கும் மரியா மற்றும் எலிசபெத்து ஆகியோரின் நம்பிக்கை பெரும்பங்காற்றியது. ஆகவே தான் மரியாவும்

எலிசபெத்தும் நம்பிக்கையைக் குறித்து ஒருவருக்கொருவர் வியந்தோதுகின்றனர். இந்த நம்பிக்கை மனுக்குலத்தின் நல்வாழ்வுக்கு அடிகோலியது.

லூக். 1:45 இல் மரியா நம்பிக்கையின் உச்சமாக எலிசபெத்துவால் அடையாளம் காட்டப்படுகின்றார். "நான் ஆண்டவரின் அடிமை: உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்ற மரியாவின் நம்பிக்கையோடு கூடிய ஒப்படைப்பும் (லூக். 1:38), "அவர் தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார்" (லூக். 1:48) என்பதும் தம்மை நம்புவோர்க்குக் கடவுள் நல்வாழ்வை அருளுகின்றார் என்பதைக் காட்டுகின்றது. எலிசபெத்து மற்றும் மரியா ஆகியோருக்கு பிறக்கப்போகும் குழந்தைகள், எப்படி மனுக்குலம் நம்பிக்கையின் வழியாக நல்வாழ்வைப் பெறுவதற்கு அடித்தளமாக இருப்பர் என்பதை லூக்கா நற்செய்தியாளர் எடுத்துரைக்கிறார் (லூக். 1:13-17; 31-33; 46-55; 68-79).

எபிரேயர் திருமுகத்தின் ஆசிரியர், நம்பிக்கையின் பரிணாமத்தையும், பரிமாணத்தையும், வரலாற்றையும் குறித்து 11 ஆம் அத்தியாயத்தில் விவரிக்கின்றார். பற்றுதியாளர்களின் பட்டியலில் வரும் அனைவரும் தம் நம்பிக்கையினாலே நற்சான்று பெற்றனர். ஆயினும் அவர்கள், கடவுள் வாக்களித்ததைப் பெறவில்லை. நம்மோடு இணைந்துதான் அவர்கள் நிறைவுபெறமுடியும். (எபி. 11:39,40). ஏனெனில் கிறிஸ்துதாமே கடவுளின் அனைத்து வாக்குறுதிகளின் நிறைவேறுதலாகவும் முழுமையாகவும் இருக்கின்றார், கிறிஸ்துவை நம்புவோர் அனைவருமே கடவுளின் வாக்குறுதியின் நல்வாழ்வைப் பெறுவர் என்பது திண்ணம்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையை நினைவுகூர்ந்து கொண்டாடும், மீண்டும் அவருடைய வருகையை எதிர்நோக்கும் நாம், தம்மை நம்புவோர்க்கு அவர் அருளும் வாக்குறுதியின் நல்வாழ்வைப் பறைசாற்ற வேண்டும். நம் செயல்களின் வழியாக கிறிஸ்துவின் வருகையை அர்த்தப்படுத்தவும், எதிர்நோக்கவும் வேண்டும். நல்வாழ்வுக்கான அவரது வாக்குறுதி நம்மிலும், நம் வழியாகப் பிறரிலும் செயல்வடிவம் பெற வேண்டும்.

ஓர் இளைஞன், கனவொன்று கண்டான். கனவில், அவன் வணிகக் கூடமொன்றில் நுழைகின்றான். வணிகக் கூடத்தின் வாயிலில் நின்ற வானதூதரிடம், இந்த வணிகக் கூடத்தில் எவையெல்லாம் விற்கப்படும்? என்று கேட்டான். நீ வேண்டுவனவெல்லாம் இங்குக் கிடைக்கும் என்றார் வானதூதர். அந்த இளைஞன், தான் விரும்புவனவற்றை ஒவ்வொன்றாகக் கேட்கத் தொடங்கினான். உண்மையான மக்களாட்சி இவ்வுலகில் ஏற்படுத்தப் பெற வேண்டும், உலகில்

நடைபெற்றுக் கொண்டிருக்கும் எல்லாப் போர்களும், சண்டை சச்சரவுகளும் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும், இவ்வுலகில் ஏழ்மையும், வறுமையும் ஒழிக்கப்பெற்று மக்கள் நல்வாழ்வு பெற வேண்டும் என அடுக்கிக் கொண்டே போனான். அவனைக் குறுக்கிட்ட வானதூதர், மன்னிக்கவும் இளைஞனே, நீ என்னையும் இந்த வணிகக்கூடத்தையும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை, நாங்கள் ஒருபோதும் கனிகளை விநியோகிப்பதில்லை; விதைகளையே விநியோகிக்கின்றோம் என்றார்.

கடவுளின் வாக்குறுதி விதையாக நம்மில் ஊன்றப்பட்டுள்ளது. அது நம்மிலே வேர்கொண்டு வளர்ந்து கனி தருவதற்கு நமது வாழ்வு அடிப்படையாக இருக்கின்றது. நமது செயல்களின் வழியாக, நலிவுற்றோரின் நன்னம்பிக்கையாகவும், நம்புவோரின் நல்வாழ்வாகவும் இருக்கும் கடவுளின் வாக்குறுதியைக் கொண்டாடுவோம், ஆண்டவரின் வருகையை எதிர்நோக்குவோம். கவிஞர் மோகனப் பிரியன் தன் கவிதையொன்றில் இவ்வாறு குறிப்பிடுகின்றார்,

எல்லோரும் மகிழ்ந்து
களிகூருங்கள்
மறுபடியும்
மனிதகுமாரன் வருவார்.
புல்லாங்குழலின்
பூபாளமாக அல்ல . . . !
பூகம்பத்தின் கர்ஜனையாக!

அன்று
மெசியாவின்
துரட்டிக் கோல்
தழைகளுக்காக அல்ல,
ஒடுக்கப்பட்டோரின்
உதிரம் உறிஞ்சும்
தலைகளுக்காகவே
நீளுவது நிஜம்!

கிறிஸ்து வருகையின் உண்மையையும், தீவிரத்தையும் உணர்ந்து, நலிவுற்றோர், ஒடுக்கப்பட்டோர், ஏழையர் என எல்லோரும் ஏற்றம் பெற உழைப்போம். ஆண்டவரின் வருகையில் அவரது வலப்புறத்தில் வலம் வருவதற்கான வாய்ப்பைப் பெறும் வண்ணம் திருவருகைக் கால கொண்டாட்டங்களை இறைவாக்குறுதியின் அடிப்படையில் அமைத்துக்கொள்வோம்.

திரு. B. ***சாம் ஜெபசிங்***

08-12-2019

விவிலிய ஞாயிறு &
திருவருகைக் கால இரண்டாம் ஞாயிறு

## இறைவாக்கு : இருமுனையுள்ள கூர்வாள்

**WORD OF GOD : DOUBLE EDGED SWORD**

எரே. 36:1-10 | எபி. 4:11-13
திபா. 119:89-96 | லூக். 1:5-17

**"கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது; ஆற்றல் வாய்ந்தது; இருபக்கமும் வெட்டக்கூடிய எந்த வாளினும் கூர்மையானது...."** (எபி. 89:14)

திருமறை இறைவார்த்தைகளின் தொகுப்பு. தொடக்கத்தில் இருந்த வார்த்தை, வரலாற்றில் தொடர்ந்த வார்த்தை, மனுவாய் வடிவமேற்ற வார்த்தை, வாழ்வளிக்கும் வார்த்தையாய் செயல்படும் வார்த்தையை திருமறை, நெருப்பு என்றும், பாறையை நொறுக்கும் சம்மட்டி என்றும் (எரே. 23:29), ஒளி என்றும், வழி என்றும், விளக்கு என்றும் பல்வேறாய் உருவப்படுத்தும் எபிரேய ஆக்கியோன் கடவுளுடைய வார்த்தை "ஆற்றல் வாய்ந்தது, இருபக்கமும் வெட்டக்கூடிய எந்த வாளினும் கூர்மையானது" என்று கூறி இறைவக்கின் கூர்மையை இன்னும் கூர்படுத்துகிறார்.

"The Word of God prepares you for a better life in this World and after you leave this World."

இவ்வுலகிலும், மறு உலகிலும் ஒரு சிறந்த வாழ்வைப் பெற்றுக்கொள்ள 'கடவுளின் வார்த்தை' நம்மைத் தயார்படுத்துகிறது. என்பது Gift Gugumona-வின் வரிகள்.

பக்தர் பில்லி கிரகாம் கூறும் போது "God and God's Word are inseparable."

"கடவுளையும் அவருடைய வார்த்தையையும் பிரிக்க முடியாது என்பார்."

தரப்பட்ட திருமறைப்பகுதி சார்ந்து இறைவார்த்தையின் கூர்மையை நாம் கூர்ந்து நோக்கும்போது மூன்று உண்மைகள்.

***1. கண்டிக்கும் வாக்கு*** : (எரே. 36:1-10)

இறைவாக்காளர் எரேமியா கி.மு. 7-ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 6-ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர். தன்னுடைய நீண்ட நெடியக் காலத்தில் கடவுளுடைய வார்த்தையை இஸ்ராயேலருக்கு அறிவித்தவர். எரேமியா மென்மையான அன்புள்ளம் படைத்தவர். ஆயினும் இஸ்ரவேலருக்கு எதிராக தண்டனைத் தீர்ப்பு உரைக்குமாறு, அவர்களின் தீச்செயலைக் கண்டித்து உரைக்குமாறு கடவுளால் பணிசெய்யப்பட்டவர்.

குறிப்பாக எரே.36-ம் அதிகாரத்தில் யோசியாவின் மகனும் யூதாவின் அரசனுமான யோயாகீம் ஆட்சியேற்ற நான்காம் ஆண்டில் ஆண்டவரிடமிருந்து எரேமியாவுக்கு அருளப்பட்டு யூதாவீட்டாருக்கும், இஸ்ரயேலருக்கும் எதிராகக் கண்டிக்கும் கருக்கான சொற்கள் கடினமானவைகள். எரே. 36:29-31 வசனங்களில்

- பாபிலோனிய மன்னன் திண்ணமாய் வந்து இந்நாட்டை அழித்துவிடுவான்.
- மனிதரையும், விலங்குகளையும் வெட்டி வீழ்த்துவான்.
- யோயாகீம் வழி மரபினருள் எவனும் தாவீதின் அரியணையில் அமரமாட்டான்.
- அவனது பிணம் வெளியில் எறியப்பட்டு பகலின் வெயிலிலும், இரவின் குளிரிலும் கிடக்கும்.
- நான் அவர்களின் குற்றங்கள் பொறுத்திருந்து தண்டிப்பேன்.
- நான் எச்சரித்தும் அவர்கள் பொருட்படுத்தியிராத தீங்குகளை அவர்கள் மேலும், யூதா மக்கள் மேலும் வரச்செய்வேன்.

என்று இருமுனைக் கூர்வாள் போன்று வார்த்தைகளால் வெட்டி சாய்கிறார்கள் இல்லையா?

காரணம், இஸ்ரயேலர் யாவே கடவுளுக்கு கீழ்ப்படியாமல், அவர்கள் கட்டளையை கடைபிடிக்காமல், அவருடைய வார்த்தைகளுக்கு செவிசாய்க்காமல், கடவுள் விடுத்த அழைப்பை மதியாமல் இருந்ததின் விளைவாக (எரே. 35:12-17) இந்த கூரியவாள், இருமுனையுள்ள கூரியவாள்.

அன்பர்களே! கடவுளின் வார்த்தைக்கு நாமும் கீழ்ப்படியாமலும், செவிகொடாமலும், அவரின் அழைப்பை ஏற்றுக்கொள்ளாமலும் இருப்போமானால் அவருடைய வார்த்தை என்னும் வாளுக்கு, இருபுறம் கூர்மையுள்ள வாளுக்கு, தப்பமுடியாது என்று நம்மையும் கண்டிக்கிறார்.

கிறிஸ்துவின் முன்னோடியாய், ஆண்டவருக்கு வழியை ஆயத்தப்படுத்திய முழுக்குமுனிவர் யோவான், "விரியன் பாம்புக் குட்டிகளே, வரப்போகும் சினத்திலிருந்து தப்பிக்க இயலும் என உங்களிடம் சொன்னவன் யார்?......ஏற்கனவே மரங்களின் வேரருகே கோடரி வைத்தாயிற்று நற்கனி தராத மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டு தீயில் போடப்படும்." (மத். 3:7,10) என்று வார்த்தையினால் வெட்டுகிறார், எரிக்கிறார். ஆம் கண்டிக்கும் அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவோம், செவிகொடுப்போம், செயல்படுவோம்.

**2. கற்பிக்கும் வாக்கு** : (எபி. 4:11-13)

கடவுளின் வார்த்தை கண்டிக்கும் வார்த்தை மட்டுமல்ல. கற்பிக்கும் வார்த்தையும் ஆகும்.

எபிரேயத் திருமுகம் யூதக் கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டதாகும் அவர்கள் பழைய ஏற்பாட்டில் தோய்ந்தவர்கள்; தங்கள் நம்பிக்கையில் தளர்ச்சி ஏற்பட்டு நம்பிக்கையை இழந்துவிடக் கூடிய ஆபத்தில் இருந்தவர்கள். அவர்கள் கிறிஸ்துவின் மீது கொண்ட நம்பிக்கையில் உறுதியற்றவர்களாய் யூத சமயத்திற்குத் திரும்பும் எண்ணத்தோடிருந்தார்கள். தாங்கள் பெற்றுக் கொண்ட நற்செய்தியை யூதமயமாக்க விரும்பினார்கள் (கலா. 2:14).

இந்தச் சூழலில்தான் எபிரேய ஆக்கியோன் கடவுளின் வார்த்தையின் அழுத்தத்தையும், கூர்மையினையும் எடுத்துரைக்கின்றார்.

கடவுளின் வார்த்தை உயிருள்ளது
ஆற்றல் வாய்ந்தது, கூர்மையானது
குத்தி உருவக்கூடியது என்கிறார்.

கல்வி ஒருமனிதனில் இருக்கும் அறியாமை என்னும் இருளை அகற்றி ஞானம் என்னும் ஒளியைக் கொடுப்பது போல கடவுளின் வார்த்தை ஒருவனின் வாழ்வில் ஊடுருவி உயிருள்ளதாய், இருபுறமும் வெட்டக் கூடியதாய் ஆன்மாவையும், ஆவியையும் பிரிக்கும் அளவுக்கு குத்தி ஊடுருவுகிறதாய் உள்ளத்தின் சிந்தனைகளையும், நோக்கங்களையும் சீர்தூக்கிப் பார்த்து எந்த மறைவுமின்றி வெளிப்படையாய் கற்றுக் கொடுத்து ஒவ்வொருவரையும் உருவாக்குகிறது; கூர்படுத்துகிறது எனலாம்.

கடவுளின் வார்த்தையின் கூர்மையினால் தாக்கப்பட்ட மக்கள் கூட்டத்தினர்; நாங்கள் என்ன செய்யவேண்டும்? என்று முழுக்கு முனிவரைக் கேட்க; இரண்டு அங்கிகளை உடையவர் இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளட்டும்; உணவை உடையவரும் அவ்வாறே செய்யட்டும் என்றும், வரித்தண்டுவோர் வந்து "போதகரே நாங்கள் என்ன செய்யவேண்டும்? என்று கேட்க" உங்களுக்கு குறிக்கப்பட்ட தொகைக்கு அதிகமாக எதையும் தண்டாதீர்கள் என்றும்; படைவீரரும் அவரை நோக்கி "நாங்கள் என்ன செய்யவேண்டும்? என்று கேட்க" நீங்கள் எவரையும் அச்சுறுத்திப் பணம் பறிக்காதீர்கள்; யார் மீதும் பொய்க் குற்றம் சுமத்தாதீர்கள், உங்கள் ஊதியமே போதும் என்றிருங்கள் என்று கூறி கூர்மையான பாடத்தைக் கற்றுக் கொடுத்தார் (லூக். 3:10-14).

ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து தம் அடியவர்களைப் பார்த்து கூறும் வார்த்தை "என்னிடம் கற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் உள்ளத்திற்கு இளைப்பாறுதல் கிடைக்கும்" என்கிறார் (மத். 11:29). ஆம் கடவுளின் வார்த்தை என்றும் இருமுனையுள்ள கூர்வாள் கற்பிக்கும் வார்த்தை.

### *3. களிப்பூட்டும் வாக்கு* : (லூக். 1:5-17)

கடவுளின் வார்த்தை கண்டிக்கும் வார்த்தை, கற்பிக்கும் வார்த்தை மட்டுமல்ல, களிப்பூட்டும் வார்த்தை.

படிக்கப்பட்ட நற்செய்திப் பகுதியில் முழுக்குமுனிவர் யோவானின் பிறப்பைப்பற்றி முன்னறிவிக்கும் போது, யோவானின் தந்தை செக்கரியா திருக்கோயிலில் தூபம் காட்டுகின்ற வேளையில் கடவுளுடைய வார்த்தை வானதூதர் வழியாய் கூறப்பட்டது. "செக்கரியா அஞ்சாதீர் உமது மன்றாட்டு கேட்கப்பட்டது. உம் மனைவி எலிசபெத்து உமக்கு ஒரு மகனைப் பெற்றெடுப்பார்; அவருக்கு யோவான் என்று பெயரிடுவீர். நீர் மகிழ்ந்து பேருவகை கொள்வீர், அவரது பிறப்பால் பலரும் மகிழ்ச்சியடைவர்" என்று கூறி அறிவிக்கின்றார் (லூக். 1:13-14).

செக்கரியா எலிசபெத்து தம்பதிகள் வாழ்வில் காலா காலமாக உறைந்து கிடந்த கசப்பு, கடவுளின் வார்த்தையால் களிப்பாகியது. குடும்ப வாழ்வில் நிறைவு இல்லையே என்ற ஏக்கம் மாறியது. எலிசபெத்து கூறும் போது, "மக்களுக்குள் எனக்கிருந்த இகழ்ச்சியை நீக்க ஆண்டவர் என்மீது அருள் கூர்ந்து இந்நாளில் இவ்வாறு செய்தருளினார்" என்று தமக்குள் சொல்லிக் கொள்கிறார் (லூக். 1:25).

அன்பர்களே! கடவுளுடைய வார்த்தையால் செக்கரியா, எலிசபெத்து குடும்பத்துக்கு மட்டுமல்ல பலருக்கு மகிழ்ச்சி என்று லூக்கா குறிப்பிடுகின்றார் (லூக். 1:14) மட்டுமல்ல தொடக்கத்தில் இருந்த வாக்கு, கடவுளோடு இருந்த வாக்கு, கடவுளாயும் இருந்த வாக்கு மனிதனாயி நமக்குள்ளே குடிகொண்டபோது அனைத்து உலகமும் களித்தது, களிகூர்ந்தது இல்லையா.?

ஓர் இறையியல் ஆசிரியர் மாணவர்களுக்குக் கூறும் போது, திருமறையை, கடவுளின் வார்த்தையை படிக்கும்போது நாம் அறுவை சிகிட்சை பெறும் நோயாளியின் எண்ணம் உடையவர்களாக இருக்கவேண்டும் என்று கூறினார். அறுவை சிகிட்சைக்காக ஆயத்தப்படும் நோயாளி மருத்துவர் என்னை சீக்கிரமாய் வெட்டி என்னை

வேதனைப்படுத்தும் கட்டியை வெளியே எடுத்து என்னைத் தைத்து, கட்டி என்னை குணமாக்கி என்னை மகிழச்செய்ய வேண்டும் என்ற உணர்வு திருமறையை படிப்பவர்களுக்கு இருக்கவேண்டும் என்றார்.

அன்பர்களே! இறைவாக்கு என்னும் இருமுனையுள்ள கூர்வாள்

* என்னை அனுதினமும் வெட்ட வேண்டும், என்னை கண்டிக்கவேண்டும்.
* எனக்கு அன்றாடம் கலிக்கம் போடவேண்டும் (மருந்து), கற்பிக்கவேண்டும்.
* என்னை எப்போதும் வாழ்வாக்கும் மன்னாவால் போஷித்து களிப்பூட்டவேண்டும்.

என்ற வேண்டுதலோடு நம்மை அர்ப்பணிப்போம். நிறைவாழ்வைச் சொந்தமாக்குவோம்.

அருள்திரு. S.M. **டேனியல் தேவதாசன்**

15-12-2019

திருவருகைக் கால மூன்றாம் ஞாயிறு

# இம்மானுவேலின் வாக்குறுதி

**PROMISE OF IMMANUEL**

எசா. 7:10-17
1பேதுரு. 3:8-16
தி.பா. 98
மத். 1:18-25

**"இதே கன்னிகை கருவுற்று ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவர்."** (மத். 1:23)

மார்ட்டின் லூத்தர் கிங் அமெரிக்கா கறுப்பின மக்களின் விடுதலைக்குப் போராடினார். இதனால் வெள்ளை இனத்தவரின் பகைமைக்கு ஆளானார். ஒரு முறை அவர் கறுப்பின மக்கள் கூட்டம் ஒன்றில் பேசுவதற்காக தனது மனைவி, பிள்ளைகளுடன் பாஸ்டன் என்ற நகரில் தங்கியிருந்தார். அப்போது நடு இரவில் தொலைப்பேசியில் வந்த மிரட்டல் "ஏய் கறுப்பினத்தவனே நாளை மாலைக்குள் நீ இந்த நகரை விட்டு காலி பண்ணவில்லை என்றால் உன் கதை முடிந்து விடும்" மார்ட்டின் லூத்தர் கிங் அவர்களை பயம் ஆட்கொண்டது. மனம் பதற்றமடைந்தது. மனைவி பிள்ளைகளை சலனப்படுத்தாமல் கீழ் அறைக்கு வந்து அங்கேயே முழந்தாள் பதித்து இவ்வாறு மன்றாடினார்.

இறைவா! எனக்கு ஏன் இவ்வளவு சோதனைகள்? மனிதர்கள் மனிதர்களாக மதிக்கப்பட வேண்டும் என்ற உமது விருப்பத்தைத்தானே என் பணியாக செய்து கொண்டிருக்கிறேன். இன்னும் ஒரு அடிகூட எடுத்துவைக்க முடியாத அளவுக்கு இப்போது மிகவும் சிக்கலில் மாட்டியிருக்கிறேனே என மன்றாடினார். கடவுள் அவர் உடனிருப்பதை உணர்ந்தார். அவரை அச்சுறுத்திய பதற்றமும் பயமும் மறைந்தது. தனது போராட்டத்தைக் குறித்த தெளிவையும் அதைத் துணிந்து செயல்படுத்தும் ஆற்றலையுப் பெற்றார். தொடர்ந்து தனது போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றார்.

கிறிஸ்துபிறப்பு பண்டிகை காலத்தின் சிறப்பு, கடவுள் நம்முடன் இருக்கிறார் என்பதை நினைவூட்டும் காலம். வாக்கு மனிதர் ஆனார். நம்மிடையே குடிகொண்டார் யோவா. 1:14a . இச்செய்தி இன்று பல்வேறு சூழல்களால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு புதுவாழ்வின் நம்பிக்கையைத் தருகிறது. தொடர் வாழ்வை முன்னெடுத்துச் செல்ல ஊக்கமளிக்கிறது. இம்மானுவேல் என்ற வாக்குறுதியின் பொருள் "கடவுள் நம்முடன் இருக்கிறார்" கடவுள் நம்முடன் இருக்கிறார் என்ற நம்பிக்கை நமக்கு தரும் செய்தி என்ன.

### *1. இம்மானுவேல் : அச்சம் அகற்றுகிறார்* (ஏசா. 7:2)

யூதாவின் அரசர் ஆகாசு பயத்திலிருக்கிறர். காரணம் இஸ்ரவேல் அரசரும் சிரியாவின் அரசரும் யூதாவின் மீது போர் தொடுக்க கூட்டணி அமைத்தார்கள் என்ற செய்தி. இச்செய்தி அறிந்த யூதா நாட்டு அரசரும், மக்களும் "பெருங்காற்றினால் காட்டு மரங்கள் அலையதிர்வு கொள்வது போல் ஆகாசின் உள்ளமும், அவர் நாட்டு மக்ககளின் உள்ளங்களும் அலைகளிக்கப்பட்டன" (ஏசா. 7:2). இந்த பயமும் பதற்றமும் நிறைந்த சூழலில் இறைவாக்கினர் ஏசாயா வழி ஆண்டவருடைய வாக்கு ஆகாசுவுக்கு சொல்லப்பட்டது. நீ அமைதியாயிரு. அஞ்சாதிருந்து நடப்பனவற்றை உற்றுப்பார் (ஏசா. 7:4a). உம் கடவுளாகிய ஆண்டவர் உமக்கொரு அடையாளத்தை அருளுமாறு கேளும் (ஏசா. 7:11a). ஆனால் சிலைவழிபாட்டில் நம்பிக்கையுடைய ஆகாசு கடவுளின் வார்த்தையை மதிக்காமல் அசீரியா உதவியை பெற விரும்பினார். இந்நிலையில் ஆண்டவரே இறங்கி வந்து ஒரு அடையாளத்தைக் கொடுக்கிறார். ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஓர் அடையாளத்தை அருள்வார். இதோ கருவுற்றிருக்கும் அந்த இளம் பெண் ஓர் ஆண் மகவைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு 'இம்மானுவேல்' என்று பெயரிடுவார் (ஏசா. 7:14). இந்த அடையாளம் யூதா மக்களின் பயத்தைப் போக்கியது மட்டுமல்ல நாட்டின் பாதுகாப்பையும் வெற்றியையும் குறித்த நம்பிக்கையைத் தந்தது. "கடவுள் பெரும்பான்மையின் பலத்தில் அல்ல, சிறுபான்மையின் பலமின்மையில் உடனிருக்கிறார்" என்ற உறுதியைத் தந்தது. திருமறையில் மதிம் ஒரு வலுவின்மையின் அடையாளம், ஏழ்மை ஒரு வலுவின்மையின் அடையாளம், குழந்தை ஒரு வலுவின்மையின் அடையாளம், ஒதுக்கப்பட்ட தொழுவம் ஒரு வலுவின்மையின் அடையாளம் ஆனால் வலுவற்ற இடத்தில் தான் கடவுளின் வல்லமை வெளிப்பட்டது.எனவே வலுவானவற்றைக் கண்டு பயப்படாமல் வலுவின்மையில் கடவுள் உடனிருக்கிறார் என்ற நம்பிக்கையோடு கிறிஸ்துப் பிறப்பை எதிர் கொள்ளுவோம்.

### *2. இம்மானுவேல் : அகத் தெளிவைத் தருகிறார்* (மத். 1:20)

யோசேப்பே, தாவீதின் மகனே, உன் மனைவி, மரியாவை ஏற்றுக் கொள்ள அச்சம் வேண்டாம். ஏனெனில் அவர் கருவுற்றிருப்பது தூய ஆவியால் தான்.

யூதர்களின் சமயம் மற்றும் சட்ட அடிப்படையில் திருமண வாழ்வு இரண்டு நிலைகளை உள்ளடக்கியது.

1. திருமண ஒப்பந்தம் செய்து கொள்ளல்
2. மணமகன் மணமகளை தன் இல்லத்தில் ஏற்றுக் கொள்ளல்

மண ஒப்பந்தம் செய்து கொண்ட ஆணும், பெண்ணும் கணவரும், மனைவியும் ஆகின்றனர். கூடி வாழ்வதைத் தவிர, இக்காலத்தில் மணமகள் ஒழுக்கம் தவறினால்அது விபசாரமாகக் கருதப்படும். இ.ச. 23:20,21 -ன் படி அவள் சமூகத் தீமையாக கருதப்பட்டு கல்லெறிந்து கொலை செய்யப்படுவாள். மரியா யோசேப்புக்கு மண ஒப்பந்தம் செய்யப்பட்டவர். இப்போது தாய்மை அடைந்திருக்கிறார். இச்செய்தியை யோசேப்பு அறிகிறார். யோசேப்பு நேர்மையாளர். எனவே மரியாவை இகழ்ச்சிக்கு உள்ளாக்க விரும்பாமல் மறைவாக விலகி விட திட்டமிட்டார் (மத். 1:19). இங்கு யூத, பெரும்பாலான ஆணாதிக்க மனநிலையிலிருந்து மாறுபடுகிறார் யோசேப்பு. சட்டதிதின் அடிப்படையில் சிந்திக்காமல் மனித நேயத்தோடு சிந்தித்தார். யோசேப்பின் இந்த இரக்கசெயல் கடவுளின் பார்வையில் நீதியாகப்பட்டது. வாழ்வுக்கான தீர்மானம் எடுக்கமுடியாமல் அவமானத்தால் தெளிவவற்ற நிலையிலிருந்த யோசேப்பிற்குக் கடவுள் தூய ஆவியார் வழியாக தெளிவைத்தந்தார். யோசேப்பே தாவீதின் மகனே, உன் மனைவி மரியாவை ஏற்றுக் கொள்ள அஞ்சவேண்டாம். ஏனெனில் அவர் கருவுற்றிருப்பது தூய ஆவியால்தான். ஏசா. 7:14-ஐ மேற்கோள்காட்டி (மத். 1:22,23) மரியா தாய்மை அடைந்திருப்பதை இறைத்திட்டத்தின் நிறைவேறுதல் என்பதை தெளிவுபடுத்துகின்றார். தெளிவடைந்த யோசேப்பு மரியாவை ஏற்றுக் கொள்ளவும், கூடி வாழவும் துணிவு கொண்டார். இங்கு யோசேப்பிலிருந்த இரக்கச் செயல் அவரை நீதிமானாக மனித நேயமிக்கவராக, மீட்பரின் வளர்ப்புத் தந்தையாக உயர்த்தியது.

எனவே வாழ்வில் இரக்கச் செயலை முதன்மைப்படுத்தும் போது உடனிருக்கும் கடவுள் வாழ்விற்கான தெளிவைத்தருவார்.

### *3. இம்மானுவேல் : அக்களிப்பூட்டுகிறார்* (மத். 1:24)

ஆண்டவரின் தூதர்.........தம் மனைவியை ஏற்றுக் கொண்டார்.

தெளிவடைந்த யோசேப்பு செயலூக்கம் பெற்றார். யூதா சமுகத்தில் தீமையாக கருதப்பட வேண்டிய மரியாவை மனைவியாக ஏற்றது அவரது செயலூக்கத்தைக் காட்டுகிறது. மட்டுமன்று உடைவுக்குட்பட வேண்டிய உறவினில் அக்களிப்பும், ஆனந்தமும் வெளிப்படுகிறது. உள்ளன்போடு ஏற்றுக் கொள்ளும் தன்மை மலர்ந்தது. இந்த உற்சாக உணர்வில் தான் கடவுள் உடனிருக்கிறார் என்பதை மரியாவை ஏற்றுக் கொள்வதில் வெளிப்படுத்தினார். மரியாவை ஏற்றுக் கொண்டதால் ஏற்பட்ட பல்வேறு

சவால்களை, அவமானங்களை, புறக்கணிப்புக்களை மனத் துணிவோடு எதிர்கொண்டார். வந்த அத்தனைப் போராட்டங்களையும் கடவுளை முன்னிட்டு பொறுமையுடன் ஏற்றார். குழந்தை இயேசுவை ஏரோதிடமிருந்து பாதுகாக்க எகிப்திற்குக் சென்றது (மத். 2:13-15). ஏரோதுவின் காலத்திற்குப் பின் இஸ்ரவேல் நாட்டிற்குத் திரும்ப வந்தது (மத். 2:21). பின் யூதேயா அரசருக்கு அஞ்சி கலிலேயாப் பகுதிக்கு வாழ்வு தேடிச் சென்றது (மத். 2:22). இவை அனைத்தும் யோசேப்பின் செயலூக்கத்தைக் காட்டுகிறது. இம்மானுவேல் கடவுள் நம்மோடு; உடனிருக்கும் கடவுள் உலகிற்குக் காட்ட யோசேப்பும் மரியாவுடன் துன்பங்களை ஏற்றார். யோசேப்பின் தியாகமும், கடின உழைப்பும் இயேசு மீட்பரை உலகிற்குத்தந்தது.

இன்று இந்த மீட்பரை உலகிற்குக் கொடுக்க யோசேப்பிலிருந்த ஒப்படைப்பு நமக்கும் தேவை. அவரிலிருந்த மனிதநேயமும் இரக்கச் செயலும் நம்மிலும் செயல்பட வேண்டும். இதற்கென நம்மை ஒப்படைப்போம். கிறிஸ்துபிறப்பு பெரும் மங்கலப் பெருவிழாவுக்கென ஆயத்தத்துடன் கொண்டாடி மகிழ்வோம், பிறந்து வாழ்விலும் மகிழ்ச்சியினை வழங்கிடுவோம்.

அருள்திரு. **ஆபிரகாம் ஜஸ்டின் குமார்**

22-12-2019



## ஆயத்தம் : ஆண்டவர் வருகிறார்

**PREPARATION : THE LORD IS COMING**

மீக்கா 4:1-5 — 1யோவா. 4:7-21
திபா. 126 — யோவா. 4:21-37

**“....புறப்படுங்கள், ஆண்டவரின் மலைக்குச் செல்வோம்.”** (மீகா.4:2)

கி.மு. 735 ஆம் வருடம் யோதாம் மன்னனின் மகன் ஆகாஸ் யூதா நாட்டின் ஆட்சியை ஏற்றார். அப்போது இஸ்ரவேலும் யூதாவும் அசீரியரின் எழுச்சியால் அஞ்சின. அசீரியர்களின் தாக்குதலால் வட அரசாகிய இஸ்ரவேல் அழிந்து கொண்டிருந்தது. ஜனங்கள் கண்ணீரோடும் மன சோர்வுடனும் மரணத்தின் நிழலில் வாழ்ந்தனர். படையெடுப்பு, போர், கலகங்கள், அதிகாரப் போராட்டம் மற்றும் அநீதி ஆகியவை மக்களின் ஒழுக்கநெறி வாழ்வை அதிகமாய் பாதித்தது. மக்கள் கடவுளுக்கு முன் உணர்ச்சிபூர்வமான உடன்படிக்கை உறவை விட்டு விலகிச் செல்ல முற்பட்டனர். இறைவனுடைய ஆலயம் தகர்க்கப்பட்டது. தொழுகையிடம் இருக்கும் எருசலேம் அழுகையிடமாக மாறி விட்டது. இந்நேரத்தில் தான் மீகாத் தீர்க்கன் தன் இறைவாக்குப் பணியை ஆரம்பித்தார். வரப் போகும் தீர்ப்பை மக்களுக்கு எச்சரிக்கும் போது அவர்கள் மனந்திரும்பி வரும் போது தான் கடவுளின் வருகையில் அவரது அன்பும் நியாயமும் உறுதியானதாகும் என அறைகூவல் விடுக்கிறார். இந்த அழைப்பு நீண்ட காலமாய் மக்களிடம் காணப்படும் நம்பிக்கையின்மையை மாற்றவும் சூழ்நிலைகளில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தவும் வழிவகுக்கும் என்பதை உறுதி செய்கிறது.

கிறிஸ்துவின் முதல் வருகை நினைவு கூரப்படுகிறது. நிறைவு வருகை ஆவலோடும் எதிர்பார்க்கப்படுகிறது. இருவருகையின் நோக்கமும் ஒன்றுதான். முதல் வருகையால் மீட்பும் இரண்டாம் வருகையால் மகிமையும் மனிதனை வந்து சேருகிறது. தீர்க்கன் மீக்கா தன் தரிசன நூலில் கிறிஸ்துவின் வருகையால் ஏற்படும் மூன்று நிலையான உண்மைகளை மீக்கா 4:1-5 வசனங்களில் குறிப்பிடுவதை இந்த ஓய்வுநாளில் சிந்திப்பது பொருத்தமானதாகும்.

***1. இறையில்ல மகிமையை ஏற்படுத்த வருகிறார்*** : (மீக்கா4:2)

இறைவனின் உடன்படிக்கையின் எதிர்பார்ப்புகளின் வெளியே வாழுகிறவர்கள் கடவுளை மறந்துவிடுகிறார்கள். இறைவனின் தொழுகை ஸ்தலத்துக்கு முன்பாக உள்ளார்ந்த மற்றும் வெளிப்புறக் காரணிகளால் பாதிக்கப்படுகிறார்கள். தேவ ஜனங்களின் பாதகமான செயல்களால் தேவ ஆலயம் கூட மண் மேடாக மாறிப்போகிறது (மீக்கா3:12). இறை இல்ல மகிமை அற்றுப் போனது. இச்சூழ்நிலையில் மீகா நம்பிக்கையின் செய்தியை உறுதிப்படுத்துகிறார். இறைவனின் வருகையின் போது கர்த்தரின் ஆலயத்தின் பர்வதம் மீண்டும் மலைகளின் மிக உயர்ந்த இடமாகும் எனத் தீர்க்கன் கூறுகிறார் (மீக்கா4:1). அப்பொழுது தேவ ஜனங்கள் தெய்வீக வழிகளையும், இறை ஆற்றலையும் அறிந்து கொள்வார்கள். வாழ்வின் மறுசீரமைப்பிற்கான சிறந்த வழிமுறைத் தொழுகையாகும். தொழுகைதான் எந்த மாற்றத்திற்கும் முதல்படியாகும். அந்த தொழுகையின் வழி வெளிப்படும் இறை ஆற்றலை உணரும் போது மாற்றம் ஏற்படும் என்பதைத் தான் தீர்க்கன் தெளிவுப்படுத்துகிறார். கண்களுக்குத் தெரியாமல் செயல்படும் இறைவனின் அளப்பரிய ஆற்றலை தொழுகை வழி உணரும் போது வாழ்வில் தூய்மை ஏற்படுகிறது. தேவாலய மகிமை வெளிப்படும்.

மின்சாரம் கண்டுபிடிக்கப்பட்ட ஆரம்ப நாட்களில் பாடசாலை ஒன்றின் ஆண்டுவிழாவின் ஒருபகுதியாக கண்காட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. கண்காட்சியில் அமைக்கப்பட்டிருந்த மின்சார இரயிலை எல்லோரும் ஆர்வமாய்ப் பார்த்தார்கள். அங்கு வந்த பெரியவர் ஒருவர் இரயிலை இயக்கிக் கொண்டிருந்த மாணவர்களைப் பார்த்து இந்த இரயில் ஓடுவது எப்படி? எனக் கேட்டாராம். மாணவர்கள் மின்சாரம் என்னும் சக்தியால் என பதிலளித்தனர். அந்தப் பெரியவர் அந்த மின்சாரத்தை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? எனக் கேட்டார். மாணவர்கள்ள இல்லை என்றனர். உங்கள் வகுப்பாசிரியர் அல்லது தலைமையாசிரியர் யாராவது பார்த்திருக்கிறார்களா? என்று கேட்டார். மாணவர்கள் மின்சாரத்தின் செயல்பாட்டை இந்த இரயிலை இயக்குவதிலிருந்து உணர முடியுமே தவிர மின்சாரத்தை பார்க்க முடியாது என்றனர். அந்த பெரியவர், நான் கூட மின்சாரத்தைப் பார்த்ததில்லை எனச் சொன்னபோது மாணவர்கள் அவரைக் கவனித்தனர். அப்பொழுது அவர் நான் தான் மின்சாரத்தைக் கண்டு பிடித்த தாமஸ் ஆல்வா எடிசன் எனக் கூறினார்.

சுயநல வாழ்வுக்காக மட்டும் தேவாலயத்தை பயன்படுத்த மனிதன் முயற்சி செய்து கொண்டிருக்கும் காலம் இது. தேவாலயத்தைக் குறித்து பயம் மனிதனுக்கு இல்லாத நிலை பெருகி வருகிறது. இச்சூழ்நிலையில்

தேவாலயத்தை வாஞ்சிக்கிற ஒவ்வொரு மனிதனையும் ஆற்றல் மிகு இறைவன் மறைந்து நின்று புனிதப்படுத்துகிறார். கிறிஸ்துவின் வருகையில் சீர்கெட்டு தேவ அன்பினை இழந்து வாழும் ஒவ்வொரு மனிதனும் தன்னை வளப்படுத்திக் கொள்ள இறை இல்லத்தை நாடி வரும் சூழ்நிலை உருவாகும். அந்த நாள் தான் தேவாலய மகிமையை ஜனங்கள் உணர்ந்து கொள்ளும் நாளாகும்.

***2. இறை நீதியை வெளிப்படுத்த வருகிறார்*** : (மீக்கா4:3)

இஸ்ரவேலர் நியாயத்தை அருவருத்து செம்மையானவைகளை கோணலாக்கினார். சமூக அநீதியினாலும் சமய அடிமைத்தனத்தினாலும் சோர்ந்து போயிருந்தனர். நீதிபதிகளும், தலைவர்களும், குருக்களும் பண ஆசையால் நீதியையும், இறைவாக்கையும் திரித்துக் கூறினார்கள் (மீக்கா4:3). சமூக ஒழுக்கமுறை சீர் கெட்டுக் கொண்டிருந்தது போன்று சமய வாழ்வும் மக்களிடம் இழிவு படுத்தப்பட்டிருந்தது. இந்நிலையில் மீக்கா சமய சமூகத் தீமைகளை கண்டனம் செய்து இறைவனது இரக்கத்தையும் அன்பையும் எடுத்துக்கூறினார். இங்கேதான் தீர்க்கன் இறைவன் வரும் போது ஜனங்கள் நியாயம் தீர்த்து நீதியை வெளிப்படுத்துவார் எனவும்தூரத்திலுள்ள பலத்த ஜாதிகளைக் கடிந்து கொள்வார் எனவும் இறைவாக்கு உரைத்தார்.

இன்றும் உலகம் அநீதிக்குள் சென்று விட்டது. அநீதி, அக்கிரமம், கொலை, கொள்ளை மலிந்துவிட்டது. அரசாங்கத்தால் கட்டுப்படுத்த முடியாத நிலை உருவாகி விட்டது. ஆனால் மேசியாவாகிய ஆண்டவர் இயேசு நீதியின் அரசராக அபிஷேகம் பண்ணப்பட்டு வரப்போகிறார் (தி.பா. 2:6-10). அவரது வருகையின் போது தவறான காரியங்கள் அனைத்தும் சரி செய்யப்படும். அனைத்துக் காலத்திலும் வாழ்ந்த ஒவ்வொரு ஆத்துமாவும் தனக்குரிய நியாயமான பலனைப் பெற்றுக் கொள்ளும். இந்த உலகத்தில் தங்களுடைய குற்றங்களுக்குரிய தண்டனைகளுக்குத் தப்பித்தவர்கள் அவரது நியாயத் தீர்ப்பின் போது தப்பிக்க முடியாது. ஒவ்வொரு கிரியையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும் நன்மையானாலும், தீமையானாலும் தேவன் நியாயத்திலே கொண்டுவருவார் (பிரா. 12:14). அவர் நீதியாக அரசாளப் போகிறார் (ஏசா. 32:1-2,16-18). அவரால் பூமியிலே நியாயமான ஆட்சி நடக்கும், (எரே. 23:5). அவரது நீதியுள்ள ஆட்சியில் பங்கெடுக்க புத்தியுள்ள கன்னிகைகளைப்போல நாம் ஆயத்தப் பட வேண்டும்.

### ***3. இறையமைதியை உருவாக்க வருகிறார்*** : (மீக்கா4:4)

நன்மையை வெறுத்து தீமையை விரும்பிய இஸ்ரவேலர் அந்நியரின் கையில் ஒப்புக் கொடுக்கப்பட்ட போது தங்கள் சமாதானத்தை இழந்து தவித்தார்கள். அமைதிக் கெட்டுப்போனதால் ஆவேசம் கொண்டு கர்த்தர் எங்கள் நடுவில் இல்லையோ? (மீக்கா 4:11) எனப் புலம்பினார். இப்படிப்பட்ட அமைதியற்ற நிலையில் கிறிஸ்தவனின் வருகை சமாதானத்தை உருவாக்கும் வருகையாக அமையும் என தீர்க்கன் உரைக்கிறார். எவரும், எவரையும் பயப்படுத்த முடியாது. அவரவர் தங்கள் தங்கள் திராட்சை மற்றும் அத்திமரங்களின் நிழலில் பயமில்லாமல் உட்காரலாம் (மீக்கா 4:4). ஏசாயா தீர்க்கன் கூட 11-ம் அதிகாரத்தில் ஆண்டவரின் நாளில் வெவ்வேறு குணங்கள் எடைய விலங்குகள் அனைத்தும் தங்களுடைய குணங்களை மாற்றிக் கொண்டு விட்டுக் கொடுத்து மற்றவைகளுடன் உறவாடி அமைதியுடன் வாழ்வதையும் விளக்குகிறார். அது மட்டுமல்ல அழிவின் ஆயுதங்கள் விவசாயக் கருவிகளாக மாற்றம் பெற்று யுத்தங்கள் ஏற்படாலிருக்கும் எனவும் மீக்கா கூறுகிறார்.

கிறிஸ்துவின் வருகையால் தீமையிலிருந்து மனமாறி இறைவனை சேரும் மக்கள் அமைதியைப் பெறுவார்கள். விலங்குகளிடம் காணப்படும் குணங்களைப் போன்றே நம் குணாதிசயங்கள் மாற்றம் அடைந்து சமாதானம் ஏற்படக்கூடிய நல்ல குணாதிசயங்களாக மாறும். அப்பொழுது கிறிஸ்துவைப் பற்றிக் கொண்டு வாழ்கிற பக்தி உருவாகும்.

இயேசுவின் வருகை புதிய வானத்தையும் புதிய பூமியையும் உருவாக்கும். அது மாறுபாடு நிறைந்த ஒன்று அல்ல. தேவாலய மகிமையும், மனித வாழ்வில் சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வரும் வருகையாகும். இந்த அனுபவம் அனைவரும் அனுபவிக்கும் ஒன்று. “இதோ கடவுளின் உறைவிடம் மனிதர் நடுவே உள்ளது. அவர் அவர்கள் நடுவே குடியிருப்பார். அவர்கள் அவருக்கு மக்களாய் இருப்பார்கள். கடவுள் தாமே அவர்களோடு இருப்பார். அவரே அவர்களுடைய கடவுளாய் இருப்பார்” (தி.வெ. 21:3).

அருள்திரு. P. ***ராஜா ஜெயசிங்***

24-12-2019

**கிறிஸ்து பிறப்புக்கு ஆயத்தம்**

# கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக

**GLORY TO GOD**

| | |
|---|---|
| ஏசா 52:1-10 | தீத்து 3:4-8 |
| தி.பா. 148 | லூக். 2:1-14 |

**"உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக! உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக!."** (லூக். 2:14)

1931-ம் ஆண்டு இங்கிலாந்தில் வட்டமேசை மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டில் நம் நாட்டின் தேசத்தந்தை என்று அழைக்கப்பட்ட காந்தியடிகள் அவர்கள் கலந்து கொண்டார்கள். மாநாடு முடிந்து திரும்பி வரும் போது கப்பலில் பயணம் செய்தார்கள். அது ஒரு கிறிஸ்மஸ் தினம். கப்பலில் இருந்த கிறிஸ்தவர்கள் கிறிஸ்மஸ் ஆராதனை நடத்தினார்கள். அக்கிறிஸ்தவர்கள் காந்தியடிகளிடம் வந்து கிறிஸ்மஸ் செய்தி சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். இதை ஏற்றுக் கொண்ட காந்தியடிகள் கிறிஸ்மஸ் பற்றி இவ்வாறு குறிப்பிட்டார்கள் "கிறிஸ்து உலக மீட்பராக பிறந்தார், அவர் பிறந்த நாளை ஆண்டுவிழாவாக கருதிவிடக் கூடாது. நமது வாழ்வை தினமும் ஒளி வீசச்செய்யும் நிலையான அனுபவம்" என்றார்கள் (Christmas in not a celebration but it in an experience). மேலும் அவர் குறிப்பிடும் போது கிறிஸ்தவத்தில் நாம் அடைய வேண்டியது இன்னமும் உண்டு. எனவே பூசல்களைத் தள்ளிவிட்டு நாம் ஒருவருக்கொருவர் அன்பு காட்ட வேண்டும். ஏனெனில் கிறிஸ்மஸ் என்பது வாழ்கையின் அனுபவம் என்றார். இது எவ்வளவு உண்மை பாருங்கள். கிறிஸ்மஸ் என்னும் வாழ்க்கை அது அனுபவமாக வெளிவர வேண்டும்.

கிறிஸ்மஸ் என்பது வாழ்க்கை. அது ஒரு அனுபவம் என்று கூறும் போது நாம் இன்றைய உலகில் சொல்லுகின்ற அனுபவமாகக் கருதிவிடக் கூடாது. தெருக்களில் உண்ண உணவின்றி பட்டினியோடு இந்த கிறிஸ்து பிறப்பு நாளாவது வாழ்வில் மகிழ்ச்சி கொள்ளமுடியுமா என ஏங்கும் மக்கள் மத்தியில் நன்றாக சாப்பிட்டு குடித்துவிட்டு வீட்டின் அமைதியை கெடுத்து ஏன் பக்கத்து வீட்டாரையும் வம்பிற்கு இழுத்து அதோடு நிற்காமல் தெருவில் ஏன் சாக்கடையில் தூங்கும் ஒரு கூட்டம் மக்கள். இந்த அனுபவம் கிறிஸ்மஸ் அல்ல. மாறாக, வாழ்கையில் வாழ்ந்து காட்டி கடவுளுக்கு மகிமை கொண்டு வரும் அனுபவமாக இருக்கவேண்டும். இன்று நம் வாழ்வில் எப்படி கிறிஸ்துபிறப்பு வாயிலாக கடவுளுக்கு மகிமை செலுத்த முடியும் என்பதை திருமறை வெளிச்சத்தில் தியானிப்போம்.

### *1. நற்செய்தியை* (Good News) *அறிவிப்பதில் கடவுளின் மாட்சி* (ஏசா. 52:7).

ஏசாயா இறைவாக்கினர் நற்செய்தி அறிவிக்கவும், நல் வாழ்வை பலப்படுத்தவும், நலம் தரும் செய்தியை உரைக்கவும், விடுதலையை பறைசாற்றவும் (ஏசா. 52:7) எனக் குறிப்பிடும் உண்மை என்னவெனில் நற்செய்தியாய் நற்செய்தியை அறிவிக்கின்ற நற்செய்தியாளருடைய வாழ்வில் கடவுள் நாமம் மகிமைப்படுகிறது.

இயேசுநாதரின் பிறப்பை தூதர்கள் அறிவிக்கும் போது விண்ணவர் தூதர் பேரணி அந்த தூதனுடன் தோன்றி உன்னதத்திலிருக்கிற கடவுளுக்கு மகிமை உண்டாகட்டும் என்று புகழ்ந்ததை லூக். 2: 14-ல் நாம் படிக்கிறோம். தூதர்கள் மேய்ப்பர்களின் இந்த நற்செய்தியை அறிவித்தவுடன் அவர்கள் செய்த செயல் என்னவென்றால் கிறிஸ்து பிறந்த நற்செய்தியை தங்கள் வாழ்வில் சொந்தமாக்கி பிறருக்கு அறிவிப்பதில் முந்திக் கொண்டார்கள். இவர்கள் கிறிஸ்துபிறப்பை வாழ்வின் மகிழ்வாய் வெளிப்படுத்தினார்கள் (Joy of Life).

நற்செய்தி என்ற வார்த்தையின் அர்த்தம் நற்செய்தியை அறிவிப்பது மட்டுமல்ல. நானே நற்செய்தியாக மாறுகிறேன் என்பதாகும். கிறிஸ்தவர்கள் நற்செய்தியை அறிவிக்க மட்டும் அழைக்கப்படவில்லை; நற்செய்தியாக வாழ அழைக்கப்பட்டவர்கள். நம்மைப் பார்பவர்கள் கிறிஸ்துவின் மகிமையை நம்மில் காண வேண்டும். திப. 4:13-ல் பேதுருவும் யோவானும் பேசுவதைக் கேட்ட மக்கள் ஆச்சரியப்பட்டு அவர்கள் இயேசுவோடு இருந்தவர்கள் என்று அறிந்தனர். நற்செய்தியை நாம் அறிவிக்கும்போது நமது செயலே நற்செய்தியாக மாறி, அதன் மூலம் கடவுளின் மகிமையை கொண்டு வரவேண்டும்.

நாமே செய்தியாக மாற வேண்டும்- அதுதான் கடவுளுக்கு மாட்சி

### *2. இறையன்பை வழிபடுவதில் கடவுளின் மாட்சி* (திப. 148).

தாவீது அரசன் தனது வாழ்வில் அனுபவத்தில் இச்சங்கீதத்தில் பாடுகிறார். உலகனைத்தும் இறைவனைத் துதிக்கவேண்டும் என விரும்புகிறார். அவ்வாறே ஆண்டவரின் பெயரைப் போற்றுவார்களாக அவரது பெயர் மட்டுமே உயர்ந்தது (திப. 148:13) என்கிறார். நம் படைப்பாளராகியக் கடவுளை மட்டுமே துதிக்க வேண்டும் வழிபட வேண்டும். படைக்கப்பட்டவைகள் வழிபட வேண்டியவைகள் அல்ல. நம்மை மீட்க இறைமைந்தனை உலகில் அனுப்பிய அவரது அன்பை வழிபடும் போது கடவுள் மாட்சிமைபடுகிறார்.

கிறிஸ்மஸ் வந்து விட்டால் நமக்கு வருகின்ற சிந்தனையெல்லாம் Shoping -Worship -ஐ மறந்து விடுகிறோம். பல நாட்கள் திட்டமிட்டு, நேரத்தை செலவு செய்து, பணத்தை சேகரித்து Shoping செய்கிறோம். ஆனால் நாம் Worship -க்கு கொடுக்கிற நேரம் எவ்வளவு. நமது முதன்மை (Priority) எதில் அடங்கி இருந்தது. கிறிஸ்மஸ் அலங்காரங்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவம், உணவுக்கு கொடுக்கும் முக்கியத்துவம் இறையன்பை வழிபடுவதில் நாம் ஏன் கொடுக்க முன்வருவதில்லை.

லூக்கா 2-ம் அதிகாரத்தில் நாம் தெளிவாக பார்க்கிறோம். மேய்பர்கள் தாங்கள் கிறிஸ்துவின் பிறப்பின் செய்தி கேட்டவுடன் தங்கள் வாழ்க்கைத் தரமாகிய மந்தையை எல்லாம் விட்டுவிட்டு நாளை என்ன நடக்கும் என்று கூட சிந்தியாமல் இறைபாலகரை தரிசிக்கச் சென்றார்கள். ஆடுகளை மேய்க்கின்ற, காவல் காக்கின்ற, பகைவரிடமிருந்து பாதுகாக்கின்ற மிக முக்கிய பணியினை செய்தவர்கள் இறைக் குழந்தை பிறந்ததை தெரிந்தவுடன் எல்லாவற்றையும் விட்டுவிட்டு பாலகனை தரிசித்தார்கள். இங்கு அவர்கள் படைக்கப்பட்ட பொருளில் அல்ல. படைப்பாளராம் இறைவன் உலகில் தோன்றி அந்த அன்பைப் பார்த்து கடவுளை மகிமைப்படுத்தினார்களே இது தான் உண்மையான கிறிஸ்துபிறப்பு அனுவபம்.

நாம் பெற்றிருக்கும் ஆசிகள் வழிபாட்டிற்குரியவைகள்அல்ல. ஆனால் கிறிஸ்துபிறப்பின் மூலமாய் வெளிப்பட்ட இறையன்பை நாம் வழிபடும் போது அங்கு கடவுள் மகிமைப்படுகிறார்.

### *3. நற்செயல் செய்வதில் கடவுளின் மாட்சி* (தீத்து 3:8).

கிறிஸ்துபிறப்பில் கடவுளுக்கு மகிமை செலுத்துதல் என்பதின் மையம் நற்கிரியை, அதைப்பற்றி அறிவிப்பதும், அதை வழிபடுவதும் நற்கிரியை. அதற்கு மேலாக நமது வாழ்வில் செயல்படுத்துவது நமக்கு நற்கிரியை செய்ய கிடைத்திருக்கும் பெரிய பாக்கியம்.

தூய பவுல் தீத்துவுக்கு அறிவுரை கூறும் போது (தீத்து. 3:8) கடவுளிடம் நம்பிக்கை கொண்டவர்கள் நற்செய்திகளைச் செய்ய கருத்தாய் இருக்கும்படி நீ வலியுறுத்த வேண்டும் என்பதே என் விருப்பம். இந் நற்செயல்களைச் செய்வதே முறையானது இவை மக்களுக்கு பயன்படும் என்கிறார். உலகில் நாம் படைக்கப்பட்டிருப்பது நற்செயல்கள் செய்வதற்கு. தூய பவுல் தீத்துவிடம் நீ இதை திட்டமாய் போதிக்க வேண்டும் என்கிறார். கடவுளிடம் உன்னதமான விசுவாசிப்பவர்கள் விசுவாசத்தின் வெளிப்பாடாக நற்கிரியைகளை வெளிப்படுத்துபவர்கள். கிறிஸ்துபிறப்பை

நாம் விசுவாசிக்கிறோம் என்றால் கிறிஸ்து நமக்கு மீட்பைத்தர பிறந்தார் என ஏற்றுக் கொள்கிறோம் என்றால் அதன் வெளிப்பாடு நற்செயலாக அமைய வேண்டும்.

நற்செயல் என்றால் என்ன? என்கிற கேள்வி நமக்குள் பல வேளைகளில் எழும்புகிறது. ஆலயம் சார்ந்த பணிகளில் நாம் ஈடுபடுவதும் நற்கிரியைதான். அதே வேளையில் அதற்கு அப்பால் நமக்கு முன் பல பணிகள் இருக்கிறது. குறிப்பாக அன்னை தெரசா அம்மையார் செய்த பணி இதேபோல் நமது ஆரம்ப கால மிஷனரி பணியாளர்கள் செய்த கிறிஸ்துவின் பிறப்பில் மகிமையை வெளிப்படுத்துவதாக அமைந்தது. அதாவது அடையாளம் இல்லாமல் இருந்தவர்கள் (insignificome) அடையாளப்படுத்தப்பட்டார்கள். (மேய்பர்கள், பெண்கள் etc).

பொதுவாக நாம் கிறிஸ்துபிறப்பின் மகிழ்ச்சியை வெளிப்படுத்த பல உதவிகளை பிறருக்கு செய்வது உண்டு. (ஆடை, தின்பண்டங்கள் etc). இந்த உதவிகள் பல வேளைகளில் நமது உறவுகள் சார்ந்தும் அல்லது நமக்கு பெருமை சேர்க்க வேண்டும் என்பதற்காகவே அமைகிறது. ஆனால் கடவுளுக்கு மகிமை செலுத்தும் நற்கிரியை என்பது நாம் அடையாளமற்ற மக்களோடு நம்மை இணைத்து அடையாளப்படுத்தி அவர்களும் கிறிஸ்துபிறப்பு மகிழ்ச்சியில் பங்கு கொண்டு கடவுளுக்கு மகிமை செலுத்துவதாக அமையவேண்டும் (Not only sharing material things)

கிறிஸ்து பிறப்பு நமது வாழ்வில் கொண்டாட்டமாக (Celebration) அல்ல. நல்லதொரு அனுபவமாக (Experience) அமைதல் வேண்டும். அந்த அனுவபம் நாம் நற்செய்தி சொல்லி நற்செய்தியாக வாழ்ந்து கடவுளை மகிமைப்படுத்துவதாகவும், இறையன்பை வழிபடுவதில் கடவுளுக்கு மகிமை செலுத்துவதாகவும் நற்கிரியை செய்வதில் கடவுகளுக்கு மாட்சி செலுத்துவதாகவும் அமையுமென்றால் இந்த வருட கிறிஸ்து பிறப்பு உண்மையான வாழ்வு சார்ந்த அனுபவமாக அமையும். அதற்கு பாலனாய் பிறந்த அருள்நாதர் துணையாகட்டும்.

அருள்திரு. N. **ஸ்பர்ஜன்**

## கிறிஸ்துப்பிறப்பு : அருளின் மேல் அருள்

**CHRISTMAS : GRACE UPON GRACE**

இச. 6:1-9 எபே. 2:4-9
திபா. 20 மத். 2:13-23

**"யோசேப்பு எழுந்து குழந்தையையும் அதன் தாயையும் கூட்டிக் கொண்டு இரவிலேயே எகிப்திற்குப் புறப்பட்டுச் சென்றார்."** (மத். 2:14)

இயேசு கிறிஸ்து உலக மீட்பராகப் பிறந்தார் என்பது கடவுளின் பேரருள். இது உலக மக்கள் மேல் கொண்ட பேரன்பால் நிகழ்ந்த ஒன்றாகும். இப்பிறப்பால் உலகில் அருளின் மேல் அருள் பெருகியது. அருள் (கிருபை) என்ற சொல் ஹேன் (Chen) என்னும் எபிரேயச் சொல்லால் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அதன்படி இச்சொல் ஆண்டவர் தரப்படும் அருளினைக் குறிக்கிறது. எலியாஸ் (Eleos) என்னும் கிரேக்கச் சொல் பலவீனரும் உதவியற்றவருமான மானிடர் மேல் கடவுள் அருள் செய்வதைக் குறிக்கும். இந்த அருளின் மிகுதியே கிறிஸ்துவின் பிறப்பு. பாவத்தில் மரித்த நாம் கிறிஸ்துவால் உயிர் பெற்றோம். இதுவும் அவரது அருள் (எபே. 2:4,5). இன்று கிறிஸ்துபிறப்பு பெருவிழா என்பதில் கடவுளின் அருள் என்பதைவிட ஆடம்பரங்களே மேலோங்கிவிட்டது. கடவுளின் இத்திருத்திட்டத்திற்கு தங்களை அற்பணித்த யோசேப்பும், மரியாளும் கடந்து வந்த பாதை, கடவுள் இவர்களை எப்படி நடத்தினார் என்பதைக் கருத்தாய் நம் உள்ளத்தில் பதிவு செய்ய வேண்டும். இக்கால சூழலில் இதுபோன்று துன்புறும் மக்கள் ஏராளம், இறையருளுக்காக காத்திருப்போர் ஏராளம்.

### *1. புதிய புகலிடம்* : (NEW SHELTER)

"அவர்கள் திரும்பிச் சென்ற பின் ஆண்டவருடைய தூதர் யோசேப்புக்கு கனவில் தோன்றி நீர் எழுந்து குழந்தையையும் அதின் தாயையும் கூட்டிக் கொண்டு எகிப்துக்கு தப்பி ஓடிச் செல்லும். நான் உமக்குச் சொல்லும் வரை அங்கேயே இரும். ஏனெனில் குழந்தையை ஏரோது கொல்வதற்காக தேடப்போகிறான்"(மத். 2:13).

ஞானியரின் வருகையும் அவர்களது தேடலும் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியது. அரசர் ஏரோதுவும் கலங்கி குழப்பமுற்று மூர்க்கம் கொண்டார். ஞானியரிடமிருந்து மறுசெய்தியும் வரவில்லை. அப்படியானால்

யூதருக்கு ராஜாவாகப் பிறந்துள்ள குழந்தை எங்கே? இயல்பாக வன்முறை எண்ணம் கொண்ட ஏரோதுவின் குணம் இன்னும் கடுமையானது. குழந்தையைக் கொலை செய்ய பல வழி முறைகளைத் தேடினான். ஆண்டவர் அருள் பெற்ற இயேசுவாகிய குழந்தைக்கு புகலிடம் தேவைப்பட்டது. ஆண்டவர் இக்குழந்தைக்கு புகலிடமாக எகிப்தை நியமித்தார். எகிப்து இஸ்ரவேலருடைய வரலாற்றில் மறக்கமுடியாத ஒரு பகுதி. யூதர்களின் குடியேற்றம் அங்கே இருந்தது (தொ.நூ. 39:1; 41:39; வி.ப. 3:8-12). இஸ்ரவேல் நாட்டில் பாதுகாப்பில்லா இறைக் குழந்தைக்கு புகலிடத்தை காட்டினார். பாவிகளின் புகலிடமான இயேசு இரட்சகருக்கு அந்நிய நாடு புகலிடமாக்கப்பட்டது. கடவுளின் அருள் இக்குழந்தையோடும், பெற்றோரோடும் இருந்தது.

கடவுள் கருணை அனைவருக்கும் உண்டு. கடவுளின் அருள் தான் அனைவருக்கும் புதிய புகலிடம். இத்திருக்குடும்பத்திற்குப் புதிய புகலிடம் வழங்கியக் கடவுள் தாமே நமக்கும் புதிய புகலிடமாக இருக்கின்றார். ஏழைகள், அனுமதி மறுக்கப்பட்டோர், ஆதரவற்றவர்கள், ஓரங்கட்டப்பட்டவர்கள், முகவரியற்றவர்கள் போன்றோருக்கெல்லாம் முன்னுரிமை வழங்கும் வகையில் தஞ்சம் தரும் புதிய புகலிடமாக கிறிஸ்துபிறப்பு நிகழ்வு அமைந்துள்ளது.

### *2. புதிய பாதை* : (NEW PATH)

“யோசேப்பு எழுந்து குழந்தையையும் அதன் தாயையும் கூட்டிக் கொண்டு இரவிலே எகிப்துக்குப் புறப்பட்டுச் சென்றார்.”(மத். 2:14).

இறைவனின் திருவுளத்தில் புதிய பாதை என்பது மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. நெருக்கடியான சூழல்களிலும் துன்ப நேரங்களிலும் தெளிவான பாதை காட்டுகின்றவர் ஆண்டவர் இது திருமறை தரும் உண்மை. இறைவாக்கின்படி உலக மீட்பராகிய குழந்தை பிறந்தது. யோசேப்பும், மரியாளும் இக்குழந்தையைக் காப்பாற்ற இவ்வுலகோடு போராட வேண்டிய காலங்கள் அதிகமாக இருந்தது. சுற்றுப்புறத்தில் ஆதரவு இல்லை. ஞானியர்களின் வருகையினால் ஏரோது தனக்கு கிடைத்த செய்தியின்படி குழந்தையைக் கொல்ல வகைதேடினான் (மத். 2:13). இப்பெற்றோருக்கு நெருக்கடி நிலை ஏற்பட்டது. இச்சூழலில் கடவுளின் அருள் புதிய பாதை காட்டியது. அதுதான் எகிப்து. கடவுளின் அருளைப் பெற்றவராக இரவிலேதான் பயணத்தை தொடங்கினார். இவர்கள் ஏரோது அறியாதபடி இரவோடு இரவாக அனுமதியின்றி அகதிகளாக எகிப்திற்கு புறப்பட்டனர். எகிப்தில் தஞ்சமடையும் வரை புதிய பாதைகளை அமைத்து காப்பாற்றினார்.

ஞானியர் விண்மீன் காட்டிய பாதை வழி வந்தாலும் அரண்மனைக்குச் சென்ற பின் ஏற்பட்ட குழப்பத்தில் அவர்கள் திரும்பிச் செல்லும் பாதை மாற்றியமைக்கப்பட்டது (மத். 2:12). துன்ப நேரங்களில் கடவுள் தம் அடியவர்களுக்கு புதியப்பாதையை கட்டளையிடுகின்றார். இஸ்ரவேலருடைய பாலைவனப் பயணத்தின் போதும் கடல்வழி, தரைவழி புதியப்பாதைகளை அமைத்தார் (வி.ப. 14:19-25, எண். 20:18-21). பாதைகளில் இறையருள் நிறைவாயிருந்தது. கடவுள் காட்டும் புதியப் பாதையில் கடினங்களைச் சந்தித்தாலும் அது நம்பிக்கைக்குரிய பயணமாக அமையும். ஏனென்றால் அப்பாதையில் ஒளி இருக்கும் (யோபு 22:28), நீதியுண்டு (தி.பா. 23:3), நேர்த்தியாய் வழிநடத்துவார் (தி.பா. 25:10; 119:105, 149:3; நீதி. 1:15, 2:8,19. 3:6; ஏசாயா 42:16, தொ.நூ. 12:1; 21:15-21; 24:31, 48-51). பல்வேறு சூழல்களில் கலங்கி நிற்போருக்கெல்லாம் கிறிஸ்துவின் பிறப்பு நம்பிக்கையூட்டும் பாதையாக அமைந்துள்ளது.

### *3. புதிய திட்டம்* : (NEW PLAN)

“ஏரோது காலமானதும் ஆண்டவருடைய தூதர் யோசேப்புக்கு தோன்றி, நீர் எழுந்து குழந்தையையும் அதன் தாயையும் கூட்டிக் கொண்டு இஸ்ரவேல் நாட்டுக்குச் செல்லும். ஏனெனில் குழந்தையின் உயிரைப் பறிக்கத் தேடியவர்கள் இறந்து போனார்கள்” (மத். 2:19,20).

கடவுளின் திருவுளம் மனித சிந்தனைக்கு அப்பாற்பட்டது. எகிப்தில் தஞ்சமடைந்த திருக்குடும்பத்திற்கு (Holy Family) மீண்டும் இறையருள் கிடைக்கிறது. அதன் வெளிப்பாடே கடவுளின் புதியத்திட்டம். அதன்படி எகிப்தினின்று நாடு திரும்பக் கூறுகிறார். இஸ்ரவேல் நாட்டிலே எங்கே குடியிருக்க வேண்டும் என்பதையும் யோசேப்புக்கு வெளிப்படுத்தினார். இறைவாக்கினர் வழி கூறிய இறைவாக்குகள் நிறைவேறவும், இறைவாக்கு வீணாய் போகாதபடியும் இப்புதியத் திட்டம் அமைந்தது (மத். 2:5,6, 17-18,23). மறைவாய் இருந்த கலிலேயா உலகிற்கு கலங்கரை விளக்காய் உயர்த்தப்பட்டது (மத். 2:22).

இப்புதியத் திட்டம் (மீட்பின் திட்டம்) உலக மக்களுக்கு கிறிஸ்துவின் பிறப்பினால் கிடைக்கப் பெற்ற அருளின் மேல் அருளாகும். மீட்பின் திட்டத்திற்காக மனிதர்களை கடவுள் மிக நேர்த்தியாக பயன்படுத்துகிறார். துன்பம் நிறைந்த இவ்வுலகில் துன்புறும் மக்களோடு மீட்பரை அடையாளப்படுத்தினார். திருமறையில் தொடக்கநூல் முதல் கடவுள் பலத்திட்டங்களை பயன்படுத்தி தம் மக்களைக் காப்பாற்றினார். குறிப்பாக இஸ்ரவேலரை எகிப்தினின்று விடுவிக்க மோசே வழி மிகப் பெரிய

விடுதலைத் திட்டத்தை நிறைவேற்றினார் (வி.ப. 3:7-10), அதே எகிப்தில் இஸ்ரவேலரைக் காப்பாற்ற யோசேப்பு வழியாக வாழ்வாதாரத் திட்டத்தை நிறைவேற்றினார் (தெ.நூ. 4:5), கடவுள் தமது அடுத்த திட்டமாக சாமுவேலைக் கொண்டு இஸ்ரவேலருக்கு அரசை ஏற்படுத்தி, ஆளுகை முறைகளையும் ஏற்படுத்தினார் (1 சாமு. 1:3). மீண்டும் தம்மக்களை மீட்க மிகப் பெரிய திட்டமாக கிறிஸ்துவழியாக நிறைவேற்றினார்.

கடவுள் ஒவ்வொருவருக்கும் புதிய திட்டங்களை வகுத்திருக்கிறார். யோசேப்பும், மரியாளும் கடவுளின் புதிய திட்டத்திற்குத் தங்களை ஒப்படைத்தது போல நாமும் ஒப்படைக்க வேண்டும்.

கிறிஸ்துபிறப்பு நிகழ்வை சிறப்பாய் கொண்டாட விரும்புகிற நாம் அதன் உட்பொருள் உணர்ந்து கொண்டாட வேண்டும். இன்று இயற்கையின் சீற்றத்தினால் மற்றும் பல்வேறு சம்பவங்களினால் நிலைகுலைந்து நிற்பவர்கள் ஏராளம். அமைதியிழந்தோர், சுய கௌரவங்களை இழந்தோர் (ஆவியில் தரித்திரர்), முதுமை, நோய் எனத் துன்புறுவோர் இன்று அதிகமாய் காணப்படுகின்றனர். அனைவருக்கும் புதிய பாதை அமைத்து, தொலைநோக்கோடு புதிய திட்டதினையும் அருளின் மேல் அருளாய் வழங்குவார். அவரது திட்டத்தில் நம்மை அவரது கருவிகளாய்ப் பயன்படுத்த அர்ப்பணிப்போம்.

அருள்திரு. S. ***பெல்சன் கிராமணி***

29-12-2019

கிறிஸ்து பிறப்புக்கு பின்வரும் முதலாம் ஞாயிறு & குடும்ப ஞாயிறு

## குடும்பம் : நம்பிக்கை உருவாகும் இடம்

**FAMILY : AS FAITH FORMING SPACE**

| | |
|---|---|
| தொ.நூ. 27:11-29 | 1யோவா. 2:7-14 |
| தி.பா. 127 | மத். 12:46-50 |

**"விண்ணகத்திலுள்ள என் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் சகோதரரும் சகோதரரியும் தாயும் ஆவார்."** (மத். 12:50)

இறைவன் அமைத்துக் கொடுத்த இல்லற வாழ்க்கையின் மேன்மை மிகு ஆசியே மக்கட்பேறு. குடும்ப வாழ்வின் மகிமையான மக்கட்பேறு மட்டுமே வாழ்வை முழுமைப்படுத்தும். கடவுளின் படைப்பின் மகுடமாகிய மானிட படைப்புதான் பெற்றோரை நீண்ட காலம் சார்ந்து வாழ்கின்றது.

கலில் ஜிப்ரான் என்பவர் கூறும் போது குழந்தைகள் உங்கள் வாயிலாக வந்தவர்கள். ஆனால் உங்கள் சிந்தனையை வழங்காதீர்கள். அவர்களைப் போல இருக்க முயலுங்கள். உங்களைப் போல அவர்களை மாற்ற முயலாதீர்கள். Mother teachers to love. Father teachers to live என்பார்கள். குழந்தைகளின் நம்பிக்கையாளர்கள் பெற்றோரே. இப்படிப்பட்ட சிறப்புகளை உள்ளடக்கியிருக்கும் இல்லற வாழ்வில், குழந்தைகளின் தேவைகளை சந்தித்து அவர்களை, நல்லொழுக்கத்துடன் பாதுகாத்து, அவர்களில் தன்னம்பிக்கையை வளர்த்தெடுப்பது மிக முக்கியமான பொறுப்பாகும். இந்த உயர்ந்த தகவுகளில் தான் கிறிஸ்தவக் குடும்பங்கள் கட்டமைப்புப் பெற வேண்டும். மட்டுமன்று எத்தகைய அடையாளத்துவத்தை வெளிப்படுத்த வேண்டும்.

### *1. ஆவிக்குரிய குடும்பம்* (Spiritual Family)

....உன் வழிமரபினர் மீது என் ஆவியைப் பொழிவேன். உன் வழித் தோன்றல்களுக்கு நான் ஆசிவழங்குவேன். (ஏசா. 44:3).

இல்லற வாழ்வில் நம் சுயபலத்தையும், சுய நம்பிக்கையும் சார்ந்து இருக்காமல் கடவுள் மேல் நம்பிக்கை வைத்து இறை மகிமையுடன் கட்டி எழுப்ப வேண்டும். அப்படிப்பட்ட ஆவிக்குரிய குடும்பமே பரிசுத்த குடும்பமாக வாழும் (1தீமோ. 2:15). தன்னடக்கத்தோடு நம்பிக்கை அன்பு, தூய வாழ்வு ஆகியவற்றில் நிலைத்திருந்தால் தூய்மைப்பேற்றின் வழியாக மீட்பு பெறுவார்கள் மட்டுமன்று சகிப்புத்தன்மையோடு, பகிர்தலோடு, சாந்தத்தோடு குழந்தைகளும் வளரவும் அந்தக் குழந்தைகள் தன்னம்பிக்கை பெறுவதற்கும் வழி ஏற்படுத்தும். பிள்ளைகளைப் போதித்து

கிறிஸ்தவ வழிகளில் நடத்துவது தந்தையின் பொறுப்பு. எபே. 6:4 தந்யைரே உங்கள் பிள்ளைகளுக்கு எரிச்சல் மூட்டாதீர்கள். மாறாக, அவர்களை ஆண்டவருக்கேற்ற முறையில் கண்டித்து திருத்தி அறிவு புகட்டி வளர்த்து வாருங்கள். ஆவிக்குரிய குடும்பத்தில் கண்டிப்பு அவசியம். ஏலி தன் பிள்ளைகள் கீழ்த்தரமாக நடந்து கொண்டதை கண்டித்து உணர்த்தி விடுவிக்க முன்வரவில்லை. கடவுள் அவன் குடும்பத்தை நியாயம் தீர்த்தார். (1சாமு. 2:12). தாவீது தன் மகள் அதோனியாவை கண்டிப்புடன் வளர்க்காதபடியினால் எவ்வளவு உபத்திரவம் தாவீது சந்தித்தார் (1அர. 1:6). கடிந்து கொண்டு இறை நம்பிக்கையில் வளர்க்கவேண்டும். கண்டித்தலும் தண்டித்தலும் வாழ்வை அழிப்பதற்கல்ல, மாறாக வாழ்வைப் புரிந்து கொண்டு பொறுப்புடனும் கட்டுப்பாட்டுடனும் வாழ்வதற்குரிய நல் தளமாகும்.

## *2. ஆசீர்வாத குடும்பம்* (Blessed Family)

ஆண்டவரே வீட்டைக் கட்டவில்லையெனில் அதைக் கட்டுவோரின் உழைப்பு வீணாகும் (திபா. 127:1).

இங்கே உழைப்பு என்ற வார்த்தை வருகிறது. கடின உழைப்பை மையப்படுத்துகின்றது. சரீர, ஆவிக்குரிய உழைப்பு அவசியம் (நீதி. 3:5,6). கணவன் மனைவி இணைந்து வீட்டைக் கட்ட வேண்டும். முழு மனதோடு ஆண்டவரை நம்பு உன் சொந்த அறிவாற்றலை சார்ந்து நில்லாதே. நீ எதைச் செய்தாலும் ஆண்டவரை மனதில் வைத்து செய். அப்போது அவர் உன் பாதைகளைச் செம்மையாக்குவார். வாழ்வையும், பணியையும், குடும்பத்தையும் இறைக் கரத்தில் தந்துவிட வேண்டும். ஆசீர்வதிக்கப்பட்ட வீட்டில் எப்போதும் விழிப்புடன் இருக்கவேண்டும். வீட்டிற்கு வரும் எல்லாரைக் குறித்தும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். எந்த பொருளாக இருந்தாலும் அல்லது நண்பர்களானாலும், அறிவியல் கண்டுபிடிப்புகளாயிருந்தாலும், இணையதளங்களாயிருந்தாலும், முக நூலாக இருந்தாலும் சாபங்களை கொண்டுவருபவைகளாக இருக்கக்கூடாது (திபா. 112:2). அப்படிப்பட்ட உறுதிப் பெற்ற அவர்களது வழி மரபு பூவுலகில் வலிமைமிக்கதாய் இருக்கும். நேர்மையுள்ளோரின் தலைமுறை ஆசி பெறும். தலைமுறை தலைமுறையான இறை ஆசீர்வாதம் வீடுகளில் தங்க வேண்டும். கணவன், மனைவி கருத்தொருமித்தவர்களாக குடும்ப இன்ப துன்ப காரியங்களில் ஜெபித்து இறைசித்தம் செய்யும் போது குடும்பங்களில் நம்பிக்கை ஏற்படும்.

ஏசா, யாக்கோபு வாழ்வின் ஆசீர்வாதம் மாறிவிடுகிறது. மூத்த மகன் சுதந்திரத்தை அலட்சியப்படுத்தி விட்டான் (தெ.நூ. 25:34). தலைமுறை தலைமுறையாக வரும் ஆசீர்வாதம் சுதந்தரிக்க ஏசா தவறிப் போகின்றான். வயிற்றை நிரப்ப கூழ் போதுமானது. ஆனால் இழந்து விட்ட ஆசீர்வாதமோ நஷ்டம் ஏற்படுத்திவிட்டது. (தெ.நூ. 27:29) இம்மைக்குரிய

ஆசீர்வாதங்களினால் யாக்கோபு அலங்கரிக்கப்பட்டான். விருந்துகள் அத்துமீறிப் போகும் போது ஆசீர்வாதங்கள் இழந்து போய்விடும் என்பதனையும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

### *3. ஆனந்தமான குடும்பம்* **(Happy Family)** (1 யோவா. 2:10)

தம் சகோதர சகோதரிகளிடம் அன்பு கொள்வோர் ஒளியில் நிலைத்திருக்கின்றனர். அன்புடையோர் மகிழ்ந்திருப்பர். இது குடும்பங்களில் மிகப் பெரிய எதிர்பார்ப்பு. உலகப் பொருட்கள் சார்ந்து கிடைக்கும் இன்பம் நிரந்தரமற்றது. ஒவ்வொரு குடும்ப உறுப்பினர்களும் உள்ளுணர்வில் பேரானந்தம் பெற்றுக் கொள்ள வேண்டும். உலகப் பொருட்களில் பேராசை ஏற்படும் போது மனம் நிம்மதியாக இருக்க முடியாது. மேலும் சந்தேகப்படும் குடும்பங்களும் ஆனந்தமான குடும்பங்களாக இருக்க முடியாது. அது தீயவனின் ஆளுகைக்கு வழிவகுத்து விடும். பொறுமை இருக்கும் இல்லத்தில் பொறாமை வர முடியாது. அனைத்தையும் பொறுத்துக்கொள்ளும் இடத்தில் இழிவான காரியங்களை செய்யமுடியாது. அன்பு எங்கே இருக்குமோ அங்கே தன்னலம் எடுபடாது. மகிழ்ச்சியான இல்லற வாழ்வில் எரிச்சலுக்கு இடம் கிடையாது. எச்சூழலிலும் மன உறுதியுடன் வாழ முடியும். (பிலி. 4:4) ஆண்டவரோடு இணைந்து என்றும் மகிழுங்கள்; மீண்டும் கூறுகிறேன் மகிழுங்கள். கணவன், மனைவி, மக்கள் நம்பிக்கையோடு வாழுவதற்கு மகிழ்ச்சி அவசியம். அதிலும் வீட்டுப் பெண்களை மதிக்கத் தெரிந்தவன் வாழ்கையில் முன்னேறுவான் என்பது ஒரு முதுமொழி. அனைத்தையும் பாங்காகவும், ஒழுங்காகவும் நிறைவேற்றுவதே குடும்ப வாழ்வின் சிறப்பாகும்.

மானிட வாழ்வில் கடவுள் தந்திருக்கும் பாக்கியம் குடும்பம். குடும்ப உறவுகள் கடவுளில் இருக்கும் நம்பிக்கையின் அடிப்படையில் கட்டி எழுப்ப வேண்டும். நம்பிக்கைக்கு சான்றாக இருப்பது உண்மை நிலையினை எடுத்துக் காட்டுகின்றது. இயேசுகிறிஸ்து குழந்தைப்பருவத்திலிருந்தே பெற்றோருக்கு நம்பிக்கை ஏற்படுத்தினார். மனித வாழ்வில் இறை நம்பிக்கைக்கு சான்றாக இருக்கவேண்டுமானால், ஒவ்வொரு குடும்பமும் ஆவிக்குரிய வாழ்விலும், ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்விலும் சந்தோஷமான வாழ்வினை வாழ்ந்து விண் வாழ்வின் மேன்மையை சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும். கடவுள் வழங்கியிருக்கும் உன்னத ஆசியான குடும்பம் கானாவூரில் திருமண இல்லத்தின் நிறைவையும், சிறப்பையும் பெற்று பூவுலகில் தழைத்தோங்கட்டும். இஸ்ரயேலுக்கு அரும் அடையாளமாகவும், அருங்குறிகளாகவும் அமைந்த ஏசாயா இறைவாக்கினரின் குடும்பம் போன்றும் நமது குடும்பங்கள் பக்தி மணத்துடன் வளர்ந்து ஆசிபெறட்டும்.

அருள்திரு. T. **ஜாண் பீட்டர்**

31-12-2019

ஆண்டு நிறைவு நன்றித் தொழுகை

# வாருங்கள்! ஆண்டவர் நல்லவர்

**COME TO THE LORD! IS GOOD**

நாகூம் 1:1-5 | 1பேதுரு 2:1-10
தி.பா. 34:1-10 | யோவா. 7:37-39

**"....யாரேனும் தாகமாய் இருந்தால் என்னிடம் வரட்டும், என்னிடம் நம்பிக்கை கொள்வோர் பருகட்டும். மறைநூல் கூறுவது போல் அவருடைய உள்ளத்திலிருந்து வாழ்வு தரும் தண்ணீர் ஆறாய் பெருக்கெடுத்து ஓடும்."** (யோவா. 7:37,38)

ஓர் சில மணித்துளிகளில், அதி விரைவாக கடந்தோடி மறையத் துடிக்கும் 2019 எனும் இவ்வாண்டில் தான் எத்தனை, எத்தனை இன்பம், துன்பமென பன்னிரண்டு மாதங்கள், பற்பல அனுபவங்களோடு ஓடி மறையப் போகிறது. ஆண்டவர் எத்துணை நல்லவர் என்பதனை உளப்பூர்வமாக உணர்ந்துபார்! பார்!!. ஆம் அதே ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் பாதத்தில் துதிகள், நன்றிப் படையல்கயோடு ஆண்டவரிடம் வாருங்கள். அதனை ஆய்ந்துணர்ந்தால் ஆண்டவர் நல்லவர் என்று அவர் ஓங்கி நிற்பதனை நாம் காண இயலும்.

ஆண்டவரிடம் நாம் வருமுன் அவர் எப்படிப்பட்டவர்? அவரது சிறப்புப் பண்புகள் இறைமக்களில் ஏற்படுத்தும் பாதிப்புகள் என்ன? பாதிப்புகள் ஏற்படுத்தும் விளைவுகள் என்ன? ஆண்டவரிடம் வருவதனால் விளையும் பலன்கள் தான் என்னென்ன? சற்று நேரம் ஆய்வோமா?

## *1. ஆண்டவர் அநீதியைவிரும்பாதவர்* (நாகூம். 1:2).

"ஆண்டவர் விரைவில் சினம் கொள்ளார் ஆனால் மிகுந்த ஆற்றலுள்ளவர் அவர் குற்றவாளிகளை எவ்வகையிலும் பழிவாங்காமல் விடமாட்டார்."

கடவுள் தமக்கு அருமையான தாவீது அரசனின் அநீதிச் செயலைப் பொறுக்காது தண்டிப்பதை 2 சாமுவேல் 11,12 அத்தியாயங்களில் நாம் படிக்கமுடிகிறது.

சீரியா நாட்டுப் படையினர் தப்பித்து ஓடிய வேளையில் தொழுநோயாளிகள் கூட நற்செய்தி அறிவிப்பவராக மாறின நிகழ்வினை 2 சாமு. 7:15,16-ல் படிக்கிறோம்.

இயேசுகிறிஸ்து உலகில் மனிதராக வாழ்ந்த நாட்களில் எருசலேம் கோவிலுக்குள்ளேயே அநீதி நிறைந்த வியாபார இருக்கைகளை கவிழ்த்து

ஆலய அசுத்தம் காணப்பெறாத இறைவனாய் ஆலயம் சுத்தம் செய்யும் செயல்களை மத். 21:13 -ல் படிப்பதைப் போல் நம் உள்ளங்கள், உடல்களின் சுத்தத்தை மிகக் கண்டிப்புடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார் அல்லவா?

நோவா தாத்தா கண்ணுக்கு புலப்படதாதைக் குறித்து கடவுளால் எச்சரிக்கப்பட்டவுடன் மிகக் கவனத்துடன் ஒரு பேழையை அமைத்து, நோவாக் குடும்பம் அநீதிகளால் நிறைந்த உலகினின்று காக்கப்பட்டதை எபி. 11:7-ல் படித்து நினைவிற் கொள்வோம்.

யோபுவின் நாட்களில் அனைத்துடைமை மகள், மக்கள், மனைவி அழிந்த போதும் நீதிமானாய் இருந்ததினால் பின் நாட்களில் இரண்டு மடங்கான ஆசிகள் பெற்றார் என யோபு. 42:10,11-ல் நாம் படிக்கவில்லையா?

நமதாண்டவர் இயேசுகிறிஸ்து அநீதியைப் பெறாத/பொறுக்காத இறைவன் மட்டுமா? அவர் நீதியைப் பற்றி அறிவித்த இறைமக்களையும் காப்பாற்றுகிற இறைவன்.

## *2. ஆண்டவர் நீதி இறைமக்களை காப்பாற்றுபவர் :*

(2பேதுரு 2:5).

“பண்டைய உலகத்தையும் அவர் தண்டிக்காமல் விடவில்லை; நீதியைபற்றி அறிவித்து வந்த நோவா உள்பட எட்டுப் பேரைக் காப்பாற்றினார்; இறைப்பற்றில்லாத உலகின் மீது அவர் வெள்ளப் பெருக்கை வருவித்தார்”

நீதியைச் செய்வதே இறை இயல்பு. அநீதி செய்வோர் எவராயினும் இறைவனின் எதிராளிகளே, நீதியை அறிவிப்பதே இறைமக்களின் ஒரே திருப்பணி. நீதியைப் பற்றி அறிவிக்கிற இறைமக்களை அவர் காப்பாற்றுகிறார்.

சாரிபாத் என்னும் ஊரில் கைம் பெண்ணின் உண்மை நிலையை 1அர. 17:12-ல் காண்கிறோம். 16-ம் திருவாக்கியத்தில் அவள் பெற்ற இறை ஆசி, அருள் படிக்கிறோம். 17-ம் திருவாக்கியத்தில் அவளது மகனின், பாடு, மரணம், கதறுதல்கள் தொடர்கிறது. ஆனால் 23,24-ம் திருவாக்குகள் இறைமக்களையும் அவர்களது தலைமுறைகளைக் காப்பாற்றுபவர் என்ற சாட்சிகளையும் படிக்கிறோம்.

இறைவாக்கினர் யோனா நினிவேயில் கடவுளின் செய்தியை கண்டிப்புடன் கூறினார். நினிவே மக்கள் கடவுளின் செய்தி கேட்டு தம் தீய வாழ்வினின்று விலகியதைக் கண்டு இறைவன் தம் மனதை மாற்றி தண்டனையை அனுப்பாது காத்தார் என யோனா 3:10-ல் காண்கிறோம்.

தூயப் பவுலின் வழியாக நற்செய்தி கேட்டு லீதியாள் குணப்பட்டாள். லீதியாள் இல்லத்தில் தூய பவுல் தங்கியிருந்து நற்பணியாற்றினார் என திருத்தூதர் பணி 16:14,15,40-ல் தெளிவாகத் தொடர்வதை படிக்க முடிகிறதல்லவா?

எரிகோ பட்டணம் அழிக்கப்பட்ட வேளையில் ராகாப், சல்மோன் தம்பதியரின் மகனான போவாஸ் குடும்ப உறவில் உலக மீட்பர் இயேசுவின் பிறப்பு வருவதை மத். 1:5-25 -ல் படிக்க முடிகிறது.

இயேசுகிறிஸ்துவின் 13-ம் சீடரான மத்தியா எத்தியோப்பியா நாட்டின் முதல் நற்செய்தியாளராக நீதியை அறிவித்து ஓர் முன்மாதிரியான இறைப்பணி செய்தார் என திருத்தூதர் பணி 1:15-26 -ல் படிக்கிறோம்.

ஆண்டவர் இயேசு நீதியைப் பற்றி அறிவித்த இறைமகனாக மட்டுமல்ல, நிலைவாழ்வினை நம்மில் ஊற்றாகிட செய்து வாழ்வு தரும் ஆறாகிடச் செய்வாராக.

***3. ஆண்டவர் வாழ்வு வழங்கிடுவர் :*** (யோவா. 7:38)

“மறைநூல் கூறுவது போல் அவருடைய உள்ளத்திலிருந்து வாழ்வு தரும் தண்ணீர் ஆறாய்ப் பெருக்கெடுத்து ஓடும்”

மானிடர் மாண்பு பெற வேண்டும் என்பதே இறைவனின் ஒரே இலக்கு. உலகில் பிறந்தவர் இவ்வுலகை ஆண்டிட வேண்டும். வாழ்வு வழங்கும் ஓர் ஜீவ ஊற்றாகி, ஆறாகி அது ஓர் ஜீவ நதியாகிடட்டும். நிலைவாழ்வு தரும் நித்தியரோடு ஒன்றாகிடட்டும்.

ஐந்து அப்பம் இருமீன்கள் ஐயாயிரம் ஆண்களோடு அவர்களது துணைவியார், கூடவே ஓரிரு மக்கள் என ஏறக்குறைய இருபத்தைந்தாயிரம் பேருக்கு மேலாக உண்டனர். மீதமாக பன்னிரண்டு கூடைகள் என தாராளமாக ஈபவர் நமதாண்டவர் இயேசு. மத். 14:7, மாற். 6:38, லூக். 9:13, யோவா. 6:5.

சாமுவேல் இறைவாக்கினர் மக்கள் கூறியவை அனைத்தையும் கேட்டு, அவற்றை ஆண்டவர் காதில் போட்டு வைத்தவராக 1சாமு. 8:21-ல் காண்கிறபடியே அவர் வாழ்வு வழங்கும் நதியாக பெருக்கெடுத்து ஓடினார்.

ஸ்தேவான் முழங்காலிட்டு நின்று இறைவேண்டுதல் செய்து உரத்த குரலில் “ஆண்டவரே இந்த பாவத்தை இவர்கள் மேல் சுமத்தாதேயும்” என்று சொல்லி உயிர் விட்டு முதல் இரத்த சாட்சியானார் திப. 7:59, 6:8.

இயேசுகிறிஸ்து வியாகுலப்பட்டு, அதிக நேரம் செலவிட்ட இடம் கெத்சமனி தோட்டம். கெத்மனி தோட்டத்தில் தான் நமதாண்டவர் இயேசு. யூதாசினால் முத்தமிடப்பட்டு, “ரபி வாழ்க” எனக் கூறியதும் கைது செய்யப்பட்டதும் மத். 26:36, மாற். 14:32-ல் படிக்கிறோமன்றோ?

இறைவாக்கினர் தானியேல் கூறியது போல நாம் கடவுளுக்குப் பயந்து ஞானத்தினால் நீதிமான்களாகி வானத்தின் பேரொளியைப் போலாவோம். பலரை நல்வழிக்கு கொணர்ந்து விண்மீன்களைப் போலாவோம். என்றென்றும் முடிவில்லா காலத்திற்கும் ஒளி வீசித் திகழ்வோம் தானி. 12:3.

ஆண்டவரிடம் வருவோம் அவர் அநீதியைப் பெறாத இறைவனல்லவா? நீதியைப்பற்றி அறிவித்த இறைமக்களை ஆண்டவர் இயேசு காப்பாற்றுவார். வாழ்வு வழங்கும் ஓர் ஜீவ ஊற்றாய் நம்மினின்று சுரப்பாராக. இயேசுவோடு நாம் இணைந்து நிலைவாழ்வில் நித்தியரோடு ஒன்றாகிட தினமும் அருளீவாராக.

அருள்திரு. **செல்வ காட்பிரே சாமுவேல்**

# தவக்கால அருளுரைகள்

13-03-2019

தவக்காலம் இரண்டாம் புதன்

## சிலுவை : கிறிஸ்துவை பின் தொடரும் வாழ்வு

**“தம் சிலுவையைச் சுமக்காமல் என்னைப் பின்பற்றி வருவோர் என்னுடையவர் எனக் கருதப்பட தகுதியற்றோர்.”** (மத். 10:38)

கிறிஸ்துவை பின்பற்றுகிறவன் “கிறிஸ்தவன்” ஆவான். கிறிஸ்தவர்களுக்கு பட்டப் பெயர்கள் திருமறையில் குறிக்கப்பட்டுள்ளது. என்றாலும் கிறிஸ்தவர்களுக்கு சிலுவை சுமத்தல் கட்டாயச் சேவையாகும். ஆகவே தான் இயேசுகிறிஸ்து “தன் சிலுவையைச் சுமந்து வர அழைப்பு தருகிறார்” (மத். 10:38). சிலுவை என்பது கிறிஸ்துவுக்காகவும், இறைமக்களுக்காகவும் பாடு அனுபவிப்பதையே சுட்டிக்காட்டுகிறது (பிலி. 1:29). அதோடு வாழ்க்கை பயணத்தில் வரும் பாடுகள், போராட்டங்களையும் சுட்டிக் காட்டுகிறது.

தொடக்க காலத்தில் சிலுவை சுமப்பது அவமானமாகும். இயேசுகிறிஸ்து இதை சந்தித்தார். என்னைப் பின்பற்றி வர விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும் (மத். 16:24). இயேசுவின் பாடுகளைப் பகிர சீமோனுக்கு எதிர்பாராத விதமாக திணிக்கப்பட்டது. இதைப் பொறுமையொடு ஏற்றுக் கொண்டான். கிறிஸ்துவின் சிலுவைப் பயணப்பாதையில் பின் தொடர்ந்தார். தாவீதும் பல பாடுகளினூடாக பயணித்தவரே. சவுல் வாயிலாக தனக்கு நேரிட்ட துன்பங்களில் கடவுள் தனக்கு உதவியாய் இருந்தார். எனக் குறிப்பிடுகிறார் (2சாமு. 22:18-21).

நமது வாழ்கையில் கிறிஸ்துவைப் பின்தொடர்ந்த வாழ்வை வலிமைப்படுத்த வேண்டுமானால் மூன்று நடைமுறைகளை கைக்கொள்ள வேண்டும். அவைகள்:

### *1. மனக் கட்டுப்பாடு* :

அறிந்த, கேட்ட, புரிந்த ஒரு நிகழ்வு, செய்தி, கருத்து இவைகளுக்கு ஏற்ப நேரிடையாகவோ, எதிரிடையாகவோ செயல்படாமல் மனநிலையை அடக்கி கொண்டிருப்பதாகும். மனக்கட்டுப்பாடு வாழ்வின் சிக்கல், தடுமாற்றம், எதிர்ப்பு நிலைகளைத் தவிர்த்து உறவுகளை வலுப்படுத்தகிறது. உலகின் சிலுவைகளை சந்தித்து கிறிஸ்துவைப் பின்தொடர மனக்கட்டுப்பாடு தேவை. இது மட்டுமே உலகப்பற்று, பொருட்கள் மீதுள்ள ஆசைகளை மாற்ற செய்து, ஆண்டவரோடுள்ள அன்பு, ஐக்கியத்தை கொடுக்க முடியும். இதற்கு சுயத்தைப் புறக்கணித்து இறைவனையும், அவரது அரசின் தன்மைகளையும் உயர்நிலைப்படுத்தப்பட வேண்டும்.

“அவரது செல்வாக்கு பெருக வேண்டும்; எனது செல்வாக்கு குறைய வேண்டும்” (யோவா. 3:30)-என்ற சிந்தனை வலிமையடைய வேண்டும்.

நான், எனக்கு, என்னால் என்ற முனைப்பை மனநிலையினைக் கட்டுப்படுத்தி வாழப் பழகுதல் வேண்டும். உலகத்திற்குரியவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படாமல் மீட்புக்குரிய வழியில் கிறிஸ்துவோடு பயணிக்கும் பயணத்தில் மனக்கட்டுப்பாடு முக்கியமானதாகும். எல்லாவற்றையும் உரிமையாக்கிக் கொள்ள முடியும். ஆனால் அது தகுதியானது தானா என்பதை உணர்ந்து செயல்படுதலே சிறப்பானதாகும். இதை உணர்ந்த பவுலார் தன்னுடைய செல்வம், செல்வாக்கு, சிறப்பு இவை அனைத்தையும் கிறிஸ்துவுக்காக இழந்தார். கலா. 2:20-ல் எனவே இனி வாழ்பவன் நான் அல்ல; கிறிஸ்து என்னுள் வாழ்கிறார்; எனக் குறிப்பிடுக்கிறார். எந்தவொரு செயலையும் செய்வதற்கு முன் அது ஏற்புடையது தானா என ஆய்ந்தறிந்து மனக்கட்டுப்பாடோடு நடந்து கொள்வதே சிறப்பானதாகும்.

### *2. மனத் தெளிவு* :

வாழ்கையில் முடிவெடுக்கும் சூழ்நிலைகள் அனேகம் வருகிறது. அவசரப்படாமல், உணர்ச்சிப்படாமல், பேராசைபடாமல் முடிவெடுக்க மனத்தெளிவு தேவை. அதோடு வாழ்வின் வழிமுறைகள் எது சரியானது? எது தவறானது? எது தடுமாற்றம் நிறைந்தது என்பதை அறியச் செய்கிறது. சில வேளைகளில் இழப்பை ஈடுகட்டவும், சிக்கல்களை நீக்கி அடிப்படை சூழ்நிலை ஆராயவும், அமைதியான ஆக்கத்திறன் கொள்ளவும் உதவுகிறது. நாபாலின் மனைவி அபிகாயில் தன் குடும்பம் அழிக்கப்படாதபடி மனத்தெளிவு, புத்தியுடன் நடந்து கொண்டாள் (1சாமு. 25:1-42). இதுபோல கிறிஸ்துவை பின்தொடரும் வாழ்வுக்கும் தேவை.

புனித பவுல் எபேசு சபை மக்களுக்கு எழுதும் போது நடத்தையைப் பற்றி மிகவும் கருத்தாய் இருங்கள் (எபே. 5:15) என அறிவுறுத்தி வாழ்வில் தெளிவடைய வேண்டுகிறார். கிறிஸ்துவின் சிலுவை வழியான பயணித்தல் என்பது உளத்தூய்மையோடு கூடிய உன்னத ஒப்படைப்பாகும். தண்ணீர் தெளிவடைந்திருந்து இருக்கும் போது உள் இருப்பதைக் காணலாம். அது போன்ற மனத்தெளிவே மகிபனைக் காணவும் மாட்சியை உணரவும் வழி காட்டுகிறது. வாழ்க்கைப் பாதையில் போராட்டங்களும், கடினங்களும் உண்டு. ஆனால் அவற்றை விசுவாசக் கண்களுடன் எதிர் கொள்ளும் மனத் தெளிவு பெறும் போது சிறப்படைகிறோம். ஆக்கில்லா, பிரிஸ்கில்லாவின் திருப்பணி (உரோ. 16:3,4). பவுலாரின் திருப்பணி இதற்கு சான்றாகும். மனத்தெளிவடையும் போது வலிகள் நம்பிக்கையின் திறவுகோலாகிறது (2தீமொ. 4:7,8). சிலுவைப் பாதை மனத்தெளிவோடு தொடரும் உன்னதப் பாதையே, அப்பாதையில் விசுவாச சான்றுடன் முன்னெடுத்துச் செல்வோம்.

***3. மன உறுதி*** :

நன்மை, தீமை, வெற்றி, தோல்வி வாழ்வில் வருகின்றபொழுது சரியான வகையில் செயல்பட மனப்பக்குவம் தேவை. மனப்பக்குவம் ஒரு மனிதனுடைய வாழ்வில் யூக நிலையிலிருந்து ஒளிக்கும், போலியிலிருந்து நிரந்தரத்திற்கும், இருளிலிருந்து ஒளிக்கும், தோல்வியிலிருந்து வெற்றிக்கும், தீமையிலிருந்து நன்மைக்கும், பொய்யிலிருந்து உண்மைக்கும் ஒருவரை கொண்டுவர முடியும். இயேசுகிறிஸ்து, பிறப்பால் யூதர், "யூதன்" என்ற சொல் எபிரேயருக்குப் பிற்காலத்தில் வழங்கப்பட்ட பொதுச் சொல்லாகும். எபிரேயர் ஆபிரகாமின் வழித்தோன்றல்கள். இயேசுகிறிஸ்து பிறப்பால் யூதன் என்றுச் சொல்லிக் கொள்வதைக்காட்டிலும், வாழ்வால் யூதன் என்று நிரூபித்துக் காட்டுவதில் கவனம் செலுத்தினார். "உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக" (லூக். 2:14). மனுக்குலத்தை மீட்கும் நோக்குடன், மனப்பக்குவத்துடன் செயல்பட்டார். இறைத் திருவுளம் நிறைவேற்றும் பணியை முழுமைப்படுத்தும் நோக்குடன் தந்தை தனக்குக் கொடுத்த பாத்திரத்தை ஏற்றுக் கொண்டார். சிலுவையில் நம்மைச் சேர்க்கும் பாலமானார்.

மானிட மகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல. மாறாக, தொண்டு ஆற்றுவதற்கு பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார் (மாற். 10:45) எனக் குறிப்பிடும் போது சிலுவையேற்க தன்னை ஆயத்தப்படுத்தியிருந்த மன உறுதியை தெளிவாக அறிந்துக் கொள்கிறோம். இந்த உறுதியே திருத்தூதுவர்களின் திருப்பணியில் எதிர் கொண்ட சவால்களிலும் வெளிப்பட்டது (உரோ. 8:35-39). இயேசுவின் வாழ்வே எங்கள் உடலில் வெளிப்படுமாறு நாங்கள் எங்கு சென்றாலும் அவருடைய சாவுக்குரியத் துன்பங்களை எங்கள் உடலில் சுமந்து செல்கிறோம் (2கொரி. 4:10) எனக் குறிப்பிட்டு திருப்பணியில் தனது மன உறுதியை தெளிவுபடுத்துகிறார். மானிட மகன் பயணித்த பாதையில் அழைக்கப்பட்டிருக்கும் இறைமக்கள் அனைவரும் மனக்கட்டுப்பாட்டுடனும், மனத் தெளிவுடனும், மன உறுதியுடனும் திடப்படுத்திக் கொள்ள வேண்டும். தொடக்கக் கால திருச்சபை துன்பங்களில் துவளாமல் துணிச்சலுடன் விசுவாசத்தை புதுப்புரைச் செய்தார்கள். அதற்காக பல நிலைகளில் தங்களை வலுப்படுத்திக் கொண்டார்கள் (எபி. 11:35-38). அவர்களது அழைப்பும், அர்ப்பணமும் நமக்குள்ளும் சான்று நெறியினை விதைத்துள்ளது அல்லவா. ஆகவே சிலுவையினூடாக மீட்பை உலகிற்கு வழங்கிய திருமைந்தனின் மீட்பு தடத்தினில் நாமும் நம்பிக்கையுடன் முன்னெடுத்துச் செல்வோம்.

அருள்திரு. அறிவர் M. **எட்வின் சோபிதா**

20-03-2019



## அமைதியருளும் சிலுவை

கொலோ. 1:9-23

**"சிலுவையில் இயேசு சிந்திய இரத்தத்தால் அமைதியை நிலைநாட்டவும் விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை அனைத்தையும் அவர் வழி தம்மோடு ஒப்புரவாக்கவும் கடவுள் திருவுளம் கொண்டார்."** (கொலோ. 1:20)

அமைதியை தேடி ஓடுகிறவர்கள், அமைதிக்காக ஏங்குகிறவர்கள் பலர் உண்டு. ஏன் அமைதியை அனைவரும் தேடுகிறார்கள். அமைதி எங்கு இருக்கிறது. அமைதி என்ன செய்தால் வரும். பணம் அமைதியைத் தருமா? பதவி அமைதியைத் தருமா? பிள்ளைகள் இருந்தால் அமைதி கிடைக்குமா? பட்டங்கள் பல பெற்றால் அமைதி கிடைக்குமா? இவை அனைத்தும் இருந்தும் அமைதியை இழந்து பலர் அமைதியை தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

அமைதி ஒரு ஆனந்தமான தெய்வீக நிலை. அது தெய்வீக உணர்வு. அதை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. நாம் மகிழ்ச்சியாக இருக்க நாம் விரும்பிய எல்லாம் நமக்கு கிடைக்க வேண்டும். நாம் அமைதியாக இருக்க நம்மிடம் எதுவும் இருக்க வேண்டும் என்று அவசியமில்லை. அது ஆண்டவர் இயேசு தரும் அமைதி. அது சிலுவை வழி கிடைக்கும் அமைதி. அது முழுமையான அமைதி. அமைதி எப்படி கிடைக்கும் தியானிப்போம்.

### *1. அன்பு தரும் அமைதி* : (கொலோ. 1:20)

"இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தில் வெளிப்படுவது அவரது அன்பின் பெருக்காகும்." இதையே உரோ. 5:8

ஆனால், நாம் பாவிகளாய் இருந்தபோதே கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார். இவ்வாறு கடவுள் நம்மீது கொண்டுள்ள தம் அன்பை எடுத்துக் காட்டியுள்ளார்.

மனநலம் குன்றிய மாணவர்களுக்கிடையே ஒரு சிறிய ஓட்டப்பந்தயம் நடைபெற்றது. எல்லாரும் ஓடுவதற்கு ஆயத்தமாகி தங்கள் ஓடும் பாதையில் நின்றார்கள். ஓட்டம் ஆரம்பமானது. வழியில் ஒரு மாணவன் விழுந்து விட்டான். ஓடின எல்லாரும் வந்து அந்த மாணவனை தூக்கி விட்டு விட்டு பின்பு ஓடினார்கள். இது அவர்களில் இருந்த அன்பை வெளிக்காட்டுகிறது.

மறைநூல் அறிஞர் ஒருவர் இயேசுவிடம் "அனைத்திலும் முதன்மையான கட்டளை எது?" என்று கேட்க இயேசு உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனதோடும், முழு ஆற்றலோடும், உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்புகூர்வாயாக என்றும், உன் மீது நீ அன்பு கூருவதுபோல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்புகூர்வாயாக என்றும் இவற்றை விட மேலான கட்டயை எதுவும் இல்லை என புரிய வைத்தார். கடவுளிலும் நம்மோடு வாழுவோரிலும் அன்பு செலுத்தும் போது மெய்யான அமைதி நம்மில் குடிகொள்ளும். உண்மையான உள்ளான மனதிலிருந்து அன்பு வெளிப்படட்டும். அப்பொழுது அமைதி பெருகும்.

***2. அரவணைப்பு தரும் அமைதி*** : (கொலோ.1:20)

அமைதியின் உன்னதம் ஒப்புரவாகுதலில் வெளிப்படுகிறது. இதன் வாயிலாக நாம் பெறுவது அவரது அரவணைப்பாகும். இதை உணர்ந்த கள்வனின் ஏக்கம் சிலுவையில் நிறைவேறியது.

அதற்கு இயேசு அவனிடம், "நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்கு சொல்கிறேன்" என்றார் (லூக். 23:43).

அரவணைப்போர் இல்லாதவர்கள் அமைதியை இழந்து தவிப்பார்கள். அரவணைப்பது போல் நடிப்பதும் அமைதியை இழக்கச் செய்யும். திருமறையில் யாகேல் என்ற பெண் சிசெராவை அழைத்து, சமுக்காளத்தால் மூடி, படுக்க வைத்து, தண்ணீர் கேட்டவனுக்கு பாலைக் கொடுத்து, அரவணைப்பதுபோல் நடித்து, நெற்றியில் கூடார ஆணியை அடித்து கொன்று போட்டாள்.

இயேசுவோடு சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த குற்றவாளிகளுள் ஒருவன் "நீ மெசியாதானே உன்னையும் எங்களையும் காப்பாற்று" என்று அவரைப் பழித்தான். மற்றொருவன் "நீர் ஆட்சியுரிமை பெற்று வரும் போது என்னையும் நினைவிற்கொள்ளும்" என்றான். இவனுக்கு ஆண்டவர் அரவணைப்பையும் அதனால் உண்டாகும் அமைதியையும் கொடுத்தார். அமைதி மிகப் பெரிய அருட்கொடை. அதைப் பெற்றுக் கொள்வதும் பெற்றுக் கொண்டதை காத்துக்கொள்வதும் அவசியம். நாமும் இறை அரவணைப்பு பெற்று அமைதி பெறுவோம்.

***3. அர்ப்பணிப்பு தரும் அமைதி*** : (கொலோ. 1:20)

கடவுளின் தூய திருவுளத்திற்கு எந்தவொரு எதிர்பார்ப்புமின்றி அர்ப்பணிக்கும் அர்ப்பணிப்பில் தான் உண்மையான அமைதி துளிர் விடுகிறது. இயேசு கிறிஸ்து தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றி முடித்தபோது,

“தந்தையே, உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்” என்று இயேசு உரத்த குரலில் கூறி உயிர் துறந்தார் எனப் பார்க்கிறோம் (லூக். 23:46). இதுவே அமைதியின் ஆழத்துவமாகும்.

சிலுவையில் வெளிப்பட்ட இயேசு நாதரின் அர்ப்பணிப்பு உலக மக்கள் அனைவருக்கும் அமைதி அருளுகிறது. இன்றும் இறைவனுக்கு தங்களை முழுவதும் அர்ப்பணிப்போர் அமைதியைப் பெற முடியும்.

இறை மக்களை துன்புறுத்திய சவுல், ஒளியினூடாக அமைதியை அருள்பவராம் இயேசுவால் சந்திக்கப்பட்ட போது ஆண்டவரே நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் எனக் கேட்டு தன்னை அர்ப்பணம் செய்தார். கிறிஸ்துவுடனே சிலுவையில் அறையப்பட்டேன். இனி வாழ்பவன் நான் அல்ல. கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார் என்று கூறினார். அதோடு நின்று விடாமல் எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு; ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது என்று அனைத்தையும் வெறுத்துவிட்டார். தன் வாழ்வை இறைவனில் பதித்து அமைதியான வாழ்வைப் பெற்றுக் கொண்டார். எனவே அமைதி உருவாக இறை பக்தி வளர வேண்டும்.

கடின உழைப்பாளி ஒருவர் முன் தூதன் ஒருநாள் தோன்றி, மகனே நீ என்னோடு வா அமைதியாக வாழலாம் என்றாராம். அதற்கு அம்மனிதன் எனக்கு விவசாயம் செய்ய வேண்டும். எல்லா மக்களுக்கும் உணவு கொடுக்க வேண்டும். இப்போது வரமுடியாது என்றார். தூதன் இன்னும் சிலநாள் தாண்டி வந்து முன்போலவே கேட்டார். அப்பொழுது மனிதன் இது அறுவடை நேரம், சரியான நேரத்தில் அறுவடை செய்தால் மட்டுமே மக்களுக்கு கொடுக்க முடியும். இப்போது வரமுடியாது என்றார். மீண்டும் சிலநாள் தாண்டி தூதன் அவரிடத்தில் வந்து, மறுபடியும் அழைத்தார். அப்பொழுது அந்த மனிதன் பக்கத்து வீட்டுக்காரர் வியாதியால் கஷ்டப்படுகிறார். இப்போது நான் வரமுடியாது என்றார். இம்மனிதனில் அன்பும் அரவணைப்பும் அர்பணிப்பும் இருந்தது.

நாட்கள் பல கடந்தன. மனிதன் கடவுளே என்னை அழைக்கமாட்டீரா? என்றானாம். அப்பொழுது கடவுள் அவனிடம் நீ இவ்வளவு நாளும் எங்கு இருப்பதாக நினைத்தாய், நீ எப்போதும் என்னோடு தான் இருக்கிறாய் என்றாராம். ஒருவர் மன அமைதியோடு இருக்கும் போது அவருடைய அமைதி அவரைச் சார்ந்த எல்லாருக்கும் ஏற்படுத்த வேண்டும். நாமும் அன்பு, அரவணைப்பு, அர்பணிப்பு என்ற மூன்று பூவையும் வாழ்க்கையில் கொண்டு, நிறைவான, நிலையான, நிம்மதியான வாழ்வை பெற்று வாழ்வோம்.

அருள்திரு. **சுஜின் பிரிட்டோ**

27-03-2019

தவக்கால நான்காம் புதன்

# ஒருடலாக்குகிறது சிலுவை

எபே. 2:11-18

**“தாமே துன்புற்றுப் பகையை அழித்தார். சிலுவையின் வழியாக இரு இனத்தவரையும் ஒருடலாக்கிக் கடவுளோடு ஒப்புரவாக்க இப்படிச் செய்தார்.”**

(எபே. 2:16).

சிலுவை ஒரு சமூக அடையாளம். கிறிஸ்து ஏற்படுத்தியதும், வாழ்ந்தது காட்டியதுமான புது சமூகம். நற்செய்தி நூல்கள் இதை ‘இறையரசு’ என்று குறிப்பிடுகிறது. பவுலடியார் இதை ‘கிறிஸ்துவின் உடலாம் திருச்சபை’ என்றும், ‘நித்திய வாழ்வு’ என்றும் விளக்குகின்றார். கிறிஸ்துவோடு இசைந்த உறவில் வாழும் ஒருவன் தான் சார்ந்திருக்கும் சபை விசுவாசிகளோடு ஒருமைப்பாட்டில் தேறினவனாக இருக்க வேண்டும். நாம் கடவுளோடு உண்மையான ஐக்கியம் கொள்ள கிறிஸ்து சிலுவையில் நம்மை விடுதலையாக்கினார். இவ்விடுதலையை விசுவாசத்தினால் நாம் சொந்தமாக்கிக் கொள்கிறோம். இதுவே இரட்சிப்பு. ஆதி திருச்சபை கொண்டிருந்த அருட்பணிவடிங்களை மூன்றாய் பகுக்கலாம். (1) இரட்சிப்பு (soteria - salvation) அப். 2:46, (2) ஐக்கியம் (koinonia - Fellowship) அப். 2:47, (3) பணிவிடை (diakonia- serving) அப். 2:44,45. சுருக்கமாக, இரட்சிக்கப்பட்டவர்கள் சபை உறவில் ஐக்கியமாய் இருந்து ஒருவருக்கொருவர் பணிவிடைச் செய்தார்கள். காலங்கள் மாறிய போது திருச்சபை அருட்பணித் திட்டத்தில் மட்டுமல்லாது, அஸ்திபாரத்திலும் தொய்வுகள் ஏற்படத் துவங்கியது. அதனைச் சீர்த்திருத்த சிலுவை அழைக்கிறது.

## சமத்துவ சரித்திரம்

### *1. தாமே துன்புற்று பகையை அழித்தார்* : (எபே. 2:16a)

அடிமைத்தனம் 2 வழிகளில் தோன்றும். ஒன்று எதிராளிகளை எதிர்கொள்ளும் வலிமை இல்லாதபோது, இரண்டு எதிராளி வலிமையானவன் என கற்பனை செய்து தன் வலிமையைக் குறைத்து கருதுவது. இந்தியாவில் சாதியப் பிரிவுகளின் வலிமை பெற காரணம் இதுவே. எபேசு திருச்சபையில் யூத கிறிஸ்தவன், புற ஜாதிக் கிறிஸ்தவன் என்னும் பிரிவினைக் கொள்கைகள் எழுந்தது. பொதுவாக யூதர்களில் கிறிஸ்தவர்களானவர்கள் தங்களை மேசியாவின் ராஜ்ஜியத்தில் முதன்னையானவர்களாகவும், புறஜாதிகளையும் வந்தெய்தியவர்களாகவும்

கருதினார்கள். அங்கு நிலவியது பிரிவினையாகிய பகை, கிறிஸ்துவின் போதனைகள் மற்றும் பணிகளின்பால் ஈர்க்கப்பட்டோர், கிறிஸ்தவத்தை தழுவினாலும், அவர்கள் சார்ந்திருந்த பூர்வீக அடையாளத்தோடு கிறிஸ்தவத்தை இணைத்துக்கொள்ளும் போது எழும் பாதிப்புக்களை எபேசு திருச்சபையின் புறஜாதி விசுவாசிகள் அனுபவித்தனர். இவைகள் உண்மையில் உருவான குழப்பங்கள் அல்ல, மாறாக வியாக்கியானம் தரும் விரிசல்களே. யூத சடங்குகள் பிரிவினைவாதத்திற்குரியதாய் வியாக்கியானம் செய்யப்பட்டதால் புறஜாதியார் கடவுளிடம் சேர, தடைகளைத் தகர்த்தெறியும் தியாகம் தேவைப்பட்டது.

தனக்காய் ஒருவன் துன்புறுவது தன்னை வளப்படுத்த, பிறனுக்காய் ஒருவன் துன்புறுவது சரித்திரம் படைக்க, அதுவே சிலுவையின் மாதிரி. கறுப்பின மக்களின் விடுதலைக்காய் பாடுபட்ட மார்ட்டின் லுத்தர் கிங் சமத்துவ சமுதாயத்திற்காய் விட்ட அறைகூவல் "இருள் இருளை விலக்குவதில்லை, ஒளியாலே ஆகும். வெறுப்பு வெறுப்பை விலக்குவதில்லை, அன்பாலே ஆகும்."

நீதிமானுக்கு அக்கிரமக்காரருக்கான தண்டனை சிலுவையில் கொடுக்கப்பட்டது. தவறு செய்யாதபோதும் சமூக அநீதி என்னும் போர்வையில் தண்டிக்கப்படுதலே இயேசு வாழ்ந்த காலத்தில் சமூகத்தின் அவலம். கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் நீதி அநீதியாய் தரிக்கப்பட்டது. நியாயம் அநியாயமாய் உணரப்பட்டது. வாய்மை பொய்மையாய் அறியப்பட்டது. உயிர்த்தெழுதலினூடே நீதி, நியாயம், வாய்மை மீட்கப்பட்டது. அதுபோலவே சமத்துவம் பிரிவினையாய் விளக்கப்பட்டது. இறுதியில் உயிர்த்தெழுதலால் சமத்துவம் நிலைநிறுத்தப்பட்டது. மதமாற்றம் வேண்டாம் என போரடிப்போர் நம்மை சூழ்ந்திருக்கும்போது கிறிஸ்துவின் அன்பில் இணைவோர் அனுபவிக்கும் சமத்துவமே, நாம் எழுதப்போகும் சரித்திரம். ஆயினும் பொருளாதார பாகுபாடுகள், கொள்கைப் பிரிவினைகள், அதிகாரப் போட்டிகள் சமத்துவத்திற்காய் சவாலாய் இருந்து கொண்டிருக்கின்றது.

**சகோதரத்துவ உடன்படிக்கை**

***2. இருதிறத்தாரையும் ஒரே உடலாக கடவுளுக்கு ஒப்புரவாக்கினார்*** :

திருத்தூதுவர் பற்றுறுதி அறிக்கை தரும் நிச்சயம் 'நமக்காக பொந்தியு பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு........ மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு.......' (Chirst suffered and died for Us). சீர்திருத்த தந்தை

மார்ட்டின் லுத்தரின் கூற்று, 'கிறிஸ்து நம்மோடு பாடுபடுகிறார்' (Chirst suffering with Us). பொந்தியு பிலாத்துவின் காலத்தில் பாடுபட்ட கிறிஸ்து இன்றும் வருந்துவோரோடு பாடுகளை ஏற்கிறார். உடல் உறுப்பின் வலியை தலை ஏற்கிறது. கிறிஸ்து சபைக்கு தலையாயிருக்கிறார் (எபே. 5:23). அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவங்களாயிருக்கிறோம் (1கொரி. 12:27,ரோம. 12:5). சரீரமாகிய நம் சபையில், கிறிஸ்துவின் உறுப்பாகிய திருச்சபையாரின் பாதிப்புக்களில் கிறிஸ்து பங்குபெறுகிறார்

உடன்படிக்கை இருதிறத்தார் ஒன்றுபட ஏதாவது பகிரப்பட வேண்டும். பகிரப்படும் பொருட்களின் தரமே உடன்படிக்கையின் உறுதித்தன்மையினை உணர்த்தும். ஆதியாகமம் 33:9-11 வசங்களில் ஏசா, யாக்கோபு ஒப்புரவாகும் போது, ஏசாவின் தயைக்கு ஈடாக யாக்கோபு தன் உடைமைகளை காணிக்கையாகக் கொடுத்தான். கிறிஸ்துவின் சிலுவைப் பாடுகள் திருச்சபையில் இருக்கும் உடன் பிறவா உறவுகளோடு ஏற்படுத்தும் சகோதரத்துவ உடன்படிக்கையின் அருட்சாதனம்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்து தம் சிலுவை மரணத்தால் அனைவரையும் ஒற்றுமைப்படுத்தியுள்ளார். இதை தியானிக்கிற இந்த வேளையில் கிறிஸ்து அருளும் ஒற்றுமையை ஏற்றுக் கொண்டு இணைந்து வாழ்வோம்.

திரு. I. **ஜாண் ரோஜின் ஜேக்கப்**

03-04-2019

தவக்கால ஐந்தாம் புதன்

## உயர்த்துகிறது சிலுவை

பிலி. 2:1-11

**"...கடவுளும் அவரை மிகவே உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார்."** (பிலி. 2:9).

சிலுவை ஒற்றுமையின் அடையாளம். பவுலடியார் பிலிப்பு திருச்சபைக்கு உரோம சிறைச்சாலையில் இருந்துகொண்டு இத்திருமுகத்தை எழுதுகிறார். இத்திருமுகத்தை பிலிப்பு திருச்சபைக்கு தம் ஊழியப் பாதையில் செய்த நன்மைகளை நினைத்து நன்றி மடலாகவும் அதோடு சில அறிவுரைகளையும் எழுதுகிறார். பிலிப்பு திருச்சபை தாழ்மையுடனும், ஒற்றுமையுடனும் இருத்தல் வேண்டும் எனவும், இறைநாதர் இயேசுகிறிஸ்து தம்மை சிலுவைமரணத்தின் மூலம் தாழ்த்தியதால் உயர்த்தப்பட்டார் என்ற இறைச் செய்தியையும் பகிர்ந்து கொள்கிறார். துன்பங்கள் வரும் போது துணிவுடன் இருந்து நன்மையானதை சுதந்தரித்துக் கொள்ளவேண்டும் எனவும், பிலி. 2:5-11-ல் இறைமகனாகவும், மானுடனாகவும் இத்தரணியில் வந்த இயேசுகிறிஸ்துவுக்கு உயரிய மதிப்பை கொடுத்து, பிலிப்பு திருச்சபையும் இயேசுகிறிஸ்துவைப் போல தாழ்மையோடு கீழ்ப்படிந்து வெறுமையாக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறார். இங்கு சிலுவையயால் இயேசுகிறிஸ்து எவ்வாறு உயர்வு பெறுகிறார் என்பதை கீழே காண்போம்.

### *1. சிலுவை : அவமானத்தின் சின்னம்* : (வ. 8a)

"சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவை சாவையே.........."

ரோம பேரரசின் காலத்தில் சிலுவை குற்றவாளிகளைத் தண்டிக்கும் ஓர் கொலைக்கருவி. ரோம பேரரசன் கான்ஸ்டன்டைன் காலத்திற்குப் பின் சிலுவை மகத்துவமானதாக ககருதப்பட்டது. காரணம் இவர் கிறிஸ்தவத்திற்கு நேரான மனமாற்றம். சிலுவையில் இறைநாதர் தம்மையே கையளித்ததால் சிலுவை மகத்துவமானது. சிலுவை சில பேருக்கு மடமை, தடைக்கல் ஆனால் நமக்கோ இது கடவுளின் வல்லமை (1கொரி.1:18-25). சிலுவை என்ற அவமானத்தின் சின்னம் வழியாக உருவாக்கப்பட்டதுதான் திருச்சபை. அவமானத்தின் சின்னத்தை இயேசுக் கிறிஸ்து ஏற்க காரணம் என்ன? இயேசுக்கிறிஸ்து பரிசுத்த ஆவியினால் கன்னிமரியாளின் வயிற்றில் உற்பவித்தார் (லூக். 1:35). இப்பகுதியில் இயேசுக்கிறிஸ்து

இறைமகனாகவும், மானுடமகனாகவும் இத்தரணியில் வந்தார். வ. 6-ல் "கூப்பர்ஷின்" (Huperchein) என்ற கிரேக்கப் பதம் மாற்றம் இல்லாத இறைத்தன்மையுள்ள கடவுளாக இருக்கிறார். "மார்பே" "செக்கிமா" என்ற இரண்டு கிரேக்க பதங்களை பவுல் பயன்படுத்துகிறார். "மார்பே" என்றால் மாற்றம் இல்லாதது, "செக்கிமா" என்றால் மாற்றம் பெறக்கூடியது. மாற்றம் இல்லாத இறைத்தன்மையுடன் இருந்தும் இறைமக்கள் வாழ்வுபெற வேண்டும், மீட்புபெற வேண்டும் என்று தம்மை மாற்றுகிறார். இறைமக்கள் மீதுள்ள அன்பு இறைநாதரை வெறுமையாக்க, அவமானத்தின் சின்னத்தை ஏற்கக் தூண்டுகிறது. ஒரு பாத்திரத்திலுள்ள பொருட்களைக் கொட்டினால் தான் இன்னொரு பொருளை வைக்கப் பயன்படுவதுபோல் மானுடமகனாக வந்து சிலுவையை ஏற்றுக் கொண்டார். வெறுமையில்லாமல் மீட்பு இல்லை. அவமானம் இல்லையேல் வெற்றியில்லை. அவமானத்தின் கருவி மீட்பின் கருவியாக மாற்றுருவாக்கம் பெற்றது. மானுட வாழ்வில் தன்னை வெறுமையாக்கும் வாழ்வு உண்டா?

## *2. சிலுவை : தாழ்மையின் அடையாளம்* : (வ. 8b)

"....... கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார்"

இறைமகனாக இப்பூமியில் வந்தவர் எங்கும் நிறைந்து எல்லாம் அறிந்து, எல்லையற்ற ஆற்றலுடையவராய் இருந்தார். இவையனைத்தும் இருந்தும் தம்மையே தாழ்த்திக் கொண்டார். ஆனால் நாம் ஏசா.53:3 "அவர் இகழப்பட்டார்...... அவரை நாம் மதிக்கவில்லை" தி.தூ. 3:15-ல் இறைவனுக்குரிய எல்லா அதிகாரமும் இருந்தும் தன்னையே தாழ்த்தினார். "வாழ்வின் ஊற்றானவரை" - நம் வாழ்வின் ஊற்றானவராக தம்மையே தாழ்த்தினார். ஏசா. 53:3,4 நமக்காக காயமடைந்தார், நொறுக்கப்பட்டார், தண்டிக்கப்பட்டார், தம்மேல் சுமத்தினார் எதற்கு? நம்முடைய குற்றங்களை மன்னிக்கும் பொருட்டு தாழ்மையின் ரூபமானார். 1பேதுரு 1:18,19-ல் நம் மூதாதையர் மூலமாய் வந்த வீணான நடத்தையினின்று நம்மை பரிசுத்த வகையாக்க தம்முடைய இரத்தத்தை சிந்த தன்னையே சிலுவையில் தாழ்மைப்படுத்தினார் (உரோ. 5:8; எபே. 2:11). இன்று சிலுவை, அதிகாரச் சிலுவையாக, அழகு சிலுவையாக, நினைவு சிலுவையாக உலகில் பயணிக்கிறது. மானிட உறவுக்கு பாலமாக வேண்டிய சிலுவை, காட்சிப் பொருளாக மாறிவிட்டது. தாழ்மைப்பட வேண்டிய சிலுவை, அதிகாரச் சிலுவையாக வலம் வருகிறது மத்.10:38-ல் "சிலுவை சுமந்தால் என்னுடையோர்" என்கிறார். தாழ்மையின் அடையாளமாகிய சிலுவையை சுமக்க ஆயத்தமா?

### *3. சிலுவை : உயர்வுக்கான ஊன்றுகோல்* : (வ. 9)

“எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார்.”

வெறுமை, அடிமை, கீழ்ப்படிதல், தாழ்பணிதல் இக்குணங்கள் இயேசுகிறிஸ்துவில் இருந்ததால் கடவுள் உயர்த்தினார். மனிதனாகப் பிறந்தும், இறைவனுக்கு உயரிய பண்புகளோடு இப்பூமியில் வாழ்ந்து காட்டினார். சொன்னதைச் செய்தார். எனவே வ. 10-ல் விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிடத்தக்க மதிப்புமிக்கவர் ஆனார். பிதாவானவருக்கு மைந்தனாகிய கிறிஸ்து கீழ்ப்படிந்தார். இது தான் உயர்வுக்கு முதற்படி. கீழ்ப்படிதல் இறைமக்களுக்கு முக்கியம். (மத். 23:12; லூக். 14:11; 18:14). இயேசுகிறிஸ்துவின் வாயிலாகத்தான் அமைதி உண்டு (தி.தூ. 10:36) உலகில் எப்படி அமைதி வரும்? சிலுவை என்பது இரண்டு மரத்துண்டுகளால் இணையப்பட்டிருக்கிறது. நேரானக் கோல் இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பு. குறுங்கோல் மனிதனுக்கும், இறைபடைப்புக்கும் உள்ள தொடர்பு. மனிதனுக்கும் பிறபடைப்பிற்கும் இடையே தொடர்பு இல்லையேல் உயர்வு வாழ்வு வராது. இன்று மனிதன் இயற்கையோடு நல்லுறவு இல்லாததால் பேரிடர்களால் அல்லல்பட்டு கொண்டிருக்கிறான். இதனால் உலகில் அமைதியற்ற சூழல் உருவாகிறது. இரண்டு உறவும் (கடவுள் மனிதன், மனிதன் இயற்கை) உறவு சரிச்சமமாக இருத்தல் வேண்டும். மாற்.10:35-45-ல் சீஷர்கள் சிலுவை சுமக்கத் துணியாமல் பதவிக்காக போராட்டம் நடத்துகின்றனர். இன்று சிலுவையை பிறர் மீது சுமத்துவது எளிது. ஆனால் நாம் சுமப்பது கடினம். எனவே பவுலடியார் கலா. 6:14-ல் கூறியது போல் நானும் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன் என்ற எண்ணத்தோடு உலகத்திற்காய், இறைமக்களுக்காய் தியாகம் செய்வோம். நிறைவாழ்வை பெறுவோம்.

அருள்திரு. **செ. ஜாண் வினோ ராஜ்**

10-04-2019 தவக்கால ஆறாம் புதன்

## வெற்றியளிக்கும் சிலுவை

கொலோ. 2:15

**“தம் சிலுவையினால் கிடைத்த வெற்றியால் ஆட்சியாளர், அதிகாரம் கொண்டோர் ஆகியோரின் படைக்கலன்களை கிறிஸ்து பிடுங்கிக் கொண்டு அவர்களை இகழ்ச்சிக்குள்ளாக்குமாறு ஊர்வலமாக இழுத்துச் சென்றார்.”** (கொலோ. 2:15)

வெற்றி என்பது மனிதன் வாழ்வோடு தொடர்புடையது எங்கு பார்த்தாலும் வெற்றியடைவது எப்படி? வெற்றி அடைய 10 ஆலோசனைகள், வெற்றி பெற எங்களிடம் வாருங்கள் என்ற அழைப்பை உலகம் நம்மைப் பார்த்து கூவிக் கொண்டே இருக்கிறது. வெற்றி என்பது “வேண்டும் என்று எண்ணுபவர்களுக்குரியது” என்றும் “உன் வெற்றியை உன்னைத் தவிர யாரும் தடுக்க முடியாது” என்றும் பொன் மொழிகளைக் கேட்டிருக்கிறோம். இப்படிப்பட்ட வெற்றி தலைமுறை தலைமுறைக்கு தொடர்ந்து வரும் போது நம்மை தவக்காலம் வெற்றியுள்ள வாழ்வுக்கு அழைக்கிறது. வெற்றி என்பது இரண்டு வகைப்படுத்தலாம். (1) பிறரை வெல்வது 1சாமு. 17:50. (2) தன்னை வெல்வது 11 கொரி. 2:14. இப்படி கூறப்படும் வெற்றிக்கு சுயவிமர்சனம் (கலா. 6:4) மற்றும் இறைப்பார்வை (எபே. 5:10) வேண்டும். திருத்தூதுவராகிய பவுல் இங்கு கூறும் போது சிலுவையின் வழி இயேசு பெற்றுக் கொண்ட வெற்றியைக் கூறுகிறார். இயேசுவுக்கு பகையாய் இருந்த “துரைத்தனங்களும் அதிகாரங்களும் அவரைத் தாக்கி அவரை சிலுவைக்கு ஒப்புக் கொடுத்ததினால் தாங்கள் வெற்றி அடைந்ததாக எண்ணினர்.” ஆனால் கிறிஸ்துவோ அதே மரணத்தினால் அவர்கள் தங்களுக்கு உரிமை பாராட்டின வெற்றியை தமதாக்கினார். வெற்றி ஊர்வலத்தில் கைதிகளை கட்டி ஊர்வலமாக கொண்டு வருவதுபோல் கொண்டுவந்தார் என்கிறார். மனிதரும் உலகத்தால் நெருக்கப்பட்டு கொண்டு இருக்கிறார்கள். பல நிலைகளில் கிறிஸ்து சிலுவையில் வெற்றி பெற்றது போல் நாமும் வெற்றி பெற தவக்காலம் சிலுவை வாயிலாக அழைப்பினைத் தருகிறது.

வெற்றியைப் பெறும் வழிமுறைகள் என்ன?

### ***1. கிறிஸ்தேசுவில் வெற்றியைக் காண்போம்*** : (கொலோ. 2:15a)

“ஆட்சியாளர், அதிகாரம் கொண்டோர் ஆகியோரின் படைக்கலன்களை கிறிஸ்து பிடுங்கி”

படைக்கலன் தாங்குவதற்கும், பாதுகாப்பதற்கும் பயன்படுத்தப் படுகின்றவை. கிறிஸ்துவுக்கு எதிராக நிற்கிற ஆட்சியாளர் மற்றும் அதிகாரம் கொண்டோர் என்ற தீயோனிடம் இருப்பது தாக்கக் கூடிய ஆயுதங்கள் அனைத்தையும் அவர் செயலிழக்கச் செய்து வெற்றி கொண்டார். நாம் சவால் நிறைந்த உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்நிலையில் பல வடிவங்களில் நாம் அனைவரும் படைக்கலன்களால் தாக்கப்படுகிறோம். இதன் வாயிலாக விசுவாச தளர்புகளுக்குள் தள்ளப்படுகிறோம். ஆனால் இயேசுக் கிறிஸ்துவோ எபே. 6:11 கூறுகிறது. அலகையின் ஏமாற்று வழிகளை எதிர்த்து நிற்கும் வலிமையை பெறும்படி கடவுள் அருளும் எல்லாப் படைக்கலன்களையும் அணிந்து கொள்ளுங்கள் என்கிறார். அதைக் கிறிஸ்தவில் தான் நாம் காணமுடியும். மத். 4:1-11 வரை தீயோனை வெற்றி கொள்ளும் கிறிஸ்துவைக் காண முடியும். இன்று நம்மை உலகம் புறம் நோக்கிய ஈர்ப்பினால் ஈர்த்துக்கொண்டிருக்கிறது. இதிலிருந்து மாறி வாழ முடியாது ஏன் என்றால் புறம் நோக்கித் தான் எல்லாப் புலன்களும் உள்ளது. கண், காது, மூக்கு இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். எனவே நம்மில் கிறிஸ்துவில் கண்ட அனுபவம் வரவேண்டும். அவர் அலகையை வெற்றிக் கொள்ள தந்தையோடுள்ள உறவில் தன்னை வலுப்படுத்திக் கொண்டார். அந்த வலிமையே தீயவனை வெற்றி கொள்ளும் உன்னத படைக்கலனாக அமைந்தது. இறைமக்களாகிய நாம் உலக நிலைகளில் கவனத்தைச் செலுத்தி பிரச்சனைகளில் நெருங்கிக் கொண்டிருக்கிறோம். இந்நிலையில் தான் இறைவாக்கு நம்பிக்கையாக தரப்பட்டுள்ளது. தவக் காலத்தில் திருச்சிலுவையின் நாயகராகிய இயேசுக் கிறிஸ்துவில் வெற்றியைக் கண்டு முன்னெடுத்துச் செல்வோம்.

## *2. கிறிஸ்தேசுவில் வெற்றியைப் பறைசாற்றுவோம் :*

(கொலோ.2:15b)

“அவர்களை இகழ்ச்சிக்குள்ளாக்குமாறு ஊர்வலமாக இழுத்துச் சென்றார்”

வெற்றியை பறைசாற்றுதல் என்பது வாழ்வின் செயல்பாட்டினை தெளிவுபடுத்துகிறது. இதனால் நாம் பெறும் ஆற்றலால் சோர்பினை வெற்றி கொள்கிறோம். ஆண்டவர் இயேசுக் கிறிஸ்து இறையாற்றலை வெளிப்படுத்தினார். இகழ்ச்சிக்கு உள்ளாக்கி நாமும் அலகையை இகழ்ச்சிக்கு உள்ளாக்க வேண்டுமெனில் ஆண்டவரோடு நல்லுறவு கொள்ள வேண்டும். 11தீமோ. 3:4-ல் நீ கற்று, உறுதியாய் அறிந்தவற்றில் நிலைத்து நில் யாரிடம் கற்றாய் என்பது உனக்குத் தெரியுமே எனப் பவுலடியார் தீமோத்தேயுவிற்கு அறிவுறுத்தி விசுவாசத்தை

திடப்படுத்துகிறார். நாமும் கிறிஸ்துவை அறிந்து, அனுபவித்து பறைசாற்றுவோம். நாமும் வெற்றியுள்ள வாழ்க்கையின் வளர்ச்சியும், மகிழ்ச்சியும் என்பது நாம் விரும்பாத காரியங்களை எப்படி அணுகுகிறோம். என்பதில் தான் என்பதை அறிதல் வேண்டும். அதுவே இருக்க நல்ல தவமாகவும் முடியும். கிறிஸ்துவில் நாம் கண்ட எல்லா நற்செயல்களை வாழ்வோடு இணைத்துக் கொள்வதிலும், வெளிப்படுத்துவதிலும் தான் வெற்றி பறைசாற்றப்படுகிறது. அதற்குரிய கிறிஸ்தவக் கனிகளை நமது வாழ்வில் வெளிப்படுத்த வேண்டும். அதுவே நம் வாயிலாக பிறர் கிறிஸ்துவை காண்பதற்குரிய வாயிலாகிறது. யாக். 3:13-ல் உங்களிடையே ஞானமும், அறிவாற்றலும் உடையவர் யாராவது இருந்தால் ஞானம் தரும் பணிவாலும் நன்னடக்கையினாலும் அவற்றைக் காட்டட்டும் எனக்குறிப்பிடுகிறார். இயேசுக் கிறிஸ்து தன் வாழ்வால் அலகையை இகழ்ச்சிக்கு உள்ளாக்கினார். நாமும் கிறிஸ்தவ விசுவாச உறுதியுடன் பறைசாற்றுவோம்.

சிலுவை வெற்றியை நமக்கு அளிக்கிறது. அதற்கு சிலுவை நாதரை சிலுவையோடு நாம் பார்ப்போம். லுக். 23:47-ல் சிலுவைக் காட்கியை கண்ட நூற்றுவர் தலைவர் கூறுகிறார் “இவர் உண்மையாகவே நேர்மையானவர்,” நாமும் கிறிஸ்துவைக் காண்போம். கிறிஸ்துவைக் கண்டு கிறிஸ்துவுக்கு சாட்சியாவோம். அப்போது நம்மைக் காண்பவர்கள் நம்மில் கிறிஸ்துவைக் காண்பார்கள் நாமும் வெற்றியுள்ள வாழ்வைப் பெற்றுக் கொள்ளமுடியும். கடவுள் நம்மை வெற்றியுள்ள வாழ்வில் சிலுவை வழி நடத்துவாராக இத்தவகாலத்தில், ஆமென்.

அருள்திரு. J. **ஹட்சன்**

08-03-2019

தவக்காலம் முதலாம் வெள்ளி

# அன்னியரான கிறிஸ்து

திருமறைப்பகுதி : மத். 25:31-46

**"...அன்னியனாய் இருந்தேன், என்னை ஏற்றுக் கொண்டீர்கள் " (மத். 25:35)**

கிறிஸ்து அன்னியராய் இருந்தாரா? கடவுள் அன்னியராய் என்பது சாத்தியம் "அன்னியர்கள்" என்பவர்கள் அறிமுகம் இல்லாதவர்கள் பழக்கமில்லாதவர்கள், அன்னிய தேசத்தவர்கள் தங்கள் சொந்த தேசத்தை விட்டு வாழ்வாதாரத்திற்காக நிரந்தர குடிகளாய் இடம் பெயர்பவர்கள். உள்நாட்டு போர் சூழலிலும் இயற்கை தவறும் பட்சத்தில் ஏற்ப்படும் வறட்சி சூழலிலும் அன்னியராவோர் அதிகரிப்பர். இலங்கை உள்நாட்டு போர் காலத்தில் தமிழகத்திற்கு குடிபெயர்ந்த இலங்கை தமிழர்கள் இந்தியா மற்றும் பர்மா ஆகிய இடங்களில் தஞ்சம் அடைந்த ரோகிங்கியா இஸ்லாமியர்கள் சிறந்த எடுத்துக்காட்டுகள்.

விவிலியத்தில் அன்னியர் என்னும் வார்த்தை அதிகளவில் விவாதிக்கப்பட்டது. பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலர்கள் தேசத்தை சுதந்தரிக்கும் வரையிலும் அரசாட்சிக்கு பின் ஏற்ப்பட்ட அடிமைத் தனத்திலும் (கிமு 722 மற்றும் கிமு 586 ஐ தொடர்ந்து) அன்னியர்களாகவும் பரதேசிகளாகவும் வலம் வந்தனர் கிறிஸ்து வாழ்ந்த நடைமுறையிலும் பின்பற்றப்பட்ட அரசியலமைப்பு சட்டத்தின்படி கிறிஸ்து அன்னியராக கருதப்பட்டார். பிறப்பில் யூதனாகவும் வளர்ப்பில் கலிலேயனானவும் இருந்த இயேசு அங்கிகாரமில்லாதவர்களிடத்தில் அற்றியராக வாழ்ந்தார்.1ம் நூற்றாண்டு யூத வரலாற்று அறிஞர் ஜோசபஸ் இவ்வாறு விவரிக்கிறார். கிமு 102 76 வரை யூதேயாவை ஆண்டுகொண்டிருந்த The Second Hasmonean King of Judea, Alexander Jannaeus, வடதிசை எல்கையை கலிலேயா வரை விரிவு படுத்தினார். இதன் விளைவாக யூதர்கள் நிரந்தரமாய் வாழ்வாதாரம் கருதி குடிபெயர துவங்கினார்கள் அத்தகையோரில் இயேசுவின் தந்தை யோசேப்பின் பெற்றோர் மற்றும் மரியாளின் பெற்றோரும் உள்ளடங்குவர்.

இயேசு வாழ்ந்த சமூகத்தில் கடைநிலையில் தான் அன்னியர்கள் இருந்தார்கள். சட்டத்திட்டங்கள் அவர்களை நிர்மூலமாக்கும் விதத்தில் அமையப்பெற்றிருந்தது. 1. வரி செலுத்துதல் அன்னியர்களுக்கு மட்டுமெ

என்பது நடைமுறை. மத்தேயு 17:24-27 ல் பூமியின் ராஜாக்கள் அன்னியர்களிடத்தில் வரி வசூலிக்கின்றனார்கள். இயேசு தன்னை அன்னியனாக்கிக்கொண்டு வரிப்பணம் செலுத்துகின்றார். 2. இயேசுவை காட்டிக்கொடக்க பயன்படுத்தின பணத்தைக்கொண்டு அந்நியர்களை அடக்கம்பண்ண இடம் பெறப்பட்டது. அன்னியர் இயேசு என்னும் கண்ணோட்டத்தை யோவான் விளக்கும்போது, அவர் தமக்கு சொந்தமானதிலே வந்தார் அவருக்கு சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை, என யோவா. 1.11ல் குறிப்பிடுகிறார். ராஜ்யத்தை அன்னியரை சேர்த்துக்கொள்ளவேண்டும்

### *1. அறியப்படாத கிறிஸ்து* **( Knowledge about Christ)** *அறியப்படுகிறார்*

'வேற்றுமையில் ஒற்றுமை' ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்வதில் சாத்தியமாகும் ஏற்றுக்கொள்ளுதல் அறியப்படுதலலே உயிரூட்டம் பெறும், ஏழையின் சிரிப்பினில் இறைவனைக் காணலாம் என்னும் பழமொழி கூற்று கடவுளை அறிந்துக்கொண்டாலே ஏழையில் இருக்கும் கடவுளை சிரிக்க வைக்க முடியும். வீட்டில் அம்மா அழைத்தால் என்னம்மா என பதிலுரைப்போம், அன்னியர் அழைத்தால் யாரு?. அறியாமையை ஒத்துக்கொள்ளும்போது அறிந்து கொள்ளவேண்டும் என்னும் ஆர்வம் தோன்றும் திப. 17:20,21ல் ஏதேன்சு நகரத்தார் கடவுளைக்குறித்து போதனைக்கேட்பதிலும் விவாதிப்பதிலும் சமயத்தைப்போக்கினர். ஆயினும் கிறிஸ்துவைக்குறித்த அறிவு இல்லை. ஆகையால் அவர்கள் அறியப்படாத கடவுளை வழிபட்டனர். கிறிஸ்து தன்னை அன்னியனாய் அறிவித்தார் யூதர்கள் எதிர்பார்க்கும் மெசியா ரோம ராஜ்ஜியத்திற்கு நிகரான வலிமை யுடையவராய் வந்து இழந்த இஸ்ரவேல் ராஜ்ஜியத்தை திரும்ப கொடுப்பார் என்பதே. இயேசு பரத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் வேளையில் கூடிவந்திருத்தவர்களில் அநேகர் கேள்வியை எழுப்பினார்கள்(திப. 1.6) கிறிஸ்துவின் சிலுவை மரனத்தை தொடர்ந்து எம்மாவு நோக்கி பயணித்த சீடர்களுக்கோ பயணித்த கிறிஸ்து உடனிருந்து அறியப்படாத கிறிஸ்து கிறிஸ்துவுக்கு வடிவம் கொடுப்பவர்களுக்கு அறியப்படாத கிறிஸ்து ஒரு சவாலே.

பிலாத்துவிடம் நியாயம் விசாரணையிலும் மரணிக்க செய்யும் யூதர்களின் ஓலத்திலும் கிறிஸ்து அறியப்படாத கிறிஸ்துவாய் அன்னியராய் இருந்தார்.

## 2. அறிவிக்கப்படும் கிறிஸ்து :

**என்னை ஏற்றுக் கொண்டீர்கள் ” (மத். 25:35)**

தற்காலத்தில் அறிவு விக்கப்படும் (விற்கப்படும்) கிறிஸ்து அதிகமாய் வலம் வருகிறார் ஆனால் அறிக்கை இடுதலேஅறிவித்தலின் மூலக்குகூறு என்பது கிறிஸ்துவின் நிலைப்பாடு. கிறிஸ்துவின் அறிவு என்பது அறிக்கையிடுதல் அல்லது அறிவித்தல் என்னும் செயல்பாடுகளின் மூலம் உயிர் கொண்டிருக்க செய்கிறது அன்னியரை உபசரிக்க மறவாதீர்கள் என்னும் கூற்று எனக்கு பிறன் யார் என்று கேள்வி கேட்டஇளைஞனுக்கு அந்நியனே பிறன் என வலியுறுத்துகிறார் கிறிஸ்துகிரேக்கத்தில் அறிவித்தல் என்னும் பதம் நம்பிக்கை அளித்தல், புது சமூகம் உருவாக்குதல் புகழ்பரப்புதல் என்னும் பின்னணியத்தில் அர்த்தம் அறியப்படுகின்றது என்னை சேர்த்துக்கொண்டீர்கள் என்னும் பதமும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பிண்ணனியத்தில்பொருந்தி நற்செய்தியின் கனியினை கிரியைகளில் முக்கியப்படத்துகிறது

அன்னியர்களாய் பயணிக்கிறவர்கள் அவலங்களை உரைக்க எடுத்துக் கூறுகிறார்கள். சிரியாவில் ஏற்பட்டிருக்கும் கலவரங்கள் அகதிகளாய் மக்கள் மேற்கொள்ளும் பயணங்கள் உலக ராஜ்ஜியத்தின் உறுதியற்ற தன்மையின் பிரதிபலிப்பு. அதிகார விளிம்புகளில் உள்ளோரின் அன்பில்லா அடக்கு முறை மனிதம் இழந்த வாழ்வு முறைஇயேசுவின் நற்செய்தியின் சமூக அநீதியின் உச்சமும் விடுதலை வேண்டுவோரின் மன ஏக்கங்களும் அதிகமாய் இடம் பெறுகின்றது.

திரு. I. **ஜாண் ரோஜின் ஜேக்கப்**

15-03-2019

தவக்கால இரண்டாம் வெள்ளி

# விருந்தினரான கிறிஸ்து

லூக். 5:27-32

**"இந்த லேவி தம் வீட்டில் அவருக்கு ஒரு பெரிய விருந்து அளித்தார். வரித்தண்டுபவர்களும் மற்றவர்களும் பெருந்திரளாய் அவர்களோடு பந்தியில் அமர்ந்தார்கள்."** (லூக். 5:29)

சிறப்பு வைபவங்களில் விருந்து முக்கிய இடம்பெறுகிறது. விருந்து மனிதருக்கு மகிழ்ச்சி தரும் (ச.உ.10:19). மகிழ்ச்சியினால் செய்யப்படும் விருந்துகளும் உண்டு. சடங்கிற்காய் செய்யப்படும் விருந்துக்களும் உண்டு. வாழ்வில் சிறப்புடன் பெறும் நன்மைகளை விருந்தளித்து மகிழ்வர் (ஈசாக்கு பால் மறந்த நாள், தொ.நூ. 21:8, யாக்கோபு லேயாளை திருமணத்தில் இணைத்தல் தொ.நூ. 29:22, பார்வோனின் பிறந்தநாள்-40.20etc). இழந்ததை திரும்பப் பெறும் போது விருந்தளித்து மகிழ்வர் (லூக். 15:11-32). சமய சடங்குகளாகிய அசனப் பண்டிகை, பலி விருந்து (1சாமு. 16:5), பொருத்தனை விருந்துகள் என நடைமுறையிலும் மகிழ்ச்சிக்காய் விருந்து செய்யப்படுகிறது. வீடுகள் அல்லலு குடும்பங்கள் சார்பாய் நடைபெறும் எல்லா விருந்துகளிலும் சபைப் போதகருக்கு முதலிடம் உண்டு. காரணம், ஆயரின் இறைவேண்டலால் விருந்தினராகும் இயேசுவை முக்கியப்படுத்துதல். நாமும் கானாவூர் கலியாண வீட்டில் விருந்தினராய் வந்த இயேசுவை நினைவுபடுத்தி இறைவேண்டல் ஏறெடுப்பது வழக்கம்.

லுக்கா 5:27-39 வசனங்களில் சொல்லப்படும் விருந்து சற்று வித்தியாசமானது. லேலி என்னும் ஆயக்காரன் தன் வரிவசூலிப்பதை விட்டு இயேசுவுக்கு பின் செல்ல துணிந்த போது தன் வீட்டில் ஏற்படுத்திய விருந்து. துறவறம் மேற்கொள்வதை அல்லது மிஷனெறியாய் போவதை மகிழ்ச்சியாய் விருந்து மூலம் அறிவிப்பதைப் போன்றது. தற்கால விருந்தின் நாகரிகத்தை எசாயா அழகாய் விளக்குகிறார், அவர்கள் கேளிகை விருந்துகளில் கின்னரம், வீணை, தம்புரு, மதுபானம் இவையெல்லாம் உண்டு. ஆனால் ஆண்டவரின் செயல்களை அவர்கள் நினைவுகூர்வதில்லை. அவருடைய கைவினைகளை நோக்கிப் பார்ப்பதுமில்லை (ஏசா. 5:12). யோபு தன் பிள்ளைகள் தங்கள் சகோதர உறவின் மேன்னையைக் நிலைத்திருக்கச் செய்ய அமைக்கும் விருந்தில் கடவுளை தூற்றியிருக்கக் கூடும் எனக் கருதி அவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் எரிபலியிட்டு கடவுளை பிரியப்படுத்த முயற்சித்தான் (யோபு. 1:4,5). ஒரு பாடல் நினைவுக்கு வருகிறது, இயேசு வந்த வீட்டில் சந்தோஷமே.

லேவி, ஆயக்காரன், கிரேக்க செல்வாக்கோடு ரோமர்களின் ஆளுகையில் வரி வசூலிப்பவன். பிற்காலத்தில் இவரே மத்தேயு என பாரம்பரியங்கள் அறிவுறுத்துகின்றது. லேவி வீட்டில் வந்தால் சந்தோஷமா? சந்தோஷம் இல்லாதோர் வீட்டில் இயேசு இல்லையா? லேவி வீட்டில் விருந்தினரான இயேசு எத்தகைய விருந்துண்டார்?

### *1. அநீதிக்கு எதிரான ஆன்மீக விருந்து* : (லூக். 5:30)

“..... வரித்தண்டுபவர்களும், மற்றவர்களும்........அவர்களோடே கூடப் பந்தியில் அமர்ந்தார்கள்.”

ஆன்மீகம் என்பது கடவுளின் விருப்பத்தை பார்வையில் அறியமுடியாதபடி மனித ஆவியோடு தொடர்புபடுத்தி கடவுளின் கருவியாய் உலகில் பயன்படுவதே. சடங்குகளும், ஆன்மீகமும் கிரியைகளில் தெளிவோடு அறியப்படும். சடங்குகளுக்கு முன் நியமன வரைமுறைகளும், சட்டங்களும் செயல்படுத்தும் விதிமுறைகளும் உண்டு. ஆன்மீகம் அறிவோடும், மனசாட்சியின் படியும் (ரோமர் 2:14,15) நியாயப்பிரமாணத்துக்கு நிகரான விதிகளை வகுத்து சமூக சூழலில் செயல்படுவது. சடங்குகள் சமத்துவத்தை நிலைகுலைக்கும், ஆன்மீக உறவினை நிலைப்படுத்தும்.

இரண்டு பாரம்பரியங்கள் இவ்விருந்தில் அறியப்படுகிறது. யூதர்களின் மேசை விருந்து (Table Fellowship), கிரேக்கர்களுக்கு கருத்தரங்கு மேசை (Greco- Roman Symposium). யூதர்களின் விருந்தில் ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் இடம் இல்லை (வசனம் 30). இரண்டு பாரம்பரியங்களும் பெண்களுக்கு இடம் இல்லை, அப்படியே இருந்தாலும் அது இராவிருந்தில் ஆடல் பாடலுக்காய் பாவிகளே பங்குபெறுவர் (லூக். 7:37-50). யூதர்கள் ஆலயத்தில் குரு கடைபிடிக்கும் தூய்மை சடங்கின்படி இல்லங்களும், குறிப்பாக உணவு அருந்தும் மேசைகளிலும் இருக்க வேண்டும் என்பதில் அதிக கவனம் செலுத்துவர். இச்சடங்குகள் மனிதநேயத்தை இழக்கச் செய்தது. மனிதன் மனிதனாய் மதிக்கப்படாததே பயங்கர அநீதி. எரேமியா 22:14, லூக். 16:11, யோவா. 7:18, 1கொரி. 6:1, யாக். 3:6,1, யோவா. 5:17 ஆகிய வசனங்கள் அநீதியை அதிகம் விவரிக்கின்றன. உலக பொருள்களும், உலகீக மனிதரும் அநீதியாயினும், அவரோடுள்ள உறவில் உண்மைத்தன்மை காணப்படுதல் அவசியம் (லூக். 16:11). லேவி அமைத்திருந்த விருந்து அவர் மனந்திரும்புதலை வெளிப்படுத்தியது (லூக். 5:32). கிறிஸ்து சகல இனத்தாருக்கும் உரியவர் என்பதை உறுதி செய்தது. அதுவே கிறிஸ்து விரும்பிய ஆன்மீக விருந்து.

### *2. அழிந்து போவோரை அரவணைக்கும் விருந்து* : (லூக். 5:32)

“.....நேர்மையானவர்களையல்ல, பாவிகளையே மனம்மாற அழைக்க வந்தேன்.”

‘பாவிகள்’ என்னும் பதம் புற இனத்தாரையும், ஆயக்காரரையும் அவர்களோடு தொடர்பில் இருப்போரையும் குறிக்க யூதர்கள் பயன்படுத்தியதே. யூதர்களின் வார்த்தையின்படியே இயேசு அவர்களை ‘நோயுற்றவர்கள்’ எனவும் வைத்தியர்களின் உதவி வேண்டுவோர் எனவும் உருவகப்படுத்துகிள்றார். ஏழைகளையும், நோயுற்றவரையும் பல வேளைகளில் நம் சமூகம் கூட ‘பாவிகள்’ என அடையாளம் காண்பிப்பதுண்டு. நோய் குறைவுபடுதலின் அடையாளம். சாதிய வன்முறையின் நிமித்தம் கருணையில்லா வன்முறையால் வருந்துவோர், குறைவான வயதில் மாள்வோர், பேரழிவுகளை சந்திப்போர், தோல்வியால் தங்களை தாங்களே மாய்த்துக் கொள்வோர், அழிவின் பாதையில் பயணிப்போர்.

இயேசு அவர்களைத் தேடிப்போய் இடையே இருந்த கலாச்சார வேறுபாடுகள், சட்டத்திட்ட பிரிவினைகள் போன்ற தடைச்சுவர்கள் கடந்துபோய் கொடுத்த விடுதலை, பழைய ஏற்பாட்டில் இஸ்ராயேவருக்கு அந்நிய தேசத்தில் போய் ஆண்டவர் கொடுத்த தெய்வீக விடுதலையோடு தொடர்புபடுகின்றது. எசேக்கியேல் 34-ம் அதிகாரத்தில் இஸ்ராயேலின் தலைமைத்துவம் கேள்வி கேட்கப்பட்டதைப் போன்றே, இயேசுவும் சுற்றியிருந்த பரிசேயர், சதுசேயர் நலிந்தவற்றை திடப்படுத்தாமல், பிணியுற்றவரை குணமாக்காமல், காயப்பட்டவரின் காயம் கட்டாமல் இருக்கிறார்கள் என்பதை மறைமுகமாக சுட்டிக் காண்பிக்கிறார். பாவி பாவியாகவே அழியட்டும் என்னும் கொள்கையினை எதிர்க்கிறார்

கிறிஸ்து காண்பித்த ஆதரவு பாவியை சீடனாக்கும். பாவியோடு புதிய உறவை ஏற்படுத்தும். லூக். 7:36-47-ல் பாவி எனக் கருதப்பட்ட பெண்ணிற்கு மன்னிப்பு கொடுத்து, தம் ஆதரவை தெரிவித்து தம் அரசில் சேர்த்துக் கொள்கிறார். இயேசு கொடுத்த அழைப்பை மகிழ்வோடு ஏற்ற லேவி, தன் விருந்தில் பங்கு பெற அழைத்து தன் உடமைகளை தன்னோடு பங்குபெற்றவருக்கு கொடுத்ததும், கிறிஸ்து தன் சிலுவை மரணத்தினூடே சகல மக்களினத்தவர்க்கும் கொடுத்த விருந்தில் தன்னையே கொடுத்ததும் அழிவின் நிலையில் இருப்போரை விடுவிக்கவே.

நம் பணிவிடைகள் நம் சபை சார்ந்தே வடிவமைக்கப்படுகிறது. வீதியில் காணும் அநீதிகள் பார்க்க கண்களைத் திறப்போம். அழிவை நோக்கி பயணிப்போருக்கு ஆதரவு கொடுப்போம். அதுவே லேவி அமைத்த விருந்தில், விருந்தினராய் கிறிஸ்து நமக்குத் தந்த விடுதலை, அழைப்பு.

திரு. I. **ஜாண் ரோஜின் ஜேக்கப்**

22-03-2019



# விருந்தளிக்கும் கிறிஸ்து

யோவா. 6:1-15

**"இயேசு அப்பங்களை எடுத்து கடவுளுக்கு நன்றி செலுத்தி அமர்ந்திருந்தோருக்குக் கொடுத்தார். அவ்வாறே மீன்களையும் பகிர்ந்தளித்தார். அவர்களுக்கு வேண்டிய மட்டும் கிடைத்தது."** (யோவா. 6:11)

இயேசு கிறிஸ்துவின் அற்புதங்கள் வரலாற்றோடும், மனித ஆத்துமாவோடும் அதிக தொடர்புடையவை. 5 அப்பங்கள், 2 மீன்களை கொண்டு 5000 பேருக்கு உணவளித்த செய்தி நான்கு நற்செய்தி நூல்களிலும் இடம் பெறுகிறது (மத்தேயு: 14:13-21, மாற்: 6:30-44, லூக்கா: 9:10-17, யோவா, 6:1-15). 1925 ம் கத்தோலிக்க திருச்சபைகளின் போப்பாக இருந்த போப் பையஸ் XI, மதச்சார்பின்மை (Secularism) உயரிய நோக்கமாய் கொள்ளப்பட்ட காலகட்டத்தில், அனைத்து படைப்புகள் மேலும், மனிதர்ளின் வரலாற்றின் மேலுமுள்ள கிறிஸ்துவின் இறையாண்மையை (Sovereignitny of Jesus) முதன்மைபடுத்தவேண்டும் என முயற்ச்சித்து நாம் அனுசரிக்கும் வருகையின் ஞாயிறுக்கு முந்தைய ஞாயிற்றுக்கிழமையை 'கிறிஸ்துவின் விருந்தின் ஞாயிறு' (Feast of the Christ the King) என்னும் அனுசரணையை நிறுவினார். 'இயேசுவே ஆண்டவர், உலகத்தின் ராஜா' நம்பிக்கையினை விவிலயத்தின் அடிப்படையில் மக்கள் கடைபிடிக்க வேண்டும் என்பதே. மத்தேயு 28:18ல் 'விண்ணுலகிலும் மண்ணுலகிலும் அனைத்து அதிகாரமும் எனக்கு அருளப்படுகிறது' என்கிறார் இயேசு. நிசேயா விசுவாசபிரமாணத்தின் மூலம் நாமும் அறிக்கையிடுகிறோம், கிறிஸ்து '.....பிதாவோடே ஒரே தன்மையுடையவர் (Consubstitual), சகலத்தையும் உண்டாக்கினவர், ......'.5ம் நூற்றாண்டில் வாழ்ந்த திருச்சபைத் தந்தை சிறில், 'கடவுளின் வார்த்தையும் கடவுளோடு ஒரே தன்மையுடையது, அனைத்து படைப்புகளின் மேல் அதிகாரம் கொண்டது.' மேற்கூறிய வசனங்களும், விவாதங்களும் விருந்தளிக்கும் கிறிஸ்துவை கொண்டாட ஏதுவாயிருக்கிறது.

லூக்கா 9:11 ல் இயேசுவின் இறையரசினை குறித்த போதனையும், 5 வாற்கோதுமை அப்பங்களையும் 2 மீன்களையும் கொண்டு 5000 ஆண்களுக்கு மேலாக உணவளித்ததும் அவரின் தெய்வத்தன்மையினை மக்கள் அறிய வைத்தது. கூடிவந்திருந்தவர்கள் தாங்கள் எதிர்பார்த்த இறைவாக்கினர் இவர்தான், என்றும், அவரை அரசனாக்க வேண்டும் தீர்மானம் பண்ணிக்கொண்டார்கள் (யோவான் 6:14,15). இறையரசின் ராஜாவாய் கிறிஸ்து அறியப்படுவதற்கு நியாயப்பிரமாணமும், வரலாறும்

வழிவகுக்கிறது கிறிஸ்துவின் விருந்தை இரண்டு தரிசனங்களை விரிவாக தியானிப்போம்.

***1. தெய்வ தரிசனம்*** (Vision of God) : யோவா. 6:7,9,12

இயேசு தேவனுக்கு சமமானவர் என்பதை பல அடையாளங்களினூடே வெளிப்படுத்தினார். குறிப்பாக பற்றாக்குறையின் போது முதல் அடையாளம், தண்ணீரை இரசமாக்குதல் (யோவா. 2:1-11), இரண்டாம் அடையாளம், அரச அலுவலரின் மகனைக் குணமாக்குதல் (யோவா. 4:46-54), மூன்றாம் அடையாளம், பெதஸ்தா குளத்தில் கரையில் உடல் நலமற்றவருக்கு நலம் கொடுத்தல் (யோவா. 5:1-18), நான்காம் அடையாளம், 5000 ஆண்களுக்கு உணவளித்தல் (யோவா. 6:1-15), ஐந்தாம் அடையாளம், நீர் மேல் நடத்தல் (யோவா. 6:16-21), ஆறாம் அடையாளம், பிறவியிலேயை பார்வையற்றவரைப் பார்வை பெறச் செய்தல் (யோவா. 9:1-41), ஏழாம் அடையாளம், லாசருவை உயிர்பெறச் செய்தல் (யோவா. 11:1-57).

உணவு, உடை, உறைவிடம் வாழ்விற்கான அடிப்படை இவற்றில் ஏற்படும் குறைபாடுகளை சிலர் சாபம் என்பர், வேறுசிலர் தேவ கோபம் என்பர். இயேசு உணர்த்துகிறார் இது தேவ தரிசனத்திற்கான அடித்தளம். மத். 4: 3,4 மற்றும் லூக்கா 4:3,4 வசனங்களில் மனிதன் அப்பத்தால் மட்டும் அல்ல, தேவனுடைய வார்த்தையால் திருப்தியடைவான் என்ற கிறிஸ்து, இப்போது தம் சீஷர்களிடம் கூடிவந்திருக்கும் திரள் கூட்டத்திற்கு போதனையைத் தொடர்ந்து உணவளிக்க கூறுகிறார். உணவருந்துதல் பழைய ஏற்பாட்டில் தேவனுடைய தரிசனமாய் கருதப்பட்டது (வி.ப. 24:11, இ.ச. 12:7). உணவு தயாரிக்க தானியங்களில் தசம பாகம் செலுத்தவேண்டும் என்பதும் கடவுளுடைய தரிசனம் (லேவி. 27:30, இ.ச. 26:12). இஸ்ராயேலரின் வனாந்திரப் பயணத்தில் வானத்திலிருந்து மழைபோல் மன்னா பொழிந்ததும் கடவுளின் தரிசனமே (திபா. 78:24). தெய்வ தரிசனம் என்பது கடவுளின் திட்டத்தை அறிவிக்கும் திருக்காட்சி அல்லது அடையாளம் (God’s Vision & Wish).

சீடர்களோடு கூடிய திரள் கூட்டத்திற்கு கொடுக்க உணவில்லை. வாங்க பணமில்லை. ஆகையால் சீடர்கள் கூட்டத்திற்கு உணவளிக்க விரும்பவில்லை. இயேசு கரிசனையோடு ஜனங்களைப் பார்க்கிறார் (யோவா. 6:5). இங்கிருந்து ஞானியருடைய ஞானத்திற்கும், தேவ தரிசனத்திற்கும் போராட்டம் தொடங்குகிறது. ஞானமே ஆன்மீகப் புத்துணர்ச்சியின் அடையாளம். இயேசு கற்றுத் தந்த ஞானமே உண்மையான ஞானம். பவுல் கூறும் போது 1 கொரி. 1:24,-ல் கிறிஸ்து

கடவுளின் வல்லமையும் ஞானமுமாயிருக்கிறார். கிறிஸ்துவின் வருகைக்கு இரண்டு விதமான போதனைகள் இருந்து வந்தது. ஒன்று உலகம் சார்ந்த ஞானிகள் அல்லது தத்துவ மேதைகளுடைய போதனைகள் இரண்டு (Greek Philosophers), இரண்டு நியாயப்பிரமாணப் போதனைகள் பிலிப்பு முதல் போதனையின் பிரகாரம் மனித ஞானத்தை கொண்டு தன் அனுபவம் வளர்த்திய சிந்தனையில் இயேசுவின் விருப்பத்தை அணுகுகிறார். 200 பணத்திற்கு அப்பம் இவர்களுக்கு போதாதே. அந்திரேயாவோ கடவுளின் தரிசனத்தை அறிந்து செயல்படுகிறான். 2 அர. 4:42-ல் எலிசா தீர்க்கதரிசி 20 வாற்கோதுமை அப்பத்தைக் கொண்டு 100 ஆண்களை போஷித்ததை நினைவுபடுத்தி கிறிஸ்துவை விருந்தளிக்க சிறுவனின் குறைவான உணவினை இயேசுவிடம் கொண்டு வருகிறார். 2 அர. 4:42 ல் எலிசா தீர்க்கத்தரிசி 20 வாற்கோதுமை அப்பத்தைக் கொண்டு 100 ஆண்களை போஷித்ததை நினைவுப்படுத்தி கிறிஸ்துவின் விருந்தளிக்க சிறுவனின் குறைவான உணவினை இயேசுவிடம் கொண்டு வருகிறார்.

எரே. 9:23,24.ல் ஞானி தன் ஞானத்தைக் கறித்துப் பெருமைப் பாராட்ட வேண்டாம். வலியவர் தம் வலிமையைக் குறித்துப் பெருமை பாராட்ட வேண்டாம், செல்வர் தம் செல்வத்தை குறித்து மேன்மைபாராட்ட வேண்டாம்.

பெருமை பாராட்ட விரும்புவோர், நானே ஆண்டவர் என்பதை அறிந்து புரிர்நு கொள்வதிலும், பேரன்போடு, நீதியோடும் நேரமையோடும் உலகில் நான் செயலாற்றுகிறேன் என்பதிலும் பெருமை பாராட்டுவாராக.

பெயரிடப்படாத சிறுவன், கானாவூர் திருமண வீட்டில் அறியப்படாத விதத்தில் ஆயத்தமாக்கப்பட்ட திராட்சை ரசம், தேவ தரிசனத்திற்காய் பயன்பட்ட பாத்திரங்கள். சீர்த்திருத்த தந்தை மார்ட்டின் லூத்தர், 5 அப்பம் கொடுத்த சிறுவனை ‘கிறிஸ்துவின் காலத்து மோசே’ எனக் கூறுகிறார். 5 ஆகமுமம், 5 அப்பங்களும் தேவதரிசனத்தால் முழுமையடைந்து மக்களுக்கு பலன்கொடுக்கும். மத். 5:17ல் நியாயப்பிரமாணத்தை அழிக்க அல்ல, நிறைவேற்றவே வந்தேன் என்றார் இயேசு கிறிஸ்து.

தன்னில் இருக்கும் குறைவை நியாயப்படுத்தி திருப்பணியில் பின்மாறுவதோ, தன்னில் இருக்கும் நிறைவை பெருமைப்படுத்தி நானே எனும் ஆணவம் கொள்வதும் அல்ல தேவதரிசனம். தன்னை உள்ளப்படி தியாகமாக்கி தன் சபையின் விசுவாசிகளை, சபையை தேடிவருவோரை ஆன்மிகத்திலும், சரீரத்திலும் திருப்திபடுத்துவதே தேவதரிசனம்.

**2. *நித்திய தரிசனம்* (** Eternal Vision **) :** யோவா.6:27

பெற்றோர் பிள்ளைகளின் நலனுக்கானவற்றை திட்டமிடுபோது ஒரு நாள் திருப்திக்காய் முயலுவதில்லை, அவர்கள் வாழ்நாள் முழுவதும் நலனோடு வாழ வேண்டும் எனும் நோக்கோடு உழைப்பர். இயேசு கிறிஸ்து அளிக்கும் விருந்து அழியாத தரிசனத்தை வெளிப்படுத்துகிறது. யோவா. 6:26,27ல் தான் செய்த அற்புதத்தின் நோக்கத்தை இயேசு விவரிக்கின்றார். பகிர்ந்தளிக்கப்பட்டது நிலைவாழ்வு தரும் உணவே, அதைக் கொடுப்பவர் இயேசு கிறிஸ்து. இயேசு கிறிஸ்து தரும் விருந்தே நிலையான விருந்து.

இஸ்ரயேலர் வனாந்திர பயணத்தின்போது ஆன்மீக போஜனத்தையும் ஆன்மீக பானத்தையும் உட்கொண்டார்கள், அதை கொடுத்தவர் கன்மலையாகிய கிறிஸ்து என்பது பவுலின் வாதம் (1கொரி. 10:3,4). இவ்விருந்தை இச்சித்தவர்கள், சடங்காக்கி கடமைக்காய் வழிபட்டவர்கள், வேசித்தனம் செய்தவர்கள், கடவுளை சோதித்தவர்கள், முறு முறுத்தவர்கள் நித்திய தரிசனம் இல்லாததால் மடிந்துபோனார்கள். மத்தேயு. 22:1-12 வசனங்களில் குமாரன் இயேசு கிறிஸ்துவின் கல்யாண விருந்து குறித்த உவமையினை இயேசு உரைக்கிறார். கனம் பெற்றவர்கள், தலைவர்கள் அழைக்கப்பட்டாலும் அபாத்திரமாய் போக, நித்திய தரிசனம் வெளிப்படுகிறது, வழிகளில் காணப்படுகிறவர்கள் விருந்துக்கு பாத்திரரானார்கள். அவர்கள் பரிசுத்தவான்களுடைய நீதியை ஆடையாய் அணிந்திருந்தார்கள் (வெளி. 19.8). இந்த வஸ்திரம் அணியாதவர் புறந்தள்ளப்பட்டார். (மத். 22.12)

திருச்சபையே மணவாட்டி. விருந்து அருட்பணி. பங்குபெற்றவர்கள் ஏழைகள், ஊனர், சப்பாணிகளுக்கு விருந்து பண்ணினவர்கள்(லூக். 14.13,14), கிறிஸ்துவின் விருந்தில் பங்காளிகள். அத்தகையோர் தவறும் பட்சத்தில் ஏழைகள், ஊனர், சப்பாணிகள் கிறிஸ்துவின் விருந்தில் பங்கேற்பார்கள் (மத். 22.9), அலர்கள் பருகும் ஜீவத்தண்ணீர் மீண்டும் தாகத்தை வருவிக்காது (யோவான். 4.14). ஆனால் தகுதியானவர்கள் என சான்றழிக்கப்பட்டவர்களின் நிலைமை பரிதாபத்திற்குரியதாகிவிடும்.

கிறிஸ்துவின் விருந்து அழைக்கப்பட்டவனிடமிருந்து அல்ல, பசித்தவனிலிருந்து ஆரம்பிக்கும். சட்டத்திற்குட்ப்பட்டவனிடமிருந்து அல்ல, புறம்பே உட்பிரவேசிக்க, இயலாதவனிடமிருந்து. தன் இறுதி விருந்தில் இயேசு தன்னையே விருந்தின் உணவாக்கினார் (மத். 26:26-28). இத்தியாகத் திருவிருந்தே தெய்வீக தரிசனம், நித்திய தரிசனம்.

திரு. I. **ஜாண் ரோஜின் ஜேக்கப்**

29-03-2019



# வெறுமையாக்கும் கிறிஸ்து

திருமறைப்பாடம். பிலி. 2:5-11

**"ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வாழ்வை ஏற்று மனிதருக்கு ஒப்பானார்."** (பிலி. 2:7)

பவுலார் பிலிப்பியத் திருச்சபைக்கு தாழ்மையுடனும் ஒற்றுமையுடனும் செயல்படவேண்டுமென்பதைக் கருத்தில் கொண்டு, தாழ்மைக்கும் ஒற்றுமைக்கும் முன் மாதிரியாக கிறிஸ்துவை அடையாளப்படுத்தினார். கடவுளின் திருக்குமாரனாகிய இயேசுக்கிறிஸ்து, தங்களுக்கு இணையாக வாழ்தவர் மானுட மீட்பிற்காக தம்மை வெறுமையாக்கி, அடிமையின் வாழ்வினைத் தன்னிலே ஏற்று சிலுவைச் சாவை ஏற்கும் அளவிற்கு கீழ்ப்படிந்து தம்மையேத் தாழ்த்திக் கொண்டார் (பிலி. 2:8). கிறிஸ்துவின் தாழ்மைக்கும், கீழ்படிதலுக்கும்அடிப்படை அவரது வெறுமையாகுதலாகும். வெறுமையாகுதல் கிறிஸ்துவின் இயலாமையினால் அல்ல மாறாக அவரது மீட்பின் செயல்திட்டம், சிலுவையின் பரிணாமம் என்பதாகும். கிறிஸ்துவின் வெறுமையாகுதல் இன்று நமக்கு தரும் செய்தி என்ன?

## *1. இருப்பு இணை நிலையினை இழந்து வெறுமையாக்கினார் :* (பிலி. 2:6)

கிறிஸ்துவின் தன்மையினை விளக்குகின்ற பவுல் கடவுள் வாழ்வில் விளக்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையினை தொடர்ந்து தமது வாழ்வில் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமென்று விரும்பவில்லை. மாறாக மானிட மீட்புக்காக தனது இருப்பு நிலையினை இழந்து தம்மை வெறுமையாக்கினார். யோவான் 1:14 இயேசுவின் பிறப்பினைக் குறித்துக் குறிப்பிடும் போது வாக்கு மனிதரானார்; நம்மிடையே குடி கொண்டார் எனக் குறிப்பிடுகின்றார். வார்த்தையான ஆண்டவர் தனது இருப்பு நிலையினை இழந்து மானிடரானார். மனிதருக்கும் கடவுளுக்கும் இடையேயிருந்த இடைவெளியினை நீக்கி மனிதரிடையே குடி கொள்வதற்காக கடவுள் மனிதரானார். வாக்கு மனிதரானன நிகழ்வில் கிறிஸ்துவின் வெறுமையாக்குதலை புரிந்து கொள்ள முடிகிறது. கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையினைத் தாமாகவே வெறுமையாக்கினபடியினால் மீட்பின் திட்டம் கிறிஸ்துவில் நிறைவேறியது.

## *2. அடிமை நிலையினை ஏற்று வெறுமையாக்கினார் :*

(பிலி. 2:7)

தனது இயல்பான இருப்பு நிலையினை இழந்து தன்னை வெறுமையாக்கிய கிறிஸ்து தன்னை அடிமை நிலைக்கு ஒப்புக்கொடுத்து மனிதரானார். அடிமைப் பணியினை அன்றைய யூத சமூகம் ஏற்றுக் கொள்ளாத நிலையில் தன்னை அடிமையாக்கினார். அடிமைப்பணியினை இழிவாக கருதின காலத்தில் அடிமைப்பணிதான் இறைப்பணி என்பதை தனது வாழ்வில் செயல்வடிவமாக்கினார். மானிட மகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, மாறாக தொண்டு ஆற்றுவதற்கும் எல்லாருடைய மீட்புக்காக தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார் (மாற். 10:45) எனத் தனது அடிமைத் திருப்பணித்திட்டத்தினை குறிப்பிடுகிறார். தொண்டு ஆற்றுவது அடிமையின் பணியாகும். இப்பணியினைச் செய்வதற்கு வெறுமையாக்குதல் தேவையானது. மானிட மீட்புக்காக அடிமை நிலையினை ஏற்றுக் கொண்ட கிறிஸ்து ஓர் அடிமையை போல தனது சீடர்களின் பாதங்களைக் கழுவி தன்னை மாதிரியாக்கி சீடர்களும் அதனை நிறைவேற்றிட அழைப்புக் கொடுத்தார் (யோவா. 13:12-16). அதோடு ஒரு அடிமையினைப் போல பழிக்கப்பட்டபோது பதிலுக்குப் பழிக்கவில்லை; துன்புறுத்தப்பட்ட போது அச்சுறுத்தவில்லை; நியாயமான தீர்ப்பு வழங்குவோரிடம் தன்னை ஒப்படைத்தார் (1 பேதுரு 2:23).

## *3. சிலுவைச் சாவை ஏற்று வெறுமையாக்கினார் :*

(பிலி. 2:8)

பணிவிடை செய்வதற்காக தன்னை வெறுமையாக்கின கிறிஸ்து அதின் முழுமைக்காக சிலுவைச் சாவை ஏற்கும் அளவிற்கு தம்மை வெறுமையாக்கினார். சிலுவைச் சாவிற்கு தன்னை வெறுமையாக்குதலில் கிறிஸ்துவின் கீழ்படிதல், தாழ்த்துதல் முக்கியத்துவம் பெறுகின்றது. சிலுவை மரணம் அருவருப்பானதாகவும் இழிவானதாகவும் மக்கள் நம்பின காலத்தில் அம்மக்களின் மீட்பிற்காக சிலுவைச் சாவினை ஏற்றுக் கொண்டார். சிலுவைச் சாவை ஏற்கும் அளவிற்கு கிறிஸ்துவில் இருந்த தாழ்மை, இறைத் திட்டத்திற்குக் கீழ்ப்படியும் நிலை மீட்பிற்கு அடித்தளமானது. கொடூரமான சாவாகிய சிலுவைச்சாவு வேதனையாக இருந்தாலும் தம்மை வெறுமையாக்கினபடியால் அது அவருக்கு சவலானது.

தவக்காலங்களில் கிறிஸ்துவில் பாடுமரணத்தை தியானிக்கின்ற, சிலுவைப்பாடுகளில் கிறிஸ்துவை பின் தொடர விரும்பும் நாம் நமது சுயத்தை இழந்து சிலுவையினை வாழ்வின் சான்றாக்கி வாழ்வோம்.

அருள்திரு. A. **மகேர் ஷால் அஸ்பாஸ்**

05-04-2019



# பணியாளரான கிறிஸ்து

லூக்கா. 22:24-30

**"நான் உங்கள் நடுவே பணிவிடை புரிவனாக இருக்கின்றேன்"** லூக்கா. 22:27

பணிளாளர் அல்லது [Servant-(doulos)] எனும் வார்த்தைளின் குழுமம் பணிவிடை [Service-(douleia)] அல்லது வழிபாடு[to serve or worship- (doulenoo)]. 1ம் நூற்றாண்டில் 'அடிமை'அல்லது 'பணியாளன்' என்னும் வார்த்தை ரோம சாம்ராஜ்யத்திற்கு அடிமைபட்டிருந்ததை குறிக்கும் சொல்லாக பயன்பட்டது. இயேசு பல வேளைகளில் தங்கள் எஜமானின் நலனுக்காய் உழைக்கும் வீட்டு வேலையாட்களைக் குறித்தும் குறிப்பிட்டிருக்கின்றார் (மத்.13.27,28, 18. 23-32, 21. 34-36, 22. 3-10......).

கிரேக்க தத்துவ மேதைகளிடத்தில் group என்னும் பிரிவினர் காணப்பட்டனர். பிறர் விருப்பத்திற்க்கு உடன்படுவது, விட்டுக்கொடுப்பது, தங்கள் சுய சுதந்தரத்தை இழக்கும் செயல் என்றும், பிறருக்கு அடிமைப்பட்டிருக்கும் நிலை என்றும் போதித்து வந்தனர். 'ஊரோடு ஒத்து வாழ்' எனும் தமிழ் பழ மொழி இவர்களின் செயல்பாடுகளுக்கு எதிரானது. இதனால் பல இழப்புகளையும் உரிமைகளையும் கிரேக்கர்கள் தங்கள் வரலாற்றில் இழக்க நேரிட்டது என்கின்றனர் அறிஞர்கள்.

யூதர்கள் கடவுளின் ஆளுகையை தங்களுக்கு சாதகமாய் வியயாக்கியானம் பண்ணி புறஜாதிகளை தாழ்வாக கருதினர். பாபிலோன், அசீரீயா, பெர்சியா ராஜ்யங்களின் அரச ஆளுகையில் காலங்களை கடத்தியதால், அவர்களின் கொடுங்கோல் ஆட்சி முறையை பின் பற்றி புறஜாதியாரை குறைவாக கருதினர். இச்சூழலில் கிறிஸ்து தன்னை அடிமை என்று அறிமுகப்படுத்தினார். பொதுவாக கடவுளின் பணியாளர்கள் அவரின் அடிமைகள் எனக் கருதப்பட்டவர்கள். ஆனால் கிறிஸ்து தன்னை பணிவிடை கொள்ள அல்ல, செய்யவே வந்திருக்கிறேன் (மத் 20.28, மாற் 10.45) என்றது கிறிஸ்துவின் உண்மைத்தன்மையை வெளிப்படுத்துகின்றது.'சிறைப்பட்டோரை விடுவிக்க வந்தேன்'(லூக். 4.8) என்றவர் மீண்டும் சீடர்களுக்கு அடிமையாகிறேன் என்றது வியப்பை தருகின்றது. ஆயினும் தெளிவாய் உணரக்கூடிய சத்தியத்தை உரக்ககூறுகிறார் கிறிஸ்து. தனி நபரில் அடிமைப்பட்டோரை மீட்கவும், சமூக முன்னேற்றத்தில் பணியாளராய் இருக்கவும் வேண்டும் என்பதே நம்மைக்குறித்த கிறிஸ்துவின் விருப்பம்.

### *1. தொலைந்ததை மீட்கும் பணியாளன் (ரோமர் 15.8)*

...இயேசு கிறிஸ்து விருத்தசேதனமுள்ளவர்களும் ஊழியக்காரரானாரென்றும், அப்போஸ்தலருடைய எழுத்துக்களில் இயேசுவின் பணிவிடைகள் தொலைந்து போன இஸ்ரவேலருக்கானது என்பது அதிகமாய் அறிவுறுத்தப்படுகின்றது. மத்தேயு 15:24 ல் இஸ்ரயேல் குலத்தாருள் காணாமற்போன ஆடுகளாய் இருப்போரிடமே நான் அனுப்பப்பட்டேன். ரோமர் 15:8 பவுலும் அதே கருத்தை வலியுறுத்துகின்றார். கிறிஸ்து யூதருக்குள் மனிதனாய் பிறந்ததால் தனர்டு அடையாளமான தன் குடும்பத்தாரை அல்லது தன் இனத்தவரான இஸ்ரவேலரை மீட்க என்பது முக்கியப்படுத்தப்பட்டுள்ளது. லூக்கா 19:10 ல் இழந்து போனதைத் தேடி மீட்கவே மானிடமகன் வந்துள்ளார்.

1. சாமுவேல் 9ம் அதிகாரத்தில் தன் கழுதைகளைத் தேடி போன சவுலின் பணிவிடை சிறந்த ஆதாரம். வீட்டு வேலைக்காய் பயன்படுத்தப்பட்ட கழுதை, தொலைந்த போது வீட்டு எஜமான் வேலையாளைப் போல தேடி அலைகின்றான். தொலைந்த ஆட்டை தேடிய மேய்ப்பன், தொலைந்த வெள்ளிக் காசை தேடிய கன்னிகை, தொலைவுக்கு சென்ற தன் மகனை எதிர்பார்த்த தந்தை போன்ற நிகழ்வுகள் தன் அதிகாரம், அந்தஸ்தை விட்டு இறங்கிய பணியாளனுக்குரிய பண்பை வெளிப்படுத்துகின்றது.

யோவான் 13.4-5 வசனங்களில் இயேசு சீடர்களின் கால்களை கழுவின நிகழ்வு கூறப்பட்டுள்ளது. கால்களை கழுவுதல் சுத்திகரிப்பின் சடங்கு. வீடடை விட்டு வெளியே சென்றவர் மீண்டும் வீடடையும் போதும், அந்நியர் இஸ்ராயேலரின் வீட்டில் வரும்போது தங்களுக்கு தாங்களே சுத்திகரிக்கும் முறையே கால்களை கழுவுதல். இதேபணிவிடையை ஆண்டவர் செய்யும் போது'மீண்டும் சேர்க்கப்படுத்ல்'என்று பொருள்படும். எசே. 38:16-25 இஸ்ரயேலர் வேற்றினத்தாருக்கு முன்பாக கடவுளின் பெயரை தீட்டுபடுத்தியதால், வேற்றினத்தாரிடைய சிதறடிக்கப்பட்டார்கள். எசே. 36:25,29 வசனங்களில் சுத்தமான தண்ணீரினால் இஸ்ரவேலரை சுத்திகரிக்கும் ஆண்டவரின் பணி. சீடர்களை தம் ராஜ்யத்தில் சேர்த்துக்கொண்டதை உணர்தத அவர்களின் கால்களை இயேசு கழுவினார். (பிலி. 2.7ல்...... தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதனருக்கு ஒப்பானார்.) தொலைந்ததை தேட எஜமான் பணியாளனானார்.

### *2. எஜமானின் பழுவை சுமக்கும் பணியாளன் :* (ஏசாயா 53.12)

..... பலரின் பாவத்தை சுமந்தார், கொடியோருக்காய் பரிந்து பேசினார். தேவ குமாரன் மனித குமாரனானார் என்பதே, எஜமான் எடுத்த

அடிமைத்தன அவதாரம். செய்த தவறுக்காய் பலி செலுத்தி கடவுளை பிரியப்படுத்துவது, வெறுமேனே மன்னிப்பிற்க்காய் அல்ல, மாறாக தவறை குறித்த உணர்வும், திருந்தி வாழும் அர்பணம் பெருக. நியாயப்பிரமாணம் நியாயத்தீர்ப்பு செய்வதற்கு அல்ல, நியாயப்பிரமாணத்தை கொடுத்தவருக்கு முன் குற்றமற்றவராயிருக்க. பலியில் எஜமானனின் பாவ பழுவை மிருகம் ஏற்கிறது (லேவி. 3.2,8,13,.....). தொ. நூல் 6.6 ல், மண்ணுலகில் மனிதரை உலுவாக்கியதற்க்காக ஆண்டவர் மனம் வருந்தினார். தன் எஜமானின் பழுவை சுமக்கும் பணியாளனாய் வெளிப்பட கிறிஸ்து சுமந்த தியாகங்களே ஏசாயா 53ம் அதிகாரம்.

நாமும் எஜமானின் பணியாளர்களாயிருக்கும்போது, அவரின் பாரத்தை சுமப்பவர்களாய் இருக்க அழைப்பை பெறுகிறோம். எஜமான் தன் பணியாளிடம் அணுகும் முறையும், பணியாளர் எஜமானுக்கு உண்மையாய் இருக்கும் முறைகளை மத்தேயு 24. 45-51 வரை கொடுக்கப்பட்டுள்ள வசனங்களில் இயேசு உணர்த்துகிறார். தன் வேலையாட்களை பராமரிக்கும் எஜமான், முழுமையாய் அவர்களோடு இருக்க இயலாத தருணத்தில் அவர்களை பராமரிக்க நியமிக்கும் பணியாளரின் உண்மைத்தன்மையும், பகட்டுத்தன்மையையும் இயேசு விவரிக்கின்றார்.

காணாமல் போன நம் உடன் நண்பர்களை அடிமை பணியின் அளவிலான உழைப்பைக் கொடுத்து மீட்டுக்கொள்வதும், நம் எஜமானனாகிய கிறிஸ்துவின் பழுவை சுமக்க ஒப்புக்கொடுப்பதே, பணியாளரான கிறிஸ்து கற்றுக்கொடுக்கும் கிறிஸ்தவ வாழ்வு.

திரு. I. **ஜாண் ரோஜின் ஜேக்கப்**

05-04-2019

தவக்காலம் ஆறாம் வெள்ளி

# கையளிக்கும் கிறிஸ்து

திருமறைப்பாடம். லூக்கா 22:39-46

**"...ஆனாலும் என் விருப்பப்படி அல்ல. உம் விருப்பப்படியே நிகழட்டும்."** (லூக். 22:42 ஆ)

இயேசு தன் சீடர்களுக்கு கற்றுக் கொடுத்த இறைவேண்டலில் '......உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேற்றுவது போல மண்ணுலகில் நிறைவேறுக'. சராசரி கிறிஸ்தவ வாழ்வின் அனுபவங்கள் 'நடப்பதெல்லாம் நன்மைக்கே'. ஏனெனில் நல்லதோ, கெட்டதோ, நடப்பது ஆண்டவரின் திட்டமே என்னும் விசுவாச உணர்வு. உடனடி பிரதிபலன் குறைவாயினும் வரும் ஆன்மீகமும் அதுவே, நான் பெற்றுக் கொண்டதும், அவர் எடுத்துக்கொண்டதும் கடவுளின் அறிவுக்குட்பட்டே. பொதுவாக, நலிந்தோர் நலம் அனுபவிக்கும் போது, எல்லாம் கடவுளின் செயல் என போற்றிக் கொள்ளலும், நலத்தோடு வாழ்வோர் நலிவுறும் போது, ஏதோ வாழ்கிறோம் என விரக்தி கொள்ளலும் ஊழியத்தின் பாதையில் நாம் அறிந்ததே. கடந்துபோன தீங்குகள் கடவுளின் திட்டம் எனக் கூறித் தேற்றுவார் அதிகம். ஆனால் வரும் தீமையினை கடவுளின் திட்டமாய் ஏற்போர் குறைவு. ஆனால் விவிலியத்திலே அத்தகைய நீதிமான்களை அறியலாம். ஆபிரகாம் தன் மகனை பலியிடத் துணிதல், யெப்தா தன் மகளை பலியிட நாள் குறித்து காத்திருந்த சம்பவங்கள் சிறந்த எடுத்துக்காட்டே.

இயேசு கிறிஸ்து கொடூர பாடுகளையும், மரணத்தையும் எதிர்கொள்ள தன்னை கையளித்தார். தன் மரணம் தன் பணிவிடையின் தோல்வி என்றோ, அருட்பணி நடைபெறும் என்றோ இயேசு ஒருபோதும் கருதியதில்லை, மாறாக அது தன் பணித்திட்டத்தை மெருகேற்றும் என்று இயேசு அறிந்திருந்தார். இறைதிட்டமாகிய ஒலிவமலையின் வேதனை இறைவேண்டலில் தன்னைக் கையளித்த வெளிப்படுத்தின உண்மையினைச் சிந்திப்போம்.

## *1. உடனிருப்போரை வாழவைப்பதே இறைத்திட்டம் :*

ஒரு எல்லை பாதுகாப்பு வீரன் தன் தேசத்தின் அப்பாவி மக்களின் உயிரை காப்பாற்ற தன் உயிரை கையளிப்பதை வீர மரணம் என்பர். தன் மக்கள் வாழ உயிர் தியாகம் செய்யும் உயரிய நோக்கத்தை

கிறிஸ்து வெளிப்படுத்துகின்றார். யோவான் 15:13-ல் ‘ஒருவன் தன் சிநேகிதருக்காக தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலும் இல்லை’. மத்தேயு 16:21, மாற்கு 8:31, லூக்கா 9: 22 வசனங்களில் மனுஷகுமாரன் பாடுபடவேண்டும் என்பதை உறுதியாய் கிறிஸ்து உரைக்கின்றார். லூக்கா 22: 37, ஏசாயா 53: 12 வசனங்களில் மனுஷகுமாரன் அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்படுவர் என்பதை தெளிவுபடுத்துகின்றார். மாற்கு 8: 14,15 வசனங்களில் கிறிஸ்துவில் விசுவாசம் கொள்வோர் நித்திய ஜீவனை அடைவர். மாற்கு 10:45, மத் 20:28 வசனங்களில் அனேகர் இரட்சிப்படைய தான் வந்ததாக கிறிஸ்து உரைக்கிறார். மனிதர் விடுதலையடைய நீதிக்காய் குரல் கொடுத்து மரித்த கிறிஸ்து, கோதுமை மணியாகத் தன்னை ஒப்புக்கொடுத்தார். கிறிஸ்துவின் கையளிப்பு துன்பக் கிண்ணமாக இருந்தாலும் (லூக்கா 22:42). அத் துன்பக் கிண்ணத்தை ஏற்பது உடன் வாழ்வோரையும் உலகத்தினையும் வாழவைக்கும் என்பதை அறிந்தே தன்னை இழந்து மற்றவர்கள் வாழ்வில் ஒளியேற்றினார்.

### *2. அழிவில்லாத் திருச்சபையே இறைத்திட்டம் :*

யோவான் 2:19-ல், தேவாலயம் இடிக்கப்படும் என்றும், மூன்று நாளைக்கு மீண்டும் சீரான சரீரமாய் எழும்பும் என்பதும், கிறிஸ்து தன்னை கையளிப்பதால் கிடைக்கும் பாக்கியம். இஸ்ரயேலர் ஆலயத்தை மையப்படுத்தியே பக்தியை வளர்த்தனர். இயேசுக்கிறிஸ்துவோ ஆலயம் அழிந்தாலும் திருச்சபை என்னும் விசுவாசக் குடும்பத்தை, கடவுளின் வார்த்தையைப் போல அழிவில்லாது நிலைநிற்கும் என்பதை தம்மை கையளிப்பினூடே உறுதிபடுத்துகின்றார். இடிக்கப்படும் தேவாலயம் அழிந்து போகும் சரீரமே. உயிர்த்தெழும் கிறிஸ்துவே நம் திருச்சபை. வன்முறையால் ஆலயம் வீழ்ந்தாலும் அன்பால் நிலைபெறுவது சபையே. வன்முறையை கையாளும் அதிகாரவர்க்கம் வீழ்ந்து, இறைத் திட்டம் ஏற்கும் சபை நிலை நிற்கும் என்னும் தேவ திட்டம் அறிந்து கிறிஸ்து தன்னை கையளிக்கிறார்.

ஆகவே கிறிஸ்துவின் கையளிப்பு திருச்சபையின் நிலைத்தன்மையினை உறுதிப்படுவதால், கிறிஸ்துவின் சரீரமாகியத் திருச்சபை, அவயவங்களான இறைமக்கள் இறைத்திட்டத்திற்கு தங்களை ஒப்படைத்து சிலுவைப் பாதையில் கிறிஸ்துவை பின் தொடர்ந்து வாழவேண்டும்.

திரு. I. **ஜாண் ரோஜின் ஜேக்கப்**

# மாயமற்ற பக்தி

மத். 21:17-22

**"இனி நீ கனி கொடுக்கவே மாட்டாய்."** (மத். 21:19)

திரைப்பட நடிகை ஒருவரை பார்க்க மக்கள் திரளாக கூடியிருந்தனர். தனது நீளமான கூந்தலை தனது அடையாளமாக கொண்டிருந்தார் அந்த நடிகை. கூடியிருந்த ரசிகர்கள் ஆச்சரியத்தோடு அவளது அழகைக் கண்டு வியந்தனர். பல பெண்கள் தங்கள் கூந்தல் இப்படி இல்லையே என ஏக்கமுற்றனர். விழா முடிந்து தனது சொந்த காரில் சென்ற நடிகை மருந்தகம் ஒன்றில் சென்று முடி அடர்த்தியாக வளர ஏதேனும் புதி மருந்துகள் உள்ளனவா என்று கேட்டாள். ஆச்சரியத்தோடு பார்த்த மருந்தக பணியாளர் உள்ளத்துக்குள் போலியான கூந்தல் என்று சொல்லிக் கொண்டார்.

மாயை அல்லது போலி என்கிற வார்த்தைகள் இன்று எல்லா இடங்களிலும் முக்கியத்துவம் பெறும் வார்த்தைகள் ஆக உள்ளன. மருந்துகளில் போலி, உணவில் போலி ஏன் ஆன்மீகத்தில் கூட போலிகள் நிறைந்துள்ளன. கடவுள் மாய்மாலமான வாழ்வை ஒரு போதும் விரும்பவுதில்லை. அதை எளிதாக விட்டு வைப்பதுமில்லை. பரிசேய, சதுசேயர்கள் ஆலயத்திலும், ஜனங்கள் கூடும் இடங்களிலும் தாங்கள் பக்தியானவர்கள் என்று காட்டுவதற்கு உபவாசம் இருப்பவர்களாக காண்பிப்பார்களாம். இதை இயேசு கிறிஸ்து கண்டித்தார். மத். 21:18-21 லரையுள்ள பகுதியில் இயேசுவையே ஏமாற்றிய அத்திமரத்தை காணமுடிகிறது. இந்த போலியாக தோற்றமளித்த அத்திமரத்தோடுள்ள இயேசு கிறிஸ்துவின் அணுகுமுறை எப்படியிருந்தது என்பதை இச்செய்தியில் காண்போம்.

## *1. போலியான வாழ்வு ஆரம்பம்* (மத். 21:19)

தேவாலயத்தை சுத்திகரித்த இயேசு அத்திப்பழ வீடு என்று அழைக்கப்பட்ட பெத்தானியாவுக்கு போய் தங்கினார். இந்த பெத்தானியா அத்தி பழங்களுக்கு புகழ் பெற்ற இடமாகும். காலையில் பெத்தானியாவிலிருந்து நகரத்துக்கு திரும்பிய இயேசு பசியோடு நடந்து வருகிறார். தூரத்தில் அத்திமரத்தை பார்த்த போதே மகிழ்ச்சி அதிலும் தரம் முழவுதும் இலைகள் இருப்பதை பார்ததபோது இரட்டிப்பான மகிழ்ச்சி, இந்த மரம் என் பசியை போக்கும் என்கிற நம்பிக்கை ஆனால் அருகில் சென்ற போதுதான் ஒரு கனியும் இல்லை என்பதை தெரிந்து கொண்டார். வழி போக்கரும், வியாபாரிகளும், ஓய்வெடுக்கவும் தங்கள் பசியை போக்கவும் நடப்பட்டிருந்த அத்திமரம் எல்லோரையும் ஏமாற்றியது.

அத்திமரத்தில் முன்பு கனிகள் வந்து பின்னர் இலைகள் அதை மறைத்து காத்துக்கொள்ளும். ஆனால் இங்கே வெறும் இலைகள் மட்டுமே நிற்கின்றன. இயேசு மட்டும் ஏமாற்றம் அடையவில்லை. இந்த வழியாக சென்ற அநேகர் ஏமாற்றப்பட்டனர். தான் நடப்பட்டிருந்ததின் நோக்கத்தை உணராமல் வெறும் பகட்டான தோற்றத்தை வெளிப்படுத்தியது அத்திமரம்.

19-ம் வசனத்தில் "இயேசு இனி ஒருக்காலும் உன்னிடத்தில் கனி உண்டாகாதிருக்கக் கடவது" என்றார். அத்திமரம் பட்டு போயிற்று. தன்னைத்தானே அழித்துக் கொண்டார் அத்திமரம். இயேசுவோடு வாழ்ந்த யூதாஸ்காரியோத்தும் ஒரு மாயையான வாழ்வு வாழ்ந்து அவரை காட்டிக் கொடுத்த துரோகியாக மாற தன் அழிவைத் தானே தேடிக்கோண்டான்.

## *2. போலியான வாழ்வு தோல்வியின் வெளிப்பாடு*

(மத். 21:19)

வழியருகே நின்ற அத்திமரம் தனக்கு கிடைத்த வாய்ப்பை தவற விட்டது. பொதுவாக சாலமோன் ராஜாவின் காலத்தில் எல்லா வீடுகளிலும் அத்திமரம் நடப்பட்டிருந்தது (1அர. 4:25). ஆனால் இங்கே வீட்டில் அல்ல வழியோரம் நிற்கிறது அத்திமரம். ஒரு வீட்டில் மக்களுக்கு மட்டுமல்ல எல்லருக்கும் கனி கொடுக்க வேண்டும் என்பது தான் அதின் நோக்கம். ஆனால் இந்த அத்திமரமோ தன் செயலில் தோல்வியடைந்தது. தோல்வி அனைவருக்கும் சகஜமே. ஆனால் தோல்வியை மறைக்க போலியான வெற்றியின் தோற்றத்தைக் காட்டகூடாது. இலைகள் நிறைந்திருந்ததால் அதின் மறைவில் காய்கள் இருக்க வேண்டும். ஆனால் கனியற்ற இலையாய், கனியற்ற மரமாய் ஒருபோலியான வெற்றியை காட்டிக்கொண்டு நின்றது இந்த அத்திமரம். நீதி 25:28-ல் தன் ஆவியை அடக்காத மனுஷன் மதிலிருந்த பாழான பட்டணம் போலிருக்கிறான். என காணமுடிகிறது

இன்று நாம் வாழும் உலகில் பெரும்பாலும் மனிதர்கள் தங்கள் மாயையான/போலியான தோற்றத்தையே காட்டுகிறார்கள். பெற்றோர்களை கைவிட்டு விட்டு வெளியில் ஏழைகளுக்கு உதவுவது போல நடிப்பது, முழு இறை பக்தி இல்லாமல் காணிக்கை கொடுப்பது, பிறரை வஞ்சித்து பணம் சம்பாதித்து அதை பிறருக்கு உதவி செய்வது போல நடிப்பது, இவையெல்லாம் அழிவின் ஆரம்பம் என்றும், தோல்வியின் அடையாளம் என்றும் அத்திமரம் நமக்கு எச்சரிக்கிறது.

உண்மையான தோற்றத்துடன் கடவுள் நம்மை உருவாக்கிய நோக்கத்தை உள்ளத்திலே உணர்ந்து பக்தியாய் வாழ்வோம். நம்மை சுத்திகரிப்போம் வாழ்வடைவோம்!

"பரிசுத்தவான் என காண்பிக்க நடிக்காதே பாவியென ஒத்துக்கொள்"

அருள்திரு. **C.S. வெஸ்லி ஜெபராஜ்**

16-04-2019



# அன்பால் வெளிப்படும் பக்தி

மத். 22:34-40

**"உன் முழு இருதயத்தோடும், முழு உள்ளத்தோடும் முழு மனத்தோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு செலுத்து."** (மத். 22:37)

அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியின் காலத்தில் இன்று நாம் வாழ்கிறோம். இன்று பக்தி என்பது கடவுளைத் திருப்திப்படுத்தச் செய்யும் சமயக் கடமைகள் என்கிற புரிதல் மக்களிடம் உள்ளது. இயேசுகிறிஸ்துவின் கால சமயத்தலைவர்கள் போன்று சடங்குகளுக்கு, மரபுகளுக்கும் முக்கியத்துவம் கொடுப்பது போல் ஆகிவிட்டது. திருச்சட்டம் அதனை ஒட்டியுள்ள மரபுகளை (ஓய்வுநாள், தூய்மைச் சடங்குகள்) சரியாக கடைபிடிப்பது தான் உண்மையான பக்தி வாழ்வு என யூத சமயத் தலைவர்கள் செயல்பட்டனர்.

இயேசுவை பேச்சில் சிக்க வைக்கலாமென சூழ்ச்சி செய்த சமயத்தலைவர்கள் வரிசெலுத்துதல், உயிர்த்தெழுதல் சார்ந்த கேள்விககளை முன் வைத்தனர். திருச்சட்டம் சார்ந்த கேள்விக்கு, சட்டத்தை கடைபிடிப்பதனால் அல்ல. அன்பால் வெளிப்படும் பக்தி வாழ்வே உறுதியானது என பதில் தந்தார்.

இப்பகுதியில் நாம் கற்றுக் கொள்ளும் உண்மைகளை சிந்திப்போம்.

## *1. கடவுளின் திருவுளத்திற்கு முழுமையாய் அர்ப்பணித்தார்* : (மத். 22:37)

திருச்சட்ட அறிஞரின் கேள்வி : திருச்சட்ட நூலில் தலைசிறந்த கட்டளை எது? என்பதுதான்.

"உன் முழு இருதயத்தோடும், முழு உள்ளத்தோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு செலுத்து."

இதுவே தலைசிறந்த முதன்மையான கட்டளை என்பது இயேசுவின் பதில். இது ஒரு பாக்கியம்.

இதயம் உணர்ச்சி மண்டலத்தையும்
ஆத்துமா விருப்ப மண்டலத்தையும்
சிந்தை அறிவு மண்டலத்தையும்
பலம் உடற்கூறையும் சுட்டிக்காட்டுகின்றன.

இரட்டை மனதுடையோரால் அல்ல; முழு ஒப்படைப்பு, அதாவது முழு ஆள்தத்துவத்தையும் ஒப்படைத்தல். இது இறைவனின் திருவுளம்.

பரிசேயரால் அனுப்பப்பட்ட ஏரோதியர் சீஷருக்கு வரிசெலுத்துவது முறையா? இல்லையா? நீர் என்ன சொல்லுகிறீர் என எங்களுக்குச் சொல்லும் என இயேசுவிடம் கேட்டபோது சீஷருக்கு உரியவற்றை சீஷருக்கும், கடவுளுக்கு உரியவற்றை கடவுளுக்கும் கொடுங்கள் என பதில் கூறினார் (மத். 22:15-22). ஆம், சீஷரின் உருவம் பதிக்கப்பட்ட நாணயத்தின் அதிகாரம், உரிமை சீஷருடையது. அதனை பயன்படுத்துவோன் சீஷருக்கு கட்டுப்பட்டவர்கள். மானிடரோ கடவுளின் உருவில் உருவாக்கப்பட்டவர் (தொ.நூ. 1:26,27). எனவே மானிடர் கடவுளுக்கு உடையவர். கடவுளுக்கு தங்களை ஒப்புக்கொடுப்பதே முதன்மைக் கடமை.

கெத்சமனேயில் இயேசு தந்தையின் திருவுளத்திற்கு முழுமையாய் ஒப்படைத்தார் (மத். 26:39).

இறைவனில் அன்பு செய்கிறோம் எனும் போது, அவரின் திருவுளத்திற்கு அர்ப்பணித்தல் அவசியம். அதுவே பக்தியின் இரகசியம். அப்போதுதான் இறைவன் நம்மை அன்பு செய்வதை உணர முடியும். இறைவனின் அன்பை சுவைக்கும் போது எதைக்குறித்தும் கவலைப்பட தேவையில்லை. காரணம், இறைவனே நம் சார்பாக செயல்படுகிறார் என்பதை புரிந்து கொள்ள இயலும்.

**_2. கிறிஸ்துவின் பண்புகளை கைக்கொள்ளுதல் :_** (மத். 22:39)

அன்பில்லாமல் நாம் எந்த காரியங்களையும், உதவிகளையும் முழுமையாய் செய்ய இயலாது. அதுபோன்று அன்பில்லாது நாம் செய்யும் எந்த பக்திச் செயல்களும் பொருளற்றது. மனிதர் “தன்னிடம் அன்பு கூர்வதுபோல் அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக” என்பது இரண்டாம் கட்டளை.

நம்மை எவ்வளவாய் நேசிக்கிறோம் என்பதனையும், நம் நடவடிக்கைகள் தன்னலம் சார்ந்தவைகளாக எந்த அளவுக்கு இருக்கின்றன என்பதனையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம்மிடம் காட்டும் அன்பை அயலகத்தாரிடம் பொழிவோமெனில் அது எத்தகையதாக இருக்கும் என்பதனையும் காண முயலவேண்டும். பின்னர் அதன்படி செய்யவேண்டும்.

அது இயல்பான நிலைக்கு அப்பாற்பட்டதாக இருக்கலாம். கிறிஸ்துவுக்கு முழுமையாய் ஒப்படைக்கும் பூரண அன்பினால் இது ஆகும். அதுவே இறைவனுக்கு ஏற்புடைய பக்தி.

இறைபிரசன்னத்தில் வாழ்ந்த இயேசு, கடவுளின் திருவுளத்தை இறைவேண்டல் வழி உணர்ந்து கொண்டார். அவரது பக்தி வாழ்வுக்கு இறைவேண்டலே அடிப்படை. ஒவ்வொரு நிகழ்வுக்ககு முன்னும் பின்னும் ஜெபித்தார் (மாற். 1:35, 6:4, 6:46). உடல் நலமற்றவர்களை சுகப்படுத்தினார் (ஓய்வுநாளிலும்). யூத சமூகத்தில் தீட்டு எனக் கருதப்பட்டவர்களை தொட்டு அணைத்துக் கொண்டு (லூக். 5:37). சுகம் அருளினார். பெண்கள், புற இனத்தார், வரித்தண்டுவோர், பாவிகள் என அனைவரிடமும் பாசம் காட்டினார். எல்லாரையும் சமமாக பாவித்தார். எல்லாருடனும் அன்பு காட்டினார்.

யாக்கோபு திருமுக ஆசிரியரும் அதனை உறுதி செய்கிறார் (யாக். 2:8). கிறிஸ்துவின் பண்புகளைக் கைக்கொள்ளுவதே உண்மை பக்தியின் வெளிப்பாடாகும்.

### *3. கிறிஸ்துவை வாழ்கின்றவராக வாழ்க்கையில் வெளிப்படுத்தல் :* (மத். 22:40)

வாழ்கின்ற கடவுளை வாழ்க்கையில் காட்டுதலே உண்மை பக்தி. வெளிவேடங்களினால் அல்ல, உண்மையான அன்பினால் இரு உருவாக்கம் பெறுகின்றது.

ஓசேயா இறைவாக்கினர் கூறும் போது, பக்தியானது வெறும் சடங்கில் அல்ல. அச்சடங்கிற்கு உயிரூட்டம் தரும் அன்பில் அடங்கியிருக்கிறது என்கிறார் (ஓசேயா 6:6). இந்த அன்பை நீதியான வாழ்க்கை (ஓசேயா 12:7) மற்றும் சட்டத்தின்பால் கொள்ளும் பிரமாணிக்கத்தினின்று பிரிக்க முடியாது (ஓசேயா 2:20,21). வெளிவேடம் நிறைந்த பக்தி வாழ்வை இறைவாக்கினர் கண்டித்தார் (ஏசா 11:10-15, ஆமோ 5:1-27).

பரிசேயர்களின் பக்தி வேடத்தை இயேசுவும் கண்டிக்கிறார் (மத். 23:30). உயிர்த்தெழுதலைக் குறித்து கேள்வி எழுப்பிய சதுசேயர்க்கு “ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள் நானே” என கடவுள் தம்மை வெளிப்படுத்தியதை குறிப்பிட்ட அவர் “இறந்தோரின் கடவுள் அல்ல, மாறாக வாழ்வோரின் கடவுள்” எனக் கூறினார்.

கிறிஸ்துவை வாழ்வில் பிரதிபலிக்க அழைக்கப்பட்டுள்ளோம். கிறிஸ்து நம்மில் வாழும் போது அது நிறைவேற்றம் பெறுகின்றன.

“இயேசுவை வாழ்க்கையில் காட்டுங்களே
பேச்சில் அல்ல செயலில் நல்ல
இயேசுவை வாழ்வோராய் காட்டுங்களே”

தூய பவுல் கொரிந்து சபையாரை கிறிஸ்துவின் நிருபங்கள் என்கிறார் (2கொரி. 3:3).

அன்புள்ள குடும்பம் சிறந்த தலைமுறையை உருவாக்குகிறது
அன்புள்ள திருச்சபை இறையரசின் முன் சுவை
அன்புள்ள சமுதாயம் மனுகுலத்தின் மகிழ்ச்சி
அன்புள்ள மனிதன் மானிடத்தின் வழிகாட்டி

கிறிஸ்துவின் அன்பு உள்ளத்தை நிரப்பும் போது பூரண பக்தி வாழ்வு பிரதிபலிக்கிறது. கிறிஸ்துவின் அன்பிற்கு நம்மை அர்ப்பணித்து, கிறிஸ்துவின் பண்புகளை வாழ்க்கையில் ஏற்று, கிறிஸ்துவை வாழ்க்கையில் பிரதிபலிப்போம்.

ஆண்டவரின் ஆசி அனைவரோடும் தங்குவதாக.

அருள்திரு. V. **ஜாண்சன் கில்பர்ட்**

# நற்செயலில் வெளிப்படும் பக்தி

மத். 26:6-13

**“....இவளும் நினைவுகூறப்படுவார் என்று நான் உறுதியாக உங்களுக்கு சொல்லகிறேன்.”** (மத். 26:13b)

நாட்டில் போர் நடந்து கொண்டிருந்த காலம் அது. பஞ்சத்தினாலும், பசியினாலும் மக்கள் பாதிக்கப்பட்டு கொண்டிருந்த நாட்களில் மன்னன் ஒருவன் மாறுவேடத்தில் மக்களை சந்திக்கச் சென்றான். மக்கள் படும் துயரங்களைக் கண்டு பரிதபித்தான். பகல் போய் இரவும் வந்தது. கொண்டு சென்ற உணவும், குடிநீரும் தீர்ந்து போய் பசியும் தாகமும் ஏற்பட்டது. நேரம் ஆக ஆக தாகம் அதிகரிக்க அருகில் இருந்த வீடுகளில் சென்று தண்ணீர் கேட்டான். மாறுவேடத்தில் இருந்த மன்னனை மக்கள் அறியவில்லை. பஞ்சத்தினால் பாதிக்கப்பட்டிருந்த மக்கள் தங்கள் தேவைக்காய் சேமித்து வைத்திருந்த தண்ணீரை கொடுக்க மறுத்தனர். பசியினாலும் தாகத்தினாலும் தள்ளாடிய நிலையில் நடக்க முடியாமல் ஒரு குடிசையின் முன் விழுந்தான். சத்தம் கேட்டு குடிசையிலிருந்து வெளியே வந்த வயதான தாய் மன்னன் மேல் இரக்கப்பட்டு தான் சேமித்து வைத்திருந்த கொஞ்சம் தண்ணீரை கொடுத்து அவன் உயிரைக் காப்பாற்றினாள். நாட்டில் போர் முடிந்து வெற்றி விழா கொண்டாடும் போது இந்த தாயின் நல்ல செயலை நினைவு கூர்ந்து நன்றி சொல்லி பாராட்டினான்.

இயேசுகிறிஸ்து பெத்தானியாவில் தொழுநோயாளர் சீமோனின் இல்லத்தில் பந்தியில் அமர்ந்திருந்த போது விலையுயர்ந்த நறுமணத்தைலம் கொண்ட படிகச்சிமிழுடன் பெண் ஒருவர் இயேசுவிடம் வந்து அதை அவர் தலையில் ஊற்றினாள் என்று மத்தேயு, மாற்கு நற்செய்தி நூலில் சொல்லப்பட்டிருக்கிறது (மத். 26:6-13, மாற். 14:3-9). லூக்கா நற்செய்தியாளர், பாவியான ஒரு பெண் கண்ணீரினால் இயேசுவின் கால்களை நனைத்து தன் தலைமுடியினால் அவைகளை துடைத்து, இயேசுவின் பாதங்களில் நறுமணத் தைலத்தை பூசினாள் என்று கூறுகிறார் (லூக். 7:36-50). யோவான் நற்செய்தியாளர் மரியாள் இயேசுவின் பாதங்களில் இலாமிச்சை என்னும் கலப்பற்ற விலையுயர்ந்த நறுமணத்தைலத்தைப் பூசி தன் தலை முடியினால் அவருடைய பாதங்களைத் துடைத்தார் என்று சொல்லுகிறார். நான்கு

நற்செய்தி நூல்களிலும் சிறிய மாறுதலுடன் சொல்லப்பட்ட இந்த நிகழ்வில் வரும் பெண் இயேசுவிடம் நன்மை பெற்று, அவரிடம் கொண்ட அன்பின் நிமித்தமாக விலையுயர்ந்த பொருளை விரும்பி கொடுக்கின்றார். அவளின் உள்ளத்தை அறிந்த ஆண்டவர் இவள் நினைவு கூரப்பட வேண்டியவள் என சாட்சி கொடுக்கிறதைக் காண்கிறோம். இந்நிகழ்வில் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய இரண்டு உண்மைகள்.

***1. வீண் செலவல்ல! வேண்டிய செலவு!*** : (மத். 26:8,12)

வரவிற்கேற்ப திட்டமிட்டு செலவு செய்ய வேண்டும். வீண் செலவு செய்யக் கூடாது என முன்னோர் அறிவுரைச் சொல்வார்கள். தேவைக்காக செலவு செய்வது வேண்டிய செலவு. ஆனால் ஆடம்பரத்துக்காக செலவு செய்வது என்பது வீண் செலவு.

பெத்தானியாவில், சீமோன் இல்லத்தில் இயேசுவிடம் வந்த பெண் விலையுயர்ந்த நறுமணத் தைலத்தை ஊற்றியதைக் கண்டபோது, சீடர்களின் பார்வையில் இது வீண் செலவாகத் தோன்றியது. ஆகவே அவர்கள் கோபமடைந்து “இந்த தைலத்தை இவ்வாறு வீணாக்குவதேன்” (மத். 26:8a) என்று கேட்டனர். ஆனால் இயேசுகிறிஸ்துவின் பார்வையில் அது வேண்டியச் செலவாய் இருந்தது. மத். 26:12-ல் இயேசு சொல்கிறார், “இவர் இந்த நறுமணத் தைலத்தை எனது உடல் மீது ஊற்றி எனது அடக்கத்துக்கு ஆயத்தம் செய்தார்.” ஆகவே நறுமணத்தைலத்தை அந்த பெண் வீணாக்கவில்லை. மாறாக, இயேசு கிறிஸ்துவின் தேவையை அறிந்து நற்செயல் செய்ய முந்திக் கொண்டாள் என புரிந்து கொள்ள வேண்டும்.

***2. தடுக்கப்பட வேண்டியவளல்ல! நினைக்கப்பட வேண்டியவள்!*** :

இயேசுவிடம் இருந்த சீடர்கள் சில காரியங்களில் தடை செய்ய ஆயத்தமாயிருந்தார்கள். மற். 10:13-ல் சிறுப்பிள்ளைகளை இயேசுவிடம் பெற்றோர் கொண்டு வந்த போது தடைச் செய்தனர். இந்த நிகழ்விலும் விலையுயர்ந்த தைலத்தை இயேசுவின் தலையில் ஊற்றியபோது தடைச் செய்து குற்றப்படுத்துகிறதைப் பார்க்கிறோம். மத். 26:8,9-ல்

சீடர்கள் கோபமடைந்து, “இந்த தைலத்தை இவ்வாறு வீணாக்குவதேன்? இதை நல்ல விலைக்கு விற்று ஏழைகளுக்கு கொடுத்திருக்கலாம்” என சீடர்கள் அந்த பெண்ணைக் குற்றப்படுத்தி மாற்று ஆலோசனை சொல்லுகிறதைக் காண்கிறோம்.

ஆனால் இயேசுகிறிஸ்து அந்த பெண்ணையும் அவள் செய்த செயலையும் குறித்து சொல்லும் போது அவள் தடுக்கப்பட வேண்டியவள் அல்ல. மாறாக, அவள் நினைக்கப்பட வேண்டியவள் என்றார். அத்துடன் மத்26:13-ல் "இயேசு உலகம் முழுவதும் எங்கெல்லாம் இந்த நற்செய்தி அறிவிக்கப்படுமோ அங்கெல்லாம் இப்பெண் செய்ததும் எடுத்துக் கூறப்படும். இவரும் நினைவுக்கூரப்படுவார் என்று நான் உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றுக் கூறினர்"

இயேசு கிறிஸ்துவின் மீட்பின் திருப்பணியில், தன்னிடம் இருந்த விலையுயர்ந்த தைலத்தை இயேசுகிறிஸ்துவின் மரணத்தின் முன்னடையாளமாக அபிஷேகம் செய்த நிகழ்வு இன்றும் நினைவு கூரப்படுகிறது. ஆகவே நாமும் நம்மிடம் இருக்கும் முதன்மையானவற்றை கடவுளுக்கு கொடுத்து உலகப் பற்றில் நாட்டம் கொள்வதை விட்டுவிட்டு உன்னதரின் உள்ளத்தில் குடி கொள்வோம்.

திரு. C. **ஜெப குமார்**

# திருமைந்தரின் பேரன்பு

லூக். 23:32-34

**"தந்தையே, இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை என்று சொன்னான்"** (லூக். 23:34)

சந்தன மரம் தன்னை வெட்டுகின்ற கோடாரிக்கு தன் மணத்தை கொடுக்கும். இரப்பர் மரம் தன்னைக் கத்தியால் குத்துபவருக்குப் பாலைத் தரும். பனை மரம் தன்னை அறுத்துக் காயப்படுத்துபவருக்கு பதநீர் தந்து வாழ்விக்கிறது. இதைபோல இயேசுகிறிஸ்துவும் தன்னை சிலுவையில் அறைந்து கொலை செய்யத் துணிந்தவர்களுக்கு சிலுவையில் தொங்கியபடியே மன்னிப்பின் மகுடமான வார்த்தைகளை உதித்தார் இயேசுகிறிஸ்து.

இயேசுகிறிஸ்துவின் சிலுவைக் காட்சியினைப் பார்க்கும் போது மா மனிதரைக் கொடியவர்கள் சிலுவையில் அறைந்து விட்டனரே, இது மன்னிக்க முடியாத குற்றம் என்று நாம் கூறுகின்ற வேளையில் இயேசுகிறிஸ்து வேதனையோடு தொங்கும் போது மன்னிப்பை அருளி மொழிந்தார். "தந்தையே, இவர்களை மன்னியும்" என்று இப்படிப்பட்ட குரல் எத்தகையது என்பதைத் தியானிப்போம்.

## *1. பாசத்தின் குரல் :*

வாழ்வையே பாவத்தின் கோரத்தினால் இழந்து நின்ற மனுக்குலம் மீட்பை வழங்க வந்த இறைமகன் இயேசுகிறிஸ்துவையே இழந்து நிற்கிறது. இழந்து போனதை தேடி மீட்க வந்த மீட்பின் பணியைச் செய்த (லூக். 19:10). இயேசுகிறிஸ்து மனுக்குலம் மீட்பைப் பெற வேண்டும் என்ற எண்ணத்தினால் மக்கள் மீது பாசம் கொண்டு அதாவது தன்னை சிலுவையில் வதக்கிய மனித நேயமற்ற கயவர்கள் மீது பாசம் கொண்டு "தந்தையே, இவர்களை மன்னியும் ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்கு தெரியவில்லை" என்றார். இதுதான் உண்மை பாசம். மனிதர்களை மீட்க வந்த மீட்பராகிய தன்னை இழந்தாலும் மக்கள் மீட்பினை இழந்து விடக்கூடாதே என்ற ஒருவித அன்பின் குரல் தான் இது.

தன்னை சிலுவையில் அறைந்ததால் இந்த பழி அவர்கள் மீது வரக்கூடாது. தான் கொடிய வேதனை அனுபவித்தாலும் மனிதர்கள் வேதனை அடையக்கூடாது என்ற ஒருவித பாசம் கொண்டவராக கூறுகின்ற குரல்தான் இந்த பாசத்தின் குரல்.

அன்பர்களே! நம் மீது பாசம் கொண்டு முழங்கிய இக்குரல் நாமும் பிறர் மீது பாசம் பொழிந்திட அழைப்பு விடுக்கின்றது. இந்த குரலுக்கு செவிசாய்த்து, வாழ்ந்து இறையாசி பெறுவோம்.

### *2. பரமனின் போதனைக் குரல் :*

போதனை செய்வது மிக மிக இலகுவானது. ஆனால் போதிப்பதின் படி வாழ்ந்து மாதிரி காட்டுவது மிக மிக கடினமானது. ஆனால் இயேசுகிறிஸ்துவின் போதனைகளை மாதிரியாக்கியது இக்குரல். "உங்கள் பகைவரிடமும் அன்புகூருங்கள்; உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்" (மத். 5:44) என்றார் இயேசுகிறிஸ்து.

ஆண்டவரே என் சகோதர, சகோதரிகளுள் ஒருவர் எனக்கு எதிராகப் பாவம் செய்து வந்தால் நான் எத்தனை முறை அவரை மன்னிக்க வேண்டும்? ஏழு முறை மட்டுமா? என்று பேதுரு இயேசுகிறிஸ்துவிடம் கேட்டான். அதற்கு மறுமொழியாக இயேசுகிறிஸ்து ஏழு முறை மட்டுமல்ல; எழுபது தடவை ஏழுமுறை மன்னிக்க வேண்டும் என்றார் (மத். 18:21,22).

"மற்ற மனிதர்கள் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால் உங்கள் விண்ணகத் தந்தையும் உங்களை மன்னிப்பார்" (மத். 6:14).

"உங்களை ஒரு கன்னத்தில் அறைபவருக்கு மறு கன்னனத்தையும் திருப்பிக் காட்டுங்கள்" (லூக். 6:29). என்றெல்லாம் போதித்தவர் இயேசுகிறிஸ்து. ஆனால் இன்று அப்போதனையை செயலில் காட்டினார்.

"நான் செய்தது போல நீங்களும் செய்யுமாறு நான் உங்களுக்கு முன் மாதிரி காட்டினேன்" (யோவா. 13:5) என்று கூறியவர், சிலுவையில் தொங்கும் போது தன்னை சிலுவையில் வதைத்தவருக்காகத் தந்தையிடம் பரிந்துபேசி தனது போதனையைச் சாதனைனயாக்கி மாதிரியாக்கினார். மனினிக்கும் படி வேண்டுதல் ஏறெடுத்தார். நாம் இன்று எப்படி?

இயேசுவை வாழ்க்கையில் காட்டுங்களேன்
பேச்சில் அல்ல; செயலில் நல்ல
இயேசுவை வாழ்வோராய் காட்டுங்களேன் (2) - என்ற பக்தனின் பாடல்களை நினைவுகூர்ந்து மாதிரி காட்டும் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப்பின் பற்றி வாழ்ந்து இறையாசி பெறுவோம்.

அன்பர்களே! ஆண்டவர் இயேசுகிறிஸ்து சிலுவையில் தொங்கியபடியே முதலாவது முழங்கிய குரல் மன்னிப்பின் குரல். இக்குரல் பாசத்தின் குரல், மாதிரியின் குரல் என்பதை உணர்ந்து பாசத்தைப் பிறருக்குப் பொழிந்து கிறிஸ்துவின் மாதிரியை பின்பற்றி வாழ்ந்து ஆண்டவரின் ஆசி பெறுவோம்.

அருள்திரு. R. **டேவிட் ஜெபசிங்**

# திருமைந்தரின் பேரருள்

லூக்கா 23:39-43

**"நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர்"** (லூக்கா 23:4).

உலக வரலாற்றில் கொலைக் கருவி இயேசு கிறிஸ்துவை பலி கொண்டதால் மானுட வாழ்வின் தலையெழுத்தை மாற்றும் கருவியாக மாறிவிட்டது. சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்னமே ஏசாயா இறைவாக்காளர் வாக்குரைத்தது போலவே (ஏசா. 53:12) ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து கொடியவர்களுள் ஒருவராகக் கருதப்பட்டார். இயேசுகிறிஸ்துவின் பிறப்பின் நிகழ்வு துவங்கி பணிக் காலங்களிலும் சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்களோடும், பாவிகளோடும், விழிம்பு நிலையிலுள்ளவர்களோடும், அடித்தட்டு மக்களோடும் தன்னை அடையாளப்படுத்தினார். இயேசு கிறிஸ்துவின் சிலுவைச் சாவு நிகழ்விலும் அதே நிலைப்பாடு காண முடியும். இறைமகன் சிலுவையில் அறையப்பட்ட இரண்டு கள்வர்களுக்கு இடையே சிலுவைப் பாடுகளை அனுபவித்தார். பாவத்தை வெறுக்கும் இயேசுக்கிறிஸ்து பாவிகளை ஒருபோதும் வெறுப்பதில்லை. இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்டவர்களின் பெயர்கள் நற்செய்தியில் குறிப்பிடவில்லை. லூக்கா நற்செய்தியாளர் ஏதோ ஒரு காரணத்திற்காக அவர்களை குற்றவாளிகள் என்று குறிப்பிடுகின்றார். மாற்குவும், மத்தேயுவும் அவர்களுக்கு கள்வர்கள் என்ற பதம் பயன்படுத்துகின்றனர். யோவான் நற்செய்தியாளர் வேறு இருவர் என்று மட்டும் சொல்லுகிறார். வரலாற்று நூற்களில் இரட்சிப்பைப் பெற்ற கள்வனுக்கு திஸ்மாஸ் DISMAS என்றும் மீட்பை இழந்த கள்வனுக்கு கெஸ்டாஸ் GESTAS என்றும் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. லூக்காவின் கூற்றுப்படி மக்கள் சிலுவை அருகே அமைதியாக கூடி நிற்பதாக விளக்குகின்றார்.

இயேசு கிறிஸ்து வழங்கும் விடுதலையைக் குறித்து மூன்று முறை கேலி செய்யப்படுகிறார். முதலாவது இயேசு கிறிஸ்துவை கேலி செய்தவர்கள் ஆட்சியாளர்கள். இவரா மேசியா என்பது அவர்கள் கருத்தாக அமைந்தது. பிறரை இவன் விடுவித்தான் கடவுளின் மேசியாவும் தேர்ந்தெடுக்கப்பட்டவனுமானால் தன்னையே விடுவித்துக் கொள்ளட்டும். என்றார்கள் (லூக். 23:35). இரண்டாவது படைவீரர்கள் இயேசுவை அரசன் என்று கேலி செய்தார்கள். நீ யூதர்களின் அரசனானால் உன்னைக்

காப்பாற்றிக் கொள் என்று எள்ளி நகையாடினர் (லூக். 23:37). மூன்றாவது கேலி சிலுவையில் அறையப்பட்ட கள்வர்கள் இரண்டு பேரும் இயேசு கிறிஸ்துவை இகழ்ந்தார்கள் அல்லது கேலி செய்தார்கள் என்று பதிவு செய்கிறார் (மத். 27:44). லூக்கா குறிப்பிடும் போது ஒரு குற்றவாளி ஆட்சியாளர்கள் கேலி செய்தது போலவே இயேசு கிறிஸ்துவைப் பார்த்து நீ மேசியாதானே உன்னையும் எங்களையும் காப்பாற்று என்று அவரைப் பழித்துரைத்தான் (லூக். 23:39). அன்றைய யூத சமுதாயத்திலே ஒருவரை வார்த்தையால் வெட்கமடையச் செய்வது பெரிய அவமானமாகவும் இழுக்காகவும் கருதப்பட்டது. இந்த மூன்று வகையினரும் மீட்பின் விடுதலை என்பது நன்றாகத் தெரிந்தது போலவே பேசினார்கள். அவர்கள் பார்வையில் சிலுவையிலிருந்து கீழே இறங்கி வருவதே மீட்பின் விடுதலை என்று அவர்கள் எண்ணினார்கள். இக்கூட்டத்தை சார்ந்து பேசிய குற்றவாளி ஒருவர் நிலைவாழ்வைத் தருபவர் நீசர்கள் மத்தியில் நிந்திக்கப்படுகிறார் என்பதை அறிந்து இயேசு கிறிஸ்துவோடு இணைத்தார்.

D.L. மூடி என்னும் இறைப்பணியாளர் இயேசுவை கிறிஸ்துவாக ஏற்றுக்கொண்ட குற்றவாளியைக் குறித்து சொல்லும் போது,

"காலையில் அவர் சிலுவையில் ஆணிகளால் அறையப்பட்டான்.
மாலையில் ஜீவக்கீரிடத்தை தரித்துக் கொண்டான்.
காலையில் ரோம சாம்ராஜ்யத்தின் எதிராளியாய் இருந்தான்.
மாலையில் கடவுளுடைய நண்பனாக மாறினான்.
கலையில் மக்களால் வெறுத்து உதைத்து தள்ளப்பட்டான்.
மாலையில் தூதர்களோடு உள்ள இணைவில் இணைக்கப்பட்டான்.
காலையில் குற்றவாளியாக பூமியில் மரித்தான்.
மாலையில் பேரின்ப வீட்டின் உரிமைக் குடிமகனாக மாறினான்."
என்றார்.

இந்த குற்றவாளி வாழ்வின் இறுதிக் கட்டத்தில் இதைப் பெற்றுக் கொண்டது சிறப்புக்குரியது.

### *1. கிறிஸ்துவால் மாற்றம் பெற்றான்* :

இயேசு கிறிஸ்துவோடு கூட சிலுவையில் அறையப்பட்ட கள்வர்களைக் குறித்து திருமறை ஆய்வாளர்கள் குறிப்பிடும் போது, ஏரோது ஆட்சியில் எருசலேம் ஆலயம் கட்ட பல்லாயிரக்கணக்கான பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டனர். ஆலயப்பணி முடிந்து தொடர்ந்து பணிவாய்ப்பு வழங்கப்படாததால் பிழைக்க வழியில்லாமல் வழிப்பறியில் ஈடுபட்டனர். இந்தக் கள்ளவர்கள் இக்கூட்டத்தை சார்ந்தவராக இருக்கலாம் எனக் கருதுகின்றனர். சில அறிஞர்கள் சொல்லுகிறபோது,

யூதேயாவின் அடிமைத்தனத்தை அகற்றப் போராடிய செலோத்தே இயக்கத்தை சார்ந்தவராக இருக்கலாம் என்கின்றனர். திருமறையின் கூற்றுப்படி இவர்கள் குற்றவாளிகள் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் பிறப்பு முதல் அவருடைய உயிர்ப்பு அனுபவம் தொடர்ந்து உலகில் எல்லையற்ற மாற்றுருவாக்கம் ஏற்படுத்தப்பட்டது. மத்தேயு நற்செய்தியாளளர் குறிப்பிடும் போது இயேசு கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்ட இரண்டு கள்வர்களும் அவரை இகழ்ந்துரைத்தவர்கள் என்கிறார். ஒரு முறை காந்தியடிகள் இரயில் பயணத்தின் போது அருகில் அமர்ந்திருந்த ஒருவர் வெற்றிலையை மென்று எச்சிலை இரயில் பெட்டிக்குள்ளே துப்பினார். காந்தியடிகள் எந்த எதிர்ப்பையும் செய்யாமல் தன்னுடைய தோள் மேலிருந்த வெள்ளைத் துணியை எடுத்து உட்கார்ந்து துடைத்தார். இரயில் பெட்டியில் இருந்த மற்ற பயணிகள் தவறு செய்தவனிடம் ஏன் இப்படி செய்கிறாய் என்று கேட்டார்கள். அந்த மனிதன் அதற்கு இது என்னுடைய நாடு எதையும் செய்வதற்கு எனக்கு உரிமை உண்டு என்று வசைச் சொற்களை சொல்லி மறுபடியும் எச்சிலைத் துப்பினான். காந்தியடிகள் முன்பு செய்தது போலவே மறுபடியும் செய்தார். பயணிகள் தவறு செய்தவனிடம் எச்சிலைத் துடைத்தது யார் தெரியுமா? தேசத் தந்தை காந்தியடிகள் என்றார்கள். அதை அறிந்தவன் காலில் விழுந்து மன்னிப்பு வேண்டி மாற்றம் பெற்றான். பால்திலிக் சொல்லுகின்ற போது கடவுளை சார்வதே மீட்பின் துவக்கம் என்றார். இயேசு கிறிஸ்துவோடு கூட சிலுவையில் அறையப்பட்ட இரண்டு கள்வர்களுடைய நிலைப்படும் ஆரம்பத்தில் ஒரே மாதிரியாகத்தான் காணப்பட்டது. இயேசு கிறிஸ்துவின் சிலுவைப்பாடுகளை ஒரு கள்வன் கவனிக்க ஆரம்பித்தான். தன்னை வதைப்பவர்களையும் வசைச் சொற்களை சொல்லுபவர்களையும் வீண் வார்த்தைகளையும் சொல்லி கோபம் கொள்ளும் உலகில் இயேசு கிறிஸ்து சிலுவையிலிருந்து தந்தையே இவர்களுக்கு மன்னியும் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாமல் செய்கிறார்கள் என்ற வார்த்தை கல் நெஞ்சான மனதை மாற்றியது. தன்னுடைய நிலையை உணருகின்ற மனிதனாக மாறினான். இதுவரையிலும் தவறுக்கு ஒத்து போனவன் தவறை நியாயப்படுத்தியவன் இப்போது நாம் தண்டிக்கப்படுவது முறையே நாம் செய்ததற்கு ஏற்ற தண்டனை பெறுகிறோம் என்றான். சிலுவை இறை பயம் அறிவிக்கும் இடமாக, குற்றங்களை அறிக்கை செய்யும் இடமாக, மாற்றத்தை ஏற்படுத்தும் இடமாக மாறிவிட்டது. வாழ்வில் எந்த நிலையிலும் மாற்றம் பெறாதவன் சிலுவையில் உருகுலைந்து நின்ற இயேசுவால் மாற்றம் பெற்றான்.

### *2. கிறிஸ்துவை மற்றவர்களுக்கு அறிவித்தான்* :

இந்த உலகம் பொய்மையும், போலியும் நிறைந்தது. சிலுவையில் அறையப்பட்ட கள்வர்கள் ஒருவரை ஒருவர் நன்கு அறிந்தவர்கள், அறிமுகமானவர்கள் என்பது திருமறையை கற்றுக் கொள்ளுகிறபோது உணர முடிகிறது. சிலுவையில் அறையப்பட்ட கள்வன் ஒருவன் நீமேசியா தானே உன்னையிம் எங்களையும் காப்பாற்று என்று இயேசு கிறிஸ்துவைப் பழித்துரைத்தான் (லூக். 23:39). ஆட்சியாளர்கள் இகழ்ந்துரைத்தது போல இறை மைந்தனின் மெசியாத் தன்மையைக் கொச்சைப்படுத்தினான். இயேசு கிறிஸ்துவை அறிந்து உணர்வடைந்து மாற்றம் பெற்ற கள்வன் தன் உயிர் போகும் முன் உண்மையை உலகிற்கு பறைசாற்ற ஆரம்பித்துவிட்டான். இயேசு கிறிஸ்துவை பழித்துரைத்தவனை கடிந்து கொண்டான். இதுவரையிலும் தவறு இழைத்தவன், தவறுக்குத் துணைபோனவன், தவறைக் கடிந்துரைக்க ஆரம்பித்தான். கடவுள் அச்சம் பேசும் இடமாய், தீமையை எதிர்க்கும் இடமாய், கல்வாரி சிலுவை மாறிவிட்டது. கிறிஸ்துவால் மாற்றம் பெற்ற கள்வன் இயேசு கிறிஸ்துவை அறிவித்த விதம் இவர் ஒரு குற்றமும் செய்யவில்லை என்பதே. இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறையக் காரணமான ஆட்சியாளர்களின், சமயத் தலைவர்களின் தீர்ப்பு நியாயமற்றது, தவறானது என்பதை குற்றவாளி அறிவித்தான். குற்றவாளி வாயிலிருந்து இயேசு கிறிஸ்து குற்றமற்றவர் என்பது வெளியிடப்பட்டது. மீட்பின் அனுபவம் என்பது இரண்டு கள்வர்களுக்கு அருகில் தான் இருந்தது. உணர்வடைந்தவன் ஒருவனே. உண்மை என்பது இரண்டு பேருக்கும் இடையில் தான் இருந்தது. புரிந்து அறிந்தவன் ஒருவனே. கள்வனின் சாட்சி சிலுவையை சூழ்ந்து நின்ற அனைவருக்கும் பேர் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும். உடனிருந்த சீடர்கள் ஓடி ஒழிந்த சூழலில் மாற்றம் பெற்ற கள்வன் இயேசு கிறிஸ்துவை மற்றவர்களுக்கு உன்னதராக அறிவித்தான்.

### *3. கிறிஸ்துவோடு பேரின்ப வீட்டில் இணைந்தான்* :

சிலுவையில் மாற்றம் பெற்ற கள்வன் இயேசு கிறிஸ்துவை மற்றவர்களுக்கு அறிவித்தான். இறப்பிற்கு பின் ஓர் அரிய வாழ்வு உண்டு என்பதை அறிந்திருந்தான். இயேசுவே நீர் ஆட்சியுரிமை பெற்று வரும் போது என்னை நினைவிற்கொள்ளும் என்றான் (லூக். 23:42). சிலுவை, கள்வனின் இறைவேண்டலின் இடமாக மாறியது. மரணம் என்பது முடிவல்ல. தொலைநோக்குப் பார்வையோடு இறைவனோடு வாழும் புது வாழ்வின் துவக்கம் என எண்ணினான். சிலுவையில் ஆணிகளால்

அடிக்கப்பட்ட மானுடத்தால் முறையற்று நடத்தப்படுகிற இவருக்கு என்று நிலையான, நிறைவான அரசும், ஆட்சியுரிமையும் உண்டு என்பதை தன் ஆன்மீகக் கண்களால் உணர்ந்தான். இன்றைய உலகத்தில் இருக்கும் அரசும் அதிகாரமும் ஆட்சியும் நிலையானது அல்ல என்பதை உணரத் துவங்கிவிட்டான். இயேசுகிறிஸ்து குற்றவாளியின் எளிய இறைவேண்டலுக்கு பதில் வழங்கினார். அதற்கு இயேசு அவனிடம் நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக சொல்லுகிறேன் என்றார் (லூக். 23:43). பரதீசு என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளதற்கு, அழகியத் தோட்டம், பூங்கா, நந்தவனம், சமாதனத்தின் இடம், இளைப்பாறுமிடம், அமைதியிடம் போன்ற பல பெயர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. யூதர்கள் கடவுளின் அரசு தங்களுக்கு மட்டும் தான் உரியது என்ற குறுகிய மனப்பான்மையோடு வாழ்ந்தனர். இயேசுகிறிஸ்து இவைகளை உடைத்தெறிந்தார். மாற்றம் பெற்ற கள்வனும், கடவுளுடைய அரசில் இணையலாம் என்ற புதிய உண்மையை சிலுவையிலிருந்து ஏற்படுத்தினார்.

பேரின்ப வீட்டில் இணைந்த கள்வனுக்கு இயேசு கிறிஸ்துவின் சிலுவை உண்மையை உணர்ந்து, தன்னை மாற்றுமிடமாக, உன்னதரை அறிந்து, மற்றவர்களை அறிவிக்கும் இடமாக, உன்னதரால் பேரின்ப வாழ்வு பெறுமிடமாக மாறியது. மீட்பைப் பெற்ற கள்வனுக்கு சிலுவை கோயிலானது. சிலுவை, தீமையை எதிர்க்குமிடமானது. சிலுவை ஆன்மீகம் பேசுமிடமானது. எனவே, அந்த நிலைப்பாட்டை நம்மில் வெளிப்படுத்தி அழியா பெருவாழ்வில் இணைவோம்.

திரு. D. **டார்வின் வினோ**

# திருமைந்தரின் பொறுப்பு

யோவா. 19:26,27

**இயேசு தம் தாயையும் அருகில் நின்ற தம் தாயிடம் அருகில் நின்ற தம் அன்புசீடரையும் கண்டு தம் தாயிடம் "அம்மா இவரே உம் மகன் என்றார் பின்னர் தம் சீடரிடம் இவரே உம் தாய்" என்கிறார்.** (யோவா. 19:26,27).

தூய யோவான் நற்செய்தியாளர் இயேசுகிறிஸ்து வானத்திலிருந்து இறங்கிய இறைவனின் தோற்றம் என்பதையும், முழு மனிதன் என்பதையும் பல நிகழ்வுகளின் வாயிலாக தெளிவுபடுத்துகின்றார். இயேசு சிலுவையில் மொழிந்த மூன்றாம் திருமொழி, இயேசுவின் மானிடத் தன்மையைத் தெளிவாக்குகிறது. மானிட மகனாகப் பிறந்தவர் எவரும் தம் தாயின் உள்ளம் அறிந்திருப்பர். எனவே சிலுவையில் தொங்கிய நிலையிலும் சீடனிடத்தில் 'உன் தாய்' என்று மொழிகின்றார். இந்த வார்த்தை கூறும் உண்மை என்ன?

## *1. புதிய உறவை உருவாக்குகின்றார் :*

தூய ஆவியால் மாமரியிடம் தோன்றி, குடும்ப சூழலில் வளர்ந்த இயேசு. தன் பணிக்காலத்தில் இறையரசை நிலைநாட்டுவதில் தீவிர ஆர்வம் கொண்டார். எனவே இறையரசின் நெறிமுறைகளை ஏற்றுக் கொண்டவர்களைத் தந்தையாகவும், தாயாகவும் ஏற்றுக் கொண்டார் (மத். 12:46-50). இவ்வுலக வாழ்வில் தாய்க்குப் பிள்ளை அவசியம் என்றறிந்தவர் ஒரு வற்றாத புதிய உறவை மனித வாழ்வில் ஏற்படுத்துகின்றார். பிறப்பு முதல் தான் சிலுவையில் தொங்குகின்ற நேரம் வரையிலும் அவர் அவரோடு இருக்கின்றார். இன்று பெற்றோர் உயிரோடு இருக்கும் போது பெற்றோரை மதிக்காதவர்கள் பெற்றோர் இறந்த பின்பு அவர்கள் மீது அதிக பாசம் உள்ளவர்களை போல பாவனை செய்கிறார்கள். ஆனால் தன் தாய் தனிமையில் வாடக்கூடாது என்பதற்காக புதிய உறவை, தன் சீடனை அவருக்கு மகனாக மொழிகின்றார்.

## *2. புதிய பொறுப்பை ஒப்படைக்கின்றார் :*

எல்லா நிலையிலும் தன்னோடு இருந்த சீடனுக்கு ஒரு புதிய உறவைக் கொடுத்த நிலையிலும் ஒரு புதிய பொறுப்பை ஒப்படைக்கின்றார். தன் தாயை கவனிக்க வேண்டும், தான் விட்டுச் சென்ற பணியை தன் சீடன் தொடர வேண்டும். யூத சமுகத்தில் பெற்றோரைக் கவனிக்க இயலாதவர்கள் கொர்பான் என்ற காணிக்கை செலுத்தினால் அவர்கள்

கடமை முடிந்தது என்கின்ற நிலை இருந்தது. ஆனால் தாய் கவனிப்பார் அற்றவர் என்ற நிலை வரக்கூடாது என்பதற்காக ஒரு பொறுப்பை இயேசு ஒப்படைக்கின்றார். பெலிக்கான் என்கிற பறவை தன் குஞ்சு பறவைக்கு இரை தேடிக் கொண்டு தன் குஞ்சுகளின் பசியைப் போக்கும். தீராத கடும் பசி வருகின்ற போது தன் உடலை அதற்கு உணவாக கொடுக்கும். தான் தாய் என்ற பொறுப்பை அது நிறைவேற்றும் இவ்வுலக வாழ்வில் குழந்தைகளாகப் பிறந்த எல்லோருக்கும் பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது. தன் பெற்றோரை கவனிக்க வேண்டும் என்பது பெற்றோரை கவனிக்காதவர்கள் கொலை செய்யப்பட வேண்டும் தான் அந்த பொறுப்பு (மத். 15:4).

வாழ்வில் பல உறவுகள் தேடி வரும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாத நிலையில் அவை கடந்து போகும். சில உறவுகள் சந்தர்ப்பத்திற்காக காத்திருக்கும். ஆனால் எந்த எதிர்பார்ப்பும் இல்லாது வாழ்கின்ற நாள் வரைக்கும் தன்னை வெறுத்து, பிள்ளைகளுக்காக வாழக்கூடியவள் தாய் மட்டுமே. எனவே, நாம் நமது வாழ்வில் ஆண்டவர் சிலுவையில் மொழிந்த மூன்றாவது வார்த்தையின் அர்த்தத்தை உணர்ந்தவர்களாய் இறையரசைக் கட்டி எழுப்புவோம்.

திரு. S. **பிளஸ்லின்**

# திருமைந்தரின் பெருமூச்சு

மத். 27:45-50

**"என் இறைவா என் இறைவா ஏன் என்னை கைவிட்டீர்"** (மத். 27:46)

ஒரு மெழுகுவர்த்தி எரிய ஒரு தீக்குச்சி தன்னை இழக்க வேண்டும். அதன் இழப்பால் எரியும் மெழுகுவர்த்தி பல மெழுகுவர்த்தியை எரியவைத்து ஒரு பெரிய ஒளி பிம்பத்தை உருவாக்க முடியும். மலரானது நறுமணம் வீச வேண்டுமானால் அது மலர்ந்தாக வேண்டும். மலர்ந்து விட்டால் காய்ந்து கருகிவிட்டோமே என்று சிந்தித்தால் அந்த மலரால் எவருக்கும் நறுமணத்தைக் கொடுக்கமுடியாது. விதையானது மரமாகி பல கனிகளைக் கொடுக்க வேண்டுமானால் அது பூமிக்குள் விழுந்து தனது உருவத்தை இழக்க வேண்டும். இவ்வாறு ஒன்றின் இழப்பு பலருக்கு பயன்தருவதாக அமைகிறது.

இயேசுகிறிஸ்துவும் தீமையில் வாழும் மனுக்குலம் வாழ்வு பெறத் தன்னையே இழக்க ஒப்புக்கொடுத்தார். இரத்தம் சிந்துதல் இல்லாமல் மீட்பு இல்லை என்பதால் தன்னையே தியாக பலியாக ஒப்புக்கொடுத்து அத்தனை பாடுகளையும் தன்னகத்தே ஏற்றுக் கொண்டார். கொல்கதா மேட்டிலே, கோரச் சிலுவையில், ஆணிகளால் அறையப்பட்டு, வலியின் உச்ச கட்டத்தில் முதல் மூன்று சிலுவை மொழிகளை பிறர் வாழ்வு பெறுவதற்காக மொழிந்தார். தொடர்ந்து மதியம் பன்னிரண்டு மணி முதல் மூன்று மணிவரை இருள் சூழ்ந்தது. இயேசுகிறிஸ்து பிறந்தபொழுது விண்சுடர் இருட்டிலும் ஒளிவீசி வழிகாட்டியது. இயேசு மனுக்குலம் வாழ்வு பெறுவதற்காய் தம்மையே பலியாக ஒப்புக் கொடுத்த போது நண்பகலிலும் சூரியன் ஒளி கொடுக்க விடாமல் இருள் சூழ்ந்து கொண்டது. அந்நாளில் நண்பகலில் கதிரவனை மறையச் செய்து பட்டப் பகலில் உலகை இருள் சூழச் செய்வேன் (ஆமோ. 8:9) என்ற வார்த்தை நிறைவேறுகிறது.

இருள் அகன்று கதிரவன் வெளிச்சம் கொடுத்ததும் அமைதியாக சிலுவையில் பேசிக் கொண்டிருந்தவர் நான்காம் வார்த்தையை உரத்த குரலில் கூறுகிறார். எத்தனையோ வியாகுலங்களை அவர் இதுவரை தாண்டி வந்திருக்கிறார். ஆனால் கடவுள் அவரை கைவிட்டது போன்ற தொனியில் எதுவும் பேசியதில்லை. எப்போதும் "தந்தை" என்று அழைக்கிறவர் இப்போது "என் இறைவா என் இறைவா ஏன் என்னை கைவிட்டீர்" என்று உரத்த குரலில் பேசினார். வழக்கத்துக்கு மாறாக, இயேசுகிறிஸ்து பேசிய இந்த வார்த்தை நமக்கு உணர்த்துகின்ற சிந்தனைகள் என்ன?

### *1. இறை உறவின் வாக்கு :*

இயேசுகிறிஸ்து இந்த உலகில் வாழ்ந்த போது தனக்கும் தந்தைக்கும் இருந்த உறவை கூறியிருந்தார். நானும் தந்தையும் ஒன்றாய் இருக்கிறோம் (யோவா. 10:30). என்னைக் காண்பது தந்தையைக் காண்பது (யோவா. 14:9), நான் தந்தையினுள்ளும் தந்தை என்னுள்ளும் இருக்கிறார் (யோவா. 14:10). இன்னும் முதல் சிலுவைமொழியிலும், ஏழாம் சிலுவைமொழியிலும் தந்தையே என்று ஒரு முறை அழைக்கிறார். ஆனால் நான்காம் திருமொழியில் ஒரு முறை அல்ல இரண்டு முறை என் இறைவா என் இறைவா என்று அழைப்பதால் இயேசுவுக்கும் அவரது தந்தை மீது இருந்த பாசம் குறையவில்லை. மாறாக, அதிகரித்தது என்பதை உணரவேண்டும்.

கைவிடுபவர்களை வெறுப்பது மனித இயல்பு. இயேசு மனிதராக வாழ்ந்தும் மனித இயல்போடு செயல்படவே இல்லை. ஏனென்றால் இயேசுவுக்கு அவரது தந்தையைப் பற்றி நன்றாகத் தெரியும். அவர் கைவிடுவதெல்லாம் கொஞ்ச நேரத்திற்குத்தான். (நொடிப்பொழுதே நான் உன்னை கைவிட்டேன் ஏசா. 54:7). இந்த சிறுது நேரத்திற்கு கடவுளின் கைவிடுதலைப் பொறுத்துக் கொள்வதே பொருத்தமானதாக இயேசு நினைத்தார். அவர் அனுபவித்துக் கொண்டிருக்கும் அனேக வேதனைகளுடன் கூடுதலாக தந்தையின் ஐக்கியமின்மை என்ற அனுபவமும் சேர்ந்து கொண்ட போது அவர் ஒரு கணம் நிலை குலைந்து போகின்றார். அதன் விளைவாகத் “தந்தை” என்று எப்போதும் உச்சரித்த அவருடைய வாய் இப்போது “இறைவா இறைவா” என்று உச்சரித்தது.

இயேசுவின் காலத்தில் கடவுளை மிக உயர்ந்த நிலையில் வைத்து பார்த்தார்கள். கடவுளின் பெயரைக் கூட மிகுந்த பக்தியுடன் உச்சரித்தார்கள். ஆனாலும் அவர்களுக்கும் கடவுளுக்கும் இடையே நெருங்கிய உறவோ ஐக்கியமோ இருந்தது இல்லை. அவரை தங்களின் வழிபடுவதற்குரியவர் என்ற நிலையில் பார்த்தார்கள். தங்களின் அன்பிற்குரியவர்கள் என்ற நிலையில் கடவுளைப் பார்க்கவில்லை. அவர்கள் கடவுளை நினைக்கும் போதெல்லாம் நெருங்கி சேர முடியாத ஒரு கடவுளாகவே அவரை கற்பனை செய்தார்கள்.

இயேசுகிறிஸ்து கடவுளைக் குறித்து ஒரு மாறுபட்ட தோற்றத்தை வெளிப்படுத்தினார். பாசமிகு தந்தை மகன் என்ற உறவைக் காண்பித்தார். கடவுளுக்கு மிகவும் நெருக்கமான ஒருவராக தம்மைக் காண்பித்தபோது யூதர்கள் அதனை தேவதூஷணம் என்று கூறி அவரைக் கல்லெறிந்து கொல்ல திட்டமிட்ட வேளைகள் உண்டு. இச் சூழலில் கடவுளோடுள்ள நெருங்கிய உறவுக்கு முக்கிய காரணம் இறைப்பிரசன்னம் அவரோடு

இருந்ததுதான். நண்பகலில் இருள் சூழ்ந்த போது இறை பிரசன்னம் இயேசுவிடமிருந்து விலகிச் சென்றிருக்கலாம். இருள் அகன்று இறை பிரசன்னம் தொடர்ந்ததும் உரிமையோடு நம்பிக்கையோடு என் இறைவா என் இறைவா என்று தன் உறவை வலுப்படுத்துகிறார். நம் வாழ்விலும் பாடுகள், நெருக்கங்கள் வரும் போது இயேசு போல் கடவுளோடு உள்ள உறவை வலுப்படுத்த வேண்டும்.

### *2. இறை நம்பிக்கையின் வாக்கு :*

இயேசு கிறிஸ்து இறைபற்றுள்ள யூத குடும்பத்தில் பிறந்து, வளர்ந்து, யூதத் திருமறையை நன்கு கற்றறிந்திருந்தார். பல திருப்பாடல்கள் அவருக்கு மனப்பாடமாக தெரிந்திருக்க வேண்டும். தன் வாழ்க்கையின் மிகவும் இக்கட்டான நேரத்தில் அவர் மனப்பாடமாக 22 -ஆம் திருப்பாடலின் முதல் திருமொழியைக் கூறி தம் ஆன்மீக அனுபவத்தை வெளிப்படுத்துகிறார்.

தி.பா 22-க்கு சாமுவேல் தெரியன் என்பவர் “கைவிடப்பட்ட நிலையிலிருந்து நிறைவுறும் நிலைக்கு” (from Dereliction to fulfilment) என்ற தலைப்பைக் கொடுக்கிறார். ஜியார்ஜ் A. எஃப்கிளைட் என்பவர் “ஏகாந்தமான் இளைப்பாறுதலைக் கண்டது” (The lonely Deer finds Rest) என்ற தலைப்பைக் கொடுக்கிறார். இந்த திருப்பாடல் ஒரு புலம்பல் பாடல் ஆகும். இந்த பாடலுக்கு ஓர் குறிப்பிட்ட அமைப்பு உண்டு. துன்ப நிலையிலிருந்து எழுப்பப்படும் ஏக்கத் தெளிவுடன் தொடங்கும். அடுத்ததாக ஆசிரியர் தம்முடைய கைவிடப்பட்ட நிலையையும் தம் எதிரிகளின் கை வலுவாய் இருக்கும் நிலையை விவரிக்கும் புலம்பல் பகுதி இது.

இயேசுகிறிஸ்துவும் இந்த பாடலின் தன்மைகளை உணர்ந்து அதைச் சொல்லத் தொடங்கி தம்முடைய நம்பிக்கையை உறுதிப்படுத்த முயற்சித்திருப்பார். என் இறைவா என் இறைவா ஏன் என்னை கைவிட்டீர் என்ற வார்த்தை நம்பிக்கையின்மையின் புலம்பல் அல்ல. மாறாக, நம்பிக்கையின் உரிமையோடு அழைக்கும் தருணம். இது கடவுள் மீது இயேசு கிறிஸ்து வைத்திருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கையை காட்டுகிறது. இந்த சிலுவை மொழி நம்பிக்கை அழந்த ஒருவரின் ஓலமல்ல. மாறாக பயங்கர நெருக்கடியிலும் கடவுளை விடாது பற்றிப் பிடித்துக் கொள்ளும் ஒருவரது நம்பிக்கை அறிக்கையாக மாற வேண்டும்.

### *3. இறை மீட்பின் வாக்கு :*

நாம் நமது குழந்தைகளுக்கு நடக்க கற்று கொடுக்கும் போது குழந்தையின் கைகளை பிடித்து நடத்துவோம். பின் கொஞ்சம் கொஞ்சமாக கைகளை விட்டு விடுவோம். குழந்தை கீழே விழட்டும் என்று அல்ல

தானாக நடக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்திலும் செய்வோம். அப்படிப்பட்ட கைவிடுதலில் தான் அந்த குழந்தையின் எதிர்கால நம்பிக்கை இருக்கிறது. தந்தையாகிய கடவுள் மைந்தராகிய இயேசுகிறிஸ்துவை உலக மக்கள் பாவ வாழ்விலிருந்து தூய வாழ்விற்கு திரும்ப வேண்டும் என்ற நல்ல நினைப்பிலே கைவிட்டார் என்று புரிவது நல்லது. மனித குலம் மீட்படைய தந்தையாகிய கடவுளும் மைந்தராகிய இயேசுவும் மிகப் பெரிய தியாகத்தை செய்துள்ளனர்.

இந்த தியாகத்தை இறையியலாளர் மீட்பு பலி கோட்பாடு வழியாக விளக்குகின்றார். மனிதன் பாவம் செய்ததால் கடவுளுக்கும் மனிதனுக்கும் இருந்த உறவு துண்டிக்கப்பட்டது. இந்த உறவைப் புதுப்பிக்க கடவுள் உடன்படிக்கை செய்தார். “என் மகனை பாவம் போக்கும் பலியாக உன்னிடம் தருகிறேன் மக்களிடம் இருக்கும் பாவத்தை எல்லாம் என் மகன் ஏற்பார். மனுமக்களை என்னிடம் தந்துவிடு” என்று விளக்குகிறார்.

இயேசுகிறிஸ்து பாவத்தை சுமந்த போது கடவுளோடு உள்ள உறவு துண்டிக்கப்பட்டிருக்கலாம். ஏசா. 52:2-ல் “உங்கள் தீச் செயல்களே உங்களுக்கும் எங்கள் கடவுளுக்கும் இடையே பிளவை உண்டாக்கியுள்ளன. உங்கள் பாவங்கள் அவர் செவிசாய்க்காதவாறு அவரது முகத்தை உங்களுக்கு மறைத்துள்ளது”. மனுமக்களின் பாவத்தினிமித்தம் ஆண்டவரின் முகம் இயேசுவுக்கு மறைக்கப்பட்ட போது மூன்று மணி நேரம் காரிருள் சூழ்ந்திருக்கலாம். அந்த மூன்று மணி நேரத்தில் எப்படி ஒரு தாய் மிகக் கொடிய வலியினூடாய் குழந்தையை ஈன்றெடுக்கிறாளோ அதுபோல இயேசுகிறிஸ்துவும் சிலுவையில் நம் பாவங்களை ஏற்றுக் கொடிய வலியினூடாய் மீட்பை ஈன்றெடுத்திருப்பாள். மூன்றாம் மணி நேரம் காரிருள் அகன்ற போது கடவுளோடுள்ள தொடர்பை பெற்று பாடுகளின் நடுவில் மீட்பை வழங்கினவராய் “என் இறைவா என் இறைவா ஏன் என்னை கைவிட்டீர்” என்கிறார்

இயேசு சிலுவையில் மொழிந்த இந்த வார்த்தை நமக்கும் ஆண்டவருக்கும் இடையேயுள்ள உறவை வலுப்படுத்தி உரிமையோடு அவரிடம் உறவாட வழிவகுக்கின்றது. வாழ வழியின்றித் தவிக்கும் போது கடவுள் கைவிடுகிறவர் அல்ல என்ற நம்பிக்கையை வலுவூட்டுகிறது. பாவத்தில் வாழ்கின்ற நமக்கு மீட்பை வழங்குகிறது. நாம் கைவிடப்படாதபடிக்கு நமக்காக இமைப்பொழுது கைவிடப்பட்ட சிலுவைநாதரோடுள்ள உறவைப் புதுப்பித்து நம்பிக்கையோடு மீட்பைப் பெற்றுக் கொள்வோம்.

திரு. J. ***பிறைட் சிங்***

# திருமைந்தரின் பேரார்வம்

யோவா. 19:28,29

**"தாகமாயிருக்கிறது"** (யோவா. 19:28)

மனிதர்கள் ஒவ்வொருவருடைய வாழ்விலும் பல ஆசைகள் உண்டு பலருடைய ஆசைகள் அவர்களுடைய வாழ்வின் போதே நிறைவேறுகின்றன. பலரின் ஆசைகள் அவர்களின் வாழ்விற்குப் பிறகு நிறைவேறுகின்றன. சிலரின் ஆசைகள் நிறைவேறாமலேயே போய்விடுகின்றன.

பொதுவாக மனிதர்களின் மரணத்தருவாயின் போதும், மரணத்தண்டனையை பெற்றவர்களுடைய தண்டனையை நிறைவேற்றுவதற்கு முன்பாகவும், அவர்களின் நிறைவேறாத ஆசைகளை நிறைவேற்ற முயலும் வழக்கம் நிகழ்காலத்தில் உண்டு. கல்வாரி சிலுவையில் தன் மரணத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் நிலையில் தாகம் ஏற்படுவது இயல்பு. ஆனால் இயேசு வெளிப்படுத்திய தாகம், வெறும் உடல் சார்ந்த தாகம் அல்ல. மாறாக அது மனிதரில் நிறைவேற தான் விரும்பிய சில ஆசைகளை குறித்த தாகம். அது எத்தகைய தாகம் என சிந்திப்போம்.

## *1. மனுமக்கள் மீட்படைய வேண்டும் என்ற தாகம் :*

சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் இயேசு மனுமக்களின் மீட்பு குறிக்கு தனது தாகத்தை வெளிப்படுத்துகின்றார். இஸ்ரவேலரை மீட்டு அவர்கள் வாழ்விற்கு பொருள் கொடுப்பதற்காகவே இயேசு வந்தார். ஆனால் இஸ்ரவேலோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. தங்களை மீட்க வந்த மீட்பராம் மெசியாவை புறம் தள்ளினர். மக்கள் மீண்டும் மீண்டும் தங்களை பாவச் செயல்களுக்கு உட்படுத்தினர். இத்தகைய மக்களின் பாவச் செயல்களைக் கண்டு இயேசு மனம் வருந்தினார். லூக்கா 19:21-ல் இயேசு, மனிதன் பாவத்தினால் தன்னை இழந்து விட்டதற்காகவும், மனதிரும்ப மறுத்ததற்காகவும், மீட்பை ஏற்றுக் கொள்ளாததற்காகவும் வேதனைப்பட்டு, எருசலேம் நகரத்தைப் பார்த்து அழுகிறார். அது மட்டுமல்ல தன் வாழ்வின் இறுதி வேளையிலும் சிலுவை மரத்திலிருந்து மனுமக்களை பாவ வாழ்விலிருந்து மீட்படைய வேண்டும் என்ற தன் ஆசையை "தாகமாய் இருக்கிறேன்" என்று கூறி வெளிப்படுத்துகிறார். ஆண்டவரின் இந்த தாகத்தை தீர்க்க நாம் ஆயத்தப்படுவோம்.

## *2. அநீதி நீங்க வேண்டும் என்ற தாகம் :*

சிலுவையிலிருந்து வெளிப்படும் கிறிஸ்துவின் தாகம், உலகில் அநீதி நீங்க வேண்டும் என்பது. தன் திருப்பணி காலத்தில் உலகில் நீதி

நிலைநாட்டப்பட வேண்டும் என்று இயேசு விரும்பினார். தனது மலைப்பொழிவின் போது இயேசு அளித்த பழைய ஏற்பாட்டு சட்டத்திற்கு மாற்றான மனித நேய போதனையில் “நீதியை நிலைநாட்டும் வேட்கை உடையோர் பேறுபெற்றோர்” (மத். 5:6) என்று தனது நீதிக் குறித்த வேட்கையை வெளிப்படுத்தும் அவர், நீதியின் பொருட்டு துன்புறுத்தப்படுவோர் விண்ணரசைப் பெறுவர் (மத். 5:10) என்றும் கூறுகிறார். அதுமட்டுமல்ல இயேசு அநீதியை கண்டிக்கிறார். மத். 11:15-19-ல் கோவிலைத் தூய்மையாக்கும் இயேசு, வாணிபம் என்ற பெயரில் ஆலயத்தில் நடைபெற்ற அநீதியான செயல்களை அகற்ற முயல்கிறார். உலகமெங்கும் அநீதி நீங்க வேண்டும், நீதி நிலைநிறுத்தப்பட வேண்டும் என்பதே இயேசுவின் விருப்பம். அதையே தன் மரண வேளையிலும் “தாகமாய் இருக்கிறேன்” என்று கூறி வெளிப்படுத்துகிறார். ஆண்டவரின் இந்த தாகத்தை தீர்க்க நாம் முயல்வோம்.

### *3. எளியவர்கள் வாழ்வு பெற வேண்டும் என்ற தாகம்* :

சிலுவை மரத்திலிருந்து இயேசு, எளியவர்கள் வாழ்வு பெற வேண்டும் என்ற தாகத்தை வெளிப்படுத்துகிறார். இவ்வுலக திருப்பணியில் எளியவர்கள் மீது அதிக கரிசனை கொண்ட இயேசு, அவர்களைத் தேடிச் சென்று நற்செய்தி அறிவித்தார். மத். 6:21,22-ல் ஏழைகளும், பட்டினியாய் இருப்போரும் பேறுபெற்றோர் என்று கூறும் இயேசு, அவர்கள் இறையாட்சிக்குரியோர் என்றும், நிறைவு பெறுவோர் என்றும் குறிப்பிடுகின்றார். இவ்வுலகில் ஒடுக்கப்படும் ஏழைகள், நிலைவாழ்வில் ஆனந்தத்தை பெறுவர் என்ற உண்மை, செல்வரும், லாசரும் உவமையில் (லூக். 16:19-31) சுட்டிக்காட்டப்படுகின்றது. இன்றும் உலகில் எளியவர்கள் மூன்றாம் தரமானவர்களாகவே கருதப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மிக சிறியவராகிய அவர்கள் உதவி பெற்று வாழ்வில் உயர வேண்டும் என்று இயேசு விரும்புகிறார் (மத். 25:40). இந்த தனது ஆவலையே “தாகமாய் இருக்கிறது” என்று சிலுவையிலிருந்து தன் வாழ்வின் நிறைவு தருணத்தில் வெளிப்படுத்துகிறார். ஆண்டவரின் இந்த தாகத்தை தீர்க்க நாம் ஆயத்தமாவோம்.

சிலுவையில் இயேசு வெளிப்படுத்துவது வெறும் உடல் சார்ந்த தண்ணீர் தாகமல்ல. மாறாக, அது உலக மக்களின் வாழ்வு சார்ந்த தாகம். அது மனுமக்கள் மீட்படைய வேண்டும், உலகில் அநீதி நீங்க வேண்டும், எளியவர்கள் வாழ்வு பெற வேண்டும் என்ற தாகமாக காணப்படுகின்றது. இயேசுக்கிறிஸ்துவின் தாகம் தணிக்க திருச்சபையாகவும், இறைமக்களாகவும் நாமும் செயல்படுவோம், நாமும் இயேசுவைப் போல் தாகம் கொள்வோம்.

திரு. **டே.சா. எபநேசர் சாமுவேல்**

# திருமைந்தரின் பெருமிதம்
## "முடிந்தது"

யோவா. 19:29,30

**"....எல்லாம் நிறைவேறிற்று என்று கூறித் தலை சாய்த்து ஆவியை ஒப்படைத்தார்"**
(யோவா. 19:29,30)

உலகத்தின் மீட்பராக மனிதரின் பாவம் தீர்க்க வந்த இயேசு கிறிஸ்துவின் வெற்றியின் முழக்கம் "முடிந்தது" என்ற நிறைவின் திருவாக்கு. "எல்லாம் நிறைவேறிற்று" என்ற வார்த்தை "End" என்ற நிறைவை வெளிப்படுத்துகிறது. "தெற்றலஸ்தாய்" (tetelestai) என்பது அதன் கிரேக்க வார்த்தை மானிடமகனுக்கு இருந்த விருப்பம் அவரது தியாகத்தையே சார்ந்திருந்தது. யோவா. 4:34 -ல் "என்னை அனுப்பியவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதும் அவர் கொடுத்த வேலையைச் செய்து முடிப்பதுமே என் உணவு" என் அருள் நாதர் இயேசு குறிப்பிடுகின்றார். ஆக "தாகமாயிருக்கிறது" என்று சொன்ன இயேசு கிறிஸ்துவின் தாகத்திற்கு காடியை வாங்கினபின் தனக்கு என்று ஏற்படுதின பணி நிறைவேறிற்று என்கிறார். ஒரு மனிதன் தன் வாழ்வில் அனேக செயல்களைச் செய்ய ஒவ்வொரு நாளும் விரும்பிக் கொண்டே இருப்பான், மாத்திரமல்ல அதை செய்யவும் ஆரம்பிப்பான். ஆனால் எல்லா செயல்களையும் செய்து முடிப்பதில்லை. ஒரு சில செயல்கள் செய்து முடித்தாலும், மற்ற செயல்களை செய்ய மறந்தும், மறுத்தும் விடுகிறான். தன் லட்சியத்தையே மறந்து போகின்ற நிலை. ஆனால் இயேசுகிறிஸ்து தன்னை அனுப்பினவருடைய திருவுளத்தை நிறைவேற்றுவதே தன் விருப்பம் என முன் வைத்து, அந்த விருப்பத்தை 33 ½ வருடத்தில் சிறப்பாய் செய்து முடிக்கின்றார். எல்லாம் நிறைவேறிற்று என்ற வார்த்தையின் நிறைவு என்ன என்பதை இங்கு காண்போம்.

### *1. இறையவரின் திருவுளம் நிறைவேறிற்று* : யோவா. 19:28

எப்படி இறையவரின் திருவுளம் நிறைவேறிற்று என்ற கேள்விக்கு, இறைவாக்குகள் நிறைவேறினது பதிலாகின்றது. கழுதையின் மேல் ஏறிவருவார் என்ற செக்கரியாவின் திருவாக்கு நிறைவேறிற்று. (செக். 9:9) முப்பது வெள்ளிக் காசுக்காக காட்டிக் கொடுப்படுவார் என்ற தாவீதின் வாக்கு நிறைவேறிற்று. மட்டுமல்ல, கொடுமையாக நடத்தப்பட்டு கொலை செய்யப்படுவார் என்ற ஏசாயாவின் வாக்கு நிறைவேறிற்று. மத். 4:17-ல் "மனம் மாறுங்கள் ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது" என்னும் செய்தி

வழியாய் தன் நற்செய்திப் பணியை ஆரம்பித்தவர், இறை சித்தம் நிறைவேற தன்னை ஒப்புக்கொடுக்கின்றார். யோவா. 17:4-ல் தனக்கு கொடுக்கப்பட்ட வேலையை செய்து முடித்து உம்மை மாட்சிபடுத்தினேன் என சான்று பகருகின்றார். அவர் சிலுவையின் கொடூரத்தை நிறைவேற்றுகின்ற வேளை அது தன் வேலையை செய்து முடிக்கின்ற வேளையாய் அமைகின்றது. இயேசு கிறிஸ்து தான் இறைசித்தத்தை நிறைவேற்றியது போல நாமும் செயல்பட அழைக்கின்றார். மத். 12:50-ன் படி "விண்ணகத்திலுள்ள என் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் சகோதரரும், சகோதரியும் தாயும் ஆவார்" என அவர் உறவுக்குள் நம்மை இணைக்கின்றார்.

## *2. இறைமக்களை மீட்கும் பணி நிறைவேறிற்று* :

சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் தன் கொடூரத்தின் நடுவில், தான் உலகில் உருவானதின் நோக்கம், அதாவது மனுக்குலத்தை மீட்கும் பணி நிறைவேறிற்று என்கிறார். இயேசு கிறிஸ்து ஒரே ஒரு முறை பலியானதால் நாம் தூயவராயிருக்கிறோம் என எபி. 10:10-ல் பவுல் குறிப்பிடுகின்றார். எப்படி ஒரு மனிதன் குழிக்குள் விழுகின்ற போது மற்றவர் கைகொடுத்து தூக்குகின்றாரோ அதே போல் மனுக்குலம் பாவத்தில் விழுந்த போது இயேசுகிறிஸ்து தன்னை பலியாக கொடுத்து மீட்டுக் கொள்கின்றார். யோவா. 18:36-ல் "என் ஆட்சி இவ்வுலக ஆட்சி போன்றது அல்ல" என மனிதனின் மீட்பையும் இறைவுளத்தையும் வெளிப்படுத்துகின்றார். கலா. 3:13-ன் படி "மரத்தில் தொங்கவிடப்பட்டோர் சபிக்கப்பட்டோர்" என்று எழுதியுள்ளவாறு நமக்காக கிறிஸ்து சாபத்துக்கு உள்ளாகி நம்மைச் சட்டத்தின் சாபத்தினின்று மீட்டுக் கொண்டார் என பவுல் குறிப்பிடுகின்றார். ஆக மனுக்குலத்தை மீட்க அவர் சாபமாம் சின்னத்தை ஏற்றுக் கொண்டு அதை தூய்மையின் அடையாளமாக மாற்றினது போல மனுக்குலத்தை பாவத்திலிருந்து மீட்கும் பணியை நிறைவேற்றுகின்றார். "முடிந்தது" அல்லது "எல்லாம் நிறைவேறிற்று" என்ற வார்த்தை முழுமை பெற்று புது வாழ்வை தொடங்குகின்றது.

நாமும் இறையவரின் திருவுளம் நம்மில் நிறைவேற நம்மை அர்ப்பணிப்போம். மனுக்குலத்தை மீட்கும் பணியை நிறைவேற்றிய இறை இயேசுகிறிஸ்துவின் அன்பை நிறைவாய் அனுபவித்து பிறருக்கும் கொடுப்போம். "எல்லாம் நிறைவேறிற்று" என்ற வார்த்தை நிறைவின் வார்த்தை என்பதை உணர்ந்து செயல்படுவோம்.

திரு. G.D. **ஜியோபிரே ஷைன்**

# திருமைந்தரின் பெருமைக்குரிய கையளிப்பு

லூக். 23:44-46

**"தந்தையே, உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்" என்று இயேசு உரத்த குரலில் கூறி உயிர் துறந்தார்.** (லூக். 23:46).

"....உயிர் மூச்சை ஊத மனிதன் உயிருள்ளவன் ஆனான்" (தொநூ. 2:7b) படைப்புகள் எல்லாவற்றிற்குள்ளும் உயிர் மூச்சு இருக்கின்றது. இது இறைவனின் அருட்கொடை. இந்த உயிர் மூச்சு நமக்கு நிரந்தரமானது இல்லை. இவ்வுலக வாழ்வில் நாம் அனைவருமே எங்கிருந்து உயிர் மூச்சை பெற்றோமோ அங்கே நாம் ஒப்புக் கொடுக்க வேண்டியது தான். அதுவரையும் இவ்வுலகில் நாம் இயங்க முடியும். உயிர் மூச்சைத் தரவும் அதை வாங்கிக் கொள்ளவும் உரிமையுடையவர் படைப்புகளின் ஆண்டவர் (திபா. 104:29). அவர் தம் மைந்தர் உயிர் மூச்சையும் பெற்றுக் கொண்ட நிகழ்வுதான் **"தந்தையே, உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்"** (லூக். 23:46) என்ற ஒப்படைப்பு. இந்த நிகழ்வு நம் அனைவரையும் சிந்திக்கத் தூண்டுகின்ற ஒன்று. பொதுவாக இறப்பை எதிர்நோக்கிக் காத்திருப்போர் தாங்க முடியாத இறுதிநாள் பயத்தோடும் பதற்றத்தோடுமே இருப்பர். சிலர் நல்வாழ்வு வாழ்ந்தோர் இறுதி நாட்களில் பாடல்களைப்பாடியே, இறைவேண்டலோடே இறப்பை அடைவர். ஆனால் இங்கு இறைமகனாம் இயேசு தனது உயிர் மூச்சை தந்தையிடம் துணிவோடு ஒப்படைத்த நிகழ்வு அனைவரையும் வியப்புக்குள் ஆக்கியது. இந்த நிகழ்வு நமக்கு கற்றும் தரும் பாடம் என்ன என்பதை ஆராய்வோம்.

## *1. நேர்மையின் ஒப்படைப்பு :*

நேர்மையாளர் களங்கமற்ற வாழ்வு வாழ்வோர் (நீதி. 20:7), (திபா. 112:6). நேர்மையுள்ளோர் மக்கள் மனதில் என்றும் வாழ்வர். இவையனைத்தும் நேர்மையாளரின் வெளிப்பாடுகள். இயேசுகிறிஸ்துவும் ஓர் சிறந்த நேர்மையாளர். அனைத்து மக்களையும் நேர்மையோடு வாழ்வதற்கு வழிவகுத்தவர்; வாழ்ந்து காட்டினார். இக் கூற்றை நூற்றுவர் தலைவரின் அறிக்கையால் நாம் அறிய முடியும் (லூக். 23:47). "இவர் உண்மையாகவே நேர்மையாளர்" எனக் கூறுகின்றார். மட்டுமல்ல, அவரின் இத்தகைய ஒப்படைப்பை கண்ட இம்மனிதர் பெயர் சொஞ்சினு என்றும், இவர் பிற்காலத்தில் இரத்த சாட்சியாக மரித்தார் என்றும் பாரம்பரியம்

கூறுகிறது. அப்படியானால் இயேசுவை சிலுவையில் அடித்துக் கொன்று வேடிக்கை பார்த்து மகிழ்ந்த நூற்றுவர் தலைவன் மனமாற்றம் அடைகிறான். மட்டுமல்லாது இயேசுவின் தொண்டனாய் மாறினான். நேர்மையாய் வாழ்ந்த இயேசுவை நேர்மையற்றோர் அழித்துவிடலாம் என்றிருந்த போது அவரின் துணிவான உயிர் மூச்சு இறுதி நொடிப்பொழுதிலும் நேர்மையற்றோரை மாற்றியது. நாம் நேர்மையாளராம் இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றி நேர்மையாய் வாழ நம்மை ஒப்படைத்து ஆசி பெறுவோம்.

### *2. நம்பிக்கையின் ஒப்படைப்பு :*

இறைமகன் இயேசுகிறிஸ்து 33½ ஆண்டு கால வாழ்விலும் ஒரு முழுமையான வாழ்வு அமைந்தது. சிலுவைத் திருமொழிகளின் இறுதி வார்த்தை முழுமையின் வெளிப்பாடு ஆகும். “என் ஆவியை ஒப்படைத்தேன் தந்தையிடம்” என்ற இயேசுவின் உரத்த குரலில் ஓர் உன்னதமான நிறைவு காணப்பட்டது. இளம் வயது தான், ஆனால் அவரின் பணிகள் இன்றியமையாதது. விண்ணகத் தந்தையின் திருவுளச் சித்தம் எது என்பதை உணர்ந்து நிறைவேற்றிய உன்னத் குரல் தான் இந்த இறுதிக் குரல். ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் இந்தக் குரல் வெற்றியின் வெளிப்பாடு. அது ஒரு நம்பிக்கையின் வெளிப்பாடு. “அவர்களது வாழ்வின் நிறைவை எண்ணிப்பார்த்து, நீங்களும் அவர்களைப் போல நம்பிக்கையுடையவர்களாய் இருங்கள்” என்று எபிரேய நிருபத்தின் ஆக்கியோன் தெளிவுபடுத்துகிறார். (எபி. 13:7) அத்தகைய நம்பிக்கையில் முன்னேறி இறை ஆசியினைப் பெற்றுக் கொண்டு முன்னேறிச் செல்வோம்.

இந்த சிலுவை மொழியை தியானித்துக் கொண்டிருக்கின்ற நாம் ஒப்படைப்பை முன் மாதிரியாகக் காண்பித்து தந்த, நேர்மையின் வாழ்வையும், நம்பிக்கையும் பின்பற்றி வாழ்ந்து பிறருக்கு முன் மாதிரி காட்டி வாழ்வில் ஆசி பெறுவோம்.

திரு. G.R. **ஜெப சிங்**

# புதிய மாத நன்றித் தொழுகை
# அருளுரைகள்

01-02-2019

புதிய மாத தொடக்க அருளுரை

# நம்பிக்கையூட்டும் ஆண்டவர்

தி.பா. எசாயா 40:26-31

**“ஆண்டவர்மேல் நம்பிக்கை வைத்திருப்பவர்களோ புதிய ஆற்றல் பெறுவர். கழுகுகள்போல் இறக்கை விரித்து உயரே செல்வர்; அவர்கள் ஓடுவர்; களைப்படையார்;நடந்து செல்வர்; சோர்வடையார்.”** (எசாயா. 40:31)

உயிருள்ள ஆன்மீக வாழ்விக்கான இரத்த ஓட்டமே நம்பிக்கை அல்லது விசுவாசம். எப்படி மனிதரில் இரத்த ஓட்டம் தடைபடுகிறபோது மரணமோ வேறு இயலாமையோ ஏற்படுகிறதோ அது போன்றே ஆன்மீக வாழ்வும் முடங்கிப் போய்விடுகிறது நம்பிக்கையின்மையால். மனிதரில் இரத்த ஓட்டம் தடைபடுகிறபோதும் அது சரி செய்யப்படுகிறது மேலும் திறம்பட புதிய இரத்தம் செலுத்தப்படுகிறது. அப்படியே நமது நம்பிக்கையில் நாம் தளர்வுறும்போது நமது விசுவாசமாம் இரத்தம் நமக்குள் ஊட்டப்படுகிறது. இதனை நம்மில் நிறைவேற்றும் கடவுள். எப்படி நம்மில் நம்பிக்கை ஊட்டுபவராக இருக்கிறார் என்பதை இக்காலையில் சிந்திப்போம்.

## *1. கடவுள் நம்மை காண்கிறவர்* :

இன்றைய நமது சிந்தனைக்குரிய திருமறைப்பகுதி இரண்டாம் ஏசாயாவால் எழுதப்பட்டது இப்பகுதியில் குறிப்பாக 44-ம் அதிகாரம் துவங்கி 55-ஆம் அதிகாரம் வரையுள்ள பகுதியின் மையச் செய்தியே இஸ்ரவேலரின் பாபிலோனிய சிறையிருப்பினின்று விடுதலை உண்டு எனும் நம்பிக்கை செய்தியை மக்களுக்கு ஊட்டுவதாகும்.

நம்பிக்கையிழந்த மக்களை ஆற்றுங்கள், தேற்றுங்கள் என்ற திரு மொழிகள் (ஏசா. 40:1) சிறப்பிடம் பெறுகின்றது.

இவ்வுலக வாழ்வில் ஒருசிலர் மட்டுமே தங்களை எவரும் பார்த்திடல் கூடாது என்ற எண்ணமுடையவர்களாக இருக்கின்றனர். மற்ற அனைவரது எண்ணமும் ஏக்கமும் எங்களை யாராவது கவனிக்க மாட்டார்களா, எந்நிலைமையை பார்க்க ஒருவரும் இல்லையா?, என்மீது கரிசனை கொள்ள யாரேனும் வருவார்களோ என்று ஏங்கிக் கொண்டே இருக்கின்றார். யோவான் 3:19-21 ஆகிய திரு வசனங்களில் தங்களைக் காண விரும்பாதவர்களை இருளின் மக்கள் என திருமறை அழைக்கிறது.

அதே நேரம் தொ. நூ.16:6-13; 21:15-20 ஆகிய பகுதிகளில் என்னை காணும் கடவுள் இல்லையோ என ஏங்கிய ஆகாரைக் கண்ட கடவுளை கண்டு நம்பிக்கையடைந்தார் என்றும் காண்கிறோம்.

ஏற்கெனவே அடிமைத்தனத்தின் நிழல் எத்தகையது என்று அனுபவித்த இஸ்ரயேலர் பாபிலோனிய அடிமைத்தனத்திலும், தங்களைக் காணும் ஆண்டவரை எதிர்பார்த்தனர், தங்கள் கண்ணீர் துடைக்கும் வல்லவருக்காக காத்திருந்தனர். எங்கள் பயணம், கண்ணீர் சூழல், இவைகளில் கதறிய வேளையில் தான் கடவுள் உன் அருகில் வந்து உன்னைக் காண்கிறார் என்று நம்பிக்கையூட்டப்படுகிறது. இந்த உலகின் வாழ்வில் வியாதி, பொருளாதார நெருக்கம், வேதனை, துன்பம் இவைகளின் நடுவிலும் என்னைக் காண்கிற கடவுள் ஒருவர் உண்டு என்ற புதிய நம்பிக்கை ஏசாயாவால் தரப்படுகிறது.

யோவான் 5-ஆம் அதிகாரத்தில் 38 வருடமாய் தன்னைக் காண கனிவுடன் விசாரிக்க ஒருவருமின்றி வாடிய மனிதருடைய ஏக்கத்திற்குப் பதிலளித்தவர் நன்மையும் காண்கிறவராய் இருக்கிறார். எவ்வளவு காலமாய் நாம் வேதனையடைந்திருக்கிறோம், வியாதியோடு இருக்கிறோம், கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கிறோம். இன்று எல்லாவற்றையும் காண்கிறவர் இந்த மாதத்தில் இவற்றிற்கான பதிலை நமக்கு தர வல்லவராயிருக்கிறதை நாம் புரிந்துகொள்வோம் இந்த நம்பிக்கையில் பெருகுவோம்.

### *2. கடவுள் நம்மை காக்கிறவர்* :

நம்மை காணும் கடவுள் நம்மை காப்பவராயிருப்பது பலருக்கும் ஒருபோதும் புரிவதேயில்லை. இதனால் தான் இன்றைய உலகில் எண்ணற்ற மக்கள் வாழ்க்கையை வெறுத்து தன்னம்பிக்கையும் இழந்து மரணம் ஒன்றுதான் முடிவு என்ற நிலைக்குச் சென்றுவிடுகின்றனர்.

கடவுள் எம்மை காண்கிறவராக இருந்தும் எனக்கு ஏன் பாடு, துன்பம், வியாதி, வறுமை என்றே கேள்வி எழுப்பிக்கொண்டிருக்கிற சகோதர சகோதரிகளே நம்மை காக்கிறவராக கடவுள் நம்முடன் இதுவரை இருந்து செயல்பட்ட அனுபவங்களை உணர்ந்து பார்ப்போம் (ஏசா. 40:28,29). பூமியின் எல்லைகளையும் உலகனைத்தையும் படைத்த கடவுள் சோர்வடையாதவர், தளராத ஆற்றல் மிக்கவர், அவரே நம்மை காப்பவர் என்ற நம்பிக்கை நமக்குத் தேவை. ஆகாயத்துப் பறவைகளுக்கு உணவூட்டுபவரும், வனத்திலுள்ள மலர்களை உடுத்துவிக்கிறவருமாகிய ஆண்டவர் சோர்ந்து போகிறவர்களுக்கும் பெலன் தருகிறவராக இருக்கிறார் என்பதை சிந்திப்போம்.

தானி. 3:16,17,18 ஆகிய திருவசனங்களில் தங்களைக் காணும் கடவுள் காத்திடுபவராக இருக்கிறார் என்ற நம்பிக்கையுடன் உறுதியாக இருந்த எபிரோய வாலிபர்களை அடிமைப்பட்டுச் சென்ற நாட்டில் தீச்சூளையினின்றும் விடுவித்தார் அவர்களைக் காத்திட்ட ஆண்டவர் அன்று அவர்களின் மீது அவ்வக்கினியின் வாசனைக்கூட படாதபடி காத்திட்டார் என்பதே சிறப்பாகும்.

பறந்து காக்கிற பட்சியைப் போன்று கடவுள் காக்கிறவர் என்பது இதன் வழி நிரூபணமாகிறது.

இளையோர் இளைப்படைந்தாலும், முதியோர், வாலிபர் தளர்ந்தாலும் தள்ளாடாதபடி காக்கிற ஆற்றல் பொருந்திய ஆவியாரே இம்மாதம் முழுவதும் நம்மைக் காத்து வழி நடத்திடுவார்.

தாவீதை அழித்துவிட பல நிலைகளில் அரசன் சவுல் முயற்சித்தபோதும் நம் மீட்பர் அவரைக் காக்கிறவராக இருந்து மலைகளிலும் காடுகளிலும் பதுங்கி பயந்த தாவீதை கண்டவர், காத்தவர், தாவீதை அரியணையில் அமர்த்தி அழகுபடுத்தினார்.

இந்த உலகில் நாம் சந்திக்கும் வேறுபட்ட சூழல்கள் நம்மை மனம் தளரச் செய்தாலும் நம்பிக்கையூட்டும் ஆண்டவர் தமது கிருபையை நம்மில் நிறைந்திருக்கச் செய்ய நம்மை திடப்படுத்துவோம்.

ஒலி, ஒளி என்றால் என்ன என்றே தெரியாத ஹெலன் ஹெல்லர் பார்வையற்றோரின் கண்ணாக செயல்படுகிற பிரைல் எழுத்து வடிவத்தை உலகிற்கு அறிமுகப்படுத்தியதற்கு அடிப்படையாக இருந்தது அவருக்குக் கொடுக்கப்பட்ட நம்பிக்கையின் வார்த்தைகளாகும்.

இதோ உலகின் முடிவுமட்டும் (மத். 28:20) சகல நாட்களிலும் உங்களுடன் இருக்கிறேன் என்ற நம்பிக்கையூட்டும் ஆண்டவரால் (எபி. 6:12) கண்காணிக்கப்பட்டு காக்கப்படுகிறோம் என்று நம்பி நிலைத்திருப்போம்.

அருள்திரு. P. **ஜேக்கப் பீற்றர்**

01-03-2019 | புதிய மாத தொடக்க நன்றித் தொழுகை

# துணை நிற்கும் ஆண்டவர்

எசா. 41:1-14

**"யாக்கோபு என்னும் புழுவே, இஸ்ரயேல் என்னும் பொடிப் பூச்சியே, அஞ்சாதிரு; நான் உனக்குத் துணையாய் இருப்பேன் என்கிறார் ஆண்டவர். இஸ்ரயேலின் தூயவரே உன் மீட்பர்."** (எசா. 41:14)

சாலமோன் மன்னனுக்குப் பிற்பாடு இஸ்ரயேல் தேசம் யூதா என்றும் இஸ்ரயேல் என்றும் இரண்டாகப் பிரிந்தது. இதற்கு பிற்பாடும் இவர்கள் பிறநாடுகளால் அடிமைப்படுத்தப்பட்டார்கள்.

இஸ்ரயேலர் பாபிலோனியர்களால் அடிமைப்படுத்தப்பட்ட கால கட்டத்தில் பாரசீக மன்னர் சைரஸ் கி.மு.539-ல் பாபிலோனைக் கைப்பற்றினார். பாபிலோனில் அடிமைகளாயிருந்த இஸ்ரவேலருக்கு விடுதலை கொடுத்து, அவர்களது உரிமை பெற்ற நகரமாகிய எருசலேமுக்கு செல்ல அதிகாரம் கொடுத்தார். இந்த காலச் சூழலில் எசாயா இறைவாக்குரைத்தார்.

எசாயா இறைவாக்கினர் யூதாவைச் சார்ந்தவர் அவரது இறைவாக்கு பணி எருசலேமையும் யூதாவையும் சார்ந்ததாக இருந்தாலும் இஸ்ரயேலுக்கு இறைவாக்குரைத்தார். அவர் சொல்லிய இறைவாக்குதான் இந்த பகுதியில் காண்கிறோம். பாபிலோனில் அடிமைகளாக இருந்த இஸ்ரயேலருக்கு இந்த வார்த்தைகள் நம்பிக்கை தரும் வார்த்தையாக இருந்தது. நம்பிக்கை தரும் வார்த்தைகள் என்ன? என்பதை எசாயா 41:14-ன் வழியாக அறிந்து கொள்வோம்.

***1. அஞ்சாதே :*** எசா. 41:14a

"யாக்கோபு என்னும் புழுவே, இஸ்ரயேல் என்னும் பொடி பூச்சியே அஞ்சாதிரு" பாபிலோனில் இஸ்ரயேலர் அடிமைகளாக இருக்கிறார்கள். இவர்கள் வாழ்வு ஒவ்வொரு நிமிடமும் கலக்கமும், சஞ்சலமும், வருத்தமும், வேதனையும் நிறைந்ததாய் இருந்தது. இங்கே யாக்கோபு என்னும் புழுவே, இஸ்ரயேல் என்னும் பொடிப் பூச்சியே என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது எதனைக் குறிக்கிறது என்றால் அவர்களது சிறுமையைக் குறிக்கிறது திருப்பாடல்கள் 22:6-ல் தாவீது தன்னைக் குறித்து சொல்லும் போது நான் ஒரு புழு என்றார். அதாவது, இங்கே தன் சிறுமையைச் சொல்லுகிறார். அதுபோல இஸ்ரயேலர் அன்னிய ஆதிக்கத்தில் உரிமை இழந்த நிலையில் அவமானம், பரிகாசம், ஏளனம், நிந்தை புழுவைப்போன்று பூச்சியைப் போன்று அருவருக்கப்பட்ட நிலையில் இவர்களது வாழ்வு இருந்தது.

இத்தருணத்தில் கடவுளால் இறைவாக்கினர் வழியாக சொன்ன வார்த்தைகள் “அஞ்சாதிரு” என்பதாகும். எவ்வளவு ஆறுதலான வார்த்தை இது. அன்னிய நாட்டில் இருக்கிறார்கள். பாபிலோனிய மன்னன் இரங்கினால் மட்டுமே விடுதலை கிடைக்கும். ஆனால் கடவுள் இரக்கமில்லாத மன்னனையே அடிமைப்படுத்தி இவர்களுக்கு விடுதலை கொடுத்தார். இன்றைய காலச் சூழல்களில் கூட அரசு மற்றும் அதிகாரவர்க்கம் ஏழைஎளிய மற்றும் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பறித்து பலவிதங்களில் ஒடுக்கி அடிமைப்படுத்துகிறார்கள். இதனால் கலக்கத்துடனும், வருத்தத்துடனும் வாழ்ந்து கொண்டிருக்கிற மனுக்குலத்துக்குக் கடவுள் தருகின்ற வார்த்தை அஞ்சாதே என்பதாகும்.

***2. ஆதரவாய் இருப்பேன்:*** ஏசா. 41:14b

“நான் உனக்குத் துணையாயிருப்பேன்”

பாபிலோனில் அடிமைகளாக பயந்து, நடுங்கி, கலக்கத்தோடு வாழ்ந்து கொண்டிருந்த இஸ்ரயேல் மக்களின் பயத்தை “அஞ்சாதே” என்ற வார்த்தையால் நீக்கிய கடவுள் அவர்களை அந்த வார்த்தையோடு விட்டுவிடவில்லை. மேலும் நான் உனக்கு எப்போதும் துணையாய் இருப்பேன் என்று அவரது உடனிருப்பை அனுபவத்தினூடாய் உணரச் செய்கிறார். ஒருநாள் இயேசுகிறிஸ்துவும் அவரது சீடர்களும் படவில் சென்று கொண்டிருக்கும் போது பலத்த காற்றினால் அலை அதிகமாக படவில் மோதிக்கொண்டிருக்கிறது. அப்போது சீடர்கள் போதகரே நாங்கள் மடிந்து போகிறது உமக்கு கவலையில்லையா என்றார்கள் (மாற்கு 4: 38). அப்போது ஆண்டவர் இயேசுகிறிஸ்து காற்றையும் கடலையும் அதட்டி அமைதியை ஏற்படுத்தினார். பின்பு சீடர்களைப் பார்த்து ஏன் பயப்பட்டீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லையா? என்று தனது உடனிருப்பைக் காட்டுகிறார். அதுபோல நாங்கள் சிறுமைப்படுத்தப்பட்டிருக்கிறோம். எங்களுக்கு ஆதரவாக யாரும் இல்லையே, எங்களுக்குத் துணையாய் யாரும் இல்லையே என்று கலக்கத்தோடும் கவலையோடும் காணப்பட்ட இஸ்ரயேல் மக்களுக்கு நான் உனக்கு ஆதரவாய் இருப்பேன் என்று தனது உடனிருப்பை காட்டுகிறார். ஆம் நாம் வாழும் உலகில் பல விதங்களில் நெருக்கப்படலாம். இத்தருணத்தில் எனக்குத் துணையாக, ஆதரவாக யாரும் இல்லையென நினைக்கலாம். அப்படிப்பட்டவர்களுக்கு ஆண்டவர் நான் உனக்கு ஆதரவாயிருப்பேன் என்று சொல்கிறார்.

அன்பானவர்களே! இப்புதிய மாதத்தில் அச்ச உணர்வுடன் இருக்கும் நம்மைப் பார்த்து அஞ்சாதே ஆதரவாயிருப்பேன் என்ற ஆண்டவர் நமக்குத் துணை நிற்கிறார் என்பதை உணர்ந்து அர்ப்பணத்துடன் முன்னேறிச் செல்வோம்.

அருள்திரு. J. **ஸ்டீபன்**

01-04-2019

**புதிய மாத தொடக்க நன்றித் தொழுகை**

# புதுசெயல் செய்யும் ஆண்டவர்

எசா. 43:15-21

**“இதோ புதுச்செயல் ஒன்றை நான் செய்கிறேன். இப்பொழுதே அது தோன்றி விட்டது. அதைக் கூர்ந்து கவனிக்கவில்லையா? பாலை நிலத்தில் பாதை ஒன்று அமைத்தேன். பாழ்வெளியில் நீரோடைகளைத் தோன்றச் செய்வேன்.”** (எசா. 43:19)

யூதாவின் மக்கள் பாபிலோனில் அடிமைகளாக வாழ்ந்த காலம் அது. அடிமை வாழ்வில் யூதா மக்கள் நசுக்கப்பட்டனர். அவர்களிடமிருந்த விடுதலைக்குரிய நம்பிக்கை, தொலைந்து போய் விட்டது. இதனால் நிம்மதியும் பறிபோய் விட்டது. இந்த சூழ்நிலைதான் கடவுள், ஏசாயா இறைவாக்கினர் மூலம் நம்பிக்கையின் செய்தியை, யூதா மக்களுக்கு கொடுக்கிறார். அது தான், “இதோ புதுச் செயல் ஒன்றை நான் செய்கிறேன்” என்பது ஆகும்.

கடவுள் செய்யும் புதுச்செயல் என்ன?

***1. பாதை அமைத்தல் :*** ஏசா. 43: 19b

பாதை என்பது வாழ்வின் முன்னேற்றத்திற்கு தேவையானது. பாதை சரியாக, தெரிவுடன் காணப்பட்டால் தான், நாம் பாதுகாப்புடன் பயணம் செய்ய முடியும்; நம் இலக்கை அடைய முடியும். பாலை நிலத்தில் பாதை ஒன்று அமைப்பேன்..........

யூதா மக்களின் வாழ்வின் முன்னேற்றத்திற்கான பாதை அமைக்கப்படவில்லை. “பாதை உருவாகுமா”? “என்பது கேள்விக்குறியாக அமைந்திருந்தது. எங்கு பார்த்தாலும் மணல்; எத்திசை திரும்பினாலும் முட்கள்; வெயிலின் வெம்மை. இத்தகைய கடின வாழ்வை யூதா மக்கள் அனுபவித்தனர். துன்பம், துக்கம், கண்ணீர் ஆகியவை யூதா மக்களின் வாழ்வோடு காத்திருந்தது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தான், கர்த்தர் கூறுகிறார். “நான் பாதை ஒன்று அமைப்பேன்” வி.ப. 14: 16-ல் செங்கடலில் பாதை அமைத்தவர் கடவுள் என்பது தெளிவாகிறது. யோசு. 3: 17-ல் அறுப்புக்காலம் முழுவதும் கரை புரண்டு ஓடுகிற யோர்தானில், இறைவன் பாதை அமைத்தார் என கூறப்படுகிறது.

இவைகள் மட்டுமல்ல, கடவுள் தனி மனித வாழ்விலும் பாதை அமைக்கிறார். 2அர. 4: 1-7-ல் கடன் நிறைந்த, ஏழை இறைவாக்கினரின் குடும்பத்தில் கடவுள் பாதையை அமைத்தார். அந்த பாதை இறைவாக்கினரின் குடும்பத்தில் காணப்பட்ட பதற்றத்தை, பாதிப்பை

மாற்றிவிட்டது. அக்குடும்பம் கடனிலிருந்து மீண்டெழவும், கடன் சுமையின் கோர விளைவுகளிலிருந்து பாதுகாக்கப்படவும், அக்குடும்பம் அமைதி பெறவும் கடவுள் பாதையை அமைத்தார். அந்தக் கடவுள் நம் வாழ்விலும் பாதை அமைப்பார். பயப்படாதிருங்கள்.

***2. நீரோடை தோன்றச் செய்தல் :*** ஏசா. 43:19b

...... பாழ்வெளியில் நீரோடைகளைத் தோன்றச் செய்வேன்.

பாழ்வெளியில் நீரோடை சாத்தியமா? ஆம்! இது கடவுளால் சாத்தியமாகும்.

யூதா மக்களின் வாழ்விலும் வளமை, குளுமை, செழுமை என்பது இல்லை. "பாழ்பட்ட வெட்டவெளி" போன்று, அவர்கள் வாழ்வு பாழாய்ப் போனது. ஆனால் கடவுள் கூறினார், "நான் நீரோடைகளைத் தோன்றச் செய்வேன்"என்று தொ.நூ. 21:19-ல் வனாந்திரத்தில் அலைந்து திரிந்து அழுது கொண்டிருந்த, ஆதரவு இல்லாமல் காணப்பட்ட ஆகாருக்காகவும், அவளது குழந்தைக்காகவும் நீருள்ள கிணறு கடவுள் காண்பிக்கப்பட்டது.

1அர. 17:3,4-ல் இறைவாக்கினர் எலியாவுக்காக கேரீத்து ஓடையைக் காண்பித்தார் கடவுள் என்பது புலப்படுத்தப்பட்டுள்ளது.

ஆம்! கடவுள் தாவீதின் வாழ்விலும், நல்ல ஆயராக இருந்து, அமைதியான நீர் நிலைக்கு அவரை அழைத்துச் சென்றார் என திருப்பாடல்கள் 23:2-ல் படிக்கிறோம். தாவீதுக்கும், நீரோடை அனுபவத்துக்கும் தொடர்பு உண்டு. அது இறைவனால் கொடுக்கப்பட்டது. தாவீதின் வாழ்விலும், அமைதி, வளமை, ஆறுதல், ஆற்றல் முதலியவற்றைக் கடவுள் கொடுத்து, அவரது வாழ்வில் புதுச்செயல் செய்தார். அந்த கடவுள் இன்றும் உயிரோடுடிருக்கிறார்; இயங்கிக் கொண்டிருக்கிறார்; அவர் நமக்கு புதுச்செயல் செய்வார்.

இறைவன் செய்யும் புதுச்செயல் உடனடியாகத் தோன்றும். இதை நாம் நம்பினவர்களாய், கடவுளில் நம் வாழ்வை கட்டி எழுப்புவோம். யூதா மக்களுக்கு வாழ்வு கொடுக்க விரும்பின கடவுள் நமக்கும் வாழ்வு தருவார்.

புதிய மாதத்தில், கடவுள் செய்யும் புதுச் செயல்களை அனுபவித்து, ஆசீர்வதிக்கப்பட்டவர்களாய் வாழ்வோம். பலரின் வாழ்வில் இறைவனின் ஆசீர்வாதம் ஏற்பட நாம் ஆசீர்வாதத்தின் வடிக்கால்களாய் (Channels of Blessings) வாழ்வோம். ஆமென்!

அருள்திரு. P. **பிரின்ஸ்ஸி சாம் ஏசுதாஸ்**

01-05-2019

புதிய மாத தொடக்க அருளுரை

# ஆற்றல்படுத்தும் ஆண்டவர்

எசா. 40:27-37

**"அவர் சோர்வுற்றவருக்கு வலிமை அளிக்கின்றார்; வலிமையிழந்தவரிடம் ஊக்கம் பெருகச்செய்கின்றார்"** (எசா. 40:29)

கி.மு. எட்டாம் நூற்றாண்டில் பிற்பகுதியில் எருசலேமில் வாழ்ந்த ஏசாயா இறைவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டு, அவரால் கற்பிக்கப்பட்டு யூதா மக்களிடம் அனுப்பப்பட்டார். யூதாவின் மக்களில் பலர் பாபிலோனில் அடிமைகளாக நசுக்கப்பட்டு நம்பிக்கை இழந்து இருந்த காலத்தில் கடவுள் தம் மக்களை விடுவித்து அவர்களது சொந்த வீடான எருசலேமில் புது வாழ்வு வாழுமாறு அழைத்துச் செல்வார் என்றும் நம்பிக்கையூட்டும் செய்தியை ஏசாயா இறைவாக்கினர் கூறுகின்றார். சோர்ந்த, ஆற்றல் குன்றியிருக்கும் மனிதருக்கு புத்துயிர் வழங்கும் செய்தியை ஏசாயா தெளிவுப்படுத்துகின்றார். தொழிலாளர் தினத்தைக் கொண்டாடும் இப்புதிய மாதத்தில் புத்துயிர் அளிக்கும் ஆற்றல் எவ்விதம் நம்மை நடத்துகிறது என்பதைத் திருமறை வழியாகத் தியானிப்போம்.

### *1. எதிர்கொள்ளும் ஆற்றல் :* (ஏசா. 40 : 29)

வாழ்க்கை பலவிதமான போராட்டம் நிறைந்ததுதான். இப்போராட்டத்தை மேற்கொள்ளவதே வாழ்க்கை வெற்றியின் இரகசியம். அவ்வெற்றியை தனதாக்கிக் கொள்ளசிறப்பாய் வாழ வழிகாட்டுவதும், ஆற்றல் அளிப்பதும் தான் இறைவனின் இயல்பு. சோர்புற்றவருக்கு வலிமை அளிக்கின்றார். வலிமை இழந்தவருக்கு ஊக்கம் அருளுகின்றார். இயேசுநாதர் கெனேசரேத் கடலருகே நின்ற போது சீமோனின் படகில் ஏறி உட்கார்ந்து போதித்தார். போதனை நிறைவுற்றவுடன் சீமோனிடத்தில், "ஆழத்தில் வலையைப் போடுங்கள்" என்றுக் கூறினார். சீமோன், "நாங்கள் இராமுழுதும் வலையைப் போட்டோம். உழைத்தோம் ஒன்றும் கிடைக்கவில்லை" என்றறர். சோர்புற்றிருந்த சீமோனுக்கு ஆண்டவர் நம்பிக்கை ஊட்டுவதும் உழைப்பை வலியுறுத்துகிறதையும் காண்கிறோம். சீமோன் ஆண்டவரின் வார்த்தையை ஏற்றுக்கொண்டு நம்பிக்கைக் கொள்கிறார். அந்நிலையில் வலைகிழிய மீன் கிடைக்கிறது (லூக். 5:1-9) ஆச்சரியமான வாழ்வு எல்லாவற்றையும் எதிர் கொள்ளும் ஆற்றலாய் ஆண்டவரின் வார்த்தை இருக்கிறது. இதை நாமும் ஏற்று சோதனை, வேதனை, கலக்கம் நிறைந்த வாழ்வில் எதிர்கொள்ளும் இறைவனின் ஆற்றலைப் பெறுவோம்.

## ***2. எழுச்சியான ஆற்றல் :*** (ஏசா. 40 : 31)

வாழ்வில் எழுச்சி என்பது விழுந்து போன, நலிந்து போன, ‘இனி வாழ்வே இல்லை’ என்கிற தருணத்தில் நிற்கும் போது இறைவனின் நம்பிக்கை ஊட்டும் வார்த்தை எழுச்சியான ஆற்றலை நிரப்பி எழும்பச் செய்கிறது. ஏசாயா 40:31 -ல் ஆண்டவரில் நம்பிக்கை வைத்திருப்போருக்கு புதிய ஆற்றல் இருக்கிறது என்றுக் குறிப்பிடுகிறார். கழுகை இங்கு முன்னிறுத்தி நம்பிக்கையின் பாடத்தை கற்றுத் தருகிறார். கழுகுக் குஞ்சு கூட்டிலிருந்து வெளியே வரும்போது பறக்கத் தெரியாது. கழுகுக் குஞ்சுக்கு கூடு நிரந்தரமல்ல. கழுகுக் கூட்டிலிருக்கும் பஞ்சு போன்ற பகுதியினை அகற்றி கரடு முரடான முட்கள் போன்ற கம்புகள் வைத்துக் கூட்டை புனரமைக்கிறது. கழுகுக் குஞ்சுக்கு சுகமான பிற்பாடு தாய்ப்பறவை குஞ்சுப் பறவையைக் கூட்டிலிருந்து தள்ளி விடுகிறது. தத்தளித்து கீழே விழப் போகிறது. தாய்ப்பறவை குஞ்சுப் பறவையை தனியேப் பறக்க விடுகிறது. அங்கு தத்தளிக்கிறது. ஆனால் தாய்ப்பறவை பறக்கக் கற்றுக் கொடுத்து தைரியமூட்டி பலப்பட வைக்கிறது.

இதைப் போல் தான் நமது இறைவன் நம்மைக் கைவிடுகிறவர் அல்ல; சோதனையை மேற்கொள்ளக் கற்றுத் தருகிறார். குஞ்சுக் கழுகை தாய்ப்பறவை தாங்குவதுப் போல் உலகில் நாம் விழுந்து போகிற போது நம்பிக்கையூட்டும் வார்த்தையினைத் தருகிறார். முதுமையின் வாழ்வில் கழுகும் பலம் இழக்கின்ற போது குன்றின் மேல் உணவு உண்ணாமல் தனித்து இருக்கும். அதினுடைய இறகுகளெல்லாம் உதிர்ந்து போகும். பலநாள் காத்திருக்கிற போது இறகு முளைத்து புதுப்பொலிவு பெற்று புதுபெலத்தோடு புத்தெழுச்சி பெற்று பறந்து செல்கிறது. நாமும் இறைவனின் பாதத்தில் அமர்ந்து தனித் திருமறை தியானம், இறை வேண்டல் செய்து இறை சமுகத்தில் காத்திருந்தால் கிடைக்கும்.

ஆண்டவர் புத்துயிர் கொடுக்கிறார், ஆண்டவர் அனைத்து தீமைகளின் ஆற்றல்களையும் எதிர்கொள்ளும் ஆற்றலைத் தந்து, நம்மை எழுச்சியூட்டி வழிநடத்துகிறார் என்பதை உணர்ந்து வாழ்ந்து புதிய மாதத்தில் இறைவனின் ஆற்றலைப் பெறுவோம்.

திரு. J. ***பிரபின் செல்வமணி***

01-06-2019 **புதிய மாத நன்றித் தொழுகை**

## உடனிருக்கும் ஆண்டவர்

எசா. 43:1-5

**"நீ தண்ணீர்களைக் கடக்கும் போது நான் உன்னோடு இருப்பேன்...."** (எசா. 43:2)

நாம் வாழும் உலகம் பல நெருக்கடிகளாலும், துன்பங்களாலும் நிறைந்துள்ளது என்பதை பல செய்திகள், அனுபவங்கள் வழியாக நாம் உணர்கின்றோம். பயங்கள் பதட்டங்கள் நிறைந்த சூழலில், இறைவன் ஒருவரே நம்முடனிருந்து நம்மை காப்பாற்றி, வழிநடத்துகிறார் என்பது நம்மை ஆற்றல்படுத்தும் செய்தியாய் உள்ளது.

இன்றைய திருமறைப்பகுதியில், பல பாதிப்புக்களோடு துன்புறும் நிலைக்குத் தள்ளப்பட்ட மக்களின் வாழ்வில் இறைவன் உடனிருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்கிறோம். ஏசாயா 43:3- ..... நான் உனக்கு துணை நிற்கிறேன், என்று கூறி வாழ்வில் முன்னேறிச் செல்ல திடப்படுத்தி, ஆற்றல்படுத்துகிறார்.

### *1. இறைவனின் உடனிருப்பு இறையுறவை வெளிப்படுத்துகிறது :*

மானுட வாழ்வில் இறைவன் மீட்பராக, தேற்றுபவராக திடப்படுத்தி நம்மை வலிமைப்படுத்துகிறவராக செயல்படுகிறார். ஒரு கூட்ட மக்களின் வாழ்வில் தோய்ந்து, கைவிடப்பட்ட நிலையில், இறைவன் அவர்களோடு இருந்து, இறைமனித உறவை வெளிப்படுத்துகிறார். ஏசாயா 43:3..... நான் உன்னோடு இருப்பேன் என்ற இறைவார்த்தை மூலம் தன் உடனிருப்பைத் தெளிவுபடுத்துகிறார். இறை உறவு நம்மில் தொடர, இறைவனது உடனிருப்பு மிகவும் அவசியம். ஏசாயா 49:15, தாயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை என்று, தனது ஆழமான இறையுறவை நம்மீது வெளிப்படுத்துகிறார். இந்த புதிய மாதத்திலும் நமது வாழ்வு மீது, அக்கறை கொண்டு, உடனிருந்து நம் வாழ்வை ஆசீர்வதிப்பாராக.

### *2. இறைவனின் உடனிருப்பு நாம் முன்னேறிச் செல்ல உதவுகிறது :*

நாம் இறைவன் துணையின்றி உலகில் முன்னேறிச் செல்ல இயலாதவர்கள். இறைத்துணையோடு வாழ்வில் எதிர்வரும் எத்தகைய சவால்களையும் மேற்கொள்ளமுடியும். இஸ்ரயேல் மக்களுக்கு இறைவன்

தன் உடனிருப்பை வெளிப்படுத்தும் விதமாய் என் சமூகம் உனக்கு முன்பாகச் செல்லும் (யாத். 33:14) என்று திடப்படுத்தி கானானுக்கு நேராக வழிநடத்தினார். இப்போதும் நீ தண்ணீர்களை கடக்கும் போதும் நான் உன்னோடிருப்பேன் என்று சொல்லி, நம் வாழ்வில் முன்னேறிச் செல்ல உதவுகிறார். இந்த புதிய மாதத்தில் இறைவன் தாமே நம் வாழ்வில் உடனிருந்து, நாம் மேற்கொள்ளும் பயணங்களில் நமக்கு உதவியாயிருப்பார்.

### *3. இறைவனின் உடனிருப்பு வாழ்வுக்கு நம்பிக்கையைத் தருகிறது :*

நான் உன்னோடு இருப்பேன் (ஏசா. 43:2) என்ற இறைவார்த்தை நம்பிக்கை நிறைந்த வார்த்தை. இஸ்ரயேல் மக்கள் தங்கள் வாழ்வில் ஏற்பட்ட ஆதரவற்ற, புறக்கணிக்கப்பட்ட நிலையில் சோர்ந்து போனார்கள். ஏசா. 41:14 இஸ்ரயேல் என்னும் சிறுக் கூட்டமே நான் உனக்குத் துணைநிற்கிறேன் என்று இழந்து போன நம்பிக்கையை மீண்டும் புதுப்பிக்கிறார். இந்த புதிய மாதத்திலும் இறைவனின் உடனிருப்பு அனைத்து நிலையிலும் நம்பிக்கையை தரும் வார்த்தையாக செயல்படட்டும்.

பக்தன் ஒருவன் தன் பாடல் வரிகளில்,

இஸ்ரவேலே என் ஜனமே என்றும் இடறிடவேண்டாம்
யேகோவா உன் தெய்வமானால் ஏதும் பயம் வேண்டாம்
ஓங்கும் புயமும் பலத்த கரமும் உன் பக்கமே உண்டு
தாங்கும் கிருபை தயவு இரக்கம் தாராளமாயுண்டு

என்ற பாடல் வரிகளைப் போல், இந்த புதிய மாதத்திலே நாம் ஒருபோதும் இடறிப் போகாதபடி நம்மைப் படைத்து, பாதுகாத்து, வழிநடத்தும் இறைவனின் உடனிருப்பு என்றும் உண்டு என்ற நம்பிக்கையோடு வாழ்வோம்.

அருள்திரு. R. **பாபின் போஸ்**

01-07-2019



## நல்வழிப்படுத்தும் ஆண்டவர்

எசா. 45:1-9

**“நான் உனக்கு முன்னே சென்று குன்றுகளை சமப்படுத்துவேன்; செப்புக் கதவுகளை உடைத்து......நீ அறியும்படி இதைச் செய்வேன்.”** (எசா. 45:2,3).

ஒரு பெரிய பணக்காரன் செல்வசெழிப்போடும், பெரும் மகிழ்வோடும் வாழ்ந்து வந்தான். நாளடைவில் கொள்ளைக்காரனாகவும் மாறிவிட்டான். ஆனால் அவ்வப்போது ஏழைகளுக்கு சில உதவிகளையும் செய்வான். ஒரு நாள் கடவுள் அவன் கனவில் தோன்றி “ஒருநாள் உன் வீட்டுக்கு வரப்போகிறேன் என்று சொல்லி மறைந்து விட்டார்” பணக்காரனும் ஏற்பாடுசெய்தான். ஒருநாள் கடவுள் வந்தார். பணக்காரன் மகிழ்வோடு வரவேற்று, எனது வீட்டிலுள்ள பணம், பொன், பொருட்கள் எதுவேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள் என்றான். கடவுள் “உனது வீட்டிலுள்ள அனைத்தும் என்னிடமும் உள்ளது. ஆனால் என்னிடம் இல்லாத ஒன்று மட்டும் உன்னிடம் உள்ளது. அதை மட்டும் என்னிடம் கொடுத்துவிடு, நீ வாழும் கரடு முரடான வாழ்க்கை, நீ செல்லும் தவறான பாதை, உனது தவறான செயல்பாடுகள் இவைகளுக்கு காரணமான உனது வாழ்க்கை மட்டும் என்னிடம் கொடுத்து விடு என்றார்.” அதை உணர்ந்த பணக்காரன் தனது பாவத்தை அறிக்கையிட்டு தன்னையும் தனது செயல்பாடுகளையும் செம்மைப்படுத்திக் கொண்டான்.

மக்களின் சீர்குலைந்த வாழ்வினை, அடிமை வாழ்வை மாற்றி உங்களை, உங்கள் வாழ்வை செவ்வைப்படுத்துவேன் என்று ஏசாயா தீர்க்கன் வழியாக கடவுள் தனது நிலைப்பாட்டினை மக்களுக்கு வெளிப்படுத்துகிறார். நாம் நடந்து வந்த, பழைய பாதையை திரும்பிப் பார்க்க இன்றைய பாடபகுதி அழைப்பு விடுக்கிறது. பாபிலோன் தேசத்தில் சிறைபடுத்தப்பட்டு துன்ப சூழலில் உண்மை தேவனை கூட ஆராதிக்க முடியாத சூழலில் இந்த யூதேயா மக்களுக்கு கடவுள் ஏசாயா மூலம் தனது உடனிருப்பை வெளிப்படுத்துகிறார். தமது மக்களை விடுவிக்க கடவுள் பிற இனத்து அரசனை திருபொழிவு செய்து (கோரேஸ் மன்னன்) அவர் மூலம் தம் ஜனங்களை விடுவிக்க போவதாக கூறுகிறார். இந்த அதிகாலை வேளையிலே ஆண்டவரின் ஆலய நிழலில் வந்துள்ள நாம் கடவுளின் வழிகாட்டுதலை உணர்ந்து கொள்வது அவசியம்.

### *1. வழிகாட்டும் ஆண்டவர் :*

"வழி இதுவே இதிலே நடவுங்கள் என்று கடவுளின் அன்பான அழைப்பு" கதிகலங்கி நின்ற மக்களுக்கு, சிறை பிடிக்கப்பட்ட மக்களுக்கு கடவுளின் பதில் ஆதரவாக இருந்தது. வசனம் 2-ல் உங்களுக்கு எதிராக, தடையாக நிற்கிறவர்களை நான் அகற்றுவேன். "நான் உனக்கு முன்னே சென்று குன்றுகளை சமப்படுத்துவேன்" தம் மக்களை இறைவன் இங்கு தைரியப்படுத்துகிறோர். அதாவது உங்களுக்கு நான் நல்ல பாதையினை ஏற்படுத்தியுள்னேன். எனவே பயமின்றி முன்னோக்கி வாருங்கள் என்று வழியை கண்டறிந்து கடவுள் தம் மக்களை அழைக்கிறார். இங்கு இறைவன் காட்டுகிற பாதை முழுக்க முழுக்க ஆயத்தம் பண்ணப்பட்ட பாதை. ஆனால் இஸ்ரவேலின் விடுதலைப் பயணத்தில் கடவுள் காண்பித்த பாதை ஆண்டுகொள்ள ஏற்கனவே ஆயத்தப்படுத்தப்பட்ட பாதை அல்ல. மாறாக இங்கு கடவுள் பாதையை தம் மக்களுக்கு சரி செய்து கொடுக்கிறார். வழிகாட்டும் கடவுள் அதிலே நியாயமாய் நடக்க நம்மை எதிர்பார்க்கிறார். யோவான் ஸ்நாபகன் "விரியன் பாம்புக் குட்டிகளே" என அழைத்து மக்களை வாழவேண்டிய வழிமுறைகளை கற்றுக் கொடுக்கிறார். எனவே இந்த புதிய மாதத்திலே புதிய தீர்மானத்தோடு கடவுள் காட்டுகிற வழியிலே நிதானமாய், ஞானமாய் நடக்க முயற்சி செய்வோம்.

### *2. வழிநடத்தும் ஆண்டவர் :*

கடவுளின் நடத்துதல் ஆச்சரியமானது. வசனம் 4,5-ல் "நான் உன்னை பெயர் சொல்லி அழைத்தேன், நீ என்னை அறியாதிருந்தும் உனக்கு பெயரும் புகழும் வழங்கினேன்...... உனக்கு வலிமை அளித்தேன்." யோவா. 10: 4-ல் "நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்கு முன்பாக நடந்து போகிறான். ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்து அவனுக்கு பின் செல்கிறது." சங்கீதக்காரன் தாவீது கூறும் போது சங். 23: 4-ல் "தேவரீர் என்னோடு கூட இருக்கிறீர் உமது கோலும், உமது தடியும் என்னைத் தேற்றும்". இந்த புதிய மாதத்தில் நம்மோடு பயணிக்க ஆவலாய் காத்திருக்கும் கடவுளுக்கு இடம் கொடுப்போம். அவரது நடத்துதல் நமக்கு நல் ஆலோசனைகளையும், கிருபையையும், உயர்வையும் கொண்டு வரும். மத். 11: 28-ல் "வருத்தப்பட்டு பாரம் சுமப்பவரே எல்லோரும் என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்"

### *2. வழியாகும் ஆண்டவர் :*

எசாயா. 45:2-ல் "நான் உனக்கு முன்னே சென்று வழியை செம்மைப்படுத்துவேன்."

இயேசு சொல்லும் போது "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன்..... என்னைப் பின்தொடர்வோர் இருளிலே நடக்கமாட்டார்." யோவான்.10:9-ல் "நானே வாயில். என் வழியாய் நுழைவோருக்கு ஆபத்து இல்லை. அவர்கள் நல்ல மேய்ச்சலைக் காண்பார்கள்." மக்களின் சீர்குலைந்த பாதச் சுவடுகளை செம்மைப்படுத்தி அவர்களின் மனங்களை மாற்றியமைத்து, இயேசுவின் வருகையை முன்னறிவிக்கிறார். திருமுழுக்கு யோவான் நாம் நடந்து வந்த, பழைய பாதையை திரும்பிப் பார்க்க இன்றைய வேதபகுதி அழைப்பு விடுக்கிறது.பாவ சூழலில் இருக்கும் இதயத்தை புதிய பாதைக்கு திரும்புவதே மனம் திரும்புதல் ஆகும். இங்கு நாம் செம்மைப்படுத்த வேண்டியது கரடு முரடான இடத்தையோ, மேடு பள்ளங்களையோ அல்ல மாறாக நமது உள்ளங்களையே! கிறிஸ்து காட்டுகிற வழியிலே நடக்கவும் இவைகளின் நிறைவாக மனமாற்றம் காணவும் நாம் இந்த காலை வேளையிலே அழைக்கப்படுகிறோம். கிறிஸ்துவின் வழியிலே தன்னைத் திருப்பிய சகேயு (லூக். 19:1:10). ஏமாற்றி வாங்கியதில் நான்கு மடங்கு திருப்பி கொடுக்க முன் வருகின்றான். சமாரியப் பெண் தனது வாழ்வை செம்மைப்படுத்தியது மட்டுமல்லாமல், பிறரையும் இயேசுவிடம் அழைத்து வந்தாள் (யோவா. 4:25-42). நாம் நல்வழிபட ஒரு அடி எடுத்து வைத்தால் கடவுள் நமக்காக பத்து அடி எடுத்துவைப்பார் என்பதை உணர்வோம்.

உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானி சர் ஐசக் நியூட்டனிடம் நிருபர், "ஐயா நீங்கள் கண்டுபிடித்த கண்டுபிடிப்புகளிலே மிக சிறந்த கண்டுபிடிப்பு எது?" என்று கேட்டார். அவரின் பதிலோ கேட்டவரை ஆச்சரியப்பட வைத்தது. அவர் தன்னையே தாழ்த்திச் சொன்னார். நான் கண்டுபிடித்த எல்லாக் கண்டுபிடிப்புகளிலும் பெரிய கண்டுபிடிப்பு "நான் ஒரு பாவி" என்று கண்டுபிடித்ததே ஆகும் என்றார்.

நம்மை நல்வழிப்படுத்தும் கிறிஸ்துவிலே நம்மை ஒப்புக் கொடுத்து இந்தப் புதிய மாதத்திலே அவர் காட்டும் பாதையிலே நிறைவுடன் பயணிப்போம். ஆமென்.

அருள்திரு. S. ***ஜெயசிங்ராஜன்***

01-06-2019

புதிய மாத தொடக்க தொழுகை

## பரம பாதுகாப்புதரும் ஆண்டவர்

எசா. 46:1-9

**“உங்கள் முதுமைவரைக்கும் நான் அப்படியே இருப்பேன்; நரை வயதுவரைக்கும் நான் உங்களை சுமப்பேன்; நானே விடுவிப்பேன்.”** (ஏசா. 46:4)

“பெற்றெடுத்த குழந்தை தாய்க்குப் பாரமா?” என்பது தமிழ் மக்கள் சொல் வழக்கு. அதுபோல கடவுள் தம் மக்களை பாதுகாக்கிறவராக இருக்கிறார். முதுமையிலும், இயலாமையிலும் உங்களை சுமப்பேன் என்று ஏசாயாத் தீர்க்கர் வழியே நம்பிக்கை தரும் வாக்குரைத்திருக்கிறார். வாக்கு கூற காரணம்:

### *1. பாபிலோனியக் கடவுளர்கள் : மக்களால் சுமக்கப்படும் கடவுளர்கள்* : எசா. 46:5-7

“பேல்”, “பாகால்” என்னும் சொல்லுக்கு சமமானது “ஆண்டவர்” எனும் சொல் என்பது பொருள். இது “நிப்பூர்” நகரின் கடவுள் எல்லா தெய்வங்களுக்கும் தந்தை எனவும், வான தெய்வம் எனவும் “பாபிலோனிய” மக்கள் நம்பினர். மேலும் “மார்ரக்” தெய்வத்தின் மகன் எனவும்,அறிவின் தெய்வம் எனவும், வெற்றியின் தெய்வம் எனவும் நம்பப்பட்டது. இது நேபுகாத் நேச்சர் விரும்பி வழிபட்ட தெய்வம் ஆகும். ஏசா. 46:5-7-படி இத்தெய்வம், சிலை கையால் உருவாக்கப்பட்து. பொன், பணம் கொடுத்து வாங்கி, சுமந்து, வந்து நிறுத்தப்படும் தெய்வம், நிறுத்தின இடத்திலேயே நிற்கும், எந்த பதிலும் தருவதில்லை. இவற்றால் எதையும் செய்யவும் இயலாமல் மனிதனால் உருவாக்கவும், சுமக்கவும், நாட்டப்படவும் கூடியதாக இருக்கிறது. எனவே இந்த தெய்வத்தை மனிதன் தான் பாதுகாக்க வேண்டியுள்ளது. எனவே அறிவு இல்லாமல் ஆற்றலில்லாத கடவுளை பின்பற்றுவது, நம்புவது பயனற்றது என எச்சரிக்கின்றார் தீர்க்கர் ஏசாயா.

### *2. இஸ்ரவேலின் கடவுள் : மக்களைப் படைத்து சுமந்து பாதுகாக்கிறவர் :* எசா. 44:2,24

இஸ்ரவேலின் கடவுள் உலக மக்களை உருவாக்கினவர் ஏசா.63:9 தமது அன்பினால் பாவத்திலிருந்து மீட்கிறவர். தூக்கிசுமக்கிறவர், ஏசா. 40:11. மேய்ப்பனைப் போல தமது மந்தையை மேய்ப்பார். ஆட்டுக்குட்டிகளை தமது புயத்தினால் சேர்த்து தமது மடியில் சுமந்து, கறவல் ஆடுகளை மெதுவாய் நடத்துவார். கடவுள் தம் மக்களுக்குத் தரும்

பாதுகாப்பு பெரியது. எசா. 46:4 நரை மயிர் ஒருமனிதனின் வயதானப் பருவத்தைக் குறிப்பது. இஸ்ரவேலின் மக்களின் வரலாற்றில் இறுதிவரை சுமந்து, பாதுகாத்து வந்தவர் கடைசிபரியந்தம் கிடைத்திடும் பாதுகாவல் நம்முடைய கடவுளால் நமக்கு கிடைக்கும். எனவே இடறிப் போய்விட வேண்டாம். கடவுள் பேரில் பற்றுதலாயிருங்கள் என்ற நம்பிக்கையை எசாயா இறைவாக்கினர் வழியே கடவுளின் வார்த்தை தருகிறது.

இப்புதிய மாதத்தின் நாட்களை சுதந்தரிக்கும் நம்மை ஒவ்வொரு நிலையிலும் கடவுள் சுமந்து பத்திரமாய் காக்கிறவர் என்பதை உணருதல் நல்லது. பேராயர் “பீல்ட்” எளியோரின் பேராயர் என போற்றப் பெற்றாராம். காரணம், தான் பேராயராக உயர்த்தப் பெற்றதும் தனது சொந்த ஊருக்குச் சென்று வயதானவர்கள் அனைவரையும் சந்தித்து வந்தாராம். அவர்களுக்கு தேவையான பாதுகாவல் கொடுக்கவும் ஏற்பாடு செய்தாராம். காரணம் என்ன என்று கேட்டபோது அவர்கள் எல்லாம் என்னை சிறுவயதிலிருந்தே சுமந்து காத்தவர்கள் என பதிலுரைத்தாராம்.

நம்மை தினமும் சுமந்து காத்திடும் பரமனின் அடிச்சுவடுகளை பின்பற்றி பரம பாதுகாவலை தருவார் என்ற நம்பிக்கையுடன் திருவசனப் போதனையின் அழைப்பை ஏற்று வாழ்வதே சிறந்தது “பாதுகாப்பே இறைப்பற்றாளருக்கு கிரீடம்” ஆகும். நாமும் பெற்றிட நம்பிக்கையுடன் முன்னேறிச் செல்வோம்.

அருள்திரு. O. ***ரிச்சர்டு சுவர்ணா***

01-09-2019

**புதிய மாத தொடக்க அருளுரை**

# நினைவில் நிறுத்தும் ஆண்டவர்

எசா. 44:21-28

**"நான் உன்னை உருவாக்கினேன். நீதான் என் அடியான், இஸ்ரவேலே நான் உன்னை மறக்கமாட்டேன்"** (எசா. 44:21)

பரப்பரப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் இரயில் நிலையம் ஒன்றில் கலெக்டர் ஒருவர் பணியின் நிமித்தமாக வந்திருந்தார். திடீரென்று தூரத்தில் நடந்து கொண்டிருந்த வயதான பாதிரியாரை நோக்கி ஓடினார் கலெக்டர். இதை சற்றும் எதிர்பாராத காவலர்களும், உடன் பணியாளர்களும் அவருக்குப் பின்னாக ஓடினர். பாதிரியாரின் அருகில் சென்று அவர் கையிலிருந்த பெட்டியை வாங்கினார் கலெக்டர். தளு தளுத்தக் குரலில், 'மகனே இன்னும் என்னை நினைவு வைத்திருக்கிறாயா?' என்றார் வயதான பாதிரியார். ஏழைக் குடும்பத்தில் பிறந்து, இந்த பாதிரியால் கவனிக்கப்பட்டவர் தான் இந்த கலெக்டர். சிறுவனாக இருந்த போது பாதிரியார் வெளியூர் செல்லும் போதும், திரும்ப வரும் போதும் இரயில் நிலையம் வரை அவரது பெட்டியைச் சுமப்பது இந்த சிறுவன் தான்.

நினைவு கூருதல் எனும் பண்பு மனித வாழ்வில் மிக மிக அவசியமான பண்பாகும். இன்றைய நவ நாகரீக உலகில் தங்கள் பெற்றோரையே பிள்ளைகள் நினைவு கூருவதில்லை. ஆனால் கடவுள் நம்மை நினைவுகூருகிறார் என பரிசுத்த வேதாகமம் கூறுகிறது. ஏசா. 44:21-ல் இஸ்ரவேலே நீ என்னால் மறக்கப்படுவதில்லை என கடவுள் வாக்குத்தத்தம் கொடுக்கிறார். கடவுள் யாரை நினைவுகூருகிறார் எப்படிப்பட்ட சூழலில் நினைவுகூருகிறார் என்பதை இச்செய்தியில் சிந்திப்போம்.

## *1. சிறுமைப்படுத்தப்பட்டவர்களை நினைவில் நிறுத்தும் ஆண்டவர்:* தொ.நூ. 29:32

தன் சகோதரனுக்குப் பயந்து மாமன் வீட்டிற்கு ஓடினான் யாக்கோபு. போகும் வழியில் மாமன் மகளாகிய ராகேலைக் கண்டான். ரூபவதியும் அழகானவளுமாயிருந்த ராகேலை திருமணம் செய்து கொள்ள விரும்பினான். மூத்தவள் இருக்கும் போது இளையவளை திருமணம் செய்து கொடுப்பது சரியான முறையன்று (தொ.நூ. 29:25). ஆனால்

யாக்கோபு மூத்தவளான லேயாளை விரும்பவுமில்லை. இப்பகுதியில் லேயாளின் மனப்போராட்டம் எப்படி இருந்திருக்கும் என புரிந்து கொள்ள முடிகிறது. தொ.நூ. 29:18-ல் யாக்கோபு ராகேலுக்காக ஏழு வருடம் வேலை செய்கிறேன் என்கிறான். இதன் மற்றொரு அர்த்தம் நான் லேயாளை திருமணம் செய்ய விரும்பவில்லை என்பதே. இங்கே லேயாள் சிறுமைப்படுத்தப்படுகிறாள்.

தொ.நூ. 29:21-26 வரையுள்ள பகுதியில் புறக்கணிக்கப்பட்டுள்ள லேயாள் யாக்கோபின் முதல் மனைவியாக கொடுக்கப்பட்டாள் என படிக்கிறோம். கூச்சப்ப பார்வையுள்ளவள், அழகில்லாதவள் என புறக்கணிக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டிருந்த லேயாள் யாக்கோபின் மனைவியானாள். கடவுள் சிறுமைப்பட்டிருந்தவர்களை ஒருபோதும் கைவிடுவதில்லை, அவர்களை நினைவுகூருகிறார். ஏழு வருட உழைப்பு ராகேலுக்காக; ஆனால், பலனைனப் பெற்றுக் கொண்டவளோ லேயாள். திப. 106:5-ல் எமது கிருபையின் படி என்னை நினைத்தருளும் என்று சங்கீதக்காரன் வேண்டுகிறான். சிறுமைப்படுத்தப்பட்டவர்களை ஆண்டவர் நினைவுகூருகிறார்.

### *2. அற்பமாய் எண்ணப்படுகிறவர்களை நினைவில் நிறுத்தும் ஆண்டவர்:* தொ.நூ. 29:25

தான் ஏமாற்றமடைந்ததை அறிந்த யாக்கோபு தன் மாமனிடத்தில் வாக்குவாதம் செய்தான். மீண்டும் ஏழு வருடம் தான் நேசித்த, அழகான ராகேலை திருமணம் செய்கிறான். ஆனால் லேயாளை அற்பமாய் எண்ணினான். இங்கு (beani) -என்ற எபிரேய வார்த்தை கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கு Affliction என ஆங்கிலத்தில் அர்த்தம் கொள்ளலாம். அதாவது உபத்திரவம், இன்னல், பெரும் மன வேதனை என பொருள்படுகிறது. தான் விரும்பிய ராகேலை மனைவியாக பெற்றுக் கொண்டவுடன் தன் முதல் மனைவி லேயாளை அற்பமாய் எண்ணுகிறான். அவள் மன வேதனை அடையும் வண்ணம் அவளை அற்பமாய் எண்ணுகிறான். வேதனையோடு வாழ்ந்த லேயாளை கடவுள் நினைவுகூர்ந்தார். தொ.நூ. 29:31,32-வசனங்களில் லேயாள் அற்பமாய் எண்ணப்பட்டாள் என்பதை அறிந்த கடவுள் அவளை நினைவுகூர்ந்து ஆசீர்வதிக்கிறார். குலங்களின் முதன்மையான இறைப்பணியாளர் குலமான “லேவி” குலத்தின் தாயாக உயர்த்தப்பட்டாள். கணவனின் புறக்கணிப்பும்,

உறவுகளால் அற்பமாய் எண்ணப்படும் சூழலில் கடவுள் லேயாளை நினைவுகூர்ந்தார்.

புதிய மாதத்தின் முதல்நாள் கடவுளின் சமூகத்தில் நிற்கும் நமக்கு பல கேள்விகள் எழுப்புகின்றன. சிறுமைப்படுத்தப்பட்ட காயங்கள், அற்பமாய் எண்ணப்பட்ட வேதனையான அனுபவங்கள் நம்மை நெருக்குகின்றன.

நம்மைச் சுற்றியிருக்கும் நான்கு திசைகளும் அடைக்கப்பட்டிருந்தாலும் வானத்தின் வாசல் இன்னும் நமக்காக திறந்து தான் இருக்கிறது. தாவீது 121:1-ல் சொல்லியிருக்கிறபடி உதவிவரும் மலைகளை நோக்கி நம் கண்களை ஏறெடுப்போம். கடவுள் தாமே நம்மை நினைவுகூர்ந்து ஆசீர்வத்திப்பாராக!

Instead of counting how many people complimented you, find out how many were benefited by you.

திரு. C. **மோகன்**

01-10-2019 **புதிய மாத தொடக்க நாள் தொழுகை**

# நிறைவாழ்வருளும் ஆண்டவர்

எசா. 49:1-16

**"அவர் பசியடையார், தாகமுறார், வெப்பக் காற்றோ வெயிலோ அவர்களை வாட்டுவதில்லை. ஏனெனில் அவர்கள் மேல் கருணை காட்டுபவர் அவர்களை நடத்திச் செல்வார்."** (ஏசா. 46:10)

இந்த உலகில் ஏமாற்றங்களும், தனிமையும் அதிகமாக மனிதனை வாட்டி வதைக்கிறது. அதனால் தான் அநேக நேரங்களில் தற்கொலை செய்ய மனிதன் தன்னை ஒப்புக் கொடுக்கிறான்.

ஆனால் திருமறை நமக்கு நிறைவாழ்வை தருகிறது என்பதை மனிதன் அறியாமலிருக்கிறான். ஏசா. 49:10-ல் கடவுளின் வழி நடத்துதல் நிறைவாழ்வுக்கு நேராய் அழைத்து செல்கிறது. நாம் எப்பொழுது நிறைவாழ்வை பெற்றுக் கொள்ளமுடியும் என்று தியானிப்போம்.

## *1. தன் நிலை அறிதல் நிறைவளிக்கும் :* (எசா. 49:14)

"சீயோனோ, ஆண்டவர் என்னை நெகிழ்ந்து விட்டார், என் தலைவர் என்னை மறந்துவிட்டார் என்கிறாள்."

இங்கிலாந்திலே சர். வால்டர் ராலே (Sir. Walter Raleigh) என்ற பெயருடைய தேவ மனிதர் கடற்பயண துறையின் கண்டுபிடிப்பாளராகவும், சிறந்த ஞானியாகவும் இருந்தார். ஜேம்ஸ் அரசர் காலத்தில் இராஜ துரோக குற்றச்சாட்டு இவர் மேல் சுமத்தப்பபட்டது. 13 ஆண்டுகள் கடும் சிறை வாசத்தை ராலே அனுபவித்தார். விடுதலை செய்யப்பட்ட அவர் மீண்டும் தவறாக குற்றம் சாட்டப்பட்டு மரண தண்டனைக்கு தீர்ப்பிடப்பட்டார்.

கடவுளுக்கும், உலக அரசனுக்கும் உண்மையாக இருந்த வால்டர் ராலே மரணத்தை சந்திக்க மனதில் சற்றேனும் அச்சம் கொள்வில்லை. ஒரு வெற்றி வீரனைப் போல கொலைக் களத்துக்கு வந்தார். வாளால் வெட்டப்படுவதற்கு வசதியாக தளமேடைக்கு தன் தலையை நீட்டினார். பக்கத்திலிருந்த வீரனொருவன் வினா எழுப்பினான். உங்கள் தலையை வசதியாக வைத்துக் கொண்டீர்களா? என்று கேட்டான். வால்டர் ராலோ கெம்பீரமாக பதில் சொன்னார்.

"என் ஆத்துமாவின் நிலை நித்தியத்துக் கேற்ற விதமாக சரியாக இருக்கும் போது என் தலையைப் பற்றிய காரியம் கவலைக்குரியதல்ல" என்றார்.

ஆம், எனக்கன்பானவர்களே! எத்தனையோ பிரச்சனைகளும், போராட்டங்களும் நம் வாழ்வை வேதனை படுத்திக்கொண்டிருக்கலாம். எந்நத நிலமையிலும் நிறைவோடு மனரம்மியமாய் இருக்கவேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல் பிலி. 4: 11-ல் என் குறைச்சலினால் நான் இப்படி சொல்லுகிறதில்லை. ஏனெனில் நான் எந்த நிலையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்க கற்றுக் கொண்டேன்.

ஆம் நம் வாழ்வை வழிநடத்தும் ஆண்டவர் குறையுள்ள வாழ்வு தருபவர் அல்ல. எந்த நிலையிலும் இவ்வுலக வாழ்வில் மட்டுமல்ல. நித்திய வாழ்விலும் நிறைவான வாழ்வு தந்து நடத்துபவர் என்பது நமது ஆத்தும நம்பிக்கையே.

## *2. தளராத உழைப்பு நிறைவாழ்வளிக்கும் :* (எசா. 49:8)

“நாட்டை மீண்டும் நிலை நாட்டவும், பாழடைந்து கிடக்கும் உரிமை சொத்துக்களை உடமையாக்கவும் நான் உம்மை பாதுகாத்து மக்களுக்கு ஓர் உடன்படிக்கையாக ஏற்படுத்தினேன்.”

பெண்மணி ஒருவர் பூச்செடிகள் வளர்ப்பதில் மிகுந்த ஆர்வமுடையவர். அரிய வகை மலர் செடி ஒன்றை தன் வீட்டுத்தோட்டத்தில் வளர்த்தார். ஒவ்வொரு நாளும் அதற்கு நீர் பாய்ச்சி சிறப்பாக பராமரித்தார். அந்த செடி வேகமாக வளர்ந்து சுவற்றில் கொடியாக படர்ந்தது. ஆனால் அந்த செடியில் பூக்கள் மலரவில்லை. ஏமாற்றமே ஏற்பட்டது. தனது பிரயாசத்தின் பலன் பலனற்றுப் போய் விட்டதே என சோர்ந்து நின்றாள். ஒருநாள் சுவருக்கு மறுபுறம் குடியிருந்த குடியிருப்பை சேர்ந்த பெண் ஒருவள் அந்த பூச்செடியை புகழ்ந்து பேசினாள். பூக்காத இந்த செடியால் என்ன பயன் என்றாள், செடியை வளர்த்தவள்.

பூக்கவில்லை என்று யார் சொன்னது? சுவரின் மறுபுறம் வந்து பார் என அவளை அழைத்து சென்று காட்டினாள். மலர்ந்து நின்ற பூக்களின் அழகில் மெய்மறந்து நின்ற பெண் என் பிரயாசம் வீண் போகவில்லை என களிப்போடு சொன்னாள். (திபா. 92: 12) “நீதிமான் பனையை போல் செழித்து லீபனோலிலுள்ள கேதுருவைப் போல வளருவான்.”

ஆம்! எவ்வளவோ நான் பிரயாசப்படுகிறேன். ஆனால் என் வாழ்வு எப்போதும் ஏமாற்றமாகவே இருக்கிறது என்று சோர்ந்து நிற்கிறீர்களா! நீதிமான் பனையை போல செழிப்பான். எனவே உங்களை அறியாமலே உங்கள் பிரயாசங்களை கடவுள் ஆசீர்வதிப்பார். “அவர்கள் பசியடையார், தாகமுறார்” (ஏசா. 49: 4). “அதற்கு நான் விருதாவாய் உழைக்கிறேன். வீணும் வியர்த்தமுமாய் என் பெலனை செலவழிக்கிறேன்” என்று கூறாதபடிக்கு கடவுளின் மேல் நம்பிக்கையை வையுங்கள். உங்கள் மேல் இரங்குகிறவர் உங்களை செழிப்பான நீரூற்றுகள் நிறைந்த இடத்திற்கு இந்த மாதத்தில் அழைத்து சென்று நிறைவான வாழ்வைத் தந்து மகிழ்ச்சியினால் நிரப்புவாராக.

திருமதி. **சால சுந்தர ஜீவா**

01-11-2019

புதிய மாத தொடக்கஅருளுரை

## உடன்படிக்கை செய்யும் ஆண்டவர்

எசா. 54:1-10

**"மலைகள் நிலை சாயினும் குன்றுகள் இடம் பெயரினும் உன் மீது நான் கொண்ட பேரன்போ நிலைசாயாது; என் சமாதான உடன்படிக்கையோ அசைவுறாது என்கிறார் உனக்கு இரக்கம் காட்டும் ஆண்டவர்"** (எசா. 54:10)

பத்திரமாய் பத்து மாதங்கள் காத்து பதினோராவது மாதத்தின் துவக்க நாள் காலையில் இறை இல்லம் வருவதற்கு இறைவன் அருளிய சொல்லிமுடியா நன்மைகளை நினைக்கவும், இம்மாதம் முழுவதும் இறைவன் தமது இரக்கச் செயல்களால் நம்மைப் பாதுகாத்து ஆசீர்வதிக்கவும் வேண்டி, அவரது வார்த்தைகளினூடாய் நம்மை தற்காப்போம். இன்றைய நாள் இறைவன் மனுக்குலத்தோடு செய்யும் உடன்படிக்கையை ஆராய்வோம். ஏசா. 54:10)-ல் "என் சமாதான உடன்படிக்கையோ அசைவுறாது" என்கிறார் ஆண்டவர்.

வாழ்வில் தோல்விகளாலும், வெறுப்புகளாலும், நிறைவேறாத கனவுகளாலும் தினந்தோறும் துன்புறும் நமக்கு ஆண்டவர் அருளும் உடன்படிக்கை நம்மை வாழ்வை வளம் பெறச் செய்யும் என்பதை அறிய முடிகிறது. இவ்வதிகாரத்தில் இறைவன் இஸ்ரவேல் மக்களோடு செய்து கொள்ளும் உடன்படிக்கை, அவர்கள் மீது கொண்டுள்ள இறைவனின் அன்பு, அவரது இரக்கம் ஆகியவை இன்னும் மாறவில்லை, மறையவில்லை. அவர்கள் தம் வாழ்வில் இறைவனை மறந்து செய்யும் செயல்பாடுகளாலும், பாவத்தின் விளைவுகளாலும் "இமைப்பொழுதே என் முகத்தை உனக்கு மறைத்தேன்" என்ற ஆண்டவர், நோவாவோடு இறைவன் ஏற்படுத்திய உடன்படிக்கையையும் நினைக்கிறேன் என்று சொல்லி இரக்கம் காண்பிப்பவராக செயல்படுகிறார். ஆண்டவர் அனுதினமும் நம்மோடு இருந்து உடன்படிக்கை செய்து ஆசி வழங்குவார். உடன்படிக்கை நம்மோடு ஆண்டவர் ஏற்படுத்தும் போது நாம் பெறும் ஆசிகள் என்ன?

### *1. இழப்புக்களை மாற்றுவார்:* (54:1-6)

வாழ்வில் பலவித இழப்புக்களை சந்தித்திருப்போம். அவைகளை ஆண்டவரின் சமாதானத்தின் உடன்படிக்கையினால் மாற்றி நன்மைகளை இரட்டிப்பாக்குவார். இவ்வசனங்களில் கூடாரத்தின் இடத்தை விரிவாக்கும்,

குடியிருப்புகளை தொங்கு திரைகளைப் பரப்பிவிடு, வலப்புறம், இடப்புறம் நீ விரிந்து பரவுவாய், நீ அவமானத்திற்குள்ளாக மாட்டாய் போன்ற அனேக வாக்குறுதிகளைக் காணலாம். இங்கு குறிப்பிடப்படும் மக்கள் இறையுறவிலிருந்து விலகிய போது இத்தகைய இன்னல்களை அனுபவித்தார்கள். தினந்தோறும் துக்கத்தோடு எல்லாவற்றையும் இழந்தவர்களாக மாறினார்கள். ஆனால் இறைவனின் உடன்படிக்கை இழந்தவைகளை விட இரட்டிப்பான பலன்களைத் தருவதுதான். பக்தன் யோபு இழப்புகளைக் கண்டார். இறைவன் செய்த உடன்படிக்கையின் பலனாக அவரது வேண்டுதல்கள், பக்தி வாழ்வு நண்பர்களுக்கான மன்றாட்டு அனைத்தையும் கண்ட இறைவன் இரண்டு மடங்கு நன்மைகளைத் தந்தார் என குறிப்பிடப்பட்டுள்ளது (யோபு 42:10).

ஆக, நாம் இறைவனோடு கிட்டிச் சேர்வது நமது வாழ்வின் இழப்புகளை மாற்றி இரண்டத்தனையாக நன்மையைத் தரும்.

### *2. இமைமூடும் வரை பாதுகாப்பார்:* (54:7-10)

இறைவனின் இரக்கம் என்பது அது ஆயிரம் தலைமுறைமட்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மனிதனின் தீமையான வாழ்வினால் பல நேரம் இன்னல்களை அனுபவிக்க வேண்டியுள்ளது. நோவாவின் காலம் பெருவெள்ளத்தில் இறைவன் தம் முகத்தை மறைத்தார் எனலாம். இறைவனின் இமைப்பொழுது இவ்வுலகில் பேரழிவு நடைபெறும். ஆக அவற்றை நம் வாழ்வின் பல அனுபவங்களால் உணரமுடியும். அப்போது நாம் இறைவன் இரக்கம் காட்டவில்லையே என்று கூறுவதுண்டு. அவர் எப்போதும் நமது வாழ்வில் சமாதானத்தின் உடன்படிக்கையை ஏற்படுத்துவது அன்பின் வெளிப்பாடே ஆகும். இமைமூடும் வரை இறைவனின் பாதுகாவல் என்றால் அது பெரும் பாக்கியமானது. அவற்றிற்காக ஏங்காதோர் இல்லை. அவரிடம் நாம் நமது பெலவீனங்களைக் கூறி புது கிருபைகளைப் பெறுவதின் மூலம் ஆண்டவரின் பாதுகாப்பைப் பெறுகிறோம். அரசராகிய தாவீது, (தி.பா. 71:18). வயது முதிர்ந்த, முடி நரைத்துவிட்ட என்னைக் கைவிடாதேயும் என்று வேண்டுகிறார். நம்மையும் இறைவன் இமைமூடும் வரை பாதுகாப்பார்.

### *3. இன்பம் தருவார்:* (54:7-10)

ஆண்டவரின் இரக்கம் பலவிதங்களில் வெளிப்படுகிறது. காரணம் அவர் இரக்கங்களின் கடவுள் (2 கொரி. 1:3). ஆக அவர் இரக்கம் காட்டுவது இறைமக்களிடமே. துன்பத்தினூடாய் அலைக்கழிக்கப்பட்ட இஸ்ரவேலர், இனி ஆறுதல் பெறுவர். எல்லாப் பகைவர்களிடமிருந்தும் இறைவன்

அவர்களைப் பாதுகாப்பர். அவர்களில் செல்வம் பெருகும், அவர்கள் வாழுமிடம் செழிப்புறும். அவர்களின் பிள்ளைகளை ஆண்டவரே கற்பிப்பார். பகைவர்களின் கூட்டம் இனி உங்களையோ, உங்கள் பிள்ளைகளையோ தொடுவதில்லை என்று குறிப்பிடுகிறார். அவரது இரக்கத்தினால் இத்தகைய நன்மைகளை இறைவன் இஸ்ரயேலருக்கு கொடுத்தார். இதுவரையிலும் துன்பத்தில் துயருற்ற நம்மை இப்புது மாதத்தில் இன்புற வைக்கின்றார். மனநிறைவோடு வாழ்ந்து செழிப்போடு இறைவனை தொழுவோம்!

அன்பர்களே! இப்புதிய மாதத்தில் ஆண்டவர் நமக்கு செய்த உடன்படிக்கையால் நாம் இழப்புகளிலிருந்து விடுபட்டு, இமைமூடும் வரை பாதுகாவலைப் பெற்று, இன்பத்துடன் வாழ ஆண்டவர் நமக்கு அருள் வழங்குவாராக!

திரு. G.R. ***ஜெபசிங்***

01-12-2019

புதிய மாத நன்றித் தொழுகை

## ஒளியாக ஏற்படுத்தும் ஆண்டவர்

ஏசா. 42:1-7

“ஆண்டவராகிய நான் நீதியை நிலைநாட்டுமாறு உம்மை அழைத்தேன். உம் கையைப் பற்றிப்பிடித்து, உம்மை பாதுகாப்பேன். மக்களுக்கு உடன்படிக்கையாகவும், பிற இனத்தாருக்கு ஒளியாகவும் நீர் இருக்கமாறு செய்வேன்.” (எசாயா 42:6)

இரண்டாயிரத்தி பத்தொன்பதாம் ஆண்டினுடைய பதினோரு மாதங்களை இறைவனுடைய கிருபையால் நாம் கடந்து வரவும், கடந்து வந்த பாதையில் ஆண்டவராகிய கர்த்தர் நம்மை, இணைச்சட்டம் 1:31-ல் சொல்லப்பட்டிருக்கிறபடி ஒருவன் தன் மகனை தூக்கி செல்வது போல் நம்மை சுமந்திருக்கிறார். இணைச் சட்டம் 32:11 கூறியிருக்கிறப்படி கழுகு தன் குஞ்சுகளை தன் சிறகுகளின் மேல் சுமப்பது போல சுமந்து காத்திருக்கிறார்.

இந்த கிறிஸ்து பிறப்பு மாதத்திலே பிரவேசித்திருக்கிற நம்மை எசாயா 42:6-ன் படி ஒளியாக வைக்க விரும்புகிறார்.

இன்றைய உலக வாழ்வினை நாம் உற்று கவனிக்கும் போது அனேகருடைய வாழ்வானது இருள் சூழ்ந்ததாய் காணப்படுவதை நாம் கண்டுகொள்ள முடிகிறது.

பாவம் என்னும் இருள், பயம் என்னும் இருள், தனிமை என்னும் இருள், துன்பம் என்னும் இருள், வியாதி என்னும் இருள் என்று சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால் யாருமே இந்த இருள் நிறைந்த அந்தகாரம் சூழ்ந்த உலக வாழ்வினில் இருப்பதை விரும்புவதில்லை.

திருப்பாடல் 18:28-ல் சங்கீதக்காரன் சொல்லும்போது “ஆண்டவரே, நீர் என் விளக்கக்கு ஒளியேற்றுகின்றீர். என் கடவுளே நீர் என் இருளை ஒளிமயமாக்குகிறீர்” என கூறுகிறார்.

யோபு தன் வாழ்வினிலே சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்த போதும் கூடஆண்டவரே இருளை அகற்றி வெளிச்சமாக்கிறவர் என்பதை யோபு 29:3-லே “அப்போது அவர் விளக்கு என் தலை மீது ஒளி விசிற்று. அவரது ஒளியால் இருளில் நான் நடந்தேன்” என கூறுகிறார்.

### *1. இருளை அகற்றும் இறைவன்* :

இயேசு கிறிஸ்துவின் பிறப்பை கொண்டாட ஆயத்தப்படும் நாம், ஆண்டவர் இருளை அகற்றி வெளிச்சத்தை வீசப்பண்ணுகிறார் என்பதை நாம் அறிந்துக் கொள்ள வேண்டும். இதை அறிந்த ஏசாயா தீர்க்கன்

உரைக்கும் போது ஏசாயா 9:2-ல் காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள். சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதித்துள்ளது என குறிப்பிடுகிறார். ஆண்டவர் நம்மையும் இந்த கிறிஸ்து பிறப்பு மாதத்தில் ஒளியாக வைக்க விரும்புகிறார்.

சந்திரனை பாருங்கள் அதற்கு இயற்கையாய் ஒளி இல்லை. ஆனால் சூரியனுக்கோ இயற்கையான ஒளி உண்டு. சூரியன் சந்திரனிலுள்ள இருளை அகற்ற தன்னுடைய ஒளியைக் கொடுத்து சந்திரனை ஒளி வீசச் செய்கிறது. அதுபோல இருள்சூழ்ந்த மனித வாழ்வில் ஒளியை கொடுத்து இறைவன் நம்மை பிரகாசிக்க விரும்புகிறார்.

இருள் திடீர் என்று தோன்றினது அல்ல உலகம் படைக்கப்பட்டபோது இருள் இருந்தது. தொடக்க நூல் 1:2-ல் நாம் பார்க்கும் போது ஆழத்தின் மீது இருள் பரவியிருந்தது என்று குறிப்பிடப்படுகிறது.

இருளின் பிரதிபலிப்புகளாக அன்றாட மனித வாழ்வில் ஏற்படும் பயம், விரக்தி, கோபம், எரிச்சல், பழிவாங்குதல், கொடிய குற்றங்கள் இவைகள் எல்லாம் இடம் பெறுகின்றன.

இன்றைய சூழலில் தலை தூக்கி நிற்கின்ற தீவிரவாத தாக்குதல்கள், இனவெறி சமய மோதல்கள், இயற்கையை அழித்தல், மேலும் மனித உயிருக்கு பேராபத்தாய் காணப்படும் அணு ஆயுத போட்டிகளும், தாக்குதல்களும் கூட இருளின் வெளிப்பாடுகளாக நாம் பார்க்க முடிகிறது.

இருள் மனித வாழ்வை சிதறடிக்கும் ஆனால் ஒளியே மனித வாழ்வை ஒன்றிக்கிறது. கொலோசையர் 1:12 தந்தையாம் கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள். அவர் இறைமக்களுக்கான ஒளிமயமான உரிமைபேற்றில் பங்குபெற உங்களைத் தகுதியுள்ளவர்களாக்கியுள்ளார். ஆகையால் இந்த கிறிஸ்து பிறப்பு மாதத்தில் பிரவேசித்திருக்கும் நாம் இருளின் கிரியைகளிலிருந்து விலகி, மகிமைக்குரிய பாத்திரங்களாய் பிரகாசிக்கிற இறைவனின் கரத்தை பற்றிக் கொள்வோம்.

## *2. ஒளிரச் செய்யும் இறைவன்* :

“இருண்ட கண்டம்” என்று வர்ணிக்கப்படும் ஆப்பிரிக்க தேசத்திலே மிஷனெரியாக சென்ற டேவிட் லிவிங்ஸ்டன் எனும் தேவ மனிதனுடைய வாழ்வு நமக்கெல்லாம் தெரிந்ததே. கிறிஸ்து எனும் மெய்யான ஒளியினை அறியாமல் மரண இருளிலும், அடிமைதனத்திலும் வாழ்ந்துக் கொண்டிருந்தோருக்கு பிரகாசமுள்ள ஒளி சுடராய் தேவன் அவரை பயன்படுத்தினார்.

கிறிஸ்து என்னும் பிரகாசமுள்ள ஒளியினிடத்தில் வராமல், இருளின் அந்தகாரத்துக்குள் மூழ்கிக் கிடக்கும் மக்களுக்கு பவுல் எபேசியர் 5:14-இல் சொல்லுகிறபடி தூங்கிறவனே விழித்தெழு, இறந்தவனே உயிர்பெற்றெழு கிறிஸ்து உன் மீது ஒளிர்தெழுவார் என கூறப்பட்டுள்ளது. இந்த நம்பிக்கையின் செய்தியை அறிவிக்க ஆண்டவர் அழைக்கிறார்.

இருளிலிருந்து ஒளிக்கு நேராய் என்பதை Sanskrit - "Tamasoma Jyotirgamaya" என்கிற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. அதனுடைய விளக்கம் என்ன வென்றால் lead us from darkness to light.

A Prayer of St. Francis of Assisi" Where there is darkness, let me sow light. ஆண்டவரே எங்கே இருள் காணப்படுகிறதோ அங்கே உமது ஒளியைப் பிரகாசிக்கும் தூதுவராய் என்னை மாற்றும் என மன்றாடுகிறார். ஆண்டவரும் நம்மை இந்த கிறிஸ்து பிறப்பு மாதத்தில் ஒளியாகவும், மற்றவர்களுக்கு ஒளியை நாம் கொடுக்கவும் அழைக்கிறார்.

லூக்கா 1:78,79 "இருளிலும் இறப்பின் பிடியிலும் இருப்போர்க்கு ஒளிதரவும், நம்முடைய கால்களை அமைதி வழியில் நடக்க செய்யவும், நம் கடவுளின் பரிவுள்ளத்தாலும், இரக்கத்தாலும் விண்ணிலிருந்து விடியல் நம்மைத் தேடிவருகிறது" என கூறப்பட்டுள்ளது. ஒளியாக வைக்க விரும்பும் இறைவனின் ஒளியை பெற்று சுடர்களைப் போல் இந்த புதிய மாதத்தில் பிரகாசிப்போமாக.

அருள்திரு. K. **அனில்குமார்**

# சிறப்பு நாட்களுக்கான அருளுரைகள்

01-06-2019

**புதிய கல்வியாண்டு தொடக்க நாள்**

# கல்வி : கடவுளின் கொடை

நீமொ. 2:1-11

**"ஏனெனில் ஞானத்தை அளிப்பவர் ஆண்டவரே அறிவிற்கும் விவேகத்திற்கும் ஊற்றானவர் அவரே."** (நீமொ. 2:6)

புதிய கல்வியாண்டில் புன்னகையுடன், புதுமைகள் புரிய ஆயத்தமாகும் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். "சிற்பி பளிங்குக் கல்லை அழகிய சிற்பமாக வடிவமைப்பது போல் கல்வி மனிதனை வடிவமைக்கும்"என்பது ஜேசஃப் அடிசன், 1711-ல் சொன்ன கூற்று. கல்வி என்பது குழந்தைகளை உடல் மற்றும் மனவளர்ச்சியில் அறிவு நல்லொழுக்கம் ஆகிய நன்மதிப்புடன் வளர உதவும் ஓர் அமைப்பு. கல்வியின் அடிப்படையே கற்றல். சரியானவற்றை கற்று வாழ வழிநல்குவதே கல்வி.

12 வயது சிறுவன் ராமு தன் பாட்டியுடன் வாழ்ந்து வந்தான். ஒருநாள் இல்லத்தின் வெளியே வெட்டுகத்தி ஒன்று சூரிய வெயில் பட்ட நிலையில் இருந்தது. அதை எடுக்க முற்பட்ட ராமு வெப்பத்துடன் இருப்பதைப் பார்த்து, பாட்டியிடமாய் சென்று பாட்டி வெட்டு கத்திக்கு காய்ச்சல் வந்து விட்டது என்றான். பாட்டியோ அவனுடன் சென்று வெட்டுகத்தியை எடுத்து வீட்டிலிருந்த பெரிய தண்ணீர் தொட்டியில் 3 முறை மூழ்கடித்து எடுத்தார். தொட்டுப் பார் வெட்டுகத்தியின் காய்ச்சல் போய்விட்டது என்றார். மாதங்கள் ஓர் சில கடந்தன. திடீரென்று காய்ச்சலால் பாதிக்கப்பட்டாள் பாட்டி. ராமு பாட்டியைத் தொட்டுப் பார்த்தான். "தீ" போல் சுட்டது. ராமுவின் சிந்தனை துளிர்விட்டது. தான் கற்ற வைத்தியத்தை நிறைவேற்ற முற்பட்டான். பாட்டியை தூக்கி பெரிய தொட்டியில் போட்டு 3 முறை மூழ்கடித்து எடுத்தான். பாட்டியின் நிலை மோசமானது. சிரிப்பதற்கான வேடிக்கை கதையே ஆயினும் சிந்திப்போம்.

கற்பது சரியாக அமைந்தால் செயல்களும் வாழ்வும் சிறப்பாய் அமையும் என்பதே நாம் அறிந்திட வேண்டிய உண்மை. எனவே, புதிய கல்வியாண்டில் கால் தடம் பதிக்கும் நாம்,

## *1. ஆர்வமாய் கற்போம்* :

"செல்வத்தை நாடுவதுபோல் ஞானத்தை நாடி புதையலுக்காகத் தோண்டும் ஆர்வத்தோட அதைத் தேடு" (நீ.மொ. 2:4)

ஆர்வமாய் கற்பது ஆக்கபூர்வமான வாழ்விற்கு அடிப்படையானது. ஆற்றல்களை வளர்க்க இன்றியமையாதது. "கற்றது கைமண் அளவு;

கல்லாதது உலகளவு'' என்பது கற்றல் ஒரு போதும் நிறைவடைவதில்லை. எனவே, ஆர்வமாய் கற்றல் அவசியமானது என்பதை வலியுறுத்தும் சொற்றொடராய் அமைகின்றது.

கற்பதில் கவனம் செலுத்தி ஆர்வமாய் கற்பது அவசியம் கல்வியின் அடிப்படை கடவுள் எனலாம். காரணம் இல்லாமல் இல்லை. தொ.நூ. 2:15-17 -ல் கடவுள் மனிதனை மட்டுமன்று. மரம், செடி, கொடி என்று பலவற்றையும் படைத்தார். அத்துடன் அவனை ஏதேன் என்னும் அழகிய தோட்டத்திற்கு அழைத்து வந்து கற்றுக் கொடுக்கலானார்.

பண்படுத்தி, பாதுககாத்து, பயன்பெறு என்றும், தீமை விளைவிப்பதை தொடாதே என்றும் கற்றுக் கொடுத்தார். கற்றுக் கொள்வதில் அலட்சியம் காண்பித்த மனிதன் துன்பங்கள் பல அனுபவித்தான். ஆம், இவ்வுலகினில் வாழ்விற்கு நன்மை தருபவைகளை ஆர்வமாய் கற்பது ஆசீர்வாதமான வாழ்வுக்கு அடிப்படை.

### *2. அறியாமை களைவோம்* :

"நுண்ணறிவு உனக்குக் காவலாய் இருக்கும் மெய்யறிவு உன்னைக் காத்துக் கொள்ளும்'' (நீ.மொ. 2:11)

உணர்வு (புத்தி) அறியாமையைக் களைந்து மாணாக்கரைப் பாதுகாக்கின்றது. அறியாமையை அகற்ற கல்வியே அடிப்படையானது. கல்வி மனித வாழ்வினில் அறியாமை அகற்றி இன்பம் பயக்கும் என்பதை குமரகுருபரர் இவ்வண்ணமாய் பாடியுள்ளார்.

"தொடங்குங்கால் துன்பமாய் இன்பம் பயக்கும்

மடம் கொன்று அறிவு அகற்றும் கல்வி'' என்று. இதன் விளக்கம் கல்வி நம்மிடம் இருக்கும் அறியாமையைப் போக்கி அறிவை விரிவாக்குகின்றது. அதன் வழி இன்பம் பயக்கிறது என்பதே!

இதையே நான்மணி கடிகமும்,

"கற்பக் கழிமடம் அஃகும் (47)''

கற்பதால் நம்மிடம் உள்ள அறியாமை நம்மைவிட்டு நீங்குகிறது என்பதே உண்மை.

அமெரிக்காவில் பிறந்த தாமஸ் ஆல்வா எடிசன் 2000-க்கும் மேற்பட்ட கண்டுபிடிப்புகளை கண்டறிந்த அறிவியல் அறிஞர். அவர் பூனை ஒன்று வளர்த்து வந்தார். அது அவரிடம் செல்லமாக விளையாடும். எடிசன் ஆராய்ச்சியில் ஈடுபடும் போது அறைக் கதவை மூடி விடுவது வழக்கம். அப்பொழுது, பூனை வந்து போவதற்காக அறைக்கதவில் வட்டமாக

துளையிட்டு வைத்தார். அதன் வழியாக பூனை வந்து அவரிடம் சிறிது நேரம் விளையாடி விட்டு பிறகு அதே ஓட்டை வழியாக வெளியே சென்று விடும். இது வழக்கமாக நடைபெற்று வந்தது. சிலநாட்கள் கழித்து அப்பூனை இரண்டு குட்டிகளை ஈன்றது. அக்குட்டிகளும் வந்து போக கதவில் பெரிய ஓட்டைக்கு அருகில் இரண்டு சிறிய ஓட்டைகளை செய்து வைத்தார். ஒருநாள் எடிசனைப் பார்க்க அவர் நண்பர் ஒருவர் வந்தார். கதவிலே இருந்த ஓட்டைகளைப் பார்த்து, காரணத்தைக் கேட்டார். அதற்கு எடிசன் நான் ஒரு பூனை வளர்த்து வருகிறேன். அது தற்சமயம் இரண்டு குட்டிகளை ஈன்றுள்ளது. நான் ஆராய்ச்சியில் ஈடுபடும் போது கதவை சாத்தி விடுவது வழக்கம். பூனைகள் வந்து போக ஓட்டைகளைச் செய்துள்ளேன் என்று சொன்னார். அதற்கு அவருடைய நண்பர் எதற்காக மூன்று ஓட்டைகள் என்று கேட்டார். அதற்கு எடிசன் பெரிய பூனை வந்து போக பெரிய ஓட்டை. குட்டிகள் வந்து போக 2 சிறிய ஓட்டைகள் என்றார். அதற்கு அவருடைய நண்பர் பெரிய ஓட்டை வழியாகவே குட்டிகளும் வந்து போகலாமே என்று கற்றுக் கொடுத்தார். சிறிது நேரம் பேசாமல் இருந்த எடிசன் தன்னுடைய அறியாமையை எண்ணி வெட்கம் அடைந்தார். ஆம், அறியாமையைக் களைந்து அறிவை வளர்க்க உதவுகின்றது கல்வி.

### *3. ஆசியாய் திகழ்வோம்* :

"நேர்மையாளதின் பாதைகளை அவர் பாதுகாக்கின்றார், தம் அடியாரின் வழிகளைக் காவல் செய்கின்றார்." (நீ.மொ. 2:8)

புதிய கல்வியாண்டில் பிரவேசிக்கும் நாம் கற்கின்ற கல்வியின் வழி பிறருக்கு நன்மை புரிந்து ஆசியாய் திகழ வேண்டும். 1 நாளா. 1:10-ல் சாலெமோன் அரசன் ஞானத்தையும் அறிவையும் கடவுளிடம் கேட்டுப் பெற்றுக் கொள்கிறான். அந்த ஞானத்தாலும் அறிவாலும் தேசத்தில் நல்லாட்சி புரிந்து நீதியை நிலைநாட்டி தன் தேசத்திற்கு ஆசியாய் திகழ்கின்றான். அவ்வண்ணமே நாமும் கற்கின்ற கல்வியின் வழி நற்சேவை புரிந்து பிறருக்கு ஆசியாய் திகழ வேண்டும்.

கடவுளின் கொடையாம் கல்வியை "அவரிடத்தில் கேட்டு பெற்றுக் கொள்ள வேண்டும். அதுவே வாழ்விற்கு அலங்காரமும், மணிமுடியுமாம்."

புதிய கல்வியாண்டில் புது பயணம் தொடரும் நாம் இக் கல்வியாண்டில் ஆர்வமாய் கற்போம். அறியாமை களைவோம், ஆசியாய் திகழ்வோம். இறைமகனாம் இயேசுகிறிஸ்து அருளும் நல்லாசியினால் வாழ்வு பெறுவோம்.

திரு. J. **ஸ்டாலின்**

தேர்வு நாள்

## சவாலை எதிர்கொள்ளுங்கள்

யோசு. 1:1-9

**"....நீ செல்லும் இடம் எல்லாம் நலம் பெறுவாய்; வெற்றி காண்பாய்"** (யோசு.1:8)

தேர்வு என்பது தேர்வுக்குட்பட்ட ஒருவரின் அறிவு, திறன், நாட்டத்தை மதிப்பிடுவதாகும். இன்று தேர்வு பல்வேறு முறைகளில் நடத்தப்படுகின்றது. தேர்வில் வெற்றி பெற்றால் மட்டுமே உயர்ந்த பதவிகளை பெற முடியும் என்ற நிலை இருக்கின்றது. உதாரணமாக அரசுத் துறையில் ஆசிரியராக வேண்டுமென்றால் கண்டிப்பாக ஆசிரியர் தகுதி தேர்வில் (TET) வெற்றி பெற வேண்டும். கல்லூரியில் பேராசியராக வேண்டுமென்றால் தேசிய தகுதி தேர்வில் (NET) வெற்றி பெற வேண்டும். மருத்துவத்துறைக்கு நீட் (NEET) தேர்வு, இன்னும் அரசுத் துறையில் டி.என்.பி.எஸ்.சி குருப் I, II, III, IV, சிவில் சர்வீஸ் தேர்வு இப்படி பல தேர்வுகளை வரிசைப்படுத்தலாம். இத்தேர்வுகள் நமக்கு இன்று பெரும் சவாலாக இருக்கிறது. தேர்வில் மதிப்பிடப்பட வேண்டிய மாணவர்கள் இன்று மதிப்பை இழந்து மரணத்தை தேடிக் கொள்கின்றனர். எதிர்பார்த்த மதிப்பெண்களை பெறத் தவறுகின்ற போது தற்கொலைக்கு நேராக செல்கின்றனர். தேர்வை சாபமாகப் பார்க்காமல் ஒரு சவாலாக பார்க்க வேண்டும். யானைக் குட்டியாக இருக்கும் போது அது ஓடிவிடக்கூடாது என்பதற்காக பாகன் ஒரு சிறிய சணல் கயிறை காலில் கட்டி மரத்தில் கட்டி வைப்பான். யானை இழுத்து இழுத்து பார்க்கும் இழுக்க முடியாது, அறுக்கவும் முடியாது. இப்படி இரண்டு மூன்று மாதங்கள் இழுத்துப் பார்த்து முடியாது என்றவுடன் "என்னால் முடியாது" என தனது மனதில் பதித்து விடும். யானை வளர்ந்த பிறகும் பாகன் அதே சிறிய கயிற்றால் தான் கட்டிப் போட்டிருப்பான். யானையே தன்னால் முடியாது என்ற எண்ணத்தால் எந்த முயற்சியும் எடுக்காது. இப்படித்தான் இன்று மாணவர்களும் தங்களால் முடியாது என்று எண்ணி தேர்வை சந்திக்க அச்சப்படுகின்றனர். தேர்வில் வெற்றி பெற வேண்டுமென்றால் தேர்வை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்பதை திருமறை சார்ந்து தியானிப்போம்.

### *1. தைரியமாய் எதிர் கொள்ளுங்கள்* (Face courageously):

(யோசு. 1:6)

"Succeos is not Final, Failure is not Fatal Its is a Courage to continue the counts" அதாவது வெற்றியோ தோல்வியோ தைரியமாய் எதிர்

கொள்ளுங்கள். நாம் வெற்றி பெறுவதற்காகவே பிறந்திருக்கின்றோம் என்பதை முதலாவது உணர வேண்டும்.

திருமறையில் யோசுவாவுக்கு இஸ்ரவேல் மக்களை வழிநடத்தி செல்ல வேண்டும் என்ற பெரிய பொறுப்பை ஆண்டவர் கொடுத்தார். அவனுக்கு சில ஆலோசனைகளையும் வழங்கினார். ஒரு பெரிய ஜனக்கூட்டத்தை எப்படி வழிநடத்துவேன் என்ற மனநிலையில் மனபலத்தை இழந்து இருந்த யோசுவாவை ஆண்டவரின் வார்த்தைகள் தைரியப்படுத்தியது. " பலங்கொண்டு திடமனதாயிரு"(1: 6). தேர்வுக்காக ஆயத்தப்படுகின்ற போது நம் மனபலத்தை இழந்து விடாமல் ஆண்டவர் நம்மோடு இருக்கின்றார் (1: 5) என்ற மனதைரியத்தோடு தேர்வை நாம் எதிர் கொள்ள வேண்டும். ஒரு வருடம் முழுவதும் படிக்க வேண்டிய பாடங்களை தேர்வுக்கு முந்தைய நாளில் படிக்கலாம் என்று இருந்தால் தேர்வுநாள் நெருங்கும் போது மன தைரியம் குறைந்து பதற்றமும், மன சோர்பும் நம்மில் உருவாகும். எனவே தினமும் கடினமாக உழைத்து ஆண்டவரின் துணையோடு தேர்வினை தைரியமாய் எதிர் கொண்டு வெற்றி பெறுவோம். " நீ உன்னை பலவீனன் என்று ஒருபோதும் சொல்லாதே எழுந்து நில், தைரியமாய் இரு."

***2. கவனமாய் எதிர் கொள்ளுங்கள்*** (Face carefully) : (யோசு. 1:8).

"The key to Succes is to Focus our Conscious mind on things we desire not things we Fear"

கடமைகளில் கவனம் செலுத்தி முழு மனதையும் ஈடுபடுத்தி செய்யும் போது செய்யும் காரியம் சிறப்பாக அமையும். என்னவாகுமோ? எப்படியாகுமோ? என்று கற்பனை செய்து கலங்குவதால் ஏற்ற பலனும் இல்லை. மாறாக கவனம் சிதறிய காரியம் கெட்டு போகும் வாய்ப்பு இருக்கின்றது. எதிலும் கவனம் தேவை கவலை தேவையில்லை. விடாமுயற்சியும், பயிற்சியும் இருந்தால் நினைத்ததை சாதித்து விடலாம். எல்லோரும் பல திறமைகள் இருக்கிறது. அவைகளை கவனமாக கையாள வேண்டும்.

சாலையில் பயணிக்கும் போது போக்குவரத்து சமிக்ஞைகள் (Traffic Singals) வைக்கப்பட்டு இருக்கும். கவனமாய் செல்வதற்கு எச்சரிக்கை பலகைகளையும் வைத்து இருப்பதை நாம் பார்த்திருப்போம். திருமறையில் யோசுவாவுக்கு ஆண்டவர் ஒரு சில எச்சரிக்கைகளை கொடுப்பதைப் பார்க்க முடிகிறது (1:7). மக்களை வழிநடத்துவதே யோசுவாவுக்கு

கொடுக்கப்பட்ட கடமை. ஆண்டவரின் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்றால் யோசுவா நியாயப்பிரமாணத்தை கைக் கொள்ளவும் அதை தினமும் தியானிப்பதில் கவனமாய் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்துகின்றார் (1:8).

தேர்வுக்காக ஆயத்தப்படுகின்ற போதும் நம் கவனத்தை சிதறடிக்காமல், நம் இலட்சியத்தில் மட்டுமே கவனம் செலுத்தி படிக்க வேண்டும். படிக்கும் போது வேறு எதற்கும் முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது (Ex. Mobile, Computer, Internet ect...). தேர்வு எழுதுகின்ற போதும் கவனமாக தேர்வுகளை எழுத வேண்டும். அவசரப்படாமல் நன்கு யோசித்து பதில்களை எழுத வேண்டும். இன்று பலர் அவசரப்பட்டு தவறான பதில்களை எழுதி வெற்றி வாய்ப்பை இழந்து விடுகின்றனர். வாழ்க்கை என்பது நேரத்தால் ஆனது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். கடந்து போன காலத்தை விலை கொடுத்து திரும்ப வாங்க முடியாது. எனவே காலத்தை கவனமாய் பிரயோஜனப்படுத்த அழைக்கப்படுகிகன்றோம்.

நீதிமொழிகள் ஆக்கியோன் “தன் நடையை கவனித்திருக்கிறவன் தன் ஆத்துமாவை காக்கிறான்” என்று குறிப்பிட்டிருக்கிறார். கல்வி பயிலும் போது நம் நடையை கவனித்து படிப்பில் மட்டுமே கவனம் செலுத்தி தைரியமாய் தேர்வை எதிர்கொள்ளுவோம். கற்பவைகளை கவனத்தில் கொண்டு வாழ்க்கையில் அவைகளை உபயோகப்படுத்தும் பொழுதுதான் கல்வியின் பயனை அடைகிறோம். எனவே அதை உணர்ந்து தைரியமாய் தேர்வை எதிர்கொள்வது மட்டுமல்லாமல் கவனமாய் எதிர்கொண்டு வெற்றி வாகை சூடுவோம்.

திரு. **நியூபின் ஜேம்ஸ்**

*சங்க விழா*

## நன்றி படைத்தல்

தொநூ. 4:1-7 | 2கொரி. 9:1-7
திபா. 24 | லூக். 21:1-4

**"உன் செல்வத்தைக்கொண்டு அவரைப் போற்று உன் விளைச்சல்கள் எல்லாவற்றின் முதற்பலனையும் ஆண்டவருக்கு காணிக்கையாக்கு."** (நீமொ. 3:9)

விழாக்கள் இஸ்ராயேல் மக்களின் சமூகத்தோடும் ஆன்மிகத்தோடும் தொடர்புடையன. மோசே வழியாக பல விழாக்களை தலைமுறை தோறும் கொண்டாட வேண்டுமென கடவுள் கட்டளை கொடுத்தார். இஸ்ராயேல் மக்களை ஆண்டிற்கு இருமுறை (ஏப்ரல் - அக்டோபர்) கொண்டாடும் அறுப்புக்கால பண்டிகையை ஆசரித்து காணிக்கை செலுத்துவார்கள். நிலங்களில் கிடைக்கின்ற விளைச்சலை மையமாக கொண்டு கடவுளுக்கு நன்றி செலுத்தும் பண்டிகையாக ஆசரித்தனர். இதன் தொடர்ச்சியாகவே நம் திருச்சபைகளிலும் வருடத்திற்கு இருமுறை இப்பண்டிகையை சங்க பண்டிகையாக ஆசரித்து கடவுளுக்கு நன்றி செலுத்தி காணிக்கை படைக்கிறோம். ஆண்டவர் ஈவாக தரும் அருட்கொடைகளை கொண்டாடும் விழாவே சங்க பண்டிகை இப்பண்டிகை தினத்தில் காணிக்கைகளை எவ்வாறு படைக்க வேண்டுமென தியானிப்போம்.

### *1. முழுமனத்தோடு படைப்போம்* : எபி. 11:4

காயீன் நிலத்தின் பலனிலிருந்து காணிக்கை கொண்டு வந்தான். படைக்க வேண்டும் என்பதற்காகவே படைத்தான். ஆகையால் கடவுள் அவன் காணிக்கையை அங்கீகரிக்கவில்லை கனிவுடன் அவன் காணிக்கையை கடவுள் கண்ணோக்கவும் இல்லை. ஆபேல் தன்மந்தையின் தலையீறுகளில் கொழுமையானதை கொண்டு வந்தான். கருத்தோடும், ஒப்படைப்போடும், முழுமனதோடும் படைத்தான். காணிக்கை படைப்பதில் ஆபேல் கொண்டகவனம் கடவுளின் பார்வையில் கனிவுடன் கண்ணோக்கப்பட்டன. ஆபேலின் காணிக்கையை அங்கீகரித்தார். ஆபேல் தன்னையே முழுமையாக படைத்தபடியால் மகிழ்வுடன் சென்றான்.

குல மூதுவர்களான ஆபிரகாம், ஈசாக்கு யாக்கோபு என்பவர்கள் தங்களை முழுமையாக படைத்ததினால் வாழ்வில் மேன்மை பெற்று திகழ்ந்தனர் அவ்வாறாக நம்முடைய முன்னோர்கள் தங்களையே

படைத்ததினால் ஆலயங்கள், கல்வி சாலைகள் தோன்றி சமூகம் வளர்ந்தது. காணிக்கை படைத்தல் வாழ்வுச் சார்ந்து மட்டுமல்ல. வாழ்வை கடவுளுக்கு முழுமையாக ஒப்படைத்ததின் அடையாளமுமாகும்.

***2. முதற்பலன்களைப் படைப்போம்*** : வி.ப. 23:19

இஸ்ரவேலர் வாழ்க்கையில் எகிப்தில் அடிமைகளாக வாழ்ந்தபோது எகிப்தியர்களின் நிலங்களை பயிரிடுகிறவர்களாக இருந்தனர் கானானில் தங்களுக்கென விளை நிலங்களைப் பெற்றுகொண்டபோது அங்கு விவசாயம், மேய்ச்சல் ஆகிய முக்கிய தொழில்களை செய்தனர். பார்லி கோதுமை அறுவடை காலத்திலும், திராட்சை, பேரிச்சம் பழம், அத்திபழம், ஒலிவமரபழம், மாதுளை ஆகிய பழ வகைகளை கோடைகாலத்திலும் முதல்விளைச்சலின் முதற்கனியை கூடையில் கொண்டு வந்து அவர் முன்னிலையில் பணிந்து படைத்து தங்களை அர்ப்பணித்து ஆனந்தமடைந்தனர். தானிய வகைகளோடு கால்நடைகளையும், தலையீறுகளையும், தலைபிள்ளைகளையும் படைத்து மகிழ்ந்தனர்.

நம்முன்னோர்கள் விவசாயம் பனை ஏறும் தொழில் செய்தனர். பாட்ட சொத்து, குத்தகை நிலம், பட்டா இல்லா நிலங்களில் பயிரிட்டு உழைத்து வந்தனர். உற்பத்தியின் காலங்களில் நெல், வாழை, பதநீர், கருப்புகட்டி ஆகிய முதற்கனியையும் முதற்பலன்களாக படைத்து மகிழ்ந்தனர் பின்னாட்களில் சொந்த நிலங்களை பெற்று பயிரிட்டு பலன் பெற்று ஆண்டவருக்கு படைத்து ஆர்ப்பரித்தனர் நாமும் முதற்பலன்களை படைத்து இப்பண்டிகையை படைத்து இப்பண்டிகையை ஆசரிப்போம்.

***3. முதன்மையானதைப் படைப்போம்*** : லூக். 21 : 4

இறைவனுக்கு நன்றிபடையல் படைக்க எருசலேம் இறை இல்லத்தில் எக்காள வடிவிலான உண்டியல்கள் வைக்கப்பட்டிருந்தன. ஆலயத்தில் கடவுளை வழிபடவரும் மக்களும் இவைகளில் காணிக்கை செலுத்தி கடவுளைப் போற்றினர். காணிக்கை கொடுப்பதில் பெண்களும் உற்சாகமாக பங்கு பெற்றனர் சொத்துக்களோ, உடைமைகளோ இல்லாது மிகுந்த வறுமையோடு வாழ்ந்த ஏழைகைம்பெண் தனது பிழைப்புக்கு வைத்திருந்த இரண்டு காசுகளையும் காணிக்கை பெட்டியில் போட்டு விட்டாள். காணிக்கை பெட்டியை உற்று பார்த்து கொண்டிருந்த இயேசு இப்பெண்மணியை புகழ்ந்து எல்லாரைகாட்டிலும் அதிகமாக போட்டாள் என்பாராட்டினார். மறுநாளுக்கென்று அவளிடம் எதுவும் இல்லை அதை பற்றிய கவலையும் இல்லை. ஆண்டவர் பராமரிப்பார் என்று தன்

கவலையை ஆண்டவரின் கரத்தில் கொடுத்துவிட்டாள். கொடுத்தல் என்பது உழைப்பையும், உடைமையையும் தனக்கு பாதிப்பு ஏற்படும் அளவுக்குரியதாகும். ஏழைகைம்பெண்ணின் காணிக்கை ஏற்புடைய நிலையில் அமைந்திருந்தன. ஏழை கைம்பெண் எல்லாரை காட்டிலும் முதன்மையானதாக கொடுத்தாள். கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும். இயேசு நமக்காக தம் அன்பையும், தன்னுயிரையும் கொடுத்து நம்மை மீட்டுகொண்டார் என்பதை உணர்ந்து கொடுப்போம். (யோவா. 3:16).

இந்நாட்களில் செல்வம், செழுமை, பட்டம் பதவி இவற்றால் இறைவனை மறந்து வாழ்கிறோம் அரசர் எசேக்கியா, நெகேமியா காலத்தில் மிகுந்தவிளைச்சலுடன் ஆன்மீக எழுச்சியும் உண்டாயின மக்கள் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படி பொன்னும் பொருளும் படைத்தனர். இன்றைக்கு இறைபணிக்கு கொடுப்பது குறைந்துவரும் சூழல் மக்கெதொனிய சபை மக்கள் வறுமை, கஷ்டம், துன்பம், தோல்வி, நஷ்டம் வந்தபோதும் தேவ சித்தத்தினாலே தங்களை தாமே உணர்ந்து கொடுத்தார்கள். ஒப்படைப்பு சிந்தனையோடும், உயிரோட்டத்தோடு காணிக்கை படைப்போம். கடமைக்காக சங்க பண்டிகையை ஆசரிக்க வேண்டாம். இறைவனுக்குரியவர்கள் அவருக்குரியதை வஞ்சனையின்றி கொடுத்து இப்பண்டிகையை கொண்டாடுவோம்.

திரு. T.S. **ஏசைய்யன்**

# இறை இல்லத்தில் நாட்டப்படுதல்

2 குறி. 7:13-22 கொலோ. 1:21-24
தி.பா. 92 மத்தேயு. 13:53-58

**“ஆண்டவரின் இல்லத்தில் நடப்பட்டோர் நம் கடவுளின் கோவில் முற்றங்களில் செழித்தோங்குவார்.”** (திபா. 92:13)

இஸ்ரவேலர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையான பின்னர், ஆண்டவர் அவர்களை பகலில் மேகத்தூண் மூலமாகவும் இரவில் நெருப்புத் தூண் வழியாகவும் அவர்களை வழி நடத்தி சென்றார். இதற்கு மேலாய் அவருடைய மகிமை அவர்களை வழி நடத்தியது எல்லாம், இஸ்ரவேலர் கடவுளுக்கு பாலை நிலத்தில் பலிகளை செலுத்தியும் வழிபட்டும் வந்தனர். இவைகளை பார்த்த ஆண்டவர் இஸ்ரவேலர் என் திருப்பெயரை மகிமைப் படுத்த இவர்களுக்கு ஏதாகிலும் செய்ய வேண்டுமே என்கின்ற நேரத்தில் ஆசரிப்பு கூடாரத்தை அமைக்க வேண்டிய முறைமையினை தெளிவாக மோசேயிடம் கற்றுக் கொடுத்தார் (விப. 25-30). இந்த ஆசரிப்பு கூடாரம் ஒரு தற்காலிக கூடாாரமாக இருந்தது. காலப்போக்கில் தாவீது அரசர் கடவுளுக்கு ஒரு நிரந்தரமான ஆலயம் கட்ட வேண்டும் என்று தீர்மானித்து பல பொன் உடமைகளை சேர்த்து வைத்தார். 1குறி. 28:3 இல் நீ என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்ட வேண்டாம். 1குறி. 28:6 இல் உன் குமாரனாகிய சாலொமோனே என் ஆலயத்தையும் என் பிரகாரங்களையும் கட்டக்கடவன், அதின்படி சாலொமோன் தேவாலயத்தைக் கட்டி முடித்தான். கட்டின ஆலயத்தில் அவர் பல வேண்டுதல்களை ஏறெடுத்தார். கடவுள் அவன் ஜெபத்தைக் கேட்டு பதில் கொடுத்தார் (2குறி. 7:15). இன்று நாம் ஓய்வு நாளை பரிசுத்தமாக கடைபிடிக்கும் வண்ணமாய் இறைச் சமூகத்தில் வந்து அவரை தொழுது கொள்கிறோம். பல தொழுகைகளில் பங்கு கொண்டாலும் கூட, சபை நாள் தொழுகையானது ஒரு சிறப்பு மிகு தொழுகையாக அமைகிறது. காரணம், இறை நன்மைகள் பல செய்தவருக்கு நன்றி செலுத்தும் தோத்திர தொழுகையாகும். ஆலயத்தின் மூலமாக நாம் பெறும் ஆசீர்வாதங்கள் எவை என சிந்திப்போம்.

## *1. ஒலிவமரத்தைப் போன்ற ஆசீர்வாதம் :-*

'நானோ தேவனுடைய ஆலயத்தில் பச்சையான ஒலிவமரத்தைப் போலிருக்கிறேன்......'(திப 52:8)

ஒலிவமரம் மிகுந்த பயனுள்ள மருத்துவ குணம் நிறைந்த மரம், பல பயன்களை மனிதர்களுக்கு கொடுத்து உதவக் கூடிய மரம், தேவனுடைய ஆலயத்தில் பச்சையான ஒலிவ மரம் என்றால் எப்பொழுதும் கர்த்தருக்காக பயன் படுத்தப்பட்ட ஒரு பாத்திரம். அதனால் தான் நான் பச்சையான ஒலிவமரத்தைப் போலிருக்கிறேன் என்றான். இன்று நாம் ஆலயத்தையும், அதின் பணிகளையும், ஊழியங்களையும், கர்த்தருடைய வசனத்தையும் அதிகமாக நேசிப்போமென்றால் நாம் பச்சையான ஒலிவமரமும், நம் பிள்ளைகள் ஒலிவமர கன்றுகளைப் போல் செழித்து வளருவார்கள். இன்று கர்த்தருக்காக ஓழியம் செய்யும் வாஞ்சைகள் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. யாரோ ஒலுவோரடு கொண்ட விரோதத்தினிமித்தமாய் ஆலயத்திற்குள் வராத எத்தனையோ நபர்கள் உண்டு, இவை பச்சையாய் இருக்கும் ஒலிவ மரத்தோற்றத்தை மாற்றம் செய்கிற முயற்சியாக காணப்படுகிறது. அனேகருக்குள்ளாக உண்மையற்ற நிலைமையும் காணப்படுகிறது. திப. 92:13 'கர்த்தருடைய ஆலயத்திலே நாட்டப்பட்டவர்கள் எங்கள் தேவனுடையை பிரகாரங்களில் செழித்திருப்பர்கள்.' என்று எண்ணினவர்களாக ஒலிவ மரத்தைப் போலிருக்கிற ஆசீர்வாத்தை சுதந்தரித்துக் கொள்வோம்.

## *2. வழி நடத்தப்படும் ஆசீர்வாதம்*

".......தொழுகை கூடத்தில் அவர்களுக்கு கற்பித்தார்?" மத். 13:54

இயேசு ஜெப ஆலயத்தில் செய்த உபதேசத்தில்"நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல் உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன?" (மத். 7:13) என கூறினார். உபதேசம் என்பது கடவுளின் வார்த்தையால் வழி நடப்படும் அனுபவமாகும். சிலர் உபதேசத்தை கடைபிடித்து அதன் வழி நடப்பார்கள். வேறு சிலர் கடைபிடிப்பதில்லை. ஆலயங்களில் சொல்லும் உபதேசங்கள் கேட்போரை கடவுளுக்கு நேராக அவர்களை வழிநடத்தப்படுகிறதாய் அமைய வேண்டும். எரே. 6:6-ல் 'வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து அதிலே நடவுங்கள்.....?'. நல்ல கர்த்தருடைய வார்த்தைகளை கேட்டு கர்த்தருடைய வழி நடத்துதலை நம் வாழ்வில் சுதந்தரித்து கொள்வோம்.

### 3. நிலைத்தைருக்கும் ஆசீர்வாதம்

'நீங்கள் கேட்ட சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கை விட்டு அசையாமல், ஸ்திரமாயும் உறுதியாயும், விசுவாசத்திலே நிலைத்திருப்பீர்களானால் அப்படியாகும்?' (கொலோ. 1:22) ஆலயத்தில் கேட்கும் நற்செய்தி விசுவாச வாழ்வில் நிலைத்திருக்க செய்கிறது. நாம் ஆலயத்திற்க்குள் நுழையும் போது நம்மில் இறைபயம் இறையச்சம் ஏற்படட்டும், ஒருவருக்கொருவர் இருக்கும் அன்பும், தொடக்கால திருச்சபையின் ஒற்றுமையும், ஜெப வாழ்வும், சகோதர அன்பும் நிலைத்திருக்கட்டும். மனிதரில் காணப்படும் போட்டிகள், பொறாமைகள் இறைவனுக்கு இறைவனுக்கு பிரிய வாழ்வை கட்டுவோம். 'ஒருவன் தேவனுடைய ஆலயத்தை கெடுத்தால் அவனைத் தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்?' (1 கொரி. 3:17) என்ற வசனத்தின் படி நம்மை முழவதுமாக சுத்திகரித்து கொண்டு ஆண்டவரை நமக்குள் இருக்கின்ற ஆலயத்தில் தங்க வைப்போம், முடிவில் நிலைத்திருக்கின்ற ஆசீர்வாதமான நித்திய வாழ்வை சுதந்தரித்துக் கொள்வோம்.

திரு. L. **லாட்வின்**

# இயேசுவைப்போல் வளருங்கள்

லூக். 2:41-52

**"......அவர்களுக்கு பணிந்து நடந்தார்,...... இயேசு ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து, கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார்."** (லூக். 2:51,52)

இன்று நாம் அனுபவித்து கொண்டிருக்கிற நன்மைகளும், தீமைகளும் கடந்த நாள்களில் விதைக்கப்பட்டவைகளின் விளைவுகள் என்பதை மறுக்க இயலாது. கால நிலைகளில் கண்டிருக்கும் மாற்றங்களும், வாழ்வின் வளமையில் கொண்டிருக்கும் தாக்கங்களும் அதைத்தான் வெளிப்படுத்துகின்றன. கலா. 6:7b குறிப்பிட்டுள்ளபடி "ஒருவர் தாம் விதைப்பதையே அறுவடை செய்வார்." வெற்றியடைந்த தலைவர்களின் வாழ்வில் மாணவப் பருவத்தில் அவர்கள் கற்றுக் கொண்ட நன்னெறிகளும், பெற்றுக் கொண்ட அனுபவங்களுமே முன்னேற்றத்திற்கு ஊன்றுகோலாய் அமைந்தது. இயேசுவும் தமது சிறு பருவத்திலே அடைந்த அனுபவங்களே மூன்றரை வருடகால திருப்பணிக்கு வெற்றிகரமாக அமைந்தது. இயேசுவின் மாணவப் பருவம் மதிப்புமிக்கதாய் அமைந்தது என்பதற்கு அதிகமான ஆவணங்கள் நற்செய்திப் பகுதியில் தரப்படவில்லை என்றாலும், இன்றைய சிந்தனைக்கு தரப்பட்டிருக்கிற இரு வசனங்களில் நிறைந்துள்ள ஆதாரங்கள் இயேசு மாணவப்பருவத்தில் வளர்ந்து வந்த விதத்தை தெளிவுபடுத்துகின்றன.

## *1. உன்னத பண்புடன் நடந்தார்* :

பணிந்து வாழ்வதை அவமானமாகப் பார்க்கும் காலத்தில் இருக்கிறோம். பதிலுக்கு பதில் பேசி, பணிந்திட மறுத்து பெற்றோரைப் புண்படுத்தும் சிறார்கள் பலர் உண்டு. பெற்றோர் காட்டுகின்ற அளவற்ற பாசத்தை தவறாக பயன்படுத்தி மனம்போன போக்கிலே அலைகின்ற சின்னஞ்சிறார்கள் அவலமான நிலைக்கு சென்றிட வாய்ப்புஉண்டு. மாணவப் பருவம் என்ற மகத்தான பருவத்தில் அடங்கி வாழ்வது தான் ஆசியுள்ள வாழ்வுக்கு அடிப்படையாக அமையும். பணிந்து நடந்திட பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்காத, பண்புநெறிகளில் குறைந்து போன ஒரு சமூகமே நமக்கு முன்பாக நிற்கிறது. "தம் விருப்பம் போல் நடக்கவிடப்பட்ட பிள்ளைகள் தாய்க்கு வெட்கக்கேட்டை வருவிப்பர்" (நீதி. 29:15). பிறரையும் பெற்றோரையும் மதிப்பதற்கு மனமற்று, பெரியோரை பொருட்டாக எண்ணாதது வளர்ச்சியல்ல வீழ்ச்சிக்கு அறிகுறி என்பதை அறியாமல் இருந்தால் ஏமாற்றப்படுவோம் என்பது ஒவ்வொரு பெற்றோரும்

அறிந்திருக்கவேண்டிய ஆழமான உண்மை. “நரை திரண்டவருக்கு முன் எழுந்து நில், முதிர்ந்தவர் முதிர்ந்தவர் முகத்தை மதித்து நட” (லேவி. 19:32) என்பதும் “உன் தந்தையும் தாயையும் மதித்து நட” என்பது திருமறை தரும் போதனைகள். இயேசுவின் மாணவப்பருவம் பெற்றோருக்கு பணிந்து நடந்த பண்புள்ள காலமாய் இருந்தது, பயன்தரும் கனியைத் தந்தது.

அன்புக் குழந்தைகளே! நாமும் பெற்றோருக்கும், பெரியவர்களுக்கும் பணிந்து நடந்து இறையாசி பெற முயற்சி செய்வோம்.

**2. உன்னத ஞானத்தில் சிறந்தார் :**

இறை அச்சமே ஞானத்தின் தொடக்கம் என்று (நீதி. 1:7) திருமறை குறிக்கின்றது. கடவுளுக்குப் பயந்து நடக்கின்ற வாழ்வுக்கு நேராக மாணவர் நடத்தப்பட வேண்டும். ஞானத்தை அடைவதற்கு அருளப்பட்டிருக்கின்ற வாய்ப்புகள் முறையாக பயன்படுத்த வேண்டும். ஞானத்தையும், நற்பயிற்சியையும் அவமதிப்பவர் மூடர் எனப்படுவர் (நீதி. 1:7b). ஞானத்துக்குரியவற்றையும், நற்பயிற்சிகளையும் அமைத்துக் கொடுக்காத பெற்றோரும் சமூகமும் எதிர்காலத்தில் எதைத்தான் நன்மையாக அடையமுடியும். நமது வீட்டில் வளருகின்ற சிறார்கள் எப்படி பழக்குவிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை சிந்திக்க வேண்டும். முந்தைய காலங்களில் திருமறை வசனங்களால் பயிற்றுவிக்கப்பட்ட சிறார்கள், இன்று T.V. மற்றும் ஊடகங்களில் காண்கின்ற நிகழ்வுகளால் அடிமைப்பட்டுக் கிடக்கின்றார்கள். இவர்களிடம் எப்படி கிறிஸ்தவத்தின் தன்மைகளை எதிர்பார்க்க முடியும். அறிவைப் பெருக்குவதற்கு சிறார்களுக்கு தரப்படுகின்ற பயிற்சியும், முயற்சியும் இன்று அதிகமாகவே உள்ளது. ஆனால் அறிவில் எப்படி சிறந்தாலும் அறிவை சரியாக பயன்படுத்துவதற்கு ஞானம் வேண்டும். Charles Spargeon என்பவர் “wisdom is right use of Knowldge....... But to know how to use Knowldge is to have wisdon”அறிவுப் பெருக்கம் ஞானமாகாது. இறைவனிடத்தில் கொள்ளும்அச்சமே ஞானம். நமது சிறார்கள் இறைவனிடத்திற்கு நடத்தப்படுகிறார்களா? இல்லை இறைவனிடம் சேராமல் தடுக்கப்படுகிறார்களா? சிந்திப்போம்- இயேசு ஞானத்தில் சிறந்தார். நாமும் ஞானத்தில் சிறந்து, அதற்காக கிடைக்கும் அனுகூலமான வாய்ப்புக்களை பயன்படுத்தி ஆசி பெறுவோம்.

**3. உடல் வளர்ச்சியில் மிகுந்தார் :**

“சுவரில்லாமல் சித்திரம் வரைய முடியாது” என்பது முதுமொழி. உயிர் வாழ்வதற்கு உடல் ஓர் ஊடகம் இயேசுவின் வளர்ச்சி குறித்து (லூக். 1:52, ஞானத்திலும், அதேவேளையில் “உடல் வளர்ச்சியிலும்” மிகுந்து

என குறிப்பிடப்பட்டிருக்கின்றது. சிறாரின் உடல் வளர்ச்சி குறித்த கரிசனையான பார்வை இன்று அவசியமாக உள்ளது. "ஓடி விளையாடு பாப்பா" என்ற கவிதை வரிகள் நினைவுபடுத்தப்பட வேண்டும். பட்டுப் புழு கூட்டுக்குள்ளிலிருந்து போராடி தானாக வரவேண்டும். அப்போது தான் வண்ணத்துப் பூச்சியாக உலாவர முடியும். கூட்டுக்குள்ளே போராடுகின்றது என்று நாம் அதற்கு உதவ நினைத்தால், அதிக நேரம் அது உயிர்வாழ்வதில்லை. சிறார்கள் ஒவ்வொருவருக்கும் உடல் வளர்ச்சி பெறுவதற்குரிய ஊட்டச்சத்து நிறைந்த சரிவிகித உணவும், முறையான உடற்பயிற்சியும் கொடுக்கப்பட வேண்டும். குழந்தைகளை நேசிக்கிறோம் என்றும் அவர்கள் விரும்புகிறார்கள் என்றுமே சொல்லிக் கொண்டு விதவிதமான Junk food கொடுப்பது ஆபத்தாகவே முடிகின்றது.

ஒரே ரகமான செடியை நண்பர்கள் இருவர் நபருக்கு ஒன்று வீதம் வாங்கி தங்கள் வீட்டுத் தோட்டத்திலே வளர்த்தனர். ஒரே ரகமான செடி, ஒரேவிதமான பராமரிப்பு, ஒன்றுபோலவே இரு செடிகளும் வளர்ந்தன. ஓர் நாள் இரவு புயலொன்று வீசியது. நண்பர்கள் இருவரும் தங்கள் தோட்டத்தில் நட்டு வைத்திருந்த செடிகளை சென்று பார்த்தனர். முன்னவரின் செடி உறுதியாய் நின்றது. பின்னவரின் செடி சாய்ந்து கிடந்தது. ஒரேவிதமான மண், ரகம், பராமரிப்பு. ஆனால் பின்னவரின் செடியால் புயலுக்கு தாக்குப்பிடிக்க இயலவில்லை. காரணம் அச்செடியின் வேர்கள் ஆழமாக செல்லவில்லை. மட்டுமல்ல ஆழமாக செல்வதற்குரிய வாய்ப்பு கொடுக்கப்படவில்லை. நீரும் உரமும் தாராளமாக கிடைத்தன. மாறாக முன்னவரின் செடிக்கு அளவான நீரும், உரமும் கிடைத்தது. அச்செடி தனக்கான உணவை தேடிக்கொள்ள தனது வேர்களை மண்ணுக்குள்ளே தேடிபரப்பியது. விளைவு உறுதியாய் நின்றது.

சிறார்களின் உறுதியான உடல் வளர்ச்சி குறித்த கரிசனை உண்டா?

இயேசு உறுதியாய் வளர்ந்தார். எனவே அன்புப் பிள்ளைகளே நாம் கடவுளில் உறுதியாக பற்றிப் பிடித்து முன்னேறிச் சென்று ஆசி பெறுவோம்.

அன்பர்களே! சிறுபருவம் கடவுள் சிறப்பாக நேசித்து அரவணைக்கும் பருவம். இந்த சிறுபருவத்திலே நாம் இயேசு கிறிஸ்துவைப்போல பணிந்து நடந்து, ஞானத்தில் சிறந்து, விசுவாசத்தில் உறுதியாய் நின்று முன்னேறிச் சென்று இறையாசி பெறுவோம்.

அருள்திரு. R. **ஐசக் மெரின் சிங்**

# முன் மாதிரியான வாழ்வு

தொ.நூ. 39:1-23 1 திமொ. 4:12-16
மத். 19:16-24

**"....நீ விசுவாசிகளுக்கு முன் மாதிரியாய் விளங்கு."** (1திமோ. 4:12)

மனித வாழ்வில் இளமைப்பருவம் மிகவும் முக்கியம் வாய்ந்தது. ஏராளமான திறமைகளை உள்ளடக்கிய இந்தப் பருவத்தில் இளையோரின் சிந்தனையும் செயல்பாடும் முறையாக பக்குவப்படுத்தப்பட்டு ஆக்க பூர்வமான காரியங்களுக்கு வழிகாட்டப்பட்டால் சமூகத்தில் பல சாதனைகளை இளையோரால் நிகழ்த்த முடியும். திருமறையில் அநேக வாலிபர்களின் வாழ்வு இடம் பெறுகிறது. இவர்கள் இறைவனைச் சார்ந்து வாழ்ந்து இறுதிவரை சான்றாக வாழ்ந்தவர்கள். இன்றும் எல்லாச் சூழலிலும் இறைவனைச் சார்ந்து மக்களை மகிழ்ச்சிப் பாதையில் நடத்திச் செல்லும் இளையோரும் தங்களைக் கெடுத்து தாங்கள் வாழும் சமூகத்தையும் கெடுத்துக் கொண்டிருக்கும் இளையோரும் உண்டு. இந்த நாட்கள் வாழ்வின் முக்கியப் பகுதிகளாகும். தனியாக முடிவெடுக்கவும், லட்சியத்தை நிறைவேற்றத் துடிக்கவும், அன்புக்காக எதையும் செய்யவும் துணியும் இளைஞர்கள் கிறிஸ்துவுக்காகவும், திருச்சபைக்காகவும் வாழ திருச்சபை அவர்களை உற்சாகப்படுத்தும் போது அவர்கள் இறைவன் விரும்பும் புதிய உலகை அமைக்க இயலும். ஒரு வாலிபன் எவ்விதமாக வளர வேண்டும் என்பதை திருமறை வழி நின்று தியானிப்போம்.

## *1. ஒழுக்கமான வாழ்வு வேண்டும்* : தொ.நூ. 39:9

எகிப்து தேசத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட யோசேப்பு, போத்திப்பாரிடம் விற்கப்பட்டார். போத்திப்பாரின் வீட்டில் பணிவிடை செய்ய அனுப்பப்படுகிறார். போத்திப்பாரின் மனைவி யோசேப்பை தவறான உறவுக்கு அழைத்த போதும் மறுப்புத் தெரிவித்து தன்னை ஒழுக்க சீர்கேடுகளுக்கு விலக்கிக் காத்தார். சிறைச்சாலைக்கு செல்ல வேண்டியதாய் இருந்தாலும் ஒழுக்க நெறியை கடைபிடிப்பதில் இருந்து விலகவில்லை.

தானியேல் பாபிலோனுக்கு கொண்டு செல்லப்பட்டு ராஜ போஜனம் கொடுக்கப்பட்ட போது, ராஜ போஜனத்தாலும், திராட்சை ரசத்தினாலும் தீட்டுப்படுத்த விரும்பாமல் தன்னைப் பாதுகாக்க தானியேல் விரும்பியதைத் திருமறை கற்றுத் தருகிறது (தானி. 1:8-17). ஒழுக்கத்தைக் கடைபிடிக்க

வேண்டுமென்றால் ஆண்டவருடைய வார்த்தையைக் கற்றுக் கொள்வதும், கடைபிடிப்பதும் மிகவும் முக்கியமான ஒன்று (திபா. 119:9).

**2. *தன் நிலை அறிந்து வாழ வேண்டும்*** : மத். 19:16-24

சிறு வயது முதல் கற்பனைகளைக் கற்று தேர்ச்சி பெற்றவன் கற்ற கற்பனைகளின் படி வாழ்வின் வழிமுறைகளை வகுத்துக் கொண்டவன். சிறப்பான வாழ்வு வாழ்ந்த வாலிபன் இயேசுவிடம் வந்து நித்திய வாழ்வு பெற நான் என்ன செய்ய வேண்டும் எனக் கேட்க, கற்பனைகளைக் கைக்கொள் என்றார். கற்பனைகளை சிறுவயது முதல் கைக் கொள்ளுகிறேன் என்றவன் இன்னும் என்னிடத்திலுள்ள குறைவு என்ன? என்று கேட்க, அவ்வாலிபனிடத்தில் உனக்குச் சொந்தமான அனைத்தையும் விற்று ஏழைகளுக்கு கொடுத்துவிட்டு என்னைப் பின்செல் என அழைக்கிறார். செல்வந்தனான வாலிபன் தன்னை யார்? என அறிய விரும்பினான். தனது குறைகளை அறிய விரும்பினான். இயேசு அவனுக்குள்ளபடியே உணர்த்துகிறார். ஆனால் அவனோ துக்க முகத்துடன் திரும்பிச் சென்றான்.

நம்மை அறிய இயேசு நாதர் உதவி செய்கிறார். சமாரியப் பெண்ணின் உள்ளான வாழ்வை அறிய உதவினார். நாம் தனித்து நின்றால் நம்மை அறிய இயலாது. நமது பாவங்களை உணரவும், நமது வாழ்வில் எழும்பும் உணர்வுகளை கட்டுப்படுத்தவும் கிறிஸ்து உதவுகிறார். இளைஞர்கள் தாம் யார் என்பதை உணரவும் தம் நிலை உணர்ந்து வாழவும் அழைக்கப்படுகின்றனர்.

**3. *முன் மாதிரியான வாழ்வு வேண்டும்*** : 1தீமோ. 4:12

பவுல், தீமோத்தேயு என்னும் வாலிபப் பணியாளனுக்கு எழுதும் போது உன் இளமையைக் குறித்து அசட்டை பண்ணாதபடிக்கு மாதிரியான வாழ்வு வாழ அழைக்கிறார். இளையோர் இறைவன் தங்களைப் பார்க்கிறார், வாழும் மக்களும் தங்கள் வாழ்வைப் பார்கிறார்கள் என்பதை உணர்ந்து வாழ வேண்டும். பவுலும் தன்னைக் குறித்து சொல்லுகின்ற வேளையில் ஆண்டவரை மாதிரியாகக் கொண்டு செயல்படுவதாகக் கூறுகிறார் கலா. 6:17. சொல், சிந்தனை, செயல் எல்லாவற்றிலும் கிறிஸ்துவைக் காட்ட வேண்டும். இளையவரைக் காண்பவர் கிறிஸ்துவைக் காண வேண்டும்.

வாலிப நாட்களில் ஆண்டவர், கிறிஸ்துவுக்காவும், திருச்சபைக்காவும் உண்மையாய் சான்று பகர அழைக்கிறார். அவர் விருப்பம் அறிந்து செயல்பட நம் வாழ்வை அர்ப்பணிப்போம்.

அருள்திரு. S. **ஜாண் பிராங்கிளின் ராஜ்**

# மகளிரை ஆற்றல்படுத்தும் கடவுள்

எஸ். 7:1-10

**“உம் கண்களில் எனக்குத் தயவு கிடைத்திருப்பின்...அருர்வீராக.”** (எஸ். 7:3)

அனைத்தையும் படைத்த படைப்பாளராம் கடவுள் ஆண் பெண் இருபாலரையும் தமது சாயலாக தமது உருவை, தமது உயிர்மூச்சையும் கொடுத்து சமமாகப் படைத்தார் (தொ,நூ. 1:27)

ஆனால் ஆண் ஆதிக்க சமூகத்தினால் பெண்கள் இரண்டாம் தர குடிமக்களாக அன்றும் இன்றும் நடத்தப்படுகின்றனர்.

தமிழ் இலக்கியங்களில் பெண்களை நிலா, கயல்விழி, பூமிமாதா என்றெல்லாம் புகழ்ந்துபாடியுள்ளனர். பெண்கள் சமுகத்தின் கண்கள், குடும்பத்தின் ஒளிவிளங்கு, திருச்சபையின் முதுகெலும்பு என்று வர்ணிக்கப்படுகின்றனர். ஆனால் உண்மை வாழ்க்கையில் பெண்களை சமூகம் பாரசுமைகளாக கருதுகிறது. இதற்குக் காரணம் பல உண்டு.

பெண் குழந்தைகனை கருவிலேயே கல்லறைக்கு அனுப்புகின்றனர், பாலியல் கொடுமைக்கு உட்படுத்தபடுகின்றனர், தொழிற்சாலைகளில் கொத்தடிமைகளாய், வரதட்சணை கொடுமைகள் எனப் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

பெண்களை பற்றிய மேன்மையான உண்மை திருமறையை நாம் படிக்கும் போது அறிய முடிகிறது.

ஆபிரகாம் விசுவாச வாழ்வுக்கு உறுதுணையாக சாராள் சித்தரிக்கபட்டாள். நியாதிபதிகள் பட்டியலில் தெபோராள் சிறப்பான இடம் பெறுகின்றார். அன்னிய தேசத்து பெண்ணாயிருந்தாலும் ரூத்திற்கு திருமறையில் முக்கிய இடம் உண்டு.

திருமறையில் இறைவன் பெண்களை எவ்விதமாக ஆற்றல்படுத்தி சமூகத்தில் பயன்படுத்துகிறார் என்பதை சிந்திப்போம்.

### *1. இறைமக்களை காப்பாற்றிய பெண்* (எஸ்தர் 7:1-10)

எஸ்தர் என்ற பெயர்- பாரசீகமொழியிலிருந்து வந்தது
விண்மீன், மகிழ்வும் அதிர்ஷ்டமும் அளிப்பவர்கள் என்ற பெயர்கள் உண்டு. (எஸ்தர் 2:7) எஸ்தர் வாழ்ந்த காலம் கி.மு. 600.

அடிமைத்துவ நெருக்கடியில் நெருடல்களை கொண்டிருந்த யூதமக்களின் நம்பிக்கையின் விடியலாய் பயன்படுத்தப்பட்ட எஸ்தரின்

ஒப்படைப்பு நினைக்கப்படவேண்டியதே. அரண்மனையின் சிறப்பினில் அடங்கிவிடாது. அர்ப்பணிக்கப்பட்ட அர்ப்பணத்தோடு செயல்படும் தீரம் அற்புதமானதே. தனது வாழ்வினை முன்னிலைப்படுத்தாமல், யூத மக்களின் விடுதலையே முழுமூச்சாக கொண்டு செயல்பட்ட எஸ்தர் விடுதலையின் ஊடகமாகிறார். வியத்தகு விடுதலைக்கு முன்னிலைப் பெறுகிறார். சுய நலத்தை துறந்து பொதுநலத்தை விரும்பும் விருப்பமே இறையரசின் தகவுகளாகும். பல நிலைகளில் பெருமூச்சுடன் வாழ்ந்துகொண்டிருக்கும் மக்களுக்கு நம்பிக்கையூட்டி விடுதலையை வழங்குவதே உன்னதப் பணியின் உயர்வாகும்.

## *2. இறைபற்றுடைய தலைமுறையை உருவாக்கிய பெண்*

(2 தீமோ. 1:5)

தீமோத்தேயு ஆற்றல் மிக்க ஊழியக்காரன் ஆவதற்கு கடவுளால் பயன்படுத்தப்பட்டவர்கள் தான் தாயும், பாட்டியும். இறைப்பற்றுள்ள பெண்மணியாக வாழ்ந்து காட்டினதினால் அவர்களுடைய மகனாகிய தீமோத்தேயும் அதே விசுவாசத்தில் வளருவதற்கு காரணமானார்கள்.

ஒரு தலைமுறையில் ஏதோ ஒரு உறவு நெய்த தீங்கை வழிவழியாக பின்வரும் தலைமுறையினருக்கு குறிப்பாக குழந்தைகளுக்கு அவர்கள் மனங்களில் பகையுணர்ச்சியை வருவதை அறவே தவிர்க்க வேண்டும். பல தலைமுறைகளுக்கு முன்பாக செய்யப்படும் நல்ல செயல்களை, சாதனைகளை, தியானங்களை, நன்மைகளை மறக்காமல் பிள்ளைகளுக்கு அறிவித்து நல்ல விதைகளை விதைக்கலாமே தவிர தீமையானவைகளை கூறி பிள்ளைகளின் மனங்களில் பகையும், பழிவாங்கும் குணங்களும் வேரூன்றாமல் பார்த்து கொள்வது மிகவும் நல்லது.

பெலிசிட்டாஸ் என்னும் பெண் கிறிஸ்தவ சமயத்தில் பற்றுள்ளதை கேள்விப்பட்டு அவளையும், அவளது ஏழு பிள்ளைகளையும் சாலைக்கு அழைத்து பல கேள்விகளை கேட்டு அவர்களை மிரட்டினார்கள். அந்த பெண் அரசனைப் பார்த்து, “உமக்கோ உமது மிரட்டலுக்கோ நான் பயந்தவள் அல்ல. என்னிடம் இயேசுபரனின் குணநலன்கள் உள்ளது. அவர் உமது முன்னும், பிசாசின் முன்னும் என்னை தோற்கவிடார். என் உள்ளத்தில் பயமே இல்லை நான் உயிருடன் இருப்பின் உம்மை தோற்கடிப்பேன். நான் கொல்லப்படுவேனாகில் என் வெற்றி உம்மைவிட பெரிதாயிருக்கும்” என்று மிகவும் தைரியமாக சொன்னார். அந்த நகர தலைவன் யூபிலன் என்பவன், “அரசனுக்கு இவ்வாறா பதிலளிப்பது நீ அழிந்து போனாலும் உன் பிள்ளைகளை காப்பாற்று” என்று கத்தினான். “என் கண்மணிகளே மேலே பாருங்கள் இயேசுபெருமானும், தேவதூர்களும் உங்கள் வருகைக்காக மேலே

காத்திருக்கின்றனர். உங்கள் ஆத்துமாவுக்காக போர் புரியுங்கள். கிறிஸ்துவின் அன்பில் உறுதியாயிருங்கள்" என்று சொன்னாள். அரசன் மிகுந்த கோபத்துடன் வெளியே அனுப்பிவிட்டு ஏழு பிள்ளைகளையும் தனிதனியே கூப்பிட்டு விசாரித்தார். அவர்களும் தைரியமாக கிறிஸ்தவ விசுவாசத்தை அறிக்கையிட்டனர். அரசன் கோபமுடையவனாக தாயின் முன்பாக முதலாம் மகனை ஆணிகள் அடித்து கட்டையால் அடித்துக்கொன்றான். அடுத்து இருவரை இரும்பு ஆயுதங்களால் குத்திக் கொன்றான். நான்காவது மகனை மலையின் உச்சியிலிருந்து உருட்டி கொன்றான். மற்ற மூன்று பிள்ளைகளையும், தாயையும் தலையை வெட்டி கொன்றான். இவர்களது விசுவாசம் கிறிஸ்தவர்களிடம் பரவுவதற்கு ஏதுவாயிருந்தது என்றால் மிகையாகாது. நாமும் நம்மையே தியாகம் செய்து இறைப்பற்றுள்ள தலைமுறையை உருவாக்குவோம்.

அருள்திரு. D.S. **விஜூ**

# அருட்பணியாளர் பர்னபா

தி.ப. 11:19-30

**"அவர் நல்லவர் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு நம்பிக்கை நிறைந்தவராய் பொருந்திரளான மக்களை ஆண்டவரிடம் சேர்த்தார்."** (தி.ப. 11:24)

கல்லூரி பேராசிரியர் ஒருவர் மாணாக்கர்களிடம் நீங்கள் உங்கள் தந்தையின் எச்செயலை அதிகமாக காண்பீர்கள் என கேட்டார். அதிக மாணாக்கர்கள் தங்கள் தந்தை மதுபானம் அருந்தி, வேலைக்குச் செல்லாமல் தொலைக்காட்சி பார்த்து, மணிக்கணக்கில் செல்போன் பேசி தன் வாழ்வை கழிக்கிறார்கள் என்றனர். சில மாணாக்கர்கள் எங்கள் தந்தை இல்லப்பணி திருச்சபைப் பணி, எங்களுக்குத் தேவையான காரியங்களை நிறைவேற்றி பயபக்தியோடு நடத்தி செல்கிறார் என்றார்கள்.

ஆடவர்களை எத்துறையிலும், சமூகத்திலும், சமுதாயத்திலும் ஆளுமையுடையவராகவும், தலைவராகவும் வைத்திருக்கிறார். ஆடவர்கள் அவருடைய பணிகளை செய்து மானிடர்களை ஆதாயமாக்க விரும்புகிறார். இதனை பர்னபா என்கின்ற திருத்தூதுவர் வாழ்வின் மூலம்.

## *1. நற்குணம்கொண்ட பர்னபா* :

இவர் திருத்தூதுவர்களில் ஒருவனாக அழைக்கப்பட்டவர். சீப்புரு தீவை சார்ந்த லேவியன். குறுகிய மனப்பான்மையும், சந்தேக குணமும் இல்லாத கிருபை நிறைந்த மனிதர். இவர் இயல்பிலேயே மன்னிக்கும் குணமுடையவர். மற்றவர்களைப் பற்றி எவ்வித குறை கூறுவதையும் விட அவர்களுடைய சிறப்பான இயல்புகளை கண்டு ஊக்குவிப்பதில் வல்லவர். மற்றவர்களின் பலவீனங்களை சுட்டிக்காட்டி அவர்களை பின் வாங்கச் செய்யாமல் பலவீனங்களிலிருந்து விடுவிக்கும்படி ஊக்கமும், உற்காகமும் அளிப்பவர். நாமும் நம்முடைய வாழ்வில் இத்தகைய, நற்குணங்களை கொண்டு கடவுளுக்காக வாழுவோம்.

## *2. நற்பெயருடன் அழைக்கப்பட்ட பர்னபா* :

தொடக்கக்காலத் திருச்சபையில் தன்னுடைய உடமைகளை விற்று திருத்தூதுவர்களிடம் கொண்டு வந்தனர். திருப்பணியின் கவலைகளினால் சோர்ந்திருக்கும்பொழுது அவர்களுக்கு ஆறுதல் அளித்து ஊக்கப்படுத்தினபடியால் திருத்தூதுவர்களில் "ஆறுதலின் மகன்"

என்றழைக்கப்பட்டான். ஆதரவில்லாதவர்களுக்கு, ஏழைகளுக்கும் உதவியாக பணம் சேகரிப்பதில் ஆர்வமாக ஈடுபட்டார். கைவிடப்பட்டவரை தூக்கவும், கலங்கினவர்களின் கண்ணீரை துடைக்கவும் உதவினார். பர்னபாவை போல நாம் திருச்சபையிலும், பிறநிலையிலும் அனைவருக்கும் உதவி செய்வோம்.

### *3. நற்செய்தி ஊழியத்தில் பர்னபா* :

பரிசுத்த ஆவியானவரால் முதல் கிறிஸ்தவ அருட்பணியாளராக தெரிந்தெடுக்கப்படுகிறார். சவுல் மனம் திரும்பின போது பர்னபா அவனை அழைத்துக் கொண்டு போய் வழியிலே சவுல் கர்த்தரைக் கண்டதையும், அவர் அவனுடனே பேசினதையும், தமஸ்குவில் அவன் இயேசுவின் நாமத்தினாலே தைரியமாய் போதித்ததையும் அப்போஸ்தலருக்கு விவரித்துச் சொன்னான். பர்னபாவின் சொந்த இடமான சீப்புரு தீவிலுள்ள சாலமா பட்டணத்தில் அருட்பணியைத் துவங்கினார். எருசலேமிலும், அந்தியோகியாவிலும் திருப்பணி செய்தார். அருட்பணியின் மீது விசுவாசம், இறைவேண்டல், சமாதானம், பரிசுத்தம், விழித்திருத்தல், கீழ்ப்படியும் மனம், அந்நியரை உபசரித்தல், கிறிஸ்துவின் நிமித்தம் பாடனுபவித்தல் என்பதன் அடிப்படையில் போதித்து திருப்பணியின் பாதையில் மானிடர்களை தம் பக்கம் ஈர்த்தார்.

சீப்புரு தீவிலிருந்த யூதர்கள் திருச்சபையின் வளர்ச்சியைக் கண்டு கோபமுற்று அவரைப் படுகொலை செய்தனர். இரத்த சாட்சியாக பர்னபா மரித்தார்.

இறைச்சாயலில் படைக்கப்பட்ட மனித நேயமற்ற கொலை, கொள்ளை, பாலியல்வன்முறை, திருட்டு,ஏமாற்றம், தற்கொலை என்ற தீய நிலையில் தன்னை அழித்துக் கொண்டிருக்கிறான். இதன் மத்தியில் திருப்பணித்தூதுவர் காலத்தில் மானிடர்களை ஆதாயப்படுத்தி மக்களை சபையில் சேர்த்தது போல நாமும் ஆதாயப்படுத்துவோம். "ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தி கொள்ளுகிறவன் ஞானமுள்ளவன்" (நீதி. 11:30) என்ற வாக்கின்படி நாம் திருப்பணிகளை நிறைவேற்றுவோம்.

திரு. T.S. **ஏசையன்**

## இசையால் ஆண்டவரை போற்றுவோம்

திபா. 150

**"அனைத்து உயிர்களே, ஆண்டவரைப் புகழ்ந்திடுக."** (திபா.150:6)

இசைக்கு மயங்காதோர் உலகில் எவருமிலர். எவரையும் இசைய வைக்குவும், எப்பேர் பட்ட கல் நெஞ்சையும் கரையச் செய்யவும் கூடிய ஆற்றல் இசைக்கு உண்டு. காரணம் இசைக்கும் உயிர் உண்டு. ஏனென்றால் இசையும் மனித உணர்வுகளைப் போல மகிழ்ச்சியையும், சோகத்தையும், பயத்தையும், துன்பத்தையும் வெளிப்படுத்தும் உணர்வுகளைக் கொண்டது. இதை ஆய்வுச் செய்வதற்காக தாமஸ் ஃபிட்ஸ் எனும் இசை ஆய்வாளர், இதுவரை இசையை வானொலியில் கூட கேட்டிராத பழங்குடி மக்களிடம் இசையை இயக்கி காட்டியுள்ளார். அந்த பழங்குடி மக்களோ அந்த இராகங்களை அவற்றின் உணர்ச்சி அடிப்படையில் பிரித்து அறிந்து கொண்டனர் என கூறினார். அப்படியென்றால் இசை அனைத்து விதமான உணர்ச்சிகளையும் கொண்டது என்பதில் ஐயமில்லை. அதனால் தான் இசையைக் கொண்டு மருத்துவம் பார்க்கும் மருத்துவர்கள், தனக்கு பிடித்த இசையை அல்லது பாடல்களை கர்ப்பிணிப் பெண்கள் கேட்டு வந்தால் அவர்களுக்கு சுகப்பிரசவம் நிச்சயம் என்று கூறுகின்றார்.

இசையைப் பொறுத்தமட்டில் எதுவும் இசை தான். மழலைகளின் சத்தத்திலும், உயிரினங்கள் எழுப்பும் சத்தத்திலும் இசை அடங்கி இருக்கிறது. ஆகவே தான் ஆன்ட்ரூ வில்சன் என்ற ஆய்வாளர், மொழிகள் உலகில் தோன்றுவதற்கு முன்னமே இசை தான் முதலில் தோன்றியது என்றும், மனித இனம் வார்த்தைகளைப் பயன்படுத்தாது ஒருவித ஒலிகளைக் கொண்டே தங்கள் கருத்துகளைப் பரிமாற்றம் அல்லது தொடர்பு கொண்டனர் என கூறுகின்றார். ஆகவே இசை என்பது உலகம் முழுமைக்கும் பொதுவானது, அது ஏழை, எளியவர் என்றோ, உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்றோ, அறிவாளர், அறிவிலிகள் என்றோ, மதம், இனம் என்றோ எதையும் நோக்காது அனைவரையும் ஒன்று போல் நினைத்து அவர்களை ஆட்கொள்வதே ஆகும். ஆகவே தான் நீட்ஷோ என்பவர், "இசையில்லாவிடில் வாழ்வு ஒரு தவறு" என்றும், ஷேக்ஸ்பியர், "இசையை ரசிக்காதவன் போலியான மனிதன்" என்றும் கூறினர். இந்த இசையில் மனித ஒலியும் உள்ளடங்கும். ஆகவே இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த இசையால் கடவுளை மகிழ்விக்கும் அனுபவத்தையும், இந்த இசையின்

முக்கியத்துவத்தையும், இன்றைக்கு திருச்சபையில் ஏற்ப்படுத்தியிருக்கும் தாக்கத்தையும் இங்கு காண்போம்.

### *1. இசை : கடவுளை மகிழ்விக்கும் பலி :*

தொடக்கால இஸ்ரயேல் மக்கள் வாழ்வில் பலிச்செலுத்துதல் போன்ற சடங்குகள் மிக முக்கிய இடத்தை பெற்றிருந்தது. பண்டைய இஸ்ரயேல் சமுதாயத்தில் கடவுளை வழிபடும் போது விலங்குகளைப் பலி செலுத்துதல் அல்லது அவற்றின் இரத்தத்தை பலியாக கடவுளுக்கு செலுத்துதல் என்பது கடைப்பிடிக்கப்பட்டு வந்த ஒன்றாகும். ஆகவே தான் Helmer Ringgren என்ற திருமறை ஆய்வாளர், இஸ்ரயேலரின் பண்டைய வரலாறு மட்டுமல்ல, உலகின் எல்லா இடத்துக்கும் , எங்கெல்லாம் மனித இனம் தெய்வங்களை வழிபட்டதோ, அங்கெல்லாம் கடவுளுக்கு பலிச் செலுத்தப்பட்டது என கூறினார்.

Yehezkel kaufmann என்ற ஆய்வாளர், ஒரு காலக்கட்டத்தில் பலி தான் கடவுளின் உணவு என புரிந்துக் கொள்ளப்பட்டது என கூறினார். ஆகவே விலங்குகளைக் கொன்று அவற்றின் இரத்தத்தை படைப்பதும், அவற்றின் உடலைப் படைப்பதும் கடவுள் விரும்பி ஏற்கும் காணிக்கையாக அன்று கொள்ளப்பட்டது. இப்படிப் பட்ட உயிர் பலிகள் அல்லது இரத்த பலிகள் பாவத்தின் பரிகாரமாகவும், குற்ற நிவாரணமாகவும் மட்டுமல்லாது, கடவுளைப் போற்றுவதன் அடையாளமாகவும், கடவுளுக்கு உகந்த கீழ்படிதலாகவும் கருதப்பட்டன. காரணம் உயிரினங்களை கொன்று கடவுளுக்கு காணிக்கைச் செலுத்துவது உயிரைத் தந்த கடவுளுக்கு காணிக்கைச் செலுத்துவதாக நம்பப்பட்டது

இவ்வாறு பலக்காரனங்கள் சொல்லலாம் இதற்கு மாற்றாக இரண்டு முறைகளை திருப்பாடல் ஆசிரியர் மற்றும் இறைவாக்கினர்கள் முன்மொழிகின்றனர். முதல் மாற்று முறை யாதெனில். ஒரு தியாக வாழ்வை மேற்கொள்ளுவது. அதாவத நீதி நேர்மை போன்ற வாழ்வியல் மதிப்பீடுகளை கடிடபிடிப்பது இன்னொன்று துதி மற்றும் நன்றிபலிகளின் வழியாக கடவுளுக்கு பலி செலுத்துதல் ஆகும்.இவற்றில் இரண்டாவத மாற்று முறையை கவனத்தில் கொள்ள அழைக்கப்படுகின்றோம்.

திருப்பாடல் 50:13,14 ஆம் வசனங்கள்இதை தெளிவாய் உணர்த்துகின்றன 13 ஆம் வாக்கியத்தில் எருதுகளின் இறைச்சியை நான் உண்பேனோ? ஆட்டுகடாக்களின் குருதியை குடிப்பேனோ? என கடவுள் கேள்வி கேட்பதாகக் கூறி, அடுத்த வசனத்தில் கடவுளுக்கு நன்றி பலி செலுத்துங்கள் என கடவுள் தனது விருப்பத்தை சொல்வதாகக்

திருப்பாடலின் ஆசிரியர் உரைக்கின்றார் எது கடவுளின் நன்றிபலியாக இருக்க முடியும் என சிந்தித்தால் நாங்கள் எங்கள் வாய் மொழியாம் கனிகளை உமக்கு அளிப்போம் என ஓசியா 14 : 2ல் தெளிவு படுத்தகின்றார்.

அந்த வரிசையில் திருப்பாடலின் ஆசிரியர் கடவுளை வழிபட நம்மை அழைக்கின்றார் உலகில் எல்லா படைப்புகளும் கடவுளை போற்ற அழைக்கப்படுகின்றன மட்டுமல்ல கடவுள் செய்த வல்ல செயல்களான படைத்தல், மீட்டல், காத்தல் குணமாக்குதல் போன்ற செயல்களுக்காக கடவுளை இசையினாலும் பாடலினாலும் போற்ற திருப்பாடலின் ஆசிரியர் அழைக்கின்றார்.

## *2. இசை : எல்லைகளை கடந்து நிற்பது :*

இசை என்பது எல்லா இடத்திலும் வியாபித்து நிற்கும் அற்புத படைப்பு,

திருப்பாடலின் ஆசிரியர் உலகின் எல்லா உயிரினங்களையும் உலகில் இருக்கிற அத்தனை இசைக்கருவிகளை கொண்டு போற்ற அழைக்கின்றார். காரணம் இண்று போல் அன்றும் இசைக்கருவிகளை நிகழ்வுகளுக்கு ஏற்ப பிரித்து வைத்திருந்தனர். அன்று எக்காளம், மத்தளம், வீனை போன்றவை அன்றைய வழிபாட்டிற்காக கோவிலில் பயன்படுத்தப்பட்டது. ஆக இத்தனை இசைக்கருவிகளைக் கொண்டும் கடவுளை போற்ற தாவிது அரசர் அழைக்கின்றார்.

இசை மட்டமல்ல இறைவனை போற்றுகற்கு பாடலும் தேவை எனவே தான் அனைத்து உயிர்களே, ஆண்டவரைப் புகழ்நிடுக என்று திருப்படல் 150:6 ல் கூறுகிறார்.

சுவாசம் கன்பதர்கு எபிரேய விவிலியத்தில் “nesamah” என்ற சொல் பயன்படத்தப்படுகின்றது இதற்கு, அனைத்து உயிரினங்கள் என்பது பொருள். பத்தொண்பதாம் நுற்றாண்டின் பாடல் ஒன்று எந்த இசையும் உயினங்களின் குரலைப்போன்ற மகிழ்ச்சியை தராது என்று கூறப்படுகிறது. காரணம் இசைக்கருவிகள் அனைத்தும் மனித கரங்களால் உருவாக்கப்பட்டவை ஆனால் மனித குரலே கடவுளால் படைக்கப்பட்ட ஒரே இசைக்கருவி. நம் குரலே எல்லா இசைக்கருவிகளை விட சிறந்தது. இசை என்பது கடவுளைப்போன்று பரந்து வவிரிந்து நிற்பது. அதற்கு எல்லையே கிடையாது. அது எப்போதும் எல்லை கடந்து நிற்பது.

எனவே நாம் நமது திருச்சபைகளில் கடவுள் நமக்கு தந்துள்ள மகா பெரிய இசைக்கருவியான குரலைக்கொண்டு இறைவனை எல்லை கடந்து போற்றுவோம் நமது பாடகற்குழுவை வலுவூட்டுவோம்.

. திரு. **லோ. லோபின் லினேஷ்**

# இறை வேண்டலும் நமது நிலைப்பாடும்

மத். 6:5-15

**"...உங்கள் தந்தையை நோக்கி வேண்டுங்கள்; மறைவாய் உள்ளதைக் காணும் உங்களுக்கு கைம்மாறு அளிப்பார்."** (மத். 6:6)

கிறிஸ்தவ வாழ்க்கையில் உறுதியானதும், மிகவும் அவசியமானதும் ஜெபம் எனலாம். ஜெபம் என்றால் இறைவன் மனிதனை நோக்கி திரும்புவதாகும். ஒரு இறையியல் சிந்தனையாளர் குறிப்பிடும் போது ஜெபம் என்பது முதலாவதாக தேவனுடைய தேவைகளை சந்திக்க தேவனால் உருவாக்கப்பட்டது. இரண்டாவதாக தான் மனுஷனுடைய தேவைகளை சந்திக்க தேவனால் உருவாக்கப்பட்டது. திருச்சபையின் தந்தை என அழைக்கப்படும் JOHN WESSELY அவர்கள் குறிப்பிடும் போது "ஆண்டவரோடு உள்ள ஐக்கியம் தான் என் வாழ்க்கையின் வெற்றி" என்கிறார். திருச்சபையின் பிதா என்று அழைக்கப்படும் அலெக்சாந்தியா தேசத்து கிளமென்று குறிப்பிடும் போது மனிதன் தன்னை மறந்து கடவுளோடு பேசுவது என்கிறார். எமில் ஜெபசிங் குறிப்பிடும் போது என்னை இந்த அமைதியற்ற உலகில் இருந்து மாற்றி அமைதியின் கருவியாய் மாற்றும் என்று ஜெபித்தார். இப்படி பல இறை பக்தர்கள் ஜெபிப்பதைப் பார்க்கிறோம். மேலும் ஜெபம் என்பதை மூன்று நிலையில் கொள்ளலாம்.

* சிறுபிள்ளையின் நிலை
* வேலைக்காரனின் நிலை
* யாசிப்பவனின் நிலை

சிறு பிள்ளைகள் இல்லங்களில் தேவைகளுக்கு அடம்பிடிப்பார்கள். தேவையில்லாவிட்டாலும் அப்படி செய்வார்கள். இதைக் கேட்கும் பெற்றோர் மனம் இரங்கி விடுவார்கள். அதை போல ஜெபத்தின் மூலம் நாம் தேவைகளை கேட்டுப் பெற்றுக் கொள்ளவேண்டும். வேலைக்காரன் தன் எஜமானின் முகத்தை மாதத்தின் முதல் நாளில் நோக்கிப் பார்ப்பதைப் போல நாமும் எஜமானின் முகத்தை நோக்கி பார்த்து இறைவேண்டல் மூலம் எல்லாவற்றையும் பெற்றுக் கொள்ளவேண்டும். யாசிப்பவன் நம்பிக்கையுடன் சென்று யாசிப்பது போல நாமும் ஜெபத்தின் மூலம் எல்லாவற்றையும் பெற்றுக் கொள்ளவேண்டும்.

நம்முடைய இறைவேண்டலின் நிலைப்பாடை திருமறையினூடாய் சிந்திப்போம்.

### *1. இறைவனை மகிமைப்படுத்தும் இறைவேண்டல்* :

ஜெபம் என்பது இறைவனோடு பேசும் நிலையாகும். WEST INDIES நாட்டின் கிரிக்கெட் வீரர் Brian Lara Test Cricket -ல் 400 ரன்கள் 2004-ம் ஆண்டு England -க்கு எதிரே அடித்தார். பத்திரிகை நிருபர்கள் பிரென் லாரா-விடம் கேட்டனர் எப்படி நீங்கள் இந்த சாதனையை நிகழ்த்தினீர்கள்? லாரா சொன்ன பதில் சற்று வித்தியாசம் அது என்ன, என் தேவனோடு (இயேசுவோடு) தனித்து இருந்து ஜெபிப்பதனால் நான் இப்படி செய்யமுடிந்தது என பதில் உரைத்தார். வேதத்தில் கூட ஊத்ஸ் தேசத்தில் வாழ்ந்த யோபு பக்தன் கூட கடின வாழ்வில் தன் மனைவியிடம் இன்பத்தைக் கண்ட நாம் துன்பத்தைக் காணாமல் இருக்கலாமா? கர்த்தர் தந்தார், கர்த்தர் எடுத்தார் கர்த்தருக்கே மகிமை என்று கூறினார். நம்முடைய நிலை என்ன? இறைவேண்டல் இறைவனை மகிமைப்படுத்தும் இறைவேண்டல், மூலம் இறைவனை மகிமைப்படுத்துவோம்.

### *2. இறை விருப்பத்தை நிறைவேற்றும் இறைவேண்டல்* :

ஒரு முறை இயேசுவானவர் சீடர்களின் நிலையைகண்டு 1 மணி நேரமாவது விழித்திருந்து ஜெபிக்க கூடாதா என கேள்வி எழுப்பினார். உண்மையான ஜெபம் என்பது தேவனுடைய சித்தம் என்ன என்பதை அறியும் மனிதன் அவர் சமூகத்தில் தரித்திருந்து அதை நிறைவேற்ற நேரம் எடுத்து ஜெபிப்பதுதான் உண்மையான ஜெபம் எனலாம். நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின் படி கேட்டால் அவர் நமக்கு செவிகொடுக்கிறார் என்பதை அவரைப்பற்றி நாம் கொள்கிற தைரியம் (1 யோவா. 5:14)

நம் ஜெபங்களில் நாம் அவருடைய சித்தம் நம் வாழ்க்கையில் செய்யப்படும்படியாக நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும். நம்முடைய அருள் நாதர் இயேசுகிறிஸ்து சீடர்களுக்கு இறைவேண்டலைக் கற்றுக் கொடுக்கும் போது உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக (மத். 6:10). ஜெபத்தின் மூலம் இறைசித்தத்தை நிறைவேற்றுவோம்.

### *3. இறைமேன்மையைத்தரும் இறைவேண்டல்* :

ஜெபிக்கத் தெரிந்தவன் ஜெயிக்கத் தெரிந்தவன் என்று சொல்வதுண்டு. ஜெபம் உள்ள வாழ்க்கை ஜெயம் உள்ள வாழ்வு. ‘‘நம்முடைய விசுவாசமான ஜெபம் உலகத்தை ஜெயிக்கிற ஜெபம்’’ 1யோவா. 5:4).

தானியேலின் வாழ்வு ஜெயமாக இருந்ததின் காரணம் ஜெபம். மூன்று வேளை ஜெபித்தான். தடை வந்தது சோர்ந்து போகவில்லை. ஜெயத்தைக் கண்டான். அன்னாள்-வெறுமையாக இருந்த நிலையை மாற

செய்தது ஜெபம். நம்முடைய வாழ்வில் நாம் ஜெபிப்பதை கடமையாக வைத்துக் கொள்ள வேண்டும். யாக்கோபு ஆண்டவரை இறுக்கமாக பற்றிக் கொண்டான். ஜெயமான வாழ்வைப் பெற்றுக் கொண்டான்.

பிரியமானவர்களே! இந்த ஜெபக்குழு ஆண்டுவிழாவில் ஒரு தீர்மானத்தை எடுத்து கொள்வோம்.

தினமும் ஜெபிப்பேன். ஏன் எதற்கு என்பதை ஆராய்ந்தால் ஜெபம் இறைவனை மகிமைப்படுத்தும், தேவ சித்தத்தை நிறைவேற்றும், ஜெயத்தைத் தரும். நாம் ஜெபத்தின் மூலம் இவைகளைச் செய்து நிறைவேற்றும் போது நம்மிலே அவர் மகிமைப்படுவார். கர்த்தர் தாமே இந்த வார்த்தையினால் உங்களை நிரப்புவாராக. ஆமென்

திரு. **ஜோ பென் ஹேம்**

# படித்து தெளிவடைவோம்

திப. 8:36-38

**"அவர் தமது தேரில் அமர்ந்து எசாயாவின் இறைவாக்கு நூலைப் படித்துக்கொண்டிருந்தார்."** (திப. 8:28)

சுவாசமில்லாத மனிதனுக்கும், படிப்பை தவறவிடும் மனிதருக்கும் வேறுபாடு ஏதுமில்லை. படிக்க படிக்கத்தான் சுவாசிக்க முடியும்; அறிவோடு வாழமுடியும். மானுடம் இன்று வளர்ச்சி பெற்றிருக்கிறது வாழ்வு பெற்றிருக்கிறது என்றால் படித்து பயனுள்ளதாக பயன்படுத்தியதால் தான் என புரிந்துகொள்ள வேண்டும். பரபரப்பான உலகில் நவீன விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியின் தாக்கம், வேலைப்பளு இவற்றால் படிப்பதற்குரிய நேரம் கிடைப்பதில்லை. ஒருவேளை நேரம் கிடைத்தாலும் படிப்பதற்கு நேரம் ஒதுக்குவதில்லை காரணம் என்ன என்று ஆராய்ந்தால் சூழ்நிலைகளும், இன்றைய கல்விமுறையும் இளம் தலைமுறையினர்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்திவிட்டது. படிப்பு என்பது பச்சை கசப்பாய் மாறிவிட்டது. அதிக மதிப்பெண்கள் எடுக்க வேண்டும் என்ற வற்புறுத்தலால் புரியாமலேயே படித்து மனப்பாடம் செய்ய நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். பாட நூல்களை அறிந்து கொள்ளப் படிப்பதற்கு பதிலாக, மதிப்பெண்களுக்காக படிப்பது அதிகரித்துவிட்டது. இதனால் நன்னெறி சிந்தனைகள் சிதைந்து சீர்கேடுகள் பெருகிவிடுகிறது. பலர் வன்முறையாளர்களாகவும் உருவெடுத்து விடுகிறார்கள். எனவே தான் நம் தேசத் தந்தை மகாத்மா காந்தி அவர்களை "ஒரு நூலகம் திறக்கப்படும் போது பத்து சிறைச்சாலைகள் முடப்படுகிறது என்று சொல்வார். அறிஞர் பிளாட்டோ, "எந்த வீட்டில் நூல் நிலையம் இருக்கிறதோ அந்த வீட்டில்தான் ஒளிவிளக்கு இருக்கிறது என்கிறார். நூல் அல்லது புத்தகம் நம் வாழ்வுக்கு விளக்கேற்றி வைக்கிறது. 'நல்ல நூல்களுக்காக தரப்படும் தொகை செலவல்ல வரவு' என்பதை உணர்ந்து நூல்களை வாங்கி படிக்க பழகுவோம்.

திருமறை சார்ந்து சிந்திக்கின்ற போதும் நாம் வாழ்ந்திட வாசிப்பை சுவாசிக்க அறிவுரை சொல்லப்படுகிறது. (இ.ச. 11:20,21) ஆகிய திருவாக்குகளில் இறை வார்த்தைகள் பிள்ளைகளுடைய நெஞ்சிலும் நினைவிலும் நிலைநிற்க, அவர்கள் படித்து புரிந்து கொள்ள வீட்டின் கதவு நிலைகளிலும், நுழைவுவாயில்களிலும் அவற்றை எழுதவும், அவர்கள் எழும்போதும் படுக்கும்போதும், பயணம் செய்யும் போதும் பிள்ளைகளுக்கு

கற்றுக்கொடுக்கவும் இஸ்ரயேலர்களுக்கு கடவுள் அறிவுறுத்துகிறதை காணமுடியும். நம் சிந்தனை பகுதியில் ஓர் மனிதன் படித்ததால் ஏற்பட்ட வாழ்க்கை மாற்றத்தை திருமறை கற்றுத்தருகிறது.

### *1. விரும்பி படிப்போம்* :

ஒவ்வொரு வார்த்தைகளும், ஒவ்வொரு வரிகளும் விரும்பி வாசிக்கப்படவேண்டும். விருப்பமின்றி வாசித்தால் பயன் ஏது? புரியாத புதிராய் அது மாறிவிடும். வாசிக்க வேண்டும் என்பதற்காய் வெறுமனே வாசித்து கொண்டே இருப்பதாலும் பயனில்லை; வாசித்ததை வாழ்வாக்க வேண்டும். நம் சிந்தனை பகுதியில் எத்தியோப்பியா அரசு அலுவலரும், அரசி கந்தகியின் நிதியமைச்சருமானவர் தேரில் அமர்ந்தபடியே ஏசாயா இறைவாக்கு நூலை வாசித்துக் கொண்டிருந்தார். நேரம் போக்குவதற்காக வாசித்தாரா? பொருள் தெரிந்து தான் வாசித்தாரா? என்பது கேள்விக்கு உட்பட்டது. எனினும் விருப்பத்துடன் வாசிக்கிறார். விளக்கத்தை அறிந்து கொள்ள ஆர்வம் காட்டுகிறார். தி.ப. 8:30,31-ல் பிலிப்புவிடம் விளக்கத்தை அறிந்துகொள்ள விரும்பி கேட்கிறார். வாசித்ததை வாழ்வாக்க கற்றுக்கொண்டார். அவரின் வாழ்கை வளம் பெற்றதை காணலாம். 'AGood Book can change your life'(ஓர் நல்லபுத்தகம் உங்கள் வாழ்க்கையை மாற்றும்) என்பார்கள்.

திருமறை நம் வாழ்கையை மாற்றி வளம் பெற செய்யும் ஆற்றல்மிக்கது. ஒருமுறை அறிஞர் ஜான் ரஸ்கினிடம் (John Ruskin) நீங்கள் எப்படி இவ்வளவு பெரிய அறிஞரானீர்கள்? என கேள்வி கேட்ட போது, இதிலிருக்கும் ரகசியத்தை நான் சுலபமாக கூறி உங்களுக்குப் புரிய வைக்கமுடியும். நான் சிறுவனாக இருந்தபோது என் தாயார் தினமும் திருமறையின் ஒரு சிறுபகுதியை எனக்கு வாசித்துக்காட்டுவார். அது மட்டுமல்லாமல் என்னையும் வாசிக்க சொல்லுவார். நான் விரும்பி வாசித்தேன்; இறைவார்த்தைகள் ஆழமாய் என் இதயத்தில் பதிந்துவிட்டன. இன்று உலகம் என்னை மேதையாக ஏற்றுக் கொண்டிருக்கிறது என்றால் அதற்கு திருமறையே காரணம் என்றாராம். ஆக, நம் வாழ்க்கையை மாற்றக் கூடியதான நல்ல புத்தகமாம் திருமறையை விரும்பி வாசிப்போம், விளக்கத்தை அறிந்து வாசிப்போம்.

### *2. வளர்ந்திட படிப்போம்* :

Iபேது. 2:2,3 புதிதாய் பிறந்த குழந்தைகள் போல வஞ்சகமற்ற வார்த்தையாகிய பாலை அருந்த ஆர்வமுள்ளவர்களாயிருங்கள் இதை அருந்துவதால் நீங்கள் மீட்பில் வளருவீர்கள். அதாவது, இறைவார்த்தை

பாலைப்போல சத்து நிறைந்தது அதனை உட்கொள்கின்றபோது வளர்ச்சியடைய முடியும், மீட்பில் நிலைநிற்க முடியும் என்கிறார்.

வளர்ச்சியினுடைய படிநிலை அறிவை வளரச் செய்வதில் தான் இருக்கிறது. அறிவு வளரும் போது தான் நம் எண்ணங்களிலும் செயல்களிலும் முதிர்ச்சிக்குரிய மாற்றம் வரும். தரமுள்ள மனிதர்களாகவும் மாறமுடியும். சீனப் பழமொழி ஒன்றுண்டு அது 'மூடத்தன நோயை முற்றதாக விரட்டும் மூலிகைகளே புத்தகங்கள்.' புத்தகங்களை படிக்கப் படிக்க அது அறிவிலிகளையும் அறிவாளிகளாய் மாற்றிவிடுகிறது.

விருப்பத்துடன் படிக்க ஆரம்பித்த எத்தியோப்பிய அரசு அலுவலர் விளக்கத்தை புரிந்து படித்த பின்பு படித்ததை வாழ்வாக்கிக் கொள்கிறார். அறிவு வளம் பெறுகிறது. வாழ்வில் தெளிவு பிறக்கிறது. தி.ப. 8:36-ல் படித்ததால் ஏற்பட்ட வளர்ச்சியை பார்க்க முடியும். இயேசு கிறிஸ்துவை இறைமகன் என நம்புகிறார். இதோ தண்ணீர் உள்ளதே நான் திருமுழுக்கு பெற ஏதாவது தடையுண்டா? என கேட்கிறார். படித்ததால் வாழ்க்கையில் தெளிவு பிறக்க கிறிஸ்துவை அறிந்துகொண்டு திருமுழுக்கு பெற்றுக்கொள்கிறார், வாழ்க்கை மாற்றுருவாக்கம் பெற்றது.

நாமெல்லாரும் படித்து வாழ்க்கையில் வளர்ச்சி காண வேண்டும் என்பதற்காகத் தான், ஜெர்மனியிலிருந்து வந்த சீகன்பால்க் ஐயர் கடற்கரை மணலில் விரலால் எழுதி தமிழ் மொழியை கற்று பலரின் உதவியால் புதிய ஏற்பாட்டை மொழிபெயர்த்து நூல்வடிவம் கொடுத்து 1715 ஜூலை 15-ம் நாள் வெளியிட்டார். முதன்முதலில் தமிழ் மொழியில் அச்சேறிய நூல் என்கின்ற பெயரை பெற்றது இன்று நாமெல்லாரும் படித்து வளர்ந்து, தெளிவுடன் வாழ்வு பெற்றிருக்கிறோம்.

ஆக! தினம் ஒரு புத்தகம் படிப்போம்
தினமும் திருமறையை படிப்போம்
படிப்பதை வழக்கமாக்குவோம்
படிப்பு நம் சுவாசமாய் அமையட்டும்
படிப்பு நமது அகஇருளை அகற்றட்டும்

திரு. **அஸ்வின் ஷாத்**